


இராமேசுவரம்.

திருப்பிரம்மஸ்ரீ.

திருவாலவாய் சுவாமிநாத பண்டிதரவர்கள்

எழுதி அருளியிருக்கிற உரையுள்ளது

திருவிளையாடற் புராணம்.



மூலமும் உரையும், அகத்தியர் அகஸ்தியர் தேவாரம்.

கவியரசரும் பண்டித மணியுமாகவுள்ளவர்களால்

பிழை திருத்தப்பெற்றது.

சிவஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடையது.



சென்னை:

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

விலை ரூ. 2-8-0.


உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் என்கிற மதுரையில்
எழுந்தருளியிருக்கிற கடவுளது

திருவிளையாடற்புராணம்.



இஃது

மஹாமஹோபாத்தியாய, அஷ்டாவதானம்-பூவை,

கலியாணசுந்தர முதலியாரவர்களால்

பிழையாச் சீர்திருத்தி

சில நூதனபொழிப்புரையுடன்,



பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பாமுதலியார் பிரதர்ஸ் அவர்களது

சென்னை,

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

இதன் விலை ரூபா. 2—8—0.

உ

சிவமயம்.


திருச்சிற்றம்பலம்.

திருவிளையாடற்றிரட்டு.

இவ்விருபத்தைந்தும் யாவர் நிமித்தமாகச் செய்தனவென்று நீவிர் விரைவிய படியால் அந்தநிமித்தங்களை வான்முறையாகச் சொல்லுகிறே னென்று சொல்லத் தொடங்கினர்.

பாட்டு.		பக்கம்.	பாட்டு.		பக்கம்.
	க-வது, மதுரைக்காண்டம்.		29	மாயப்பசுவைவதைத்தது	241
	பாண்டித்திருநாட்டுப்படலம்	28	30	மெய்க்காட்டிட்டது	244
	மதுரைத்திருநகரப்படலம்	36	31	உலவாக்கிழியருளியது	250
	திருக்கைலாசப்புகழ்ச்சி	36	32	வளையல்விற்றது	257
	புராணவரலாறு	51	33	அட்டமாசித்தியுபதேசித்தது	260
	தலவிசேடம்	53	34	விடையிலச்சினையிட்டது	264
	தீர்த்தவிசேடம்	56	35	தண்ணீர்ப்பந்தல்வைத்தது	268
	மூர்த்திவிசேடம்	60	36	இரசவாதஞ்செய்தது	275
	பதிகம்	63	37	சோழனைமடுவில்வீட்டியது	278
1	இந்திரன்பழிதீர்த்ததிருவிளையாடல்	66	38	உலவாக்கோட்டையருளியது	282
2	வெள்ளானைசாபந்தீர்த்தது	76	39	மாமனுகவந்துவழக்குரைத்தது	286
3	திருநகரங்கண்டது	83	40	வாகுணனுக்குச்சிவலோகங்காட்டிய	293
4	தடாதகைப்பிராட்டிதிருவவதாரம்	89	41	விறகுவிற்றது	301
5	திருமணஞ்செய்தது	96	42	திருமுகங்கொடுத்தது	309
6	வெள்ளியம்பலத்திருக்கூத்தாடிய	111	43	பலகையிட்டது	312
7	குண்டோதரனுக்கன்னமிட்டது	114	44	இசைவாதுவென்றது	316
8	அன்னகுழியும்வையையுமழைத்த	119	45	பன்றிக்குட்டிக்குமுலைகொடுத்த	322
9	எழுகடலழைத்தது	124	46	பன்றிக்குட்டிகளைமந்திரிகளாக்கிய	331
10	மலையத்துவசனையழைத்தது	128	47	சுகிக்குருவிக்குபதேசஞ்செய்தது	335
11	உக்கிரபாண்டியன்திருவவதாரம்	135	48	நாரைக்குமுத்திகொடுத்தது	339
12	அவருக்குவேல்வளைசெண்டுகொடுத்த	140		ங-வது, திருவாலவாயிக்காண்டம்.	
13	கடல்சுவறவேல்விட்டது	148	49	திருவாலவாயானது	343
14	இந்திரன்முடிதகர்த்தது	152	50	சுந்தரப்போம்பெய்தது	346
15	மேருவைச்செண்டாலடித்தது	160	51	சங்கப்பலகைதந்தது	352
16	வேதத்துக்குப்பொருளளிச்செய்த	166	52	தருமிக்குப்பொற்கிழியளித்தது	359
17	மாணிக்கம்விற்றது	175	53	கீரனைக்கரையேற்றினது	366
18	வருணன்வீட்டகடலைவற்றச்செய்த	185	54	கீரனுக்கிலக்கணமுபதேசித்தது	373
	ஙா-வது, கூடற்காண்டம்.		55	சங்கத்தார்கலகந்தீர்த்தது	378
19	நான்மாடகூடலானது	189	56	இடைக்காடன்பிணக்குத்தீர்த்த	382
20	எல்லாம்வல்லசித்தரானது	192	57	வலைவீசினது	388
21	கல்லானைக்குக்கரும்பருத்தியது	196	58	வாதவூரடிகளுக்குபதேசித்தது	396
22	யானையெய்தது	203	59	நரிபரியாக்கியது	409
23	விருத்தகுமாரபாலரானது	206	60	பரிநரியாக்கியது	423
24	மாறியாடியது	212	61	மண்சுமந்தது	431
25	பழியஞ்சினது	219	62	பாண்டியன்சுரந்தீர்த்தது	479
26	மாபாதகந்தீர்த்தது	225	63	சமணரைக்கழுவேற்றியது	489
27	அங்கம்வெட்டினது	231	64	வன்னியும்-கிணறும்-இலிங்கமும்	498
28	நாகமெய்தது	234	65	அருச்சனைபடலம்	506

திருவிளையாடற்றிரட்டு முற்றிற்று.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவிளையாடலின் முகவுரை.

கடவுளருளாலே தெளிந்த நந்திதேவரிடத்தில் அன்புடனேகேட்டுத் தெளிந்து சனற்குமாரமுனிவர் வேதவியாசமுனிவருக்குச் சொல்ல, அந்த வேதவியாசமுனிவர் சூதமுனிவருக்குச்சொன்ன பதினெண்புராணங்களில் ஒன்றுகிய கந்தபுராணத்தில் சங்கரசங்கிதையில் சொல்லப்பட்டதான திருவாலவாய் மகிமையென்கிற வடநூலைத் தமிழாலே பாடுகவென்று மதுரையிலுள்ளபெரியோர்கள் சொல்லக்கேட்டு, பாடுவோமென்றுமறவாமற்கொண்ட இந்த உறுதியை அநித்தியமான பிறவியாலும் பெரியோரருளாலே பாடிமுடிப்போமென்று மனந்தேறி நகரச்சிறப்பு, தீர்த்தச்சிறப்பு, மூர்த்திச்சிறப்புகளாகிய மூன்றும், அந்தமூர்த்தியின் அருள்விளையாடல் அறுபத்துநான்கும், அருச்சனைக்கிரமமொன்றும், ஆக அறுபத்தெட்டு படலமும், விருத்தச் செய்யுள் வகையாக நான் பாடுகின்றேன். ஆனாலும் சோமசுந்தரக்கடவுள் பாடிய கவிக்கும் குற்றஞ்சொன்ன கல்விச் சங்கத்தார்வாழ்ந்திருக்க மதுரையிலுள்ளவர்களுக்கு என்னுடைய வெள்ளறிவிலாலே சொல்லுகிற பாடல்களில் குற்றங்காண்பது அரிதன்று. ஆகிலும் நீரைப்பிரித்து அன்னமுண்கின்ற பால்போல இந்தச் சோமசுந்தரன் சரிதத்தையொப்புக்கொள்ளவேண்டும், எப்படியெனின், அக்கினி நாவிலாலே உரிசைகண்டதசையானது - தேவர்களுண்ண அமுதமாறற்போல சான்றோர் கழகத்திலேசென்று நன்மையாகித் திருவாலவாய்க்கடவுள் செவியினிடத்தும் சிறியேன் பாடின இந்தப்பாடல்களும் நுழைந்து அங்கீகரிக்கலாகும். இன்னும் கடலிலேநீரையுண்டு அந்தநீரிலுள்ள உவர்ப்பைப்போக்கி நன்னீராக்கின மேகம்போல சொல்லிலக்கணமும் பொருளிலக்கணமும் தெரிந்தோராகிய பெரியோர்கள் ஒருநன்றியுமில்லாத என்னுடைய புன்சொற்களிலுள்ள குற்றங்களைப்போக்கித் திருவாலவாய் கடவுளுக்கு மகிழ்வுதோன்றச்செய்வார்கள். இன்னும் நீ இதுவும் அல்லையென்று வேதங்களும் உண்மைசொல்லமாட்டாமல் அம்மைச்சொற்களாலே துதித்து, இளைக்கும்படியான இந்தச் சோமசுந்தரக்கடவுள் திருவிளையாடல்களுக்கு என்னுடைய புன்சொற்கள் முடிவுகாட்டுமோ! காட்டாது ஆனாலும் இந்தத்திருவிளையாடலைப் பாடுவேனென்னும் ஆசையானது என்சொல்வழிகேட்டு நில்லாமையால் நானென்ன செய்வேனென்று அறுகாற்பீடத் துயர்மாலாழிகடைந் தமுதையரங்கேற்றுபோ லறுகாற்பேடிசை பாடுங்கூடன்மான்மியத்தை யருந்தமிழாற்பாடி, யறுகாற்பீடியர்முடியார் சொக்கேசர் சன்னிதியி லமர்சூழ், மறுகாற்பீடத்தி லிருந்து பரஞ்சோதி

முனிவ னரங்கேற்றினனே என அரங்கேற்றினர். இத்திருவிளையாடலை இதுகாறும் அநேகர்பதிப்பித்த புத்தகங்களைப் பார்த்திருப்பீரல்லவா? இப் புத்தகம் அதுபோலல்லாமல் யாவரும் எளிதில் உணரும்படி துதிகவிகளை யெல்லாம் விடாமல் அப்படியே செய்யுள்களாகவும் மற்றைபகவிகளை செந் தமிழ்வசன நடையில் எழுதி முதலில் சைவசமயாசாரியர்களாகிய நால்வர் திருவுருவப்படமும், இறுதியில் வன்னியும் கிணறும் இலிங்கமுமைழுத்த படத லத்திற்கு ஓர்படமும், அருச்சனைப்படலத்திற்கு ஓர்படமும், புதிதாய்ச் சேர்த்து சுத்தப்பிரதியாய் அச்சிட்டுள்ளோம். அன்றியும் சருங்கவேண்டி. விடுபட்ட கற்பனை யலங்காரங்களையும் அடைமொழிகளையும் புராணசெய்யுட் களாலறிக. மதுரையில் எழுந்தருளியிருக்கிற கடவுளது திருவிளையாடல் களும், மகிமைகளும், தத்துவங்களும், அவதார விசேஷங்களும் ஆகிய இவைகளைத் தெரிந்துய்ய விருப்புடையோர் இத் திருவிளையாடலினை விரும் பாதிராா். ஒவ்வொருவரும் எமது பதிப்பைபேபார்த்து வாங்கக்கோறு கின்றனம்.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

திருச்சிராபுரம்

தமிழ்த்தலைமைப்புலவராகிய

ம-ரா-ரா-ஸ்ரீ, வி. கோவிந்தப்பிள்ளை அவர்கள் குமாரர்

நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய

நிலமண்டிலவாசிரியப்பா.

பூமகள்குளிர்நிறம் பூமகளொடுவெனத், தேமலரங்கள் பூண்டேமலர்த
ரும்பே, ருந்திநின்றுரீஇ யுந்திநீர்நாப்பணின், றருந்தவம்பலதானருந்தநல்
வின்பம், புரிந்ததாற்றேவர்புரிந்தடிபோற்றச், செழித்தநானிலத்துச்செழிய
ணட்டின்கண், உலகமுண்டாம்போ துலவியதினமலர்க், கடம்பு நிரம்பிய
கடம்புதி தொன்றங், கிருக்கவதின்கண் ணெழிற் சிவபெருமான், புரந்தடி
யாரைமுப் புரந்தனையெரித்துப், பண்ணியலருந்தமிழ் பண்ணியதாண்டார்,
கண்ணியமுத்திக் கண்ணியங்குறவைத், தனிக்குங்கண்ணுதலனிக்குலமுழக்
கும், கொன்றையஞ்சடையன் கொன்றுழல்கூற்றை, யுதைத்தவனிலிங்க
வுருவுறுசோம, சுந்தரனெனப்பே சுந்தரப்பெயர்புனைந். தந்தரவாணர்க்கந்த
மிலாவருள், செய்திளவாலைகள் செய்பிடம்விட்டம், பாமிடமாகப்புரந்தொ
ளிர்மீன்களை, நேர்ந்துநம்பொதுப்பெயர் சேர்ந்தனவன்றி, யின்று நமக்குமே
னின்றுரைவனவோ, வென்றகங்கறுத்து வன்றனிவிசையால், எதிர்வரும்சங்
கண் டதிர்புலிபாய்ந்தாங், கெழுந்துடலெஃகம் விதிர்த்தவையுதிர்க்க, வரம்
பைகழுகின்வரம்பிலாமுகத்தோ. டுதிர்வனவாம்வளர்க்கதிர்பொரவெழுந்த,
தூழனியோய்விலாத கழனிசூழ்மதுரைவாய், எட்டவுயிர்க்கரு ளெட்டிடட்
டாகும், திருவிளையாடலின் முன்செய்தவச்சரிதையைக், காந்தத்தீச்சங்
கிதையிற்கழறப், பட்டதாந்தெய்வபாஷையைத்தென்சொலிற், கற்றவர்வியக்
கவும் மற்றவர்நயக்கவும், உலகொழுக்கொடுசெய் யுள்வழக்கறியவும், பத்தி
யின்விளக்க மித்திரனெனவும், முத்தியையடைவானுத்தியிஃதெனவும், சித்
தியின்றெளிவுஞ் சுத்தியின்விரிவும், தத்துவப்பிரிவுஞ் சத்துவக்குணனும்,
மும்பொருட்பாகுபா டிப்பரிசினவும், பொருளின்குணனும் அருளின்வண
மும், குரகதப்பண்பும் அனதுநண்பும், பலவிரதத்தின் பலனுமின்னவும்,
முயர்க்கவுயிர்க்குப் பயக்கப்பாடல்கள், உடலிலுயிரெனப் படலத்துட்ப
டப், பெருங்காப்பியமா யிருங்காப்புளதாய், நாலாவதான நூல்யாப்பாலே,
செய்தழகொருபது மெய்பெறவமைத்துப், புராணப்பெயர்நிறீஇப் புராதன
மான, விராசிதவராங்கிற் பரதநாட்டியன்பால், தவம்பலபுரிந்து தவநனியுயர்
ந்த, பராஞ்சோதிமாமுனிபாடலிலிளங்கத், தமிழ்ப்புலவருக்குத்தகும்பொரு
ளுதவிச், செழிப்புறுவசனப் பொழிப்புரைசெய்வித், தருள்விளையாட லுரு
வெலாங்காண, வாங்காங்கொருபடம்பாங்காவமைய, வோவியனைக்கண்டோ


வியஞ்செய்வித், தொழுதாவெழுத்தி லியைவித்தனன்முகைக், கஞ்சமுல்லை காவியசோகம், மதிகன்னல்கிளி மாவிருள்கடல்வண், டொழுகுகொங்குபல் லொணமுலைக்கண்டாள், முகந்தோளிணை தேமொழிகூந்தல்விழி, உரோம வொழுக்குக்கொத்திலம்பாமே,என்றகங்கறுவித் தென்றலந்தோற்,குதவி செய்துணையார்பொத்துத்தனித்த, அற்றநோக்கியந்நலார்வருந்தச்செய்யுஞ், செய்யசெய்யமர்தொண்டநன், குடசேர்மயிலை நகரம்வாழ்நீதன், திருவளர் தெய்வக்கயிலையங்கிரியிற், குருமணியிழைத்தமறுபொற்சபையில், பருமணி குயிற்றிய பதுமாதனத்தின், திருமணக்கோலஞ் சிறந்ததேபோலும், பவள மும்பச்சையும் பதித்ததுபோலும், தவளநீறணிந்து துவளவைத்ததுபோல், கதிர்மதியிரண்டுமொருகணமதனில்,முதிர்கிரணத்தின் மிளிர்வதேபோலும், மங்கைமாதுமையுடன் வரிசையதாகச், சங்கர்கொலுவாய்த் தழைத்தமண் டபத்திற், கயிலைகாவலனு மியல்புளநாதி, செங்கையிற்பிரம்பு கொண்டெதிர் நிற்கக், கின்னரரிசைக்கக் கெருடகந்தருவர், பன்மறைவேத பத்தர்கள்முனி வர், மாலயனிந்திரன் வசுக்களுந்திக்குப், பாலருமொருங்கே பரவிநின்றேத் தித், ஜெயஜெயவென்று தெண்டனிட்டிறைஞ்சக், கயமுகன்முருகன் கை தொழுதேத்த, அந்தச்சமயத்தடிதொழுதயனு, மெந்தையேபுவியிலெல்லாந் தழைக்க, முந்தவிவள்ளன்மை மிக்காளெனுவனைத், தந்தருளென்னத் தயா பரநோக்கி, யிருபிறப்பாள ரியற்றியதவத்தால், கருமுகில்வண்ணன் கலையி லொன்றவற்கே, யுதவுவனதனுதத்தீரத்துன், மதியெனப்படியே வாய்ப்ப னென்றருள், அத்திரஞ்சின்னுளகன்றபின்கங்கை, நித்திலமொதுக்குநீள்கரை பிளக்க, மகுடமுப்புரிநூல் மார்பினிலிலகப், பகடுபூண்டொழுகும் பலபற்றி ரன்கை, அலாயுதங்கொண்டிவ் வகிலத்துதித்துக், குலாவுதண்கங்கை குலத் தினிலுதித்த, மாபாளன்றன்னை மயன்கண்டுசீறிக், காவிலைய்யக் கருமுகி லண்ணல், அருளியநல்வரத்தாரன்மாபாளன், வெருவிலாதெழுந்து வெகுளி மேற்கொண்டு, மதங்கொடுமீறிய மயன்றனைத்துரத்தி, யதம்படத்தன்கை ய லாயுதத்தடக்கிப், பொன்னுலகேற்றிப் புரந்தரன்முன்ன, ரன்னவன் மாபு தன்னடிமையதாகக், கொண்டபின்மகபதி குமரியோடளகைத், திரண்டிறற் குபேரன் செல்வியைமணந்து, வெள்ளையானைவெண்ணிலாக்கவிகை, துள்ளு மெழுபரி சுடர்விடுபுட்பகஞ், செங்குவளைத்தார் சிறப்பெலாம்பெற்று, மங் கையரிருவர் மருங்கில்வற்றிருக்கப், பூமிசைவந்துபல் புதல்வரைப் பெற்றுக், காமயமெல்லாங் கருதியதியற்றப்,போதாயனர்குலப் புரோகிதராகி,வேதாக மத்தின் விதிவழுவாது, கவளமுதலாஞ் சாந்திகள்கழித்துத், தவளநீருடன் தரித்துமுப்புரிநூல், பள்ளிக்குவைத்துப் பலகலைநூலின், தெள்ளிமையனை த்தும் தேர்ந்தனர்பின்னர், சிறுவர்தமக்குத் திருவனங்காண்பான், நறுமலர் மார்பன் நளகூபரன்றன், பெண்களைத்தமது புத்திரர்க்கிசைத்துக், கண்களி கொள்மணங் கண்டருளென்று, மாசறுகுலத்து மாபாளன்கேழ்க்க, ஈசனுக் கன்ப னிசைந்தருள்செய்து, நன்மணம்புரிந்து நான்மறையவர்க்குச், சொன் னமோடாடைதுலங்கவளித்தவர், ஆசிகள்கூறவானருளாலே, மாசிலாச்சுகத் தில் வாழுவொருநாள், அயன்முதலிமையோர் அந்தரத்திழிந்து, புயவலிபே சிப் பூமிபாலகநீ, நாரணன்வரத்தா னதிக்கரைபுதித்துக், காரணி யுயிர்க்கெ

லாந் தாயெனப்பெற்றுய், கங்கைதன்மாபி லிங்குவந்தமையால், துங்கவே ளாள தொல்குலனுனுய், பலபத்திரன்கைப் படைக்கலம்பெற்று, நிலமுற்று நின்கை நேர்மையிறுகக், குவலயமெலாமுன் கொழுவளப்படுத்தித், திவலை யெலாமுஞ் செய்வயல்நிறுத்தி, வெள்ளன்மையினல் வேந்தர்வேதியர்க்கு, உன்னன்புகூர வுவகையினருத்தி, மந்தாமுயர் மகாமேருகோலதாய், சந்திர சூரியர் தட்டதாய்நிகழ, அட்டநாகங்களு மழகியநாணதாய், இட்டதராசுக் கிணையிலாநடுநிலை, புண்ணியபாவ மிரண்டையுநிறுக்கும், கண்ணியுனீயே கதிக்கெனவருளி, அளக்கும்படியே ஆதிசத்தியாந், துளக்கமில் சத்தியம் தொல்படியாகவும், மாத்துரைகல்லே மகபதிநாடாம், பாத்துரை சீவர்கள் பசும்பொன்னுகவும், அதினதின்தேகமே அடல்மெழுகாகவும், சதுமறைப் படிநீ தக்கவனுனுப், கோக்களேதெய்வக் குலவடிவாகவும், நீக்கமிலாதநிலை மையாற்காக்கப், பூவசியத்தொழில் பிரமமதாகக், கோவசியத்தொழில்கொள் கையுருத்திரன், தனவசியத்தொழில் சாந்தமாலாயினை, மூவருந்தானுய் முயற்சியிலுயர்ந்தனை, முத்தொழில்புரியும் முயற்சியும்பெற்றே, அத்திறல் வசிய னுக்கமும்பெற்றுப், பூமகளுனது புண்ணியத்தளவாம், கோமகளுனது கொழுநுதிப்பெறுவன், தேவர்நாந்தந்த தசாங்கமோவென்னில், மேருமு லையே வேங்கடமாகவும், நச்சியவெழுபா னென்பதுநாடதாகவும், கச்சியே கம்பமே கடிநகராகவும், செங்குவளைத்தார் சீர்புயத்தாகவும், பொங்கியமும் மதம் பொழியயிராவதம், ஓதுவெம்பரியே யுச்சைச்சிரவம், ஆதுலர்வரவறை கூவியமுரசும், ஊழிபுரண்டு முரைபிறழாதவுன், மேழியிழைத்துவிளங்கு பதாகையும், சீரரசாளும் செங்கோல்கெடாம, லேர்தினைநடத்துமெழில்தாறு கோலே, அலகிலாப்புகழை யடைதிநீயென்று, பலவிதவாசிகள் பகர்ந்த வரேக, உந்தியிலுதித்தோனுரைவழுவாதுதன், மைந்தர் நூற்றுவர் வழிமர புற்றேர், தினையரீராறு சகத்திரகோத்திரர், அனையவர்தினைய ளவிலாத வர்க்கு, இல்லறம்வழுவா தியற்றியவண்ணம், எல்லையில்நூல மெங்கணும்பர வத், தாணியைப்பகிர்ந்து தந்தனரவற்றில், வரந்திபாவி வளமெலாங்கொழிக் கும், கச்சிகாளத்தி கழுமலேவேங்கடம், உச்சிசெங்கழுநீ ருதவியதணிகை, நீர்மலிநந்தி நிதமெலாமுதவும், வாரிதிபெண்ணை வளந்திகழ்மண்டலம், பெற் றனர்தண்டகன் பிழைபடாதளவும், முத்தமிழ்க்குக்கான்முளைசிரமீந்தும், செட்டிபழிக்கச் செந்தீப்புகுந்தும், கட்டியவாடைகளைத்திரவலர்க்கு, முட் டிடாதளித்து முழ்கிநீர்புனைந்துந், துட்டமாங்கலியின் தூறைக்களைந்தும், இல்லையென்பவர்க்கு இலையெனமறுக்குந், சொல்லையுறைக்கத் துணிவுபெறு மை, கொல்லாவாய்மைகொடுத்துயிர்துணியும், வல்லாய்ப்புகழ்வாய்மைபெற் றுயர்ந்துஞ், சூலிமுதுகிற்சுடச்சுடவன்னம், பாலமிர்துடனேபடைக்கவிசைந் துங், கோடிகொடுத்துக்கொண்டபீதாம்பர, வாடையைக்கீறி அரசெதிர்காட் டியுஞ், செந்தமிழ்க்காகச்சிவிகைசுமந்து, முந்தியமுளை யமுதாக்கியளித்தும், வண்டமிழ்ப்புலவன் மனத்தியல்பறிந்தோன், உண்டதுகக்கிச் சபையிடைவை த்தும், மார்தனிலுதைத்த மாகவிபாதம், சீர்பெறப்பொன்னின் சிலம்புசெய் தளித்தும், மும்மண்டலத்து மூவரசருந்தன், செம்பொன்மாடஞ்சேர்ந்தினி திருக்க, சிறைதனில்வைத்துச்செந்தமிழ்க்கிரங்கிக், குறைதவிர்ந்தவாவர்கூட

லுக்கேகப், பசும்பொன்னுடையா பரணமுங்கொடுத்து, விசும்புளோர்போ
ற்ற வீற்றிருக்கின்ரோர், கற்புறுமைசெய் கச்சியிற்றவத்தைப், பொற்புடன்
காவல் பூண்டமையதனால், கச்சிகாவலரென்னுங் கன்னிமாவலனெனும், உச்சித
மான வுயர்ச்சியும்பெற்றே, அங்குறைகாளி அருளுடன் மகிழ்ந்து, செங்குவ
ளைத்தார் சிறப்புடனளிக்க, உமையுடன்கயிலை யுற்றனரருகே, அமையுடனி
ருக்க ஆங்கவரருளால், கடுக்கையுமுருத்திர சாதனகவசம், அடுக்குலபூதி
ஆன்கொடியளவில், விருதுகள்கொடுக்க வேண்டியபெற்றுப், பருப்பதகுமரி
தன் பாகனவணங்க, அவரவர்மண்டலத் தகலுமென்றருளத், தவறிலா
விடையெனத் தரைமிசைவந்து, முக்கணுன்கயிலை முதற்கணநாதன், மிக்க
தொண்டிரன்விரும்பியாண்டதனால், தொண்டீராநாடாற் றுலங்கியசின்னள்,
தண்டகன்காக்கத் தவறிலாதவன்போர், கொண்டனதண்டக மண்டலமென
வும், ஆண்டவவ்வரக்கன் ஆரியன்றனக்கே, ஈண்டியதீமை யிழைக்கமுனிந்த
வர், காஞ்சிரமலிந்தகாடாச்சபிக்க, வாஞ்சைவிட்டங்ஙகர்வாழ்க்கையைநீங்கி,
நலந்திகழ்துளுவ நாட்டியைச்சென்று, கலந்தவருடனே காணியாண்டிருக்
கச், சுக்கிரனறைந்த சூளகன்றமையால், தக்கநல்வேளார் தங்களைத்தேடி,
ஆதிதாண்டச்சோழ னழைக்கத்தொல்காணி, மாதண்டகத்தை வந்துகாத்
தாண்டார், அன்பொடுதுளுவநாடாண்டுவந்தமையால்,இன்பொடுதுளுவவே
ளெனப்பெயர்பெற்றார், ஆதிதாண்டச்சோழ னணுகிவெம்போரில், மோது
ண்டுபின்னிட முனைந்ததிரிட்டுக், குவளைமார்பினர் குறும்பறுத்தவாகைச்,
சவளவாயுதத்தைச் சமைத்துத்தோரணமாய், வேந்தன்முன்வந்து வெற்
றியையுரைக்கப், போந்தநல்லாடைப் புகழுடனளித்தே, அன்புடன் தழுவி
ஆசனத்திருத்தி, மண்புகழுமைச்சும் மண்டலத்தலைமையும், கோரணஞ்சமை
த்த சூஷியால்சவள, காரணப்பெயருங் களிப்புடன்பெற்றனர், இத்திறமு
டைய மெய்த்தவமாபில், செங்கதிர்போல விளங்குவந்துதித்தோன்,புத்தியி
லுகிவெற்றியிற்குபேரன், அண்டலாதங்கள்மிண்டனுத்தண்டன், தொண்ட
மண்டலத் தொள்ளிகாணியாள்வோன், நவமணிமதிலுஞ் சிகரகோபுரமும்,
செம்பொன்மாளிகையும், பண்புடனிலங்கும், நகரமோரேழிற் பகர்காஞ்சி
யோடும், மயிலைமாநகரு மியலுடன் படைத்தோன், அலகையைத் தன்னிட
வளவினில் வைத்தோன், பிச்சைபூபதி தன்னிச்சையாநம்பிரான், தவத்தினி
லுதித்தி சற்குலதீபன், சின்னமுத்தியப்பன் நல்லமுத்தியப்பன், இருவர்
முன்னவருமேத்த முத்தியப்பன், வெளியப்பன்முதல் மெய்ப்புதலவர்களைத்,
தெள்ளியசிரஞ்சீவியாகவேபடைத்தோன், சந்ததியெனவேதராதலம்புகழும்,
பெருமைனிலமலைப் பெற்றியினிளிர்பிர, போதசந்த்ரோதயம் புரன்றவற்
கொப்போன், சங்கமால்கொளவுயர்சங்கப்பொருடந், தாதரிப்போனரனன்ப
னென்றவன்போன், மதனுடறவிர்த்து மகிழ்வுறவைத்தோன், கஞ்சத்திருவ
ரைக் கைகொண்டொருவரைப், பராவமலன் பகைகளிசிறிய, உலோபமிவை
தன் னுன்னலனெனவொறுத், தீகையொழுக்க மிரங்குதருங்கல், நலமிவை
யதிக நண்பராக்கொண்டோன், துன்பொடுவந்தோ ரின்பொடுமேகத், தன்
போலிலனெனத் தானம்வழங்கு, வகையன்மெய்யன் செய்யன்றுய்யன், சிவ
னடியார்வரிற் சேவித்தீரெட், டுபசாரஞ்செய் துளமகிழ்விப்போன், இசைத்
திருமுகமெண்டிசையவரறிந்து, துண்ணெனவிடுத்துச் சுகக்கடலாழ்ந்தோம்,
என்னுரைக்கடங்கா மன்னுறு புகழோன், வைத்தியநாத வள்ளல் மகிழுன்
பெளத்திரனெழு சுப்பராயவேள்பயந்த, புத்திரனருணை சலபுரந்தரனே.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

சிவமயம்.



திருச்சிற்றம்பலம்.

திருவிளையாடற்புராணம்.

சிறப்புப்பாயிரம்.

காப்பு.

சத்தியாய்ச் சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலெத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்பபொற் பாதமே.

இ-ள். சித்திவிநாயகக் கடவுளுடைய சிவந்த பொன்போலும் அரிய திருவடிகள், சத்தியாகியும் சிவமாகியும் ஒப்பில்லாத பரமுத்தியுமாகிய பரம சிவத்தைவாழ்த்த, சுத்தியாகிய சொல்லையும் பொருளையும் அருளாநிற்கும்.

வாழ்த்து.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வரங்க ளின்ப
நல்குக வுயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக வுலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

இ-ள். வேத விதிப்படி செய்துவருகின்ற யாகம் குறைவில்லாமல் நடந்துவரக்கடவது (அவற்றால்) காலந்தப்பாமல் மேகமானது நீர்சுரந்து மழைபொழியக்கடவது (நீராலுமையால்) உலகமெங்கும் வளப்பம் பெருகக் கடவது (அவ்வளங்களால்) தருமம் விர்த்தியடையக்கடவது (அத்தருமங்க

ளால்) உயிர்களுக்கெல்லாம் இன்பம் உண்டாகக்கடவது (இப்பேற்றால்) நான்குவேதங்களின் சம்பந்தத்தையுடைய சைவ சமயமானது எல்லாச்சமயங்களுக்கு மேலானதாக நிலைபெற்றிருக்கக்கடவது (இவை மாறுபடாமல்) நடத்தவல்ல அரசனது செங்கோல் நீடுழிவாழ்க.

நூற் பயன்.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

திங்களணி திருவால வாயெம்மண்ணல்
திருவிளையாட் டிவையன்பு செய்துகேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வமோங்கித்
தகைமைதரு மகப்பெறுவர் பகையைவெல்வர்
மங்கலநன் மணம்பெறுவர் பிணிவந்தெய்தார்
வாழ்நாளு நனிபெறுவர் வாணுடைய்திப்
புங்கவரா யங்குள்ள போகமுழ்கிப்
புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்.

இ-ள். சந்திரனை அணிந்த திருவாலவாயில் வீற்றிருக்கும் எம்மிறைவனுகிய சோமசுந்தரக்கடவுள் செய்தருளிய திருவிளையாடல்களை அன்புடன் வழிப்பட்டுக் கேட்பவர்கள் சங்கநிதியையும் பதும நிதியையு முடைய குபேர சம்பத்தைப்பெற்று புகழாலோங்கி விவேக முள்ள புத்திரர்களைப் பெறுவார்கள் பகையை வெல்வார்கள் மங்களமாகிய விவாகஞ் செய்துகொள்ளப்பெறுவார்கள் வியாதிவந்தடையப்பெறார்கள் பூரணயசு உடையவர்களாவார்கள் (இவ்வாறு இம்மைப்பயனுகிய போகத்தை அனுபவித்து) அதற்கு மேல் சுவர்க்கலோகத்தில்போய்ச்சேர்ந்து தேவர்களாகி அவ்விடத்திலுள்ள போகங்களை அனுபவித்துச் சிவபுண்ணியமும் உள்ளவர்களாகிப் பரமசிவனுடைய திருவடி நீழலில் பொருந்திப் பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டு நீடூழியாக வாழ்வார்கள்.

கடவுள்வணக்கம்.

சிவபெருமான்.

அறுசீரடியாசிய விருத்தம்.

வென்றுளே புலன்களைந்தார் மெய்புணர் வுள்ளங்தோறுஞ்
சென்றுளே யமுதமூற்றுந் திருவருள் போற்றியேற்றுக்
குன்றுளே யிருந்துகாட்சி கொடுத்தருள் கோலம்போற்றி
மன்றுளே மாறியாடு மறைச்சிலம் படிகள்போற்றி.

இ-ள். உட்புலனைந்தையும் வென்றுநீக்கினவர்களுடைய உண்மையை யுணர்ந்த உள்ளங்தோறுஞ்சென்று அவர்கள் அறிவினில் பேரின்பமாகிய அமுர்த்தத்தைச் சொரிகின்ற திருவருளுக்கு வந்தனம், வெள்ளிமலை போன்ற ரிஷபவாகனருடராய் வந்து தரிசனங்கொடுத்தருளுகிற திருவருட்கோலத் திற்கு வந்தனம். வெள்ளியம்பலத்தில் மாறியாடிய வேதமாகிய சிலம்புகளை யணிந்த திருவடிகளுக்கு வந்தனம்.

சிவசத்தி.

வேறு.

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம்போற்றி
யிரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
வங்கயற்க ணெம்பிராட்டி
யருள்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.

இ-ள். இரும்பைப்போல் கடினமாகிய மனதைக்குழையச்செய்து (ஆணவத்திலழுந்திகிடந்த) அடியேனை எடுத்தாண்டுகொண்ட எம்பிராட்டி யாகிய மீனாட்சி யம்மையாருடைய வண்டுகளிசைபாடுகின்ற மணந்தங்கிய பூமாலையணிந்த அழகியகூந்தலுக்கு வந்தனம் உத்தரீயமும் கொடிகளும் அணியப்பட்ட தோள்களுக்கு வந்தனம், வில்லைப்போல் வளைவாயிருக்கும் புருவங்களுக்கு வந்தனம், திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு ஞானப்பால் சுரந்தருளிய பொற்கலசம்போன்ற திருத்தனங்கட்கு வந்தனம், பிரகாசிக் கின்ற புன்னகைக்கு வந்தனம், வேதமாகிய நூபுரங்கள் ஒலித்துக்கொண் டிருக்கும் திருவடிகளுக்கு வந்தனம்.

பரமசிவம்.

கலிநிலைத்துறை.

பூவண்ணம் பூவின்மணம்போல மெய்ப்போதவின்ப
மாவண்ண மெய்கொண்ட வன்றன்வலியாணை தாங்கி
மூவண்ணன் சந்நிதிமுத்தொழில் செய்யவாளா
மேவண்ண லன்னுன்விளையாட்டின் வினையெவெல்வாம்.

இ-ள். பூவினிறமும் பூவின்வாசமும் பேதமாய் நிற்றல்போல சச்சிதானந்தமே திருமேனியாகக்கொண்ட சிவபிரானுடைய சத்தியின் ஏவலைப் பெற்றுப் பிரம்மவிஷ்ணுருத்திரர்களாகிய திரிமூர்த்திகளும் தன் சந்நிதியில் சிருஷ்டி திதிசங்காரமென்னும் முத்தொழில்களையுஞ்செய்ய அசைவற்றிருக்கும் கடவுள் அந்தக்கடவுளுடைய திருவிளையாட்டினுல் எமது வினையைக் களைவாம்.

அண்டங்களெல்லா மணுவாக வணுக்களெல்லா
மண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினுனு
மண்டங்களுள்ளும் புறம்புங்கரி யாயினுனு
மண்டங்களீன் முடிணையென்ப ரறிந்தநல்லோர்.

இ-ள். அண்டங்களெல்லாம் அணுத்தன்மையை யடையும்படி பெரிதானவனும் அணுக்களெல்லாம் அண்டங்களின் தன்மையை அடையும்படி சிறிதானவனும் அவ்வண்டங்களினுள்ளும்புறத்துஞ் சாக்ஷியாக நின்றவனும் அண்டங்களையெல்லாம் பெற்ற உமையாளுடைய கணவனென்று வேதாகமங்களை யுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்.

சொக்கலிங்கமூர்த்தி.

கலி விருத்தம்.

பூவிற்பயகன் பூமகற்பயகன்
காவிற்பய கனந்தகயற்கண்ணிமா
தேவிநாயகன் சேவடியேத்துவாம்.

இ-ள். தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரமதேவனுக்கும் லட்சுமி நாயகனுகிய மகாவிஷ்ணுவுக்கும் கற்பகச்சோலைசூழ்ந்த பொன்னுலகத்துக் கிறைவனுகிய தேவேந்திரனுக்கும் இவர்களேயன்றி மற்றுமுள்ள தேவர்களுக்கும் உயிர்போ லிராநின்ற முதற்கடவுளாயும் மீனாட்சியம்மையின் கணவனுகியும் விளங்காநின்ற சொக்கநாதசுவாமியின் சிவந்தநிறமுள்ள பாதங்களைத் தோத்திரஞ்செய்வாம்.

மீனாட்சியம்மை.

அறுசீராடியாசிரியவிருத்தம்.

டங்கயற்கணரியபரம்பர னுருவேதனக்குரிபடிவமாகி
யிங்கயற்கணகனுலகத்தெண்ணிறந்தசராசரங்களீன்றுந்தாழாக்
கொங்கயற்கண்மலர்க்கூந்தற்குமரிபாண்டியன்மகள்போற்கோலங்கொண்ட
வங்கயற்கணம்மையிருடாதப்போதெப்போதுமகத்துள்வைப்பாம்.

இ-ள். பிர்மதேவனும்காணுதற்கரிய பரமசிவனுடைய திருமேனியே தனக்குரிய திருமேனியாகக் கொண்டு இடமகன்றதாகிய உலகங்களையும் அளவற்ற விண்ணுலகங்களையும் ஆன்மகோடிகளையும் தனக்குப்புறம்பாகத் தோற்றும்படியீன்றும் தாழ்வுபடாத போதானந்தமாகிய தனங்களையும், இருள்போலக்கருமைநிறம்பெற்று மலர்கள்சூடிய அளகபாரத்தையுமுடைய குமரியாகிய மலயத்துவச பாண்டியராஜன் புத்திரியாகத் திருமேனிகொண்டு வந்த மீனாட்சியம்மையின் செந்தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளையும் எக்காலத்து மனதிற் கருதுவாம்.

சபாபதி.

உண்மைபறிவானந்தவுருவாயெவ்வுயிர்க்குமுபிராய்நீரின்
றண்மையனல்வெம்மையெனத்தானேயகலாதிருந்துசராசரங்களீன்ற
பெண்மையுருவாகியதன்னனந்தக்கோடிமகிழ்ச்சிபெருகயார்க்கு
மண்மையதாயம்பலத்துளாடியருள்பேரொளியையகத்துள்வைப்பாம்.

இ-ள். சச்சிதானந்தமே திருமேனியாகக் கொண்டு எல்லாவுயிர்களுக்குமுயிராகி நீரினிடத்திருக்கும் குளிர்ச்சியைப்போலவும் தீயினிடத்திருக்கும் வெப்பத்தைப் போலவும் தம்மைவிட்டுநீங்காமலிருந்து சராசரமாகிய உயிர்களையெல்லாம்பெற்ற பெண்வடிவமாகிய தம்முடைய ஆனந்தக்கோடியென்னும் சிவகாமியம்மைக்கு மகிழ்ச்சிபெருகத்தக்கதாக யாவருக்கும் எளிதாய்ப் பொன்னம்பலத்தில் நடனஞ் செய்தருளிய சோதி சொரூபமுள்ள நடேசமூர்த்தியை எமதுசித்தத்தில்வைத்துச் சிந்திப்பாம்.

சோமசுந்தரக்கடவுள்.

சடைமறைத்துகதிர்மகுடந்தரித்துநறுங்கொன்றையந்தார்தணைந்துவேப்பந்
தொடைமுடித்துவிடாகக்கலனகற்றிமாணிக்கச்சுடர்ப்பூணேந்தி
விடைநிறுத்திக்கயலெடுத்துவழுதிமருமகனுகிமீனநோக்கின்
மடவாலமணந்துலகமுழுதாண்டசுந்தரனவணக்கஞ்செய்வாம்.

இ-ள். சடைமுடியை மறைத்து, ஒளிநிறைந்த ரத்தின மகுடந் தரித்து வாசனைதங்கிய கொன்றைப்பூமாலையைநீக்கி வேப்பம்பூ மாலையை அணி

ந்து விஷத்தையுடைய சர்ப்பாபரணங்களைநீக்கிப் பிரகாசம்பொருந்திய ரத் திரைபரணங்களைப்பூண்டு, ரிஷபக்கொடியைவிட்டு மீனக்கொடியை யேந்தி, மீனட்சியாகிய தடாதகைப்பிராட்டியாரைத் திருக்கல்யாணஞ் செய்தருளி மலயத்துவச பாண்டியராஜன் மருமகனுகிச் சௌந்தரபாண்டிய னென்னும் பெயரும்பெற்று உலகங்களையெல்லாம் ஆண்ட சோம சுந்தரக்கடவுளை வணங்குவாம்.

தடாதகைப்பிராட்டியார்.

செழியர்பிரான்றிருமகளாய்க்கலைபயின்றுமுடிபுனைந்துசெங்கோலோச்சி முழுதுலகுஞ்சயங்கொண்டுதிறைகொண்டுநந்திகணமுனைப்போர்சாய்த்துந் தொழுகணவற்கணிமணமாலைசூட்டித்தன்மகுடஞ்சூட்டிச்செல்வந் தழைவுறுதன்னரசளித்தபெண்ணரசியடிக்கமலந்தலைமேல்வைப்பாம்.

இ-ள். பாண்டியர்குலத் தலைவனுகிய மலயத்துவசபாண்டியன் புத்திரியாய்த் திருவவதாரஞ் செய்து வேதாகம முதலாகிய கலைகளெல்லாம் ஓதியுணர்ந்து மகுடாபிஷேகஞ் செய்யப்பெற்றுச் செங்கோல் செலுத்தி உலகங்களை யெல்லாம் வென்று திறைவாங்கித் திருக்கைலைக்குச் சென்று நந்தி கணங்களைப் போரில் ஓடச்செய்து ஜெயம் பெற்றுப் பிரம விஷ்ணுக்கள் முதலாகிய தேவர்களெல்லாந் தொழுகின்ற தன் கணவனுகிய கயிலாசபதிக்குத் திருக்கல்யாண மாலைதரித்துத் தன் மகுடத்தையுஞ் சூட்டிச் செல்வமிகுந்த தன் அரசாட்சியையுங் கொடுத்த பெண்ணரசியாகிய தடாதகைப் பிராட்டியின் திருவடித் தாமரைகளை எம்முடைய சிரசின்மேல் தரித்துக் கொள்வாம்.

வெள்ளியம்பலவாணர்.

பொருமாறிற்கிளர்ந்தடைந்தோளொருமாறன்மனங்கிடந்தபுழுக்கமாற வருமாறிற்கண்ணருவிமாரிதுகளிப்படையமண்ணும்விண்ணு முருமாறிப்பவக்கடல்வீழ்ந்தாசலனத்தடுமாறியுழலுமாக்கள் கருமாறிக்கதியடையக்கான்மாறிநடித்தவரைக்கருத்துள்வைப்பாம்.

இ-ள். போர்செய்யு முறைமையில் கிளர்ச்சி யுருகின்ற பெரிய தோளையுடைய வெற்பில்லாத இராஜசேகரபாண்டியன் மனதிலுண்டாகிய வருத்தம் நீங்கவும், வருகின்ற ஆற்றுவெள்ளம்போலே அம்மன்னவன் கண்ணிலிருந்து ஆனந்தவெள்ளம்மாருமல் பெருகிக் களிப்படையவும் மேலே போவதும் கீழே வருவதுமாகிய ஊசலைப்போல் தேவரூபங்கொண்டு சுவர்க்க முதலாகிய பதங்களிற் செல்வதும் பின்னும் இவ்வுலகத்தே மனித உருவு முதலாகிய உருவங்கொண்டு வருவதுமாகிய பிறவிக்கடலில் ஆழ்ந்து மனந்தடுமாறி உழலுகின்ற மனிதர்கள் அப்பிறவியை நீங்கி மோக்ஷமடையவும் கால்மாறியாடிய சோமசுந்தரக்கடவுளை இருதயத்தில் கருதுவாம்.

தகூஷிணைமூர்த்தி.

கல்லாலின்புடையமர்ந்துநான்மறையாறங்கமுதற்கற்றகேள்வி
வல்லார்கணுல்வருக்கும்வாக்கிறந்தபூரணமாய்மறைக்கப்பாலா
யெல்லாமாயல்லதுமாயிருந்ததனையிருந்தபடியிருந்துகாட்டிச்
சொல்லாமற்சொன்னவரைநினையாமநினைந்துபவத்தொடக்கைவெல்வாம்.

இ-ள். கல்லாலமரத்தினிடத்தில் வீற்றிருந்து நான்கு வேதங்களும் ஆறங்கங்களுமுதலாக எல்லாக்கலைகளையும்கற்ற கேள்விவல்லவர்களாகிய சனகர்-சனந்தனர்-சனாதனர்-சனற்குமாரர் என்னும் முனிவர்களுக்கு வாக்குக்கெட்டாத பரிபூரணமாய் வேதங்களுக்கெட்டாததாய் எல்லாப்பொருளுமாய் அப்பொருளல்லாததுமாய் இருந்த உண்மையை அதுநிர்விகாரமாயிருந்ததுபோலத்தாமும் அசைவறவிருந்துகாட்டி வாக்கிறற்சொல்லாமல் குறிப்பாற்சொல்லிய தட்சிணைமூர்த்தியைத் தற்போதவழியிற் சிந்தியாமல் திருவருள்வழிநின்று சிந்தித்துப் பிறவித்தொடர்ச்சியை வெல்லுவாம்.

சித்திவிநாயகர்.

உள்ளமெனுங்கூடத்திலுக்கமெனுந்தறிநிறுவியுறுதியாகத்
தள்ளரியவன்பென்னுந்தொடர்பூட்டியிடைப்படுத்தித்தறுகட்பாசக்
கள்ளவினைப்பசுப்போதக்கவளமிடக்களித்துண்டுகருணையென்னும்
வெள்ளமதம்பொழிசித்திவேழத்தைநினைந்துவருவினைகடீர்ப்பாம்.

இ-ள். எமது உள்ளமாகிய கூடத்தில் மனவுறுதியாகிய கட்டுத்தறியைநாட்டித் தள்ளக்கூடாத அன்பென்னுஞ் சங்கிலியை உறுதியாகப்பூட்டி அதினிடத்தில்கட்டிக் கொடிய ஆணவமலசம்பந்தமான கள்ளவினையையுடைய சிவபோதமாகிய கவளங்கொடுக்க அதனைக் களிப்புடன் உண்டு கிருபையாகிய மதவெள்ளத்தைப் பொழிகின்ற யானையாகிய சித்திவிநாகரைத் தியானித்து வருகின்ற வினைகளை யொழிப்பாம்.

சுப்பிரமணியர்.

கறங்குதிரைக்கருங்கடலுங்காரவுணப்பெருங்கடலுங்கலங்கக்கார்வந்
துறங்குசிகைப்பொருப்புஞ்சூருரப்பொருப்பும்பிளப்பமறையுணந்தோராற்று
அறங்குலவுமகத்தழலுமவுணமடவார்வயிற்றினழலுமூள [ம்
மறங்குலவுவேலெடுத்தகுமாவேள்சேவடிகள்வணக்கஞ்செய்வாம்.

இ-ள். ஓலிக்காநின்ற அலைகளையுடைய கரியகடலும் கருமைநிறமுள்ள அவுணராகிய பெரியகடலுங் கலங்கவும் மேகம்வந் துறங்கும்படியான சிகரத்தையுடைய கிரவுஞ்சமலையும் சூரனுடையமார்பாகிய மலையும் பிளக்கவும் வேதங்களை யுணர்ந்தோராகிய பிராமணர்கள் செய்கின்ற வேள்வித்தீயும் அவுணமாதர்கள் வயிற்றிலுண்டாகும் தீயும் சிகைவிட்டெரியவும், வீரமே விளக்கிக்கொண்டிருக்கும் ஞானசத்தியாகிய வேலாயுதத்தைத்திருக்கரத்தில் ஏந்தியருளிய சுப்பிரமணியக்கடவுளின் சிவந்தபாதங்களைப் பணிவாம்.

சரஸ்வதி.

பழுதகன்றநால்வகைச்சொன்மலரெடுத்துப்பத்திபடப்பரப்பித்திக்கும்
முழுதகன்றுமணந்துசுவைவிழுகியணிபெறமுக்கண்மூர்த்திதாளி
லெழுதகன்றவன்பெனுநார்தொடுத்தலங்கல்சூட்டவரிச்சுரும்புந்தேனுங்
கொழுதகன்றவெண்டோட்டுமுண்டகத்தாளடிமுடிமேற்கொண்டுவாழ்வாம்.

இ-ள். சூற்றம்நீங்கியபெயர்ச்சொல் - வினைச்சொல் - இடைச்சொல்-உரிச்சொல்லென்னும் நால்வகைச்சொற்களாகிய மலர்களையெடுத்துப் பத்தியுறப்பரப்பி எட்டுத்திசைகளிலுஞ்சென்று மணம்வீசி மதுரமொழுகி அலங்காரம்பொருந்த அகன்ற அன்பாகிய நாரிலுல் மாலையாகத்தொடுத்துத் திரிநேத்திரங்களையுடைய சோமசுந்தரக்கடவுள் பாதங்களில்பணிந்து தரிப்பதற்கு வரிபொருந்திய சுரும்பென்னும் வண்டுகளும் தேனென்கிற வண்டுகளும் குடைதலால் மலர்ந்த இதழ்களையுடைய வெள்ளைத்தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் சரஸ்வதியின் திருவடிகளை எமதுமுடிமேல் சூட்டிக்கொண்டு வாழ்வாம்.

நந்திதேவர்.

வேறு.

வந்திறையடியிற்றுழும்வானவர்மகுடகோடி
பந்தியின்மணிகள்சிந்தவேத்திரப்படையாற்றுக்கி
யந்தியும்பகலுந்தாண்டாலகிடுங்குப்பையாக்கு
நந்தியம்பெருமான்பாதநகைகமலர்முடிமேல்வைப்பாம்.

இ-ள். கயிலாயகிரியில்வந்து பரமசிவனுடைய திருவடிகளில்வணங்குகின்ற தேவர்கள் (நெருக்கங்கொள்ளாத வண்ணம்) அவர்களுடைய கிரீடங்களில் பந்திபந்தியாகப் பதித்திராநின்ற ரத்தினங்கள் சிந்தும்படி தம்முடைய கையிலிருக்கும் பிரம்பிலால் அடித்து அந்திபொழுதிலும் பகற்பொழுதிலும் அடியார்கள் திருவலகிடும்படியான குப்பையாக்குகின்ற எம்முடைய பெருமானாகிய திருநந்திதேவருடைய திருவடித்தாமரை மலர்களை முடிமேல் தரித்துக்கொள்வாம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

கடியவிழ்கடுக்கைவேணித்தாதைதோற்கணற்கண்மீனக்
கொடியனைவேவநோக்கிக்குறைவிரந்தனையான்கற்பிற்
பிடியனநடையாள்வேண்டப்பின்னுயிரளித்துக்காத்த
முடியணிமாடக்காழிமுனிவனைவணங்கிசெய்வாம்.

இ-ள். வாசனைமிகுந்த கொன்றைப்பூமாலையணிந்த சடைமுடியையுடைய தமதுபிதாவாகிய பரமசிவன் மீனக்கொடிதோணுகிய மன்மதனை



யும்படி தீக்கண்ணூற் பார்த்துப் பின்பு அவன் மனைவியாகிய ரதிதேவிவந்து வணங்கிமுறையிட்டுவேண்ட அந்த மன்மதனுக்கு உயிர்கொடுத்து ரக்ஷித்தருளியதுபோலத் தாம் எழுந்தருளியிருந்த திருமடத்தில் சமணர்களிட்டதீயை யேவி அந்தத்தீயாகிய சுரவெப்பத்தில் மீனக்கொடியுடைய பாண்டியன்வருந்தச்செய்து அதன்பின்பு அவன் மனைவியாகிய கற்புள்ள பெண்யானையி னடை போன்ற நடையினையுடைய மங்கையர்க்கரசியார் வந்து வணங்கிக்குறையிரப்பத் (திருவுளமிரங்கித் திருநீற்றுப் பதிகமோதிப் பாண்டியன் மேல் விபூதியைத்தடவி வெப்பநோயை நீக்கி) அவனுயிரைக் கொடுத்துக்காத்த சிகாமங்கள் பொருந்திய வீடுகள்நெருங்கிய சீர்காழியில் திருவவதாரஞ்செய்த ஆளுடைய பிள்ளையாரை வணங்குவாம்.

திருநாவுக்கரசுநாயனர்.

அறம்பெருஞ்செல்விபாகத்தண்ணலஞ்செழுத்தாலஞ்சா
மறப்பெருஞ்செய்கைமாறுவஞ்சகரிட்டநீல
நிறப்பெருங்கடலும்பார்க்குநீந்துதற்கரியவேழு
பிறப்பெனுங்கடலுநீத்தபிரானடிவணக்கஞ்செய்வாம்.

இ-ள். பார்வதிதேவியை இடப்பாகத்தில் வைத்தருளிய பரமசிவனுடைய பஞ்சாக்ஷரப்புணையினல் மிகுந்த பாபச்செயல் மாறுத சமணர்கள் கல்லிற் கட்டியிட்ட பெரிய கருங்கடலையும் யாவர்க்கும் நீந்துதற்கரிய எழுபிறப்பாகிய கடலையும் எளிதில் நீந்திய ஆளுடைய வரசுகள் திருவடிகளைவணங்குவோம்.

சுந்தரமூர்த்திநாயனர்.

அரவகலல்குலார்பாலாசைநீத்தவர்க்கேவீடு
தருவமென்றளவில்வேதஞ்சாற்றியதலைவன்றன்னைப்
பரவைதன்புலவிதீர்ப்பான்பழுதுகண்டுபடுக்கும்பா
ளிரவினிற்றூதுகொண்டோனிணையடிமுடிமேல்வைப்பாம்.

இ-ள். மாதர்களிச்சையை நீக்கினவர்களுக்கே மோக்ஷந் தருவோமென்று அளவில்லாத வேதங்களில் சொல்லிய பரமசிவனைப் பரவைநாச்சியாருடைய ஊடலைத் தீர்க்கும்பொருட்டுப் பேய்களும் நித்திரை செய்யத்தக்க அர்த்தராத்திரியில் தூதுபோகும்படி அனுப்பிய ஆளுடைய நம்பிகளது இரண்டு திருவடிகளையும் எம்முடைய சிரசின்மேல் தரித்துக்கொள்வோம்.

மாணிக்கவாசகசுவாமிகள்.

எழுதருமறைகடேருவிறைவனெல்லிற்கங்குற்
பொழுதறுகாலத்திதன்றும்பூசனைவிடாதுசெய்து
தொழுதகைதலைமேலேறத்துளும்புகண்ணீருண்மூழ்கி
யழுதடியடைந்தவன்பண்டியவர்க்கடிமைசெய்வாம்.

இ-ள். எழுதுதற்கரிய வேதங்களாலும் இத்தன்மையெனத் தெரியப் படாத பரமசிவனைப்பகற்பொழுதிலும் இராப்பொழுதிலுமாகிய ஆறுகாலத் தும் நாள்தோறும் இடைவிடாது பூசைசெய்து தொழுத கைகள் தலையின் மேலேற வைத்துக்கொண்டு துதிசெய்து அன்பிலுல்டெருகாநின்ற ஆனந்தக் கண்ணீருள்முழ்கிப் பிரிவாற்றுமைபால் அழுது திருவடி நிழலில் சேர்ந்த அன்பராகிய ஆளுடைய அடிமையின் அடியவர்களுக்கு யாம்பத்திசெய் வோம்.

சண்டேசநாயனர்முதலியதிருத்தொண்டர்கள்.

வேறு.

தந்தைதாளொடும்பிறவித்தாளொரிந்துநிருத்தரிருதாளைச்சேர்ந்த
மைந்தர்தாள்வேதநெறிசைவநெறிவழாதுவாய்மெய்
சிந்தைதானானடிக்கேசெலுத்தினராய்ச்சிவானுபவச்செல்வராகிப்
பந்தமாந்தொடக்கறுத்ததிருத்தொண்டர்தாள்பரவிப்பணிதல்செய்வாம்.

இ-ள். தம்முடைய பிதாவின் தாள்களுடன் பிரமித்தாளையும் வெட் டித்தரித்து நடனமூர்த்தியாகிய பரமசிவனுடைய திருவடிகளைச்சேர்ந்தசண் டேச நாயனருடைய பாதங்களையும், வைதிகநெறியிலும் சைவநெறியிலும் பத்திமார்க்கத்திலும் மாறுபடாமல் நடந்து மனவாக்குக் காயங்களின் செய் கையாகிய சிந்தித்தல் துதிசெய்தல் பூமாலைத்தொடுத்தல் முதலாகிய தொ ண்டுகளைப் பரமசிவனது திருவடிக்கேசெலுத்திச் சிவானுபவம் பெற்றிருக்கு மற்ற அடியார் பாதங்களையும் பணிந்து போற்றி செய்வோம்.

மூதனூல்வழி.

வேறு.

அண்ணல்பாற்றெளிந்தநந்தியடிகள்பாற்சனற்குமார
னுண்ணிறையன்பினுய்ந்துவியாதனுக்குணர்த்தவந்த
புண்ணியமுனிவன்சூதற்கோதியபுராணமுவா
றெண்ணியவிவற்றுட்காந்தத்தீசசங்கிதையின்மாதோ.

இ-ள். பரமசிவனிடத்தில் உபதேசம் பெற்றுக்கொண்ட நந்திதேவ ரிடத்தில் சனற்குமாரமுனிவர் உள்ளத்தில் நிறைந்த அன்பினுல் உபதேசக் கிரமமாக ஓதியுணர்ந்து வியாசமுனிவருக்குப் போதிக்க அந்தப் புண்ணிய சொரூபராகிய வியாசமுனிவரானவர் சூதமுனிவருக்கு அருளிச்செய்த புரா ணங்கள் பதினெட்டாம் எண்ணப்பட்ட அந்தப்பதினென் புராணங்களில் ஒன்றுகிய காந்தத்தில் சொல்லப்பட்ட சங்கரசங்கிதையில்.

நூல்செய்தற்குக்காரணம்.

அறைந்திடப்பட்டதாகுமாலவாய்ப்புகழ்மையந்தச்
சிறந்திடும்வடநூலன்னேத்தென்சொலாற்செய்தியென்றிங்
குறைந்திடும்பெரியோர்கூறக்கடைப்பிடித்துறுதியிந்தப்
பிறந்திடும்பிறப்பிலெய்தப்பெருதுமென்றுள்ளந்தேறு.

இ-ள். திருவாலவாய் புகழ்ச்சி சொல்லப்பட்டதாய் அந்தச் சிறப் புற்றதாகிய சமஸ்கிருத புராணத்தைத் தமிழ்ப் புராணமாகச் செய்யென்று அந்தஸ்தலத்தில்வாசமாயிருக்கும் பெரியோர்கள்சொல்ல அவ்வார்த்தையை ஞாபகத்தில்வைத்துக்கொண்டு ஆன்மலாபத்தை யிந்தப்பிறப்பில் அடையப் பெறலாமென்று மனந்தெளிந்து.

மொழிபெயர்த்தவிதம்.

திருநகர் தீர்த்தமூர்த்திச்சிறப்புமூன்றந்தமூர்த்தி
யருள்விளையாடலெட்டெட்டருச்சனைவிளையொன்றுக
வரன்முறையறுபத்தெட்டாமற்றவைபடலமாக
விரிமுறைவிருத்திச்செய்யுள்வகைமையால்விளம்பலுற்றேன்.

இ-ள். தலவிசேஷம் தீர்த்தவிசேஷம் மூர்த்திவிசேஷம் என்பன மூன்று அந்தமூர்த்தியானவர் கிருபையினால் செய்தருளிய திருவிளையாடல் அறுபத்துநாலு அருச்சனை விளையென்று ஆக அறுபத்தெட்டு வரன்முறை அந்தவரன்முறைமைப்படி அறுபத்தெட்டுப்படலமாக அமைத்து விரிமுறை யாக விருத்தமாகிய செய்யுட்பேதங்களால் சொல்லத் தொடங்கினேன்.

அவையடக்கம்.

நாயகன்கவிக்குங்குற்றநாட்டியகழகமாந்தர்
மேயவத்தலத்திரைக்கென்வெள்ளறிவுரையிற்குற்ற
மாயுமாறிதன்றேனுநீர்பிரித்தன்னமுண்ணுங்
தூயதிம்பால்போற்கொள்கசுந்தரசரிதந்தன்னை.

இ-ள். சோமசுந்தரக்கடவுள் திருவாய்மலர்ந்தருளிய "கொங்குதேர் வாழ்க்கையஞ்சிறைத்தும்பி" என்ற திருப்பாசுரத்துக்குக் குற்றங்கூறிய சங் கப்புலவர்கள் பொருந்திய அம்மதுரைநகரி லிருப்பவர்க்கு என்னுடைய வெள்ளறிவினுற் சொல்லும் சொற்களிற் குற்றம் ஆய்வது அரிதல்லவானு லும் (நீரையும் பாலையும் ஒன்றுகக் கலந்து வைத்தால்) அன்னபக்ஷியானது நீரைப்பிரித்துவிட்டு பாலமாத்திரம் உண்பதுபோல் (குற்றங்களை நீக்கிவிட் டுச்) சோமசுந்தரக்கடவுள் சரித்திரமாகிய திருவிளையாடலை மாத்திரம் எற் றுக்கொள்ளக்கடவர்கள்.

கலிநிலைத்துறை.

கவைக்கொழுதழுஞ்சுவைகண்டவூனிமையோர்
சுவைக்கவின்னமுதாயினதுளக்கமில்சான்றோ
ரவைக்களம்புகுந்தினியவாயாலவாயுடையார்
செவிக்களம்புகுந்தேதறுவசிறியனென்பனுவல்.

இ-ள். பிளவுடன் சிகைவிட்டெரிகின்ற அக்கினிதேவனுடையநாவி னல் உரிசைக்கண்ட ஊனனது தேவர்கள் உண்ண இனிதாகிய அமுதம்போ லாகின்றன அதுபோல் கல்வியுணர்ச்சியில்லாத எளியேன்சொல்லிய பாடல்

கள் உறுதிப்பாட்டினையுடைய சான்றோர் அவையினிடத்துச் சென்று குற்றங்களெல்லாம் நீங்கி மதுரமுள்ளவைகளாய்ச் சோமசுந்தரக் கடவுளுடைய திருச்செவிகளிடத்துச்சென்று அடைவன.

பாயவாரியுண்டுவர்கெடுத்துலகெலாம்பருகத்
தூயவாக்கியகாரெனச்சொற்பொருடெளிந்தோ
ராயகேள்வியர்துகளறுத்தாலவாயுடைய
நாயனூர்க்கினிதாக்குபநலமிலென்புன்சொல்.

இ-ள். மேகங்கள்பரந்த சமுத்திரநீரையுண்டு அந்நீரிலுள்ள உப்பினைக்கொடுத்து உலகத்தாரெல்லாரும் உண்ணத்தக்கதாகப் பரிசுத்த மாக்குதல்போல் சொற்பொருள் தெளிந்தவர்களாகிய சான்றோர்கள் கல்வி நலமில்லாத என்னுடைய புன்சொல்லில் உண்டாகிய குற்றங்களை நீக்கிச் சோமசுந்தரக்கடவுளுக்கு இனியதாகச் செய்வார்கள்.

அல்லையீதல்லையீதெனமறைகளுமன்மைச்
சொல்லிறற்றுதித்திளைக்குமிச்சுந்தரனுடற்
கெல்லையாகுமோவென்னுரையென்செய்கேனிதனைச்
சொல்லுவேனெனுமாசையென்சொல்வழிகேளா.

இ-ள். இதுவல்ல இதுவல்லவென்று வேதங்களும் அன்மைச்சொல்லினால் துதிசெய்து இளைப்பதேயன்றிக் காணக்கூடாத சோமசுந்தரக்கடவுளுடைய திருவிளையாடலைச்சொல்லுதற்கு என்னுரையானது அளவுபடுமோ படாது என்னும் எண்ணத்தினால் நான் சும்மா இருந்தாலும் இதனையான் சொல்லுவேனென்று என் உள்ளத்தில் உண்டாகின்ற ஆசையானது யான் சொல்லுமார்க்கத்தைக் கேட்கவில்லை ஆதலால் நானென்னசெய்வேன்.

அரங்கேற்றிடம்.

அறுகாற்பீடத்துயர்மாலாழிகடைந்தமுதையரங்கேற்றுமாபோல்
அறுகாற்பேடிசைபாடுங்கூடன்மான்மியத்தையருந்தமிழாற்பாடி.
அறுகாற்பீடுயர்முடியார்சொக்கேசர்சந்நிதியிலமரர்சூழும்
அறுகாற்பீடத்திருந்துபரஞ்சோதிமுனிவனரங்கேற்றினனே.


இ-ள். ஆதிசேஷனெகிய சயனத்தில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலானவர் திருப்பாற்கடலைக்கடைந்து அதிலுண்டான அமிர்தத்தைஅரங்கேற்றிய முறைமைபோல் பெண்வண்டுகள் இசைபாடும்படியான சோலைகளையுடைய திருவாலவாயின் மான்மியத்தை அரிதாகிய தமிழிற்பாடி அழகிற்பெருமை யோங்கிய திருமுடியையுடையவராகிய சொக்கநாத சுவாமி சந்நிதியில் தேவர்கள் சூழ்ந்திருக்கும் அறுகாற்பீடத்திலிருந்து பரஞ்சோதி முனிவர் அரங்கேற்றினர்.

பாயிரம் - முற்றிற்று.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



திருவிளையாடற்புராணம்.

மதுரைக்காண்டம்.

பாண்டித்திருநாட்டுப் படலம்.

கலிநிலைத்துறை.

கறை நிறுத்திய கந்தரச் சுந்தரக் கடவு
ளுறை நிறுத்திய வாளிறற் பகையிரு ளொதுக்கி
மறை நிறுத்திய வழியிலல் வழுதியாய்ச் செங்கோன்
முறை நிறுத்திய பாண்டிநாட் டணியது மொழிவாம்.

இதன்பொருள்.

விஷத்தைதவைத்த கண்டத்தைதயுடைய சொமசுந்தரக் கடவுளானவர் பாண்டியராசனுகி உரையிற்பூட்டும் வாளாயுதத்திஞலே பகைவராகிய இருள் சேராவண்ணந் துரத்தி வேதத்தில் தம்மாற் சொல்லப்பட்ட முறைமைப் படி செங்கோன்முறை நிலைநிற்கச்செய்த பாண்டிநாட்டின் சிறப்பினைச் சொல்லுகின்றேம்.

முழங்குகின்ற சத்தத்தையுடைய மேகங்கள் தேவர்கள் தலைவனுகிய சிவபெருமானுடைய திரு வெண்ணீறு தரித்த திருமேனியைப்போல் வெண்ணிறங்கொண்டு சென்று சமுத்திரத்தி நீரையுண்டு பலவுயிர்களுக்கும் துன்பம்போக்குதற்கு அந்தத் தெய்வநாயகன் நல்லருள்சுரந்தாற்போல முழங்கு நீர் தானே ஒழுகும்படிக்கொண்டி ஆகாயத்திலெழுந்து வாயைத்திறந்து ஓல்லென இடித்துச் சூரியன் ஒளிமழுங்க மின்னலாகிய பக்கத்து வாளை உருவி நின்று வானவில்லைக்கொண்டு நீண்ட அம்புகளைக் கோடைகாலத்தின்மேலே பொழிந்து வெவ்விதான பெரிய சண்டைசெய்து பகையைத் தீர்ப்போம் யாமென்று எண்ணி வருகிறதுபோலே ஆகாயமெல்லாம் நெருங்கி அகத்திய முனிவருடைய உயர்ந்த பொதியமலைக்குமேலே உயர்ந்து முழங்கி அப்படி முழங்குகின்ற மேகங்கள் நீண்ட கோதண்டபாணியான இராமனைவன் அண்டுகனிந்த சூணத்துடனே திருவாலவாய்க்கடவுள் முடிமேலே பரிசுத்த

நீரைக்கொண்டு திருமஞ்சனஞ் செய்வதுபோல நீரைப்பெய்து பின்னும் அருத்சோமசுந்தரக்கடவுள் திருமுடிமேலே நன்னீரைக்கொண்டு அபிஷேகஞ்செய்த இந்திரனையுமொப்பான கறுத்தமேகங்கள் அந்த இந்திரன் எம்பெருமானுடைய முடிமேல் அருச்சனைசெய்கின்ற கையினின்றும் பத்திரபுஷ்பங்கள் சிதறினுப்போலே அந்தப் பொதியமலைமேலே பலவித மணிகள் தெரித்துச் சிந்த வந்துகவிந்து பொழியலாயின. அப்படிபொழிகிறதிணலே தெளிந்த நீரையுடைய சமுத்திரத்தை மேகலையாகத்தரித்த பூமிதேவியிடத்திலே பிறந்த பலவகைப்பட்ட வுயிர்களுக்கெல்லா மனமிரங்கி அவள் கொங்கையாகிய முகட்டிலிருந்து ஒழுகுகின்ற பால்போல அந்த உயர்ந்த மலைமுகட்டிலிருந்து இழுமென்னு மோசையுடனே தூங்கும் வெள்ளருவி கீழே விழுவதாயின. அப்படி கருநிறமேகமாகிய ரவிக்கையை யணிந்த சிகரமாகிய கொங்கையிலிருந்து வெள்ளருவியாகிய தீம்பாலொழுக அகன்றசுனையென்னும் உந்தியையும் மூங்கிலென்னும் ஒப்பில்லாத மேன்மை பொருந்திய தோள்களையுமுடைய பொதியமலையாகிய ஒருபெண் பெருகுதலையுடைய குளிர்ந்த தாமிரபர்ணியென்னும் ஒருபெண்பிள்ளையைப் பெற்றுள்போலக் கரைந்து விழுகின்ற வேகத்தையுடைய தாமிரபர்ணியாறுகிய பிள்ளை முல்லைநிலத்தில் ஒல்லென்று தவழ்ந்து மதுரம்பொருந்திய பாலையுண்டுக்கொண்டு திண்ணிய தோள்களையுடைய மள்ளர்கள் மேகம்போலே முழக்குகின்ற பம்பையின் நல்லோசையைக்காதினிடத்துவிழக்கேட்டு மெதுவாசக் காலின்வழிசென்று மருதநிலங்களெல்லாம் விளையாடல் செய்துக்கொண்டுவாழைமரமேமெல்லியதோடைகளாகவும் மாமரத்தினிளந்தளிரேநிறமாகவும்தென்னங்குரும்பையே தனங்களாகவும் வஞ்சிக்கொடியேதுவளரும் இடையாகவும் கூந்தற்பனையே வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலாகவும் தாமரைமலரே ஒளியையுடைய சந்திரனையொத்த முகமாகவும் கொண்டு நிரம்பி நீளுகின்ற தாழைகளே வேலியாக நெய்தநிலத்தைச்சூழ்ந்த சோலைகளிலுந் தங்கிப் பலமலர்களாகிய மாலைசூடிய பால்போலு நுரையாகிய போர்வை போர்த்துக்கொண்டு பொதியமலை சந்தனத்தேய்வும் கஸ்தூரிச்சேறும்பூசிப் பொன்னுமணியு முத்தும்பூண்டு பொருநையாகிய பெண்கடலாகிய தனது மகிழ்வுக்குரிய புருடன் மார்பைத் தழுவிக்கொண்டு கூடியது அப்படி அந்தப் பொருநையாறு சிவபூசையாகிய அடிமைத்தொழில் செய்கிறவர்கள் போலே விரைவிலேதாவி இருகரையிலும் உள்ள சிவாலயங்களெல்லாஞ் சென்று முல்லைநிலத்துள்ள பஞ்சகௌவியமும் தேனும் அலையாகிய கையிலே மொண்டு வீசி நல்லகஸ்தூரியும் சந்தனமும்பூசி வாசம்பொருந்திய புஷ்பங்களைத் தூவிக்கொண்டு பின்னும் அந்த வெள்ளமானது சிவபெருமானுக்குப் பிச்சையிட்ட முனிவர்கள் பத்தினிகள்போல அரும்பாகி மலர்கின்ற மன்மதபாணங்கள் அலைதாவும் பொன்னிறங்கொண்டு பிரலாபித்து வாலன்னத்தையேந்தி இருகைகளிலுஞ் சள்குகள்சிந்தி மருங்கிலே சூழ்ந்த காஞ்சியையுந் தள்ளி வரம்பு கடந்துசென்று பொதியமலையிலுள்ள மணிகளும், பொன்னும், வைரமும், குழையும் கரைகளுள்ள மருதநிலமாகிய பெண்ணுக்குப் பூட்டி அரைபட்ட அகிலும் சந்தனமும்பூசி நல்ல அழுதழுட்டி அலைகளுள்ள பொருநையாறுனது பக்குவமாகக்கண்டு வளர்க்கின்ற செவிலித்

தாய்போல் வளர்த்து வேதமாகிய கலைகளெல்லாம் நீலமணிபோலுங் கண்ட
த்தையுடைய கடவுளே எங்குநிறைந்த பரம்பொருளென்றும் பூதிசாதன
நெறியே வீடென்றும் சொல்லுவது தெரிந்துந் தெரியாதவர்கள் புத்திபோ
லக்கலங்கி அந்த முறைப்படியே வீட்டினுண்மை தெரிந்தவர்போல அந்த
ஆற்றுவெள்ளந் தெளிந்து வேதத்தின்வழியே உண்டாகிப் பிரிந்த அறுபத்
துநான்கு கலைஞானங்கள்போல துறைகளெல்லாம் செல்லுகின்ற பலவாய்க்
கால்களும் சோலைகளும் குளிர்ந்த வயல்களும் கொம்பிலேகட்டினதேன்கூடு
டைந்து அழிகிறதுபோ லோடுகிற ஓடைகளும் எவ்விடங்களிலுமோடி வெ
ள்ளியம்பல வாணருக்கு அன்பரானவர்களுடைய நிறைவுகொடாத மனத்
தன்புபோல நிரம்பி இழிவானவர்கள் கைப்பொருளாலுலும் இகபரத்தா
சைகளை விட்ட யோகிகள் கைவசமாலுல் அந்தப்பொருள் பரிசுத்தமாய் இ
ழிவுநீங்கிறற்போல உவர்க்கடலின் நீரையுண்டு அந்த உவர்ப்பைப்போக்கி
மேகம்பொழிந்த நீரானது மண்ணுலகத்தார்க்கும் விண்ணுலகத்தார்க்கும்
அமிர்தமேயாம் அழிவில்லாதசத்தி யொருத்திதானே ஐந்துதொழில்களுஞ்
செய்ய வெவ்வேறு திருநாமங்களைத் தரித்துக் கொண்டாற்போல் கடலி
னீரொன்றுதானே ஆறு, கால், குளம், கிணறு, குண்டு, அகழ், கிடங்கு என்
று பெயர்கள்மாறி அழிவில்லாத பெருமைபொருந்திய பயிர்களையெல்லாம்
வளர்க்கலாயிற்று. அப்படிப பொருநையாற்று வெள்ளம் பெருகினபோது
மருதநிலத்திலுள்ள உழவர்கள் எருதுமாடுகளையும் ஆணெருமைகளையும்
பொன்னேரிலே பூட்டிப்பெற்ற தாயானவள் மனங்கனிந்து வாயாலே பாடு
கிற தாலாட்டுக்கு மனமகிழ்கின்ற பிள்ளைபோல அவற்றுக்குச் சந்தோஷம்
பெருக வளமிகுந்த மருதநிலத்திராகம்பாடி மனவலியைவென்ற முனிவர்க
ள் ஜெயித்தவைகளான விஷயங்களிலே சுழலுகின்ற இந்திரியங்கள்போல்
ஏவல்செய்ய உழுது பாம்படித்தல் முதலான ஆள்வேலைகளிலே மூண்டு அ
ந்த ஆள்வினைக்கருங்கான் மள்ளர்கள் பலநிறமான ரத்தினங்களைக்கோத்த
ற்போலப் பல நிறங்களையுடைய மாடுகளைக்கட்டிக் கலப்பைகளின்கொழுமு
கத் திரும்புகள் வெளுக்கப் பூமிதேவியின் உடம்பைக்கிழித்த படைச்சாலி
ன்வழியே அந்த உடம்பிலிருந்து உதிரம் பெருகியதுபோல கெருப்பு மய
மாக மாணிக்கங்கள் விளங்கப் பூமிதேவியின் உடம்பைக்கிழிக்கிற கொழுமு
னைதேய உழுகிறவர்களும் தண்ணீரை வாய்க்கால் வழியே பாயச்செய்து
சேறுபண்ணுகிறவர்களும் தெய்வத்தை வணங்கி நல்ல செந்நெல்களை விதை
த்து நாற்றுநடச்செய்கிறவர்களும் பிடுங்கி அந்த நாற்றை நடுகிறவர்களும்
பகைவர்போல விரோதஞ்செய்கின்ற களைகளைக் களைந்து வளரச்செய்து
விளைவுதோன்றச் செய்கின்றவர்களுமாக உழத்திகள் சுழிக்கப்படுகிற
மதுவைக் குடித்துச் சிவந்த வாயில் வார்த்தைகள் தடுமாற விபர்வைகள்
முகத்திலுண்டாக நகையுந்தோன்றக் கண்கள் சிவந்து பிறழ கூந்தலும்
மெல்லிய இடையிலுடுத்தின வஸ்திரங்களும் அவிழ மனத்திலே மிகப்பெ
ரிய களிப்பைத் தருதலால் அவர்கள் குடித்த மதுவானது நாயகரோடு
கூடினபெண்களாகச் செய்தது, அப்படிக்களித்த இசைப்பாட்டை வெ
ல்வதான மாதுரியச்சொற்கள் சொல்கின்ற உழத்திபருடைய பவள்ம்போ

லும் வாய்க்கு உட்பகையானவை செவ்வல்லி மலர்களென்றும் அப்பெண்க ளுடைய கண்களுக்குப்பகையானவை அழகானவாசம்பொருந்திய கருங் குவளைமலர் நீலமலர்களென்றும் அப்பெண்களது அழகிபமுகத்துக்கு எந்த காலத்தும் வலியபகை தாமரைமலர்களே யாமென்றும் சினந்து போக்குதல் போலக் களைகளைப்பிடுங்கி பெரியவர்கள் பின்னும் உழுவர்கள் அந்த உழத் தியர் முகத்தையும் கால்களையும் கைகளையும் போல்வன தாமரைமலர்களெ ன்றும் அப்பெண்களுடைய வாள்போலுங் கண்போல்வது கருங்குவளையெ ன்றும் பவளம்போலும் வாய் செவ்வல்லிமலரென்றும் எண்ணுமல் அரசனுக் குப் பகைவராளுல் எண்ணுது தண்டித்தல்போல அவ்வகை மலர்களை யெல் லாம் களைந்தெரிவார்கள் அப்படிப்பட்ட வயல்களிலே நெற்பயிர்கள் குற்றந் தீரக் கற்றவர்செய்த நூலின்பொருள்போல நெல் உள்ளடங்கி அந்த நூற் பொருளை அளவுசெய்துசொன்ன கருத்துரைபோல் அந்தநெல்லினது வள ருங்கருதானது வெளியேதான்றுவதாய் அளவமைந்த கல்விகல்லாதகவிஞ ரைப்போல நிமிர்ச்சிகொண்டு அந்தநூலின் உரைபோலப் பின்புவிரிந்து கற் பினையுடையபெண்கள்போலத் துவளுதலாயின, அன்பால்மிகுந்த பத்தியை விதைத்து சந்தோஷமாகியநீரைப்பாச்சுகின்ற சிவனடியார்களுக்கு ஆனந்த வடிவான சிவபெருமானருள் விளைவதுபோல வலிபான்மிகுந்த கருங்கான மல்லர்கள் நாள்தோறும் அந்தப்பயிர்கள் வளருந்திறங்கண்டு அவைவிளைகிற நன்னிலத்தைக் குற்றந்தீரக்காத்தலாலே அந்தக்குளிர்ந்த நல்லநெற்பயிர்கள் விளைவதாயின. அகன்ற நிலவேறுபாடுகளின் இபலும் பருவமுந் தெரிந்து உழுவர்கள்தகுதியாகத் தொழில் முபற்சிசெய்ய மதனநூலிற்சொல்லுகின்ற நான்குவகைப்பெண்கள் குணமும் பக்குவமுந்தெரிந்து கூடுகிற புருடர்களு க்கு இன்படிகுதியாக விளைகின்ற காமசுகத்தைப்போலப் பசிய பயிர்களெல் லாம் விளைய உழுவர்கள் கோணிவளைந்த பிரைவடிவாகச்செய்திருக்கிற அறி வாளைக் கையிற்கொண்டு வளைந்த கால்களையுடைய வரிவண்டுகள் பாடியெழ மூட்களைத் தண்டிலேகொண்ட தாமரைநிலங்களோடு கூடவெண்ணல் செந் நெல்களை வெவ்வேறே அறிந்து கட்டுகட்டிப் பெரியகளத்திலே அழகிய பொன்மலைபோல வரிசைவரிசையாகப் பெரிய நெற்போர்கள்செய்து பின்பு அடித்தவைக்கோலைக் கற்றையாகக்களைந்து தூற்ற நெல்லைக்குவித்து ஊருக் குக்காணியானதெய்வத்துக்கும் அதிதிகளுக்கும்தக்கபடியே செலவுசெய்து பின்பு அளந்து கணக்குச்செய்து ஆறிலொருபங்கு அரசர் கடன்கொடுத்து மற்ற ஐந்துபங்கையும் வண்டிமேலேற்றிக்கொண்டுபோய் தென்புலத்தார்குல தெய்வம் விருந்து ஒக்கல்களுக்கு உண்ணக்கொடுத்துத் தாமுமுண்பார்கள். சாற்றைக்காய்ச்சின கரும்புக்கட்டி-எள்ளு-சாமை - கொள்ளு-சோளம்-துவ ரை-ஆமுக மதத்தைப்பொழிகின்ற உயர்ந்தபானையின் விலாப்புடைப்போல பருத்தவாழைக்குலை-அவரை-தினை-வெவ்வேறு வகையான பயறுகள் இப்ப டிப்பட்ட புன்செய்யில் விளைகின்ற பலவகை பண்டங்களெல்லாம் பொதி மாடுகளிலும் வண்டிகளிலும் ஏற்றிப்பெரிய நிலம் பள்ளமாகக் கொண்டு போவார்கள். சந்நியாசிகள் சிவனடியார்கள் பசிக்குநல்லவுணவும் வலியதீவி னையால் வந்த நோயை தீர்க்கு மருந்தும் உடம்பில் குளிர்தீரத்தக்க வஸ்திர

மும் இருக்க இடமும் இன்னம்வேண்டியவைகளும்கொடுத்து இயல்புடைய மூவர் நல்வழிநடந்து செய்யுந்தருமத்துக்கு வரும் விக்கினங்களைப் போக்கி அரிபவீடுசேர்விக்கவல்லவர்களாய் எப்போதும் சிவனடியார்களைக்கண்டால் பிள்ளைகளின்மேல் வைத்த மறதியில்லாத அன்பும் ராஜபுத்திரர்களைக் கண்டாற்போல்பயமுங்கொண்டுகூசி பாதங்களைவணங்கி இன்சொற்கள்சொல்லி அவர்கள் இச்சைப்படிநடந்து மனக்குறிப்புத்தெரிந்து பணிவிடைசெய்வார்கள். பின்னும் வேதமுதல்வனுகிய சிவபெருமானடியார்கள் செல்லும் வழியில்நின்று உபசரித்துக் கூட்டிக்கொண்டுபோய் ரசம்பொருந்திய முக்கனிகளும் தேன்கலந்தபாலுடனே நல்லவாசனெய்நிறையவார்த்த செம்பொன்னிறமாகிய புழுங்கல் அரிசியாலே நிரம்பின சோற்றைக் குறைவுதீர உண்டு உங்களுக்குவேண்டிய பொருள்களெல்லாம் கொள்ளுங்களென்று அமுது செய்விப்பார்கள். இதையல்லாமல் அந்தப் பாண்டிநாட்டின் பெருமையை எப்படிச் சொல்லலாகுமென்றாலும் அந்தப் பெரிதான தமிழ்நாடாகிய பெண்ணுக்கு அங்கங்கே அவயவங்கள்போல விளங்குகின்ற ஊர்கள் அணியச்செய்த பொன்னுலாகிய ஆபரணங்களே கோயில்-மடம்-தருமசத்திரம்-தண்ணீர்ப்பந்தல்-அன்னசத்திரம் என்று வடிவு வேறுபட்டிருக்கின்றன.

(திணைமயக்கம்) நல்லகுளங்களி நீர்வேலியாகச்சூழ்ந்த இந்த நாட்டுக்குள்ளே குறிஞ்சிநிலம்-முல்லைநிலம் - மருதநிலம் - நெய்தநிலம்-ஆக நான்கு நிலங்கள் அதிகமாயிருக்கின்றன ஆனாலும் அந்தநிலங்களிலுள்ள பொருள்கள் பதினைந்தும் ஆற்றினாலும் பலகாரணங்களாலும் ஒருநிலத்திலிருந்து மற்றொருநிலத்துக்குப்போய்க்கலக்கிற பொருள்வகையைச் சொல்லத்தொடங்குகின்றோம். அவையாவன கொல்லைகளிலே பசுக்களைமேய்க்கிற இடையர்கள்தழைத்த கொத்துகளையுடைய குருந்தமரத்தில் ஏறி விறைவிலே அகில்மரத்திலே படர்ந்த மிளகுக் கொடிகளின் பெரியகொத்துகளை ஆடுகள் தின்ன முறித்துச் சிந்துவார்கள். வேடருடையசிறுபெண்கள் முல்லையரும்புகளைச்சோறாக அதனோடு தினைக் குழம்பாகக் கலந்து முத்துகளாலே கட்டினசிறு வீட்டினிடத்திலே தோழிப்பெண்களுடனே விளையாடுவார்கள். கன்றுடனே கனிவண்டுகள் வாயில்மொய்க்க நல்லாசமுள்ள, கரும்புகளை மென்றுக்கொண்டு பொன்னிறமுள்ள மலர்களைச் சிந்துகிற வேங்கைமரத்தினிழலிலே எருமைகடாக்கள் தூங்கும்மலையிலே இளமையாகிய தினைக்கதிரை மேய்ந்துநின்று மருதமரத்தின் அழகியநிழலிலேபோய் முறம்போலும் காதுகளையுடைய யானைகள் தமக்குப் படுக்குமிடமாகத் தூங்கும். கரைமேலே மோதுகின்ற தெளிந்த அலைகள் வீசுகின்ற சங்குகள் வேடருடைய சிறுபெண்கள் கட்டி விளையாடுகிற சிறுவீடுகளிலே புகுந்து குலைக்க அந்தச்சிறுபெண்கள் கோபங்கொண்டு பகைவர்போல அடிக்க அந்தச் சங்குகளினிருந்து தெறித்தமணிகளை வலைஞருடைய இளமை பொருந்திய தனங்களையுடையசிறுபெண்கள் முத்துடனே கோத்துக் கொள்ளுவார்கள். முல்லைநிலத்து வண்டுபோய் முல்லைராகத்தை மருதராகம் கற்ற வண்டுக்குக் கற்றுக் கொடுத்து அங்கேதானே மருதராகத்தைத் தானும் கற்றுக்கொள்ளும். கொல்லைகளிலே மேய்க்கிற பசுவின் மடியிலே வாளைமீன் போதி அந்தப்பசு தனது

இளங்கன்றென்று மனமிரங்கி விளைவில்சுரந்தூற்றுகின்ற பால் வெள்ளத் திலே துள்ளிவிளையாடும் இரும்பைப்போலும் கொம்புகளையுடைய இளமை யான புன்னைமலரில் தேனைக்குடித்து நல்ல பருவத்தையுடைய வண்டுகள் செவ்வழிப்பண்ணைப் பாணர்போற்பாட அதற்குவெகுமானம் கொடுப்பவர்க ளைப்போலக் கொன்றைமரங்கள் மலராகிய பொன்னைச்சிந்த அலகளையுடை ய பெரியகடலான்று சங்குகளையெடுத்துச் சக்கரக்கடவுள் கையிலிருக்கின்ற சங்குபோலத் தங்கியிருக்கக் காயா மரத்தின்மேல் வீசும் தென்னமரத்தில் முற்றிப்பழுத்த நெற்றுக்கள் உதிர்ந்து பலாமரத்தினுடைய முட்புறக்கனி யையுடைத்துச் சிந்தினதேனுனது நெய்தனிலத்து உவர்கேணியிலே பாய்ந் து அதின் உவரைப்போக்கும் தென்வழிகின்ற பூமடலையுடைய தாழமரத் துப் பூவினிழலைக் கொக்கென்று நினைத்து அதற்குவேறான தாமரைப்பூவிலே பு குந்து கெண்டைமீன் மறைந்துக்கொள்ளும் ஆறுகவோடுகின்ற உப்பங்கழி யின் புலால்நாற்றத்தை பொறுக்கமாட்டாமல் சோர்ந்து வளைந்த தாழை சோற்றைத்தா அதுகண்டு துணிந்து வாந்திசெய்கிறதென்று சொல்லுவார் போல செவ்வல்லிவாய்மலர்வன. அதைக்கண்ணுற் காட்டுவதுபோன்றகருங் குவளைமலரோடுகூடிப் பழிக்கிறவர்கள்போல நகைத்து முல்லை அலர்தூற்று கின்றன. துள்ளுகின்ற சேல்போலுங் கண்களையுடைய வலைச்சிகள் சுறுமீ னெடுண்ணைக் கள்ளுவாங்கவும் புளியங்காய் தினை அவரை கொள்ளுகள் வா ங்கவும் கிழங்கு தேன் நல்லசுவையையுடைய கரும்புக்கட்டி எள்ளுகள் வாங் கவும் பண்டமாற்றுக சரிக்குச்சரியாய் முத்துகளை அளந்துகொடுப்பார்கள். பயனில்லாமையின் மிகுகின்ற ஐம்புலன்களாகிய பகையை வென்று உயிர்க ளுக்கெல்லாம் அன்பாகிய புதிதாக மிகுகின்ற குடையாலே நிழலைச்செய்து மெய்யாகிய செங்கோல் செலுத்திச் சிவத்தியானத்தில் மிகுகின்ற பரஞான மாகிய மெய்யான செல்வத்துடனே கூடியிருந்து தவமாகிய அரசாட்சிசெய் கின்றது குளிர்ந்த தமிழ் தோன்றுதற் கிடமான பொதியமலை. வானயாற் றைப்பொருந்திய உயர்ந்த பொதியமலையே மூன்று கண்களையுடைய ஞான நாயகனை பரமசிவன் அந்த மலைமேல் கவிந்துக்கொண்டிருக்கிற மேகமே யசைகின்ற வாயையுடையு யானையை யுரித்ததோல், அந்த மேகத்துளிகளே அந்தயானையி னிரத்தம் வளைந்த இந்திரவில்லே, அந்த யானையின் இரத்தம் பொருந்திய கொம்பேபோ லிருக்கின்றது. சுனையும் அதனது அகன்ற கறை யும் பொன்னைக் காய்ச்சித் தோய்க்கின்ற தெண்ணீரும் அந்த நீரைக்கொண் டிருக்கிற மண்பாத்திரமுமாக அந்தக்கையின் சுற்றுப்புறத்தில் வண்டுகள் மொய்க்கச் செங்காந்தள் பூமலர் அந்தமலர்மேல் மிகவும் இளையதான வேங் கைமரத்தின் கொம்பிலே யூமலர்ந்து அந்தப்பூ உதிர்ந்து கிடக்கிறது காரிகள் சூழ நெருப்பும் காய்ச்சப்படுகின்ற பொன்னும்போ லிருக்கின்றது. தேவர் கள் வாய்க்குணவாக வேதவிதிப்படி பொரிகளைச்சொரிந்து பசுவிநெய்யை மொண்டுவார்த்து காருகபத்தியம் தெக்ஷணாக்கினியம் ஆகவனீயமாகியமூன் றக்கினி காரியங்களையுஞ்செய்து முடிப்பவர்களைப்போல் ஆழமான பள்ளங் களிலுள்ள நீரிலேபூத்த செங்குவளைமலர்மேலே தழைத்த கொம்புகளை யுடைய குங்குமமரம் வண்டுகள் ஒலிக்கப் பழையமலர்களை உதிர்த்துப்புதிய

தேனைச் சிந்துகின்றது வேடர்கள் தங்கள் சீறூரிலே அகில்மரங்களிலும் சந்தனமரங்களிலும் நெருப்பையிட்டுக் கொளுத்தி அவைகளைப் பிடிங்கியெடுத்து நெருப்புப்போற் சிவந்த பவளங்களையும் முத்துகளையும் பொறுக்கியெறிந்து அந்தநிலத்திலே மலைநெல்லை விதைத்துப் புள்ளிகளையுடையமுகத்திலேகொண்ட பெரிய யானைக்கொம்புகளாலே வேலிசூழக்கட்டிப் பகையென்னுங் களைகளில்லாமல் அந்தப் பெரிதான பயிரை வளர்ப்பார்கள். ஆகாசவாசிகளுக்கு இனிதான அமுதுசெய்விக்கிறவர்கள் ஓமகுண்டத்திலே நிரப்பியதான நெருப்பினது செழிய புகைவளைக்கின்ற அந்தப்பொதியமலையிலே புலால் நாறுகின்ற வேலையுடைய குறிஞ்சிநிலமாக்கள் காட்டிலே நெருப்பிட அந்த நெருப்பா லுண்ணப்படுகிற கறுத்த அகிற்புகையும் அந்த வேள்விப்புகையுடனே கூடிநிரம்பும் கூட்டமான மேகங்கள் சிந்துகின்ற மணிகளையும், மூங்கில்கள் சிந்துகின்ற மணிகளையும், அருவிநீர்சிந்துகின்ற மணிகளையும், விரிந்த தலையையுடைய நாகத்தினது வெயிலே வீசுகின்ற சிவந்த மணிகளையும், தினைப்புனத்தில் மேயவருகின்ற கூட்டங்கொண்ட மான்களும் குருவிகளும் ஓடிப்போக அவைகளின்மேல் விழும்படி குறத்திகள் கவண்கல்லாகக்கொண்டு வீசுவார்கள். உலகமெல்லாம் திருமாலின் திருவுருவைப்போலிருக்கின்றது அப்படிப்பட்ட உலகத்திலே பாண்டிநாடு அத்திருமாலின் உந்தியிற் பூத்த செந்தாமரைமலர்போலிருக்கின்றது. அந்தநாட்டிலே பொதியமலை அந்தத்தாமரை மலர்மேனீண்ட பொகுட்டுப்போன் றிருக்கின்றது. அந்தமலைமேலிருக்கின்ற அகத்தியமுனிவர் அந்தப் பொகுட்டிலே மேவியிருக்கிற நான்முகன்போலிருக்கின்றனர். அந்த அகத்தியமலையே ஒப்பில்லாத மேருமலையாகவும் தேவர்களும்வந்து நீராடுகின்ற குளிர்ந்த பொருநையாறே அந்தப்பொன்மலையான மேருவைச் சூழ்ந்துவருகிற சாம்பூனதநதியாகவும் அந்தப் பொருநையாற்றைச் சூழ்ந்திருக்கிற நிலமெல்லாம் சாம்பூனதயாறு சூழ்ந்த யோகபூமியாகவும் விளங்குகின்றது தன்னியமுத்தமிழுஞ் சிறந்து விளங்குகிற திருவாலவாய் மதில்சூழ்ந்த மதுரையே சிவபுரமென்று சொல்லலாமாலுல் அந்தமதுரைக்கு வெளியிலே விளங்குகின்ற ஊர்களெல்லாம் இந்திரன் பிரமன் வீரங்கொண்ட சக்ராயுதக் கடவுள் முதலான தேவர்களுடைய தருமங்கள் விளங்குகின்ற உலகங்களின் வடிவைப்போலிருக்கின்றன. இன்னமும் துவளுகின்ற நுண்ணிய இடையைக்கொண்ட பெண்களுடைய அழகியதான கொங்கைமேற்பூசி நீக்கின குங்குமக்கலவையும் கஸ்தூரிகலந்த மயிர்ச்சாந்தும் கூடின தெளிந்த அலைகளையுடைய பொருநையாறு வாசம்வீசுவதே யல்லாமலும் அந்த ஆற்றின் பக்கமெல்லாம் விளைந்த செந்நெற்களும் கரும்புகளும் அந்தவாசம் நாறுகின்றன சந்தனமெல்லாம் பொதியமலையிலிருந்து வருகின்றபொருநையாற்றிலே உண்டாகின்றன. தருமங்களெல்லாம் அந்த நதிசூழ்ந்த ஊர்களிலே உண்டாகின்றன வேதவிதிதமானபத்திகள் அந்த ஊர்களிலிருக்கிறவர்கள் யுத்தியிலேயுண்டாகின்றன. விடத்தைக்கொண்டும் அழகுபெற்ற நீலகண்டக்கடவுளும் தென்றிசையி லுள்ளவர்களெல்லாம் வந்துகண்டு சேவிக்க வெள்ளிபம்பலத்திலே எழுந்தருளி மகிழ்ந்து திருநடனஞ்செய்கின்றனன். அப்படியாடுகிறது

அந்த ஆதலினலுண்டாகின்ற இளைப்புத்தீரச் சந்தனவாசம் வீசுகின்ற மந்தமாருதம் திருமுகத்தில்வீசிக் குளிர்ச்சியாகவும் முத்தமிழையும் திருச் செவிகளாற் கேட்கவுமல்லவோபின்னும் அந்தஇடபவாகனக்கடவுளாகியசிவ பெருமான் பாணினி மகாமுனிவருக்கு முன்னுளிலே வடமொழி லக்கின ஞ்சொன்னுற்போலவே அகத்தியமகா முனிவருக்கு தென்மொழிக் கிலக்க ணஞ்சொல்லி அந்த வடமொழிக்குச் சரியானது தென்மொழியே யென்று உறுதிப்படுத்தினதானதமிழென்கிற ஓரிளம்பெண்ணுக்கு ஆடும் இடமென் றுசொல்லத்தக்கது பாண்டிநாடல்லவோ இன்னம்நெற்றியில்கண்களையுடை யபெரியக்கடவுளும் கல்விச்சபையாரோடு கூடியிருந்து பண்ணின் இசைகள் பொருந்தத்தெரிந்தும் ஆராயப்பட்ட இந்தப்பசியதமிழ் இது அல்லாத சில நிலங்களிலே இலக்கணவரம்பில்லாமல் வழங்குகின்ற பாஷைகளைப்போலப் பதினெட்டுப் பத்தொன்பது என்கிற கணக்கிற் சேரக்கிடந்ததாக உன்னிச் சொல்லவுங்கூடுமோ, எப்படியென்றுல் தொண்டர்களுக்கு நாதனான கடவு ளைத் தூதுபோகச் செய்ததும், முதலை விழுங்கினபிள்ளையை மீள அழைத் ததும், எலும்பைப் பெண் வடிவாகச் செய்ததும், வேதங்கள் சாத்திவைத்த கதவைத் திறந்ததும் அழியாத தன்மையையுடைய தமிழ்ப்பாஷையோ அல் லாமல் வேறு நிலங்களிலே வழங்குகின்ற பாஷைபோ சொல்லுங்கள். மழை பெய்யாத வெப்பத்திலுலே விளைவு குறைந்தாலும் அரசர்கள் நீதிகோணிச் செம்மைதப்பினுலும் தரித்திரமாகிய நோய்வந்து கெடுத்தாலும் சிவனிடத் துப் பொய்யில்லாத பத்தி யென்றும் நிறைவு குறையாமல் தங்களை விற்று னுலும் அந்தப்பாண்டிய நாட்டிலுள்ளவர்கள் தருமஞ்செய்வார்கள். உலகங் களையெல்லாம் பெற்றவளாகிய தேவர் முகங்களிற் சிறந்த திலகம்போன்ற நாயகியும் பாஞ்சோதியான கடவுளும் உக்கிரகுமாரனும் ஆகிய மூன்றுதலை வர்களாலும் நீதி நடத்தின நாடு இந்தப்பாண்டிநாட்டை யல்லாமல் கடல் சூழ்ந்த உலகத்திலே வேறேயொரு நாடும் உண்டோ கிடையாது அப்படியே விண்ணுலகத்திலுங் கிடையாதென்க.

திருநாட்டுப்படலம்

முற்றிற்று.

மதுரைத் திருநகரப்படலம்.

கலிநிலைத்துறை.

மங்கலம்புனைபாண்டிநாடாகியமகட்குச்
சங்கலம்புகைதோளிணைதடமுலையாதி
யங்கமாம்புறந்தழுவியநகரெலாமணைய
நங்கைமாமுகமாகியநகர்வளம்பகர்வாம்.

இதன்பொருள்.

மங்கலத்தை யிடையறுது பூண்ட பாண்டிய நாடாகிய பெண்ணுக்குப் புறத்திலிருக்கும் நகரங்களெல்லாம், வளையல்கள் அசைகின்ற கைகள், தோளிணைகள், பெரிய தனங்கள் முதலாகியஅவையவங்களாம். பெண்ணின் அத்தன்மையுள்ள பெருமை பொருந்திய முகமாகிய மதுரைநகரத்தின்வளப்பத்தைச் சொல்லுவாம்.

அப்படிப்பட்ட சிறப்புப் பொருந்திய பாண்டி நாடாகிய பெண்ணுக்குத் திருப்பரங்குன்றும், திருக்கொடுங்குன்றம் கொங்கைகள், திருச்சுழியில் உந்தி, திருக்குற்றாலம் வயிறு, திருவேடகம் செங்கை, திருப்பூவணம் மேனி, திருநெல்வேலியாகிய வேய்வனம் திரண்டதோள், மதுரையே திருமுகம் இன்னம் அந்தப் பாண்டிநாடு குற்றமில்லாத பெருமைபொருந்திய பூமிதேவியின் மார்பிலே கிடந்து பிரகாசிக்கப்படுகிற ஒளியையுடைய மாலையே போலும் அந்தப் பாண்டிநாட்டிலுள்ள ஊர்களெல்லாம் அந்த மணியின் மேற்பக்கங்களெல்லாம் கோத்திருக்கிற ஒளியையுடைய பெரிதான ரத்னங்களே போலும். மதுரைமாநகரம் இந்த இரத்னங்களின் நடுவிலிருக்கும் பதக்கத்தின் பெரிதாகிய நாயகரத்னத்தையே போல்வதாகும், இன்னம் அந்த மதுரையானது திருமகளுக்கு ஒருசெந்தாமரைக் கோயிலாகவும் திருமால் மருமகளான சரஸ்வதிக்கு வெண்டாமரைக்கோயிலாகவும் ஞானத்தைத்தருகிற சிவசத்திக்கு ஒப்பற்ற யோகபீடமாகவும் பெருமைபொருந்திய பூமிதேவிக்கு நெற்றியிலிட்ட திலகமாகவும் விளங்குகின்றது. அஷ்டதிசைகளையும் ஆகாயத்தையும் மூடுகின்ற இருளைவிழுங்கி வெள்ளையான ஒளியைக் காட்டுகின்ற மீடுகள் உயர்ந்திருக்கிற தோற்றமானவை அந்த மதுரையில் மிருந்த இதழ்களையுடைய வெண்டாமரையிலிருக்கிற சரஸ்வதி பீடத்தை ஒத்திருக்கின்றன. அல்லாமலும் புகழ்மகளிடத்தையும் ஒத்திருக்கின்றன. மதுரையைச்சூழ்ந்த குளிர்ந்த வயல்களிலே நெற்பயிர்களெல்லாம் கரும்புகள்போலவும், கூட்டமாகப் பெரிதாயிருக்கிற கழுகுகள் ஓவிக்கின்ற சத்தத்

தையுடைய தென்னமரங்கள்போலவும் அப்படிவளர்ந்திருக்கின்ற பொன்னி றமுள்ள அழகுபொருந்திய குலகளபுடைய தென்னமரங்கள் மேகபடல மாகிய பந்தலைத் தாங்கிக்கொண்டுநிற்க நிறுத்தின கால்கள் போலவும், இப் படி ஒன்றற்கொன்று அதிகமாக உயர்ந்திருக்கின்றன, நிழலையும் மலர்களையு முடைய சோலைகள் சிவந்ததாயும் கறுத்த கெண்டைபோலும் கண்களையு முடைய தடாதகைப்பிராட்டியார் இந்திரனைக் கோபித்து வென்று கொண் டுவந்த ஆகாயத்திலுள்ள தருக்கூட்டங்களை மிகுந்த வாசம் வீசி மகிழ் ந்து வெவ்வேறு வகையான பலபலங்களையும் கேட்டவர்களுக்குக் கொடு த்து உயர்ந்து நிற்கின்ற தோற்றத்தையே ஒத்திருக்கின்றன. ஒல்லென்னும் சத்தத்தையுடைய கதிர்கள் பொருந்திய செந்நெற்பயிர்கள் பக்கமெல்லாம் சூழ்ந்துவளர மெல்லிதான இலைகளையுடைய பசியகொடிகளினுலே சூழ்ந்து கட்டப்பட்டு நிற்கிற கழுகமரமானது இருள்போற் கறுத்த கண்டத்தையு டைய கடவுளுக்கு அழகிதான திருவிழாவில் தருப்பைக்கயிற்றால் சூழ்ந்து கட்டப்பட்டிருக்கிற அழகிய துஜஸ்தம்பத்தை ஒத்திருக்கின்றது தெய்வத் தன்மையையுடைய வேதங்கள்தெரிந்த பிராமணர்கள் சிவந்தகைகளை விரித் துக்கொண்டு வாயால் மந்திரங்களைச்சொல்லிக்கேட்க அவர்களுக்குப்பொன் னும் தானைநீரும் கொடுக்கிறவர்களைப் போலக் குளிர்ந்த தேனைக் குடித்து வண்டுகள்பாடுகின்ற தாமரைமலர்மேலே செருந்திமரம் அதிகமாக மலர்களை யும் தேனையும் சிந்துகின்றது வாசனைவீசுகின்ற தாமரையாகிய படுக்கைவீட் டில் பெட்டையுடனேகூடி ராஜ அன்னம் நல்லவிவாகஞ் செய்துக் கொள்ள அதற்கு தாமரைத்தடாகமானது அலையாகிய வளையலணிந்த கைகளாலே சிறுதுளிகள்பொருந்திய இலையாகியமாகதமணித்தட்டினுலே முத்தாலாத்தி சுத்துகின்றது. கரும்பாலையாகிய யந்திரங்கள் இரும்புபோலும் தோள்களை யுடைய வேலையாள்கள் அதட்டி மாடுகளை ஓட்டி வாயிற் கொடுக்கிற கரும் பைத்தின்று இடியேறுபோலச்சத்தித்து இனியசாற்றிலே வண்டுகள் சுற்றிக் கொண்டுபாடல் சாற்றைச் சிந்துதல் வெவ்விதமான கோபாக்கினி தோன்று கின்ற கண்களையுடைய யானைகள்போலிருக்கின்றன. ஆழமாகிய நீரிலேமுழு கிச் சிறகுகளின் உள்ளும்புறம்பும் பாசிபைப் பூசிக்கொண்டு எழுந்துசெல்கி ன்ற வெள்ளைநிறமான அன்னத்தை அதன்பெட்டையானது கண்டு கறுத்த அன்னமென்று தன்னுடைய ஆசையால்மிகுந்த மனத்தை வேறுபாடுசெய்து துன்பப்பட அதுகண்ட அந்த ஆண் அன்னம் சிறகுகளைநன்முயுதறி பழைய வெண்ணிறத்தைக்காட்டி அது உள்ளன்புகொள்ளச்செய்து தானும் ஆசை யுடனே தழுவிக்கொண்டு கூட்டில்போய்ச்சேரும். அங்குள்ள சோலைகளின் மலர்த்தளிர்களைச் சூரியனுடைய ஒருவண்டிலையுடைய தேரை இழுத்துக் கொண்டுபோகிற கண்களிமையாத ஏழு பச்சைக் குதிரைகள் நாவைநீட்டி மேய்கின்றன குளத்துத் தாமரைமலர்களைப் பனிவாடச்செய்வதுபோல பிர சித்தமான யாகத்திலேயுண்டாகிற புகைசென்று கற்பகநாட்டில் பரவி அங் குள்ளமலர்களை வாடச்செய்கின்றது. அந்தமதுரை மதிலைச்சூழ்ந்த அகழ்க் கிடங்கானது எங்கும் விளங்குகின்ற திருவாலவாய்க்குள்ளான எமது கட வுள் திருவருளாலே புண்ணியதீர்த்தமாகவந்து எழுவகைக் கடல்களும் நிற்

கின்றவற்றைக்கண்டு சுழலுகின்ற தெளிந்த அலைகளையுடைய பெரும்புறக்கட லும்வந்து இந்தப்பரிதான மதுரைக்கு வெளியே சூழ்ந்து கிடக்கின்றது போலிருக்கின்றது. முள்ளால் வெட்டுகின்ற வாளைமீனையும் அடிக்கடியெழு ந்து உடலைப் பரப்பிக்கொண்டு மேய்கின்ற ஆமையையும் கொண்டு தினந் தோறும் மலர்கின்ற மலர்களையுடைய அகழ்க்கிடங்கையும் வாள் கேடகம் கொண்டு விளங்குகின்ற சூத்திரப்பாவைகளைக் கொண்டு ஆகாசத்தையளா வில மதிலையும்பார்த்தால் அவ்விரண்டும் ஒருமித்து எதிர்த்துச் சண்டைசெய் கிறதுபோலிருக்கின்றது, இரக்கமில்லாதகொடியயமனைப்போல முதலைகள் கிடந்து தொந்தரவுசெய்ய ஆழ்ந்த அந்த அகழ்க்கிடங்கில் இவ்வுலகத்தார் யாராலும் விழுந்தால் தெளிந்தநிலாவையுடைய சந்திரனை மாலையாக முடி த்த கட்வுளுக்கு ஒப்பாகச் சிலதெய்வங்களை யெண்ணினவர்கள் இருண்ட நரகத்தில்வீழ்ந்து கரையேறினாலும், அந்தக்கிடங்கினின்றும்கரையேறமாட் டார்கள். குமிழம்பூமலர்ந்த ஒருசெந்தாமரைமலரையுடையகொடியிலே தோ ன்றின கோங்கரும்புகளாலே சிந்தலான பரஞானத்தை உண்டு கக்கினதாக வாயில்வந்த தமிழ்வேதத்தைத் தெரிந்து வைதிகநிலையுடனே சைவசமயநிலை யையும் நிலைபெறச் செய்த அமுதம்போலும் வெள்ளை அலைகளையுடையவை கையாறும் அந்தமதுரைக்கு ஒருபக்கத்து அழகாயிருக்கின்றது குஞ்சுகளும் பெட்டைகளும் சேவல்களும் ஆகிய அன்னங்கள் நீங்காதிருக்கிற தேன்பொ ருந்தியதாமரைகள் பூத்திருக்கிற அழகினைலே பார்த்தவர்கள் கண்ணும் மன மும் திரும்பாதபடி காவலைச்செய்து ஓங்குகின்ற வண்டுகள் ஒலிக்கிற குளிர் ந்த அகழ்க்கிடங்கு இப்படியிருக்கின்றது. இனிமதிலின் சிறப்பைச் சொல் லுகின்றோம்.

அந்தமதுரை மதிலை மூடிக்கொண்டு மேகங்களி லிருந்து தவழ்கின்றது வெவ்விதமான கோபத்தையுடைய அழகியசர்ப்பமானது தன்னுடலில்பொ ருந்தியதேதால் உரிகிறதற்கு நெளிகிறதுபோ லிருக்கிறதினலே ஆகாசத்தை அளாவிய காவலான மதிலானது அந்த மதுரேசருடைய கைக்கங்கணமான பாம்புதானென்பதுநிச்சயமே, திரிபுரத்தையெரித்தபொன்மலைதானேகோபு ரமாக வேதமுடிவைக்கடந்தகடவுள் சௌந்தரபாண்டியனுக இருந்தரசாளு கிறதினலே இன்னமும் பகைவர்வலியை வெல்லவேண்டினல் அவருக்குவில் லாய் உதவிசெய்து அவராலே வேண்டிய வரங்களைப் பெறுதற்கு முன்னே நிற்கிறதுபோலிருக்கிறது விஷத்தையுடைய பாம்புகள் விழுங்கி உமிழ்கின்ற துபோல் வருந்தி வேகத்தையுடைய சூரியனும் சந்திரனும் தடைபடும்படி திக்குகளையும் அண்டகோளத்தையும்கடந்து நீண்டுவிசாலித்திருக்கிற கோபு ரங்கள் தமக்குவிட்ட நிலைவழியாகிய வாயிலாலே சூரியனையும் சந்திரனையும் விடுகின்றன. கொம்மைகளை ஒழுங்காகக்கொண்டு மதுரையைச் சூழ்ந்திருக் கிற அந்தமதில மகரமீன்களையுடைய கடலென்றுநினைத்து யானைகள்போல மேகங்கள்வந்துநீர்குடிக்கத்தக்க அகழியினது அலையாகிய தூதிக்கையினலே தொட்டுத்தடவிக்கொல்லும்படியாகப் பெருகுகிற நீரையுடைய வைகையாறு பெருகினல் அல்லது மறுதேசத்தாராகிய சத்துருக்களால் யுத்தஞ்செய்யப் படுவதோ அல்லதுசூரியன் தேர்செல்லும்வழியைத் தடைசெய்யும்படியான

இந்தமதிலுக்கு வெளியே விசைவிலே சூழ்ந்துக்கொண்டு பகைவர்கள் வளைந் தபோது எதிர்த்துச் சண்டைசெய்து வெல்லுவதற்கு வீரர்களும் வேண்டு மோ வேண்டுவதில்லை அந்த மதிலுக்குறுப்பான சூத்திரப்பாவைகளே வெ ல்லவல்லன. ஆகையால் அந்தமதிலுள்ள சூத்திரப்பாவைகள் செய்கிற வீர த்தையுங் கொஞ்சம் சொல்லுகின்றோம்.

சிலபொறிகள் மழுக்களை எறிகின்றன. சில விஷநீர்தோய்த்த கூரிய வாள்களை வீசுகின்றன, சில மூன்று தலையையுடைய சூலங்களைவீசுகின்றன சில கைவேல்களை வீசுகின்றன. சிலச்சக்கரங்களை நெருப்புச்சிந்த வீசுகின் றன, சில யமனுக்குநேரான எழுக்களைவீசுகின்றன, சிலகப்பணங்களை விஷா க்கினிபோல் வீசுகின்றன. சில வலிதாக நீண்டகொழுக்களை வீசுகின்றன, சில கொச்சிதஞ்செய்து கயிற்றைக் கடைவிரலிலே கோத்துக்கொண்டு கல் லைக் கவணில்வைத்து வீசுகின்றன. விஷத்தைதகக்குகின்ற துவாரம்பொரு ந்திய கூர்மையாகிய பற்களையுடைய பாம்புப்பொறி நாவை நீட்டிக்கடிக்கும், மலைப்பாம்புப்பொறி வெவ்விய கோபங்கொண்ட குகைபோலும் வாயைத்தி றந்து விக்கவிக்கச் சண்டைசெய்கிறவர்களை விழுங்கும், யானைப்பொறியான து கொடிதாகிய இருப்புலக்கையை வீசி எதிரே வருகிறவர்கள் தலைகளை உ டைக்கும், வெவ்விய ஐம்பொறிகளிலும் அதிக வேகங்கொண்டு புலிப்பொ றிசென்று அழுத்தும், அசட்டைசெய்து எறுகிறவர்களைக் குதிரைப்பொ றியானது மார்பொடிய உதைத்துப்பள்ளமாகிய அகழியிலே விழத்தள்ளித் திரும்பும், திரண்டகள் இருப்புழுலைகளைக் கொண்டெறிந்து உடலைச்சிந் தும், கொள்ளிவாய்ப்பசாசு வாயைத்திறந்து நெருப்பை உமிழச் சிலபேய்க ள் தலைகீழாகத்துள்ளி விளையாடுகின்றன. சிலபேய்கள் கைகள் கொட்டுகின் றன சில கூளிகள் தோளைத்தட்டுகின்றன கட்டியசங்கிலிகளை முறித்திழுத் துக்கொண்டு திரிகிற சிங்கப்பொறிகள் சங்கிலிபிடித்த கைகாயமாகச்செய்து மகிழும், சிலபகைவர் தலைகளைத்திருகி, உடலைநெருக்கும், சில நிற்கிறமரங்க ளிலே கொழுந்துவிட் டெறிகின்ற செழிய நெருப்பைக்கொளுத்திச் சுழற் றும், சில எதிரே கற்களை உருட்டிவிட்டுக் கொல்லும், சில ஒல்லென்று குப் பல் குப்பலாகக் கடுமையான கல்வருஷத்தைப் பொழியும், சில பகைவர் கிட்டிலல் காய்ச்சின மணலைக்கொட்டும், சில ஈயத்தை உருக்கி மழைபோற் பொழியும், சிலஇரும்பு வட்டுக்களை வீசும், சில உருக்குவட்டுகளை வீசும், சில செம்பைநீராகப் பெருகக்காய்ச்சி ஊற்றும், சில விடுகிற ஆயுதங்களையெ ல்லாம் முந்திப் பிடித்து விட்டவர்களை அந்த ஆயுதங்களே கொல்லக் கர்வ ங்கொண்டெறியும், சில தாமிருக்கிற வீட்டுடனே நடந்துக்கொண்டுபோய் ப்போய் துடிமுசுகளுடனே பலவாத்தியங்களையு முழக்கிக்கொண்டு திரும் பும், சில உருண்டோடுகிற தேர்மேலேறிச் செலுத்திச் சொரிகின்ற பாணங் களை மழைபோற்பொழியும், வெறிகொண்டு திரிகின்ற ஐம்பொறிகளை வென் றலும் சண்டைசெய்து வெல்லுதற்கரிய யமனை முறிந்தோடவென்றலும் வெல்லுதற்குக்கூடாத மாறுகொண்ட பலத்தையுடையனவாகத் தேவர்கள் நகரங்களையெல்லாம் தனது மனத்தாலே நிலைபெறச்செய்கின்ற தேவதச்சன் செய்யவும் அருமையையுடையனவாகச் சிற்பிகள் செய்வனவான பொறிக

ளென்கிற சூத்திரப்பாவைகள் செய்யும் காரியங்கள் இத்தன்மையனவாம். இனிப் பொன்னால் அலங்காரஞ் செய்திருக்கும் மதுரைவீதிகளின் சிறப்பைக் கூறுவாம்.

திருவிழா நீங்காதிருக்கிற வீதிகள்கரும்புகளும்மாலைகளும்கதம்பப் பொடிகளும் காந்திபொருந்திய ரத்தினதோரணங்களும் குண்டலங்களும் சாம்பிராணிப்புகைகளும்கர்ப்பூரதீபங்களும பூரணகலசங்களும்கொண்டு பெருகுவதான அன்புகொண்ட நாயகர்கள் வருதலைப்பார்த்து அன்பு உள்ளே பெருகி விரும்பும் கற்புடைமகளிறை யொப்பாயிருந்தன சந்திரகாந்தக்கல்லாலே செய்திருக்கிற மாளிகைகள் விஷந்தங்கிய நீலமணிபோலுங் கண்டத்தையுடைய கடவுள் ஆனந்த வடிவமாகநிற்கிற செவ்வியபாதநிழலைக் கிட்டினவர்களுடைய குணத்தைப்போல கடலிலிருந்தெழுகின்ற சந்திரனுக்கு முன்னே அந்தச் சந்திரனது வெண்மைபொருந்திய கிரணம் படுதலாலே தெளிந்த நீரை ஒழுகவிட்டுக்கொண்டு நிற்கின்றன. உபரிகைகளெல்லாம் அந்த வுபரிகைகளினிழலிலே பலவகையான சராசரங்களும் கூடி நிற்கின்றன. எப்படியென்றால் வெள்ளியம்பலத்திலே சோதிசொரூபமாய் நிறைந்து திருநடனஞ்செய்கின்ற மலர்போலும் திருவடி நிழலிலே புகுந்து ஒருமித்து வேறுபாடில்லாமற் கலந்த பலவுயிர்களைப்போல மிகவும் இளையதான பசுவின்கன்று கடித்துத்தின்கிற புல்லின் சுப்பலக்கழித்துக் காலிலே கட்டின கயிறு அற்றுப்போகத் துள்ளித் தூரத்தேதபோய் மரகதமணியாலே செய்திருக்கிற சித்திரகூடத்தில் வீசுகின்ற பசிய ஒளிக்கொழுந்தையும் நாவாலெட்டிவளைத்தும் பறித்து மென்று வாயை அரைத்துக்கொண்டு நிற்கும் சிறுத்திருக்கிற கண்களையுடையனவாய்க் காற்றைவீசுகின்ற செவிகளையுடையன வாய் கயிற்றுலிருகின கால்களையுடையனவாய்க் கொம்புகளையுடைய யானைக்கூட்டங்கள் செல்லுகிறவழியும் குறிகிப் பிடிக்குள்ளடங்கி துண்ணிதான இடையைத் துவளப்பண்ணி யெழுகின்ற கொங்கைகளையுடைய மான்போலுங் கண்களைக்கொண்ட பெண்கள் செல்லுகின்ற வீதியும் வண்டுகள் மொய்த்துக்கொண்டு கிடக்க மான்மதம்வீசும் (மான்மதம்-பெரிதானமதம்-கஸ்தூரி) மாட வரிசைகளும் மேட வரிசைகளும் மாளிகை வரிசைகளும் நாடக சாலைகளும் அவ்வூரிலுள்ள பெண்களுடைய சிறிதான கால்களிலே பூசிய செம்பஞ்சுக்குழம்பு படுவதேயல்லாமல் மன்மதனை ஒப்பான புருஷர்களும் தலைகளும் இதழ்களையுடைய மலராலே செய்த மாலையணிந்த மார்புகளும் பெரிய இரண்டு தோள்களும்படும் பகைவர் மார்பிலே இரத்தஜலம்பெருகக் குத்துகின்ற கொம்புகளும் முதுகணிகளும் செங்கண்களும் மயக்கமுங்கொண்ட யானைகளின் பிணமரம்போலும் துதிக்கைகளும் வேதசாஸ்திரங்களின் அருமையாய்ச் செவ்விதான அர்த்தங்களைத் தெரிந்தவர்களுக்கு அரிய பொருள்களையும் கொடுக்கிற புண்ணிய புருஷர்களுடைய சிவந்த கைகளிலும் தானநீரா லெழுகுகின்றன. (தானநீர் - மதசலம் - தாரைநீர்) மிகப் பெரிதான ரத்தினங்களை வரிசைப்படி பதித்து இருட் கூட்டங்கள் சிதறும்படி பிரகாசிக்கச் செய்த பொன்மயமான நிலா முற்றங்களும் எங்குந் தெரிய முழங்குகின்ற பெரிய வாத்தியங்களி னிசையைக் கொண்ட

செம்பொன் மயமான நாடக சாலைகளும் அரிதாகிய மின்னுதலைக் கொண்ட பயோதரங்களைத் தாங்கிக் கொண்டு கொடிகளாடுதலை யுடையன. (பயோதரம் - மேகம் - கொங்கை) கொடி துகிற்கொடி மருங்கு பலங் கொண்ட புயங்களையுடைய புருஷர்கள் மார்பின்மேல் ஆபரணங்கள் விரிந்த ரவிக்கையைப்பூண்ட கொங்கைகளை யுடைய பெண்கள் பிணங்கி காலநீட்டி மோதும்போது அதிலணிந்தசிலம்புக ளொலிக்குமொலிக்குமுன் அந்தப்புருஷர்கள் அணிந்த தேன்பொருந்திய மாலைகளிலே ஒலிக்கின்றவண் டுகள் வருந்திக்கத்துகின்ற பெரிய ஒலிமுழங்கும். அவ்வூர்பெண்களுடைய சந்திரன்போல்வன வானமுகங்களும் குளங்களும் குழைகளையுடையன. (குழை-குண்டலம்-சேறு) மைபூசிய கண்களும் வீடுகளுங் கொடியன (கொ டியன-கொடுமையையுடையன கொடிகளையுடையன) கைகளும் தினமலர்க ளுடைய சோலைகளும், சுத்திக்கின்ற ஒளிகொண்ட வண்டையுடையன (வ ண்டு-வளையல்-தும்பி) சம்பங்கி நெய்வாசனைகொண்ட கூந்தல்களும் வீதிக ளும்நீள நெறிமைக்கொண்டிருப்பன (அறநெறி - கருமணல்நடுவே வகிர்ந் திருத்தல்-தருமநெறிபூவும் சந்திரன்தவழுகின்ற வீடும் மணஞ்செய்தலை புடையன. (மணம்-வாசம்-கலியாணம்) பூவும் குளிர்ந்த நீர்த்துறைகளும் தும் பிகள்முழங்கி பாடுதலையுடையன. (தும்பி-வண்டு-யாழ்) சூழ்ந்தசோலைகளும் பெண்களும்அலர்தூற்றுதலையுடையன (அலர்-தூற்றுதல்-பூவைச்சிந்தல்பழி சொல்லுதல்) அன்னம்வளைந்த குளங்களும் வீடுகளும் குறைபடுதலில்லை (அன்னம்-புள்-சோறு) பிணங்கின பெண்கள் எறிந்துவிட்ட ஆபரணங் களும் அம்மனையுடனே-பந்தாடினவர்கள் நீத்த ஆரங்களும் காலாலேசிற்றில க்குலத்தவருடனே கோபித்துக் கண்களிலேதத்தும்புகின்ற முத்துக்கள்சிந்த வாடினவர்கள் எறிந்து முத்துமாலைகளுமே குப்பைகளாகின்றன. அடியார் கள் ஈடேறப் பெரிதானமானிக்கமும் வரியையுடைய வளையலும் விற்கும் விற்றுத்திரிந்தவருடைய மெய்ப்பானவேதமும் சுமக்கமாட்டாமல் வேறுக நின்று பிதற்றுதலாகச் சிவந்த பாதமலர்களைச் சுமக்கும்படி தவஞ்செய்துள் ள வீதிகள் ஐபா, என்னுடைபசால்லளவிலடங்குதலாமோ,அடங்கா தோ ரணவரிசைகளென்கிற அரைநாண்மாலைசூழ்ந்த நிலைகொண்டு நீண்டதோரா கிய அல்குலும் பூரணகும்பங்களாகிய கொங்கைகளையுமுடைய ஒப்பில்லா த மங்கலமாகிய பெண்ணினவள் மாலைபாகக்கொண்ட ஆரங்களைத்தூக்கிச்சு ந்தனம் அகில்களை நிமிரக்கொண்டு பாவிபில் சீருடையதான முளையாகிய வெண்ணைகைசெய்து வீற்றிருக்கிறாள். சந்திரனைப் பஸ்பமாக்கிச் சேறுபண் ணி பூசிறைற்போல விளங்குகின்ற வெண்மையான மாடவரிசைகள் விபூதி பூ சுவாரான அடியார்களுடைய மெய்வேடத்தைக் கொண்டனவாகி மிகவும் கண்களைக்கொண்டு சொக்கலிங்கக்கடவுள் திருவிழாவைத் தரிசிப்பதற்கு இருக்கிறதுபோல் நெருங்கியிருக்கின்றன. தேர்களிலுலவியும் கடிவாளத்து டனே பாய்கின்ற குதிரைகள் அனுமானிக்கின்ற வொலியும் குதிரைகளுக் குத்தரித்த கிண்கிணிமாலைகளிலுலவியும் தோற்கருவிதுளைக்கருவி நரம்புக ருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவிகள் ஒலிக்குமொலியும் முழங்குகின்ற து திக்கையையுடைய யானைகளின்பெரியவொலியும் இன்னம் எல்லாவொலிக

ளுங்கூடி அதிகரிக்கும் ஒலியேயல்லது காவல்கொண்ட மணிமாடங்களையு டைய மதுரையில் எக்காலமு மேகங்கள் முழங்கினலும் அந்தவோலி காதுகளில்விழாது.

இழிந்தசாதியார் உயர்ந்தசாதியார் வயதில் மூத்தவர்கள் இளையவர்கள்தீராத வியாதிகொண்டுசாகிறவர்கள் ஆகிய இவர்களில் யார்வந்து கண்டாலும் தங்கள் கண்வலக்குளகப்பட்டு மனமுருகுகிறவர்கள் பொருளைக் கொண்டு எள்ளுக்கெண்ணெயைப்போல் அளவுசெய்து காட்டிற் பழிக்கப்படுகிற போகத்தை விலைசெய்கின்ற பரத்தையர் வீதிகளின் பண்பைச்சொல்லுவோம் எப்படியென்றல் உண்மையான அன்புள்ளவர்களைப்போலத் தம்மை விரும்பினவர்களுக்குப் போகிக்கச்செய்கிறதங்கள்பொய்யானசுகத்தை) எல்லாருக்கும் வெளியாகத் தெரிவிக்கிறவர்களாக அந்தமையிட்ட கண்களையுடைய பரத்தையர் மன்மதனுடைய ரகசியார்த்தங்களை ஒழுங்காக நன்றாய்ச் சுவரிலே சித்திரங்களாக எழுதிவைத்துப் பலரும் அறியச்செய்வார்கள். அழகியதான ஒளியைவீசுகின்ற ரத்தினாபரணங்களணிந்தமார்பே பலகையாகவும் தெளிந்த முத்துமாலையாகிய அருவியைபபொழிகின்ற மலைபோலுங் கொங்கையாகிய சூதாடுகருவிகளைப் பதியவைத்து விளையாடி வென்றும் காமுகரைக்கூடித் தங்களுடைய வடுவகிர்போலுங் கண்ணுகியவேல் மார்பிலேதைக்க வீணைவாசித்தலாகிய சூதாடி வென்றும் காமுகர் கையிலுள்ள அநேகம் பொருள்களை எல்லாவற்றையும் கொள்ளுவார்கள், ஆகாயத்திலே விளங்குகின்ற சந்திரனைத் தொடும்படியான வெண்மையான நிலாமுற்றத்திலே குளிர்ந்த பனிநீரிலே தோய்த்த மல்லிகைமாலைகளைத் தொங்கவிட்டிருக்கிற தூங்குமஞ்சத்தின்மேலே புருஷரை பொருந்தச்செய்து மன்மதனும் ஆசைகொண்டு வரும்படி பலவிதமான இராகங்களைப்பாடிக் காமுகருயிரை வெகுமானமாகக் கொள்ளுவார்கள் விருப்பத்தைத்தருகின்ற குரும்பைபோலும் ஸ்தனங்களிலேயிருந்து கிந்துகின்ற சந்தனமும் கூந்தலிலிருந்து உதிர்கின்ற அரும்பாகிமலரும் மாலைகளின் பராகப்பொடியும் வண்டுகளுண்டு எச்சிலாகி வீதிகளிலே செல்லுகின்ற குதிரைக்கால்களாலே தூளாகிப்போய்ஆகாயத்தாம்பைகள் உடலும் பெரியகூந்தற்காடுகொண்ட சுபவாசனையை மறைத்துவிடும் ஆலவாயுடையானென்றும் அங்கயற்கண்ணியென்றும் சோலைகளிலே வாழுகின்ற குயில்போல் வசனிக்கிற பரத்தையர்கள் சொன்னபடியே முழுதுஞ் சொல்லுகின்ற பால்வேண்டுகிறகிளிகளும் நாகணவாய்ப்புள்ளும் பலதரமும் ஆசிரியன் சொல்லுகின்ற நூலைவிரும்பிச் சந்தைகூட்டிச் சொல்லுகின்ற பிராமணப்பிள்ளைகளை ஒப்பாயின பொருமைமைபச் செய்கிற மருட்சிபொருந்திய வேல்போலும் கண்களையுடைய பரத்தையர்களின் அழகியவிரல்கள்செல்லுகின்ற நல்லதந்தியின் ஓசையும் சிவந்தவாயி லுண்டாகிற தித்திப்பைத்தருகிற குரல்ஓசையும் தம்மிலே ஒன்றுபட்டதன்மைபாய் புருஷர்கள் காதாகிய வாய்க்கால்வழியே ஓடிவிருப்பத்தைச்செய்கிற காமமாகிய பசும்பயிர் விளையும்படிவளர்க்கும், கண்ணறிவுமுதலான ஐந்தறிவும் விரும்பும்படி முதிர்ந்தகாமத்தில் தேவர்களையல்லாமல் எல்லாப் பற்றுகளையும் அறவேயொழித்த துறவிகளும் விழுந்துவேண்டவும் அமுதத்தை முழுதும்

வெறுக்கவும் பெரிதான குலத்தையுடைய கற்புடைமகளிர்போல்தங்கள் உறவின்வழியாக்கி சுகத்தைவிற்கிற அழகுபொருந்திய பரத்தையர்கள் இருக்குமிடம் இப்படிப்பட்டது.

குற்றமற்றமெய்க்குணமும் கங்காகுலத்தில் உற்பவித்த சிறந்தகுடிப்பிறப்பும் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர்க ளேவினவேலையைக்கேட்டுச்செய்கின்ற ஒழுக்கமும் மந்திரிகளாய் அரசருக்கு நன்மைசெய்கிற தொழிலுமாகிய இவைகளைக் குறையாமற்கொண்ட மேழிச்செல்வராகிய வேளாளர்களுடைய அழகிய வீதிகளின்சிறப்பை இனிச்சொல்லுகிறோம், வருபவிருந்தை எதிர்கொண்டு உபசாரவார்த்தைகள் சொல்லுகிற சத்தமும் பின்பு சமீபத்திலிருந்து அறுசுவையுண்டியும் உண்ணச்சொல்லிப் பிரிய வசனங்களை நன்றாகச்சொல்லுகிற சத்தமும் காண்டிகை விருத்தியுரைகளைக் கொண்ட தமிழாராய்ச்சிசெய்யும் ஓசையைக்கேட்டுச் சந்தோஷமிருந்து பாட்டுக்கு வெகுமானமாக அனேக திரவியங்களைக் கொடுக்கும் சத்தமும் அலை எழுகின்ற சமுத்திரத்தை வானரவீரர் அடைத்த சத்தம்போலவும் கடலையே ஓவியால் அடங்கச்செய்வனவாம் உண்டவர் உண்டு செல்ல உண்கின்றனர் அங்கேயிருந்து உண்டுகொண்டிருக்க நல்லதோசனங்கள் சமைத்துப்பின்னும் விருந்தினர் வருகின்றதை எதிர்கொண்டு பார்த்து விதைகளையெல்லாம் புலங்களிலே விதைத்து நீர்க்குவருந்தி வானைப்பார்க்கிற ஓரேருழவரைப்போல் வாடிநிற்பார்கள், ஆகாயமும் திக்குகளும் பரவியிருக்கிற கீர்த்தியும் மோக்ஷத்தை விரும்புகின்ற ஞானமும் குறையாதநன்மையும் தைரியப்படுத்தலும் கேட்டுக்கொடுத்தலும் கேளாதுகொடுத்தலும் அன்புடைமையும் ஒப்புரவும் தகுதியமைந்த நண்புடைமையும் மானமுமாகிய .இவைகளைத்தவஞ்செய்து பெற்றபிள்ளைபோல் வளர்க்கவல்லவர்கள்.

தம்மிடத்தில் வந்து ஒருசரக்கு வாங்கக்கேட்டால் அந்தப்பண்டம் தம்மிடத்தில் இல்லையாயின் அந்தச்சரக்குக்கு இனமானமற்றொரு உள்ளப்பொருளைச் சொல்லித்தடுத்தும் அல்லது கேட்டபொருள் தம்மிடத்து உண்டாஞல் விலைகுறித்துக் கண்டித்துக்கொடுத்தலிலும் பேசும்பேச்சிலும் இலாபங்கொள்ளவல்ல வைசியருடைய பழையதானகுலங்கள் இருக்கும் வீதியின்சிறப்பை இனிச்சொல்லக்கடவோம். நீலரத்தினத்திணல்செய்த முன்பாப்புத்திண்ணைமேலே பளிங்கிணலே நிழல்திரியும்படியான சுவர்சாய்த்திடத்து ஒளிவீசவெள்ளை வைரமணியால் விளங்கத் தூண்கள் வரிசையாகவைத்து மேலே அழகிய வெள்ளைநிலாவை வீசுகின்ற மணிகளைப்பதித்து வெண்மாடங்கள் மாலைபோல வகைவகையாகப்பீடங்களும் இட்டுசெப்பிருக்கின்றன அந்தச் செட்டித்தெருவு கடல்படு திரவியங்களும் அலைகளையுடைய நன்னீரையுடைய நாடுபடு திரவியங்களும் அளவில்லாத பசுக்களைக்கொண்ட காடுபடு திரவியங்களும் பூமியைக் கீண்டுகொண்டு நின்று ஆகாசத்தை அளாவுகின்ற மலைபடு திரவியங்களும் வரவாக்கொண்டு நிரம்பியிருக்கின்றன அவைகளைவிற்கும் வெண்மாடங்கள் (மாடம் வீடு கடை) நீலநிறமாக வீழக்கட்டின கம்பிளின்மேலே ஒளிவிடுகின்ற பவளமாலையும் பொன்னிமாலையும் தெளிந்த நிலாவைப் பொழிகின்ற பருத்துழுத்துமாலையும் இரத்தினமாலை

யும் பசுமையான மரகதமாலையும் இந்திரவில்லினிறப் பிரிவுபோல விரிவாகத் தொங்கவிட்டிருக்கின்றன. நக்ஷத்திரங்களும் குளிர்ந்த சந்திரனும் சூரியனும் மற்றை ஒன்பது கிரகங்களும் சூளிர்ந்த ஆகாசத்தைவிட்டுக் குடிபுகுந்தாற்போலப் பிரகாசங்கொண்டு இராடபகலின் ஒளியைமழுங்கச்செய்கிறதிலை லே வர்த்தகர்கள் ஆளுகின்றபாத்திரங்கள விற்கின்றபிடத்தையுடையகடைகள் சுவர்க்கலோகத்தை ஒபபாயிருக்கின்றன. பலநிறங்களோயுடைய மிகவும் பெரிதான விலைகொண்ட பட்டுகளெல்லாம், அங்கிருக்கின்றன. அப்படிப்பட்ட பட்டுகளுக்கும் மேலானவிலைகொண்ட பருத்திகளும் அங்கிருக்கின்றன. எந்த நிலங்களிலுள்ள அரும்பொருள்களும், பதினேழு நிலத்து வர்த்தகர் தங்குகின்ற வீடுகளும் பெருதற்கரிதாகிய எல்லாவிலைபொருள்களு மங்கிருக்கின்றன. இந்த வர்த்தகருடைய சிறுபெண்கள் மரகதக்கற்களாலே அம்மிகளும், ஒளிபொருந்திய வைரத்தினாலே உலக்கைகளும், வெள்ளியால் உரல்களும், அடுப்புக்கு அகில்விறகும், பனிநீரே உலைநீராகவும், முத்துகளே அரிசியாகவும், சிவந்தரத்தினங்களே நெருப்பாகவும், மற்றைப் பாத்திரங்களெல்லாம் செம்பொன்னாலும் கொண்டு சிறுவீடுகட்டி விளையாடுவார்கள் குற்றமில்லாத செம்பொன்னாலே கெட்டியான நிலையும்கதவும், வைரத்தினால் தாப்பாளும் பொருந்தியிருக்கிறது, அந்தச்செட்டிகள் கடைவாயிலோ யென்றால் சந்தேகம் தீர்ந்த போதிவினர்களும் அந்தச்செட்டிகளுடைய செல்வத்தின் வளமையை இப்படிப்பட்டதென்று அளவுசெய்து சொல்லலாகும். அந்தச் செட்டித்தெருவிலே நெருப்பினது சிறுபொறியை ஒத்தபான சிவந்த ரத்தினங்களும், ஒளிவீசுகின்ற வரிசைகளையுடைய பொன்வண்டுக்கொப்பான மரகதமும், முத்தும் பிரகாசத்தில் மிகுந்தவயிரமும், விலைமதிக்கக்கூடாத பவளமும் சிந்திக்கிடக்கிறதினாலே கழிந்துபோகிற காலொன்றுக்கு அரிப்புக்காரர்கள் கைக்ககப்படுவன விதத்திற்கிரண்டாயிரம், படர்ந்திருக்கிற ஆலமரத்துப் பக்ஷிகள்போல இலாபங் கொள்ளும்பொருட்டுப் பதினெட்டுத் தேசத்தினர்களும் பேசுகின்ற சொற்கலப்பாகிய பரிசுத்தம் பொருந்திய மாயாகாரியமான ஒளியையல்லாமல் ஆகாசமாகிபமுதற்காரணத்தாலாகிய காரியவோசை யென்கிற தொனியாகவும் கடைவீதிகளிருக்கின்றன. (மாயாகாரியவொலி பதினெண்பாஷைகள்) நீங்குதலில்லாதபலவேறுவகையான பொருள்களும் ஏழுலோகமும் பிறவும் வழுதலில்லாதபலவேறுவகையான கலைகளும் முறைப்படியே வகைசெய்து கிட்டி வேண்டினவர்கள் கொள்ளத்தக்கபடி பகர்ந்துகொண்டு கெடுதலில்லாத வேதம்போன்றிருக்கின்றன. அந்தக்கடைவீதிகள் (இதுபோல் சிலேடைகளெல்லாம் கேட்டுணர்க) எட்டுத்திக்கும் புகழுகின்ற மதுரையைத் தானே சிவலோகமாகக் கொண்டு முக்கட்கடவுளாகிய சிவபெருமான் அரசாண்ட முறைமைக்குத் தகுதியாகத் தகுந்த தோழனவனும் அளகாபுரியும் கூடியிருக்கிற பொலிவை அவ்வூர்ச் செட்டித்தெருக்கள் ஒப்பாயிருக்கும் ஒருருளைத்தேருடைய சூரியன் உலகத்தில் இருளைப்போக்குகிறதுபோல ஆஞ்ஞாசக்காத்திறலாலே பாபங்களாகிய இருளைப்போக்கி நீதிசெலுத்தி மல்புத்தஞ்செய்கின்ற பெரிய புஜபலங்கொண்டு பகைவனைக் கொல்லுகின்ற சினமும் வெற்றியுங்கொ

ண்ட அரசர்களுடைய சிறந்த பெரிதான வீதிகளின் சிறப்பை இனிச் சொல்லக்கடவோமாக.

கடல்களின் அலைகளையெல்லாங்கொண்டுவந்து குதிரையாகச் செய்து கால்களிலே பொருந்தக்கட்டி நிறுத்தியிருக்கிற லாயங்கள் அதிகம் அருவிகளொலிக்கும் ஓரறிவுயிராகி மலைகளையெல்லாங் கொண்டுவந்து மரங்களையொடிக்கிற யானைகளாக நிறுத்தியிருக்கிற சாலைகளதிகம் (மரங்கட்டுத்தறியெனவுமாம்) மழுக்கள் வச்சிராயுதம் வில் அம்பு முத்தலைச்சூலங்கள் சக்கரம்வேல் கப்பணம் கலப்பை எஃகுத்தடிகள் கத்திகள் கேடகம் தண்டாயுத முதலான ஆயுதக் கூட்டங்களுடனே விஜயலட்சுமியானவள் வாசஞ்செய்கிற சிலம்பக்கூட்டங்கள் அதிக துவாரம்பொருந்திய கல்லுத்திருமால்போலக் கையிலே கொண்டு சுழற்றியும், சிவந்த மண்ணைப் பூசிக்கொண்டும் வருகிற யானையைபோற் பாய்ந்து மல்யுத்தங்கள்செய்தும் தங்கள் புஜபலந்தெரியும்படி கத்திகளுடனே கேடகங்கள் வீசியும் வெற்றி கொண்ட குமாரர்கள் பழகுஞ் சண்டைகள் செய்கிற கூட்டங்களதிகம், ஒளி விளங்குகின்ற நீலமணி மாடங்களும், சிவந்த மணிகளாற்செய்த சிகரங்களையுடைய வீடுகளும், குற்றமில்லாத பொன்னுகிய மாடங்களும் சந்திரகாந்தமாடங்களும் ஆகவிப்படித் துல்லியமாக விளங்குகின்றமாடங்களினீண்ட வரிசைகள் மதுரையாகிய பசுமைபொருந்திய ஆபரணங்களையுடைய ஒருபெண்பிள்ளைப்பூண்டுகொண்டிருக்கிற நவமணிக் கோவைபோல் விளங்குகின்றன, மணங்கமழுகின்ற கூந்தலையுடைய பெண்களின் பெருத்த இளமையான கொங்கைகளாலே குத்துப்பட்ட மலைபோல் அகன்றமார்பிற் புண் அல்லது முதுகிலே புண்படாமலும் தமக்கு அன்பில்லாமலும் கீர்த்திமிகுந்ததுமான வழியேசென்று ஒளிபொருந்திய (கத்திகேடகங்கொண்டு அளவில்லாத வித்தைகள் பயின்றிருக்கிற வீரர்கூட்டம் பொருந்துவதே எந்தவிடங்களிலும் காணத்தக்கது மேகங்கள் மின்னலக்கத்தியாகவீசி அதிக சண்டையிட்டு மூண்டாற்போல் வெள்ளைக் கொம்புகளை நீட்டி ஒன்றற்கொன்று உடம்பிலே அழுந்தக்குத்திக்கொண்டு அந்த மேகங்கள்வாய்விட்டிடித்தாற்போல்ரத்தஜலம்பெருக லட்சுமியும்விரும்புகின்றமார்பையுடையவீரர்கள் அப்படிப்பொருதுகின்ற யானைச்சண்டை விடுவார்கள். செலுத்துகின்ற சாரதிகள் மனமும் தங்களுக்குப் பின்னைக் கட்டுபட்டு இழுத்துக்கொண்டு தாண்டிச் செல்லுகின்ற குதிரைகள் ஒற்றையுருளை பூண்ட சூரியன் தேரைப்பார்க்கிலும் அதிகவிரைவாக உருண்டோடுகிற அந்தத்தேர்களின் உருளைகளிலே சூழ்ந்திருக்கிற பசும்பொன்கட்டுகள்தேயப் பூமிதேவியின் உடலைக்கிழித்துக்கொண்டு தூரதிசைகளிலே போய்த்திருப்புவதாகச் செல்வத்தாற் சிறந்தஇரதத்தைச்செலுத்துவார்கள் புருஷர்களுடைய நெருக்கத்திலே சிந்துகின்றகலவையும், பெண்களுடையகொங்கைகளிலிருந்து சிந்துகின்ற சந்தனமும் கூந்தலில் அவிழ்ந்துவிழுகின்ற பூமாலைகளும் விசிறிகளாலே தூவுகின்ற செம்பொடிநீரும் தோன்ற நறுவிரைத்தேனுடனே கூடியெழுந்துபோய்ச் சிவந்ததூள்கள் ஆகாயத்தின் வயிற்றெல்லா மறைக்க வெல்லும் குதிரைகளேறியு நடத்துவார்கள், தங்களுயி

சைக்குறித்து எவ்வளவு நினைப்பாதவர்களாய் கொர்வமுமானழு நிழுக்கப் பகைவர்முனைமேல் எதிர்த்துசெப்கிற சண்டையைப்போல, ரத்தம்போற் சிவந்த நிறத்தைதகொண்டபகரிக்குமலரைப்போலுங் கொண்டையையுடைய சேவற் சண்டைசெய்ய இளைய ஆட்டுச்சண்டைவிட்டு அந்தவெவ்விதமான சண்டைவேடிக்கைபார்த்துக்கொண்டு நிற்பார்கள் அக்கோழிகள் ஆடுகளுக் குண்டாகின்ற காயங்களைக் சொலியென்றெண்ணுர்கள். பெற்ற தாய்மார்க ளுக்குமுத்துக்கொப்பான மிக்கபேதப்பருவப்பெண்கள் பெரிதான நீரையு டைய வையையாற்றில் தோன்றுகிற வெள்ளமுத்துகளாலேசெய்த சிறு வீடுகள் நடக்கிறபோதழிய அதற்குக்கோபங்கொண்டு பார்த்துக்கண்ணீரா கிய முத்துகளுதிர எறிந்த ஒருமணிமாலைகள் தடுக்கத்தெளிந்த முகத்தைப் போல் நகைத்துக்கொண்டு செல்வப்பிள்ளைகள் வீதிகளிலே சிறுதேருருட்டு வார்கள், கொடிகளிலே மேகங்கள் சஞ்சரித்துலாவுகின்ற அந்தப்பெரிதான மதுராபுரிக்குள் வடகீழ்த்திசையில் முடிமேல் வேபபம்பூ மணம்வீச தேன் விரிக்கின்ற ஆத்திமாலையும் பனைமாலையும் அடிமேல் கமழப் பாண்டியர்கள் பரம்பரையாக அரசாட்சிசெப்கிற இடிபோலும்பேரிகையுயாதொலிக்கின்ற முகவாயிலையுடைய எழுநிலைமாடக்கோயிலிருக்கின்றது உண்மையாகச்சொ ல்லுகின்ற மெய்ஞ்ஞானிகள் உண்டென்று சொல்லுகின்ற தர்மார்த்த காம மோசகூங்களை யில்லையென்கிற வஞ்சகர் நாவையறுக்கும் ஆயுதமாக மெய்க் கடவுளாலேசொன்ன வேதப்பிரமாணங்களைக்கொண்டு மனந்தெளிந்து பரி சுத்தர்களாய் மோட்சத்தை விரும்புகின்ற செல்வரான வேதிய ரிருக்குமிட மான வீதியை இனிச்சொல்லக்கடவோம்.

தருப்பைக்கயிறு இடையிலே விளங்க பொன்னிறத்தைக் கொண்ட தாமரைமலர்மாலை குடுமியிலே தொங்கியசையவ வஸ்திரம் செருகுதலுடனே முன்கொய்ததும்தொங்க பஞ்சிநூலாற்செய்த முப்புரிநூலின் மான்றோலுங் கூடினமார்பும் பலாசக்கோல் கையிலேகொண்டு குறைவில்லாமல் நான்கு வேதங்களுங் கற்பவர்கள் நிலைகளே வீடுகளெல்லாம் அக்கினி ஹோத்திரஞ் செய்கிற பிராமணர்களுடைய சிறுபிள்ளைகள் பழகுகின்ற தெய்வவேதத் தை நாவிலே உருச்சொல்லிகொண்டிருக்க அதுகேட்டுக் கிளிகள் மாத்திர மோ கற்றுக்கொள்வன அவற்றிற்கு வேருகவுள்ள பூவைகளும் கற்றுக்கொ ண்டு தேவருலகத்திலிருக்கிற புதியமந்தாரச்சோலைகளிலுலாவுகின்ற கிளிக ளுக்கெல்லாம் குற்றந்தீரக் கற்றுக்கொடுக்கும் வேதங்களும் வேதாந்தங்க ளும் தருமசாஸ்திரங்களும் புராணேபதங்களான நூல்களும் தெரிந்தவர்க ளாலும் பிறமதங்களெவல்ல வாதமும் பிறர்மதமேற்கொண்டு மறுத்தலும் தன்மதத்தை நிலைநிறுத்தவல்ல ஞானமுமுடையவர்களாலும் கழகமெல்லா நிறைந்திருக்கின்றன (கழகம் கல்விச்சபை) உறியிலே அடங்கின கமண்ட லத்தைக் கையிலேகொண்டு காவிக்கல்தோய்த்தவஸ்திரமுடுத்தி கீழேஊறு கிற வுயிர்களுடைய கொலைக்கு அஞ்சிநடக்கிறநடையும் அஞ்ஞானம்போக வெட்டுகின்ற ஒளியைக்கொண்ட மழுவாள்போலக் கோவணமுலைக்கட்டின தண்டமும்கொண்டு வேதாந்தப்பொருளையல்லாமல் வேருன்றையுநம்பாத பெரிய தவத்தினர்களிருக்கிற மடங்களே எவ்விடமும்விளங்கும். அடுப்பி

லுண்டாகியெழுகிறபுகையும் மேல்வீடுகளில் வாசத்துக்கிடுகிற அகிற்கட்டை களின் புகையும் யாகசாலைகளிலே உண்டாய்க் கிளம்புகிற புகையும் ஒன்றுப் க்கூடி விரிந்த சூரியனுடைய பிரகாசத்தை மறைக்க அப்போது இராக்கால ம் வந்ததென்று எல்லாரும் தங்கள் செய்தொழிலை விட்டுவிடுவதாலே உமா தேவியானவள் தேடிழுகுகின்ற கொன்றைமாலையைத்தரித்த கடவுளுடை ய கண்களை மூடினகாலம்போ லிருக்கும் தெய்வத்தன்மையான திருநீறே பாய்மரமாகவும் ஐந்தெழுத்தே கப்பலாகவும் கொண்டு வெப்பத்தையுடைய அழுக்கான இருவினைக்கொண்ட தேகத்தைபெடித்து உழலுகின்ற பிற விக்கடல்களேழையுங் கடந்து பரமேஸ்வரனுடைய பாதமலராகிய கரையை ச்சேறுகின்ற சைவமாதவர்களிருக்கிற மடங்களையுடைய ஒப்பில்லாத வீதி வளத்தை இனிச்சொல்லக்கடவோம்.

எவ்விடங்களிலும் சிவபூசைசெய்து இகபரபோகங்களை அடைவார்கள். எவ்விடங்களிலும் சிவனடியார்களைப் பூசைசெய்து எழுவகையான பிரவி களுந் தீர்த்துக்கொள்வார்கள். எவ்விடங்களிலும் சிவாகமங்களைக்கேட்டு இனிவரும் ஆகாமியங்களைத் தடைசெய்வார்கள். எவ்விடங்களிலும் சிவ வடிவைத் தியானித்து இருண்ட மும்மலங்களைத் தீர்த்துக்கொள்வார்கள். அழிவில்லாத கடவுள்சொன்ன சிவாகமங்கள் நூறுயிரமும் ஆராய்ந்து அவ் வாகமங்களில் சிறந்ததாகிய விதியிலுலும் விலக்கிலுலும் தம்முடைய பாத ங்களை அடைந்த அடியார்கள் சீஷர்கள் அப்பியாசிகளுடைய பாசங்களையறு த்து வீட்டையருளுகின்ற போதகாசிரியர்கள் பலருண்டு (போதக்காட்சி போதிக்கும் அறிவு) வேதங்கள் பொதுவென்றும் ஆகமங்கள் சிறப்பென்றும் சிவனுலே பிரித்து முரையாகச்சொன்ன விதிவிலக்குகளாகிய வாக்கியங்களு ம் முடிவிலே சொல்லுகின்றவீடும் ஒன்று இரண்டு என்கிற பிணக்கில்லாமல் அமைந்திருக்கின்ற குறைவில்லாத சிவயோகிகள் கூட்டங்களும் அனேகம். குழலிசையும் தும்புருநாரதர்பாட்டிசையும் ஆடிச்சுழல்கின்ற கொம்புபோலு ம்பெண்கள் ஆடலின் ஒலியும் திருஞானசம்பந்தசுவாமிகளும் திருநாவுக்காசு சுவாமிகளும் பூரீசுந்தரமூர்த்திசுவாமிகளுமாகிய சைவசமயாசாரிகள் திரு வாய்மலர்ந்தருளிய தமிழ்வேதமாகிய தேவாரங்களின் ஒலியின் திருவிழாக் களின் பெரிய ஒலியும் வேதவொலியும் திக்குகளெல்லாம்செவிடுபட முழங்கு ம் பேரிகையொலியும் ஓயாமல் எல்லாருக்கு முன்னவனுகிய சொக்கலிங்கக்க டவுள் கோயில் விளங்குகின்றது மடங்குதலில்லாமல் ஆகாயத்தைப்பிளந்து மேலாகவளர்ந்து வெள்ளிவிடைமேல் அழகருடைய வெள்ளியம்பலம் விளங் கி யெழுகின்ற வெண்சோதியின் நீட்டமானது வளைந்த வெண்மையான சந் திரனை மாலையாகத்தரித்த சிவபெருமானுடைய - பூரீகைலாயமான மூன்றுல கங்களும் ஓடுங்குங்காலத்தில் உயர்ந்த உயர்ச்சியை ஒப்பாயிருக்கிறது. தே னைச்சூழ்ந்து துளிர்த்து மலர்களையும் சிந்தி வண்டுகள்பாட இலைகளால் நிரம் பிச் சோமசுந்தரக்கடவுளுக்கு ஒருபுறத்தில்நின்று விரிகின்ற கடப்பமரமா னது பெருகிக் கண்ணீரைச்சிந்தப் பலமலர்களைத்தூவித் துதித்து வேண்டி நின்று அருச்சனைகளைச்செய்கின்ற இந்திரனை ஒத்துவிளங்குகின்றது வருத் தத்தைச்செய்கின்ற தீவினை வெப்பந்தீர வுயிர்களுக்கெல்லாம் பாதநிழலைக்

கொடுக்கும் கடவுளுக்கு நீண்டநிழலைச்செய்கிற மலர்களையுடைய கடப்பமரத்தில் குழலிசைபோலப்பாடுகின்ற வண்டுகள் கற்பகவிருட்சத்திலுள்ள தேனைக்கொண்டுவந்து கொடுத்து கொதிப்பைச்செய்கிற காமத்தையுடைய மெல்லிய பெட்டைவண்டுகளினுடைய பிணக்காகிய நோயைத்தீர்க்கும் நீர் நிரம்பினகடல் அதுவன்று இதுவேயென்னும் அகழியும், மேகங்கள் சஞ்சரிக்கிறசக்கிரவாளகிரி அதுவன்று இதுவேயென வுயர்ந்தமதிலும் எட்டாயிருக்கிற பருவதங்கள் அவைகள் அல்ல இவைகளேயென அமைந்த கோபுரங்களும் பொன்மலை அதுவன்று இதுவேயென விளங்குகின்ற ஆகாயத்திலிருந்திறக்கின இந்திரவிமானமும்கொண்டது மதுரை வேதாந்தங்களும் சந்தேகந்தீர மெய்ப்பொருள் விளங்குகின்ற நாதாந்தமுங்கடந்து ஒரு நடுநிலைப்பொருளாகிய பரத்தை பக்தியுள்ளவர்களாய்த் தியானிக்கிறவர்களுடைய பெரியதவம் கொடுக்கின்ற பயனைப்போலப் பவளங்களும் தழைத்திருக்கின்றன ஐம்பொறிகளுக்கும் ஊட்டுகின்ற பலவகைப்போகங்களும் அதிகமாகபொருந்தியிருக்கிற தன்மையினாலே அந்த மதுரையிலிருக்கிறவர்கள் செவ்வையான சிவந்த சடையிலே பிறையைமுடித்த நிருமலக்கொழுந்தாகிய சிவபெருமானுடைய வாசனைகொண்ட அன்றலர்ந்த மலர்போலும் பாதத்தைச்சேர்ந்து வீடுபெற்றவர்கள்போல மகிழ்ந்திருப்பார்கள் அந்த முதற்கடவுள் தானே அங்கிருந்து அரசாண்டதனாலே அந்த மதுரை பதுமநிதியைத் தந்தது. அந்தப் பதுமநிதி பலபொருள்களும் நிறைந்த செல்வத்தைத்தந்தது. அந்தச்செல்வம் பலவகைத் தருமமென்று சொல்லுகிற மின்னைத் தந்தது. அந்தமின் நன்மைபொருந்திய புகழைத்தந்தது. எஃகைவென் தோள்களையுடைய சிவலோகமென்று எல்லாருந்துதிக்க நிலைகொண்ட இந்தமதுரையில் மேலுலகத்திலும் சிறந்தநன்மையைக்கொண்ட பலசெல்வங்களும் இருக்கின்றவற்றை அதிசயித்துப்பார்த்து மனதில் பொறுமை தீராமையினாலே தேவர்கள் இன்னமும் கண்ணுறங்காமல் விழித்துக்கொண்டே யிருக்கிறார்கள். வாசனைவிரிந்த வேப்பமாலையணிந்த உக்ரபாண்டியன் வெற்றிவேலைவிட்டுக் கடலைவென்றதும், தலையையுடைத்து இந்திரன் கெருவம்போகவென்றதும் மேகங்களுக்கு விலங்கிட்டதும், பொன்மலையைவென்றதும், இந்த மதுரையாகிய இடவலிமையாலல்லவோ? ஆம் எங்கும் நாக்குகளும், எங்குங் கண்களும், ஆக எங்கும் தங்கிய பெரியசோதியையல்லாமல் இந்த வொப்பற்ற மதுரைச்செல்வத்தை ஆயிரம்கண்ணுள்ள இந்திரனும் ஆயிரம்நாவுள்ள ஆதிசேஷனும் பார்க்கவும் சொல்லவுங்கூடுமோ? கூடாது புண்ணியத்தைச்செய்கின்ற வுலகத்தார் அந்தப்புண்ணியத்தினாலேவருகிற போகங்களைக்கொண்டு மகிழ்வடைகிற உலகம் சுவர்க்கலோகமென்று சொல்லுவார்கள். எப்போதும் புண்ணியத்தைச்செய்கிற உலகமும் அந்தப்புண்ணியத்தால் வருகிற போகங்களைக்கொண்டு மகிழ்வடைகிற உலகமும் மதுரைமாநகரே யல்லது வேறில்லை. கனிந்த இராகம்போலும் சொல்லையுடையபெண்கள் தந்திசைப்பாட்டினாலே தேவருண்கிற கனிந்த அமுதத்தையும் வெறுக்கும்படிகாதைத் தூளைசெய்தூட்ட வுண்டும்பெண்களில் அமுதம்போலச் சிறந்தவர்களுடைய பெருமைபொருந்திய ஆடலைப்பார்க்கக் கண்களைவிட்டும் அளவில்லாதபோர்

கள் இப்படிப் பொழுதுபோக்குவார்கள். கலவியே காரணமாகப் பிணங்கிக் கண்ணீரிலேமுழுகினபெண்கள் பிணக்குத்தீருஞ்சமயம்பார்த்துப் புணர்முலைப்போகத்தை அனுபவித்தும் நித்தியாநித்தியமாகிய பொருள்களைக்கண்டு செவ்வையானதருமமும்தானமும்கற்றோர்கள் கைகளிற்கொடுத்தும்கணக்கில்லாதவர்கள் இப்படிப்பொழுதுபோக்குவார்கள் மீன்போலுங்கண்களையுடையவளதுநாயகனேயெதிர்ப்பட்டும் மூன்றுகாலமும்வந்தனைசெய்தும் பரமசிவன் பூசையைநிரமப்படிசெய்தும் வேதங்கள் முடிவுசெய்தும் அறியப்படாதவன் செய்ததிருவிளையாடல்களைக்கேட்டும் தியானித்தும் அடியார்பூசைசெய்தும் இப்படியும் பலரும் பொழுதுபோக்குவார்கள். கற்கவேண்டும் நூல்களைக்கற்றும் அவைகளைக்கேட்டும் அந்தநூல்களின் கருத்து மனத்துக்குத்தோன்றச் சொல்லிக் கணம் பொருளிலக்கணங்களை யெண்ணியும் தம்மைக் கேட்பவர்களுக்குப் போதித்து மனத்திலுள்ள சந்தேகங்களைத்தீர்த்தும் இராக்காலம் வந்தபோதும் பகற்காலம் வந்தபோதும் சச்சிதானந்தமாகிய அதிசயவெள்ளத்தில் முழுகாமல்முழுகி இப்படியும்சிலர் பொழுது போக்குவார்கள் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத ஒருவனே காவியத்துக்குத் தலைவனாக முன்னோர்கள் சொன்னதெல்லாம் அந்தக்காவியத்தலைவர்களுக்கெல்லாம் உபசாரமாகவல்லவோ அப்படி மெய்யாகத் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத கடவுளே சௌந்தரபாண்டியனாக இந்தமதுரைக்கு அரசனுனன் அதனாலே இந்தகாவியத்துக்கும் தலைவனுனன் என்பது உபசாரமன்று மெய். இந்தக் காவியத் தலைவனது பெரிய குணத்தை மற்ற அரசர்கள்தேவர்களைப்போல மதித்துப் புகழ்ந்து சொல்லக் கூடுமோ கூடாது. எனென்றால் அவனது ஆணைப்படியே நடக்கின்றது இந்தலோகமென்றால் எப்படி அவன்பண்பைச் சொல்லமாட்டுவேன்! ஆனாலும் இனி அந்த ஆதியங்கடவுள் விளையாடின திருவிளையாடல்களின் வாலாற்றை வரிசையாகச் சொல்லத் தொடங்குவேன்.

மதுரைத்திருநகரப்படலம்

மு ற் றி ற் று.

உ

சிவமயம்.

திருக்கைலாசப்புகழ்ச்சி.

கலிநிலைத்துறை.

வரங்கடந்தரு ளெனமுது வானவர் முநிவோர்
கரங்கடந்தலை முகிழ்த்திடக் கருணைசெய் தவிச்சை
யுரங்கடந்துரை யுணர்வெலாங் கடந்தரு மறையின்
சிரங்கடந்தவ னிருப்பது திருக்கயி லாயம்.

இதன்பொருள்.

வரங்கள் அளித்தருளுமென்று அயன்முதலிய முதிய தேவர்களும் முனிவர்களும் கைகளைத் தமது சிரசுகளின்மேற்குவித்து வைத்துக்கொண்டு துதிசெய்யக் கிருபைசெய்து பாசவலியைக் கடந்து மனவாக்குகளையுங் கடந்து அரியவேதத்தின் சென்னியையுங் கடந்த பரமசிவன் வீற்றிருப்பதற்கு இடமாயிருப்பது திருக்கைலாச மென்னுந் திருமலை.

இந்திராதிதேவர்கள் பதவியும் தாமரைப்பூவில் வாசஞ் செய்யும் பிரமனது பதவியும் சக்காயுதத்தை யுடைய திருமாலினது பதவியும் ஆகியவிவையெல்லாம் நாசமுறுங்காலத்தும் தன் நாசரகிதமாய் ஊழிதோறும் அம்மலை வளராநிற்கும். பின்னும் அரம்பையர்கள்நடனஞ்செய்யும் ஒலியும்வீணை முதலிய நரம்புக்கருவிகளின் ஒலியும், மத்தள முதலிய தோற் கருவியின் ஒலியும், அநேகம் யானைகள் வீறிடும் ஒலியும், அருவியாற்றின் ஒலியும் நீங்காமல் ஆகாயத்திலும் திக்குகளிலும்சென்று நிரம்பிநிற்கும். பின்னும் அவ்விடத்தில் இருக்கும் மஹரிஷிகளுக்குப் பரமசிவன் தனதுசாரூப்பியத்தைத் தருவதுபோல விபூதிபூசி யிருத்தலாலும் அந்தப்பரமசிவனை தன்னகத்தே கொண்டு அசைவில்லாதிருத்தலாலும் பெருகிவரும்நீரையுடைய கண்களாலும் அத்திருக்கைலாச மலையும் தனதுருவத்தை விரித்தாற்போலக் கல்லென்றுரைத்துவருகிற அருவியாற்றை யல்லது வேதாந்தமுடிவில் விளங்குகின்ற பரஞ்சோதியைத் தரிசித்துவளருகின்ற மஹரிஷிகள் கண்களும் ஆநந்தக் கண்ணீராகிய ஆற்றைக்கொண்டு வளரும். பின்னும் கோட்டுப்பூ நிலப்பூ நீர்ப்பூ கொடிப்பூ ஆகிய நால்வகை மலர்களைக்கொண்டு உள்ளங் கனிந்தும் வருகிற பாடல்களாகிய பூக்களைக்கொண்டு நமது கடவுளாகிய சிவபெருமானுடைய திருவடிகளிலே அருச்சிக்கின்ற மஹரிஷிகள் கூட்டங்களும் ஒருபக்கத்தில் சூழ்ந்திருக்கப்படும். பின்னும் யானைகளும் புலிகளும் படங்களையுடைய பாம்புகளும் தங்கள் முன்னோர்களாகிய ஐராவதமுதலியனவும், வியாக்கிரம பாதரும், பதஞ்சலியாரும் போற்றுதலான திரிநேத்திரதாரியாகமெய்யான தபோதனர்களை நினைத்துப் பத்திபண்ணை மேலுலகமும் இவ்வுலகமும் புகழத்தக்கது.

புராண வ்ரலாறு.

எப்பொழுதும் அளவுசொல்லப்படாத பெருமையையுடைய அந்த வெள்ளிமலைமேல் நீலகண்டருகிய தேவதைக்காத்த அந்தப் பரமசிவன் கோயிலுக்குமுன்னே சிவதீர்த்தங்களில் சிறந்ததா யிருக்கும் தீர்த்தக்கரையில் சந்திரகாந்தக் கல்லில் நவரத்தினங்களாப பதித்துத் தேவதச்சனற் செய்த ஆயிரக்கால் மண்டபம் ஒன்றுண்டு. அந்தமண்டபம் நக்ஷத்திரங்களுடனே பூரணச் சந்திரன்வந்து தரிசனஞ செய்வதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருப்பதுபோல விளங்கும். அதில் வேங்கை யாசனத்தின்மேல் பதினெண் புராணமும் அருளிச்செய்த சூதபுராணிகர் எழுந்தருளி யிருந்தார். அப்போது அந்தச் சிவதீர்த்தத்தில்வந்து ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனமுதலிய அநுஷ்டானங்களைச்செய்து சந்திரசேகரனைத் தியானித்துத் துதித்துக்கொண்டு சம்புபத்தன் சதாநந்தன் உத்தமன் மகோதரன் உக்கிரவீரியன் பிரசண்டன் முதலான முனிவர்களெல்லாரும் பரமசிவனிடத்து மிகு அன்பினரான சூதரை வணங்கித் துதித்து ஒருகாரியத்தை வினவுவாராயினர்.

வேதம் ஆகமம், புராணம், மிருதிமுதலாகச் சொல்லுகின்றசாஸ்திரங்களின் நிச்சயார்த்தம் உலகங்களை யெல்லாம் பெற்ற பார்வதி நாயகனே பரமென்று ஆராய்ந்தறிந்த பெருமையையுடைய மெய்ஞ்ஞான மஹாரிஷியே உமக்கு நாங்கள் சொல்லிக்கொள்வ தொன்றுண்டு. அஃதென்னவென்றால், மேருமந்தரம், கைலாயம், ஸ்ரீசைலமுதலான இடப்பாகத்தின்மீதேறுகின்ற சிவலோகத்தை யுடையவன் வாசம் பண்ணுகிற தலங்கள் அநேகம் எல்லாரும் அழிவில்லாத போகத்தையும் மோக்ஷத்தையும் அடையச்செய்வனவென்று அந்தத்தலங்களின் காரணமும் மகிமையும் எங்கள் மனத்துக்கிசைய அருளிச்செய்தீர் அப்படி ஐயம், திரிபு, அறியாமை, ஆகிய குற்றங்கள்போக நீர் அருளிச்செய்தும் நாங்கள் சிற்றறிவுடையவர்கள் ஆகையால் தெளிந்திலோம் இன்னமும் நாங்கள் மயக்கத்தையுடையோமாக இருக்கிறதினாலே அந்த மயக்கந்தீர அருள்செய்யவேண்டும். அதாவது சிவஸ்தலங்களுக்குள்ளே சிறந்த தலமும் சிறந்த தீர்த்தமும் வேண்டினோருக்குப் போகமோக்ஷங்களை அருளுகின்றமூர்த்தியும் ஆகமவேதாந்தங்களின் அறிவுக்கெட்டா திருக்கிற பரஞ்சோதியுடைய ஒருதலத்தைச்சொல்லவேண்டுமென்றார்கள். அப்படி யவர்கள் சொன்னபோது அவர்களுக்கு முன்னே முகமலர்ந்து சூதபுராணிகரும் சிவ ஸ்தலங்களுக்குள் விசேடமானதை ஆராய்ந்து பரமசிவனுடைய தலங்களில் கேட்டவுடன் மோக்ஷத்தைத்தருவதாகிய ஒருதலமுண்டு அதாவது பதினெண் புராணத்திலொன்றுகிய காந்தம் ஆறுசங்கிதையையுடையது அவ்வாறும் சனற்குமாரரும்-சூதரும்-சங்கரரும்-விஷ்ணுவும்-பிரமனும்-சூரியனும் தங்கள் தங்கள் பெயரிற் சொல்லப்பட்டன, அவற்றில் சங்கர சங்கிதையைப் பரமசிவன் பார்வதிக்குச் சொல்லும்போது அவள் மடியிலிருந்து குமாரக்கடவுள் நன்றுகத் தெரிந்தார் அவர்தம்மை வழிபடுகின்ற அகத்தியமுநிவருக்கு உபதேசித்த நாள்முதல் அகத்தியசங்கிதையென்று பெயராயிற்று. அந்த அகத்திய சங்கிதைபரமசிவனுடைய திருவடிநிழலாகிய பேரின்ப வீட்டைத் தருவதாகிய ஒருதலத்தை விசேடித்துச் சொல்லுகின்றது அப்படி விசேடித்துச் சொல்லுகிறதலம் எதுவென்றால் திருவா

லவாயென்றுருவர் சொல்லக்கேட்டவுடனே மோக்ஷத்தைத் தருவது என் றருளிச்செய்த சூதபுராணிகரை மோக்ஷசிந்தையை யுடைய முநிவர்களெல் லோரும் அந்தத் தலத்தை இன்னதென் றருளிச்செய்ய வேண்டுமென்ன வி யாசர் மாணைக்கர் சூதமுனிவர் முறையாகச் சொல்லத்தொடங்கினர்.

பிரமதேவன் சாஸ்திரோக்தப்படி அசுவமேதயாகம் செய்யவேண்டி இறக்க முத்தியைத் தரும் காசியினிடத்தில் தனது புத்திரருடனே முன் னொருகாலத்தில் அகத்தியன்-வியாசன்-நாரதன்-சனகன்-சனந்தனன்-சனற் குமாரன்-கௌதமன்-பராசரன்-வாமதேவன்-வான்மீகி- வசிட்டன்சுகன்முத லான முனிவர்களுடனேசென்று பத்து அசுவமேதயாகம்முடித்து யாகஞ் செய்வித்த அம்முனிவர்களுக்குச்செய்யும் உபசாரங்க ளெல்லாஞ் செய்து சத்தியலோகத்துக்குப்போனபின்பு அந்தமுனிவர்களெல்லோரும் காசி விசு வநாத சுவாமியைத் தரிசித்துவணங்கிப் பின்பு அங்குள்ள முத்திமண்டபத் தில் தர்மார்த்த காமமோகங்களைச் சனகாதிகளுக் கருளிச்செய்த தக்ஷிண மூர்த்தி சந்நிதியிலிருந்து நாரதமகாமுனிவரைப் பார்த்து தலம்-தீர்த்தம்-மூர்த்தி என்கிற மூன்றுஞ் சிறந்தனவாகிய ஒரு சிவஸ்தலத்தைச் சொல்லி யருள வேண்டுமென்ன, அந்தநாரதபகவான் கலைஞானங்களெல்லாந் தெரி ந்த சனற்குமாரரிடத்தில் தெரிந்துகொண்டவர் வேதவியாசராதலால் அவ ரிடத்தில் வந்தனை வழிபாடுடனே கேளுங்களென்ன அந்த வேதவியாசர் சுப்பிரமணியரிடத்தில் வேதாகமங்களெல்லாம் தெரிந்துகொண்டவர் அகஸ் தியராதலால் அவரைக் கேளுங்களென்ன, அம்முனிவர்கள் அகஸ்தியரை வணங்கி வாதாபி வில்வலனைக்கொன்ற தருமஸ்வரூபியாய் விந்தகிரியை யட க்கின தவமலையே? அலைகடலைக் குடித்த கிருபைக் கடலே? அருமையான முத்தமிழைப் பொழிந்த மேகமே? தாசுமுனைபோல தென்திசையைச் சம மாகச்செய்த ஆதாரமே? என ஆயிரவேதம்போலத் துதிசெய்து மூவகைச் சிறப்புள்ள ஒரு சிவஸ்தலத்தை அருளிச்செய்ய வேண்டுமென்ன அவர்முக மலர்ந்து மகானந்தன் என்னும் மறைபவனும் அவன் மனைவியும் மக்களிரு வரும் மூன்றும் யுகத்தில் பாவத்தாற் கோழிகளாய்ப் பிறந்து முத்திமண்டப த்தில்வந்து முத்தியடைவதென்ற சேவல்களையும் கணபதியையும், முருகக் கடவுளையும், தக்ஷிணமூர்த்தியையும் வணங்கி அங்கயற்கண்ணியையும் சோ மசுந்தரக் கடவுளையும் தியானித்துச் சமாதிகூடி ஆனந்தபரவசமாகிய உமா தேவிக்குப் பரமசிவன் அருளிச்செய்த சங்கரசங்கிதையை எனக்குச் சுப்பிர மணியக்கடவுள் உபதேசித்தார். அந்தச் சங்கரசங்கிதையில் செய்யக்கூடாத தவங்களெல்லாஞ் செய்து மனந்தெளிந்து மிகவும் அருமையாகப்பெறுகின்ற மோட்சத்தை எளிதாகக் கேட்டவுடனே பெறச்செய்யும் ஒருதலமுண்டு. அ தது மூன்று சிறப்புமுள்ளது எல்லாச் சிவஸ்தலங்களினுஞ் சிறந்தது வேதார் த்தமாகி விளங்குகின்ற பரமசிவம். அருளுருக்கொண்டு அறுபத்துநான்குதி ருவிளையாடல்செய்தருளின திருவாலவாயென்னுந்தலம் மண்ணுலகில் சிவ லோகமென்று சொல்லப்படும். அம்மூவகைச்சிறப்புமுள்ள தலமகிமையை மு ருகக்கடவுளெனக்குச்சொல்லியபடி சொல்லுகிறேனென்றார்.

திருக்கைலாசப்புகழ்ச்சியும் புராணவாலாறும்-முற்றிற்று.

உ

சிவமயம்.

தலவிசேடம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நாட்டமொருமூன்றுடையநாயகனுக்கன்புடையீர்நயந்துகேட்ட
தலமீண்டுரைத்ததிருவாலவாயதனுட்கிளைத்துப்பொன்னந்
தோட்டலர்தாமரைமுளைத்ததொருதடமுஞ்சுந்தரச்செஞ்சோதிஞான
வீட்டமெனமுளைத்தசிவலிங்கமுமொன்றுளவின்னுமிசைப்பக்கேண்மின்.

இதன்பொருள்.

திருநேத்திரங்களையுடைய சிவபெருமானிடத்து அன்புநிறைந்த முனிவர்களே, விரும்பி நீங்கள் கேட்டதலம் இப்போது நாம் கூறிய திருவாலவாயாம், அத்தலத்தில் நிறைந்து பொன்னிறம்வாய்ந்த இதழ்அலர்ந்த தாமரைமுளைத்த ஒருதடாகமும், அழகிய சிவந்த சோதிமயமாகிய ஞானக்கூட்டம்போலத் தோன்றியருளிய சிவலிங்கமொன்று மிருக்கின்றன, இன்னமுஞ் சொல்லுவேன் கேளுங்கள்.

திரிநேத்திரதாரியாகிய பரமசிவனுக்கு அன்புள்ள முனிவர்களேநீங்கள் விரும்பிக்கேட்டதலம் இப்போது சொன்ன திருவாலவாயேயாம் அந்தத்தலத்தில் பொன்போலும் நிறத்தையுடைய இதழ்களுடனே மலர்ந்த தாமரைத்தடாகமும், அழகிய சிவந்தசோதியான ஞானத்திரள்போல உண்டாகிய ஒரு சிவலிங்கமும் உண்டு, அந்தத் திருவாலவாய்க்கு நிகரான ஒருதலமும், தெய்வீகமான மணம் பரிமளிக்கின்ற பொற்றூமரைத் தீர்த்தமும், அந்தத்தீர்த்தத்தின் பக்கத்தில் ஞானரூபமாய் விளங்குகின்ற சோமசுந்தரக்கடவுள்போல் இகபரபோகமும், அழியாதவீடும், தருகின்றகடவுளும் திரிலோகத்தினுமில்லை இதுசத்தியம் தலம், தீர்த்தம், மூர்த்தி, என்னுமூன்றில் முன்னர் தலமான்மியத்தைச சுருக்கமாகச சொல்லுகிறேன் எப்படியென்றால், எல்லாவுலகங்களிலும் புண்ணிய சேஷத்திரங்களை அதிகம் அந்தப் புண்ணியசேஷத்திரங்களிலும் சிவசேஷத்திரம் அதிகம் அந்த சிவசேஷத்திரங்களிலும் அறுபத்தெட்டுச் சிவஸ்தலங்களதிகம் அறுபத்தெட்டிலும் பதிறுதலங்கள் அதிகம் அந்தப்பதிறிலும் நான்கு தலம் அதிகம் அவையாவன சிதம்பரம்-காசி-காளத்தி-திருவாலவாய் ஆகிய இந்த நான்கிலும் திருவாலவாய் அதிகம். எப்படியென்றால் சிதம்பரம் தரிசிக்க முத்தி, காசி அங்குநின்றிறக்கமுத்தி, காளத்திபூசிக்க முத்தியைக்கொடுக்கும். திருவாலவாய்க்கேட்டவுடனே இகபரபோக மோசுகங்களைக் கொடுக்கும் இதையல்லாமல் பரிபூரணமாயெங்குநிறைகின்ற பரமசிவம் சிதஸ்தலங்களையெல்லாம் உண்டாக்குதற்காக முன்னே இந்தத்திருவாலவாயை யுண்டாக்கி அதில்வாசஞ்செய்தருளினார். ஆதலால் திருவாலவாயென்னக் கேட்டவர்களே அறத்தைப் பெறுவார்கள் திருவாலவாயென்று திபாணித்தவர்களே பொருளைப்

பெருவார்கள் இந்தத் திருவாலவாயில் சோமசுந்தரக்கடவுளை தரிசித்தவர் களை இன்பநலத்தைதப் பெருவார்கள் திருவாலவாயில் எப்பொழுதும் வசிப் பவர்களை மோகூ வீட்டைடபபெறுவார்கள் இன்னமும் கங்காநதி சூழ்ந்து வருகிற காசிமுதலிய ஸ்தலங்களில் வசிப்பவர்க்கு முன்னே சீவன் முதந்தி யைக்கொடுத்து பின்பு விதேகமுத்தியும் கொடுக்குமாதலால் மகிமையால் திருவாலவாயே அதிகம் இந்த சீவன் முத்திபுரமாகிய திருவாலவாய்க்கு நிகரான தலங்கள் எந்தலோகங்களிலும் இல்லை அதற்கதுவே ஒப்பாகும் ஆ தலால் இந்தத் தலத்தைவிட்டு வேறுதலங்களில் சென்று தவவிரதங்களைச் செய்பவர் கையிற்கிடைத்த பாற்சோற்றை விட்டுப் புறங்கை நக்குகின்றவர் களை ஒப்பாவர் ஆகையாலிந்தத் தலமகிமையைச் சொல்ல வல்லவர் யாவர் ஒருவருமில்லை. இன்னும் வேறுதலங்களிற்சென்று அசுவமேதம்-வாசபேயம் சோடசாகம்-அக்கினிட்டோமம் இராஜசூயம் முதலிய யாகங்கள் செய்து முடித்தபலனும் தெரிசபூரணமுதலிய விரதங்கள்செய்த பலனும் எள்-நெய்-அன்னம்-கன்னி-குதிரை-தேர்-யானை-வீடு-பசு-வெள்ளி-பொன்-ஆபரணம்-வஸ்திரம்-வீளை-நிலம்-அடிமை முதலிய தானங்கள் செய்தபலனும் காசிமுத லிய ஸ்தலங்களில் வாசம்பண்ணிய பலனும் கங்கை-யமுனை - சரஸ்வதி - கா வேரி-கிருஷ்ணை-துங்கபத்திரி-பாலி-தாம்ரபரணிமுதலாகிய தீர்த்தங்களாடி னபலனும் இந்தத் திருவாலவாயில் எப்போதும் வாசஞ் செய்கிறவர்களுக் குக் கிடைக்கும் இன்னம் வேறிடங்களில்செய்த பிரமகத்தி-திரவியசோரம்-கள்ளுண்டல்-குருபததினியைப் புணர்தல் முதலிய பாவங்களெல்லாம் இந் தத்தலத்தில் வந்து வசிப்பவர்க்குத் தீரும் வேறுதலங்களில் மாசந்தோறும் செய்த சாந்த்ராயண விரதபலன் இந்தத் தலத்தில் ஒருராத்திரி புண்ணும் உணவிலு ண்டாகும், வேறுதலங்களில் ஒருமாதப் பட்டினியால் வரும் பலன் இந்தத்தலத்தில் ஒருநாள் பட்டினியால் உண்டாகும், வேறு தலங் களிற்சென்று நான்கு மாதம் விரதஞ்செய்யும் பலன் இந்தத்தலத்தில் அநுஷ் டிக்கிற ஒரு அஷ்டமி விரதத்தாலுண்டாகும். வேறு தலங்களிற் சென்று ஆறுமாதஞ்செய்யும் விரதபலன் இந்தத்தலத்தில் ஒரு சோமவாரவிரதத்தா லுண்டாகும், வேறுதலங்களில் ஒருவருஷம் ஆகாரமில்லாமல் செய்கிறவிர தபலன் இந்தத்தலத்தில் ஒருமகாசிவராத்திரி விரதத்தால் உண்டாகும். இன் னும் இந்தத்தலத்தில் இந்திரிய நிக்கிரகஞ்செய்து மூன்றுகாலமும் திருப்தி யாக உண்டு சுகித்திருந்தாலும் வாயுபக்ஷணம்பண்ணிச் செய்கிற பெரியதவ த்தை யுடையவனுவான் இந்தத்தலத்தில் யாராகிலும் பிராமணருக்கு ஒரு சுயம்பாகம் தவசிகளுக்கு ஒருபிக்ஷைகொடுத்தால் வேறுதலங்களிற் செய்த சோடச மகாதான பலனைப் பெறுவார்கள். இன்னமும் எக்காலமும் எல்லா த்தலங்களிலும் வாசம்பண்ணின பலனும் எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நான ஞ்செய்தபலனும், பலவிதமான பூசைசெய்ததவப்பலனும், பலவகைத் தவத் தால் வரும்பலனும், பலவகை மந்திர செபம்பண்ணின பலனும், பலவகை நூல்களைக் கேள்வியால் ஆய்ந்துணர்ந்தபலனும், பலவகையோகஞானங்களை அநுஷ்டித்தடங்கிய பலனும், இந்தத் திருவாலவாயில் எப்போதும் வசித்தி ருப்பவர்கள் பெறுவார்கள். ஆதலால் இந்தத் தலமகிமையைத் தெரிவது

பரமசிவமே என்பதனுலே இருவினையை யொழிக்கவேண்டுபவன் இந்தத்தல த்திற்சென்று வாசஞ்செய்யவேவேண்டும்.

முன்னொருகாலத்தில் பிரமதேவன் கைலாயமுதலிய தலங்களெல்லா ம் ஒருதட்டிலிட்டு இந்தத் திருவாலவாயை ஒருதட்டிலிட்டு நிறுத்துப்பார்க் கும்போது திருவாலவாய் மிகவும் கனமாக விருந்ததைக்கண்டு உலகத்தில் சிறந்ததலம் இதுவேயென்று புகழுவாணன் இந்தத் தலப் பெருமையைச் சொல்ல வல்லவர்கள்யார் பின்னும் நல்லோர்கள் இந்தத் தலத்துக்குப் பேர் சிவநகரம், கடம்பவனம், ஜீவன்முத்திபுரம், கன்னிபுரம், திருவாலவாய் பூலோக சிவலோகம், சமஷ்டி விச்சாபுரம், கூடல் துவாத சாந்தத்தலம் எ ன்று காரணங்கொண்டு சொல்லுவார்களென . தலவிசேடத்தைச் சொன்ன அகத்தியருக்கு முன்னிருந்துகேட்ட முனிவர்கள் மிகவுமதிசயத்தை யடை ந்து ஐயா! தலப்பெருமையை நன்றுய்ச் சொன்னீர். நாங்கள்கேட்டுத் தீதகமெடுத்த பிரயோசனத்தை இன்றடைந்தோம். இனி தீர்த்தவிசேட த்தை அருளிச்செய்யவேண்டுமென்ன அகஸ்தியர் முறையே சொல்லத் தொ டங்கினர்.

த ல வி சே ட ம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

தீர்த்தவிசேடம்.

அறுசீராடியாசிரியவிருத்தம்

கண்ணகன்குடுமிமாடக் கடிபொழிலாலவாயின்
அண்ணலம்பெருமையாரே யளப்பவரவர்தண்முத்த
வெண்ணகையுமையாளன்பு விளைமுகச்செவ்விபோலத்
தண்ணறுங்கமலம்பூத்த தடப்பெருந்தகைமைசொல்வாம்.

இதன்பொருள்.

இடமகன்ற சிகரங்கள்பொருந்திய வீடுகளையுடைய வாசனை தங்கிய சோலைகள்சூழ்ந்த திருவாலவாயில் வீற்றிராநின்ற சோமசுந்தரக் கடவுளுடைய பெருமையை எவர்கள் அளவிட்டுச் சொல்லத்தக்கவர்கள் பிரகாசமுற்ற முத்தம்போல் வெண்மையாகிய நகையையுடைய மீனாட்சிதேவியின் அன்புவிளைகின்ற திருமுகத்தின் அழகினைப்போலக் குளிர்ச்சிபொருந்தி பரிமளியாநின்ற தாமரை மலர்பூத்த தீர்த்தத்தினது மிகுந்த பெருமையைச் சொல்லுகின்றோம்.

நதிகளுக்கெல்லாஞ் சிரேஷ்டமாகிய கங்கை காவேரி முதலிய நதிகளும் இந்த நதிகளுக்கு வேறுருவமாகிய நதியதி யென்கிற ஆற்றுநீர் ஊற்றுநீர் மேகநீர் கூடியகடலும் மற்ற தீர்த்தங்களும் மேகங்களும் உண்டாதற்கு முன்னே தம்மை அபிஷேகம்பண்ணுவித்தற்கு சோமசுந்தரக்கடவுள் தாமே உண்டுபண்ணிய தீர்த்தம் அதெப்படியென்றால் அந்தச் சோமசுந்தரப் பெருந்தகையார் ஆதிகாலத்தில் தமது சச்சிதானந்த ஸ்வரூபத்துக்குத்தக்க திரிசூத்திரமும் அரவாபரணங்களும் சந்திர சேகரமும் சூலமும் கபாலமும் அங்கயற்கண்ணியமர்ந்த பாகமும் விளங்க விடைத்தேவர்மீ தெழுந்தருளி விநோதமாகப் பின்னுமின்னும் பக்கங்களிலும் நந்திதேவர் முதலிய கணங்கள் சூழச்சென்று தமது திருமேனி ஒளியிலுலே எட்டுத்திக்கும் விளங்கப் பாதாளலோகமும் சுவர்க்கலோகமும் பிரம லோகமும் விஷ்ணு லோகமும் அதற்குமேலாகிய தமது சிவலோகமும் உளவி விளையாடித்திரும்பும்போது இந்திரனும் பிரமனும் விஷ்ணுவும், முன்னேவந்து வணங்கித்துதிக்க அவர்களுக்கு வெறுப்பில்லாத இன்பத்தைக்கொடுத்துப் பின்பு தமது லோகத்துக்குவந்து தம்மை நீங்காத கணங்களுக்குத் திருவருள்செய்து இலிங்கத்திலெழுந்தருளும்போது நந்திதேவர்முதலிய சிவகணத்தவர் எல்லோரும்வணங்கி அநேகவகையாற் றுதித்துக் கேட்டுக்கொண்டதாவது, சுவாமி இந்த இலிங்க ஸ்வரூபத்துக்கு அபிஷேகம் பண்ணவும் அடியேங்களெல்லாம் ஸ்நானம் பண்ணிப் பரிசுத்தராகவும் உலகத்தில் தீர்த்தங்களும் நதிகளுமில்லை ஆதலால் இம்மை மறுமைப்பலன்களைத் தருவதாக ஒருதீர்த்தம் இவ்விடத்தில் உண்டுபண்ணவேண்டுமென்று பிரார்த்திக்க அவர்கள்நிமித்தம் அந்த இலிங்

கத்துக்கு அடுத்ததென்கீழ்த்திசையில் தமது முத்தலைச்சூலத்தையூன்றினர் ஊன்றுமளவில் பெரியபூமியையும் நாகலோகத்தையும் பிரமனது அண்டக டாகத்தையும் கிழித்தது அப்படி கிழித்த வழியே பெரும்புறக் கடல்போல நீர்பெருக அப்பெருக்கு அதிகப்படாமல் தமது திருக்கரத்தால் அமைத்துப் பின்பு தமதுசடையிலிருக்கிற தெய்வீகமான சுததஜலத்தைத்தூவிக்கலந்து மகாதீர்த்தமாகச் செய்து சுவாமியானவர் நந்திதேவர் முதலானவர்களைப் பார்த்து இந்தமகாதீர்த்தத்தை எல்லாத்தீர்த்தங்களுக்குமுன்னேநாம் உங் கள்பொருட்டு உண்டாக்கினதால் ஆதிதீர்த்தமென்றும் இனியுண்டாக்குந் தீர்த்தங்களுக்கெல்லாம் மேலாயிருத்தலினல் பரமதீர்த்தமென்றும்இதில்மூ ழ்கினேர் நல்ல மங்கலத்தைப் பெறுதலினல் சிவதீர்த்தமென்றும் ஞானத் தைத் தருதலால் ஞானதீர்த்தமென்றும் மோக்ஷத்தைத் தருதலால்மோக்ஷ தீர்த்தமென்றும் இதற்குப்பெயர்கள் இன்னும் இதில் மூழ்கித் தருப்பணஞ் செய்து தானங்கொடுத்து அவ்விடத்திலிருந்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைத் தியா னத்துடனே செபித்து நம்மிடத்தில் வந்து வணங்கி வலஞ்செய்து துதித்து எம்மைச் சந்தோஷிபபித்தோர்கள் தேகமெடுத்ததினல் அடையவேண்டிய பலன் எதுவோ அதை அடைவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தத் தீர்த்தத்திலேலே எம்மை அபிஷேகஞ்செய்யில் பதினலுலகத் திலுமுள்ள மிகுந்த பெருமையையுடைய எல்லாத்தீர்த்தங்களினலும் அபி ஷேகஞ்செய்த பலனுண்டாகும், இத்தீர்த்தத்தில் வந்து மூழ்கி இங்கேவிள ங்குகிற நமது ஸ்வரூபமாகிய இலிங்கத்தை உங்கள் மனத்தில் அன்புபெரு கப் பூசைசெய்யுங்களென்று தேவதேவனுகிய சிவபெருமான் தாமு மதில் மூழ்கிக் கண்களையு மூழ்குவித்து அநாதியாகிய அந்தப் பரிசுத்த லிலிங்கத் தில் பிரவேசித்தார். அப்படிப்பட்ட பெருமையினலே நந்திதேவர்முதலாயி னேர் விதிப்படி அந்தச் சோமசுந்தரக்கடவுளின் திருமுடிமேல் அபிஷேகஞ் செய்து குற்றமறப்பூசித்து மனத்தில் அபேட்சித்தன வெல்லாம் பெற்றார் கள். ஆதலால் அந்த ஞானதீர்த்தத்தைக் கண்டாற் பாவங்களெல்லா நசிக் கும் இஷ்டகாமியங்களெல்லாங் கிடைக்கும் மனம்பொருந்த அதில்மூழ்கும் போது முழுக்கொன்றினுக்கு உலகத்திலுள்ள தீர்த்தங்களெல்லாவற்றிலும் மூழ்கினபலனுண்டாகும் தேகத்தை மண்முதலியன கொண்டு சுத்திசெய்து வருணசூக்கமந்திரத்தைச் செபித்து மூழ்கினல் பரிசுத்தமான பெரிய தீர்த் தங்களெல்லாவற்றிலும் மூழ்கி வேதப்பிராமணர்களுக்கு தானங்களெல்லாங் கொடுத்த பலனைத்தரும்.

பின்னும் இந்தத் தீர்த்தத்தை நினைவின்றித் தீண்டினலும்பாவத்தினி ன்று நீங்கப்பெறுதற்கரிய வீட்டைப்பெறுவார்கள். இதுசத்தியம். எப்படி யென்றல் (நினைவின்றித்தொட்டாலும் நெருப்புச்சுடாமல்விடுமோவிடாது) அதுபோலவாம். யாராயினும் அதின் மூழ்கினேர் ஜீவன் முத்தி பெறுவார். அதில்மூழ்கிப் பெரும்பலனுக்கு வருணமந்திர முதலிய மந்திரங்களைச் சொ ல்லி பெரியசிவஞானத்தைத்தருகிற ஸ்நானத்தைச்செய்து பெறும்பலனெல் லாம் ஒப்பாகா அதில் ஸ்நானமுஞ்செய்து திருவாலவாயுடையானையும் வண ங்குபவன் மேலான மோக்ஷத்தையுமடைவான். பலவிதநூல்களிலுஞ் சொல்

லிய பரிசுத்தங்களுக்கெல்லாம் மேலான பரிசுத்தனுமாவான். இன்னும் சிவனிடத்தன்பில்லாத பாபியாரலும் அதில்முழுகினேன் சுவர்க்கத்தையடைவான். அன்புள்ளவனுய்முழ்கித் தேவர்முதலாயினேர்க்குபிரீதியாகியஅரிசி-எள்ளுதருப்பணம் இவைகள் பொருந்தச் செய்தவன் அன்புடனே எல்லாவேள்விகளுஞ்செய்த பலனடைவான் இன்னும் இந்தஞானதீர்த்தத்தில்முழ்கிக்கரையில் இருந்து செய்கிறவிரதம், பூசை, தானம், தருமம், ஓமம், தவம், செபம், தியானங்கள் மற்ற தீர்த்தக்கரையில் இருந்து செய்கிற இவைகளுக்குக் கோடிபங்கதிகமாகும். இன்னும் ஜென்மநக்ஷத்திரத்தில் அந்தத்தீர்த்தத்தில் முழ்கினல் இனிவரும் பிறவிப்பிணியொழியும். சித்திரை-கார்த்திகை மாசி ஆகியமாதங்களில் இதில் முழ்கிப் பிதுர்க்களுக்குப் பிண்டங்கொடுத்தவர் தாங்கள் முழ்கிக்கிடக்கிற பிறவிக்கடலி னின்றுங் கரையேறுவர். பின்னும் அதில்முழுகி பிதுர்க்களது மநமாசுதீரச் செய்யத்தக்ககடனைச் செய்தவர்கள் எத்தனை எள்ளுத்தானம் பண்ணினலும் ஒவ்வோரெள்ளுக்கு ஆயிரம் வருஷமாக அத்தனை யெள்ளுக்கும் அத்தனை ஆயிரம்வருஷம் அவர்களை விண்ணுளவைப்பாராவார்.

இன்னும் மூன்றுலோகத்திலுமுள்ள தீர்த்தங்க ளெல்லாம் ஆதிதீர்த்தமென்னுங்காரணத்தால் வணங்கத்தக்க இந்தத் தீர்த்தத்தில் எக்காலமும்முழ்கி அந்தத்தீர்த்தத்திலே எக்காலமுஞ் சிவனைப்பூசிப்பார்கள். இந்தப்பிறவிக்கடலைக் கடந்து மோக்ஷக்கரையைச்சேருவார்கள். இன்னும்விடக்கூடாத நித்திய வேள்வியும், டொரியவிரதங்களும், தானங்களும், தவங்களும், தருமபலன்களும் எல்லாம் இந்தத்தீர்த்தக்கரையிலிருந்து சிவார்ச்சனைபண்ணுவோருக்குகொடுக்கும் புண்ணியத்தில் கோடியிலொன்றுக்குமொப்பாகா இன்னும் முற்பிறப்பில் பிறவிகள் தோறும் நியமமாக நல்லொழுக்கத்தைக் கொண்டு மெய்யான விரதமும், தானமும், தவமுஞ்செய்து பரிசுத்தாய்செவ்வையான நல்வழியிலேநின்ற சித்தருக்கே அல்லாமல் இப்பிறப்பிற்சென்றுநித்தியம் ஸ்நானஞ்செய்ய இந்தத்தீர்த்தங்கிட்டாது. இன்னும் அமாவாசித்தினமும், மாதப்பிறப்பும், கிரகண புண்ணியகாலமும், விதிபாதயோகமும் ஆகிய இந்தநாள்களில் இவைகள் புண்ணியகாலமென்று கருதி முழ்கி துதிகளும், தருப்பணங்களும், தானங்களும் செய்தல், வேதம் ஓதுதல் ஆகிய இவைகளின்தொகை ஒன்றிற்கொன்று அதிகபலன் அம்முறைமைப்படி நூறு யிர நூறுயிரம் ஓரந்தமாகும் இன்னும் சித்திரை ஐப்பசி இம்மாதப்பிரவேசகாலத்தில் இதில் முழ்கினல் ஒருபதினுயிரம்பங்கதிகமாம். ஆடி-தை இம்மாதப் பிரவேசங்களில் முழ்கினல் இருபதினுயிரம் பங்கதிகமாம். சோமவாரத்தில் அமாவாசிவருவது தெரிந்து முழ்கி வேதமோதுதல் முதலியவற்றைச்செய்தால் அளவில்லாத பங்கதிகமாகும். இன்னும் பிரயாகையில் தைமாதமுப்பதும் முழுகிப் பெறுகிறபலன் இதிலொருநாள் முழுகுகிறவன் பெறுவான். இன்னும் விரதசீலத்தைக்கொண்டு விடாமல் ஒருவருஷம் இதில் முழுகி அங்கயற்கண்ணியையும் சோமசுந்தரக்கடவுளையும் பூசிப்பார்களானல் மலடிக்கும் நல்ல பிள்ளைப்பேறுண்டாகும் இன்னும் எட்டுத்திக்கிலு முள்ள ஆறு குளங்களாகிய தீர்த்தங்களெல்லாம் இந்தத்தீர்த்தத்தில் கோடியிலொ

ருபங்கு ஒப்பாகா. இதைக்கண்டால் தருமம், தொட்டால், அர்த்தம், அள் ளினல்காமம், முழுகினல்மோகூடம் உண்டாகும். ஆதலால் அந்தப் பரமசிவ ன் பெயரிட்ட காரணங்களையல்லாமல் இன்னமும் இந்தப் பரிசுத்தமான தீர் த்தத்திற்குப் பெயர்கள் சுவாமிசடையிலிருக்கிற கங்காசலங் கலந்ததனலே சிவகங்கையென்று எல்லாத் தீர்த்தங்களுக்கும் உத்தமமாய் விளங்குதலினு லே உத்தமதீர்த்தமென்றும் பொன்னிறமான தாமரை மலர்ந்ததனலே பொ ற்றுமரையென்றும் பாடமென்கிற விறகுக்கு அக்கினியாகி தருமத்தைக்கொ டுப்பதினலே தருமதீர்த்தமென்றும், அருத்தைத்தருதலினலே அருத்ததீர் த்தம் என்றும் காமத்தையீவதினலே காமதீர்த்தமென்றும். மோகூத்தை யருளுவதினலே மோகூதீர்த்தமென்றும் விளங்கும் இன்னும் இந்தத் தல விசேடமும் தீர்த்தவிசேடமும் சொல்லக்கேட்டவர்கள் போகமும் மோகூ மும் பெறுவார்கள்.

தீர்த்தவிசேடம்

முற்றிற்று.

———

சிவமயம்.

மூர்த்திவிசேடம்.



அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஆலவாயலர்ந்தசெம்பொனம்புயபெருந்தீர்த்தத்தின்
மேலவாம்பெருமைதன்னைவிளம்புவாரெவரேயங்க
ணீலமாமிடற்றுமூக்கணிராமபனறிவானந்த
மூலமாவிலிங்கமேன்மைமுறையிலுலறையலுற்றும்.

இதன்பொருள்.

திருவாலவாயில் மலர்ந்த பொற்றுமரைத் தீர்த்தத்தின் மேலாகிய பெருமையை யெல்லாம் சொல்லத்தக்கவர்கள் யார் அந்தத் திருவாலவாயில் வீற்றிராநின்ற காளகண்டத்தையும், திரிநேத்திரங்களையும் உடையவனும் நிராமயனுகிய சோமசுந்தரக்கடவுளுடைய ஞானனந்தமயமாகிய பெருமை பொருந்திய மூலவிலிங்கத்தின் மேன்மையையு முறையிலுல் சொல்லு கிறேம்.

மஹாமேருவும், வெள்ளிமலையும், மந்தரமும், கேதாரமும், காசியும் முதலிய தலங்களில் பராபரமான விலிங்கங்கள் உண்டாகுமுன்னே இந்தக் கடம்ப விருக்ஷத்தினடியிலே யுண்டாகிய இந்தச் சிவலிங்கம். அந்தத் தலங் களிலுள்ள இலிங்கங்களெல்லாம் பின்பு அருட்குறியாகிய இதினின்று கிளை கள்போல உண்டாயின, இந்த விரண்டு காரணத்தினுலும் இந்தத் திவ்விய மான விலிங்கம் மூலவிலிங்கமென்று பெயராய்ப் பிரகாசிக்கும், இந்த மகா லிங்கத்தில் மூப்பத்திரண் டிலக்கணமுமுள்ள மந்திரஸ்வரூபியான அழி யாத அழகையுடையவன் இடப்பாகத்தில் உமையவளுடனே கூடி யழகா யெப்போதும் விளங்குகின்ற பெருமையைக்கண்டு சோமசுந்திரப் பெருமா னென்று தேவர்கள் அழகிய திருநாமம் வைத்தார்கள்.

உலகமெல்லாம் வியாபியாய் சிறந்து விளங்குகின்றவன் அறப்பெருங் கடவுளாகிய சோமசுந்தரனுதலாலே அரிமர்த்தனபாண்டியன் கைப்பிரம்பா லடித்த அடித்தழும்பு திரிலோகமும் படலாயிற்று என்று சொல்லலாகி சம வஷ்டிரூபமான சோமசுந்தரனைத் தரிசித்தவர்கள் மற்றத்தலங்களிலுள்ள விய வஷ்டிலிங்கங்களைத் தரிசித்த பலனைப்பெறுவார்கள். எப்படியென்றுல், வேரி லேகொட்டியஜலம் மரத்தின் கிளைகளெல்லாஞ் சென்று தழைக்கச்செய் வதுபோலாகும், அந்தப்பரமசிவன் இந்தத்தலத்திலே யல்லாமல் எந்தத்தல ங்களிலும் அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்ததில்லை ஆதலால்அவனு க்குச் சமானமும், அதிகமும், ஆனசிறப்பும்பெற்ற உத்தமன் எந்தவுலகினு மில்லை, அவனதிகமான தெப்படியென்றுல் மலைகளில் சிறந்தது மகாமேரு விருக்ஷங்களிற் சிறந்தது கற்பகவிருக்ஷம் யாகங்களிற் சிறந்தது அஸ்வமேத யாகம் தானங்களிற் சிறந்தது அன்னதானம், தனிதர்களிற் சிறந்தவர்கள் ஆதிசைவப்பிராமணர்கள், தெய்வங்களிற் சிறந்தவன் சந்திரசேகரன், விரத

ங்களிற் சிறந்தது சோமவாரவிரதம். மந்திரங்களிற்சிறந்தது ஸ்ரீபஞ்சாக்ஷர மந்திரம். மணிகளிற்சிறந்தது சிந்தாமணி. தருமங்களிற்சிறந்தது சிவதருமம் சற்பாதிரங்களிற் சிறந்தவர்கள் சிவனடியார்கள். பசுக்களிற்சிறந்தது காமதேனு தீர்த்தங்களிற் சிறந்தது பொற்றுமரைத் தீர்த்தம்போல இலிங்கங்களிற் சிறந்தது சோமசுந்தரவிலிங்கமே முதலும் முடிவுமில்லாதவனு மெங்கு நிறைந்தவனு மெல்லார்க்கும் பிறப்பும் வீடுந் தருகிற பராபரச்சோதினானே தன்னை வணங்குவோர்க்கு இகபர போகமோக்ஷங்களை யருளுதற்கு இந்தச் சோமசுந்தரனுகிய இலிங்கத்திலே வேதங்கள்போற்ற எழுந்தருளியிருப்பான். இந்தச் சுயம்புலிங்கத்தை அதின்வேறுகிய விலிங்கங்களெல்லாந் தினந்தோறுந் தரிசித்துச் செல்லத்தக்க நிருமலசோதியான பெருமையினாலே இந்த வுத்தமலிங்கத்தைத் தெரிசித்தவர்கள் வாக்கு மனமும் ஒடுங்க தம்முள்ளே களங்கமற விளங்குகின்ற சிவபரஞ்சோதிபைத் தரிசித்தவராவார்கள். இன்னமும் இந்த ஒப்பற்ற சுயம்புவைநேரேகண்டு வணங்கினவர்கள் பாவங்களெல்லாம் நெருப்புபொறிபட்ட பஞ்சுபோலவும், கோபமகற்றிய தவம்போலவும், நல்லமருந்துதின்ன வியாதிபோலவும், உலோபகுண முண்டாக உத்தம குணம்போலவும், சூரியனுதயமாக இருள்போலவும், பெருங்காற்று வீச மேகங்களைபோலவும், சிங்கங்கோபிக்க யானைபோலவும், வச்சிராயுதந்தாக்க மலைகள்போலவும, காமந்தோன்ற புத்திபோலவும், சிவஞானந் தோன்ற அஞ்ஞானம்போலவும், கருடன்சீறப் பாம்புபோலவும், செருக்குத் தோன்ற கல்விபோலவுமெடும். ஜீவன்முத்தி புரேசனை காலையில் தரிசித்தால் நான்குகடலாலுஞ் சூழபபட்ட உலகமெல்லாம் தானஞ்செய்தபலனுண்டாகும் மத்தியானத்தில் தரிசித்தால் சற்பாத்திரத்தில் ஆயிரங் கபிலப்பசுத் தானம் பண்ணின பலனுண்டாகும். மாலையில் தரிசித்தால் கோடி பசுத்தானபலன் உண்டாகும். அர்த்தசாமத்தில் தரிசித்தால் அஸ்வமேத பலனுண்டாகும். இப்படிப்பட்ட அதிக பலனுண்டாவது தெரிந்து சமஷ்டி விச்சாபுரேசனை காலையுச்சி மாலை யர்த்தசாமம் ஆகிய காலங்களெல்லாம் வணங்கித் துதித்துப் பூசிக்கிற அன்பான பரிசுத்த சீலர்கள் சஞ்சித பாபங்களெல்லாந் தீர்ந்து நிர்மலசித்தராய் கெடாத சிவஞானத்துடனே ஐஸ்வரியமும் பெருக போராநந்தத்தில் மூழ்கி ஆணவகன்மிய மாயைகளை நீக்கி பரமசிவனுடைய திருவடி நிழற்கீழ் வாழ்வார்கள் தருமஸ்வரூபியாகிய திருவாலவாயானுடைய திருநாமத்தைக் காதாற்கேட்டால் பத்துப்பிறவிகளிற் செய்த பாவங்கள் போம். நினைந்தால் நூறுபிறவிகளிற் செய்த பாவநோய் நீங்கும். ஆலவாய்ப் பெருமானை வணங்குவோமென்று வீட்டினின்றும் வெளியேவந்தால் ஆயிரம் பிறவிகளிற் செய்த தீராத பாவங்களெல்லாந்தீரும். அப்பெருமானைத் தரிசித்தவர்கள் ஆயிரம் அஸ்வமேதபாகபலனைப் பெறுவார்கள். உருத்திரசூக்கம் என்னுமந்திரத்தால் தவத்தையுடைய தேவர்கள், தொழுதற்கரிய நாயகனைத் துதித்தவர்கள் ஒருகணத்திற்கு ஆயிரம் இராயசூயயாகஞ் செய்த பலனைப்பெறுவார்கள். இன்னும் சமஷ்டிவடிவாகிய அந்த விலிங்கத்தை குடங்கையளவாகிய நீரால் அபிஷேகஞ்செய்து பூசித்தவர்கள் மற்றத்தலங்களிலுள்ள லிங்கங்களையெல்லாம் சைவாகமத்திற் சொன்னபடியே சோடசோபசாரமும்

வழுவாமல் அபிஷேகஞ்செய்து பூசித்த பலனைப் பெறுவார்கள். இன்னும் அவ்வாலவாய்ச் சுந்தரனை அப்படியே பஞ்சாமிர்தம்-பஞ்சகௌவியம்-தேன்-பழம்-சந்தனம் முதலிய மடடித்துக்குளிர வாசனைத்திருமஞ்சனத்தாலபிஷேகஞ்செய்து விதிப்படி பூசித்தவர்கள் பாபங்களெல்லாந் தீர்ந்து தர்மார்த்த காமமோக்ஷங்களைப் பெற்று வாழ்வார்கள் இன்னும் சோடசோபசாரத்திலும் வாசனைத் திருமஞ்சனத்தால் அபிஷேகஞ்செய்ப வல்லபர்கள் நூறுயிரம் அஸ்வமேதயாகஞ்செய்த பலனைப் பெறுவார்கள். இன்னும்வாச மிகுந்த கஸ்தூரி மிருதுவாகிய குங்குமம் சந்தனமுதலிய மட்டித்தவர்கள் தேவரம்பைகளுடனே வாசக்கலவைகள் பூசிக்கொண்டு இன்பத்தின் மூழ்கிவாழ்வார்கள். நல்லவொருபுஷ்பத்தை அத்திருவாலவாயான் திருமுடிமேல் அருச்சித்தால் அன்னியதலங்களில் நூறு சுவர்ணபுஷ்பத்தால் அருச்சித்த பலனைப் பெறுவார்கள். அச்சுந்தர்க்கு ஒருதரம் தூபங்கொடுப்பவர்கள் தாங்கள் மநோவாக்குக் காயங்களால் தெரிந்துசெய்த குற்றங்கள் ஆயிரமும்பொறுத்தருளுவான். திருவமுது நைவேதிப்போர் அவிழொன்றற்குயுகமொன்றுக சிவலோகத்தை யடைந்து நிறைந்தபோகத்துடன் வாழ்வார்கள். தாம்பூல முகவாசங்கொடுத்தவர்கள் நூறுகோடி தேவவருஷம் சிவலோகத்தில் வாழ்வார்கள் ஒரு கற்பூரதீபங் கொடுப்பவர்கள் சிவன் சாரூபத்தைப் பெறுவார்கள். திருமஞ்சனமெடுக்கக் குடமும், மொண்டு அபிஷேகஞ்செய்யக்கலசமும், வாசப்புகைகொடுக்கத் தூபக்காலும் தீபக்காலும், மணியும் முதலியவைகளைக் கொடுப்பவர் செய்த பாவத்தை நீறுக்கி பேரின்பக்கடலுண் மூழ்குவார்கள். சோமசுந்தரக்கடவுள் சந்நிதிமுன்னர் பலவாத்தியங்களு மொலிக்க ஆடல்பாடல் செய்விப்பவர்கள் செல்வக்களிப்பை யடைந்து மேகம்போல் பலவாத்தியங்க ளொலிக்க திரிலோகங்களும் வணங்க தேவரம்பைகளாடக் கண்டு இராஜபோகத்தைப் பெறுவார்கள். ஒருதரம் அஷ்டாங்கத்துடனுவது பஞ்சாங்கத்துடனுவது வணங்குவோர் தனதாரு செங்கோல்செலுத்தி அரசர்கள் வணங்க இருப்பார்கள். சந்நிதிமுன்செய்யும் ஓமம்-தவம்-மந்திரம்-தானம் இவைகள் அணுவளவாயினும் மேருவளவாகும். ஆதலால் இவ்விலிங்கத்தின் பெருமையை யாராலே சொல்லிமுடியும் என்னற்றெரிந்தவளவு சிறிதுசொன்னேன். இந்தத் தலத்துக்கொப்பான வொருதலமும் இந்தத்தீர்த்தத்துக் கொப்பான ஒருதீர்த்தமும் இந்த விலிங்கமூர்த்திக் கொப்பான வொருமூர்த்தியும் திரிலோகத்தினுமில்லை இனி அந்தமூர்த்தித் திருநாமங்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

கருப்பூரசுந்தரன், கடம்பவனசுந்தரன், கலியாணசுந்தரன், அபிராமசுந்தரன், சண்பகசுந்தரன், மகுடசுந்தரன், மான்மதசுந்தரன், பழியஞ்சுசுந்தரன், சோமசுந்தரன், ஆலவாய்ச்சுந்தரன், நான்மாடக்கூடல் நாயகன், மதுராபுரேசன், சமஷ்டி விச்சாபுரநாதன், ஜீவன்முத்திபுரநாதன், பூவுலக சிவலோகாதிபன், கண்ணிபுரேசன், மூலவிலிங்கம் என்றுசொல்லப்படும். இன்னுமந்த விலிங்கத்துக்கநேகந் திருநாமங்களுண்டு கீழேழுலகமு முருவ முளைத்தெழுந்த அந்தவிலிங்கஸ்வரூபமே ஆதாரமாகவமர்ந்து அறுபத்துநான்கு திருவிளையாட்டல்செய்த சச்சிதானந்த ஸ்வரூபனது பெருமையை எங்களாசாரி

யனுகிய முருகக்கடவுள் சொன்னபடியே சொன்னேனென்று அகத்தியர் சொல்லக்கேட்ட முனிவர்கள் ஐயா கிருபைக்கடலே! அக்கடவுள் திருவிளையாடல் அறுபத்துநான்கென்றீர் அவ்விளையாடல்கள் யாவர் நிமித்தமாக எந்தக்காலங்களில் செய்யப்பட்டன. அவைகளெல்லாம் எங்களுக்குத் தெரியக் கிரமப்படி சொல்லவேண்டுமென்று கைகுவித்துத் தோத்திரஞ் செய்து பிரார்த்திக்க அகத்தியமுனிவர் சொல்லதொடங்கினர்.

மூர்த்தி விசேடம்

மூற்றிற்று.

பதிகம்.

தேவேந்திரனுடைய பழியைத்தீர்த்த திருவிளையாடலும், வெள்ளையானையின் சாபத்தை யொழித்த திருவிளையாடலும், பாண்டியராசன் காடுவெட்டி நகரமுண்டாக்கிய திருவிளையாடலும், மீனாட்சியான தடாதகைப்பிராட்டியார் வேள்வித்தீயினிடமாகத் திருவவதாரஞ் செய்து பூமியாண்ட திருவிளையாடலும், பரமசிவன் அந்தத் தடாதகைப் பிராட்டியைத் திருமணங்கொண்டருளி முடிசூண்டு பூபாலனஞ்செய்த பெருமை பொருந்திய திருவிளையாடலும், வியாக்கிரபாத முனிவரும், ஆதிசேஷாவதாரமாகிய பதஞ்சலி முனிவரும் வணங்க வெள்ளியம்பலத்தில் நடனஞ்செய்த திருவிளையாடலும், பலம்பொருந்திய தோள்களையும் ஆழ்ந்த வயிற்றினையுமுடைய ஒருபூதத்துக்கு அன்னமலையைத்தந்தருளிய திருவிளையாடலும், பின்னும்வருத்துகின்ற பசிநோயானது கெடும்படி அப்பூதத்துக்கு அன்னக்குழி அழைத்துக்கொடுத்துத் தண்ணீர்த் தாகத்துக்காக அலைகின்ற நீரையுடைய வையைநதியை அழைப்பித்து உண்பித்த திருவிளையாடலும், காஞ்சனமாலைக்காக ஏழுகடலையும் அழைத்த திருவிளையாடலும் தேவேந்திரனுடைய ஆசனத்திலிருந்த மலயத்துவசபாண்டியனை மறுபடி பூமியில்வரும்படி அழைத்த திருவிளையாடலும் சௌந்தரியத்தையுடைய உக்கிரகுமாரன் திருவவதாரஞ்செய்த திருவிளையாடலும், வளைதடி பிரகாசமொருந்திய வேலாயுதம் சண்டனென்னும் இவைகளைத் தன்பிதாவினிடத்தில் உக்கிரகுமாரன் பெற்றுக்கொண்ட திருவிளையாடலும், அவன் அந்தவடிவேலைச் சமுத்திரத்தின் பெருமைகெடும்படிவிட்ட திருவிளையாடலும், பின்னும் அவ்வரசன் தேவேந்திரனுடைய மகுடத்தை வளைதடியெறிந்து அழித்த திருவிளையாடலும், பொன்மலையாகிய மகமேருவை உக்கிரகுமாரன் சண்டினால் அடித்து நிதியெடுத்த திருவிளையாடலும், முனிவர்களுக்குச் சோமசுந்தரக்கடவுள் சொல்லுதற்கரிய வேதப்பொருளை உபதேசஞ் செய்தருளிய திருவிளையாடலும், மாணிக்கம் விற்ற திருவிளையாடலும், பழமையாகிய மதுரை நகரத்தின்மேல் வருணன் செலுத்திய சமுத்திரநீர் வற்றும்படி தொலைத்த திருவிளையாடலும், அந்த ஒப்பற்ற பழமையாகிய மதுரையானது நான்மாடக்கூடனகரான திருவிளை

யாடலும், வட்டமாகக் கட்டப்பட்ட சடையையுடைய சித்தமூர்த்தியானவர் விளையாடியதாகிய ஒப்பற்ற திருவிளையாடலும், கையில் மழுவைத் தரித்த சோமசுந்தரக் கடவுளாகிய அந்தச் சித்தமூர்த்தியானவர் கல்லானைகரும்புதின்னக் காட்டிய திருவிளையாடலும், உள்ளத்திற் பொருந்திய வஞ்சனையிலை சமணர்கள் விட்ட யானையைக்கொன்ற திருவிளையாடலும், அன்பு கொண்ட கௌரியினிடத்தில் விருத்தனுங் குமாரனும் பாலனுமான திருவிளையாடலும், சிவந்த நிறமுள்ளதாகிய கான்மாறியாடிய திருவிளையாடலும், பழியஞ்சிய திருவிளையாடலும், தாயை மயக்கத்திறற் சேர்ந்த புத்திரனுடைய பாதகத்தை நீக்கிய திருவிளையாடலும், மதிக்காமல் குருவின்பத்தினியை விரும்பிய சீஷனை வாள்சண்டையிற்கொன்ற திருவிளையாடலும், பொய்யை மேற்கொண்ட சமணர்கள் விடுத்த படத்தையுடைய நாகமெய்த திருவிளையாடலும், அவர்கள் விடுத்த பசுவைக்கொன்ற திருவிளையாடலும், தருமவிடையே குதிரையாகச் செலுத்தி மெய்க்காட்டிட்ட திருவிளையாடலும், ஆண்சுரூவைக் காட்டுகின்ற கொடியையுடைய பாண்டியராஜனுக்கு உலவாக்கிழிகொடுத்தருளிய திருவிளையாடலும், வணிகருடைய தேன்பொருந்திய மலரணிந்த குழலையுடைய மாதர்கள் மனதைக் கவர்ந்து வளையல்விற்ற திருவிளையாடலும், பகைக்காநின்ற வீரமுள்ள வேல்போன்ற கண்களையுடைய மாதர்களுக்கு அட்டமாசித்தி யுபதேசித்த திருவிளையாடலும், ஒரு சோழராஜன் பொருட்டுத் திருமதில்வாயிலைத் திறந்துமூடி விடையிலச்சினைவைத்த திருவிளையாடலும், ஒருசோழராஜன் நிலையானபகைகொண்டு போர்செய்ய அந்தப் போர்க்களத்தில் பாண்டியராஜன் பொருட்டுத் தண்ணீர்ப்பந்தல்வைத்த திருவிளையாடலும், பொன்னனையாள் பொருட்டு இரசவாதத் தொழில்செய்த திருவிளையாடலும், காவிரிப்பூம்பட்டினத்துக்கு அரசனுகிய சோழராஜனை மடுவில் தள்ளிப் பாண்டியனுக்கு வீரவெற்றி யருளிச்செய்த திருவிளையாடலும், மனத்துயரங்கெட உலவாக்கோட்டையை அடியவர்பொருட்டு ஒருவேளாளனுக் கருளிச்செய்த திருவிளையாடலும், மாமனுகத் திருவருள் வடிவங்கொண்டுவந்து வழக்குரைத்து ஒருவணிகனுக்குப் பொருள் கொடுத்தருளிய திருவிளையாடலும், முனிவும் ஒளியுந் தங்கிய வேலாயுதத்தையுடைய வரகுணபாண்டியற்குச் சிவலோகங்காட்டியருளிய திருவிளையாடலும், யாழ்ப்பாணருக்கு அடிமையென்று திருமுடிமேல் விறகு சுமந்து பகைதணிபச்செய்த திருவிளையாடலும், அந்த யாழ்ப்பாணருக்குச் சோழராஜனிடத்திற் செல்லும்படி திருமுகங்கொடுத்துப் பொருள் கொடுப்பித்த திருவிளையாடலும், அந்த யாழ்ப்பாணர் யாழ்வாசிக்க மழைபெய்துகொண்டிருக்கும் அர்த்தராத்திரியில் பொற்பலகை யருளிச்செய்த திருவிளையாடலும் அந்தயாழ்ப்பாணர் மனைவிக்குநேரிட்ட இசைப்பகையை வெல்ல ராஜசபையிலடைந்த திருவிளையாடலும், அந்தயாழ்ப்பாணருக்கு அடிமையாகவேடங்கொண்ட சோமசுந்தரக்கடவுள் பன்றியாகிப் பால்கொடுத்துப் பன்றிக்குட்டிகளின் உயிரைக் காப்பாற்றிய திருவிளையாடலும் வெற்றிபொருந்திய பன்றிக்குட்டிகளை மந்திரிகளாகச்செய்த திருவிளையாடலும், கருக்குருவிக்குவலியுண்டாகும்படி உபதேசஞ்செய்ததிருவிளையாடலும், நாரைக்குத்

தயவுடனே திருபாதோக்கம்வைத்து அருளாகிய முத்தியை பருளிச்செய்த திருவிளையாடலும், கூடல்நகரத்தைச் சித்தராகிய சோமசுந்தரக் கடவுளு டைய் திருக்கரத்திலணிந்த கங்கணமாகிய நாகம்போய் வளைந்து திருவால வாயாக்கிவந்த திருவிளையாடலும், சுந்திரனென்று பேரெழுதிய கூர்மையா ன பாணத்தைப் பிரயோகஞ்செய்து சோழனுடைய யுத்தத்தைத் தொலை த்த திருவிளையாடலும், சங்கப்புலவருக்கு அழகிய பொற்பலகையை அரு ளிய திருவிளையாடலும், கவிபாடித் தருமிக்குப் பொருள் கொடுப்பித்த தி ருவிளையாடலும், புகைகொண்ட நக்கீரருக்குக் கரையேற்றம் அருள்செய்த திருவிளையாடலும், அகஸ்தியமுனிவரால் நக்கீரர் இயற்றமிழ் தெரியும்படி அனுப்பிய திருவிளையாடலும், ஊமையாகிய ஒருபுத்திரனுல் சங்கப்புலவரு டைய கலகத்தை நீக்கிய திருவிளையாடலும், கொன்றமாலையணிந்த சோம சுந்தரக் கடவுளானவர் இடைக்காட்டுத் தேவருடன்சென்று வடவாலவா யில் வீற்றிருந்த திருவிளையாடலும், சமுத்திரத்தில் வலைவீசி மலர்கள்பொ ருந்திய வகுந்துதிருத்திய அளகத்தையுடைய உமையவளை விவாகஞ்செய்த திருவிளையாடலும், திருவாதவூரில் திருவவதாரஞ்செய்த பரிசுத்தமுள்ளவ ராகிய மாணிக்கவாசக சுவாமிகளுக்குவாசனைபொருந்தியகாலத்தில்மலர்ந்த செந்தாமரைமலரையொத்த திருவடிகளை முடியிற் சூட்டுதலாகிய திருவடி தீக்ஷைசெய்து உபதேசஞ்செய்த திருவிளையாடலும், நரிகளைக் குதிரையாக் கிய திருவிளையாடலும், குதிரைகளை நரிகளாகிய திருவிளையாடலும், சர்ப் பாபரணம்பூண்ட சோமசுந்தரக் கடவுளானவர் தம்முடைய அருமைத்திரு மேனியின்மேல் பிரம்படியைத்தாங்கி மண்சுமந்த திருவிளையாடலும், பாண் டியனைத் தீப்போல் வருத்துகின்ற கொடிய சுரநோயைத் தணித்த திருவிளை யாடலும், சமணர்களைக் கழுவிலேற்றிய திருவிளையாடலும், சாக்ஷியாகவன் னிமரம்-கிணறு-இலிங்கம்-இம்மூன்றையும் அழைத்து ஒரு வணிகமாதைக் காத்த திருவிளையாடலும் என்று தொகையால் அறுபத்துநான்கு திருவிளை யாடல்களாம். முடிவில்லாத விளக்கூட்டஞ் சேர்தற்கு மார்க்கமாகிய அஞ் ஞானநீங்கிய முனிவர்களே! எக்காலத்தி லெவர்பொருட்டாகச் செய்தரு ளியதென நீங்கள் கேட்டபடியினல் மேற்சொல்லிய கிரமமாகவே இந்தத் திருவிளையாடல்களை விரித்துச் சொல்லுகிறேனென்று மனதிலுண்டாகிய அன்பென்னும் தெள்ளமானது மடையுடைந்து பரவத்தக்கதாகச்சோமசு ந்தரக் கடவுளுடைய திருவடிகளைத் தியானித்து அளவில்லாத ஆனந்தம் மேலிடச் சொல்லுகின்றார்.

பதிகம் முற்றிற்று.

உ

சிவமயம்.

மூதலாவது
இந்திரன் பழிதீர்த்தபடலம்.


அறுசீராடியாசிரியவிருத்தம்.

மின்படியில்குவிசுப்புத்தேள் விருத்திராசுரனைக்கொன்ற
வன்பழிவிடாதுபற்றக் கடம்பமாவனைத்திலெய்தி
யென்பரவாரம்பூண்ட விறைவனையருச்சித்தேத்திப்
பின்பதுகழிந்துபெற்ற பேற்றினையெடுத்துச்சொல்வாம்.

இதன்பொருள்.

பிரகாசம் பொருந்திய வச்சிராயுதத்தைபுடைய தேவேந்திரனை வன் விருத்திராசுரனைக்கொன்ற வலியபழியானது விடாமற்பற்ற அது தீரு ம்படி பெருமைபொருந்திய கடம்பவனத்திற் சென்று எலும்புகளும் சர்ப்ப ங்களுமாகிய ஆபரணங்கள் அணிந்த சோமசுந்தரக்கடவுளை அருச்சித்துத் துதிசெய்து பின்பு அந்தப்பழியை நீங்கித்தேவேந்திரன் பெற்றவரத்தினை எடுத்துச் சொல்லுகிறேம்.

கிரேதாயுகத்தில் இந்திராணி மணாளனாகிய தேவேந்திரன் பஞ்சதரு வினீழலிலே சிங்காசனத்திலிருந்து அரம்பை முதலானவர்களது ஆடலினும் பாடலினும் ஆசைகொண்டு பார்த்துங்கேட்டும் சந்தோஷசாகரத்தில் மூழ்கி யிருக்கும்போது அவ்விடத்தில் சர்ப்பங்களை ஆபரணமாகத் தரித்த சிவபெ ருமானேயென்று சொல்லத்தக்க தம்முடைய ஆசாரியனாகிய வியாழபகவா ன் எழுந்தருள அவரைக்கண்டு வணங்காமல் அந்த அரம்பை முதலானவர் கள்மோகத்தில் மூழ்கியிருப்பதைக்கண்டு அந்த வியாழபகவான் போய்விட, பின்பு இந்திரனுடைய செல்வம் சிறிதுகுறைய அதுதெரிந்த இந்திரன் நம து ஆசாரியனைக் கண்டும் வணங்காத குற்றத்தினாலே இப்படிப்பட்ட கேடு வந்ததென்று துக்கித்து அவரிருப்பிடத்திற்போய்ப் பார்த்துங் காணதவனை ப் மூன்றுலோகங்களுந்தேடி ஆசாரியர் எங்கே போயிருப்பானென்று சந்தே கித்த மனத்தோடு பிரமலோகம்போய்த் தேடியுங்காணமல் பிரமாவை வணங்கித்துதித்து நடந்தசெய்திகளைச் சொல்லக்கேட்டு பிரமதேவன் ஆசா ரியனை யிகழ்ந்தபாவம் கொழுந்துவிட்டு வளர்ந்து பீடிக்கவருவதுள்ளேதெ ரிந்து ஆசாரியனைக் காணுமளவும் நீதுவட்டா புத்திரனாகிய மூன்று தலையை யுடைய விச்சுவவுருவனென்பவன் அசுரனாலும், செய்கையினாலும், அறிவி னாலும், சிறந்தவனை யிருத்தலால் அவனைக்குருவாகக்கொண்டு உன்காரியங்க ளைநடத்திக்கொள்ளென, அந்தப்பிரமாவின் வஞ்சனையையறியாமல் அவரை வணங்கி மீண்டுவந்து மிகுந்த பக்தியுடனே அந்த விச்சுவவுருவனைக் குருவா கக்கொண்டு அவன் செய்யும் வஞ்சனைகளறியாமல் சுவாமீ! ஒருயாகஞ்செய்ய



வேண்டு மென்று அவனைக்கொண்டு செய்ய அவன் தேவர்களுக்கு நன்மை யுண்டுபண்ணுவதாக வெளியிற் சொல்லி உள்ளேகபடமாய் அசுரர்களுக்கு நன்மைவரும்படி தனக்குக் கேடுவருவது தெரியாமல் யாகஞ் செய்ய அவன் மனத்திலொன்றும் வாக்கிலொன்றுமாகச் செய்கிறதை அவன்சொல்லும் மந் திரங்களாலே தெரிந்து கோபங்கொண்டு தன் வச்சிராயுதத்தினாலே அவன் மூன்று தலைகளையுமுடைத்துத் தனித்தனி சுழுகும், பருந்தும், காகமுமா கப் பறந்துபோகச் செய்து அவனிரதத்தைப் பைசாசங்கள் குடிக்கும்படி செய்தான். அப்போது விசுவில் பிரமஹத்தி கோபித்து வந்து இந்திரனைப் பற்றுமளவில் அந்தப்பிரமஹத்தி நீங்கும்படி தேவர்கள் வேண்டி ஸ்திரிகள் மேலும், ஜலத்தின்மேலும், மரத்தின்மேலும், மண்ணின்மேலும் சாரும்படி செய்ய அந்தப் பிரமஹத்தியை யேற்றுக்கொள்கிற நால்வரும் எங்களுக்கு இது விமோசனமாவது எபபடி பென்ன? பெண்களுக்கு மாதவிடாயாயும், நீருக்கு நுரையாயும், மரத்துக்குபபிசினுபுட, மண்ணுக்கு உவர்ப்பாயும் கழி யக்கடவதென்ன, அந்த நால்வரும் இப்படிக் கழித்துக்கொண் டிருப்பதி னாலே எங்களுக்கு என்னபிரயோசனமுண்டாகுமென்ன? பெண்கள்கர்ப்பமு ண்டாகிப் பெருமளவும் கணவனைக்கூடி வாழவும், நீர் இறைக்க இறைக்க ஊரிப்பெருகவும், மரம் வெட்டவெட்டத் தழைக்கவும், மண்தோண்டினகுழி தானே மூடுபடவும் ஆக இந்த நன்மைகளைக் கொடுத்தபின்பு இந்திரன் தன க்குச்சம்பவித்த பெரும்பழிதீர்ந்து விளங்குகிறது தெரிந்து துவட்டாவான வன் தனது குமாரனை இந்திரன் வச்சிராயுதத்தாலெறிந்து கொன்றானேயெ ன்று கோபங்கொண்டு பெருமூச்சுவிட்டு நாணங் கொண்டவனுப்ப பழிக்குப் பழிவாங்க நினைத்து ஒருகொடிய வேள்வியைச் செய்ய அந்த வேள்விக்குண் டத்தில் அக்கினிச்சுவாலைபோற் றோன்றுகிற செம்மயிர் அண்டமுகட்டைப் பொருந்த புகைதோன்றப் பெருமூச்செறிந்து கண்களிலே கோபாக்கினி சிந்த அர்த்தசந்திரன்போலும் கோரைப்பல்லைக்கடித்துத்திக்குகளும் ஆகா யமும் செவிடுபடச் சிரித்துக் கொடிய விஷத்தைபபோலே விருத்திராசுரன் தோன்றியதைக் கண்டு அவனை நீபோய் இந்திரனுடனே சண்டையிட்டு அவ னைக் கொண்டுவாவென் றனுப்பினன். அந்த விருத்திராசுரன் வடவாக்கினி போலக்கொதித்துவர இந்திரனும்வெள்ளையானையின்மீதேறிப் பாவமும்புண் ணியமும் எதிர்த்தாற்போல இருவரும் எதிர்த்துப் போர்செய்யும்போது விருத்திராசுரன்மேல் இந்திரன் தன்வச்சிராயுதத்தை ஓங்கிவீச, அவன்கோ பங்கொண்டு ஒரு இருப்புலக்கையைக் கொண்டு ஓங்கித் தோளிலடிக்க இந்தி ரன் மூர்ச்சையாயினன். உடனே மூர்ச்சை தெளிந்து இந்தக் கண்டகனு டனே போர்செய்ய வலியற்றோமென்றெண்ணிப் பிரமலோகத்துக்குப்போய் பிர்மாவுடனே தான்பட்ட துக்கத்தைச் சொல்ல அந்தப் பிரமதேவ னவ்விந் திரனை யழைத்துக்கொண்டுபோய் மகாவிஷ்ணுவினிடத்திற்சொல்ல, அவரா லோசித்து இந்திரனை நோக்கி உன்னுடைய வச்சிராயுதம் மிகவும் பழைய தாய்ப்போனதினால் பகைவனைக் கொல்லமாட்டாது. வேறே புதிதாக வச்சி ராயுதம் வேண்டும். அது கிடைக்கும்படி சொல்லுகிறேன்கேள். முற்காலத் தில் திருப்பாற்கடல் கடையும்போது தேவர்களும் அசுரர்களும் ஆயுதங்க

ளோடுவருதல் கூடாதென்று அவர்கள் ஆயுதங்களைத் ததீசிமுனிவரிடத்தில் கொடுத்துவரச் செய்தேன். பின்பு நெடுங்காலம் கடல்கடைந்துகொண்டிருந ததனாலே ஒருவரும்வந்து அவ்வாயுதங்களைக் கேட்கவில்லையென்று அந்த ததீசிமுனிவர் அவ்வாயுதங்களை யெல்லாம் தம்முடைய ஞானவலியால் விழு ங்கினதினாலே அவ்வாயுதங்க ளெல்லா மொன்றுகித் திரண்டு அம்முனிசிரே ஷ்டர் முதுகந்தண்டா யிருக்கின்றது. அது இப்போது வச்சிராயுதமா கும், நீபோய் கேட்குமுன்னே அந்தக் கிருபாசொரூபியான முனிவர் கொடு ப்பார் நீபோய்க் கேளென்ன, இந்திரன் தேவர்களுடனே விரைவில் அம்மு னிவரிடம்போக முனிவர்கண்டு அன்புடனே முகமலர்ந்து உபசரித்து ஆசீர் வதித்து நீங்கள் மிகவும் இளைத்துவந்திர்கள். நடந்த சவிஸ்தாரமென்ன; ஒளியாமற் சொல்லுங்களென்ன, இந்திரன் சுவாமி! தேவரீர் இல்லையென்னு மல் அருளவேண்டியது அதுவோ? அசுரர்களை யழித்து எங்கள் குடிகளை ரக்ஷிப்பது அதுவேண்டி இந்தத தேவர்களுடனே தேவரீரை நாடிவந்தேன் அது என்னவென்றால் உமது சரீரத்திலுளளதென்றுசொல்ல எல்லாமுணர் ந்த அந்தமுனிவர் சூரியனைக்கண்ட தாமரைபோல முகமலர்ந்து இந்த தேக த்தை நாய் நமதென்னவும், நரி நமதென்னவும், தாய்தந்தை நமதென்னவும் யமன் நமதென்னவும், வியாதியும்பேயும நமதென்னவும், மனத்திலெண்ணு வதுபோல நாமும் நமதென்று எண்ணப்படுகிற இந்தச் சரீரம் யார்க்குத் தான் சொந்தமாகும். பாம்புத்தோலும், பறவைக்கூடும், தானென்று சொல் லத்தக்கவோ? அதுபோற் கூத்தாடிகள்போல பஞ்சேந்திரியங்கள் வாழுகிற தேகத்தை நானென்று எண்ணத்தக்கதோ? நடுவுநிலைமையும் அருளுடைமை யும் இல்லாத அசுரர்கெடவும், அவர்களாலே துன்பநோயைக்கொண்ட நீங்க ளெல்லாரும் சுகத்தை யடையவும், எனதுடம்பைக்கொடுத்து இந்திரனே அறத்தையும் புகழையும் யான்பெறுவனேயானால் இதைவிட நான்கொண்ட வுடம்பாலடையும் பிரயோசனம் வேறே யாதென்று சிவபக்த சிகாமணியா கிய முனிவர் பெருமான் அந்தக்காணங்க ளொருமித்து எழுகிற கருத்து அறிவையீர்க்க நின்று பிரமநாடியாகிய வழியைக்கொண்டு கபாலங்கீண்டு விமானமேறி மோகூஷலோகம்போய் வாழ்ந்திருந்தார். பின்பு அந்தமுனியா கிய வள்ளல் கொடுத்த ஆயுதங்களெல்லாங் கூடிய முதுகந்தண்டைச் சத்து ருக்களை யழிக்கத்தக்க வச்சிராயுதமாகச் சமைத்து விசுவகர்மன் ஆசீர்வதி த்துக் கையிற் கொடுக்கப்பெற்று மின்னலுடனே விளங்கிய மேகம்போல இந்திரனவன் வஞ்சனையால் வென்றுபோன விருத்திராசுரனைக் கொல்லு கிறதற்கு நாலுவகைச்சேனைகளும் புடைசூழ்ந்துவரச் சென்று விருத்திராசு ரனையெதிர்க்க அவனும் வடவாக்கினியானது மலைபோலோங்கிக் கொதித்து வந்தாற்போல குரோதத்துடனே தனதுசேனைகள்சூழ யுத்தஞ்செய்ய ஆரம் பித்தான்.

அப்போது தேவர்சேனை வீரர்கள்மேல் அசுரர்சேனைவீரர்கள் நெருங்கி இடியேறுபோல கெர்ச்சித்துத் தங்கள் சாமர்த்தியத்தைச் சொல்லுகையில் வில்லெடுத்து நாணேறிட்டுக் குணத்தானி செய்து பாணவருஷங்களை அளவில்லாமற் பொழிந்தார்கள். சிலர்கையிலுள்ள வேல் சக்கரம் முதலிய

ஆயுதங்களை விட்டார்கள். அதற்குத் தேவர்கள் நெருங்கி மலைபோலுந்தோள்களைத் தமதுகைகளாற் கொட்டி இடசாரி வலசாரியாகக் குதித்துக் கீடகங்களைநீட்டி மோதி அண்டம்வெடிக்கக் கொச்சணைசெப்து வாளாயுதங்களாலோங்கி அசுரரை வெட்டினர்கள். அப்போது கால்களுந் தோள்களும் அறுபட்டுப் பிரவாகமாக ஓடுகிற இரத்தவெள்ளத்தில் சிலாழுந்தினர்கள். சிலர் யுத்தகளத்தையும் தும்பைமாலையும் விட்டோடினர்கள் சிலர் அகன்ற மார்பு பிளந்து வீழ்ந்தார்கள். சிலர் தலைகள்அறுபட்டு எமலோகத்தையடைந்தார்கள் இப்படி அசுரசேனைமாள அவ்வாறேகால்களுடனே வீரக்கழலும் தலைகளுடனே முடிகளும், தோள்களுடனே யீடமும் தும்பைமாலையுடனே யுத்தஞ்செய்தலும், வாள்களுடனே கைகளு மார்புகளுடனே கவசங்களும் சவுரியத்துடனே ஆண்மையும் அற்று தேவர்களிலும் சிலர் குறைந்தார்கள் கழுகுகளுடி பருந்துகளுங்கூடிச் சரிந்து விழுகிற குடர்களைப் பற்றியிழுக்கவும், சிந்துகிற வுதிரத்தைக் குடித்துப் பேய்கள் சிரித்துபாடவும், குறைத்தலை முண்டங்களெழுந்து எங்குங் கூத்தாடவும், பிணமலைகள் நிறைந்த பூமி மறையவும், அண்டம் உடையவும், இப்படி இருதிறதசேனைகளும் போர் செய்து மாளப பின்னும் தங்களால் கூடியவரையில் யுத்தஞ்செய்து அயர்ந்தவர் மாளக்கண்டு தேவேந்திரனும், விருத்திராசுரனும் கோபங்கொண்டு தெய்வாஸ்திரங்களைப் பிரயோகித்தும் போர்செய்யும்போது இந்திரன் அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்தான் அதை விருதிராசுரன்வருணாஸ்திரத்தைப பிரயோகித்தறுக்க உடனே இந்திரன் வாய்வாஸ்திரத்தைப்பிரயோகித்தான் விருத்திராசுரன் நாகாஸ்திரத்தைப் பிரயோகித்து விலக்கினன் இந்திரன் நாகாஸ்திரத்தைவிட விருத்திரன் கருடாஸ்திரத்தை விட்டு விலக்கினன் இந்திரன் மோகனாஸ்திரத்தைவிட, விருத்திரன் ஞாலாஸ்திரத்தைவிட்டுவிலக்கிப் பின்னுந் தேவாஸ்திரங்களை விடக்கண்டு மானமுங் கோபமும் மூண்டு தேவர்கள் தலைவன் வச்சிராயுதத்தை எடுத்தவுடனே அவுணவீரன் பயந்து முற்காலத்தில் மைநாகபர்வதம் முழுகி மறைந்ததுபோல சமுத்திரத்தில் விழுந்து மறைந்தான். கூடவே இந்திரனுந் குதித்துத்தேடி அவனைக் காணுமல் பிரமதேவனிடத்திற்போய் நடந்த செய்தியைச் சொல்ல அப்பிரமன் அந்த விருத்திரன் மாளும்படியான ஆலோசனைசெய்து அகத்தியமுனிவரிடத்திலனுப்ப இந்திரன் பொதியமலைக்கு வருவதுகண்டு இம்முனிசிரேஷ்டர் இந்திரனை ஆசீர்வதித்து வந்தகாரியம் என்னென்றுகேட்க, இந்திரன் எல்லாந்தெரிந்த வுமக்குநான் சொல்லுவதான்றுமில்லை. ஆனலும் விருத்திரனென்னு மசுரன் என்னோடு யுத்தஞசெயது ஜெயிக்கமாட்டாமல் கடலில் மறைந்துபோனதினால் இனியவன் மாய்ந்துபோகவும் எங்கள் துன்பந் தீரவேண்டித் தேவரீரிடத்தில் வந்ததென்ன? அகத்தியமுனிவர் சச்சிதானந்த சொரூபியான வெள்ளியம்பலத்தானது ஊழிச்செந்தீ வடிவினை மனத்துட்கொண்டு விருத்திரன் மறைந்திருக்கிற சமுத்திரத்தை உள்ளங்கையில் உழுந்தளவாகக்கொண்டு ஆசமன்னியஞ் செய்தார். சிவனடியார்கள் முத்தொழிலுஞ்செய்ய வல்லவரென்றால் அகத்தியமுனிவருக்கு இது ஒரு பெரிதோ! தீவினையாற்றேடிய செல்வம்போல் நீரில்லாமல் கடல்வற்றிப்போக அக்கட

லில் ஒருமலையில் தனக்குச்சம்பவிப்பது இன்னதென்றறியாமல் தவஞ்செய்யும் விருத்திரனை இந்திரன்கண்டு புதிய வச்சிராயுதத்தால் அவன் றலையைத்துணித்தான். துணித்தவுடனே இந்திரனைப் பிரமஹத்தி பற்றிக்கொண்டு உம்மென்று மார்பைத்தட்டி கோபித்தெழுந்து கொச்சித்துப் போர்க்குவாவென்று வாயைமடித்துப் பல்லைக்கடித்து அவன்மேலேவிழுந்து அழுது சிறித்துச் சீறி கணப்பொழுதேனும் நீங்காமல்வருத்த அதைக்கண்ட இந்திரன் மிகவும் பயந்து ஈசான்னியதிசையில் ஒருகுளத்திலிறங்கி ஒருதாமரைத்தண்டுக்குள் புகுந்து ஒளித்தான். அப்போது கற்பகநாடு அரசனில்லா திருக்கப்பூலோகத்தில் நகுஷனென்பவன் அசுவமேதயாகஞ்செய்து முடிப்பதுகண்டு தங்களுக்கரசனில்லாமையால் தேவரெல்லாங்கூடி அந்த நகுஷனுக்கு மகுடஞ்சூட்டி இந்திரனைக்கொண்டார்கள். அப்போது இந்திரனைவந்த அந்த நகுஷன் இந்திராணியைக் கொண்டுவாருங்க ளென்னப் பக்கத்துள்ளோர் இந்திராணிக்குப்போய்ச் சொல்ல அவள் தங்களாசாரியராகிய பிரகஸ்பதி பகவானுக்கு முன்புபோய் நின்று எனக்கு நாயகனிருக்க வேறொருவன் என்னைத் தனக்கு மனைவியாக்கிக்கொள்ளுவது தருமமோ ? சுவாமி! என்ன அதற்கு வியாழபகவான் சத்தரிஷிகள் தாங்கச் சிவிகைமேல் வருவானுகில் அவனே இந்திரன். அவனையுனக்கு மணவாளனுமென்ன? அதற்கு இந்திராணி சம்மதித்து அப்படிப்பட்ட மேன்மையான சிறப்புடனே என்னிடம் வருக்வென்று நகுஷனுக்குத் தூதனுப்பினாள். அப்போது நகுஷன்சிவிகைதாங்கி வருகிற மகாரிஷிகளை மதியாதவனுப் பின்வருவதுந் தெரியாதவனுய் இந்திராணிபோகத்தை அனுபவிக்கு மிகுந்தமோகத்தால் விரைந்து செல்லவேண்டிய சர்ப்ப ளகுங்களென்ன? முன்கொம்பு தாங்கிச் செல்லுகிற அகஸ்தியர் முனிந்து நீசர்ப்பமாகக்கடவையென்று சாபமிட உடனே அவன்சர்ப்பமாகி அற்பரானவர்க்குச் செல்வமல்லது பகைவேறுண்டோ வென்கிறபடியே அழிந்துபோனன்.

பின்பு தேவர்கள் தேவருலகம்அரசனில்லாமல்வருந்துகின்றதேசுவாமியென்று தங்களாசாரியனுகிய வியாழபகவானை வணங்கிச் சொல்ல வியாழபகவானும் குளத்திலொளித்திருக்கிற இந்திரனிடம்போ யழைக்க அவன் தங்கள் ஆசாரிய ரழைக்கிறுரென்று தெரிந்து கொடும்பழி கொள்ளப்பட்டரூபத்துடன் வந்து வணங்கி என்னை வருத்துகின்ற இந்தப் பிரமஹத்தி நீங்குவதெப்படி சொல்லுமையா வென்ன? வியாழபகவான் பூலோகத்திற்சென்றுலல்லது நீங்குதலில்லை. நீ அது தீர்தற்காக வேட்டைய ட வருகிறவனுப் பூமிமேல் வாவென்று ஈசனுக்குச்செய்த குற்றத்தை ஆசாரியன்தீர்க்கவேண்டும். ஆசாரியனுக்குச் செய்த குற்றத்தை அவ்வாசாரியனே தீர்க்கவேண்டுமென்கிறபடி தன்னுல் வந்ததோஷத்தைத் தானேதீர்க்கும் வழிசொல்லஇந்திரன் ஆசாரியனுந் தேவர்களுந் தன்னைச் சூழ்ந்துவரக் குதிரைமேலேறிக்கொண்டு பூலோகத்திலிறங்கிப் பரமசிவனது கைலாயத்தை முன்னேவணங்கிக்கொண்டு தென்திசைநோக்கி வருகிறவன் கங்கைமுதலிய அளவிறந்த தீர்த்தங்களிலெல்லா மூழ்கிக் காசி-காஞ்சி-கேதாரமுதலிய சிவஸ்தலங்கள் பலவும்வணங்கியும் விருத்திரனைக் கொன்றபாவம் விடாமல் கேதுவால் விழுங்

கப்பட்ட சந்திரன் போல ஒளிமழுங்கி கடம்பவனத்தின் எல்லையைச்சமீபித்தவுடனே தொட்டபழி விட்டுப்போக மிகுந்த தலைச்சுமையோடு வந்தவன் அந்தச்சுமை நீங்கினவன்போல அளவிறந்த சந்தோஷத்தையுடையவனுய்த் தன தாசாரியனுக்குத் தெரிவிக்க அவர் இவ்விடத்தில் நல்ல தீர்த்தமும் தலமும் நாம் தெரிசிக்கக் கடவோமாதலால் சிலரைவிட்டு அவைகளை விசாரியென்ன அவ்விடம் விட்டு அப்பாற் போம்போது கற்றறிவில்லாத மந்திரிகள் அருவிநீரின்முழுகி அவ்வருவிவீசிய மணிகளைக்கொண்டுவந்து பாறைமேல் சிவலிங்கமாக வைத்து அருவிநீரா லபிஷேகஞ் செய்து கரிய விரல்களால் மலர்களைப்பறித்துவந் தருச்சனைசெய்து பழங்களை நிவேதித்துப்பூசிக்கவும், யாளியும் யானையும் புழைக்கையால் ஒருதுரையிலை நீரைமுகந்து ஒன்றற் கொன்று ஊட்டியூட்டிப் பருகவும், புலிமுலைப்பாலை மான்கன்றுகள்பசிதீரப் பருகி மகிழவும், வெய்யலில் வெறுநிலத்தில் பாம்புக்குட்டிகள் கிடந்து வருந்தக்கண்டு கருடன் தனதுசிறையைவிரித்து நிழலைசெய்யவும், அதுகண்டு அக்கருடனுலே பாம்புக்குட்டிகள் வருந்துகின்றன ஐயோவென்று பெண்குரங்குகள் சங்குகளாலே நீரைமுகந்துவந்து அவைகளிடல் குளிரச்சொரியவும், மயில்கள் பெட்டையோடு கூடியிருக்கும் மணவரையில் மானிக்கங்களைக்கக்கிப் பாம்புகள் விளக்குவைக்கவும், குயில்கள் ஓமன்றெழிக்க கிளிகள் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை அதனேடு சேர்த்துச்சொல்ல பூவைகள் குருவுபதேசங் கேட்பதுபோலக் கேட்டுமகிழவும், இப்படிமிருகங்கள் பக்ஷிகள்செய்யுஞ் செய்கையைக்கண்டு இந்திரன் ஆச்சரியமடைந்து புளகாங்கிதனுய் மனமகிழ்ச்சியோடு செல்லும்போது ஒற்றர்கள்மீண்டுவந்து வணங்கிப் பால்குடிப்பவனுக்கு அப்பாலோடு தேனைச் சொரிந்தாற்போல மகிழ்ச்சிமேல் மகிழ்ச்சிபெருக ஐயா எந்தலோகத்திலும் நாங்கள் காணுத வதிசயங்களும் விசேஷங்களும் இந்தக் கடம்பவனத்திலே கண்டுமகிழ்ந்தோம் அதாவது ஒருபரிசுத்த தடாகக்கரையில் ஒருகடம்ப விருக்ஷத்தினிழலிலே ஒப்பில்லாத சோதிரூபமான ஒருசிவலிங்கம் விளங்குகின்றதென்றுசொல்ல காதுகளில் அமுதஞ் சிந்தியது போலக்கேட்டு அவ்வொற்றர் வழிகாட்டச்சென்று திரிகரணமும் குணங்களும் ஒருமித்துத் தனது பாவத்தை நீக்கித்துன்பத்தைப்போக்க முளைத்தெழுந்த சிவலிங்கத்தின்மேல் அன்புபற்றிஈர்க்க தலைமேற் கைகுவித்துச்சென்று காடுமூடியதீர்த்தத்தைக்கண்டு கடம்பவனத்துட்புகுந்து,

அருவாகியுருவாகியருவுருவுங்கடந்துண்மையறிவானந்த
வுருவாகியளவிறந்தவுயிராகியவ்வுயிர்க்கோருணர்வாய்ப்பூவின்
மருவாகிச்சராசரங்களகிலமுந்தன்னிடையுதித்துமடங்கநின்ற
கருவாகிமுளைத்தசிவக்கொழுந்தையாயிரங்கண்ணுங்களிப்பக்கண்டான்.

அருவமாகியும், உருவமாகியும், அருவுருவமாகியும், இவைகளைக் கடந்த மெய்யறிவானந்த உருவாகியும், அளவிறந்த உயிராகியும், அந்த உயிர்க்குக்கு ஒப்பற்ற அறிவாகியும், பூவினிடத்திலிருக்கும் வாசனைபோலாய்ச் சராசரங்களெல்லாம் தன்னிடத்தில் தோன்றி ஒடுங்காநின்ற கருவாகி முளைத்த சிவக்கொழுந்தைத் தன் ஆயிரங்கண்களும் களிக்கும்படித் தரிசி

த்து சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்து ஆனந்தக்கண்ணீர்பெருக பேரின் பக் கடலுள்முழுகி வாய்குழற உடல்நடுங்க அன்புருவாகிய இந்திரனன்வன் சிவபெருமான் அருச்சனைக்கு வேண்டுவனவெல்லாங் கொண்டுவரும்படி சில ரைத் தேவலோகத்துக் கனுப்பி விசுவகருமனை ஒருவிமானமும் அமைக்கச் சொல்லி அந்தத் தீர்த்தக்கரையிற் சென்று சிவார்ச்சனை செய்வதற்கு பத் திர புஷ்பங்கிடையாது, தேடும்போது சிவபெருமான்றிருவருளாலே அந்தத் தீர்த்தத்தில் உதயகால சூரியனைப்போல் பொன்னிறத்தாமரை மலரக்கண்டு அன்புமிகுதியால் ஆனந்தக்கூத்தாடி மகிழ்ந்து அதற்குப்பொற்றுமரைத்தீர் த்தமென்று பெயரிட்டு அதில் ஸ்நானஞ்செய்து அம்மலரைப்பறித்துத்தன் பிறவிப்பிணிக்கு மருந்தாகிய சிவலிங்கத்தினிடத்தில்வந்து நெருங்கிய காடு களை வெட்டி நிலந்திருத்தி வரும்போது சிவலிங்கத்தின்மேல் சூரியகிரணம் பட மனம்வருந்தி தனது குடையை நிழல்செய்வதாகவைக்க எண்ணுகையில் சூரியமண்டலம்போல விஸ்வகர்மனு லனுப்பப்பட்ட எட்டுயானைகள் சுற்றி லுந்தாங்க, அதற்குமேல் முப்பத்திரண்டு சிங்கங்களும் அறுபத்துநாலு தே வகணங்களுந் தாங்க, சிருஷ்டித்த அந்த இரத்தின விமானத்தைச் சாத்தி இந்திரனவன் அஷ்டமூர்த்தமாய் விளங்குகின்றபரமேஸ்வரனுடைய பூச னைக்கு வேண்டிய பொன்மலரையும், இரத்தினபரணங்களும் மணம்பொருந் திய சந்தனமும், கங்காதீர்த்தமும், தூபதீபங்களும், திருப்பள்ளித்தாமமு ம், தூங்காவிளக்கும், பஞ்சகௌவியமும், பழமுந்தேனும், திருவமுதும்கொ ண்டுவா பின்னும் பொற்றுமரைத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிப் பவநோ யை யொழிக்கத்தக்க திருவெண்ணீறு தரித்து உருத்திராக்ஷமாலிகையணி ந்து அன்புவடிவாய் அருள்வடிவாகி அரவாபரணங்களையணிந்த பசுபதியை அந்தப்பரமசிவ மருளிச்செய்த சைவாகமப்படி உண்மையான அன்பும் பெரு கப்பூசைசெய்து ஆனந்தக்கடலுள்மூழ்கிப் பூமியிற்படிய அஷ்டாங்கபஞ்சாங் க விதிப்படி வணங்கி, திரிகுணமும் ஒன்றுபட்டு வலஞ்செய்து தேகங்கம்பித் துத் தண்டனிட்டுக் கூத்தாடித் தனது தோளின்மாலுமிதக்க ஆனந்தக்கண் ணீர் பெருகிநின்று அன்பு அடங்காம லதிகரிக்கத் தொழுதுநின்று,

அங்கணைபோற்றிவாய்மையாரணைபோற்றிநாக
கங்கணைபோற்றிமூலகாரணைபோற்றிநெற்றிச்
செங்கணைபோற்றியாதிசிவபரஞ்சுடரேபோற்றி
யெங்கணையகனேபோற்றியீறிலாமுதலேபோற்றி.

யாவையும்படைப்பாய்போற்றியாவையுந்துடைப்பாய்போற்றி
யாவையுமாளுய்போற்றியாவையுமல்லாய்போற்றி
யாவையுமறிந்தாய்போற்றியாவையும்மறந்தாய்போற்றி
யாவையும்புணர்ந்தாய்போற்றியாவையும்பிரிந்தாய்போற்றி.

இடருறப்பிணித்தவிந்தப்பழியினின்றென்னையீர்த்து
னடியிணைக்கன்பளைக்குமருங்கடல்போற்றிசேர்கண்
மடவரன்மணாளாபோற்றிகடம்பமாவனத்தாய்போற்றி
சுடர்விடுமானமேயசுந்தரவிடங்கனேபோற்றி.

பூசையும்பூசைக்கேற்றபொருள்களும்பூசைசெய்ய
நேசனும்பூசைகொண்டுநியதியிற்பேறுநல்கும்
ஈசனுமாகிப்பூசையான்செய்தேனெனுமென்போத
வாசனையதுவுமானமறைமுதலடிகள்போற்றி.

என்று துதித்த தேவேந்திரனை பரமசிவம் கிருபைக்கண்ணாற் பார்த்
தருளி இனிதான குறுநகைதோன்ற இந்திரனே உனக்கு வேண்டியதியாது
சொல்லென்ன; இந்திரன் விரைவில் வணங்கித் தலைமேற் கைகுவித்துச்
சுவாமி! தேவரீர் க்ஷேத்திரத்தின் எல்லைக்குச் சமீபமாக நான்வரும்போது
தீராதபழியும் முற்காலத்தில் நான்செய்த பாவங்களுந் தீர்ந்து தேவரீரது
திருவடியைத் துதித்துப் பூசைசெய்யத் தக்கவனை இதிலும் சிறந்தபேறு
வேறே யாதிருக்கின்றது ஆதலால் இன்னமும் தேவரீர்திருவடித் தாமரை
யை எக்காலமும் இந்தப்படியே பூசித்து உமதடியாருள் யானு மொருவனாக
வேண்டியதிதுவே அடியேன் வேண்டத்தக்கதென்று பாதத்தில் விழுந்து
சேவித்த இந்திரனுக்குப் பரமசிவம் கிருபைசெய்து இருதுக்களிற் சிறந்த
வசந்தருதுவும், மாதங்களிற்சிறந்த சித்திரை மாதமும், நட்சத்திரங்களிற்
சிறந்த சித்திரைநட்சத்திரமும், திதிகளிற்சிறந்த பூரணையுங்கூடிய சித்திரை
மாதம் சித்திரை நக்ஷத்திரம் பௌர்ணமிதோறும்வந்துவந்து நம்மை அருச்
சனை செய்வாயாலல் வருடம் முந்நூற்றறுபத்தைந்து நாளும், அருச்சனை
செய்த பலன்கிடைக்கும் ஆதலால் நீசொர்க்கலோகத்துக்குப்போய் நன்மை
யான பலபோகங்களையும் அனுபவித்தபின்பு மலபரிபாகம் பிறக்க பிரம
விஷ்ணு முதலியபெரிய பதவிகளின்மே லாசையும் மற்றவைகளும்மறக்கும்
படி நாம் மோக்ஷந்தருகிறோமென்று திருவாய்மலர்ந்தருளிப் பெருங்கருணை
நிரம்பித் திருவுள்ளம்செய்ய இந்திரன் புளகாங்கிதனாய் முடிமேல்கைகுவித்து
வணங்கி எழுந்து கண்ணீர்ததும்பப் பலமுறை துதித்து ஆனந்தக்கூத்தாடி
சுவாமி திருவடியைவிட்டு பிரிய அஞ்சினவனாய் பின்பு பரமசிவத்தின் அரு
ளாகிய ஆக்ஞையை நினைத்துப் பிரியாத விடைபெற்றுச் சுவர்க்கலோகத்
தைச் சேர்ந்து இருபுறத்திலும் அரமங்கையர் சாமரம்வீசபஞ்சதருக்களும்
பூமழைபொழிய தேவர்கள் முடிகளை யடிகளிற் சூட்ட இந்திராணிபோகத்
தை யனுபவித்து மார்புந்தோளும் பூரித்துத் தேகம் காமவெள்ளத்தில்
முழுக உள்ளம் சோமசுந்தரக்கடவுளது கிருபைவெள்ளத்தில் முழுக பழை
யபடியே சுவர்க்கலோகத்தில் நீதிசெலுத்திக்கொண்டிருந்தான்.

இந்திரன் பழிதீர்த்த படலம்
முற்றிற்று.

உ

சிவமயம்.

இரண்டாவது

வெள்ளையாவன சாபந்தீர்த்தபடலம்.


கோச்சகக்கலிப்பா.

மட்டவிழுங்கொன்றைச்சடையான்மகவாணைத்
தொட்டபழியின்றொடக்கறுத்தவாறுதிப்
பட்டமதவேழம்பரனபபராய்முனிவ
னிட்டகொடுஞ்சாபந்தீர்த்தெகியவாறுதுவாம்.

இதன்பொருள்.

தேனையுடைத்தாய் மலருகின்ற கொன்றைப பூமாலையணிந்தசடைமு டியையுடைய சோமசுந்தரக் கடவுளானவர் தேவேந்திரனைப் பற்றிய பழியி ன்தொடர்ச்சியை நீக்கியருளிய திருவிளையாடலைச் சொல்லி நெற்றிப்பட்ட த்தையுடைய மதயானையாகிய ஐராவதமானது சோமசுந்தரக்கடவுளைத்துதி செய்து தூருவாச முனிவரிட்ட கொடியசாபத்தை நீங்கித் தேவலோகத்தி ற்குப்போன சரித்திரமாகிய திருவிளையாடலை யினிச்சொல்லுகிறும்.

ஜனனவாசனையை யொழிக்கத்தக்க காசியென்னுந் திருப்பதியில் தூருவாசமகாமுனிவர் பழைய ஆகமப்படியே தமதுபெயர்விளங்கசிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து சந்தோஷத்துடனே அருச்சித்துத் துதிக்கும்போது பரமசிவன் தனதருளால் தனது திருமுடிமேலிருக்கும் ஒருதாமரைமலரை விழச்செய்ய அதனைத் தனதுகையை விரித்துத் தாங்கி கண்களிலுந் தலையி லும் மார்பிலும் அணைத்துத் தேகம்பூரித்து மிகுந்த மெய்யன்பு அதிகரிக்க அவ்விடம் விட்டுத் தேவலோகத்துக்குப் போகும்போது இந்திரன் சங்கந் தொனிக்க அசுரரை ஜெயங்கொண்ட பிரதாபத்திறலே தனதுபெரிய பட் டணத்தில் தேவர்களாகிய சேனைசமூத்திரம் ஆரவாரிக்க, மங்களவாழ்த்தும் வேதங்களுமுழங்க, நாலுதிக்கிலும் வாத்தியங்கள்கல்லென்றொலிக்க, அரம் பையருதலியோர் அமிர்தரசஞ் சிந்துகின்ற பாடல்களைக் காதிற் புகட்ட வரி சையாகச் சாமரங்கள்வீச, ஐராவதத்தின்மேல் பவனிவர, அவ்விடத்தில் தேவர்கள் நெருங்கிவந்து வேறுவேறு கையுரைகள் கொடுத்துக் கைகள் குவித்துக் கண்டுகொள்ள அங்ஙனம்வந்த தூருவாசமுனிவரும் குற்றமில் லாத ஆசீர்வாதஞ்செய்து தமது கையிலிருந்த தாமரைமலரை நீட்ட இந்தி ரன் அளவிறந்த செல்வச் செருக்கால் மதியாமல் ஒருகையை நீட்டி அதனை வாங்கி மதயானைத்தலைமேல்வைக்க அந்தயானை மணம்பொருந்திய அம்மல ரைத் துதிக்கையாற்றள்ளிக் காலால் மிதித்துத் தேய்த்தது. அதைக்கண்ட தூருவாசமுனிவர் காமதகனனைப்போல நெருப்புப்பொறி சிதறப்பார்த்துக் கோபித்துத் தேவர்களஞ்சிஓட ஆலகால விஷத்தைபுண்ட பரமசிவனைப்



போலநின்று சிவனடியார்கள் அருவருத்துத் தள்ளிய செல்வச் செருக்கினை யுடையாய் என்னசெய்தாய்? தேவர்கள் கையுறையையே நன்கு மதித்தாய் பரமசிவனது திருமுடிமேல் சாத்திய தாமரைமலரை மதியாமல் பாதமிதித்து நெய்க்க அதன்றலைமேல் வைத்தாயே! அடா புத்தியினனே மகாவிஷ்ணுவின் பெருமையும் பிரமாவின் பெருமையும், தேவர் வணங்கவாழும் உன் பெருமையும், சமுத்திரத்தில் தோன்றிய விஷத்தைப் பானம்பண்ணின பரமேஸ்வரனைப் பூசித்த சிவபூசையின் பலனென்று எண்ணிலையில்லை, உயர்ந்த யானைமேல் வருகிற இந்திரா? உன்றலையானது பாண்டியரிலொருவன் வாளாயால் உடைபடக்கடவது. உன்னுடைய காலுகோம்பினையுடைய வெள்ளையானையும் காட்டானையாகக் கடவதென்று சபிக்க தேவர்கள் அம்முனிசிரேஷ்டரின் பாதத்தை வணங்கி ஜிதேந்திரிபராகிய பெரியவரே எங்களரசனும் வெள்ளையானையும் அபராதிகளானபடியால் தீர்சபித்த சாபத்தை இனி விமோசனஞ் செய்யவேண்டுமென்று குறையிரந்துருகிநிற்க்கு மனமிரங்கி துருவாசமுனிவர் சாபவிமோசனஞ் செய்ததாவது, மனவாக்குக்கெட்டாத பரமசிவம் அருளியதேசுத்தை நிந்தித்தபாவம்பரிகாரத்தாற்போகாது ஆலால தலையளவுவந்து முடியளவாகத்தக்கது, யானையும் காட்டானையாய் நூறு வருஷங் கழிந்தபின்பு பழையவடிவாகத் தக்கதென்று பிறிதுசாபம் நியமித்தபடி இந்திரன் மகுடபங்கமானது பின்பு சொல்லுகிறோம்.

அதுநிற்க அங்குநின்ற வெள்ளையானை தேவலோகத்தைவிட்டு மதி கலங்கி நீலமலைபோல மண்ணுலகில்வந்து காட்டானைக் கூட்டத்தோடுகூடி மிருகசஞ்சாரமாய் வேடர்கள் திரிகிற காடும், மூல்லைவனங்களும், ஆற்றைச் சார்ந்த காடும், குறவர்கள் தங்கள் தெய்வத்தோடு சஞ்சரிக்கிற மலையும் திரிந்தலைந்து நூறுவருஷமுங்கழிய பின்பு காட்டோடு நெருங்கிய தெய்வீகமான கடம்பமாவனத்தில் வந்து பரமசிவனது திருவருள் பெருகுங்காலம் நேரிட்டதனால் பொற்றூமரைத் தீர்த்தத்தைக் கண்டபோது தன் பழையவடிவு தோன்ற வத்தீர்த்தத்தில் முழுகியபோது பழைய வடிவம் பரமசிவத்தினது திருபாதோக்கமும் தோன்றி பரமானந்தவடிவாகிய சிவலிங்கமும் எதிர்தோன்றக் கண்டுவணங்கி அந்தத்தெய்வநாயகனைப் பூசிக்க அன்புதோன்றித் துவாரம்பொருந்திய துதிக்கையிலேலை மொண்டுவந்து திருமஞ்சனஞ் செய்து தேனிழுகாநின்ற திருப்பள்ளித் தாமமும்சாத்தி அரவாபரணத்தை அணிந்த வேணியினையுடைய பரமசிவத்தை அருச்சித்துப் பூசிக்க அதனது உள்ளத்திலுண்டாகிய அன்பினையறிந்த அப்பரமசிவம் வெள்ளையானையை நோக்கி நீயிங்கு வந்தகாரணம் என்ன? உனக்கு வேண்டும் வரம் யாது! சொல்லுவாயென்று கேட்க இத்தெய்வ யானையானது உள்ளத்திலன்புமிகுந்து வணங்கி முன்னே தனக்குச் சம்பவித்ததும், இங்குவந்த முறைமையும் கிரமமாகச்சொல்லி என்தந்தையாகிய தேவரீரை யடைப்பெற்ற எனக்கு இனி ஒரு குறையுண்டாகுமோ! எம்பெருமானே தேவரீரைத் தாங்கிய இவ்வெட்டு யானைகளோடு அடியேனும் ஒன்பதாக உமதடியைப் பிரியாது உமது சந்நிதானத்தில் இந்தவிமானத்தை முதுகிற் சுமக்கவேண்டுமென்னும் அன்பு

என்னுள்ளத்தில் பொருந்துதலினால் அதுவே வேண்டுமென்று இடையறாத அன்பினால் இவ்வாறுசொல்ல தேவலோகத்தை ஆளுகிற இந்திரன் நம்மிடத்து மெய்யன்புடையவனுதலால் நீயங்கு சென்று அவனைத் தாங்கியிருப்பதே நமக்கு மிகுந்த சந்தோஷமென்று பின்னும் அதற்கு வேண்டிய வரங்களுத்தந்து செலவுகொடுத்தருளினர்.

பரமசிவனிடத்துச் செலவுபெற்றுக்கொண்டு வணங்கிச் செல்லும் வெள்ளையானை அச்சிவலிங்கத்துக்கு மேற்றிசையை யடைந்து தன்பேரால் ஒரு தடாகமும் அதன்பக்கத்தில் சிவலிங்கத்தையும் கணேசனையும் பிரதிஷ்டைசெய்து அவற்றை அருச்சித்து நீங்காத அன்பும் தானுமாக அங்கிருக்குஞ் சமயத்தில் இச்செய்தியை அறிந்த இந்திரன் தூதுவரை யழைத்து எம்முடைய யானையைக் கொண்டுவாருங்களென்று அனுப்ப, அத்தூதுவர் விரைவில்வந்து அழைக்க நான்வருகிறேன் நீங்கள் முன்செல்லுங்களென்று அனுப்பிவிட்டுத் தான் அங்குநின்று எழுந்து அதற்குக் கீழ்த்திசையில் ஓரிடத்தில்வந்து தனதுபேரால் ஒருரைஉண்டுபண்ணி அதில் இந்திரேச்சுரமென்ன இந்திரன்பேரால் ஒருசிவலிங்கம் ஸ்தாபித்து அவ்வாசனைப் பூசித்து அங்கிருக்க இந்திரன் யானை இன்னும் வந்ததில்லையென்று பின்னும் மனத்தினும் வேகமாகச் செல்லுகின்ற தூதுவரைவிடஅவர்களோடு ஐராவதம்தேவலோகத்தை அடைந்து இந்திரனைவணங்கிக்காட்டிலும் கடியமலையிலும் பலநாள் துன்பநோயுற வந்தசாபம் பரமசிவனைக்கண்டு நீங்கியதும் மற்ற காரியங்களையும்சொல்லி உயர்ந்த திக்குயானைகளின் இனத்தினின்று நீங்கிய தெய்வயானை இன்பத்தையுடையதாக வீற்றிருந்தது.

மேற்றிசையில் ஐராவத க்ஷேத்திரத்திலுள்ள தீர்த்தத்தில் மூழ்கி ஐராவதப் பிள்ளையாரைத்தொழுது ஐராவதேச்சுரத்துக் கடவுளைப் பணிந்தவர் சாபத்தொடர்பினும் பாபத்தொடர்பினும் நின்று நீங்குவர். ஐராவதமென்னும் யானைசென்ற வழியேபோய் வைகைநீரின்மூழ்கி அதற்குத் தென்கரையிலுள்ள இந்திரேச்சுரன் திருவடியை வணங்குவோர் இப்பிறப்பில் தருமமுதலாகிய மூன்முல்வருங் பயனையடைந்து மறுபிறப்பில் இந்திரபதவி முதலிய அரியபதவியெல்லாம்பெற்றுச் சுவர்க்கலோகத்தில் வெறுப்பில்லாத போகத்தில்மூழ்கிப் பின்பு அதில்வெறுப்புத்தோன்ற மனச்செவ்வையிலேல உண்டாகிற பேரின்பமாகிய சிவகதியை அடைவார்கள்.

வெள்ளையானை சாபந்தீர்த்த படலம்

முற்றிற்று.

11



சிவமயம்.

மூன்றாவது

திருநகரங்கண்டபடலம்.

கலிநிலைத்துறை.

தானவாறிபுகர்முகத்தடுகரிசாபம்
போனவாறுரைசெய்துமேற்புதுமதிமுடிமேல்
வானவாறினன்கடம்பமாவனமுதுநகர
மானவாறதுதனைச்சிறிதறிந்தவாறிசைப்பாம்.

இதன்பொருள்.

மதநீராறு பெருகாநின்ற புகர்முகத்தினை யுடையதாய்ப் பகைவனைக் கொல்லுகின்ற ஐராவதமென்னும் யானையின் சாபம் நீங்கின திருவிளையாடலைச்சொல்லி, இனிப் பிறையை யணிந்திருக்கும் சடைமுடிமேல் ஆகாயகங்கையையுடைய சோமசுந்தரக்கடவுளானவர் வீற்றிராநின்ற பெருமைபொருந்திய கடம்பவனமானது பழமையான நகரமாகிய திருவிளையாடலைச் சிறிது தெரிந்தமட்டிற் சொல்லுகிறேம்.

இனிமையாகிய ஏழிசைகளையுந் தமது கண்டத்திலே யுடைய வண்டுகள் கின்னரம்போலப் பாடுகின்ற கடம்பவனத்தின்கீழ்த்திசையில் தென்னர் சேகரமென்றும், மன்னர் சேகரனென்றுஞ் சொல்லப்படுகின்ற குலசேகரபாண்டியன் அரசாக்ஷிசெய்யும் மணலூரில் வைசியர்களில் ஒருவனுகிய தனஞ்சயனென்பவன் திரவியந்தேடுதல்போல சிவார்ச்சனை முதலிய சிவதருமங்களையும் தேடுகிறவனுப் சிவனிடத்தில் சிறந்த மெய்யன்புடையவனுப் அவ்வூரிலிருந்து மேற்குத்திக்கில் சென்று பெரிய வர்த்தகஞ்செய்து பின்பு தன்னூருக்குத் திரும்பும்போது பழைபதாகிய பிறவிக்கடலின் கரைதெரியச்செய்து அடியார்கள் துன்பத்தைத் தீர்க்கும் பரமேஸ்வரன் எழுந்தருளியிருக்கும் கடம்பவனத்தின் வழிவரும்போது சூரியன் அஸ்தமித்தகாலமாக நெருங்கிய இருளில் தனியனுப்ச் சிவதேசத்தையுடைய அவன் நான்கு கொம்புள்ள மதயானைகள் பிடரிமேற்றூங்குதலாய் ஆயிரங்கிரணங்களாலே எட்டுத்திக்கிலுமுள்ள இருளைப்போக்கி விளங்குஞ் சூரியனைப்போல அவ்வனத்தினிருளைப்போக்கி விளங்குகின்ற இந்திரவிமானத்தை நேரேகண்டு சமீபத்தில்வந்து அந்தச்சோதி விமானத்திலெழுந்தருளிய பரமசிவத்தைத் தரிசித்து வணங்கி ஆநந்த நிரம்பினநெஞ்சினனுப் அவ்விடத்தேதானே அன்றிரவைக் கழிக்க எண்ணி அங்கிருக்கும்போது அன்றிராத்திரியில் சோமவார

மாகையால் தேவர்களெல்லாம் அங்குவந்து பார்வதிசமேதராகிய பரமசிவனது திருவடிகளை வணங்கிச் சிவராத்திரிபோல அன்றிராத்திரி நான்குசாமத்திலும் அக்கடவுளுக்கு உவப்பாக அருச்சனைசெய்துகொண்டிருக்க அங்கே தேவர்கள் வந்ததும் அருச்சனை செய்வதும் இவையெல்லாம் அடியாரன்பிற் கெளியவராகிய நீலகண்டத்தையுடைய சிவபெருமானது கிருபாதோக்கத்தால் திரிபுண்டரதாரியாய்ச் சிவபத்திபரிபாலனை தனஞ்சயன்கண்டு சிவார்ச்சனைக்கு வேண்டிய வாசனைத் திரவியங்களைத் தேவர்களிடத்திற் கொடுத்து அருச்சனை செய்யச்செய்து இந்திரன் தங்கள் தெய்வமாகிய பரமசிவத்தை வணங்கி அருகினிலிருக்க அப்பெருமானைப் பூசித்த தேவர்கள் பாபராகியும் இருளும்போய் விடியக் குற்றமில்லாத தனஞ்சயன் ஒருவனையுங் காணுதவனுய் அந்த விமானத்தின்மேல் ஒப்பற்று விளங்குகின்ற சிவலிங்கத்தைமாத்திரங்கண்டு மிகவும் ஆலோசிக்குஞ் சிந்தையுள்ளவனுய் ஆச்சரியப்பட்டு அப்பெருமானுடைய திருவடி பின்னிழே வணங்கி விழுந்து இரண்டு கைகளையுந் தலைமேற் குவித்து பிரதக்ஷிணஞ் செய்து ஒருபுறத்தில் தன்னிருக்குப்போக மனந்துணிந்து மிகுந்த பக்திபோடு சிவபெருமானிடத்தில் விடை பெற்றுக்கொண்டு வந்து அவ்வூராசனாகிய குலசேகரபாண்டியன் அரண்மனைக்குச் சென்று சத்துருசிங்கமான அவனை வணங்கி அவன் முன்னே நின்று எட்டுத்திக்கையும் ஜெயங்கொண்ட ஆக்ஞாசக்கரத்தையுடைய அரசர்பெருமானே, நேற்று அந்தக் கடம்பவனத்து வழியாய் நான் வர்த்தகஞ் செய்து வரும்போது பொழுதுபோயிற்று, அப்போது நான்கண்ட அதிசயமாவது, அன்றிராத்திரிக்கும் எனது பிறவிக்கும் முடிவுண்டாக சூரியமண்டலத்தைப்போல் விமானமும் அதில் ஒரு சிவலிங்கமுங்கண்டேன், அந்த லிங்கத்தை இராத்திரிமுழுதும் தேவர்கள்வந்து அருச்சனைசெய்துபோனார்கள். நானும் விடியுமளவுங்கண்டிருந்து அக்கடவுளிடத்தில் விடைபெற்றுத் திரும்பிவந்தேன் என்று சிவதேசம் பெருகிச் சொல்ல அதைக்கேட்டகுலசேகரபாண்டியன் சுவாமியினுடைய திருவடிகளையும் தனதிரண்டு கைகளையும் தலைமேல்வைத்து உள்ளத்தில் அதிகஅன்பும் ஆச்சரியமும் நிரம்ப இருக்கும்போது சூரியன் அஸ்தமித்தான். அன்றிராத்திரி அவ்வரசன் கனவில் இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், தத்துவதரிசனம் ஆகிய விவற்றையருளும் பரமசிவமே ஒருசிததராகிவந்து ஓ பாண்டியனே அந்தக் கடம்பவனத்தை காடுபோக்கி நாடுநகரமாகச் செய்யக்கடவை யென்று தெரியச்சொல்லி மறைந்தருள, குலசேகரபாண்டியன் விடியற்காலமாய்க் கண்விழித்துக் கனவில் சித்தவடிவாய்வந்த கடவுளுக்குச் செய்யுங் காலநியதியெல்லாமுடித்து அரசாட்சியில்வந்து மந்திரிகளுக்கும் பெரியோர்களுக்கும் இராத்திரி தான்கண்ட கனவின் விசேடத்தையும் நேற்றுத் தனஞ்சயனென்னும் வர்த்தகன்சொல்லிய விசேடத்தையும்சொல்லி. அவர்களும் சந்தோஷித்துச்சொல்லத் தெரிந்துகொண்டு மந்திரிகளுடனே கூடப புறப்பட்டுக் கடம்பவனத்துக்குவந்து பொற்றூமனைத் தீர்த்தத்தில் முழுகி இந்திரவிமானத்திலிருக்கும் சிவபெருமானுடைய சந்நிதியின் முன்னே தலைமேற் கைகுவித்து அன்புபின்றள்ளவும் முன்பு அருட்கண்ணீர் பெருகவும் என்புருகவும் நின்று.

சரணமங்கையோர்பங்குறைசங்கரசரணம்
சரணமங்கலமாகியதனிமுதல்சரணம்
சரணமந்திரவடிவமாஞ்சதாசிவசரணம்
சரணமும்பர்கணயகபசுபதிசரணம்.

ஆழிஞாலமேலாணையுமமர்வான்பதமேல்
வீழுமாசையும்வெறுத்தவர்க்கன்றிமண்ணுண்டு
பீழைமூழ்கிவானரமொடுபிணிபடச்சுழலு
மேழையேங்களுக்காவதேதாவெந்தைதன்கருணை.


சூளதாமரைச்சென்னியுந்தாடத்தாடநீண்ட
நீளனீயுனக்கன்பிலமாயினுநீயே
மூளவன்புதந்தெங்குடிமுழுவதும்பணிகொண்
டாளவேகொலிக்கானகத்தமர்ந்தனையென்னு.

தோத்திரங்கள் செய்துபெருகிய அன்பு இரண்டு கண்ணின் வழியி லும் ஒழுகுவதுபோல ஆனந்தக்கண்ணீரொழுக சிவாநந்தக் கடலின்மூழ்கி மெய்யன்போடு பிரதக்ஷணஞ்செய்து வெளியேவந்து ஒருபுறத்திலிருந்து உத் திரவுசெய்தபடியே மந்திரிகளேவலால் காடுவெட்டுவோர்கள் வந்துகூடிக் கொடுவாள் கோடாலிகொண்ட கையினராய்க் காடுவெட்டத் துணிந்துவெட் டும்போது இருண்ட வனங்களெல்லாம் வெட்டுண்டு மெய்ஞ்ஞானிக ளுள் ளம்போல் வெளியாய் செவ்வையாகக்கோலி இனி நகர்செய்வதெப்படியெ ன்று மந்திரிகளோ டாலோசிக்குஞ் சமயத்தில் அரசன்மகிழ இரவில் வந்த படியே விபூதிதூளிதராய்ப் பாதம்பூமியிற்பட சித்தவுருவமாகவந்துதோன் றித்தாம் முன்புசொன்ன முதநூல்-வழிநூல்-சாற்புநூற்படிவழுவாமல்நல்ல கோயில்-மண்டபம்-கோபுரம்-பட்டணம் இவைகளை இன்ன இன்னபடிசெ ய்கவென்று விடைகொடுத்தருளி யுடனே மறைய அப்படி மறைந்த சர்வஜ் ஞாபகரான சிவபெருமானுடைய திருவடியில்நிறைந்த பேரன்புடையபாண் டியன் உலகத்தில் சிற்பசாஸ்திரங்கள் தெளிந்தவர்களாலே சிவபெருமான் கட்டளையின்படியே கோயில் வேதபாராயணஞ்செய்கிறமண்டபம் அருத்த மண்டபம்-சபாமண்டபம்-அறுசாற்பீடிகை நிருத்தமண்டபம்-உற்சவமண்ட பங்கள்-வேள்விமண்டபங்கள்-திருமடைப்பள்ளி-சுற்றிலுந்தேவர் சந்நிதிகள்-வலப்புறத்தில் உமாதேவியார்கோயில்-மாளிகைகள் - சுற்றுமதில்கள்-கொடி கள்கட்டிய நெடியசூளிகைகள்-சந்திரனைப்போலப் பிரகாசிக்கிறவீடுகள்-செப் குன்றுகள்-செம்பொற்கோபுரங்கள்-பெரிய மதில்கள் - அகழிகள்-சித்திரங்க ளெழுதிய பீடிகைவீதிகள்-தெற்றிகள்-உற்சவவீதி-சாலரங்கள் - பெரியவீதி கள்-நாற்சந்தி-முச்சந்தி-அம்பலம்-சபைமேடை - நாடகசாலை-முனிவர்வீதி-பிராமணர்வீதி-அரசர்வீதி-வைசியர்வீதி-வேளாளர்வீதி-சூத்திரவீதி-பா ணக்கூட்டம்-தேர்ச்சாலை-குதிரைச்சாலை-பள்ளிக்கூடம்-அன்னசத்திரம் முத லிய எல்லாஞ் செய்வித்துத் துணிகயம்-கீழ்நீர்க்காவல்-பூவோடை-குளம்-பொய்கை-நந்தவனம்-பூஞ்சோலை-துடைவை-உப்பரானம்-இவைகளுந்தம் அந்தக ருக்கு அழகாகச்செய்வித்துக் குலசேகரபாண்டியன் தனக்கும் அரண்மனை

முதலியவைகள் ஈசானதிசையில் செப்வித்துக்கொண்டு அப்பட்டணத்துக் குச் சாந்திசெய்ப ஆலோசிக்கும்போது சோமசுந்தரக்கடவுள் தெரிந்து வெளிவந்து தமது பொன்னிறமான சடையில்முடித்த சந்திரனது புத்தமுதத் தைச்சிந்த அவ்வமுதஞ்சென்று அறிவுருவமானதமதுபாதத்தை அடைந்த வர்களைத் தாம் சிவமயமாக்கிஞற்போல அந்தப்பட்டணத்தைச் சாந்திசெ ய்து தன்போற் பரிசுத்தமாய் மதுரமயமானதிலே அதற்கு மதுராபுரியெ ன்று பேரிட்டுக் கீழ்த்திசையில் ஐயனாரும், தென்றிசையில் சப்தமாதரும், மேற்றிசையில் விஷ்ணுவும், வடதிசையில் துர்க்கையும் காவலாக நிலைபெற நிறுத்தி யானைப்பிடரியில் பொன்மலை யிருந்ததுபோல விளங்குகிற கோபி லில் மதுரேசனைச் சாஸ்திரோக்தமா யருச்சனை செய்வதற்குப் பொய்யில் லாத வேதாகமப்படி நடக்கவல்ல பெரியோர்களாகிய ஆதிசைவர்களைக் கா சியிலிருந்து வருவித்து மதுரையில் நிலைபெறச்செய்து உத்தம குலத்தின ராகிய நால்வகைக் குடிகளும் உயர்வுந் தாழ்வுமாகக் கலந்த புறக்குடிகள் மூன்றும் வேதநெறி பிசகாமல் மநுநீதிப்படிநடக்க வைதிகதருமமும், சைவ தருமமும் சிறக்க உலகத்தின் முகத்திலே திலதமிட்டாற்போல பட்டணத் தை வலஞ்செய்து அன்றுமுதல் பாண்டியன் மங்களவாத்தியங்கள் முழங்க நல்ல சுபதினத்தில் குடிபுகுந்து பரமசிவனது கோயில் மூன்றங்கமும் கு றைவுபடாமல் பூசைநடக்க விஷ்ணுவைப்போல குலசேகரபாண்டியன் அர சாட்சிசெய்து சிலகாலத்துக்குப்பின் மலயத்துவச பாண்டியனைப் பெற்று வளர்த்து அவனுக்குப்பட்டங்கட்டி ஒருநாள் கடவுள்கோயிலிற் சென்று வணங்கி மூவலஞ்செய்து ஒப்பில்லாத பேரின்பமாகிய அருணிழலெய்தி ஒன்றியொன்றுநிலையில் நின்றனன்.

திருநகரங்கண்ட படலம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

நான்காவது

தடாதகைப்பிராட்டியார்

திருவவதாரப்படலம்.

கலி விருத்தம்.

கன்னியொருபங்கினர்கடம்பவனமெல்லா
நன்னகரமானதுநவின்றுமுலகீன்ற
வன்னமகளாகியமலயத்துவசனுகுந்
தென்னனிடைவந்துமுறைசெய்ததுரைசெய்வாம்.

இதன்பொருள்.

பார்வதியை ஒருபாகத்திலுடைய சோமசுந்தரக்கடவுள் வீற்றிருக்கும் கடம்பவனமெல்லாம் நல்லநகரமாகிய திருவிளையாடலைச் சொன்னேம், இவ்வுலகங்களை ஈன்றதாயாகிய மீனாட்சியம்மையானவள் மலயத்துவசனென்னும் பாண்டியனிடத்தில் புத்திரியாகி வந்து முறைசெய்தளித்த திருவிளையாடலை யினிச்சொல்லுகிறோம்.

மதுதருமசாஸ்திரமானது சந்தோஷித்துத் தன்வழியே நடக்கும்படியாகச்செங்கோல்செலுத்துகின்ற பரிசுத்தனை மலயத்துவசனென்று. வெற்றிமாலையால் அலங்கிருதனும், கனிந்த அமுதம்போலும் கிருபைக் கிருப்பிடமாய், காணுதற்கு நல்லவனும், வடமொழிக்கடலுந்தென்மொழிக்கடலுங் கடந்து மன்மதன்போலும் வடிவுள்ளவனும், காமவிதைதழைக்கிறநிலம்போலும் பதினுயிரம் மனவியருள்ளவனும், சூரியகுலத்திற்பிறந்த சூரசேனமகாராஜன் குமாரியான காஞ்சனமாலையை விவாகஞ் செய்துகொண்டு சோமசுந்தரக்கடவுளைத் திரிகாலமும் வந்து சேவிக்கும்செயலைக்கற்றவனும், அநேக காலம் பிள்ளையில்லாமல் அநேக தருமங்களைச்செய்து வேதாகமப்படி தொண்ணூற்றொன்பது அசுவமேதயாகமுஞ் செய்துமுடித்தபின் இந்திரன் வந்து இன்னம் ஒருயாகத்தையுஞ்செய்து முடிப்பாயாலை எனதுபதவி நொடியளவில் மாறுமாகையால் அது செய்யவேண்டாமென்று தடுத்து நீ நல்லகாரியத்தைச்செய்யத் தொடங்கினதினாலே அதற்குத் தகுதியாக உலகமெல்லாம் மகிழும்படியான பிள்ளையைத் தருகிற யாகத்தைச்செய்தால் நல்லபிள்ளையைப் பெறுவாயென்று புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்யச்சொல்லி இந்திரன் போனபின்பு வேப்பமாலையையணிந்த மலயத்துவசபாண்டியன் அந்தயாகத்துக்கு வேண்டியவைகளெல்லாங்கொண்டு அந்த நியமத்துக்குத் தகுதியான தனது தேவியான பொன்மாலையுடனே யாகசாலையிலிருந்து இந்திரதிக்கைநோக்கி வைதியர்கள்சொல்லிய சடங்கின்படி உதாத்தம் அநுதாந்தக்கிரமமான மந்திரங்களும் ஆகுதிகளுக் குரியவைகளுஞ் சேரச்சொல்லி

வேள்விவளர்க்க அந்தவேள்வியில் புகை ஆகாசமும்-பூமியும்-திசைகளும் பரவிப்போர்வைபோல மறைக்கப் பின்னும் குடங்குடமாக நெய்யும்-பொரியும் சமித்துக்களும் தேவர்களுக்குப் பிரீதியாக தேவாமிர்தம்போல ஆகுதிகொடுத்துப் பரமசிவன் திருவாய்மலர்ந்தருளிய வேதவாக்கியப்படியே நெய் நிரம்பப்பெய்து வேள்வியில் அக்கினியை யதிகப்படுத்தும்போது பாம்பலங்காரப்பரஞ்சோதி தனியாகவும், இமவான் மனைவியாகிய மேனைதலைகுனியவும், மலயத்துவசபாண்டியன் வலதுதோள் துடிக்கவும், பொன்மலை கொங்கைகள் ததும்பித் தீம்பால்வெள்ளம் பெருகவும், அவனிடக்கண் துடிக்கவும், இந்தப்பாண்டிநாடே யல்லது எந்தநாடும் மகிழ்ச்சி பெருகவும், சைவமுதலிய தவமார்க்கங்களுயரவும், பாபங்கள் கெடவும், புண்ணியங்கள் வளரவும், தெய்வவேதங்களும், தெய்வதுந்துபியும் திசைகளெல்லா முழங்கவும், தேவரம்பைகள் கூத்தாடவும், அந்த மதுராபுரியிலுள்ளவர்கள் திரிகரணங்களும் வேறுபடாமல் தங்களை யறியாத ஆநந்தத்தை யடையவும், பதினெண்பாஷைகள் வழங்குகிற நாடுகளில் தமிழ்நாடே சிறப்பையடையவும், தமிழ் நாட்டு மூவேந்தரில் பாண்டியர்கள் மென்மேலான பெருமை யடையவும், அக்கினிதேவன் இதுவரையிலுஞ்செய்த தவப்பயனை யடையவும், மாந்தளிர் போல நெருப்புக்கொழுந்துவீசுகிற அந்த யாககுண்டத்தில் நெருங்கியதளிர்களையுடைய ஒருவாசனைக்கொடி அதேகவிதழ்களையுடைய தாமரைமலரை அப்பொழுது மலர்ந்துகொண்டு முளைத்தெழுந்தாற்போல உலகத்தில் தருமத்தின் வழியிற் சென்றோருக்கு இகபரபோகவீட்டை யருளுமம்மை சூழியக்கொண்டை வட்டமதியின் மாசுபோலவும், அதிலே தொங்கவிட்ட முத்துமாலை அந்தச் சந்திரனிலிருந்து வருகிற கிரணத்தைப்போலவும், அமுதம்போலும் இனியகுதலைமார்பின் வழியேயொழுகி முத்துமாலையோடு விளங்கச் சூரியப்பிரகாசத்தை வென்று பவளமாலிகை பொளிவீச சிறிய இடையிற்சூழ்ந்த சிற்சுடையும் நவரத்னமேகலையும் அசைய காதிற் குண்டலமுங் குதம்பையும் இருளைப்போக்கிச் சிறிய தோள்களைத் தொட்டாட தெளிந்த வமுதம்போல மலிசிந்த இளநகைதோன்ற மூன்று வயதுள்ள மூன்றுமுலையோடுங்கூடிய பெண்பிள்ளையாகிச் சராசரங்களை யெல்லாம் பெற்ற உலகமாதாவாகிய உமைபவள் விளங்கினாள். சிறியதளிர்போலு மெல்லடியி லணிந்த சிறியமணிச்சிலம்பும், சதங்கையும் ஒலிக்க, நல்லகொடிபோலசைந்து தளர் நடையிட்டு இளமுறுவல்தோன்ற பெண்ணைகப் பிறந்து பெரும்பயனைப்பெற்ற பொன்மாலை மடியில்வந்து ஒருபெண்குழந்தையா யிருந்தனள்.

அப்படியிருந்த பிள்ளையைச் செவ்வாய் வெளிவறுமலும், முலைக்கண் கருகாமலும், கருங்கண்பசவாமலும், பத்துமாதந்தாங்கி வயிறுவருந்தாமலும் பெற்றுக்கொண்டு எடுத்தணைத்து உச்சிமோந்துவாய்முத்தங்கொண்டுபார்வதியைப்பெற்ற மேனைபோல மகிழ்ச்சியடைந்தாள். பராசத்தி-ஆதிசத்தி-இச்சாசத்தி-ஞானசத்தி-கிரியாசத்தியாய் உலகங்களை யெல்லாம் படைத்தும், காத்தும், அழித்தும், மறைத்தும், அநுக்கிரகித்தும், தனதுவடிவுவேறுகி வாக்குக்கும் வேதத்துக்கும் எட்டாத ஒப்பற்ற காரணியானவள் திருமகளாய்வர இந்தப்பாண்டியன் செய்த தவமோ போதுமானதன்று. இந்தி

ரியகரணங்களெல்லாங் கடந்து ஆனந்தவெள்ளமாகிய பரஞானமே வடிவாக வுடைய ஒருமுதல்வி தனது கருணையினாலே இன்று எல்லாருமறிய ஒருபெண்பிள்ளையாளுள். அப்படியவள் பிள்ளையான கிருபையையும், தன்மனைவி செய்த தவப்பேற்றையும், மலையத்துவசன் ஆலோசியாமல் நான் பிள்ளையில்லாமல் அநேககாலம் வருந்தி அரியதவங்களைச் செய்து பின்பு பிள்ளைப்பேறுண்டாக இந்த யாகத்தை செய்தேன். இதயாகமும் ஐயோ! ஒருபெண்குழந்தையைத் தந்தது. அதப் பெண்குழந்தையும் முலை மூன்றுள்ளதாய் என்பதைவர் நகைக்கலாயிற்றென்று துன்புறும்போது சிவனருளாலே ஆகாயத்தினின்று மோர்வாக்கு இராசனே! உனது குமாரியைக் குமாரனுகவெண்ணிச் சடங்குகளெல்லாந தப்பாமல் வேதவிதிப்படி செய்து தடாதகையென்று திருநாமமிட்டு உனது முடியும் சூட்டக்கடவை சூட்டினபின்பு குமாரிக்கு நாயகன் வாக்காணும்போது நடுமுலை மறைந்துபோம் நீ கிலேசியாதையென்று உண்டாயிற்று.

அவ்வசரீரிவாக்கைக் காதுநிரம்பவும் அன்பும் மகிழவும் உள்ளத்தில் நிரம்பவும், உலகமெல்லாம் திரிகரணங்களொருமிக்கவும், ஆனந்த கண்ணீர் உடல்நிரம்பவும், கடவுளைத துதித்து யாகத்தை முடித்தெழுந்து மனைவியோடு யாகசாலையைவிட்டு இருபுறத்திலும் வாத்தியங்கள் ஒலிக்கத் தனதரண்மனையிற் சென்று மங்கல வாத்தியத்துடனே எதிர்கொள்பவர் முகத்தில் மகிழ்சிபெருக இராஜரீகஞ் செய்வும் மண்டபத்தில் சிங்காசனத்தின்மேலிருந்து கற்றுக் கேட்டு வல்லான வைதிகர்கள் கையில் சுவர்ணமழையைப் பெய்து மற்றெல்லாருக்கும் போதும்போது மென்னக் கொடுத்து மான்மழுவேந்திய பெருமானுடைய சந்நிதானத்துக்கு அதிக சிறப்புகள் பெருகக் கொடுத்து பின்னும சிறையில் கிடப்பவரைச் சிறைநீக்கி ஏழுவருஷம் குடிகளிடத்தில் வாங்குகிற இறைபொருளை விட்டு அயல்வேந்தரிடத்துக்கொள்ளுந் திறையைவிட்டு ஆயத்துறைப்பொருளையும் விட்டு கோயில்களும் தருமசத்திரங்களும் பெருகச் செய்யுங்களென்றும், சத்துருத் துவேஷங்களையும் விடுங்களென்றும் வள்ளுவனுலே பறையறையச்சொல்லி பொக்கிஷசாலையைத் திறந்துவிட்டுப பலரும் வேண்டியவளவிற் கொள்ளக் கடவரென்று சிலர்க்கு ஆடையாபரண முதலிய வெகுமதிகளைச் செய்து இராஜவீதியெல்லாம் சந்தோஷமாய் எண்ணெய்விழா சுண்ணவிழாமுதலியஆடச்செய்து அந்தம்துராபுரியேயன்றி எல்லாப் பட்டணங்களும் சந்தோஷிக்க மலையத்துவசபாண்டியன் பெருங்களிப்படைந்து கடவுளருளியபடியே தன் பிள்ளைக்குச் சாதகர்ம முதலிய கிரியைகளெல்லாஞ் செய்து தடாதகைப் பிராட்டியா ரென்று திருநாமமிட்டு வேதங்களும் உண்மையைக் காணக்கூடாத தேவியை .இமவானையும் மேனையையும்போல வளர்த்துக் களிக்குங் காலத்தில்.

பிரமாண்டங்களெல்லாம் சிறுவீடாக விளையாடுகிறவளாக உலகமாதா இப்போது தடாதகையாய் மழலைபபிள்ளைகளுடனே வீதியில் வந்து மணலாலேசிறுவீடுகட்டி மணற்சோறுக்கித் தன்னைடாத்தபிள்ளைகளுக்கு விருந்திட்டும், முருகவேளும் வாய்வைத்தருந்தாத தனதிள முலைப்பாலைப் பாவைக்குக் கொடுத்தும், பொன்மாலையை மகிழ்ச்செய்தும், தோழிமார்கள்

கண்களிகூர அவர்கள் கற்க ஆடிக்காட்டுகிறவள்போல கழங்கு பந்து அம்மானைகளாடியும், இருவினையாகிற கயிறுபூட்டி மேலுலகமும் கீழுலகமும்சென்று வர நம்மை ஆட்டுகிறதுபோல முத்துவடம்பூண்ட ஊசலாடியும். இனி தனது தந்தைக்கு மகிழ்ச்சிசெய்வாளாய் மெய்யான வேதங்களும் அறுபத்துநான்கு கலைஞானங்களுந் தெளிந்து, யானை-இரதம்-குதிரை எற்றங்களும் தனுர்வேதமும் தெளிந்து வருகிறதைக்கண்டு மலயத்துவச பாண்டியன் வேதவேதாந்தங்களெல்லாம் மேகலையாக இடையில் தரித்த தனது சிறுமகளுக்கு மகுடஞ்சூட்டுதற்கு நல்லநாள் நியமித்துத் திசைகளுக்கெல்லாம் ஓலைபோக்கி அரசர்களை வருவித்துப் பட்டணமெல்லாந் திருவிழாவாக அலங்கரித்துச் சுமதியாகிய மந்திரியால் அபிஷேகத்துக்கு வேண்டுவனவெல்லாஞ் சேகரித்து மங்கல வாத்தியங்கள் முழங்க யானையின் தலைமேற் பொற்குடங்களில் கங்கைமுதலிய தீர்த்தங்களெல்லா நிரப்பிப் பூசித்து மந்திராக்கினிவளர்த்து அமுதம் நிவேதித்து செம்பொன்னலும் இரத்தினங்களாலுஞ்செய்த சிங்காசனத்தை விசுவாசத்துடனே பூசித்துத் தெய்வத்தைத் துதித்துத் திருமுடியை மதயானையின்மேல் வைத்துப் பட்டணப் பிரவேசஞ் செய்து பூசித்து இரத்தினங்களாலே ஐந்து தலைகளும் பொன்னுடலுமான நாகப்படங்களைப் பரப்பிக் குடைபோற் கவியச் சிங்காதனத்தின்மேல் வைத்துத் தடாதகைப் பிராட்டியாரைச் சுவர்ணகும்பத்தால் நன்னீர் அபிஷேகஞ்செய்து தேவர்கள் மந்தாரப் பூமழைபொழிய முனிவர்கள் மங்களவார்த்தை சொல்ல, தெய்வ ரம்பைகள்போல்வார் நடனஞ்செய்ய ரிஷிபத்தினிகள்பல்லாண்டுபாட, வேதங்கள் முழங்க மாணிக்கக் கிரீடஞ் சூட்டிக் காருண்ணிய ரூபியான தடாதகைப்பிராட்டியாருக்குத் தனதாசாட்சியும் மந்திரி முதலியோர் தமது காரியங்களைச் செய்யவும், செங்கோல் கொடுத்து பூரணச் சந்திரன் போலும் வெள்ளைக்குடை நிழல்செய்யவும் அந்தச் சந்திரகிரணங்கள்போல இரண்டு பக்கத்திலுஞ் சாமரம் வீசவும் தேவர்கள் பூமழைபொழியவும், வெள்ளிமலை மேல் சூரியனுதயமானதுபோல வெள்ளையானைமேலேற்றி வேப்பமாலையணிந்து பெண்ணரசியை மங்களவாத்தியங்கள் முழங்க நகரை வலஞ்செய்வித்து அசரீரி சொல்லக்கேட்ட அப்போதிலும் இப்போது திருமகள் விளங்குகிற செவ்விநோக்கிப் பேரானந்தம் அதிகரித்துப் பின்பு சிலநாள்கழித்து வீரலட்சுமி கொண்டாட தன்மேலுள்ளளாற் சுமந்த உலகத்தையெல்லாம் தன்மகளுக்குக் கொடுத்து மலயத்துவசன் வாளுட்டைடப்பெற்றான்.

பின்பு தேனிற்சுவைபோலவும், பூவில்மணம்போலவும், பரமசிவன் இடப்பாகத்தைவிட்டு நீங்காத நமதுதாயாகிய தடாதகைப்பிராட்டியார் தந்தைக்கு அந்திய காலக்கடன்களெல்லாம் வழுவாது செய்து பின்பு இரத்தினசிங்காதனத்தின்மேலிருந்து உலகமெல்லாம் ஒரு குடைநிழலி லாள்வாளாய் உலகத்தரசர்கள்வணங்க உலகத்தை மநுநீதி வழுவாமற் காத்து மலயத்துவச பாண்டியன் சுவர்க்கலோகஞ் சென்றபின்பு பரமசிவன் தமதுள்ளத்தில் மதிக்கின்ற அரசவம்சம்போல பாண்டியன் பெற்ற கன்னிப் பெண்ணரசியான தடாதகைப் பிராட்டியார் ஆக்ஞாசக்கரஞ் செலுத்திய பெருமை யெப்படியென்றால், சூரியனுதயமாக ஐந்துநாழிக்குமுன்னே நாகசுரமுதலிய நல்லி

சைகேட்டு எழுந்து திருமஞ்சனமாடி, தங்கள் அரசகுலத்துக்குத்தக்க நித் திய கருமாநுஷ்டானங்களும் தேவபூசையும் குறையின்றி முடித்து மெய்ஞ் ஞானிகள் சூழ்ந்துவா, சிவபெருமான் எழுந்தருளிய திருக்கோயிலுக்குப் போய் கடவுளை விதிப்படி வணங்கி மீண்டு தனதரண்மனையில் அரசாட்சி செலுத்துங் கொலுமண்டபத்தில் புஷ்பங்களா லலங்கிருதமான ரத்தினசிங் காதனத்தின்மேல் அமுதத்தாற்செய்த பாவைபோலிருந்து அனிந்திதையும் கமலினியும் உலககன்னிகைகளாகவந்து அடப்பையுங் காளாஞ்சியுந்தாங்க, சரஸ்வதியும் லட்சுமியும் அப்படியே உலககன்னிகைகளாக வந்து சாமரம் வீசவும், கண்ணப்பநாயனர் அருச்சித்தமலர்கள்போல சோழன் சேரன்முத லிய அரசர்கள் தங்கள்முடிமாலைபாதத்தில்வீழ வணங்கி அருளின்படி எவல் செய்ய கத்தி கேடகங்கள் கொண்டு குவித்த கையினராய்ச் செகதீஸ்வரியா ன தடாதகைப்பிராட்டி எப்போது கிருபாநோக்கஞ் செய்வாளோ வென்று இமையாமற் பார்த்து அவள் பார்க்கும்போது இரண்டு கையுங் குவித்துப் பிழைத்தோமென்று வாய்பொத்தி உழையர்கள் எவல்செய்யவும், கஞ்சுகிகள் அவன் மராடராஜன், அவன் கருடராஜன், இவன் விராடராஜன், இவன் குருநாட்டரசன், இவன் சேரன், இவன் சோழன் என்று ஐம்பத்தாறு தே சத்தரசர்களையும் பிரம்பாற் குறித்துக் காட்டவும், செந்தமிழும் வடநூலும் முடிவுதெரிந்தவர்களும், வேதசாஸ்திர முதலிய கலைஞானந் தெரிந்தவர் களும், ஆறுசமயநூற் றெரிந்தவர்களும், இருவகைப்பற்று விட்டவர்களும், சைவமாதர்களும், மெஞ்ஞானத்தால் அஞ்ஞானத்தை வென்ற வீரர்களும், சமுகத்திலிருந்து நன்முக தெளிவிக்கும் ஆசாரியர்களும், பஞ்சாங்கத்தால் முக்காலமுந்தெரிந்த புரோகிதர்களும், பின்னனுபவமும் முன்னனுபவமுந் தெரிந்து நடத்தும் சுமதி முதலிய மந்திரிகளும் சூழ்ந்திருக்கப் பிராமணர் கள் தொழிலாளிகள் தேவஸ்தானபூசை-தருமசத்திரம், விரோதமில்லாத குடிகள் முதலானவர்களை மந்திரிகளாலே தெளிந்தும், ஒற்றர்களாலே யறிந் தும், யாதேனுங் குறைவுண்டாலுல் தண்டித்துத்தீர்த்தும், உத்தேசம்-லக்ஷ ணம்-பரிக்ஷையென்னும் மூவகையாலே நியாயநூலே அநுவதித்து முறைப்படி கண்டித்துக் கிரமத்தினிறுத்தித் தார்க்கீகர்கள் தர்க்கஞ்செய்யுங் கூட்டத் தில் மகிழ்ச்சிகொண்டும், மகாவிஷ்ணு முதலிய தேவர்கள் தங்கள் வலிமை யாற்கடைந்தெடுத்த அமுதமெல்லாம்வாரி அஞ்ஞானந்தீரக்கற்ற வித்வான் கள் பொழிவதுபோல கவிகணி லுண்டாக்கி ஊட்ட காதுகணிரம்பவுண்டும், பிராமணர்கள் சைவர்கள் பெரியோர்கள் எல்லாருக்கும் சுயம்பாகிகள் தே வாமிர்தத்தையும் வெறுக்கச் சமைத்த முல்லையரும்புபோன்ற அன்னமுத லிய நால்வகையுண்டியுங் கொடுத்து அவர்கள் சொல்லும் உபசாரமாகியவிரு ந்துண்டும் மத்தியானகாலத்தில் புராணிகர்களாலே பதினெண் புராணங்கள் கேட்டும், மநுமுதலிய தருமசாஸ்திரங்கள் கேட்டும், பின்பு சித்திரப்பிர தமைபோல நாடகப்பெண்களாடலும் பாடலுங் கேட்டும், இவ்வாறு முன் னோர்கள் செய்ததருமபரிபாலனமும், வேறேதருமங்களும், யாகவகைகளும் செய்வித்தும், செல்வமுங் கல்வியும் தனக்கிருகண்களாக வளர்த்து வருகிறு ளென்று சொல்வது பெரிதோ மும்மூர்த்திகளாலே முத்தொழிலையு நடத்து

கிழவனென்று சொல்வதும், ஆதிமத்தியாந்தரகிதையான தேவிபுகழுக்கு ஈடன்றென்றல் புல்லறிவினரைய என்னுற்சொல்லிமுடியுமோ முடியாது. தடாதகைப பிராட்டியார் கன்னியாகயிருந்து அரசாட்சிசெய்ததனாலே அந்நாட்டுக்கு கன்னிநாடென்று பெயராயிற்றென்ல அகத்திய முனிவர் சொல்ல, முனிவர்கள்கேட்டு மனங்களித்து ஐயா முன்னே தக்கன்செய்த தவத்தாலே தாக்ஷாயணியாகவும, பருவதராஜன் செய்ததவத்தாலே பார்வதியாகவும்வே தாந்தங்களுக்கும் எட்டாததேவி அவதரித்தாள் இங்கு மனிதனரைய மலையத்துவசன்மகளென்று பிறக்கவேண்டிய காரணமென்ன சொல்லியருளவேண்டுமென்ன.

அதற்கு அகஸ்தியமகாமுனிவர் கேளுங்கள் முனிவர்களே; முற்காலத்தில் விச்சுவாவசு என்னும் விஞ்ஞையன் பெண்ணரைய விச்சாவதி என்பவள் பார்வதி பக்தியுள்ளவளாய் வருகிறவள் ஒருநாள் தந்தையை வணங்கி ஐயா நான் பார்வதியைப் பூசித்து ஈடேறவேண்டுகிறேன கையால் அந்த வுமையவள் மந்திரத்தை எனக்கு உபதேசியுமென்று தந்தையா லுபதேசிக்கப்பெற்றுப் பின் றும் ஐயா நான் உமையைப் பூசிக்க இவ்வுலகிற் சிறந்த தலம் யாதென்று கேட்க தந்தை உலகத்தில் பெரியோர்கள் எப்போதுஞ் சஞ்சரிப்பதாய் துவாதசமுடிவென்றும், பூலோக சிவலோகமென்றும் சொல்லத் தக்கது மதுரை. அதுவேவா நிநிலோகங்களிலும் சிறந்த சத்திபீடம் அறுபத்து நான்கிற்கும் முதற்பீடம், வேண்டினோருக்குப் போகமும், வீடும், சித்தியும் தரத்தக்கது. பின்னும் இரவும் பகலும் சுவர்க்கலோகத்திற் கதவடையாமல் தேவர்கள்வந்து பூசித்து உமாதேவி அருளுகிற சித்தியால் வினையை வெல்வார்கள். அதுவுமல்லாமல் என்தந்தை முதல் ஐந்துபேர்கள் பூசித்து அந்த மதுரைபில நல்ல வரங்களெல்லாம் பெற்றார்கள். சராசரங்க ளெல்லாம் பெற்ற அங்கயற்கண்ணம்மை தன்னைப் பூசிப்போர்க்கு வேண்டிய இகபரபோகங்களைக்கொடுத்துப் போருள்செய்து விளங்குகின்றளென்று சொன்ன தந்தையைவணங்கி அவரனுமதிபெற்றுக்கொண்டு ஒருபூங்கொடிபோல்நடந்து காடு-மலை-ஆறுகள்கடந்து நமது ஆதிபராபரையினுடைய பரிபூரணகிருபை தங்கிய அந்தமதுரையில் வந்து பெண்யானை தேடுதல்போல பொற்றமரைக்குளத்தில்முழுகி வேதக்கொழுந்தாகிய கடவுள் இடப்பாகத்தில் எழுந்தருடர்ந்த பொன்மலைவல்லியாகிய அங்கயற்கண்ணியை வணங்கித் தைமாதம் தொடங்கி பகலுணவு-இராத்திரிபோஜனம்-அல்லதுகிடைத்தசோறு-இலை-காய்-கனி-கிழங்கு-மாஎள் முதலிய வுணவுகளும் சாந்திராயணம் - பஞ்சகௌவியம்-பால்-நன்னீர்-தருபை-மேனுனிநீர்-வாயு இவைகளைப்புசித்தும், பட்டினிகிடந்தும், இப்படி பனிரண்டுமாதகாலம் விரதங்கள் செய்து இளைத்து மேல்வரும் தைமாதத்தில் சந்நிதிக்குப்போய்சேவித்துநின்று மாந்தளிர் போலும் நிருவடிகளையும், இருமணிக்கோவைசூழ்ந்த மின்போலும் இடையையும் நூலிழையும் நடுப்புகுதாத நிருக்கொங்கைகளையும் வரிசையாய்ப் பொன்வளையல்களணிந்த செங்காந்தள்மலர்போலும் திருக்கைகளையும், திருமங்கிலியக் கழுத்தையும், பூரணசந்திரன்போலும் திருமுகத்தையும், வண்டுகள்இன்னிசை பாடுகின்ற இருண்ட திருக்குழற்கற்றையையும், இப்படிப்பா

தாதிகேசபரியந்தம் தேவியைத் தியானித்து வீணைக்கடவுளைத் துதித்துக் கைகுவித்து இளஞ்சூரியன்போலு நிறத்தையுடைய மகமல்பட்டால் அளவுக் கிசையத்தைத்துச் செம்பொன்மயமான கவசத்தை அவிழ்த்துமுல்லைப்பூமா லையை முடியிற்சூட்டிச் சுரைப்பத்தர்பின்னேதான்ற பூங்கோதையைப்போ ருந்திய பிடரியில்கிடக்க வீணையைத் தோள்மேலணைத்துமீன்போலும் கண் களையுடைய விச்சாவதி தந்திகளை முறுக்காணிகளால் சுதிகூட்டிப பண்விள ங்கத் தெரித்துப் பாடத்தொடங்கினள் எப்படியென்றால்,

ஒளியாலுலகீன்றயிரனைத்துமீன்போற்செவ்வியுறநோக்கி
யளியால்வளர்க்குமங்கயற்கணன்னைகன்னியன்னமே
யளியாலிமவான்றிருமகளாயாவிபன்னமயில்பூவை
தெளியாமழலைக்கிளிவளர்த்துவிளையாட்டயருஞ்சபலென்னை.

அண்டக்குவைவெண்மணற்சிறுசோறுக்கிதனிவேவிளையாடுங்
கொண்டற்கோதாய்படியெழுதலாகாவுருவக்கோகிலமே
கொண்டற்குடுமியிமயவரையருவிகொழிக்குங்குளிர்முத்தால்
வண்டற்குதலைமகளிரொடும்விளையாட்டயரும்வனப்பென்னை.

வேதமுடிமேலானந்தவுருவாய்நிறைந்துவிளையாடு
மாதரசேமுத்தநகைமானேயிமயமடமபிலே
மாதரிமவான்றேவிமணிவடந்தேய்மார்புந்தடந்தோளும்
பாதமலர்சேப்புறமிதிததுவிளையாட்டயரும்பரிசென்னை.

இப்படி விச்சாவதி மீளுட்சியைவீணைகானத்தால் தோத்திரஞ்செய்ய ஆனந்த மெய்யன்பாகிய வலைக்குள் அகப்படுகின்ற அங்கயற்கண்ணம்மை யாகிய கிருபாசாகரியருபி சூழியக்கொண்டைமுடித்த சிறியதிருமுடியும்கொவ் வைக்கனிபோலும் திருவாயில் மழலையமுதஞ்சிந்த மூன்றுவயது பச்சிளம் பெண்பிள்ளைவடிவாய்ச் சந்நிதிமுன்னே வேண்டும்வரமருள வந்துநின்றாள்.

அப்படி வந்துநின்றமூன்றுவயதுக் குழந்தையைவிச்சாவதி சாஷ்டாங்க வந்தனஞ்செய்ய அவளை லோகமாதாவானவள் பார்த்தருளி விச்சாவதியே! நீவேண்டியதென்ன சொல்லென்று கேட்க அதற்கு விச்சாவதி தாயே! எக்காலத்தும் உமதுபாதகமலங்களினீங்காத பரிபூரணபக்தியை அருளவேண்டுமென்ன, அப்படியே தந்தேன். இன்னமுனக்கு வேண்டியதேதென்னி தாயே! இப்போது நான்கண்ட பிள்ளைவடிவாய் என்னிடம்வந்து அருள் சுரந்து மடியிலிருக்கத் திருவுள்ளஞ் செய்யவேண்டுமென்று வணங்க, சிவபரம் பரையாகிய தேவி சம்மதித்து விச்சாவதியே! நீ மலையத்துவச பாண்டியனுக்கு மனைவியாகப்பிறந்து வந்தபோது நான்பிள்ளையாய் உன்மடியில்வந்திருப் பேனென்று அருள்செய்ய அப்படியே விச்சாவதி பொன்மாலைபாய் வந்த காலத்து மதுரைமீளுட்சி தடாதகைப்பிராட்டியாக அவதாரஞ் செய்தாளென்று தம்மைக்கேட்ட முனிவர்களுக்கு அகத்தியமுனிவர் அருளிச்செய்ய அதையம்முனிவர்கள் உள்ளபடி நன்றுபறிந்தார்கள்.

தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம்
முற்றிற்று.

உ

சிவமயம்.

ஐந்தாவது

திருமணப்படலம்.


அறுசீராடியாசிரியவிருத்தம்.

தரைபுகழ்தென்னன்செல்வத்தடாதகைப்பிராட்டிதாளின
திரைசெய்நீர்ஞாலங்காத்தசெயல்சிறிதுரைத்தேன்றெய்வ
விரைசெய்பூங்கோதைமாதைவிடைபவன்மணந்துபாராண்
டரசுசெய்திருந்தகோற்றமறிந்தவாறியம்பலுற்றேன்.

இதன்பொருள்.

இவ்வுலகத்தார் புகழாநின்ற மலயத்துவச பாண்டியராசன் புத்திரியாகிய தடாதகைப்பிராட்டியார் அலையையீசுகின்ற நீரையுடைய கடல்சூழ்ந்த பூலோகத்தைக்காத்த திருவிளையாடல் சிறிது தெரிந்தமட்டிற்சொன்னேன். இனித் தெய்வமணங்கமழுகின்ற பூமாலையணிந்த அளகத்தையுடைய அந்தத் தடாதகைப்பிராட்டியைக் கயிலாசபதியானவர் திருமணங் கொண்டருளிப் பூமியையாண்டு அரசுத்தன்மையை நடத்திக்கொண்டிருந்த திருவிளையாடலை அறிந்தமட்டில் சொல்லுகிறேன்.

இவ்விதமாக அகத்தியமுனிவர் சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறார். கேளுங்கள் முனிவர்களே! லோகமாதாவானவள் பெண்ணாசிபாகி ஆக்ஞாசக்கரம் பகையிருளைப்போக்க வெள்ளைக் குடையாகிய சந்திரன் குளிர்ந்த நிழலைக்கொடுக்க மனுநீதிப்படியே பெரிய உலகங்களெல்லாம் தனியரசு நடாத்திவருங்காலத்தில் திருவிடை இளைத்துமறையவும், செம்பொன் மலைபோலக் கொங்கைகள் வளரவும், கரியகூந்தல் பாதிராத்திரி இருளைவெல்லவும், வீணைபோல் கொஞ்சுதலைச்சொல்லும் இனிய நகையையுமுடைய பெண்ணரசுக்குத் திருக்கல்யாணகாலம் நேரிட்டதாயிருக்க, அந்தக் குளிர்ந்த சந்திரனைக்கொண்ட கொம்புபோன்ற தடாதகைபப்பெற்ற பொன்மாலையானவள்கண்டு நிறையப்பூத்து வளர்ந்தகொம்புபோன்ற வனைக்குக் கன்னிப்பருவம் பழுக்குங்காலம்வந்தும் இன்னும் கல்யாணம் கூடாதிருக்கின்றதே யென்று கிலேசித்துச் சொல்லக்கேட்டு தாயே! நீநினைத்த எண்ணம் கூடுங்காலம் வரும்போது கூடும், இப்போது நீகிலேசிக்கவேண்டாம் நான் சென்று எட்டுத்திசைகளும், சமுத்திரங்களும், எனது விசையபம் நிலைபெறச் செய்துவருகிறேன். நீ இங்கிருக்கக்கடவை யென்று தடாதகைப்பிராட்டி விரைவில் எழுந்துவந்து சபைகூடக்கண்ட அரசர்களும் மந்திரிகளும்முதலிய யாவருங்கூடி பிராட்டியின் திருவுள்ளந் தெரிந்து தாவுகின்ற குதிரைகட்டிய தேரைக் கொண்டுவந்து சாரதி நிறுத்த, அத்தேரில் உலகங்களுக்குள்ள இடையூறுதீர எழுந்தருளி சங்கமுழங்கவும், அஷ்டாதச வாத்தியங்கள்



முழங்கவும், வாள்வீரர்கள் வேல்வீரர்களாக சில பெண்படைகளும் தேரே றிச்சூழ்ந்துவர சதுரங்கசேனைகளுஞ்சூழ, மீனக்கொடியும், புலிக்கொடியும், விற்கொடியும், பீலிக்குடைகளும், சாமரங்களும், வேப்பம்பூ மாலையணிந்த தேவி தேரைச்சூழ்ந்துவர வெண்கொற்றக்குடை நிழலிச்செய்ய வேதங்கள் முழங்க, பக்கத்தில் வியாழபகவானெயொத்த சுமதியென்னு மந்திரி கையிற் பொற்பிரம்பை நீட்டிச் சதுரங்கசேனைகளுஞ் செல்லச் சேவகஞ்செய்துவர இந்திரலோக முதலான லோகங்களிலுள்ள செல்வங்களெல்லாங் கொள்ள நினைத்து கெஜபதிமுதலிய வடதிசை அரசர்கள் புஜபலமடங்கவென்று அவ்வரசர்களாலே தேவர்முதலிய சேனைகளும் ஊழியப்பெண்களும் இன்னும் பலபொருள்களுந்திறையாகக் கொடுக்கக்கொண்டு வேறே பகைவரில்லாமையால் திக்குப்பாலகர்களை வெல்லக்கருதி இந்திரதிசையிற்சென்று அவன்சேனைகளோடெதிர்த்து இந்திரன்சூடிவந்த தன்பமாலையற்று அவனது கெருவபங்கமாய் ஊழியப்பெண்களும்-சதுரங்கசேனைகளும் - சிந்தாமணியும் கற்பகமுதலியவுந் திறையாகக்கொடுக்கக்கண்டு அப்படியே மற்றத்திக்குப்பாலகரையும் வென்று அவர்கள் கொடுக்குந் திறைகளைக் கைக்கொண்டு ஈசானயதிக்கிற்சென்று கைலாயத்தைச் சமீபித்துத் தனது சதுரங்கசேனைகளின் முழக்கமும் பல வாத்தியங்களின் முழக்கமு முன்சென்று பரமசிவத்துக் குரைக்கநெருங்கி, மலைகளோடு மலைகள்மோதிச் சண்டை செய்வதுபோல யானைகள் கொச்சித்துப்பாயவும், முதுகில் அம்புறுத்தூணிகட்டி அம்புகள் பூட்டியவில்லுடனே வீரர்கள் இடிபோல்முழங்கிச்சூழ்ந்துகொண்டார்கள்.

அதுகண்ட காவலாளர்கள் திருநந்திதேவரதுசந்நிதியிற்போய்ச்சொல்ல, அப்போது நந்திதேவர் சிவபெருமானுடைய திருவுள்ளந்தேர்ந்து பிராட்டி சேனைகளின்மேல் ஜெபம்பொருந்திய சிவகணங்களை யனுப்ப இரண்டு சேனைகளும் கடலுங் கடலும் பொருதாற்போலக் கண்களில் நெருப்புப் பொறிசிந்த வெகுண்டு சூலங்கள்-மழுக்கள் - தோமரங்கள்-சக்கரங்கள்-பிண்டிபாலங்கள்-கழுக்கள்-வாளாயுதங்கள்-தண்டாயுதங்கள் - கலப்பைகள் - வேலாயுதங்கள் முதலிய ஆயுதங்களை எறிந்து ஊழிகாலத்துக் கடல்போல் வீரர்கள் கொச்சித்து எறிவனவும், செலுத்துவனவும், பிரயோகிப்பனவுமாகிய படைகள் சில இரத்தத்தில்முழுகி வெளிப்படுவனவும், தப்பிப்போவனவும், பட்டுமுறிவனவும், வினைக்கொத்த போகம்போலாகக் காணவந்த தேவர்களின் வாகனங்களில் அன்னமுங் கருடனும் பறந்து ஓடிப்போயின. சிலர் வாகனங்கள் ஆயுதங்களா லழிந்தன. எமனது எருமைக்கடா துர்க்கை பலி கொண்டதுபோல ரத்தத்தைக் கக்கின. அப்போது சுவாமி தரிசனத்துக்கு வந்த விஞ்சையருஞ் அவர்மனைவியரும் இவ்வனர்த்தத்தைக் கண்டு பயந்து வேறுவழியிற்செல்ல சந்திராஸ்திரம் - சூரியாஸ்திரம் - அக்கினியாஸ்திரம்-வருணாஸ்திரம்-நாரசிங்காஸ்திரம்-சரபாஸ்திரம்-வாயுவாஸ்திரம் - நாகாஸ்திரம்-இவைகளை இருதிறத்தாரும் ஒன்றற்கொன்று மாறுகவிட்டுப் போர்செய்யும்போது திருநந்திதேவரைச்சேர்ந்த கணங்கள் முறிந்தோட தடாதகைப்பிராட்டியார் புற்றினின்றும் அரவஞ்சீறி வந்ததுபோல் வில்லில் நின்றும் பாணவருஷங்களை வருஷித்துக் கணங்கஞ் கையிலுள்ள அஸ்திராஸ்திரங்க

ளையெல்லாம் அறுத்து அவர்களை நிராயுதராக்க அவர்கள் மலைகளைவாரிப்பிரா ட்டியார் சேனைகளின்மேல் விடுக்க அவைகளை யெல்லாம்வச்சிராயுதத்தாலே அறுத்துப் பொடியாக்கித் தண்டாயுதத்தாலவர்களையடிக்க அவர்களெல்லா முறிந்தோடிப் போனார்கள். அண்டங்களையும் சராசரங்களையும் உண்டுபெ ண்ணி அவைகளில் எங்கும் வியாபித்திருக்கிற தேவியின் பெருமையை யா ராலே சொல்லிமுடியும். ஆதலால் கணங்கள் ஆயுதங்களுமற்று, விமானங்க ளுமழிந்து, அணிந்தமாலைகளுடன் உதிர்ந்து போர்செய்பமுண்ட புஜவலியுங் கெட்டுக் கோபமுங்குலைந்து, வீரநகையுமிழந்து வீரசிங்கம்போன்ற நடை யும்தளர்ந்து, நிற்கிற நிலையை நிருகந்திதேவர்கண்டு எல்லாமையும் அடிமை யாகவுடைய சிவபெருமானுடைய நிருவடியில்வணங்கி இவைகளைச்சொல்ல கங்காதரனை கடவுள்கேட்டுப புன்னகைசெய்து தருமஸ்வரூபமாகிய சிவ ந்தகண்களையுடைய இடபவாகனத்திலேறி வலிய வில்லும் ஜெயக்ஷத்தரு கிற தேவாஸ்திரங்களையுங் கைக்கொண்டு யுத்தகளத்துக்குவந்து துஷ்டவீர் களோடு போராடி ஜெயங்கொண்டும், இனி யார்வந்தாலும் ஜெயங்கொள்ள வல்லேனென்று பெண்சிங்கம்போல் நிற்கிற தேவி நிருவடியையும்சேவகத்தி றத்தையுங் கண்டார். அவர்கண்டபோதே வீரக்கழலணிந்த ஒரு நிருவடி யும், பாம்பாலிறுக்கி யுடுத்தின புலித்தோலும், வெற்றி மழுவைக்கொண்ட நிருக்கரமும், நிருவெண்ணீறணிந்த அழகியமுன்றாண்மார்பும், சிவந்தசடை க்கற்றையும், தன்னையே பார்க்கின்ற நிருநுதலும்கொண்டு விளங்கு கின்ற தனது வலப்பாகத்தைத் தடாதகைப் பிராட்டியுங் காண கண்டவுட னே தனது மூன்றுமுலைகளிலொருமுலை மறைந்தது, மனதுமேவ உள்ளத் தில் நாணம்-மடம்-அச்சம் தோன்றி வளையும் பூங்கொம்புபோல் துவண்டு துவண்டு பழைபவன்புவந்துதங்க, கூந்தலவிழ்ந்து பிடரியிற் றொங்க மீன் போலுங் கண்கள் புறவடியைநோக்க காற்பெருவிரலால் நிலத்தைக் கல்லிக் கொண்டு மின்னலைப்போல் நின்றாள்.

அப்படிநிற்கிற தடாதகைப் பிராட்டிக்காக முன்னே ஆகாசவாக்காக கடவுள்கூறிய நிருவார்த்தைதெரிந்த மந்திரியாகிய சுமந்திதேவி நிருவடியை வணங்கித் தாயே! இந்தக்கொன்றை மாலையையணிந்த செஞ்சடைக் கடவு ளை உனக்கு மணவாளன் என்றுசொல்ல அப்போது சிவபரஞ்சோதியான வர் அன்புமிகுந்து தடாதகையை நோக்கிப பெண்ணே! நீ நிக்குவிசயப்பண் ணை என்றுபுறப்பட்டாயோ! அன்றுதொடங்கி நாமும் மதுரையைவிட்டு உன் கூடவே திரிகிறோம் இனி உன்னை வேதவிதிப்படி விவாகஞ்செய்துகொள்ள இனிவருகிற திங்கட்கிழமை நல்ல சுபமுகூர்த்தத்தில் உன்பட்டணம் வந்து சேருகிறோம். நீமுன்னே சொல்லக்கடவையென்று விடைகொடுக்க, அப்படி விடைதந்த நாயகன்மேலன்பையும் உபசாரையும் வைத்துப் பெண்படைகள் சூழ மலைபோலுந் தேர்மேற்கொண்டு பலவாத்தியங்களுங் கடல்போல் முழ ங்க வழியில் அநேக மலைகளுங் காடுகளும் ஆறுகளுங்கடந்து சந்திரகுலதீப ம்போல் மங்கலமெதிர்கொள்ள மதுராபுரியில்வந்து இந்திரச்செல்வ நிறைந் திருக்கின்ற மாளிகையில் வந்திழிந்தனள். பின்பு மந்திரிகள் திருக்கலியாண விசேடங்கண்டெழுதி எங்கும் ஓலைகளனுப்பிக் கலியாணத்துக்குந் தக்கபடி

பட்டணம் அலங்கிருதமாகவேண்டுமென்று டாணைமேல் முரசறைவிக்க, அந்தக் கலியாணவாத்தியங் கேட்டவுடனே பட்டணத்திலுள்ளவர்கள் அளவிறந்த மகிழ்ச்சியடைந்து தெய்வத்தைத துதித்து வணங்கித் தேகம் புளகாங்கிதங்கொள்ள அழகிய பெண்களை அலங்கரிப்பதுபோலப் பட்டணத்தை யலங்கரிக்கத் தொடங்கிக் கழித்தெரிந்த மாலைகளும், சந்தன முதலியனவுமாகிய குப்பைகளைநீக்கி குளிர்ந்த பனிநீரைத் தெளித்து வீதிகளிலுள்ள புழுதியடங்கச்செய்து, ஆடவரும் மகளிரும் பாண்டிய குமாரியாகிய தடாதகைப்பிராட்டியாருக்குத் திருக்கலியாணமென்கிற பெருங்களிப்பால் குண்டலங்கள் வளையல்கள் கண்டிகைகள் முதலியவை கழன்றுவீழ்வனதெரியாமல் அலங்காரஞ்செய்வாராகி ஒருவரையொருவர் முகூர்த்தமென்று விசாரிப்பார், சிலர் சோமவாரமென்று சொல்வார், அப்படிச் சொல்லுவோரை சிலர் விரைவில்வந்து தழுவிக்கொள்ளுவார்கள் சிலர் அளவிறந்த சந்தோஷத்தால் மகிழ்ந்துநிற்பார்கள் சிலர் சோமவாரம் இன்னும் ஆறுநாள் ஆறுயுகமாகவெண்ணிக் காலங்கழிப்பார்கள். முன்னே நமக்குத் தோள்துடித்தது, தடாதகைப்பிராட்டியார் திருமணக்கோலங் காணத்தாமே வென்பார்கள் சிலர் சுவர்களை சுண்ணச்சாந்தால் புதுக்கிச் சித்திரங்களெழுதித் தெற்றிகளுக்குக் குங்குமக் குழம்புபூசி, முளைப்பாலிகைகளும் பூரண கலசங்களுந் திண்ணைகளில் வரிசையாகவைத்து வாயில்களுக்கு நேரே தோரணங்கட்டி வீதிமுழுதும் நடைப்பந்தலிட்டு, பாளைகள் குலைகளுடனே கமுகுகளும் வாழைகளும் கரும்புகளும் நிறுத்தி, நிலைக்கண்ணாடிகள் வரிசையாக வைத்துக் கொடிகள்கட்டி, பூவும்பனிநீருமிரைத்து, நில்விளக்குகள் வைத்து, மலர்மாலைகளைத் தொங்கக்கட்டி நவரத்னமாலைகளும் தொங்கவிட்டு யானைகளுக்கு சித்திரங்களாலலங்கரித்து முகபடாமணிந்து, குதிரைகளுக்குக் கழுத்தணி-காலணி-கல்லணிகளாலலங்கிர்தஞ்செய்து தேர்களை யலங்கரித்து, மாணிக்கதீபங்கள்வைத்து, பட்டணத்தையிவ்விதமாக அலங்கரித்தும், பட்டணத்திலுள்ளவர்கள் புதியவாபரணங்களையணிந்தும் சந்தனம் பனிநீர் குங்கும கள ப கஸ்தூரி திமிர்ந்தும், கண்களுக்கு மையிட்டும், பாதங்களிற் செம்பஞ்சுக்குழம்பு பூசியும் சிலம்புமுதலியவை யணிந்தும், கின்னர மிதுனம்போல விறலியர்பாடிப் பரிசுகள் பெற்றும, களிபாட்டங்கொண்டும், பிராமணப்பெண்களும் அரசர்கன்னிகைகளும் வந்து பொன்மாலைச் சோபனம் விசாரித்தும், பிராட்டியார் திருமணக்கோலங்கண்டும், வரிசைபெற்றுக்கொண்டும் போவாராக யானைத்தலைகளின்மேல் கங்கைமுதலிய தீர்த்தங்களைப் பொற்குடங்களில் நிரப்பிப்பட்டுவஸ்திரங்களால்மூடி மங்களவாத்தியமுழங்கக் கொண்டுவரவும் அவரவர்களுந் தங்கள் தங்கள்வீட்டில் கலியாணம்போல அறுசுவை புணவுகள் சமைத்துச் சந்நியாசி முதலானவர்களை எதிர்கொண்டுவணங்கி உபசரித்தும் இவ்வாறுக அலங்கரித்தார்கள்.

தடாதகைப்பிராட்டியார் இந்திரனைச்சயித்துக்கொண்டுவந்த விமானங்கள்போலவும், தங்களிராஜகுமாரியென்று தரிசிக்கவந்த மலைகள்போலவும் சுற்றிலுந் தேர்களைநிறுத்திப் பனிங்கற்செய்த யானைமேல் நீலரத்னத்தாற் செய்த யானிகளைச் சுற்றோரங்களில் நிறுத்திப் பனிங்கற்செய்த சுவரில் மர

கதச் சாளரங்கள் வைத்து ஆயிரம் பவளத்தூணிறுத்தி அதன்மேல்வைத்த இந்திரநீலப் பொதிகைமேல் பொன்னுத்தரங்களிட்டு ரத்நவிட்டங்கள் பரப்பி இப்படி சந்திரகாந்தக் கல்லால் வீடுகோல் வேள்விமண்டபஞ் செப்து முத்நிறற் பாளைகளும் மரகதத்தாற் பச்சிலைகளும் பவளத்தால் பழங்களும் வெள்ளியால் அடியும் உள்ளதாகக் கமுகுகள் நட்டு மரகதத்தால் வாழைகள் நிறைந்தும், அதைச்சுற்றிலும் வண்டுகள்பாட தேன்கள்சிந்த தென்றல் சாளரவழியில்வீச பலவிததூமரங்களைச் சோலைபோல வைத்தும் யாகசாலையும், வேதியும், குண்டமும் விதிப்படி யமைத்தும், கண்ணுடிமுதலிய அஷ்டமங்கலங்கள் வைத்துமை வாசனைச் சந்தனத்திலே குங்குமப்பூ கலந்து சவ்வாது கஸ்தூரியும் சேர்த்துக்குழப்பி நிலமெழுகி இருபுறத்திலும் பாவைகள் மாணிக்கத்தீபங்களேந்தச் சூரியமண்டலம்போல் விளங்கவும் ஆகாசத்தில் நட்சதிரம் பூத்ததுபோல நவரத்னங்களால் மேற்கட்டி கட்டியும் கோயிலுக்கு முன்னே ஆகாயத்தை யளாவப் பந்தலிட்டும், முளைதெளித்துப் பொற்பாலிகைகள் வைத்தும் பிரமா முதலான தேவர்களுக்குந் தகுந்த பிரப்பம்பாய் விரித்து, மேலே செம்பொன்மயமான ரத்தினக்கம்பளம் விரித்தும், சிவகணங்க ளிருக்கச் சுற்றிலும் ஆசனங்களிட்டும், நடுவில் கற்பகத்தருவேண்டியனவெல்லாம் கொடுக்க வயிரப்பணியாலே செய்த சிங்கத்தின்பிடரியில் பொன்னுலாகிய பலவகையைப் பொருந்தப்பரப்பிச் சதுரமாகத் தூண்கள் பச்சைமணியால் நிறுத்திப் பளிங்குலல் உத்திரமிட்டுப் பவளத்திலேகொடுங்கை கூட்டி இப்படியாக முன்றடுக்கிப் பவளக்குடம்வைத்த விமானம் பலரத்தினங்களாலும் விளங்க சாஸ்திரப்படி அங்கங்களாலும் கால்களாக முதலெழுத்து பொற்பீடிகையாக வேதசாஸ்திரங்கள் எல்லாம் முத்துக்கோத்த ஊஞ்சற்கயிறுக நமதுநாயகன் பிராட்டியோடு எழுந்தருளியிருப்பதற்கு ஒரு சிங்காசனருபங்கொண்டு நின்றுற்போல நவரத்தினகசிதமான ஆசனஞ்சமைத்து இந்திரன்கொடுத்த கற்பகமானதுபொன்வஸ்திரங்கள், பொன்னுபரணங்கள் பஞ்சாஅமிர்தம், அறுசுவையுண்டி, சந்தனம், பனிநீர், புஷ்பம்முதலியனவெல்லாம் கொடுக்க சிந்தாமணி சிந்தித்தனவெல்லாம் உதவ இப்படி இந்திரலோகமும் தோற்க அலங்கரித்து நிற்க பாண்டியராஜ புத்திரியான பிராட்டி திருமணவோலை எங்கும் போய்ச்சேர எதிர்கொண்டுவாங்கி வணங்கித் தங்கள் மணிமுடிமேல் ஓலையைவத்துக்கொண்டு அதுகொண்டுவந்த தூதருக்கு வஸ்திராபரணங்கள் வெகுமதிசெய்து சங்தோஷமுன்னேசெல்லமனத்தினும் வேகமாய்ப்பிரயாணப்பட்டு கொங்கர்-சிங்களர்-பல்லவர்-வில்லவர்-கோசலர்-பாஞ்சாலர்-வங்கர்-சோனகர்-சீனர்-சாளுவர்-மாளவர்-காம்போசர்-மகதர்-ஆரியர்-கோரியர்-அந்தியர்-வைதர்ப்பர்-கங்கர்-கொங்கணர்-விராடர்-மராடர்-கருநாடர்-குருநாடர்-கலிங்கர்-சாவகர்-கூவிளர்-ஓட்டியர்-கடாரர்-காந்தாரர்-குலிங்கர்-கேகையர்-விதேகர்-பௌரவர்-கொல்லர்-கல்பாணர் தெலுங்கர்-சூர்ச்சரர்-மச்சரர்-மிலேச்சர்-சௌஞ்சையர் முதலான தேசாதிபதிகளெல்லாம் பூமிதாங்கமாட்டாமல் முதுகுநெரிளிக்க சேனைகளோடுகூடிப் பல வரிசை வாங்களுடனேவந்து தடாதகைப் பிராட்டியாருக்குந் தெரிவிக்க அருள்செய்தபடியே தருமந்தழைத்து, அருள்பழுத்து, சிங்காதனத்தின்மேல்

விளங்குகிற கொடிபோன்ற பாண்டியராஜ புத்திரியைக் கண்டு கண்களிகூர்ந்து முடிமாலை திருவடியில்விழ வணங்கி அருளின்படியே அவரவர்கள் இருக்கை சென்றிருக்க பின்பு மலைவளம் - காட்டுவளம்-நாட்டுவளம்-கடல்வளம்-முதலியனவெல்லாம் நிறைந்து மங்களவாத்தியங்கள் மதுராபுரியெல்லாமுழங்கிக்கொண்டிருந்தன.

அங்கே கயிலாயத்தில் வேதவரம்பைக் கடந்த கடவுள் தமது ஏகநாயகியான தடாதகைப்பிராட்டியார் போர்செய்வதைவிட்டு மதுரைக்குத்திரும்பினபின்பு பரமசிவம் உயிர்களுக்கெல்லாம் தானே போகங்களைக் கற்பிக்கிறநியதி தெரிந்து நந்திதேவரானவர் இந்திரன்-விஷ்ணு-பிரமன்-உருத்திரகூட்டங்கள்வரவேணுமென்று சங்குகன்னன் முதலிய சிலகணதிபர்களைபனுப்ப அவர்கள்போய் தேவேந்திராதி தேவர்களுக்குத் திருமணச்சோபனஞ் சொல்ல அவர்கள் பேரன்பு பின்தள்ள தசவுருத்திரர்களும், அவர்களைச்சேர்ந்த பூதகணங்களும், சதவுருத்திரர்களும், அவரைச் சேர்ந்த பூதகணங்களும், புத்தியட்டகரும் அவரைச்சேர்ந்த பூதகணங்களும், நூறுகோடி யுருத்திரர்களும், பசுபதியுருத்திரர்முதலான அஷ்டமூர்த்திகளும், நீலலோகிதர்களுமேகாதச வுருத்திரர்களும், வயிரவரும், விஷ்ணுவும், பிரமனும், இந்திரன்முதலிய திக்குப்பாலகர்களும், அஷ்டவசுக்களும், சத்தமருத்துக்களும், அச்சுவினிதேவர்களும், துவாதசாதித்தர்களும், சந்திரனும், வியாக்கிரமபாதரும், பதஞ்சலியும், உபமன்னிய பகவானும், அகஸ்திய முனிவரும், சவுனகாதிகளும், வாமதேவரும், சுகரும், வியாசரும், நாரதரும், சத்தமாதர்களும், சித்தரும், விஞ்சையரும், இயக்கரும், கின்னரரும், தேவரிஷிகளும், யோகிகளும், உரகரும், நிருதரும், அசுரரும், பூதவேதாள கூளிகளும், அரம்பையரும், வருஷங்களும், அயநங்களும், பருவங்களும், மாதங்களும், பக்ஷங்களும், ஐம்பொழுதும், யோகங்களும், கரணங்களும், இரவும், பகலும், நாழிகையும், நிமிடமுதலிய சிறுகாலங்களும், கடலும், நதியும், திக்குகளும், அஷ்டகுலவரைகளும், திக்குயானைகளும், மேகங்களும், இடியும், மின்னலும், பஞ்சபூதங்களும், மந்திரங்களும், புவனங்களும, தத்துவங்களும், கலைஞானங்களும், வருணங்களும், நிலைகளும், வேதங்களும், தந்திரங்களும், சமயநூல்களும், தர்மார்த்த காமமோக்ஷங்களும், சரியை-கிரியை-யோகஞானங்களும், சதுஷ்பாதமும், அஷ்டசித்திகளும் அண்டங்களுடைபடும்படி வாத்தியங்கள்முழங்க சிவகணங்கள் முதலிய யாவரும் வெள்ளிமலைக்குச் சமீபத்தில் வந்து தங்கள் தங்கள் வாகனத்தைவிட்டிறங்கி வணங்கி சிவநாமங்களைத்துதித்துப் பரமசிவமாகிய தேனே வண்டுகள் போல மொய்த்துச்சூழ, அப்போது திருநந்திதேவர் பிரம்புகொண்டு அடித்துச் சந்தடிவிலக்கிச் சிவபெருமானுக்குத் தெரிவிக்க சுவாமி யருளிலேலவந்து காண்பவரில் சிலர்க்கு வார்த்தை சொல்லியும், சிலர் நகைமுகங்காட்டியும், சிலரைக் கண்ணுறப் பார்த்தும், சிலர்க்குத் திருமுடியசைத்தும், இப்படி யுபசரித்துத் தான் ஒருமண்டபத்திற் சென்று மணக்கோலஞ் செய்து கொள்ள நினைத்த குறிப்பறிந்து குபேரனவன் மிகுந்த அன்பும் ஆதரவுங் கொண்டு வேதங்களும்-பிரமா-விஷ்ணு முதலிய தேவரிஷிகளுந் தொடப்படாத திருமேனியைத் தன்கையாற் றொட்டுப்

பட்டுவஸ்திரத்தைக்கொய்து பின்கோவணஞ்சாத்தி முன்கொய்சகம்வைத்து அதன்மேல் இரட்டைப் பொன்னரைஞாணல் இருக்கிச் சிகையில் திவ்ய புஷ்பங்களை யணிந்து கற்பகமலரோடு சிகழிகை முடித்துத் திருநீறணியுந் திருமேனியில் பனிநீர்க்கலந்து குழைத்த சந்தன கஸ்தூரிகளைப் பூசிச் சூரிய சந்திரர் விளங்க இரண்டு செவிகளினும் பொற்குண்டல மணிந்து தோளின்மேலசையவும் நீலகண்டத்தில் கண்டிகைதரித்து மூப்புரிநூலணிந்த மார்பிலே முத்துமாலைசாத்தியும் இரத்னமாலையுஞ்சாத்தி நான்கு திருத்தோளிலும் கேயூரங்களணிந்து யானைத்தோலரிக்கிப் பொன்னுத்தரீயமணிந்து பவுத்திரமுதலிய மோதிரங்கள் விரல்களுக்கிட்டு உடுத்த கோவணத்தின்மேல் ஐந்தலை நாகம்போலத் தொங்கச் சரிகை வஸ்திரத்தைச் சூழக்கட்டித் திவ்ய புஷ்பமாலைகள்கழுத்திலணிந்து சிலம்பும்-வீரக்கழலும் திருவடிகளிலணிந்து ஆனந்தித்துநிற்க இந்திரன் முதலிய தேவர்க்கெல்லாம் அழகு செய்விக்கும் சோமசுந்தரக்கடவுள் தானும் அழகு செய்துக்கொண்டு தேவர்கள் பூமழை பொழிய கும்போதரன்முதுகின்மேல் ஸ்ரீபாதங்களைவைத்து மால்விடைமேலேறி ஆகாசவாசிகள் பஞ்சவாத்தியங்களும் முழக்கிச்சூழ, அரக்கர்-இயக்கர்-பூதர்கள்-மங்கலவாத்தியங்கள் முழங்கிக்கொண்டுவர, விஞ்சையர்கள்தாளம்போட, கந்திருவர் வீணைவாசிக்க, தேவரம்பைகள் நடனஞ்செய்ய ஆயிரஞ்சிங்கங்கள் முழக்கிறைப்போல பாஞ்சகம்பன் ஆயிரம் வாயிறையும் சங்கத்தொனிசெய்ய, வாணசுரன் ஆயிரங்கைகளாலும் மத்தளமுழக்க, தேவரிஷிகள் கைகொட்டி ஆனந்தக்கண்ணீரொழுகக் கணநிபர்களுடனே ஆடிபாடிச் சூழ, இந்திரன் இரத்னக்காளாஞ்சிகொண்டொருபுறத்தில்வர ஈசானன் ஒருபுறத்தில் அடப்பை தாங்கிவர, வாயுபகவான் விசிறி விசற அக்கினி சாம்பிராணிப்புகைகொடுக்க, வருணன் கெண்டிகைசுமந்துவர நிருதி கண்ணாடிகொண்டுவர, குபேரன் அடிக்கடி சுவர்ணமழைபொழிந்துவர தண்டிபடிகள் சேவகஞ்செய்ய, கொடிகளுக்கரசாகிய விடைக்கொடி புடைபெயர்ந்தாட, குண்டோதரன் சூலந்தாங்கிவர, பதினெட்டாயுதங்களும் சூழ்ந்துவர புட்பகந்தன் வடமொழிப்பாடல்கள் பாட அவரது நிழல்வடிவமான ஆலாலசுந்தர் திருமாலையும் விபூதியுங்கொண்டுவர அன்னவாகனத்திலேறிப் பிரமன் வலப்புறத்திலும், கருடவாகனத்திலேறிவிஷ்ணு இடப்புறத்திலும், கைகுவித்துத் துதித்துவர வெள்ளிமலைமேல் வந்தாற்போல இடபவாகனத்தின்மேலெழுந்தருளி மதுராபுரிவீதியில் வருமுன்னே,

தேவர்கள்தேவன்வந்தான்செங்கண்மால்விடையான்வந்தான்
மூவர்கள்முதல்வன்வந்தான்முக்கணெம்பெருமான்வந்தான்
பூமலரயன்மால்காணாப்பூரணப்புராணன்வந்தான்
யாவையும்படைப்பான்வந்தானென்றுபொற்சின்னமார்ப்ப.

தேவர்க்கெல்லாந் தேவனெனவன்வந்தான், செங்கண்மாலாகிய ரிஷபவாகனத்தையுடையவன் வந்தான், மும்மூர்த்திகளுக்கு முதல்வனுயிருப்பவன் வந்தான், திரிநேத்திரங்களையுடைய எம்பிரான் வந்தான், தாமரைமலரில் வீற்றிராகின்ற பிரமதேவனும் மகாவிஷ்ணுவுங் காணாத எங்கும் பூரணமாயி

ராநின்ற பழையோன்வந்தான், எல்லா வுலகங்களையும் படைப்பவன் வந்தா னென்று பொன்னுலாகிய சின்னங்களொலிக்கவும் பெண்ணரசியாகிய தடா தகைப்பிராட்டியார் வாயில் மந்திரிகள்முதலான அரசர்களும் சேனைகளும் கடவுள் சுந்தரபாண்டியனுக வருகிறதை எதிர்கொண்டு வணங்க, இந்திர லோகமென்று அதிசயிக்கத்தக்க மதுராபுரிக்குள் மூகவாயில் கடந்து மாட வீதிபை வலமாகவரும்போது பொன்கொம்புபோலப் பெண்களும் தோழிக ளும் வந்துகூடிக் குமிழம்பூ-சோங்கம்பூ-காந்தட்பூ-அசோகப்பூ என்கிற பல மலர்களும் பூத்த நந்தவனம்போல மொய்த்து மேகலைகளும் வளையல்களும் உங்களுக்குக் கடவுள்கோலங்கண்டால் விட்டுவிடும் சொன்னேம் சொன் னேம் என்று தடுப்பதுபோலக் கால்களிலே சிலம்புகள் ஆரவாரிக்கதாமரை க்காடுபூத்த கருணைக்கடலைப பாதமுதல் முடியளவும்கண்டு கைகளைத் தலை மேற் குவித்து இந்தத் தடாதகைப்பிராட்டியார் என்னதவத்தைச் செய்தா ளோ? இந்தச் சுந்தரனை யணையவென்பார்கள் சிலர் அப்படியே சொல்லத் தகுமிந்த சோமசுந்தரக்கடவுளுக்கு மென்பார்கள் சிலர் இந்தமதுரை என் னதவத்தைச் செய்ததோ, இந்தத் திருக்கலியாணத்தைக்காண, நாம்என்ன தவத்தைச் செய்தோமோ மலையத்துவச பாண்டியன் பெறுது பெற்ற திரும கள் மணக்கோலத்தைக்காணுதுபோயினனே! இங்கே கோலம்வருகிறகுழ கன் அன்னிபழகுக்கேற்ற அழகனே என்பார்கள் சிலர் இந்தச் சுந்தரனே மதுரைக்கரசன் வேறில்லை ஆலவும் இந்த நங்கைக்கேற்ற நம்பியைப் பொ ருந்தச்செய்த மந்திரி சுமதி நல்ல தந்திரவான் கன்னியே அல்லது பொன் மாலை இப்படி ாகளுக்கேற்ற மாப்பிள்ளை கிடைக்கச்செய்த தவமே தவம் என்று இடையிலாடையை நெகிழ்த்துக் கொங்கைகளைக் கசக்கிப்பூசினசந் தனத்தை உதிர்த்துக்கொண்டு நாணிநிற்பார்கள் சிலர்கூந்தல அவிழ்த்து விட்டு வாரிக்கூட்டி முடிக்கும்போது உடம்பெல்லா மன்மதபாணம் பட்டு நடுங்குவார்கள் சிலர் குளிர்ச்சியான மலர்கள் அம்பாய்த் தைக்கின்றதே யெ ன்று தலையிற்சூடின நீலமாலையையும் முறுவலாகிய முல்லைமாலையையும் மன் மதபாணங்களென்று வெறுத்து ஒருவர்க்கொருவர் முகம்பாராமல் தலைக ளைக் குனிந்துகொண்டு உடம்பெல்லாம் பொன்னிறப் பசலைபடர கடவுள் விடைமேலழகனுப் வீதியிலே போகாமல் நமது மன்னர்கள்மேலும் செல்லலா மோ? கடவுள்தலைமேலிருந்தால் அவரைச் சுடாதோ? கங்காநீர் அந்தச்சூட் டை மாற்றுமல்லவா என்று மேகலை வெட்கம் கருத்து நிறம் எல்லாம் வெவ் வேறுய் உலையிலிட்ட மெழுகுபோலக் கடவுள பவனியைக்கண்டு கடவுள் மெய்யன்பராய் நன்றி மறந்தவர்போலச் சிலர்நீங்க சிலம்புகலங்க ஒருத்தி விடைமே லழகனைக்கண்டு மூப்புரத்தை யெரித்த நகையும் காமனையெரித்த கண்ணும் என்னைச் சுடாதுவிடுமோவென்றுள் இன்னுமொருத்தி உருவெளி யாகத் தோன்றுகிற கடவுள ஆலிங்கனஞ்செய்து நாணினுள் ஒருத்திதேவ ர்கள்பிழைக்க நஞ்சுண்டு கறுத்ததன்று கண்டம் தமது நெஞ்சு இரும்பெ ன்று தெரியவைத்த குறியென்றுள் ஒருத்தி இந்தச் சுந்தரனுக்கு முன்னே தூதுபோன என்மனம் எனின்னம் வரவில்லையென்று வருந்தினுள் ஒருத்தி

முன்னே காமனையெரித்த கண்ணுலேபாராமல் ரக்ஷித்தீரேயாலுல் புகழுண்டு இல்லாவிட்டால் பெண்டபழிபெருகுமென்றுள் ஒருத்தி இந்த விடையழகன் என்னைக் கடைக்கண்ணுலும் பார்க்கவில்லையென்று ஒருவனைப் படத்தில் எழுதிக்கொடென்று கேட்க, அவன் இவரழகை எழுதிமுடியாதென்ன மயங்கிளள் ஒருத்தி வலப்புறத்தில் பிரமனும், இடப்புறத்தில்விஷ்ணுவும், விண்ணேர் மண்ணேர்கள் சூழ்ந்துவரவும் காணுமல் சிவயோகிகளைப்போலேளங்கும் மான்மழுவேந்தின கடவுளாகக் கண்டாள். இடபம் விரைந்து செல்லக் கண்டு முன்னே ஒருத்திபார்க்க ஓடும்போது மேகலைபவிழ்ந்து காலிற்சிக்கித் தடுமாறி விழுந்தாள். ஒருத்தி அத்துடனே விலங்கிட்டதுபோலநடந்தாள்.

இப்படி விடைமேல் வருகிற ஆனந்தத் தேன்கடலைக்கண்ணுற்பருகி உடை-கலை-வளை நெகிழ்வது தெரியாமல் பெண்களெல்லாம் மயங்கி எழுதின சித்திரங்கள்போல் காமவெள்ளத்தில் முழுகிநின்று கடவுளென்று தெரியாமல் தழுவநினைத்து அவர்கள் உதிர்த்தவைகளும் தேவர்கள் சிந்தினமலரும் வீதிநெருங்க அரசிலையாலும் தருப்பையாலும் பொற்கலசத்துநீரில் தோய்த்துப் பிராமணர்கள்வீச, அந்தப் பிராமணப்பெண்கள் ஆலத்திசுற்ற அஷ்ட மங்கலங்களும் பெண்கள்தாங்க கற்பூரதீபமும் வலஞ்சுழி சங்கும் மூசுமுழங்கச் சந்நிதானத்துக்கு முன்னே வந்தவுடனே வைதிகர்கள் வேதஞ்சொல்ல திருநந்திதேவர் கையைப்பற்றி வாகனத்தை விட்டிறங்கி இருபுறத்திலும் வந்துநின்ற பிரமன் கையையும் விஷ்ணுகையையும் பிடித்துக்கொண்டு வேதமாகிய பாதுகைமேல் பேரின்பத்தைத் தந்தருளுகிற திருவடிகளை வைத்து, கீழே விரித்திருக்கிற நடைபடாத்தின்மேல் நடந்து மந்தாரமழை பொழிய உள்ளே எழுந்தருளுமளவில் பொன்மாலைபானவள் மங்கியப்பெண்களுடனே, எதிர்கொண்டுவந்து பொன்குடத்தி னீராப்பியிருந்தகங்காசலத்தை மங்கியப்பெண்கள் வார்க்கச் சிவபெருமானது பாதங்கள் விளக்கி அந்தநீரைத் தலைமேற்றெளித்துக்கொண்டு ஈரம்போகப் பாதகமலங்களைவெண்பட்டாலே துவட்டிப் பனிநீராட்டிக் கஸ்தூரிசேறுபூசி மந்தாரமலரால்ருச்சித்துத் தலைமேலிருகைகளையுங் குவித்துக்கொண்டோதுங்கி ஒருபக்கத்திலேநின்று சுவாமி! அருமையாக நான்பெற்ற பெண்ணரசியைத் திருமணம் புணர்ந்து இந்தராஜலட்சுமியையும் என்கண்ணியையும் தேவரீர்விவாகஞ்செய்துகொண்டு ஆள்வீராகவென்றுதுதிக்க, அதற்கு உள்ளேநகையை யுடையவராய் மருமகனை சோமசுந்தரக்கடவுள் மங்களவாத்தியமுழங்கத் திருக்கலியாண மண்டபத்தில் வந்து வேதங்கள் முழங்கச் சிங்காசனத்திலெழுந்தருளியிருந்து சுற்றிலுநின்ற பிரமன், விஷ்ணு, உருத்திரகணங்கள், தேவர்களானவர்களையெல்லாம் தகுந்த ஆசனங்களிலிருக்க அருள்புரிந்து எல்லாரையும் பூமிதாங்க முன்கலியாணத்தில் அகத்தியரைப் பொதிகையிலிருக்கச்செய்ததுபோலே, இப்போது வடக்கிலிருக்கச் செப்தாலே வென்னத்தமதருளாலே நிரம்பியிருக்கத் திருக்கலியாண முகூர்த்தகாலம் வருமளவும் பெண்களாடல் பாடல்களாலே போதுபோக்குதலாக விருந்தார்.

தடாதகைப்பிராட்டியை ஒருதனசிங்காதனத்திலிருத்திக்கஸ்தூரியணிந்து குங்குமச்சேறுபூசி வாசனைத்திருமஞ்சனத்தா லபிஷேகஞ்செய்து


மூசசுஞ் சங்குமுழங்க மெல்லிய பட்டாடைசாத்தி ராஜகுலத்துக்குத்தக்க படி வேதப்பிராமணர்களுக்கு வேண்டியதானங்கள் கொடுத்துப் பின்பு திரு மகளும் கலைமகளும் தங்கள் தவப்பயன் பலித்ததாக மகிழ்ந்து பிராட்டியி னது அனிச்சப்பூவிலு மேன்மையான பாதங்களுக்குச் செம்பஞ்சுக் குழம்பு பூசிக் கூந்தலுக்கு மயிர்ச்சாந்தம் வழியவார்த்துக் கொங்கைகளில் பனிநீரி லேகுழையசுந்தனம்பூசிக் கால்களிற் சிலம்பணிந்து, பாதசாலமுங் கிங்கிணி யும் புலம்ப முப்பத்திரண்டு கோவையான இரிசிகையும், இருபத்தொருமேகா வையான கலாபமும், இரண்டு கோவையான பருவமும், எட்டுக் கோவை யான மேகலையும், பதினன்குகோவையான காஞ்சியும், ஒரு பூங்கொம்பிலே வண்டுகள புலம்புகிறதுபோலப் பூட்டி காந்தளில் வண்டுபோல மணியாழி விரலுக்கிட்டு கைகளில் வைரக்கடக மணிந்து தோளில் கேயூரம் பூட்டி மர கதமாலை-செம்பொன்மாலை-பவளமாலைகளை மேருவைச் சூழ்கிற நவக்கிரகங் கள்போல முலைகளைச் சூழவணிந்து காதிலே குண்டல முதலியன அணிந்து மேகத்துக்குஞ் சந்திரனுக்குநடுவே இந்திரவில்லப்போல நெற்றிப் பட்டங் கட்டிப் புஷ்பமாலைகளாலே கூந்தல யலங்காரஞ் செய்து திவ்யாபரணங்க ளெல்லாம் விளங்க அணிந்து சுந்தரக்கடவுளுக்கு மிகவு மகிழ்வு தோன்றச் சிங்காரித்துச் சோபனமென்று வாழ்த்தி இருகைகளையும் அவ்விருவருந் தா ங்க எழுந்தபோது வாத்தியங்கள்முழங்கிச் சங்கந்தானிக்க, பூமழைபொ ழிய, சாமரைவீச, பல்லாண்டுபாட, வேதவாத்தியங்கள் முழங்க, இந்தி ராணி அடப்பைதாங்க, திலோர்த்தமை கண்ணுடிகொள்ள விந்தை சந்தடி விலக்க, அரம்பை காளாஞ்சிதூக்க, ஊர்வசி விசிறிவிசற, மேனகை கொடிக ளேந்த, சந்தனகந்த களபகஸ்தூரி பனிநீரிறைக்க, தூபதீபங்கொடுக்க, சோ பனங்கள்பாட, புஷ்பங்கள்பரப்பின பூம்பாடத்தின்மேலேபாடகக்கால்களை பையப்பைய வைத்துச் சரஸ்வதியும் லட்சுமியும் கைப்பற்றித்தொடர, செ ல்வங் கல்விபெற, வேண்டினார்க் கிதுவே சமயமென்று சிலம்புகள் சொல்ல நடந்து துவண்டு அன்பு மிக்கிருந்த பெருமானுக்கருகே பிடரிமேலே தலை யைச் சாய்த்துக்கொண்டு இருந்தருள அந்தரத்னபீடத்திலே சுந்தரப்பாண் டிய னென்கிற கடவுளாடிருந்த தடாதகையைக் கண்டவர்கள் மேருமலை மேலே கற்பகத் தருவைச்சேர்ந்த பச்சைக்கொடிபோ லிருக்கின்ற தென்று புகழ, பண்ணு-மிசையும், நீருங்-குளிர்ச்சியும், பாலும்-சுவையும், பூவும்-வாச மும் வெவ்வேறு வடிவுகொண்டிருந்தாற்போல அம்மையும் அப்பனுமிருக்க எல்லாரும் கடவுளடிநீழலிற் கலந்ததுபோலக் கலந்து மகிழ்ந்திருந்தார்கள்.

அப்போது மகாவிஷ்ணு பொன்கலசத்தில் நீராலே சிவபரஞ்சோதி பாதம்விளக்கிப் புஷ்பசந்தனங்க ளணிந்து தூபதீபங் கொடுத்துப் பூசித்துப் பிரமன் முதலானவர்களெல்லாம் பாததீர்த்தங்கொள்ள அவ்விடத்தேதின்ற மகாவிஷ்ணு கடவுள்கையிலே பிராட்டிகையைவைத்து மந்திரங்கள் சொல் லித் தாரைநீர்வார்க்கத் தேவர்களெல்லாரும் பூமழைபொழிய, அரம்பைக ளாட, விஞ்சையர்கீதம்பாட, அரகரவென்று சிவகணங்கள்சொல்லப் புளகா ங்கிதராய் திருக்கலியாணமென்கிற ஆனந்தக்கடலிலே எல்லாருமுழ்கினர் கள் பின்னும் தேவர்களு முனிவர்களும் ஆசீர்வதித்து முறைப்படி சேவை

யிட்டு உலகத்துக்கெல்லாம் தாயுந்தந்தையுமான இவ்விருவரும் அருள்விளை யாட்டாலே இப்படிக் கூடக்கண்டோமென்று கொண்டாடிய பொற்கலசத் திலே காமதேனுவின்பால், கற்பகக்கனி, நெய், கருப்புக்கட்டி, தேன், இவற் றைக்கலந்து கடவுள அமுதுகொண்டருளச் சொல்ல கடவுளரும் மனமகிழ் ந்து அமுதுசெய்தருளி நகைக்க பெண்களெல்லாம் மங்களம்பாட, பிரமதே வன் தன்னுடைய புத்திரர்களுடனேயிருந்து நெய்முகந்துவார்த்து வேள்வி வளர்க்க, அந்தத் தெய்வாக்கினி வலஞ்சுழித்தோங்க, வேதங்கள் முழங்க, சங்கங்களூத, சாஸ்திரப்படி சடங்குகளெல்லாஞ் செய்து திருமங்கிலியஞ் சாத்திப் பிராட்டி கையைப்பற்றி அக்கினியும் அக்கினிவளர்ப்பவனும் ஆகுதி கொள்ளுகிறவனுந் தானேயான பரமயோகிதிருக்கலியாணநிறைவுபெற்றுத் தன்பத்தினியாருடனே பொரிமுகந்து செந்தீயிற்பெய்து வேதப்பிராமணர் களுக்குத்தக்க தானங்கள்செய்து அக்கினியை வலம்வந்து மணைப்பாதத் தை அம்மிமேலே யெடுத்துவைத்து அருந்ததியைநோக்கி வேதவிதிப்படி தப்பாமல் வேள்விச்சடங்குகளெல்லா முடித்து இப்படி உலகத்தார் தெளிய புருடனும் பெண்ணுமாகி மணவறைக்குள்ளேசெல்ல அந்த அழகுகண்ட மனிதருங் கண்களிமையாமல் ஐயன் மணக்கோலங்காண்கிற தேவர்கள்போ லாக உயர்ந்தவர் தாழ்ந்தவ ரென்கிற பேதமில்லாமல் கடவுளருளாலே நிறைய மணவரையிலிருந்து கலியாணமண்டபத்தில் வந்து பிரமன் முதலா னோர்க்கெல்லாஞ சிறப்புகள்செய்து அவரவர் தங்கள் தங்களிடங்களுக்குச் செல்ல விடைகொடுத்தனுப்பி அரசர்களுக் கரசுசெய்து காட்டுவான்போல சௌந்தரபாண்டியனென்கிற திருநாமங்கொண்டு அரசாட்சிசெய்யத் திருவு ள்ளமாய்க் கருணைபூத்து விடைக்கொடியே மீனக்கொடியாகவும், பாம்பாப ரணமே பொன்னுபரணமாகவும் கொன்றைமாலையே வேப்பமாலையாகவும், புலித்தோலே பொன்வஸ்திரமாகவும், மதிமுடியே வயிரமுடியாகவும், மது ராபுரியில் சோமசுந்தரக்கடவுள் பாண்டியனாகி வீற்றிருக்க அவர் திருவிளை யாடலுக்குத் தகுதியாய்ச் சங்குகன்னன் முதலாகிய கணநாதர்கள் தாங்க ளும் உருமாறி ஏவல்செய்துகொண் டிருந்தார்கள். பின்பு சௌந்தரபாண்டி யனை கடவுள் அரசர்கள் சிவபூசைசெய்வது வேதவிதிதானென்பதை நிலை நிறுத்த அந்தமதுரை நடுவிலே கோயிலுண்டாக்கிச் சிவலிங்கமும் நிலைபெ றச்செய்து இம்மைமே நன்மைதரு மிறையென்று பெயரிட்டுப் பூசைசெ ய்து கடம்பவனத்துக் கடவுளை மூன்றுகாலமும்போய்த் தொழுதுகொண்டு உலகமெல்லாம் தமது செங்கோல்செல்ல மனிதருக்கு அரசனாகவும், பகை வருக்குச் சிங்கமாகவும், பெண்களுக்கு மன்மதனாகவும், நிலமகளுக்கு திரு மாலாகவும் விளங்கிச் சாதனசதுட்டயந் தெளிந்தவர்களுக்குச் சச்சிதானந் தமான பாதத்துவமாகிய கடவுள் பூசித்த சிவலிங்கப் பெருமையை யாரா லே சொல்லிமுடியும்.

திருமணப்படலம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

ஆ று வ து

வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்

அறுசீராடியாசிரியவிருத்தம்.

உலகியனிருத்துவான்வந்தொருபரஞ்சுடர்வான்றிங்கட்
குலமணிவிளக்கைவேட்டுக்கோமுடிகவித்துப்பாராண்
டிலகுறுதோற்றமீதான்முனிவரிருவர்தேற
வலகிலானந்தக்கூத்துச்செய்தவாறறைபலுற்றும்.

இதன்பொருள்

ஒப்பற்ற பரஞ்சுடராகிய சுவாமியானவர் உலகத்தினிடத்தில் அரசியலை நிலைநிறுத்தும் பொருட்டுச் (சௌந்தரபாண்டியராகவந்து) பெருமை பொருந்திய சந்திரகுலத்திற்குத் தீபம்போன்ற தடாதகைப் பிராட்டியாரைத் திருமணஞ்செய்து இராஜகிரீடந் தரித்து உலகத்தையாண்டு பிரகாசம் பொருந்திய காட்சி யிம்மட்டும். (இனிப்) பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் முனிவர்கள் இருவரும் மனந்தேறும்படிக்கு அளவில்லாத ஆனந்தத் தாண்டவமாடிய வரலாற்றைச் சொல்லத் தொடங்கிறைம்.

சோமசுந்தரக் கடவுளாகிய பாண்டியன் மீனாட்சிதேவியைத் திருக்கலியாணஞ்செய்தபின் அத்திருமணத்திற்கு வந்து பூலோகத்தரசர்களையும் தேவர்களையும் இருடிகளையும் மற்றவர்களையும் போஜனஞ்செய்ய வாருங்களென்று அழைக்க யாவரும் விரைந்துசென்று பொற்றாமரைத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தங்கள் தங்கள் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டுவந்தார்கள் அப்பொழுது வியாக்கிரபாதரும் பதஞ்சலி முனிவரும் வந்து சோமசுந்தரக்கடவுளை வணங்கித் துதித்துத் திருச்சிற்றம்பலத்துளாடும் தேவரீரது திருநடனத்தைத்தரிசித்து உண்பது அடியேங்களுடைய நியமமென்ன; அதற்கு அந்த நடனத்தை இந்தவிடத்துச்செய்கின்றோம் உலகமெல்லா முருவமாகிய ஒருபுருடனுக்குத் திருச்சிற்றம்பலம் இதயமாகும் இந்தமதுரை துவாதசாந்தமாகும் என்று கடவுள் அருளிச்செய்ப ஐயனே! அப்புருடனுக்கு மற்றையங்கங்களெவையென்று அவ்விருவருங்கேட்க, அதற்குச்சுவாமி அரைக்குமேலேழுலகமென்றும் அரைக்குக்கீழேழுலகமென்றும், அப்புருடனுக்குச் சொல்லுகின்றதால் இந்தத் தரையினிடத்து அநந்தந்தேவஸ்தலமுண்டு, அவற்றைச்சொல்லப்புகின் அளவுபடாதாகையால் அவற்றுள் சிலதலங்களைச் சொல்லுகின்றோம் கேளுங்கள், அப்புருடனுக்குத் திருவாரூர் மூலாதாரம், திருவண்ணாமலை சுவாதிஷ்டானம், திருவானைக்கா மணிபூரகம், நீங்களிருவருமிருந்து தரிசிக்கின்ற ஸ்ரீசிதம்பரம் அநாகதம், திருக்காளத்தி, விசுத்தி, காசி ஆக்ஞை, கயிலை, பிரமாந்திரம், இம்

மதுரை துவாதசாந்தமாகும் ஆதலால் அவற்றுளிதநிகமாகும். எப்படியென்றால் எவற்றினுக்கும் இம்மந்து முன்னர்த் தோன்றினதாலென்று அருளிச்செய்து கடவுளவ்விருவரோடும் ஆலபத்துட் சென்றார்.

அப்பொழுது தனதுகிருபையால் நீங்கிவந்ததன்னைத்தேடிக்கொண்டு கைலாயமலை வந்ததோ! அல்லது இடபம் தன்னுருமாறி அம்பலவுருவமாகி வந்ததோ! அன்றி சந்திரமண்டலந்தாழ்ந்தென்று யாவரு மதிசயிக்க இந்திரவிமானத்தின் கீழ்பால் வெள்ளியம்பலம் உண்டாக சோதிமயமாகி பரனவன் நிருப்பாற் கடலின்மீது தோன்றினாற்போல அந்த வெள்ளியம்பலத்தினிடத்து மாணிக்கப்பீடிகைபோன்றதோன்றிற்று அந்தன்மையாகிய பீடத்தின்மீது தனதாயிரங்காங்களினுலும் மெல்லவிருங்கிய இருளைவிழுங்காநின்ற கோடிசூரியர் எககாலத்தி லுதயஞ்செய்ததுபோல சோமசுந்தரக் கடவுள் மனமுதலிய அந்தக் கரணங்களுக்கெட்டாத ஞானப்பேரொளி வடிவமாகத் தோன்றி எதிராக விருக்கின்ற சிவகணங்கள் மொத்தநான்முகனும் வாத்தியமும் மந்தளமுமடிக்கத் திருநந்திதேவர் குடமுழாவென்னும் வாத்தியமடிக்க, திருமால் இடக்கை என்னும் வாத்தியம் ஒலிக்க, காமதர்-தும்புருவர்-கந்திருவர்-சாஸ்திரவித்திப்படிபாட பஞ்சநாரதியும் சுழுத்திர கோஷம்போல் ஒலிக்க, காமகன்சுருதி கூட்ட, பிரமன்சாமவேதத்தைநபாதிற் பாட, சந்திரன் பக்கத்தில் நெருங்கியிருக்கும் நக்ஷத்திரங்களொப்போல் தேவர்கள் தூற்றும் புஷ்பவருஷம் எங்கும் போர்ப்ப கடல்போன்ற நிறத்தினையுடைய முப்பலகண்மீது வடவாக்கினிபோலுங் கண்கள் பிறங்க முகுருகுரிய வலதுதாளையூன்றி, கரியகடலிலே முளைத்த சூரியனைப்போலத்தோன்றி நின்று பெய்பாநின்ற செங்கமலர் கூம்பிறைப்போலத் தூக்கித் திருநடனஞ் செய்யும் தாமரைமலர்போன்ற தாளும், எட்டுத்திக்கையுங் கடந்துள்ள பத்துத் திருக்கரங்களும் அவற்றில் பலம்பொருந்திய ஆயுதங்களும் தேவமகளிரது மங்கலிய சூத்திரத்தைக் காத்த நீலகண்டமும், சங்குக்குழையணிந்த காதுகளும் செவ்வானம்போன்ற சடையும், அழகுபொருந்திய திருவெண்ணீறும், திருநேத்திரமும், அரவக்கச்சும், ஆதிவராகந்தின்முன்போன்றபல் பிரகாசிக்கின்ற மார்பும், அஞ்சனந்தீட்டிய கரியகண்களையுமுடைய அங்கயற்கண்ணம்மை பூங்கொடிபோல ஒதுங்கிநிற்கும் பக்கமும், அவ்வங்கயற்கண்ணிமேல் வைத்த திருப்பார்வையும், புன்முறுவலுந்தோன்ற ஆடும்போது சடையிலிருக்கின்ற கங்கையலம்பும் ஓசையும் தரித்த கொன்றைமாலையில் வண்டுகளாரவாரிக்கும் ஓசையும், மங்கலவாத்தியங்களினோசையும், வேதமந்திரவோசையும், செங்கையினின்றும் ஆடாநின்ற மழுவாகிய அக்கினியினோசையும் திருவடியிற்றரித்த சிலம்பினோசையும், எவ்விடங்களிலும் நிரம்பி அன்பர்களது இரண்டு காதுகளிலும் அமுதத்தைச்சொரிய மலரகிதமுகிய சோமசுந்தரக்கடவுள் திருநடனஞ்செய்தார். அதை நிருத்த தரிசனஞ்செய்துன்னுநியமம்பூண்ட இருவருங்கண்டு இரண்டுகைகளையுங்கூப்பி முடியின்மீது வைத்துத் திருவடியில் வீழ்ந்து ஆயிரம் வேதங்களையும் நாவாரப்பாடி பரமானந்தக்கடலில்முழ்கி அன்புருவமானார். இவ்விருவர் நிமித்தமாக ஆண்டவனது திருநடனத்தை முனிவரும்-கந்திருவரும்-தேவர்களும்-தானவர்ய

ளும்-கிம்புருடர் முதலிய தேவர்களும் வணங்கிப் பேரின்பத்தில் மூழ்கினர் கள். திருக்கலியாணத்திற்கு வந்தமனிதர்களுங் காணப்பெற்றார்கள் பதஞ் சலிமகாமுனிவர் அளவில்லாத வானந்தமீறி மனத்தினிடமெல்லா நிரம்பி மேலேவழிகின்றதுபோலமார்பிற்பூசிய திருநீறுகரைந்திடப்பொழிகின்றகண் ணீருள்ளனைந்து இருகரங்களையுங்குவித்து நாதனைப் பாடத்தொடங்கி,

பராபரமுதலேபோற்றிபத்தியில்விளைவாய்போற்றி
சராசரமாகிவேறாய்நின்றதற்பரனேபோற்றி
காராசலவுரியாய்போற்றிகனகவம்பலத்துளாடு
நிராமயபரமானந்தநிருத்தனேபோற்றிபோற்றி.

ஒன்றுகினைந்தாயைந்துருவாகிவருவாய்போற்றி
யின்றுகிச்சென்றநாளாயெதிர்நாளாயெழுவாய்போற்றி
நன்றுகித்தியதாகிநடுவாகிமுடிவாய்மன்று
ணின்றுடும்பரமானந்தநிருத்தனேபோற்றிபோற்றி.

அடியரெம்பொருட்டுவெள்ளியம்பலத்தாடல்போற்றி
கொடியணிதடந்தோள்போற்றிபுரிசடைமகுடம்போற்றி
கடியவிழ்மலர்மென்கூந்தற்கயல்விழிபாகம்போற்றி
நெடியதற்பரமானந்தநிருத்தனேபோற்றிபோற்றி.

என்று இப்படித் தோத்திரஞ்செய்த பதஞ்சலிமகாமுனிவரையும் வியா க்கிரமபாத முனிவரையும் வெள்ளியம்பலத்தினிடத்துத் திருநடனஞ்செய்த ருளிய சோமசுந்தரக்கடவுள் நோக்கிக் கிருபைகூர்ந்து உங்களுக்குவேண்டிய தென்னென்றுகேட்க அவர்கள் கடவுளது திருவடியை வணங்கி எம்பெரு மானே! இந்தத்திருநடனத்தை இவ்விடத்து என்றுஞ் செய்தருளி யாவர்க் கும் பந்தபாசமறும்படி கிருபைசெய்யவேண்டுமென; ஐயன்கன்னிநாடுசெய்த தவப்பேற்றை யடையும்படி அவ்வாறு தந்தனமென்ன பின்னும் பதஞ்சலி பகவான் என்னையனே! இந்த நிராமய பரமானந்த நிருத்த தரிசனத்தைக் கண்டவரெல்லாம் பூமியினிடத்துவந்து பிறவாமல் ஒப்பற்ற மோக்ஷத்தை யடையவேண்டுமென்று வணங்க பகவானும் அவ்வாறுகவென் றருளிச்செ ய்ய சிவகணங்கள் சந்தோஷமிகுதியால் ஆரவாரித்தார்கள், கைகோத்தாடி னர்கள். தேவர்கள் மலர்மாரி பெய்தார்கள். முனிவர்கள் ஆனந்தக்கண்ணீர் பொழிந்தார்கள். சரீரம் மயிர்க்குச்சரியப்பட்டார்கள். அவ்விருமுனிவரை யும் தழுவிக்கொண்டார்கள். அநித்தியமாகியபஞ்சபூதமும், ஐம்பொறிகளும் ஐம்புலனும் இவைமுதலிய தத்துவ முப்பத்தாறும், மாயையும், இருவினைக ளும், அஞ்ஞானவிருளுமாகிய இவற்றிற்குவேறாகித் தனித்தயோகிகளுள்ள த்துப் பரிபூரணமாகநிறைந்து ஆடிய ஒப்பற்றபெரிய திருநடனத்தைத் தரிசி த்தவர்க்கு இகபரபோகங்களைக்கொடுத்து அம்மதுரையின்கண்ணுறைகின்ற பெருமான் திருநடனத்தை திருவாதிரைத்தினமுதல் பின்வருந்திருவாதிரை வரையில் பரிசுத்தமான பொற்றுமரைத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தரிசி த்து அவ்விடத்தினிதாகவமர்ந்திருந்துநூற்றெட்டுதரம்ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஜபித்து அம்மதுரையில்வசிக்கின்றவர்கள் நினைத்தவரத்தைப்பெறுவார்கள்.

வெள்ளியம்பலத்திருக்கூத்தாடியபடலம் முற்றிற்று.

உ

சிவமயம்.

ஏழாவது

குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம்.

கலிநிலைத்துறை

பன்னகேசனுமடுப்புலிப்பாதனும்பணிப
மின்னுவார்சடைமன்னவன்விஸ்ரிமன்முட
சொன்னவாறிதுபகித்தழல்சுடவொருப்படு
மன்னமாமலைத்தொலைத்தவாறறிந்தினிபறைவாம்.

இதன்பொருள்.

பதஞ்சலிமுனிவரும் வியாக்கிரமபாத முனிவரும் வணங்கப் பிரகாசம் பொருந்திய நீண்டசடையினையுடைய சுவாமியாகிய சொன்னதண்டியரான வர் வெள்ளியம்பலத்துள்ளே நின்று திருக்கூத்தாடிய திருவிளையாடலைச் சொன்னவகை இதுவரைக்குமாம் இனிமேல் ஒப்பற்ற பூதமாகிய குண்டோதரனவன் உதராக்கினியானது மொறுத்த பெரிதான அன்னமலையை யடுத்துண்டவகையைச் சொல்லுவாம.

கன்னியர்க்கரசியாகிய சிறைதிதேவி திருமணத்துக்காகத் தன்வீட்டின் கண்வந்த மின்னல்போன்ற சடையினையுடைய மாதவர்கள் அந்தணர் மற்றவர்கள் எந்நிலங்களிலுமுள்ள அரசர்கள் யாவர்க்கும் முறையே பொற்பாத்திரத்தால் அறுசுவைகளையுடைய போனகத்தை யுண்பித்தற்பூசைத்தக்க சந்தனமுதலியவும், உடுக்கத்தக்க பட்டாடைமுதலியவும், அணியத்தக்க ஆபரணமுதலியவும், தாம்பூலமும்-மற்றுமுள்ளனவும், முறைப்படி கொடுத்துபசரித்து ஐம்பத்தாறுதேசத்தரசர்களும் மற்றவர்களும் செல்லுநரைச்செல்லவிடுத்து இருக்குஞ்சமயத்தில்.

சமயற்றொழிலில் வல்லவர்கள்வந்து தேவியினது திருவடியை வணங்கி அம்மணி! அடியமேம் சமைத்த அன்னத்தில் ஆயிரத்திலொருபங்குந்செலவானதில்லை இனியாங்கள் செய்யக்கடவது யாதென, பிராட்டியங்கணின் றெழுந்து பெருமான் முன்னர் வந்துபணிந்து ஒருபக்கத்திலொதுங்கிநின்று சுவாமி! தங்களோடு மூப்பத்துமுக்கோடிதேவர்களும் இங்கெழுந்தருளுவா ரென்பது கருதி பொருத்தமான இனிய சுவைபோதுங்கூடிய அன்னம் அளவற்றதாக ஆக்கி உண்டுமிருந்தது எவ்வளவென்று சொல்லில் இமையமலை போலும் அன்னமும், அதற்கமையச் சமைத்துக் கொட்டிய கறிகள் அவ்விமையமலையையடுத்துச் சூழ்ந்திருக்கும் சிகரங்களையுடைய மலைகளும்போன் றிருக்கின்றன என்றுசொல்ல, அதைக்கேட்ட எம்பிரான் தேவியாரிடத்துப் பொருந்திய அன்பினால் திருவிளையாடலைச்செய்யநினைத்தார! அன்றித்தனக்குக் குடைபிடிக்கும் பூதகணத்தலைவனது ஆற்றலையாவரு மறியும்படிச் செய்



ய்யவோ அறிந்தேதமில்லை, அம்மை மைபை நோக்கிச் சிறிது புன்முறுவல்செய்து மூவேந்தரிற் சிறந்த பாண்டியனது பெறுதற்கரிய மகள்நீ! அன்றியும் தேவ ருலகத்துள்ள பஞ்சதாருவும் நினதுபணியைச் செய்யப்பெற்று இவ்விடத் திலிருக்கின்றது உனக்கு அருமையாப்ப பெறத்தக்கதுயாது? பிறருடைய செல்வங்களெல்லாம் நின்னதல்லவோ? ஆதலால் அளவற்றநின்செல்வத்தின் பெருமையை நாமறிய செய்வித்தாற்போலு மிருக்கின்றது நீசெய்வித்தவிரு ந்தினையுண்ண நங்கணத்தினுள் பசியாற் களையடைந்தவராகி யொருவரை யுங்காணும் முல்லையருமைப்போலும் தந்தங்களை யுடையாய் அதற்கு யான் செய்யத்தக்க தென்னென்றார். பின் சமீபத்திலேநின்ற குண்டோத ரன் வயிற்றினிடத்து வடவாக்கினியைப் பிரவேசிக்க நினைத்தார். அதுவயி ற்றினிடத்துவந்து எரிபசியாகப் பொருந்தி விட்முண்டவனைப்போல உடல் சோர்ந்து வியர்த்து ஆவியொடுக்கமுற்று ஐயனே! பசியிலுல் வருந்துகின்றே னென்ன, அதைக்கேட்ட சுவாமி அம்மையைப் பார்த்துக் குடைபிடிக்கும் இந்தக் குறியதாளையுடைய பூதத்துக்கு ஒருபிடி சோறிடுங்கள் அப்புறஞ் சொல்லுகிறேனென, சுவாமியை வணங்கி நல்லதென்றுபோக, பூதமும் உட னே தளர்ந்த நடையினை யுடையதாய் கண்கள் புகைந்து வாய்புலர்ந்திடப் போக இராஜகன்னிகையின் ஏவலினுல் ஏவலர் அபபசி நோய்கொண்டவனை இட்டுக்கொண்டுபோய் சோற்றுமலைமுன் விட்டார்கள். உடனே அப்பூதம் அச்சோற்றுமுன் னின்றதைக்கண்டார்கள். அதையெடுத்து உண்டதையும் அங்கிருந்த சோற்றையும் ஒருவருங் கண்டாரில்லை. அதையறிந்தசிலதோழி கள் கைகளைநெரித்து அதிசயப்பட்டார்கள். சிலர் திடுக்கட்டு மயங்கினர் கள். சிலர் கண்களைமூடிக்கொண்டு ஓடினர்கள். பின்பு அப்பூதம் நெய்முத லியவற்றைப்போக்கி முனையொடியாமற் சமைத்த அன்னமும்-பாற்கறியும்- பொரிக்கறியும்-இனிய பயரிறைச்செய்த கறியும்-பின்னும்பலவகைக்கறிகளும் பாலும்-தயிரும்-நெய்யும்-தேனும் ஆகிய அளவில்லாதனவற்றை மிடாக்க ளோடு எடுத்து வாயில்விட்டுண்டான் பின்னும் பலவகைப் பழக்குவியல்க ளும், பலகாரங்களும், கரும்புகளும், தேங்காயும், இவைகளன்றி வேகாத அரிசி காய்களின் வருக்கம் முதலியவற்றையும் எடுத்துண்டு அளவற்ற நவ தானியங்களையுமெடுத்து வாயிலிட்டுண்டான். இவ்வளவு மிகுதியான பொ ருள்களையும் தனது பருத்த குறிய கையினுல் வாரித் தனது பெரியவயிற்றி னிடத்தி லிடவும் நெய்த்துடுப்பால் நெய்யை யெடுத்துவிட்டு ஆகுதிபண் ணிய ஓமாக்கினியைப்போல மிகுந்து நவத்துவாரங்களிலும் தீபழக்கினி கொளுத்த அதைக்கண்ட அங்கயற்கண்ணம்மை அதிசய மடைந்து தனதி டத்தன்புள்ள நாயகனுக்கு முன்னர்சென்று நாணத்தோடு விளங்காநின்ற மலர்களையுடைய குழலி தோளின்மீ திருத்தித் தளர்ந்து நிலத்தை காலாற் கிழித்துக்கொண்டு நின்றனள். சோமசுந்தரக்கடவுள் தேவியினது நிலைமை யைக்கண்டு அறியாதவர்போல கேட்கத் தொடங்கி நானனுப்பிய பூதம் உண்டு மிகுந்ததுண்டாயிருச்குமாலுல் இன்னம் பூதகணங்களையனுப்பி உன் மனது சந்தோஷிக்கும்படி யுண்பிப்பேனென்றுசொல்ல தேவி ஐயனே! நீங்க ளனுப்புவித்தபூதத்துக்கு அங்குள்ள வெந்தபொருள்களையும், வேகாதபொ

ருள்களையும் உண்டும் பசியடங்கவில்லை இன்னும் கொடியபூதவீரரை அனுப்புவீராகில் இவ்வுலகம் யாவையும் எடுத்து வயிற்றினிடத்து வைப்பாரே ஆதலால் உமக்கு உகாந்தகால உருத்திரனென்னும் பெயர் தெளிவாகத் தோன்றுகின்றது என்று சொல்லிக்கொண் டிருக்கும்போது மூன்றும்பிறை போன்ற பல்லினையும் குகைபோன்ற வாயினையுமுடையபூதம் நீபாக்கினியா னது தன்னைச்சுட அதனல் வருந்திக் கடவுளுக்குமுன்பாகவந்து வெளி யம்பலத்தில் நடனஞ்செய்த சோமசுந்தரக் கடவுளே! எம்பிராட்டி சமைத் துவைத்திருந்த அன்னம் முதலியவைகள் இமையமலைகள்போலு மிருந்தன, அதனையெடுத்து யானுண்டும் என்பசி தணிந்தகில்லை, இறந்தவர்க்குக் கொ டுத்துண்ணுதவர் வயிறுபோல் எரிகிறதெஸ்றுசொல்லி இழிந்தவர்களது நிரி புரந்திலிட்ட நீபானது மிகுந்த பசிபுருவமாகி அடியேனது வயிற்றினிடத் துக் குடிபாகப் புகுந்ததே தா வென்று கையோடு கையடித்து அண்டங்கள் வெடிபடக் கதறுவன் ஐயகோவென்று சொல்லுவன். பெருமூச்சுவிடுவன். உயிர்நீங்கியதுபோலத் தளருவன்.

குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம்

முற்றிற்று.

———

உ

சிவமயம்.

எட்டாவது

அன்னக்குழியும் வையுமழைத்தபடலம்.

கலிநிலைத்துறை

வேதநா யகன்பாரிடவேந்தனுக்கமைபா
வோதனுதிகளருத்தியதன்மையீதுவையும்
போதராமைபாலமைவுறப்போனகக்குழிதந்
தோதமாநதியருத்தியசெய்தியுமுரைப்பாம்.


இதன்போருள்.

பூதகணத்தலைவனான குண்டோதரனுக்கு (வயிறு) நிரம்பாத போசன பதார்த்த முதலானவைகளை உண்பித்ததன்மை இதுவரைக்குமாம். (இனி மேல்) இவைகளும் போதாமையால் வேதங்களுக்கு நாயகராகிய சோமசுந் தரக்கடவுள் (குண்டோதரனது வயிறு) நிரம்பும்படியாக அன்னக்குழியை யுங் கடலையொத்த பெரிதாகிய வையையும் வரவழைத்து உண்பித்த செய்தி யையுஞ் சொல்லுவாம்.

இடபவாகனத்தை யுடைய சோமசுந்தரக்கடவுள் பின்பு தடாதகை யைப்பார்த்து உள்ளேநகைத்து மிகுந்த பசியையுடைய குண்டோதரன்பொ ருட்டு அன்னத்தைத்தருகின்ற புவனமாகத் தன்னுள்ளத்தி னினைத்தனர் அவள் நினைக்குமுன்வந்து நான்கு பெரிய திசைகளிலும் உள்ள தயிர்க்கட லும் மத்தியில்பூமியைக்கிழித்துக்கொண்டு ஊற்றுக நான்கு கிடங்காகியெழு ந்ததுபோல மாறுபடுதலில்லாத சுவையினையுடைய வினியதயிரும், வெள் ளிய நெய்சாதமும், நாலு குழியிடத்திலும் பொங்கி மேலெழுந்தது. சிறந்த சந்திரகுலத்திற் பிறந்த பாண்டியன் மருமகனாகிய சோமசுந்தரப்பாண்டியன் அந்தப் பெருவயிற்றினையுடைய பூதத்தைப்பார்த்து உன் பசிதணிய உண் ணென் றுத்தரவுசெய்ய அப்பூதத்தலைவன் அந்தத்தயிர்க்கிடங்கருகில் அலை கடல்கலக்கு மத்தினைத் தனதுகைகளை யுள்ளேவிட்டு எடுத்தெடுத்து வாயி லிட்டு உண்டிட வேதநாயகனது திருவடியிற் பத்திவைத்து மோகூத்தை யடைந்தவர்கள் பழவினைத்தொடர் போயதுபோல பசிநீங்கி அவ்வன்ன த்தையெடுத்தெடுத்து ஒழியாமல் வாயிலிட்டுண்டதால் உடம்பெல்லாம் வயி றுகி வீங்கினான். பூமிகிழியும்படி மலைபோல் விழுந்தான். மூச்சுவிடக்கூடா மல் நிலத்திற்புரண்டவனாகி தாகத்தின் பொருட்டு நீரைவிரும்பி அவ்வூரில் நீருள்ளகுளம் எரிகளைத் தேடுகிறதற்கு எழுந்து தம்முயிரையொத்த கணவ ரைப்பிரிந்த பெண்கள்போல அன்று மலர்ந்த நீலோற்பலமலர்களும், தாம ரைமலர்களும் வாடும்படி தடாகங்களும் எரிகளும், குளங்களும் வறள வா யை வைத்துக் கிணறுகளிலுள்ள நீர்களும் பசையறக் குடித்தும் தாகத்

தைச் சகிக்கக்கூடாதவளுப் வருந்திக் கங்கையைத் தம்முடையசடையிலே யுடைய சிவபெருமானது பாதத்தைக் கருதியிரங்க, நாதனும் தனது திருமுடியின்கணுள்ள கங்கையைப்பார்த்து நிறைந்த நீரலகளை மாவிகையாகவுடைய கங்கையே! நீயிந்த அகழியாற் சூழப்பட்ட மதிலையுடைய மதுரையினிடத்து மிகுந்த நீர்ப்பெருக்கையுடைய ஆருகச்சீக்கிரமாக வரக்கடவாயென்று கட்டளையிட, உடனே அக்கங்கையானவள் சடையைவிட்டு நீங்கி ஒருவார்த்தை சொல்லத்தொடங்கினாள். என்னெனில் முன்னொருகாலத்தில் பகீரதன்பொருட்டு ஒரு தேரதமாய்ச்சென்று அதில் மூழ்குகின்றவர்கள் குற்றம்பொருந்திய நிலினைத் தொடக்கறுத்துச் செல்லென்று பணித்தாய் இன்றும் ஒருதியாகெனச் சொல்லுவாயாலல் என்னைத்தரிசித்தவர்களும் மூழ்கினவர்களும் கையாலேலும் பரிசித்தோர்களும், பவத்தொடர்ச்சியின் பற்றுவிட்டுத் தேவரீரிடத்துப்பக்தியும்-கல்வியும்-ஞானமும்-வீடும் பெறும்படி பணித்தருளக் கடவாயென்று சோமசுந்தரக் கடவுளிடத்து வரம்பெற்றுக்கொண்டு மிகுந்த வேகமோடெழுந்து பெரியதியாக ஆகாயத்தினின்று மிழிபவளாமென வரத்தொடங்கினாள்.

மகமேருவை வில்லாகவளைத்த சிவனது முடியின்கணுள்ள கங்கையானவள்வளைந்த அலைகளாகிய கையையும் முத்துகளாகிய தந்தங்களையும், நுரைகளாகிய வஸ்திரத்தையும், கொடியாகிய மருங்கினையும் கருமணலாகிய அளகத்தையும், சேல்களாகிய விழிகளையும் பெற்றுவருபவள் வாசனை பொருந்திய அகில் விருக்ஷங்களையும், பொரிபரையினையுடைய வேங்கைமரங்களையும், பிரகாசம் பொருந்திய இரத்தினங்களை யுடைய மலைகளோடு அரைபடவும், பெரியகிளைகளலறிடவும், அடியோடு விரைவில் அகழ்ந்து சுற்றிக்கின்ற சுருப்புக்காலினை யுடைய குறிஞ்சிநிலமாக்களது சிறியவூர்களை அடியோடு பறித்துக் கரைகளிற்படும்படி பெரிந்து காற்றைப்போல மிகுந்த விசையோடுவந்துபெட்டைமாவேறு ஆண்மான்களையும், பெண்யானைகளோடு ஆண்யானைகளையும், வாரிக்கொண்டு பிரிவில்லாத ஒருமரக்காடுகளை அடியோடு பேர்த்துக் கருங்குரங்குகள் வயிற்றிலணைந்த குட்டிகளோடு தங்களைத் தழுவிய ஆண்குரங்குகளையும் அவைகள் வாசம் பண்ணுகின்ற மரக்கூட்டங்களோடும் சூறிஞ்சிநிலமாக்களது கொடிய கணைகளோடு வில்லுகளையும், தினைப்புனப்பரணோடு கவண்களையும் வாரிக்கொண்டு வருகின்ற அவ்வாற்றின் அலைகள்நெடியமலைகளை அடியறும்படி மோதுகின்றன, அவற்றை யகழ்கின்றன, பள்ளமான மடுவை மேடாக்குவன, கிளைகளையுடைய மரநிரைகளை தலைகீழாக இடிகரைதோறு நடுவன, கடலிரைத்திலுள்ள பெரிய பூமியை யிருபிளவுபடவருவன, மிகுந்த வலியினையுடையன, பெரிய மரங்களைத் தோண்டுகின்ற மிகுந்த வலியினையுடையன, வயிரமில்லாத மரங்களை முறிப்பன, இரத்தினங்களை யெடுத்து வீசுவன, வேகமாகச் செல்லுகின்றன, யானைமதங்களோடு வண்டுகளை யிழுத்துச் செல்லுவன, நுரைகளாகிய முகபடாத்தையுடையனவாகியும் வருதலினால் அவ்வாறுயானையையொத்திருந்தது. நீண்டபிலத்திலே செல்லுகின்ற நிலைமையை யுடையனவாயும், நிருமலனுகிய பரமசிவனது சந்திரனையணிந்த திருமுடியின்மீது ஆடுகின்ற



செயலினை யுடையனவாயும் பிரகாசத்தை யுமிழாநின்ற அரியமாணிக்கங்க ளைத தன்தலையிலுடையனவாயும், நீண்டுவளைந்த நடையினை யுடையனவா யும், நிறைநிறையான குறுகிய பல கால்களினு லோடுகின்ற வலியினையுடைய னவாயுமிருத்தலால் வளைந்தவுடலையுடைய பாம்பென்று சொல்லும் படியா கவும் வாநிற்கும். இவ்வாறு வரும் நதியானது கல்வித்தேர்ச்சி யில்லாதவர் செய்த கவிபோலக்கலங்கி கல்விகேள்வியில் வல்லவர்கள் செய்த கவிபோல் பலசிறப்பாகிய துறைகள்தோன்றப்பொருந்தி செல்லுகின்ற வழிகள்தோறு மபொருளாழ்ந்து தெளிந்து தேயததிலுள்ள யாவரும் விரும்பி அப்பயனை க்கொள்ளும்படித் தங்கிற்று.

வண்டுகளது ஒளிசீங்காத மலர்களையுடைய சடையினின்றும் வந்த நதியை சோமசுந்தரக்கடவுள்கண்டு பிளவுபட்ட வாயைத்திறந்துகொண்டு என் விடாய்தணிதற்கே னில்லையென வெம்பி வீழ்ந்த குண்டோதரனை அவ் வாற்றினிடத்துவிட அவன் அவ்வாற்றையடுத்து அதனுள்ளிரங்கி வலியோ டுந்தனதிரண்டு கைகளைதூக்கிக் கரைகளிலேற நீட்டியோடும் புனலைத்தடுத் து மலைபோலுயரும் புனல வாயைத்திறந்து தன்தாகவிடாயும் மேகமும் வெட்க உண்டு மகிழ்ச்சிகொண்டு பரமசிவன் றிருமுன்னர் வந்து அவரது தி ருவடியை வணங்கிக் கூத்தாடிப்பாடி ஆரவாரித்து அளவற்ற கீதங்களைப் பாடினன். பாட்டின் பொருளாகிய பரமசிவன் அப்பாட்டின் வீரனது பா டலைக்கேட்டு மகிழ்ந்து அவ்வையைநதியாற் சூழப்பட்ட மதுரையைபரசா ண்டிருந்தனன். பரமசிவனது சடையினின்றும் வந்ததால் அந்நதிக்குச் சிவ கங்கையென்றும் அக்கடவுளதுவுருவந் தெளிந்தோர்க்கு ஞானந்தரலால் சிவஞான தீர்த்தமென்றும், காற்றைப்பார்க்கிலும் வேகமாக வருவதால் வே கவதியென்றும், கிருதமாலையென்றும் பெயராகும்.

அன்னைக்குழியும் வையையுமழைத்தபடலம்
முற்றிற்று.

சிவமயம்.

ஒன்பதாவது

எழுகடலணிழுத்தபடலம்.

கோசிசகக்கலிப்பா.

முடங்கன்மதிமுடிமறைத்தமுடித்தென்னன்குறைகவ்வினர்
கிடங்கமொடுநியமழுத்தகளர்கருணைந்நிறனிதுமேன்
மடங்கல்வலிகவர்ந்தான்பொன்மாலைபடிந்தாடவெழு
தடங்கடலுமொருங்கழுத்ததன்மைதனைச்சாற்றுவாம்.

இதன்பொருள்.

மடங்கலான இளம்பிறையினைந் திருமுடியினிடமாக மறைத்த மனிமுடியினையுடைய சௌந்தரபாண்டியர் குண்டோதரனுக்கு அன்னக்குழியையும் வையையாற்றையும் வரவழைத்த பிரகாசம்பொருந்திய திருக்கோலைத்திறம் இதுவரைக்குமாம். இனிமேல் நரசிங்கக்கடவுளினது பல்லைச் (சிம்புள்வடிவமாய்க்) கவர்ந்துகொண்ட சோமசுந்தரக் கடவுளானவர் காஞ்சனமாலையார் ஸ்நானஞ்செய்ய விசாலம்பொருந்திய சுத்தகடலையும் ஒருமிக்க வரவழைத்த தன்மையினைச் சொல்லுவாம்.

உவமை சொல்லுதற்கரிய பரம்பொருளானவர் பாண்டியனுருவமாகி உலகமெல்லாந் தனது வெண்கொற்றக்குடையின் நீழலினிருந்து செங்கோல் செலுத்துநாளில் மெய்ஞ்ஞானமாகிய அரும்பொருளையுணர்ந்த இருடிகளும் முனிவர்களுடம் வரன்முறையாகச் சந்தித்து வரும்போது வேதமுனிவராகிய கௌதமருடம் வந்துகண்டு நிருபிப்போகுங்காலையில் கற்பினையுடைய காஞ்சனமாலையரண்மனையிற் புகுந்தார், அப்பொழுது காஞ்சனமாலையானது வரவைவேற்று உபசாரவார்த்தைகளைச் சொல்லிப் பொன்னரைமிட்டு வணங்கி அவரை நோக்கி ஐம்பொறிகளையும் வென்று அளவுபடாத ஞானவேதத்தின் முடியில் விளங்காநின்ற பொருள் பரமசிவமென்றறிந்த சுவாமிகளே! நீக்குதற்கரிய பிறவித்துன்பத்தை நீக்குதற்குக் காரணமான தவத்தை அடியாருக்கு அனுக்கிரகம் பண்ணவேண்டுமென கருணைக்கடலாகிய முனிவர் சிகாமணியானவர் காஞ்சனமாலையை நோக்கி அம்மா நீசெய்த தவபலத்தினாலே இவ்வுலகத்தைதியெல்லாம் பெற்று வளர்த்த தடாதகை பிராட்டியாருக்குத் தாயாயும், பரமசிவனை உனக்கு மருமகனாகஞ் சிறப்பைப்பெற்றாய், வெற்றியையுடைய மலையத்துவசபாண்டியனுக்கு மனைவியாயும், இப்படிப்பட்ட நீ யறியாததவம் இவ்வுலகத்தில் யாரறிவார் ஆயினும் சொல்லுகிறேன் கேள்.

மானதமென்றும், வாசிகமென்றும், காயிகமென்றும், குற்றமற்ற தவங்கள் மூன்றும் இயற்றுள் மானதமாவது தருமஞ்செய்தலினும், தானஞ்செய்தலினும், மனம்வைத்தலும், தவை-பொருமை-உண்மை-சிவனைத் திபாணித்



தல்-பஞ்சவிந்திரியங்களை யடக்குதல்முதலிய அனந்தமாம், இவைகளை மன
த்தாற்செய்தலாம். வாசிகமாவது ஸ்ரீபஞ்சாட்சரமோதல், தருமநூலோதல்,
பஞ்சசாந்திஓதல், வேதஞ்சொல்லும் சதவுருத்திரந் தோத்திரஞ்செய்தல்,
பெரியதருமங்களைக் குற்றமறவெடுத்தோதல், முதலாநந்தம், இவைவாக்காற்
செய்தலாம். காயிகமாவது பரமசிவனை யருச்சனைசெய்தல் ஆலயத்தை வல
ஞ்செய்தல், எதிரினின்று வணங்குதல், கடவுள் வாழாநின்ற பல திருப்பதி
களைப்போய் வணங்குதல், திருப்பணிசெய்தல், கங்கைமுதலிய தீர்த்தயா
த்திரைசெய்தல், இவைமுதலிய பல இவைக்காயத்தாற்செய்தலாம் இம்மூ
ன்றில் காயிகமே சிறந்தது இப்புண்ணியங்களுக்குள் தீர்த்த யாத்திரையே
யதிகம். அவற்றினும் கங்கை முதலிய தீர்த்தங்களில் தனித்தனியாகப்போய்
ஸ்நானஞ்செய்த லதிகம். இவற்றினும் இந்நதிகளெல்லாம்வந்துசேரும் சமு
த்திரஸ்நானமதிகம் என்று முனிவர்சொல்லக் காஞ்சனமாலை சமுத்திரஸ்நா
னஞ்செய்யத் துணிந்து தன்மகளாகிய தடாதகைப் பிராட்டியாருக் குரை
க்க, அப்பாண்டியர் தவக்கொழுந்தாகிய அங்கயற்கண்ணம்மையார் இது
செய்தியைப் பெருமானுக்குச் சொல்லுவேனென்று சென்று பெருந்தகை
யாகிய அரசர் பெருமான் திருமுன்னர் அன்னம்போல்நின்று அன்று குண்
டோதரனுக்கு அன்னக் குழியையும் ஆற்றையுமழைத்த திருவைக்கடலே!
என்தாய் இப்பொழுது கடலாட விரும்பினளென்று சொல்லி யிரந்தாள்.
கடவுள் தன்றேவியின் திருமொழியைக் கேட்டுக் கடலொன்றே! எழுகட
லையும் இம்மதுரையுள் வரும்படி கூவிப்பழைப்போமென்று சொல்லி அவற்
றை நினைத்தார். உடனே யம்மதுரைக்குக் கீழ்த்திசையில் ஒருகுளத்தில்
எழுவகைப்பட்ட நிறத்தோடு சரிந்தமுகத்தினையுடைய சங்கங்கள் வாய்திற
ந்தொலிக்கவும், வெள்ளியநுரைகள் ததும்ப, சுரமச்சங்கள்பாய, முத்து
களை யெடுத்தெறியும் நிரையான அலைகள் அண்டமுகடுவரையி லெழும்ப,
எழுகட்லும் ஆரவாரித்தெழுந்து அவற்றைக்காணும் அந்நகரிலுள்ளார் நடு
ங்க, கலியுகமுடிவில் பிரமாவின் படைப்புமாறும்படி யெழுந்தெனக் கொ
திக்தெழுந்த கடலானது சற்பாபரணராகிய பரமசிவனது ஆக்ஞையால்
அவனடிகளைச் சென்றடைந்தவர்க ளடங்கிபதுபோல் அடங்கிற்று. பொற்று
மைத் தீர்த்தமானது தன்னிறம், எழுகடலினது ஒப்பற்ற நிறத்தோடு கல
ந்து பொலிவுபெற்று மின்னலைப்போலும் விளங்குகின்ற சடையானது தாழ
வெள்ளியம்பலத்து நடனஞ்செய்யும் பரமசிவனது நிறத்தைப்போல் எட்டு
வண்ணத்தோடும் விளங்கிற்று.

எழுகடலழைத்தபடலம்

முற்றிற்று.

சிவமயம்.

பத்தாவது

மலையத்துவசபாண்டியன் சரித்திரப்படலம்.

கலி விருத்தம்.

எழுகடலைழுத்த வாறிப்பரிணமினிச்
செழுமதிமரபிறுன்சோணிழுந்தகன்
பழுதில்கற்பில்லாதிரைதிகாப்பந்த
னழகியநிருவுருவடைந்தநாலாம்.

இதன்பொருள்.

எழுகடலையழுத்த வினைபினைச்சொன்னோம், இனிமேல் சொல்லுகின்ற பாண்டிய குலத்தரசனுகிய மலையத்துவசபாண்டியராஜன் இந்தராதிதேவர்களிடமிருந்து தனது மனைவியராகிய குற்றமற்ற கற்பினையுடைய சுந்தரசனமாலையாரோடும் எழுகடலிலே ஸ்நானஞ்செய்து பாதிமேச்சுமரத்து அழகிய சுந்தரியாகிய திருவுருவமடைந்ததைச் சொல்லுகின்றோம்!

சோமகுலத்தரபாண்டியன் தடாதகைப்பிராட்டியாரோடும் எழுகருவிலிருந்து அவ்வெழுகட்டலின் பக்கத்திலுள்ள சந்தனம் - மரவம்-மந்தாரம்-மாவகுளம்-பாடலம் இவைகளால் கலந்துள்ள நந்தவனத்தில் ஒருசிறுமாதனத்தின்மீது எழுந்தருளியிருந்து முறுக்கவிழ்ந்த மல்லிகை - முல்லை-ரண்டகம்-இம்மலர்களை இளைஞரும் சேடிப்பர்களும் கொய்துகொடுக்க அவைகளை வாங்கி மோந்து ஆசைவேறுபாடின்றி யிருக்குங்காலத்தில் சுந்தரபாண்டியர்கன்னிகாதலியைநோக்கி உன்பொருட்டாக எழுகடலையும் இங்ஙனின்கண் ணழைத்தனம் நின்னன்னையே இவ்விடத்துவந்து ஸ்நானஞ்செய்ய அழைப்பாயென தடாதகைப் பிராட்டியாரும்போய் தாயைக்கொணர்ந்து குளத்தினிடத்து வர சுந்தரசனமாலை புராணநூல்தேர்ந்த முனிவர்களை நோக்கிச் சுமுத்திரஸ்நானஞ்செய்யும் விதியாதென, குற்றமற்ற கற்பினையுடையாய் நாயகன்கைத்தலத்தைப் பிடித்துக்கொண்டாவது, இல்லேயல் பிள்ளையின் கைத்தலத்தைப் பிடித்துக்கொண்டாவது, அதுவுமில்லேயல் பசுவின் கன்றின்வாலைப் பற்றிக்கொண்டாவது, சமுத்திரஸ்நானஞ்செய்தல் முறைமையினன, அம்முனிவரது வாய்மையைக்கேட்ட சுந்தரசனமாலை முற்பிறப்பில் குறைவறத்தவஞ்செய்யாத கொடியபாவியாகிய எனக்குக் கொழுநனும் குமரனுமில்லேயே, இனிப்பெற்று மூழ்குவது பசுவின் கன்றலால் வேறுண்டோவென்று தடாதகைப்பிராட்டியைப் பார்த்துச்சொல்ல, பிரமபதத்தையும் விரும்பினவர்க்குக்கொடுக்கும் நாதனதுபிர்த்துணையாகும் நாயகி தன்னுயிர்க்கிழவனுகிய பரமசிவத்தை யடைந்து வணங்கி தன்னன்னையின் குறைமொழியைச்சொல்ல மன்னவன் இந்திரனேடுகூட விருக்கின்ற மலையத்துவச பாண்டியனைத் தன் மனத்தில் நினைக்க அப்பாண்டியன் மகமேருவை வில்லாகவுடைய பெருமா

னது திருவுள்ளத்தை யுணர்ந்து சிறையையுடைய மலைகளையெல்லாம் அழித்
தவனுகிய இந்திரனது ஆசனத்தை விட்டுத் தேவவிமானத்தின்மீது எழுகட
லினிடத்துக் கிருபையையுடைய இனிய வழுதம்போன்ற பரமசிவத்தைப்
பெண்பேற்றினாலே கண்பேறடையும்படி யெதிராகக்கண்டு மருமகனுகியகட
வுள வணங்கும்பொருட்டு வருமுன்னே மாமனென்றுமுறைபாற்றனது தா
மரைபோன்ற கையையமைதது பெண்கொடுத்தபாண்டியனை எதிராகத்தழு
விக்கொண்டு திருவுள்ளமகிழ்ந்து கிருபையோடு பார்த்து உன்மாட்டன்புள்
ள பத்தினியோடு கடலாடச் செல்கவென, மலையத்துவச பாண்டியனும் முப்
பிறப்பிற் செய்த தவத்தாற்பெற்ற பெண்ணன்னம்போலு மீளட்சி தேவியா
னவளை எதிரேவந்து தன்னைத்தழுவ, தானுந்தழுவி இமவபருவதராஜனைப்
போலக் குறைவற்ற மகிழ்ச்சியை யடைந்து குளிர்ந்த தேன்போலுஞ் சொ
ல்லையுடைய உனது திருக்கலியாணத்தைக்காணத் தவஞ்செய்தேனல்லனென்
னுந் துக்கமுண்டாயிருந்தது. அது இந்தச்சந்தோஷமென்கிற தேனைவண்
டைப்போலவுண்டு மறந்தேனென்றான்

அப்பொழுது நிறைந்தகற்பினையுடைய காஞ்சனமாலை தூரத்திற்சென்ற தன்னுயகன் சிலநாள்சென்று வரக்கண்டவள்போல நாணுற்று எதிராக வந்து வணங்கி மேகம்போன்ற அளகத்தையுடைய காஞ்சனமாலை பவுத்திரத்தை யுடையவளாய் பஞ்சாட்சரத்தையோதி முனிவரது வேதநூற் சங்கற்பவிதிப்படி தன்றுணைவனதுகையைத் தன்கையாற்பற்றிமனக்களிப்போடு எழுகடலினும் ஸ்நானஞ்செய்தாள் செய்து கரையேறிக் கொன்றைப்பூவை முடியிலேதரித்த பரமசிவனது கிருபாநோக்கம் பெற்று இனி தாய்மார்கள் கருப்பத்தில் தங்காதவண்ணம் உமைபாகரது அருட்படிவத்தை யடைந்தார்கள். அடைந்த மாத்திரத்தில் காளகண்டமும்-சதுர்ப்புயமும் - நெற்றிக்கண்ணும் பெற்று பூவுலகத்தார்கண்டு அதிசயிக்க விளங்கினன். அப்பொழுது ஆகாயதலத்தினின்றும் வழுக்கிவிழுந்த சூரியனைப்போல பரமசிவன் வாழுகின்ற உலகத்தினின்றும் பூமியின்கண் ஒரு தெய்வவிமானம் இறங்கியிருந்தது. அந்தத் தெய்வவிமானம் வந்தவுடனே மும்மூர்த்தி ஸ்வரூபமாகிய பரமசிவனதுபணியால் பாண்டியன் நங்கையோடும் தேவர்கள்தாழ விமானமீதேறினன். அக்காலத்தில் தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள் தேவதுந்துபி மேகம்போல முழங்கிற்று. அப்பொழுது விமானம் ஆகாயத்திலெழுந்தது. தேவதுந்துபிகள் ஒலித்தன. ஹரஹரவென்னுமொலி யெங்குமொலித்தன, தொழுகின்ற தலைபினையுடைய முனிவர்களோத்தேவர்கள்வணங்கசிவனது கைலாயத்தை நோக்கிச் செல்லுகின்ற அவ்விருவரும் முன்பு தனது பாண்டிய வுருவமாயிருந்தது உலகத்தை முறைபாகச் செங்கோல் கைக்கொண்டு பின்பு தன்னுருவத்தைத்தந்த மருமகனும் மகளாகிய தடாதகைப்பிராட்டியாரும் மீண்டு பொன்னம்பலத்த குடிமினையுடைய அரண்மனையிற் புகுந்து இருக்கக்கண்டார்கள். பழவினைபால் சரீரமுறைதப்பிப் பிறவியையடைந்த மனிதர்போல் பழைபவுருவமாறி உலகமாதாவாகிய அன்னையை மகளாகவும் பெற்ற அப்பனை மருமகனாகவும், யான் யாவருக்குஞ் செய்தற்கரிய தவந்தானென்ன செய்தேனென்றுசொல்லி கண்ணைவிட்டுப்பிரிந்த பசு

வைப்போல ஐயனதுசத்திக்கின்று விரகண்டமாயிபொருந்திய திருவடியை விடாதுபற்றிப் பொருந்திய அல்பானதுபின்னின்று எக்க மனந்தாடு இரண்டுகண்களுரும் சென்று முட்டி அடிக்கடி நிருபபிபபாத்துக்கொண்டு மல்லையொதத இந்திரவிமானதனைத கும்பிட்டுக்கொண்டு செல்லாமாயிறை, புவலோகங்கடநதுபோய புல்லாயிபருக் களவற்று தேபகத்தை யுண்டிகின்று சுவலோகங்கடந்துபோய் மகாலோகமை-சனலோகம் கடந்து, ஞாந்குமேலுள்ள தவலோகங்கடந்து, சுநதிபலோகங்கடநது, தண்ணாளிய நுளைபமாலையுடையோனது நவலோகங்கடநது, உலகங்களுக்கு நாபகமாகிய சிவலோகத்தையடைநதார். பின்பு அபக்கொபாகிய தடாதனை இயலவுறுகிப புரசனை அடிவணங்கித் தன்னைப பெற்றவர்களுக்கு வேதாபொருளினைநு வடவையளித்த கிருணையிலைலே மனந்தின்கண்ணடங்காத மற்சபானது வாய்கொள்ளாமை புறப்படுவதென இரண்டு நிருசமிவிக்ரு சென்றுமுதகதிற் பொநதிந்த நிகதனை நிலைனிப்படுதீபால பலமுமாறபால துதிசெப்பு வணங்கியென்று சொல்லதடையகறறை. அவலறுமதிவர்க்குர் மற்ற யாவர்க்குபபோலச்சமத்தளிக்கின்று தீவர்களாது கட்டுறுமாற புண்ணிய காமதீதணினின் இளங்கன்றுக்குக் குணறமிலது: மன்னரிடத்தார் மன்னோரிபறறுதாய விருப்பியது முருகடலை இருகயதுதின்கண் வாழுகடலையும வவவறுத்தாய் மன்னவை பிறறுறவள் ஸ்தானதுரிப்பும பிபாருடே தீதவுலகத்தி னிருந்த அவன் கணவனையும அழைத்து உலகு வாழுவுதனைக் கொடுத்து மேலான மேமாசலையுலகத்தையுந் தந்தாய். அன்றியுமட பாண்டபமது மாட அழகிக்கதென்றவம் படிபுண்டாகாமல் பொன்மேபாதுவம் விளங்குகினற மலையைக்குடிய முடிவைபுந தரிததுச சென்மேகால் கடந்தவருகின்றும், இனிமையும இருகில்லை மைகக்கிடையுறு மில்லையன்மீரு லெனைந் தலைவிபிபபட்ட, கடையுள தன்னிலைபுவி யுட்கருக்கொந்த மனநிற்கிகாண்டு மகிழ்ந்திருந்தனர்.

மல்லைபத்துவெசலனைபழைத்த படலம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

பதிநைராவது

உக்கிரபாண்டியன் திருவவதாரப்படலம்.

கலிநிலத்துறை.

மன்னன்குலசேகரன்றிருமகன்மனைவி
தன்னெடுங்கடலாடியதகுதியீதந்தத்
தென்னவன்றனித்திருமகடிருவுளங்களிப்ப
உன்னருந்திரனுக்கிரனுதித்தவாருரைப்பாம்.

இதன்பொருள்.

அரசர்களுக்கரசனுகிய குலசேகர பாண்டியனுடைய சிறப்புப்பொருந்திய புத்திரனுகிய மலயத்துவச பாண்டியன் தன் மனைவியாகிய காஞ்சனமாலையோடும் கடலில் ஸ்நானஞ்செய்தசெய்தி இதுவாகும் இனி அந்தமலயத்துவச பாண்டியனுடைய ஒப்பில்லாத பெருஞ் செல்வமாகிய தடாதகைப் பிராட்டியார் திருவுள்ளங் களிப்படைய நினைத்தற்கரிய வெற்றிபொருந்திய உக்கிரகுமாரபாண்டியன் திருவவதாரஞ்செய்த திருவிளையாடலை சொல்லுகின்றும்.

சந்திரசூடனுகிய சோமசுந்தரக்கடவுள் உலகத்தினிடத்து அளவில்லாத நாள் தன்னுடைய திருவடி நீழல்போல யாவருக்கும் குளிர்ச்சிபொருந்திய சந்திரன்போன்ற வெண்கொற்றக் குடையிலை நீழலைச்செய்து அருளோடு செங்கோல் நடாத்தி உள்ளே விளங்கு முயிர்தாணுகி முறைசெய்து நடந்து வருநாளில் திருமாலும்-பிரமனும்-வேதமுதலிய சாஸ்திரங்களாலுங் காணுதற்கரியவனும் அன்பர்க் கெளியவனுமாக விருக்கும்பெருமை யாவர்க்குந் தெரிய மிகுந்த வன்பினைக்கொண்ட சிந்தையினையுடைய மலயத்துவச பாண்டியனுக்கும் அவன் மனைவியாகிய காஞ்சனமாலைக்கும் ஆசைக்குரிய மகளெனவமைமையைத் தந்து அதற்குப் பொருந்தத்தானும் மருமகனுகி உலகமுழுதுந்தன் வெண்கொற்றக் குடைக்கீழ் நடங்கியிருக்க முறைசெய்து மூன்றரசர்களுக்குள் சந்திரகுலமாகிய பாண்டியர் குடிபெருமையை யடையச் செய்ததுபோல இன்னும் பெறத்தக்கதாகிய ஓர் குறைவைத் தீர்க்கும்பொருட்டு ஒருகாரியத்தைசெய்தலும், அக்காரியத்தைவிட்டுவிடுதலும், நினையாத வேறொருகாரியத்தைச் செய்தலுமாகிய இவற்றையுடையோனைப் ஆதிமத்யாந்தரகிதனுகிய பரமசிவனது நன்மை-தீமை-விருப்பு-வெறுப்பு இவைகளெல்லாம் இயல்பாகவே யொழிந்த மாயாவிலாசத்தின் றன்மையை யாவரெடுத்துச் சொல்லத்தக்கவர்கள். இவ்வித இந்திரஜாலவித்தை காட்டுவான்போல தன்னிடத்து அக்கினிக் கண்ணின்று முற்பவித்த வீரபத்திரக்கடவுளைக் கருப்பமடையாது அளவற்ற வுயிர்களையும் உலகத்தையும் பெற்றெடுத்த தாயாகிய சுந்தரவல்லி தன்னிடத்துத் தோன்றும்படி சிந்தித்தார். அப்பொழுது அவ்வீரபத்திரக்கடவுளினது வாவுக்கேற்பச் சேடியர்களும் மற்றவர்களும் அம்மையை வணங்கித் தாயேநின் உருவத்திற்குத் தக்கபடி கருவுருவனப்பு

சிறப்பும் மாதங்தோறுஞ் செப்பும் மனையினையும் யாங்கள் காண ஆசையுமிகு
தியுமுடையேமென்றார்கள் தேவியவ்வாறேயாகி காியமணிகளாகிய சிகரத்
தையுடைய பொன்மலைபோலுந் தோற்றத்தினையுடைய கொங்கைகள் அமுத
நிரப்பிய இரண்டுசெப்பினை பொத்ததாக அக்கொங்கைகளைச் சுமந்துதே
ய்ந்த மருங்குலு முண்டென்றுதோன்ற அநல் முதிர்ந்தாற்போன்ற நாவிலு
க்கு இனிய சுவைகளையுடைய வுணவுகளை யுண்ணவேண்டுமென்னும் ஆசை
மிக அவ்வாசையறுத்தகணங்கள் அம்மைவிருப்பிய போகபூமியமுதும், நாக
லோக வமுதும், பொன்னகரமுழுதும், விருப்பமடங்கக் கொண்டுவந்துகொ
டுத்தார்கள் புண்ணியத்தையுடைய முனிவர்களும் வேதபாராயணராகிய
பண்டிதர்களும் வந்து அரசனுக்குச் செய்யப் பொருந்திய சடங்குகளை அம்
மதுரை மூதூர் கலியாண வெள்ளத்திலே மூழ்க மாதங்தோறுஞ் செய்வி
க்க அக்கன்னிநாடானது செய்தபுண்ணியத்தால் உண்டாகிபபயனை அடை
யும் துறந்தவரது உள்ளத்திலுள்ள களங்க நீங்கவும், சோமவாரமும், திரு
வாதிரை நட்சத்திரமும்செப்ப சிவபூசையின்பயனை யடையவும் வியாழபக
வாரமிய குருவந்து அழகாகக் கேந்திரமேறிநிற்குதல் லக்கினம்வாய்ப்ப நா
ன்கு வேதங்களும் தாமேமுழங்க, தேவர்கள் மந்தார மலர்மாரிபொழிய தி
சைகள்தோறும் தேவமாதர்கள் நடனஞ்செய்ய, தேவதுந்துபிபைபத்தும் சத்
திக்கத், தூர்க்கையும்-இலக்குமியும் - நாமகளும் சேருக்கடைய அந்தணர்
மகிழ்ச்சிமிக, முனிவர்கள் வளர்க்கு முன்னர் மந்திரத்தையுடைய யாகாக்
கினி தானே வலஞ்சுழித்தெழுந் தாடவாரித்தாட, அட்டதிக்கு யானைகளும்
ஆதிசேடனும் பாரத்தினை யுண்டாகிப இளைப்புநீங்க, இந்திரன் மகமேருவா
கிய தெய்வம்-வருணன் இவர்களுக் கிடதூதாள் துடிக்க, பரமசிவனும்
உமையுங்கொண்ட கோலத்துக்கேற்பக் குழந்தையானது உதய சூரியனை
ப்போலவும், அக்காலத்துதித்த குமரவேளைப்போலவும், சிவப்ப மாலையை
யுடைய பாண்டியன் செல்வ புத்திரியாகிய தடாதகைப் பிராட்டியாரிடத்
திற் றோன்றியது தோன்றியவுடனே எம்பிராட்டி அப்பிள்ளையையெடுத்து
உச்சிமோந்து மார்போடுதழுவித் தன்னுபகன் கையிற்கொடுத்து மீண்டு
வாங்கித் தன் திருமுலைப் பாலாகிய வெள்ளத்தைக் குமுதம்போன்ற வா
யில் விடுத்துண்பித்து, அவ்வாறு வளர்த்து வருங்காலத்தில் திருமாலும்-
இந்திரனும்-பிரமனும் முதலிய தேவர்களும் முனிவர்களும்-மற்றவர்களும்
தத்தம் பத்தினிகளோடும் அரசனரண்மனைக்கு வந்தார்கள். சேரனும் சோ
ழனும் வடக்கின் கண்ணுள்ள அரசர்களும், குறுநில மன்னரும் தங்கள்
சேனைகள்சூழ கடல்கள் பொங்கி வருவதுபோல் வந்தனர். அவர்கள் வந்து
அரசனையும் - தேவியையும் முறைபால் வழுத்தி வாழ்த்தி மானையு மழு
வையு நீத்த பாண்டியனும். தேவியுமாகிய இவர்களது திருமுகக் கருணை
பெற்று அவர்களது திருவடியை வணங்கித் தம்மூர்செல்லும் அவர்களிற்
சிலர் பாண்டியர்களுக்கெல்லாம் பெருமானாகிய சோமசுந்தரப் பாண்டியரி
டத்துக் கந்தனே வந்தானென்பார்கள், சிலர் குற்றமற்ற கற்பினையுடையா
ளது பாக்கியமென்பார்கள், சிலர் இவனது அழகிலும் மன்மதனும் பெண்மை
யை விரும்புவானென்பார்கள். சிலர் இவன் செங்கோலினது ஆக்ஞை எழு

கடலாற்சூழப்பட்ட இவ்வுலகமாத்திரமோ, ஏழுலகத்தையுங் காக்குமென் பார்கள், சிலர் இக்குழந்தையினதுதோற்றம் மனிதர்கள்செய்ததவமோ அன்றித் தென் தேசசத்தி லுள்ளவர்கள் செய்ததவமோ, அன்றித் தேவர்கள் செய்ததவமோ அன்றி யாகங்களுக்குரிய பூசுரர்கள் செய்ததவமோ அன்றிக் கேள்வினையுடைய முனிவர்கள் செய்ததவமோ என்பார்கள். இவ்வாறுசத் தம்மி லொருவருக் கொருவர் விளவி மிகுந்த மகிழ்ச்சியோடு சென்றார்கள். அந்நகரத்தில் அவ்வவர்கள் வீடுகள் தோறும் பெண்கள் கலியாணத்துக்கு அலங்கரித்துக்கொள்ளும் ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு மங்கலவாத்தி யங்கள் ஆரவாரிக்க பட்டணமெங்கும் பொங்கியோடும்படி நெய்விழா வெடு ப்ப கேள்வி நிரம்பிய மறையோர்க்குக்கொடுத்த தானவெள்ளம் கடலைக்கிழி த்துக்கொண்டுசென்றது இன்னும் அத்தான வெள்ளமானது இறைத்த வா சனைச் சுண்ணங்களையும், பொரிகளையும், வெள்ளையரிசியையும், குப்பைகளை யும், நீர்ச் சிவிறிகளா லிறைத்த குளிர்ந்த பனிநீரையும், சந்தனத்தையும், எண்ணெயையும், கஸ்தூரிசேற்றையும், பசையில்லாமல் வாரியெடுத்து இட மகன்ற பட்டினமெங்கும் கழுவின.

இவ்வாறு அந்நகரமெங்குங் களிக்கச் சோமவாரம் திருவாதிரை நட் சத்திரம் ஆகிய இந்த நல்லநாளில் குருகேந்திரத்தில் பரிசுத்தமாகிய லக்கி னத்தில் பிறந்த சோமசுந்தர பாண்டியனது பிள்ளைக்குச் சாதகர்மமுதலிய ஆசார்க்குரிய வேத ஒழுங்கின்படிசெய்வித்து, வருணன்-இந்திரன்-மகமேரு வாகிய மலையரசன்முதலிய சத்துருக்களது வீரஞ்சிந்த, அவர்களது செருக் கையழித்து அச்சந்தோற்றுவித்தற்குறிய காரணத்தால் அக்குமரனுக்கு உ க்கிரவருமனென்று நாமகரணஞ்செய்து நான்காமாதத்தில் சந்திமிதிப்பித்து ஆறுமாதத்தில் அன்னமங்கலம்பயிற்றுவித்துப் பதின்மூன்றுமதியில் செளள வினைமுடிப்பித்து ஐந்தாமாண்டில் நூலினதுமுறைதெரிந்து பூணூற்கலியா ணஞ்செய்வித்துப் பின்னர் பதநிலை பாழிச்சாகை என்னு முறுப்பினையுடை ய பெரியவேதங்களையும் சாஸ்திரங்களையும் தநுர்வேதமும் வாள்வித்தையும் யானையேற்றம் குதிரையேற்றம் மற்றவையும் பிரகஸ்பதிபகவான்வந்து கற்பி த்தார் குருமுகத் தறியவேண்டுமென்னும் கொள்கையால் ஒருமுறைகேட்டு அறுபத்துநான்கு கலைஞானங்களும் ஒருமிக்கத்தெளிந்து பரமசிவனல்லது மற்றொருவராலும் அறிவித்தற்குக்கூடாதாதலால் பாசுபதாஸ்திரத்தை பர மசிவனிடத்திற்றெரிந்துகொண்டான். அளவில்லாத கலைகளையெல்லாம் எட் டாமாண்டிற் கற்று மிக்கறிவுடையோனெகிக் குரவரைத் தொழுது போற்ற வல்லவனெகி அவர்கள் மகிழ்ச்சியோடும் அணிந்துகொள்ளத்தக்க ஆபரண மாகி வெற்றி செல்வத்தையுடைய இடபத்தை யொத்த இளைஞர்களோடு திருவிளையாடல் செய்வானெகிப் புகர்முகத்தினையுடைய மதத்த யானைகளை யொன்றோ டொன்று தலையால் முட்டிப் போர்செய்து வென்றும், ஆட்டுக் கடாக்களோடு ஆட்டுக்கடாக்களைச் சண்டைக்குவிட்டும் போர்செய்துவென் றும், வகிர்தலைப்பொருந்திய உச்சிக் கொண்டையையுடைய கோழிச் சேவல் களையொன்றோடு ஒன்றைப்போர்செய்யவிட்டு வென்றும், காற்றினும் கடிய வேகத்தையுடைய குதிரைமீதேறிப் பலகாதம்போய்த் திரும்பியும், எமனை

ப்பார்க்கிலுங் கொடிய சீற்றத்தையுடைய யானைமீதேறிச் செலுத்தியும், வையை யாற்றினும் சோலைகளினும் தடாகங்களினும் சென்று விளையாடியின்பத்தை யநுபவித்தும், வேல்வல்லமையையு முடைய பாவியர்களோடு மல்ல யுத்தஞ்செய்து வென்றும், பொதியமலையிற்சென்று வேட்டையாடியும், அம்மலையிலுள்ள முனிவர்கள் ஆசீர்வாதஞ்சொல்ல, அவர்கள் தேஷமங்களை விஞ்ஞையும், அவர்கள்கொடுத்த கனிமுதலிய விருந்துகளைக் கையிற்பெற்றுச் சந்தோஷித்து மீண்டும் இவ்விதமாகப் பதினைந்தாண்டுகழிய, பதினாறுமாண்டில் சூரபதுமனைச்சயித்த தங்கள் கடவுளை யிவனென்று கருதி வில்லையுங் கூரியவேலையுங் கைவிடாமற் காப்பதுபோல் கச்சணிந்த ஸ்தனங்களையுடைய மாதரும் அவர்களது மாவடுபோன்ற கண்களும் தன்னிடந்து மொய்க்க, கூரிய நுனியையுடைய வேலாயுதத்தையுடைய உக்கிரவர்மன் இத்தன்மைபுனைத் தாதையாகிய சோம சுந்தர பாண்டியன் குமாரனுடைய தாமரை மலர்போன்ற அழகினை யுடையதாகிப் பார்ப்பவரது கண்களையும், மனங்களையும் கிரகிக்கத்தக்க காந்தியினையும் உடையனவாகி இலக்கண நூற் சொல்லியபடி திரண்டு நீண்ட கணைக்காலினையும், வட்டந் தோன்றுமற் செழுமையான முழந்தாளினையும், தொங்குகின்ற வாயினையும் ஈரம்பொருந்திய கதுப்பினையும் உடைய பெரிய யானையினது துதிக்கையை யொத்த திரண்ட துடைகளையும், குறுகியவயிற்றையும், காழ்ந்த நாபியையும், செவ்விதாய் அழகுவாய்ந்த குற்றமற்ற கண்ணழிக்கொப்பான வாசனையொருங்கிய அகன்ற மலையைப்போலும் அழகினையுடைபமார்பையும், வீணைத்தண்டுபோல இணையொத்து நீண்டு தாழ்ந்தகைகளையும், மணம்பொருந்திய மலர்மாலை கிடந்தசையாநின்ற இரண்டு மேருவையொத்த தோள்களையும், வலம்புரிச் சங்கத்தை யொத்த கண்டத்தையும், இலக்குமிதங்கிய பொற்றாமரை மலர் போன்ற முகத்தையும், பொதுவாகப்பார்த்துப் பூமிதேவிசெய்த தவப்பேற்றையொத்தவனது உருவத்தையெல்லாம் நின்று நின்று உருவத்தின் அழகினது நலத்தைச் சொல்லாநின்ற நூலளவையால் சோதிக்கத்தொடங்கி அவயவவுருப்புக்களுள் உன்னதவுருப்பாறு, நீண்டவுறுப்பைந்து, சூக்குமவுருப்பு ஐந்து, குறுக்கவுருப்பு நான்கு, அகலவுருப்பு இரண்டு, சிவந்தவுருப்பு ஏழு, ஆழ்ந்தவுருப்பு மூன்று இவை யவ்விலக்கணத்திற் றெருத்திருக்கின்றன. இவைகளை விரித்துரைப்பின் முப்பத்திரண்டு இலக்கண வுருப்புக்களாம். அவையாவன வயிறு-தோள்-நெற்றி-நாசி-மார்பு-கையடி -இவையாறும் உயர்ந்திருப்பின் அவனிந்திரனுவன். ஒளியைகிரகிக்கின்ற-கண்-கபோலம்-செங்கை-நாசி-மூலை-நடுமார்பு இவ்வைந்தும் நீண்டிருக்குமாயின் நன்மையுண்டாகும். குஞ்சி-தொக்கு-விரற்கணு-நகம்-பல்-இவ்வைந்தும் சிறியதாயிருப்பின் ஆயுள்விருத்தி. கோசம்-கணைக்கால்-நா-முதுகு-இந்த நான்கும் குறுகியிருக்குமாயின் செல்வப்பெருக்காம். சிரம்-நெற்றி-இவ்விரண்டும் அகன்றிருக்குமாயின் இதுவும் நன்றாகும். உள்ளங்கால்-உள்ளங்கை-கண்கள்-இதழ்க்கடை-அண்ணம்-நா-நகம் இவையேழும் சிவந்திருப்பின் மிகுந்த வின்பமுண்டாகும். இகல்வலி-ஓசை-நாபி-என்றுசொல்லுகின்ற இவைமூன்றும் ஆழ்ந்திருப்பின் எவர்க்குமேலான நன்மையுண்டாகுமென்று சோமசுந்தரம்மைந்த

னது அழகுநிறைந்த இலக்கணத்தோடு நல்லகுணத்தையும் நோக்கி இவ் வுலகத்தை பொதுநீக்கியாள வல்லவணுகி வாழுநாளில் மிகவும் வல்லவணுவ னென்று தன்மனத்திலாய்ந்து இத்தகுதியான குணமிருந்ததன்மையால் கீர் த்தி நீதி நல்லவுள்ளம்-உண்மை-பெருமை - தெய்வபக்தி - உலகுக்கெல்லாம் சந்தோஷத்தை உண்டுபண்ணுங்குணம்-சாந்தம்-உயிர்களிடத்தன்பு - ஈகை- கல்வி-ஜயித்தற்கரியாரைச் சயித்தல், தேவர்களாலுஞ் செல்லுதற் கரிய தேயத்திலும்சென்று அவர்களாலிடப்பட்டதிரையைக்கோடலும், சுமத் தற்கரிய வுலகத்தை மலைபோலப புயற்றூற் றுங்குதலும், சொல்லுதற்கரிய கீர்த்தி உலகெலாஞ் சுமப்பவைத்தலும் என்றுசொல்லப்பட்ட விவை முத லான வியற்கைக் குணமுடையவணுகி நன்றிசெய் துலகுக்கெல்லாம் தாணை ருவனேநாயகணுகி நிற்கத்தக்க இப்பிள்ளைக்குப்பின்பு பட்டாபிஷேகஞ்செய் வோம், முன்பு திருமணஞ்செய்யவேண்டுமென்று மந்திரிகளோடு ஆலோசிக் கத் தொடங்கினர்.

உக்கிரபாண்டியன் திருவவதாரப்படலம்

முற்றிற்று.

சிவமயம்.

பன்னிரண்டாவது

உக்கிரகுமாரனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

உருக்குந்திற லுக்கிரகுமாரனுதயமிதுவான்மதியுருத்
பெருக்குங்காந்தசடைக்கற்றைப்பெருந்தர்ச்செழிபர்பிரானவற்குச
செருக்குஞ்செல்வமணமுடித்துச்செவ்வேல்வளைசெண்டளித்துள்ளந்
தருக்குமுடிதந்தாசுரிமைதந்தசெபலுஞ்சாற்றுவாம்.

இதன்பொருள்.

பகைவரைக் கெடுக்கும் வலிமைபொருந்திய உக்கிரகுமாரபாண்டியன் திருவவதாரஞ்செய்த வரலாறு இதுவாகும். இனி வெள்ளியசுகிரனையும் கங்கைகுடிப்பெருக்கையும் நெருங்கியசடையும், ஒளிந்துவந்தருளிய பெரிய நேரையுடைய சௌந்தரபாண்டியன் அந்த உக்கிரகுமாரபாண்டியனுக்குச்செல்வதுதா னிருமாந்திருக்கும் திருமணக்கை முன்னர் முடித்துப் பின்புபகைவருதிரந்தேய்ந்தவேலையும், சக்கரத்தையும், செண்டையுங்கொடுத்து மனத்திலிருமாப்பைத் தரத்தக்க திருமுடிதரித்துந் தமதரசுரிமையுந் தந்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

சோமசுந்தர பாண்டியனுனவர் தனதருமைப் புத்திரனுக்குத் திருக்கலியாணஞ்செய்ய அறிஞர்களோடும் மந்திரிகளோடுஞ்சூழ்ந்து குற்றமற்ற அழியாத செல்வமும்-குலமும்-குடியும்-புகழும்-நமதையனுக்கிசைந்த குலத்தரசர்யாவரென்று ஆய்ந்து சொல்லுகின்றார். இனியபுனலாற் சூழப்பட்ட வடபுலத்தில் மணலூரென்னுந் திருநகரத்திற்கு வேந்தனுகியசூரிய குலத்திற் பிறந்த சோமசேகரனென்று சொல்லுகின்ற கேள்வியையுடைய அரசனிடத்து இலக்குமியைப்போல் அவதரித்த காந்திமதியென்னுங் கன்னிகையைத் திருமணம் பேசவேண்டுமென்று சொல்லியிருந்தார்.

அன்றிராத்திரி வெள்ளையானையின்பிடரியூர்ந் சுமக்கப்பட்ட சிகரத்தையுடைய ஆலயத்திலெழுந்தருளிய சந்திரனைத்தரித்தசடையினையுடைய பெருமானுனவர் சூரியகுலவரசனுகிய கைமாறுகருதாது கொடுக்கும் கையினையுடைய சோமசேகரனுடைய கனவில் எழுந்தருளிவந்து தேவர்களது கனவிற்கு மெட்டாத திருமேனியைக் காட்டி அன்னப்பக்ஷிகள் தங்கிய வயலாற் சூழப்பட்டமதுரையிலெழுந்தருளிய சிவன்யாம் நீயின்றுபொன்னையனையாளை மதுராபுரியிற்கொண்டுபோய் மறுபட்டணத்தரசர்களது மணிமகுடமிடறித்தேய்ந்த வீரகண்டாமணியையுடைய சுந்தரபாண்டியனுடைபகுமாரனுக்குக்கொடுப்பாயென்றுசொல்லி மீண்டார். உடனே அரசன் மனத்தா



மரையும் முகத்தாமரையுமலர்ந்து இரண்டுகண்களையுந் திறந்து எழுந்து இர
ண்டுகையையுங் கூப்பிப் பரமசிவன் கருணையால் எளிதாகவந்த செயலை
நினைத்து அன்பின்வெள்ளத்தில் மூழ்கிச் சூரியோதயகாலத்தில் நித்தியகர்ம
ங்களை முடித்துக் கொண்டு மந்திரிமார்களோடு நான்குவிதச் சேனைகளுஞ்
சூழ, பலவாத்தியங்களுமொலிப்ப தனது திருமகளைச் சேடியர்களோடுதேரி
லேற்றி மணக்கோலத்தோடு மதுராபுரியை நோக்கிப் புறப்பட்டு வருங்காலை
யில் சந்திரகுலவரசனுகிய பாண்டியன் சுற்றத்தாரும் மந்திரிகளும், நேற்று
மணத்தைக் குறித்துபபேச ஆலோசித்தபடியே மணலூர் நோக்கிவரும் வழி
யில் சோமசேகரவரசனையுங் சேனைகளையுங்கண்டு எம்முடைய தென்னர்
பெருமான் குமாரனுக்கு உமதுதிருவைத் தரக்கடவீரென்றுகேட்க அவ்வர
சன் கொன்றைமாலையையுடைய பரமசிவன் தன் கனவின்கண் எழுந்தருளி
வந்தகுலனும் குடியும் உரைத்தநன்மையை அவர்களுக குரைத்துக் கலியா
ணததுக்குச் சம்மதித்துரைக்க அதனை அங்ஙனமிருந்த முதியோர் அறிவு
டைய உழையர்களைவிடுத்துச் சோமசுந்தரபாண்டியருக் கறிவித்து மணலூரி
னின்றும்வந்த சோமசேகர அரசனேடி மதுரைப்பதியைவந்து சேர்ந்தார்கள்
சூரியகுலத்தரசனுகிய சோமசேகரன் சந்திரகுலத்தரசனுகிய சோமசுந்தர
பாண்டியனை யெதிரேசென்றுவணங்க அவனைத்தழுவி உபசாரஞ்சொல்லி வி
டுதியிற்செல்ல அனுப்பிப் பாண்டியனிருந்தனன். அதற்குமேல் அமைச்சர்
கள் ஐம்பத்தாறுதேசத்தரசர்களுக்கும் திருமுகங்களனுப்பிப் பட்டணத்தி
லுள்ளார்க்குக் கலியாணநாளை அறிவித்து நகரத்தையலங்காரஞ்செய்யும்படி
மணமுரசாலறிவித்தார் பட்டணத்திலுள்ளார் மாடங்களைப்புதுக்கிக் கமுக
மரங்களையும் வாழைமரங்களையும் வீதிகளெங்கும் நீளநிரைத்துப் பாவிகை
களும் நிறைகுடங்களும் வரிசைவரிசையாகநிறுத்தி அசைகின்றகொடிகளுங்
கட்டி அழகுக்கழகுசெய்ததுபோல மாடங்ளள்நெருங்கிய நகரத்தை மணக்
கோலம்பெருகச் செய்வித்தார்கள் தென்றலுடன் றிருமகளைத் தேவர்பெரு
மான்மணஞ்செய்யக் கலியாணவழகாக ஒருநகரம் இதற்கொப்பும் அதிகமு
மில்லாதவண்ணம் அன்று அழகுசெய்தார்கள். இன்றுதானே தனக்கதிகமென
ன்றுசொல்லும்படி அழகுசெய்தார்கள் மாலையையுந் திருமுடியுந்தரித்த சோ
மசுந்தரபாண்டியரது கலியாணதிருமுகத்தைசேரனும்சோழனும்மற்ற ஐம்ப
த்தாறு தேசத்தரசர்களும் குறுநிலமன்னர் முதலியவர்களும் இரதகஜதுரக
பதாதிகளோடு தங்கள்தங்கள் பட்டணங்களினின்றும் புறப்பட்டுச் சேனைக
ளாலுண்டாகும் தூளிப்படலமானது திக்குகளடங்கநிறைந்து கடலேமேடா
க்கவும்பலவாத்தியங்களும்கடலொலிபோலவொலிக்கவும்வந்து நெருங்கினர்
கள் ஏகதண்டந் திரிதண்டத்தையுடைய சந்நியாசிகள் விருப்பத்தோடும் வந்
தார்கள் வானப்பிரஸ்தஆசிரமத்தையுடைய வானப்பிரஸ்தமுநிவர்கள் தங்
கள்தங்கள் பத்தினிகளோடும் வந்தனர் இந்திரன் பிரமன் திருமால்மற்றதே
வர்கள் பதினெண்கணத்தர் யாவரும்வந்தனர் இவ்வாறு யாவரும்வந்து அர
ண்மனையிற் புகுந்து சிங்காதனத்திலெழுந்தருளித் தடாதகைப்பிராட்டியா
ரோடும்கொலுவிருக்கின்றகோலத்தைக்கண்டுதுதித்து வணங்கவேண்டிய மு
றைப்படிவணங்கி வாழ்த்தினர்கள் சோமசுந்தரபாண்டியர் அவர்களுக்கு மு

றைப்படி சன்மானஞ்செய்து இருந்தவர் இனிப பாண்டியன் திருமகனது தி
ருக்கலியாணச் செய்திபைச் சொல்லத்தொடங்குவாம்.

சோமசேகரன் பெண்ணிலுடைய அழகையெல்லாம் இராஜன்கண்டு சந்தோஷிக்குங் கொள்கையைக்கண்டு சொல்லவல்லவன் அங்குள்ள யாவ ருக்கும் அப்பெண்ணினது அவயவ லிலக்கணத்தை தான்முறைப்படி சொ ல்லத் தொடங்கி மிகவும் நீண்டு குறுகாதனவாகிப் பிளவுபடாத கடையினை யுடையனவாகித் தழைந்துச் சூற்கொண்ட மேகம் வண்டின்கணம் என்று சொல்லும்படியாகக் கறுத்துக் கடைகுழைவாகி இயற்கை மணம்வீசிக் குற் றமற நெருங்கி நெறிந்து மெல்லென்று கண்டவர்களது உள்ளத்தையும் கண் களையும் கிரகிக்கத் தக்கதாய்நெய்த்து இருண்ட வாசனை பொருந்திய மலர்க ளைத்தரிக்க அளகத்தை புடையவள் தன்னுபகனுக்கு இனிய வளப்பம்பொ ருந்திய செல்வமுண்டாகும் மதத்தைபுடைய யானையினது மத்தகம்போலத் திரண்டுபர்ந்த சென்னியையுடையாள் அவளது உள்ளத்தை மகிழ்விக்கும் கணவன் ஆயுள்நீண்டு உலகதனை யெல்லாம் அரசுசெய்ய வரியவனனவன், எட்டாநா ளுதிக்கின்ற குளிர்ந்த சந்திரன்போல மபிர்நரம்பகன்றுதசைந்து மூன்று விரலளவு அகன்ற விளக்கமாகிய நெற்றியை புடையாள் தன்கணவ னுக்கு நல்ல செல்வத்தோடு அழியாத ஆரோக்கியமுமுண்டாம் கண்ணின் கடைசிவந்து பசுவின் பாலைப்போல வெளுத்து நடுவிழி மிகவுங் கறுத்து அழகடைந்து இளமை புடையதாகி இமைகருமயிரை புடையதாகி பிருப் பினன்றி. கரிய புருவமானது வளைந்த வில்லையொத்ததாகி தம்மிலிரண்டு மொத்து இருந்தால் நன்று நாசியானது இருதுளையும் அழகுகொள்ள உரு ண்டுளள்ளின் மலரானது தாமரை மலரின்மேல் பூத்ததுபோல் இருந்தால் நன்று வள்ளைக் கொடிபோல நீண்டு தாழ்ந்து இரண்டு செவியும் சுழி நல்ல வாகி முன்னர் தள்ளியிருப்பின் மீலைகாமாந் தன்மையால் நன்மையுண்டா கும். விளக்கமாகிய கபோலம் வட்டமாகித் தசையைபுடையதாய் உயர்ந்து கண்ணாடி மண்டலம்போலத் தெளிவான ஒற்றமுடையது நன்றென்று சொ ன்னேன். பின்னும் கொவ்வைக்கனி போன்ற இதழானது திரண்டு இருபக்க முங்குவிந்து சிவந்து சோகையொழுங்காக விருந்தால் அம்மாது தன் சுகப்ப னுக்கு என்றும் நண்புருவாக விருப்பள் முப்பத்திரண்டென்னு மெண்ணை யுடையதாகி வெளுத்த பற்களானவை இடைவெளியில்லாததாகி நீண்டுமே லுங்கீழும் இரண்டுவரிசையும் செவ்வியதாக வளர்ந்து பசுவின்பாலைப்போல வெளுத்து விளங்கில்நன்றென்பர். நாற்களையாய்ந்தோர் மெல்லியதாய்ச் சிவ ந்துகோமளமான நாவினுல் இச்சித்த நித்தித்தபடியே விரைவில்வந்து பொ ருத்தநாகருவள் தசைபெற்று வட்டமாய் இரண்டங்குல வளவினை யுடைய தாகிய அழகானமோவாய் இருப்பின் நன்றென்பர் அகவிதழையுடைய தா மரைபோல மணமுடையதாகி யிருடூர்ந்து விளங்காநின்ற சந்திரனை பொ த்த முகம்நன்று, சங்குபோன்ற கழுத்தசைபெற்றுநாலுவிரலி னளவதாகித் திரண்டுமூன்றிரேகைவரை யுண்டாயிருந்தால் அவள் கணவன் உலகத்தரச னுவன், மார்பினிடத் தசையப்பெற்றுப் பதினெட்டு விரலள வகன்று மபிர் நிரம்பகன்று மிதந்திருந்தால் சிறப்பாம். மூங்கிலை யொத்த தோளானது

தசைப்பிடியாய் மயிரில்லாமல் எலும்பு தோன்றுமல் இளமையான மொழி யையுடையதாலல் நன்மையாம், செங்கையானது நீருண்டு உருண்டு கணுக் கள்பெற்று அடைவாகச் சிறுத்து இருப்பின் செல்வமோ டின்பமுண்டாம், வளவிய நகமானது சிவந்து உருண்டு பார்ப்பவர் கண்களையும் மனத்தையுங் கிரகிப்பதாய் சரசரப்பின்றியிருப்பின் அவைநல்லவாம், உள்ளங்கையானது மிருதுவாகிச் சிவந்து இடைவெளி யகன்று நடுவிரலுபர்ந்து மங்கலமாகிச் சிலவரைகளில் நல்ல விலக்கண வரையிருந்தால் நன்மையாம் முத்துமாலை கணிந்த தனங்கள் கடினமாகித் தசைபெற்று வட்டமாய் அரும்பையொத்த தாகிய இரண்டுமொத்து இருமாந்து ஈர்க்கு இடையில் நுழையப் பெறுது நெருக்கியுள்ளன நன்றும், வாடி உரோமவரிசை பெற்றுப் பக்கத்தில் மயிர் நரம்பகன்ற வயிற்றை யுடையாள் உணவை விரும்பியபடி அனுபவிப்பவள் நாபியானது வலஞ்சுழிபெற்று ஆழ்ந்திருப்பின் அழிபாதசெல்வமிகும்இடை யில் மயிர் நரம்பற்று இருபத்துநான்குவிரலளவாகி வட்டவடிவதாய்ச் சிறு கிமெலிவதாய் மத்தகம் ஆமையின் முதுகுபோல உருவமிரண்டும் நேரொத் திருந்தால் நிதமபம் நன்றும், இரண்டு துடையும் மயிரென்பகன்று யானைத் துதிக்கையும்-கரபமும்-வாழைத்தண்டும்-ஒத்திருக்கின் நன்மையென்றுசொ ல்லுவர், முழந்தாளானது அகமுண் மறைந்து வட்டமாய்த் தசையை யுடையதாய் இருப்பதுநன்று, கணைக்காலானது மயிர் நரம்பு தோன்றுது இரண்டுஞ் சமமாக வுருண்டு சிறுத்து அழகடைந்திருப்பின் நன்மையாம், புறவடியானது நரம்பு என்பு தோற்றுமல் தசைபெற்று ஆமை முதுகுபோ லத் திரண்டுயர்ந்து அழகுடையதாய் மங்கல கரமாக விருப்பின் அம்மடந் தை அரசன் மனைவியாம், தாமரை மலர்போன்ற காலின்விர லுபர்ந்து பரி சுத்தமாய் அழகினை யுடையனவாய்ப் கழுநீர் மலரினது மெல்லிய விதழ் களை நிறைத்து வைத்தாற்போல ஒழுங்காகத் திரண்டு வெண்மையாகிய நக மானது வெண்மதிபபிளவு பொருந்தியன போன்று மிருதுவாகி குற்றமறத் தசைந்தனவா யிருப்பின் உத்தமமாம், உள்ளங்காலானது தசைப்பிடிப்பும்- மிருதுவும்-சமமாலல் நன்றும் அழகான தளிர்போலச் சிவந்து பிரகாசிக்கி ன்ற பொன்னைப்போல எப்பொழுதும் விபர்வையற்று மேனி அழகாகவிருப் பின்செல்வமுண்டாகும். தேதகமணம்பாதிரி-குவளை-தாமரை-மல்லிகை-சண் பகம்போன்றிருப்பின் நலமாம், சொற்கள்-குயில்-கிளி-யாழ்போன்றிருப்பின் பாக்கியமுண்டாகும் என்று கரிபதேசமுதல் பாதம்வரையில் மருங்குல்தோ ன்றுத கன்னிகையின் அவயவங்க ளெல்லாவற்றையும் வாக்கின்செல்வன்தூ லறிவால் ஒருங்குதேர்ந்து இவ்வுலகமன்றி தேவலோகத்திலும் இக்குயிலை யொத்த கன்னிகையினது அவயவிலக்கணம்போலக காணுதலரிதென்றான்.

அவ்விடத்து அதைக்கேட்டோர் யாவரும் உள்ளத்தில்சந்தோஷமதி கரிக்க அதன்பின்பு வாசனைமிகுந்த மலர்மாலையைத்தரித்த மயிர்முடியினையு டைய உக்கிரகுமாரன் வந்து மதத்தயானையினது பிடரியிற் சுமந்து வந்த வையையினது மேலான தீர்த்தத்தா லபிஷேகஞ் செய்யப்பட்டு அலங்கார மண்டபத்திற் சென்று புதுமலர்களைத் தரித்துக் கஸ்தூரி முதலிய வாசனை கலந்த சந்தனக்குழம்புபூசி முத்துகளாற்செய்தமாட்சிமைபொருந்திய ஆப

ரணங்களைத் தேகமுழுதுந்தாங்கி விளங்காநின்ற சோடசகலையோடுங் கூடிய சந்திரன்போல்வந்து மணத்தவிசின்மேல் பலவாத்தியங்கள் முழங்க விருந்தனன், அவ்வண்ணமாகவே ஸ்நானஞ்செய்து அரியவாபரண முதலியவற்றை யலங்காரஞ்செய்த கன்னிகையைக் கொண்டுவந்து நம்பியினது வலதுபக்கத்தில் அழகுபெற விருத்திவைத்தார்கள் சோமசேகர விராஜன் தன்பத்தினியோடு மெழுந்து இவ்விருவரையும் பரமசிவனு முமையுமாகப் பாவித்துக் கையில் நீர் நிரம்பிய கரகத்தைக் கொண்டு அம்மங்கலநீரால் நம்பினதுமலரடியைவிளக்கி மலர்மாலைதரித்து அழுதூட்டிப் பின்பு தன்பெண்ணுகிய காந்திமதியின் கையைப்பற்றி நம்பியின் கையின்மேல் வைத்து தேவர்களறிய நல்லநீரைவிட்டு மந்திரஞ்சொல்லி சூரியகுலவரசனுகிய சோமசேகரன் சந்திரகுலத்தை விளக்கவந்த சோமசுந்தரபாண்டியன் குமாரனுகிய உக்கிரவருமனுக்கு இன்று என்குமாரியாகிய காந்திமதியைக் கொடுத்தேனென்று தத்தமபண்ணிக் கொடுத்துப் பலம்பொருந்திய சிங்கத்தாற் சுமக்கப்பட்டதிண்ணிய சாலையுடைய இரததினவடங்கள் மாட்டிய வயிரவுசலுந்தும் நன்முகப்பதஞ்செய்த பஞ்சணையோடு அன்னத்தின் மிருதுவான இறகுபெய்த அணைபத்தும், பவளவாயும்-பசும்பொன்மேனியும்-இந்திரநீலரத்தினத்தாலமைத்த கண்களும் உடைய பாவைவிளக்கு எட்டும்-சமையதிடத்துக்குதவும் பாத்திரங்கள் நூறும்-அழகிய பொன்னிலுலும் மணியிலுலுஞ் செய்தகாளாஞ்சி ஏழு, பொற்கவரிஎட்டு, கிரணங்களையுமிழந்துபிரகாசிக்காநின்ற பசும்பொன்னுற்செய்த கிண்ணவரிசைகள் சுற்றிலும் விளங்க மத்தியில்நட்ட பொற்காலி னேடு பிரகாசிக்கின்ற இரத்தினப்பாத்திரங்கள் நூறும் விலையுயர்ந்தமுத்தாரத்தோடு பெட்டி ஆயிரமும அரியவிலையுடையமெல்லிபவஸ்திரங்களும் பட்டுகளும் வைத்திருக்கும் பெட்டிகள் முந்நூறும், அழுதத்தாலே உருவமெழுதிய பிரதிமையை யொத்த மாதர்கள் ஆபரணங்களோடு எழுநூற்றைவரும் மூன்றுவூரும், இரண்டுகோடிசெம்பொன்னும் மகட்குவரிசைகொடுத்தனன்.

அப்பொழுது பலவாத்தியங்களுமாரவாரித்தன, தேவர்கள்மந்தாரமலர்மாரி தூர்த்தனர் ஓமாக்கினிதுள்ளி வலமாகச்சுழித்து ஓங்கின, மங்கையர்கள் வாழ்த்துப்பாடினர், அம்மணத்தைக் கண்டவர்கள் கண்கள் பெறும் பேற்றைப் பெற்றன, முருக்குடைந்த கடப்பமலர் மாலையையணிந்த புயத்தினையுடைய இளங்காளைக் கொப்பாகிய உக்கிரவர்மன் முனிவர்கள் ஓமகாரியஞ்செய்ய இனியவாத்தியங்கள் முழங்கக் காந்திமதிக்கு மாங்கல்ய தாரணந்தரித்து அப்பெண்ணினது வளையல்பொருந்திய செங்கையைப்பற்றி வேதவிதிப்படி மற்றகல்யாண சடங்குகளையெல்லாம் பூரணமாக நிறைவேற்றி அளவுபடாத வளப்பத்தோடு சூரியகுலவரசனுகிய சோமசேகரன் குமாரத்தியை வேதவிதிவிளங்கத் திருமணமுடித்துச் சந்திரனும்நகூத்திரக் கூட்டங்களும் தவழ்ந்து செல்லும்படியான ஆகாயத்தையளாவிய இரத்தின மாடங்களையுடைய வீதியில் வலமாகவுலாவவருங்காலத்து மின்னலுக்கொப்பாகியபொற்றொடியையுடையவர்களும், செம்பஞ்சூட்டிய மெல்லிய அடியினரும், இரத்திணபரணங்களோயுடையமுலையினரும், சத்திக்கின்ற இரததினமேகலையுடையவரும், மலர்மாலையணிந்த கூந்தலையுடையவரும், ஆகிய தாமரையரும்பை

யொத்தமுலைகளையுடைய மங்கையர்களுடைய கண்களும், மனமும் அவரிடத்துத் தொடர்ந்துசெல்லுகின்ற சுருங்கிய விடையை யுடையராகித் தனதுபவனியைத் தொழுதுவருவார்க்கு உக்கிரகுமாரனிங்கு அவர்களது மருங்குலினது பாரத்தை நீக்குகின்றவன்போல் கலையைக்கவர்ந்தும், தோளினதுபாரத்தைக் கழிப்பவன்போல் வளையைக்கவர்ந்தும், மனத்தினருங்கிய பாரத்தைக் கழிப்பவன்போல நிறையக் கவர்ந்துசென்றான். அவ்வாறு செல்லுங்கால் கண்டவர்கள் சந்திரனைபணிந்த முடியை மறைத்த சோமசுந்தர பாண்டியனது மகனே யிவனென்றும் யானையினது பிடரியிலிருக்கின்ற இளஞ்சிங்கம்போல அயல்வேந்தர்களது சேனைகள் தன்னைச்சூழவரும் பவனிக்கு ஒப்பேது? ஒப்புசொல்லுங் காலத்து யானை மகளை மணந்துவரும் இளையவனாகிய முருகக்கடவுளது பவனியே ஒப்பாகும் என்றனர். இவ்வாறு பவனிவந்து கடவுளையும் ஆலயத்துட்சென்று பரமசிவத்தையும் அங்கயற்கண்ணம்மையையும் பணிந்து மீண்டு அரண்மனையிற்சென்று பெற்றோரை வணங்கினன்.

பின்பு திருமணத்துக்கு வந்தவர்களை அறுசுவைபோடு முண்பித்து நாலுவிதவரிசைகளை அவரவர்க்குத்தக்கபடி செய்வித்து அவர்களுக்கு விடைகொடுத்துப் பின்பு தேவர்களுக்கும் விடைதந்து சுந்தரபாண்டியர் அரசுசெய்திருக்குநாளில் தேன்பொருந்திய மலர்மாலையைத் தரித்த திருமகனே நோக்கிக் குமாரனே! நீ கேட்பாயாக இந்திரனும் கடலும் உனக்குப் பகையாகும் மகமேருசெருக்கடையும் அப்பொழுது இந்திரன் முடிசிதற, இந்த வளையாலெறி கடலின்மீது இவ்வேலைவிடு மகமேருவை இச்சண்டாலடி என்று அம்மூன்றையும் எடுத்துக்கொடுக்க உக்கிரவருமன் பிதாவைத் தொழுது அம்மூன்று ஆயுதங்களையும் வாங்கி வெற்றிபொருந்திய இடபத்துக்கொப்பாக எதிராக நிற்கும் புதல்வனுக்கு உக்கிரபாண்டியனென்று எவற்றிற்கு முதலாகிய வேதங்கள் முழங்க, பலவாத்தியங்களும் ஆரவாரிக்க, முடிசூட்டித் தனது ஆக்ஞையும் அரசுரிமையும்-ஒப்பற்ற செங்கோலும் அவர்க்குக்கொடுத்து இராஜ தந்திரத்தால் அரிய சுமதியென்னும் மந்திரியையும் பழமையான பெருமைபொருந்திய நூலறிவினை யுடையோரையும் நோக்கி வாருங்கள் பெரியோர்களே! இவனைக்கண்களை இமைகாப்பதுபோலும், அறிவைக்கொடுக்கும் கல்விபோலும் காக்கக்கடவீர். இது உம்முடைய கடமை, இம்மண்ணாட்சி யிவனது என்று புதல்வனை அவர்களிடத்திற் கொடுத்துப் பின்பு கொடிய வேலாயுதத்தையுடைய முருகக்கடவுளைக் கொப்பானவனை வேறுகநோக்கி ஐயனே! இவ்வுலகத்தை நெடுநாளாகத்தாங்கி ரக்ஷித்தனன் இதுமுதல் நீதாங்கி இந்தக் குற்றமற்ற மனத்தினை யுடையாரது செல்வழி நடந்து நீயும் செங்கோல்செலுத்தி மிக்கசெல்வத்தோடு பொலிவுபெற்றிருப்பாயாகவென்று சொல்லிப் பின்னர் தன்னிச்சையால் வேண்டிய இனியவருட்படிவங் கொள்ளத்தக்க முடிவில்லாத இன்பமூர்த்தியானவர் சொல்லுதற்கரிய சிவகணங்களை யெல்லாம் பழைய வடிவமாகும்படிச் செய்து கடாதகைப் பிராட்டியோடும் பொன்னாற்செய்து விளங்காநின்ற பெரிய ஆலயத்துட்புகுந்து பொலிவுபெற்றிருந்தனர். அதன்பின்பு உக்கிரவர்மன் இவ்வுலகத்தை யாண்டுகொண்டிருந்தனன்.

உக்கிரபாண்டியனுக்கு வேல்வளை கொண்டு கொடுத்தபடலம் முற்றிற்று.

பதின்மூன்றுவது
கடல்சுவறவேல்விட்டபடலம்.

கலிவிருத்தம்.

வளையொடுசெண்டுவேண்மைந்தற்கஞ்சுரும்
பளையவேம்பணிந்தகோனளிதவாறிதத்
தலையவிழ்தாரிறுன்றனயன்வேலமே
லினையவனென்னவேலெறிந்தசேதாதுவாம்.

இதன்பொருள்.

அழகிய வண்டுகள் சத்திக்கின்ற வேப்பமலர் மாலையாகதரித்த செளந்தரபாண்டியனுகிய பெருமான் தனதுபுத்திரனுக்குச் சக்கரத்தையும், செண்டையும், வேலையுங்கொடுத்த விதமிதுவாகும். இனி முறுக்கவிழ்ந்த மலர்மாலையைத்தரித்த அசசெளந்தர பாண்டியனுடைய புத்திரனுகிய உக்கிரகுமார பாண்டியன் சமுத்திரத்தின்மேல் (சூரபன்மனுடைய வலிமையா னது கெடும்படி வேலாயுதத்தை யெறிந்த) குமாரக்கடவுளைப்போல வேலை யெறிந்த திருவிளையாடலைச் சொல்லுகின்றும்.

உக்கிரகுமாரபாண்டியன் சந்திரன்போன்ற வெண்கொற்றக் குடை யெங்கும் நிழலைச்செய்ய வீற்றிருக்குநாளில் அச்சமில்லாத மிகுந்த புண்ணி யவேள்விகளைத் தேவர்கள்சூழ்ந்து போற்றச்செய்து வருநாளில் செய்தற்க ரிய அசுவமேதயாகம் தொண்ணூற்றுறுசெய்து நிறைவேறுமிடத்து இந்தி ரன் உக்கிரப்பாண்டியன்மீது பொருமைகொண்டு கோபித்தது பாண்டிநாடெ ல்லாம் வளமிகுந்து பொன்னுடுபோலப் பொலிவுபெற் றிருப்பதால் இந்தப் பாண்டியன் வேள்விசெய்வதென்னென்று நினைத்து ஒருபாயத்தையுன்னி சமுததிராஜனையழைத்த நீ திடீரென்று பெரியகடலாற் சூழப்பட்டவேழு லகத்தையும் ஒருமிக்க அழிக்கின்ற உகாந்தகாலவெள்ளத்தைப்போலக் கோ பித்துப்போய் அரியகாவலையுடைய மதுரையை அழித்துவிடென்றுன். அ தைக்கேட்ட சமுத்திராஜனும் இதனுல் விளைவதுதெரியாமல் பேய்களுங் கண்ணுறங்கும் நடுராததிரியில் செழுமைபொருந்திய வயல்களாற் சூழப்பட் ட மதுரையைச்சூழ்ந்து அழித்துவிடுதலை நினைத்துப் பொங்கி அலைகளாகிய கரங்கள் அண்டகூடமெங்குஞ்சென்று ஆரவாரித்து அலைத்து உகாந்தகாலத் தில் அலைததாரவாரிக்கும் வெள்ளமாய் சந்திரமண்டலத்தையெட்டி முட்டி வருகின்ற ஓரஞ்சனமலைபோல மண்ணுலகமும் விண்ணுலகமும் நடுங்க மரக் கலங்களையுடைய கடலாகியவெள்ளம் மதுரைமீதுவருகின்ற செயல் இராத் திரிகாலத்தில் சந்திரன்மீது விஷம்பொருந்திய வாயினையும் கரியவுடலினை யும் உடையஒளிபொருந்திய இராகுவென்னும் பாம்பானது விழுங்கும்படி வருவதையொக்கும் அல்லது கரியமேகம் அம்மதுரையை மூடிக்கொள்ளவரு வதை யொக்குமென்று சொல்ல வருகின்ற கடல்வட்டமாகிய ஆமை கேடக மாகவும், வாளைமீன்கள் வீசுகின்ற வாள்களாகவும், மகரமீன்களே நெற்றிப் பட்டத்தையுடைய யாளைகளாகவும், பாய்கின்ற அலைப்பரப்புகளே தாவுகி ன்ற குதிரைகளாகவும், ஓடுகின்ற மீதாணிகளே இரதமாகவும், இத்தன்மை



யான சேனைகளோடு கடலானது பாண்டியன்மேல் சண்டைசெய்தற் கெழுந் ததை யொப்பாகும் இத்தன்மைபாக வெழுந்துவந்த கடலானது மேகங்கள் கண்ணுறங்குமதிலாற் சூழப்பட்ட நல்லநகரத்திற்குக்கிழக்கேவந்து சேர்ந் தமாத்திரத்தில் வெள்ளியம்பலத்தில் திருநடனஞ் செய்கின்ற சோமசுந்தரக் கடவுள் அர்த்தராத்திரியில் சித்தராகி உக்கிரகுமார பாண்டியன் முன்னர் வந்து அவன்கனவில் புன்முருவல்தோன்ற நின்று அருளிச்செய்கின்றார்.

ஓ பாண்டியனே! உன்பட்டணத்தைப்பழிக்கக் கடல்வருகின்றது நீவி ரைவாக வெழுந்துபோய் வெற்றிவேலைப் பிரயோகித்து ஜயமடைபக்கடவா யென, கூப்பிய கையோடும், துதிக்கின்றநாவினோடும், நித்திரையினின்றெழு ந்து பேய்களுமுறங்காநின்ற இரவில் தான்கண்டகனவையுணர்ந்து அரசன் பள்ளியினின்றெழுந்து பலவாயிலையுங்கடந்து மந்திரிகளோடு விரைந்து சமீ பித்து உலகமிறந்ததென்று சொல்லவருகின்றகடலைக்கண்டு அளவிறந்தவதி சயத்தை யுடையவனாகி நிற்கின்ற சமையத்தில் கனவிலேவந்த சித்தவேடத் தையுடையவர் நனவிலும் வந்து அரசனுடைய நினைவைக்கண்டு அப்பனே காலதாமசஞ்செய்யவேண்டியதென்னை! உன்பேரில்கோபித்து கடலைப்போல வந்த சத்துருவைப் பெருமையும் வலியுங்கெட கூரிய வேலாயுதத்தை யெறி ந்து உலகமுடிவைத் தீர்க்கக்கடவாயென்று சொல்ல உக்கிரபாண்டியன்கை யில் எடுத்தவேலாயுதத்தைவலமாகத்திரித்து எறிந்தபோது அவ்வேலினது முனையானது மடித்தவுடனே அக்கடலானது சுஃறென்னும் ஒலியோடுபற ந்து பெருமைகெட்டு அப்பாண்டியன் கணைக்காலினளவாயினது அழகிய வேத வேள்வியைத் தடுப்பதன்றி யுலகெலாஞ்சிந்த வேறுன தந்திரத்தைச் செய்த இந்திரனுடைய ஏவலால்வந்த கடலானது வஞ்சகர்க்குநன்றி செய்து தமது வலியிழந்தவரைப்போல வலியிழத்தல் என்று முள்ளதன்றே.

புண்ணியனிடத்தில் நுழைந்தவேலால் கடலைப்புறங்கொடுக்கக் கண் ட பாண்டியனிடத்து மண்ணிடைநின்ற சித்தர் ஆகாயத்தினிடத்து ஞானக் கண்ணினுல் நிறைவாகக் காணப்படுங்கிருபையினுல் வடிவங்கொண்டு தடாத கைப்பிராட்டியாரோடு விடையின்மீது விளங்கித்தோன்றிநின்றனர் அப்பொ ழுது திரிநேத்திரமும் சதுர்ப்புயமும் மூன்றும்பிறையைத்தரித்த செவ்வா னத்தையொத்த சிவந்தசடையும் காளகண்டமும்தெரிந்து உக்கிரகுமாரபா ண்டியன் அன்போடுபணிந்தெழுந்து பரவி பெரிய அன்புந்தானுமாகத்தக்க அஞ்சலிசெய்தேத்தித் தரைமிசைநடந்துசெல்ல கடவுளானவர்பஞ்சதுந்துபி களும் ஆரவாரிக்க, சிவகணங்கள்வணங்கிச்சூழ, வேதகீதங்கள் அஷ்டதிக்கி னுந் ததும்பித்தாக்க தேவர்களெல்லாந்துதிக்க ஆகாயமார்க்கமாக வந்து ஆ லயத்தைச்சார்ந்தார். அப்போது அஞ்சலிசெய்துசேவித்து அருகாகவந்த அரசன் ஆலயத்தையடைந்து வணங்கிவிடைபெற்று மாதர்கள் அட்டமங்க லந்தாங்கப்பார்த்து மேகங்கள்தவழாநின்ற சிகரங்களையுடைய அரண்மனையி ற்புகுந்து வளைந்தமதில்சூழ்ந்த மதுரையையும் விளைகின்றவயல்களையுடைய நகரமுதலிய எல்லாவற்றையும் வெள்ளியம்பலத்துள் திருநடனஞ் செய்கின்ற நடராஜருக்கேசேர்த்து உலகுக்கெல்லாம் ஆதாரமாக யிருந்தனன்.

கடல்சுவா வேல்விட்ட படலம் முற்றிற்று.

உ

சிவமயம்.

பதிநான்காவது

இந்திரன்முடிமேல் வஜ்ரமெறிந்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மின்னவிர்மணிப்பூண்மார்பன்வேலையேவலால்வென்று
பொன்னவிர்வாகைவேய்ந்தபுகழுரைசெய்தேகை
நன்னகராளிசெம்பொனகைமுடிசிந்தவந்த
மன்னவன்வளைகொண்டோச்சிவென்றதும்வகுத்துச்சொல்வாம்.

இதன்பொருள்.

மின்னலைப்போலும் விளங்குகின்ற இரத்தினமிழைத்த ஆபரணத்தையணிந்த மார்பையுடைய உக்கிரகுமார பாண்டியன் கடலைத் தமதுவேலால்வென்று அழகுபொருந்திய வெற்றிமாலையைத்தரித்த புகழைச்சொன்மேலும் இனிச்சுவர்க்கலோகத் தரசனுகிய இந்திரனுடைய அழகியபொன்முடிசிந்தும்படியாக அந்த உக்கிரகுமார பாண்டியன் சக்காயுதத்தையெறிந்துவென்ற திருவிளையாடலைச்சொல்லுகின்றோம்.

உக்கிரகுமார பாண்டியன் அரசுசெய்திருக்குநாளில் நவக்கிரகங்கள் மாறி மழைபெய்யாது மறுப்பப் பயிர்கள் விளைவின்றி புல்லினது தலைகளுந் தீய்ந்து அழகியமூன்றுநாடும் வறுமையாற்றுன்பமடைய மூவரசர்களும் அந்தத்துன்ப நீங்கும்பொருட்டு அகஸ்தியர் வசிக்கின்ற பொதிகைமலைசென்று அகஸ்திய முனிவரைக்கண்டு தங்கள் நாட்டில் மழையில்லாமையால் துன்பமுற்ற செய்தியைச்சொல்ல பரமசிவனுக் கன்பராகிய அம்முனிவர் கிரகங்களின் நிலையைக்குறித்துப் பார்த்து இனிமழையில்லை யாதிரையென்றால், சூரியன் செவ்வாய்க்குமுன்செல்ல சுக்கிரன்பின்பு சென்று நடக்குஞ் செய்கையால் கடலாற்சூழப்பட்டவுலகில் பன்னிரண்டுவருஷம் மழைபெய்யாதென்று நூல்கள் சொல்லுகின்றன, ஆதலால் மழைபெய்விப்போனகிய இந்திரனிடத்திற்சென்று கேளுங்களென, மூவரசர்களும் யாங்களிந்திரனிடத்தில் எவ்வாறு செல்வோமென அதற்குக்குருமுனிவர் சோமவாரவிரத நோற்றுவெள்ளிமன்றவ னருளைப்பெற்று ஆகாயமார்க்கமாகச் செல்லுங்களென்று சொல்லி அந்நோன்பின்விதியை அவர்க்குச்சொல்லத் தொடங்கினர்.

உத்தமமாகிய தேவர்களுக்குள்ளே பரமசிவனுத்தமனனவன், உத்தமமாகிய சத்திகளுக்குள்ளே உருத்திராணியுத்தமியானவள், உத்தமமாகியவிரதங்களுக்குள்ளே சோமவாரவிரதம் உத்தமம் இப்படிப்பட்ட சோமவாரவிரதம் மந்தாரம் காசிமுதலியபதிகளிலிருந்து நோற்றதினாலே யுண்டாகும் பலனிலும் மதுரையிலிருந்து நோற்றிடில் கோடிபங்கதிமாம் இந்தச்சோமவாரவிரதம் அதிகமென்பது யாதிரையென்றால் சோமசுந்தரக்கடவுளுக்குரிய



வாரமாதலால் அதிகமாகும். சூரியனிடத்துச் சந்திரனென்றியசோமவார விரதநோற்பவர்க்கு முன்சொல்லியதற்கதிகபேறுண்டாகும். இதனினும்நீதியாற் சம்பாதித்த பொருளைக்கொண்டு அவ்விரதத்தைநோற்பவர்க்குநன்று அருந்தமாகவளரும் நன்மைமிகுந்த இவ்விரதத்தை நோற்கத் தொடங்குகாள் யாவையெனில் கார்த்திகைமாதம் மார்கழிமாதம் இவற்றிலும், அல்லது இரட்டியதிதரிசனஞ்சேர்ந்த மலமதியொழித்து மற்றை மதியிலும், பூசைப்பக்கத்தில் ஆதிவாரத்தில் இரவிற்புசியாமலும் அயலிடத்தில்நித்திரைசெய்யாமலும் இருந்துவிடியற்காலையிலெழுந்து சோமசுந்தரக்கடவுளைச்சிந்தித்து அன்றைத்தினஞ் செய்யத்தக்க கடனைமுறைபாகநிறைவேற்றிக் காமமுதலிய குற்றங்கள் தன்மனதிலேறாது நீக்கிப பொற்றூமரைத்தீர்த்தத்தையடைந்து கையிற்பவித்திரந்தரித்து மநோவாக்குக்காய மொருமிக்கச் சங்கற்பஞ்சொல்லி சோமசுந்தரக்கடவுளை நினைந்து உலகத்திலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் மூழ்கியபலனை இத்தீர்த்தத்தி லுறுதியாகத் தரவேண்டுமென்று தீர்த்தத்தில்மூழ்கித் தேகத்தில்திருவெண்ணீறுதரித்து உருத்திராக்ஷமாலை விளங்க விதியோடுதரித்து வெள்ளை-மந்தாரம்-முல்லை-மல்லிகை-வெடிவாய்ச்சாதி-இருவாட்சிமுதலிய வெள்ளியமலர்களைக்கொண்டு கணபதியைமுன்னர்ப்பூசித்து அவரையாசித்துச் சங்கற்பஞ்சொல்லி ஆலயத்துட்சென்று உச்சிமேல் பன்னிரண்டு விரலுக்கு மேலுள்ள சத்தியனுநாநாந்த தத்துவத்தை நினைத்து தானிறுவிய வடிவத்தை யுள்ளத்திற்கொண்டு பிருதுவி தத்துவமுதல் சிவதத்துவமீறான அத்துவித லிலிங்கத்தை ஆசனமூர்த்தியாகிய மூலவித்தை நூலின்விதியிலுலும் மற்றவையாலும்பூசைசெய்யும்போது பஞ்சாமிர்தம் - பஞ்சகௌவியம் - பஞ்சகனிகள்-செந்தேன்-சந்தனக்குழம்பு - புட்பநீர் - இரத்தநீர் இவற்றலபிஷேகஞ்செய்து அழகியவெண்பட்டுச் சாத்தி கருப்பூரச் சுன்னம் - சந்தனம் - வாசனை பொருந்திய மல்லிகைமுதலிய வெண்மலர் மாலை சாத்தி இரத்தினாமுதலிய ஆபரணங்கள்தரித்து திருவடிமுதலிய அவயவத்தைப்பூசித்து மீளட்சியையுமவ்வாறு ஈசனங்கிதழுத்தைப் பெண்பாகினையவுச்சரித்து, பின்புகுற்றமற்றபசுவின்பாலும் சமைத்த இனியவமுதும் பண்ணியவகையும், பானீயமும்நிவேதனஞ்செய்து வாசனை பொருந்திய தாம்பூலந்தந்து தூபமும் தீபமும் எண்ணியவகையால் சுற்றி, கண்ணுடிமுதலிய மற்றும் புண்ணியன்றிருமுன்னர்க்காட்டி வில்வத்தாற் பூசைசெய்த புராந்தகனது இச்சா ஞானக்கிரியையாகி போந்தவில்வமரத்தி னடியிலடைந்து மூன்றுநாள் ஆகாரநித்திரையின்றி ஹரஹரவென்னு முழக்கஞ்செய்வோருடைய பெரியபஞ்சபாதகங்களும் கொலைபாதகங்களும் தீருமாதலால் வில்வம் விசேடமாகும். அவ்வில்வம்மடங்கிதழ்சுருங்கல் வாடியுலர்ந்தது, மயிர்ச்சிக்குண்டல், சிலம்பிக்கூடு, புழுக்கடி முதலியகுற்றமிருப்பினும் தோஷமில்லை உத்தமமாகும், அவ்வில்வத்தைக் காத்திற்கொண்டு ஈசனது நாமமாயிரமுஞ் சொல்லி அருச்சித்துநின்று அடியேன் செய்யுங்குற்றங்கள் நாளுக்குநாள் அநந்தமாகும். கொடியவிஷத்தை அமுதமாகக்கொண்டருளியபெருமானே அக்குற்றங்களையும் குணங்களாகக்கொண்டருளி உலகத்தில் இன்னபடிபென்று தெரிந்தெழுதற்கரிய திருவுருவத்தை

யுடைய உமாதேவியாரை யோரிடப்பாகத்திலுடைய கருணைக்கடலே, காத்தருளுவீராகவென்று தமதுமுடிகள்தோயத் திருவடியில் விழுந்துமூன்றுதரம் பிரதட்சணஞ்செய்து வலியமனமானது கரையநின்று வேண்டிய வரங்களைக்கேட்க, நல்ல கலியாணபலபேரும், பிளைப்பேரும், நல்லவாக்கும், கல்வியும், பொன்னும் மனதுக்கினியபோகங்களும், பகைவரைச்சயித்தலும், அரசும், மற்றும் எண்ணியவைகளெல்லாம் தருவர் மூலகாரணமாகிய இவ்விலிங்கத்தைத் தீண்டப்படாத வேதமுணர்ந்த வேதியர் முதலானவர்கள் இஷ்டலிங்கத்தை இந்தவிதியால் அர்ச்சித்துச்சொல்லிய விரதத்தை நோற்கவேண்டும், அர்ச்சனைக்குரியரல்லாத சாதியர் பொருணீர்ந்து ஆதிசைவரைக்கொண்டு பூசைசெய்விக்கவேண்டும்.

ஒப்பில்லாத இந்தச்சோமவாரவிரதம் ஐந்துவகையினையுடையது அவையாவையெனில் மத்தியானத்தில் உணவில்லாமலிருத்தல் இரவிலுணவில்லாமலிருத்தல், இவ்விருபோதும் உண்ணாதிருத்தல், உறங்காதிருத்தல் சிவார்ச்சனை நாலுயாமத்திலுஞ்செய்தல் என்றுசொல்லாநின்ற இவ்வைந்தும் ஒன்றினுக்கொன்று அதிகமாம் இவ்விரதங்களை நோற்குமளவு ஒருவருடம்-இரண்டுவருடம்-மூன்றுவருடம்-பன்னிரண்டுவருடம்- ஆயுள்நாளளவுமாம். தன்னையுளளவை யெண்ணி நோற்பவர்முன்னர் உத்தியாபனஞ்செய்து நோற்கவேண்டும் அவ்வருடக் கட்டளைக் கிறுதிகழிப்பது உத்தாபனம்-மடலவிழ்மாலை-மண்டபங்குண்ட மண்டலம் வகுத்து உமாபதியை ஒளிபொருந்தியமுப்பது கழஞ்சு வெள்ளியால் அழகாக நிருமிதஞ் செய்து உதயகாலயில் ஆசாரியன்சொல்வழி நித்தியகடனைமுடித்து உச்சிமுதலந்திவரையில்புராணநூல்கேட்டு மாலைமுதல் யாமமோர்நான்கும் உமாபதியைப்பூசைசெய்க அபூசனைமுடிவில் நூற்றெட்டுதரம் மூலமந்திரத்தை யுச்சரித்து முறையிலாகுதிமுடித்துப் பின்பு ஆயிரநாமத்தையுஞ்சொல்லி ஆயிரம்வில்வத்தைக் கொண்டு நாலுசாமமுஞ்சாத்தி நல்ல ஸ்ரீபஞ்சாட்சரத்தால் பஞ்சாக்ஷரவுருவமாகிய நாதனுக்கருக்கியங்கொடுத்து அளவற்றமூலமந்திரங்களாலும்மற்றமந்திரங்களினாலும் ஒளியினையுடைய அக்கினிவளர்த்தி ஓமஞ்செய்துபூரணாகுதிசெய்துமுடிவில்லாதகடவுளினுடைய வேள்வியைமுடித்து விடிந்தபின்பு நித்தியகர்மங்களைமுடித்துப் பதின்மூன்றுவாழையிலையில் வெள்ளிய அரிசியிட்டு இனிய நல்ல காய்கறிகளோடு பரப்பிப் பசுவின்பாலை நிறைவித்தபதின்மூன்றுகுடம் அந்த அரிசியின்மேல் வைத்துச் சிவனடிக்குரிய அன்பினையுடையராகிய அந்தணர்களை வருவித்து காதிலே அணியத்தக்க ஆபரணங்களும் கையிலே யணியத்தக்க ஆபரணங்களும் அழகுபெற வணிவித்து அவர்களை அன்போடு சிவகுருமந்திரத்து அருச்சனைசெய்து அரியதக்ஷிணையோடு பாதத்திலணியத்தக்க காப்பு, விசிறி, குடை, வஸ்திரம் முதலிய மேலான பலதானங்களைச் செய்து பின்பு குருவைப் பத்தினியோடு ஆசனத்திலிருக்கச்செய்து பொன்மயமானவஸ்திரம் - காதணி - கையணிகளுமணிந்து மலரினு லருச்சனைசெய்து பாமசிவத்தை யடைந்து பூசனைசெய்தபடிதவத்தோடு பொன் - பூமி-பதாதிகள் மற்றவையும் கோட்டில் அணிபுனைந்தகோதானமுஞ் செய்து இவ்வாறு நிறைவேற்றி ஆசாரியத்தாவால் சிவ

ன்டிக்கன்பரோடும் தனையரோடும் ஒக்கலோடும் இருந்தமுதருந்துதல் தகுதி யாகும்.

இவ்விரதத்தை முன்னர் திருமால்-பிரமன் - இந்திரன் - முதலாகிய தேவர்களும், பதினெண்கணத்தரும, மனிதரும், அநுட்டித்துப் பெறுதற் கரிய போகத்தையும் வீட்டையும் அடைந்தார்கள் இவ்விரதத்தை நோற்ப வர் பகையுந் துயருந்தீர்ந்து ஆயிரம்பிறப்பிற் முஞ்செய்த தீவினைநீங்கி யெடு த்ததேகத்தில் சிவகதியடைவர் இவ்விரதத்தைச்சொன்னவர்களும்-கேட்ட வர்களும்-மனைவியரும்-மக்களும்-பந்துக்களும் இன்பத்தோடுவாழ்ந்து தேவ வருடம் பதினலும் இந்திரன்பதத்தில் வீற்றிருப்பானென்று அகஸ்தியமுனி வர்சொல்லிய முறைப்படி சோமசுந்தரன் விரதத்தைநோற்பாராகிமூன்றரச ர்களும் அம்முனிவரிடத்து விடைபெற்றுச்சென்று பொற்முமரையின் மூழ் கிச் சோமசுந்தரக்கடவுளைப்பூசித்து வரம்பெற்று ஆகாயமார்க்கமாகச்சென் ருர்கள் இந்திரனதுதரிந்து அமரூவருமிருக்க வேறேமூன்று சிங்காசனம் வரவழைத்துத் தனது சிங்காசனத்தின்கீழேயிட்டு வைத்தான். ஆகாயமார் க்கமாகவந்த மூன்றரசரும் பொன்னுலகமடைந்த இந்திரனிடத்துச் சென் ருர். சென்றமாத்திரத்தில் சேரனுஞ் சோழனும் இந்திரன்காட்டிய ஆசனத் தில் இருக்க பாண்டியன் இந்திரனுசனத்தில் ஏறி அவனேடு சமமாக வீற்றி ருந்தான் இந்திரனைதைக்கண்டு பொருமையடைந்து தனக்குக் கீழேயிருந்த அரசர்கள் முகத்தைப்பார்த்து உபசாரஞ்சொல்லி நீங்களிங்குவந்த காரண மென்னென? இந்திரனே! எங்களூட்டில் மழையில்லாமையால்வந்தோமென அதற்கு இந்திரன்மகிழ்ந்து அவர்கள் காட்டின்மட்டும் மழைபெய்யும்படி செய்து அழகுமிகுந்த ஆபரணங்களும் வஸ்திரமும் வெகுமானமாகக்கொடு த்துநீங்கள்போய் வாருங்களென்று அனுப்பி அவர்கள்போனபின்பு இந்தி ரன் பாண்டியன் தன்சிங்காதனத்திற் றன்னேடு சமமாகத் தருக்கோடிருக்கி ன்றதையும் தனக்கு மழைவேண்டுமென்று கேளாமலிருப்பதையுங் கண்டு காரணந்தான்முமல் ஒருவினையத்தையாலோசித்துஅவனுக்குவெகுமானஞ் செய்கிறவனைப்போல அளவிறந்தாராற் முங்கப்பட்டுப் பாண்டியனது மலை யையொத்த தோளினது ஆற்றல்கெடும்படியான ஓராரத்தைக்கொடுத்தான் அதைப்பாண்டியன் மாலைபோல்வாங்கிக் கழுத்திற் றரித்துக் கொண்டான். அதைக்கண்ட இந்திரன்மிகுதியுமதிசயப்பட்டு இன்முமுதல் பாண்டியனே, உன்னை ஆரந்தாங்கு பாண்டியனென்று இப்பூமண்டலத்தார் மதிக்கவென்று சொன்னன் அதைச்சிறிதுமெண்ணது அங்குநின்று இறங்கப் பாண்டியன் தன்னகரம்வந்து சேர்ந்தான். பின்பு இந்திரன் ஆஞ்ஞையால் அவ்விரண்ட ரசர்களது நாடும் மழைவளம் பெருகும்படிசெய்து பாண்டியனுடு மாத்திரம் முன்போலவே யிருந்தது.

அவ்வாறிருக்கின்றகாலத்து ஒருநாள்பாண்டியன்வேட்டையாடும் பொருட்டு ஆகாயத்தையளாவிய பொதியமலையில் சந்தனச்சாரலில் சென்று அவ்விடத்துள்ளயானை-சிங்கம்-பன்றி-புலி-கரடி - மான்முதலிய தீயமிருகங் களை வேட்டையாடி அவற்றைக் கொல்லுங்காலத்தில் அருவிநீரையுடைய அம்மலையில் புட்கலாவருத்தமுதலிய நான்குமேகங்களும் இறங்கி மேய்தலை

க்கண்டு அரசனைவன் அம்மேகங்களைப்பிடித்து யானைகளைப்போலத் தளை யிடுவித்து தன்வேட்டையிலகப்பட்ட யானைகளைப்போலக் கொண்டுபோய்ச் சிறைச்சாலையிலிடுவிததான். இந்திரன் அச்சமாசாரத்தைக்கேட்டு அக்கினி யைப்போற்சீறிக் கடிய யுத்தத்தைக்குறித்து நினைத்துவளைந்த கடல்வறக்கு ம்படி வேல்விடுத்ததும் கனமான ஆரத்தைத்தாங்கிய செருக்கும் மேகத் தைத் தளையிட்ட தருக்கும்நோக்கி இவ்விடத்து ஒருமனித தேகதத்துக்கு இவ்வளவு வலியதென்று மிகுந்த மானமானது மேலிட்டுப பாண்டியனது மதுரைப்பட்டினத்தைச் சூழ்ந்துகொண்டான், ஒற்றர்களதனைக்கண்டு ஓடிப் போய் பாண்டியனவனங்கி நமது மதுரைப்பட்டணத்துப் புறத்தில் தேவர் களதுசேனைகள் சூழ்ந்தன என்று சொன்னமாத்திரத்தில் கோபமு மான முமம் மேற்கொண்டவனுகி சிம்மாசனத்தினின்று மிறங்கி மந்திரியை நோக்கி சேனைகளை விரைவில் யுத்தசன்னகமாகும்படி. யுத்தாவுசெய்து தான் யானை யின்மீதேறிக்கொண்டு விசாலமாகிய காவலையுடைய பட்டணத்தைக்கடக்கு முன்னேவானவர்நெருங்கி ஆரவாரித்துப் பலவாயுதங்களையெடுத்துப் பாண் டியன்சேனைமீதுவீசி உகாந்தகாலத்திற் சொரியும் மழையைப்போல் பலபா ணங்களை வில்லிற்கோத்து எய்தனர் அதனைப் பாண்டியன் சேனைகள் கண்டு கோபித்து ஆரவாரித்து பலவிதமான படைக்கலங்களைக் குவை குவையாக வெடுத்து தேவர் சேனைகளின்மேல் தூர்த்தனர்கி அநேகபாணங்களை வில் லிற்சேர்த்துச் சோனைமாரிபோல அவர்கள்தேகத்தை மறைத்தார்கள். அத னல் தேவர்களில் சிலர் கரங்கள் தரித்தன சிலர் தலைகள் உடைந்தன சிலர் தோள்கள் துணிந்தன உதிரநீர்க்கடலிற்போய்ப் பாய்ந்தனஅக்களத்தில்பாரி டம் கூளிகள் பருந்துகள் நெருங்கிவந்தன இந்திரன்சேனைகள் முறிந்துபோ யின அப்போர்க்களத்தில் குறத்தலைப் பிணங்களாடின போர்க்கள மழிந் தனவென்று பாரிடங்கள்பாடின கூளிகளெல்லாம் தூர்க்கையின்தாளைத் தலை யிற்சூடின, பிணக்குவைகள் அண்டத்தைமுட்டும்படி இரத்தவாறுனது பூமி யைமூடின இந்திரனைவன் தனது வீரச்சேனைகள் மாண்டதைக்கண்டு அக் கினியைச்சொரியுங் கண்ணினையுப் பஞ்சிகள்மூன்னெரிபோலப் பதைபதைத் துப் பாண்டியனைத் தேவாஸ்திரங்களால் வெல்லக்கருதிப் பாண்டியன்மீது சூரியாஸ்திரத்தை பிரயோகித்து ஆரவாரித்தான். அதனைப்பாண்டியன் சந் திராஸ்திரத்தைப் பிரயோகித்து அவித்தான். இந்திரன் சிங்காஸ்திரத்தை விட்டாரவாரித்தான். அதனைப்பாண்டியன் சிம்புட்படையைவிட்டு அடக்கி னன். இந்திரன் மோகனாஸ்திரத்தைவிட்டுக் கொச்சித்தான். அதனைப்பாண் டியன் ஞாநாஸ்திரததால் ஒழித்தான். அதுகெட்டபின்பு இருவரும் மல்யு த்தம் செய்யத்தொடங்கினர்கள். அவ்விருவரில் இந்திரன் பாண்டியன்மீது வச்சிராயுதத்தைவீசி ஆரவாரித்தான். பாண்டியன்கையிலிருந்த வளையைக் கழற்றி விரைவில் விடுத்தனன். அதுவச்சிராயுதத்தைப் பொடிப்படுத்தி இந் திரன் மகுடத்தைத்தள்ளிச் சிதைத்தது சிதைத்தமாத்திரத்தில் நாணிப்பய ந்து இந்திரன் ஓடிப்போய் சூரபதுமன்முதலிய அசுரர்களையழித்த முருகக் கடவுளை யொத்த வல்லமையையுடைய இக்காளை எடுத்தெதிர்ந்த இந்த நேமி யானது நமது தலையைச்சிந்தாது மணிமுடியைச்சிந்தியது சோமசுந்தாக்கட

வுளினது பூசையின்பலனென்று பின்னும் போர்செய்வதற் காற்றுணுகி ஓடி
ப்பொன்னுலகத்தை யடைந்து பின்பு பாண்டியனுடைய நாட்டுக்கெல்லாம்
மழைபெய்யும்படி செய்வேன் மேகங்களுக்கிட்ட தளையைநீக்கித்தர வேண்
டுமென்றுபாண்டியனுக்கு ஓலபனுப்பினன். அவ்வோலைகொண்டுவந்த தூத
ன் பாண்டியனது திருவடியில் வணங்கி ஒடுங்கிநின்று ஓலையைநீட்ட அச்ச
பையிலுள்ளாரெருவன் அவ்வோலைபை வாங்கிச் சிங்கத்தையொத்த பாண்
டியன் முன்னர் வாசிக்கக்கேட்டுபை பாண்டியன் அவ்விந்திரன் சொல்லை நம்
பாதவனுகி அம்மேகங்களை சிறைபைநீக்கி விடாதவனுக விருந்தனன். அத்
தருணத்தில் இந்திரனுக்கு நெடுநாளைய சினேகனுகிய ஒருவேளாளன் அத
ற்கு நான் பிணையென்று பாண்டியனிடதது வந்துசொல்லி வணங்க, அப்
பொழுது பாண்டியன் துன்பம்வந்து உயிர்க்கிறுதி வருங்காலத்தும் சத்திய
ந்தவறுது காத்து குற்றங்களைப்போக்கி நடக்கும் நாலாமரபினனுகிய இவ்
வேளாளனது உரையைப் பரமசிவனருளிய வேதம்போலக்கொண்டு சிறைக்
களத்திலிருந்த மேகங்களை விலங்கைக் கழற்றிவிடுத்தனன். அம்மேகங்களெ
ல்லாம யானைகளைப்போலத் திரும்பிப்போயின, பின்பு இந்திரன் எவலினுல்
அக்கன்னிநாட்டில் மாதமும்மாரிபெய்து வாவிகளும்-குளங்களும்-ஆறுகளு
ம-மந்திக்களும் நிரம்பித் தேனைபுடைய நீலோற்பல மலருகின்ற வயலுஞ்-செ
ய்யும்-செநெல்லும்-கருப்பங்காடும்-மலர்கள் மிருந்த சோலைகளும் காவுக
ளும் பொலிவுபெற்றுச் சிறந்தன.

இந்திரன் மூடிமேல்வளையெறிந்தபடலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

பதினைந்தாவது

மேருவைச்சண்டாலடித்தபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்

அண்டரஞ்சவமருழந்தவமரர்கோனையரசர்கோன்
வண்டலம்புமௌலிசிந்தவளையெறிந்துவெற்புறங்
கண்டவண்ணமின்னதன்னகன்னிடைன்மேருவிற்
செண்டெறிந்துவைப்பெடுத்தசெயலுரன்குசெப்புவாம்.

இதன்பொருள்.

போர்செய்த தேவேந்திரனைத் தேவர்களஞ்சும்படி உக்கிரகுமார பாண்டியன் வண்டுகளொலிக்குஞ் வெற்றிமாலையைத்தரித்த மகுடஞ் சிதறச் சக்கரத்தையெறிந்து முதுகுகாட்டச் செய்த திருவிளையாடலிதுவாகும். இனி அவ்வுக்கிரகுமார பாண்டியன் மகமேருவின்மேற் செண்டாயுதத்தை யெறிந்து அங்குள்ள சேமநிதியையெடுத்த திருவிளையாடலையும் இனிது சொல்லுகின்றேரும்.

உக்கிரகுமார பாண்டியன் முன்னர் அகத்தியமுனிவர் சொன்ன சோமவாரவிரதத்தை யன்றுமுதல் அனுஷ்டித்து வரும்போது அந்நன்மையால் நங்கையாகிய காந்திமதி வயிற்றில் நினைத்தற்கரிய ஜயத்தையுடைய ஒருபுத்திரன் பிறந்தான் ஜயத்தைக்கொண்ட பாண்டியன் புத்திரனைப் பெற்றகாலத்துப் பலவாத்தியங்களுமுழங்கிப் பட்டணத்திலுள்ளார் களிப்படையும்படி திருவிழா முதலியவற்றைச்செய்து இனிதாகவிருந்த பாண்டியன் ஜயந்தனைழைக்க, இந்திரன் ஜயந்தனென்னும் புத்திரனைப்பெற்ற காலத்தில் மனமகிழ்ச்சியை யடைந்ததுபோல மகிழ்வடைந்து அப்பிள்ளைக்குச் சாதகாதி கர்மங்களைச்செய்து வீரபாண்டியனெனத் திருநாமஞ்சாற்றி வேதமுதலிய பல கலைகளையுங்கற்பித்து யானையேற்றம்-குதிரையேற்றம்- தேரேற்றம் இவைமுதலியவும் பயிற்றுவித்துத் தநுர்வேதமுதலிய ஆயுதங்களைப் பயில்வித்து அகமகிழ்ந்திருக்குங் காலத்தில்.

நவக்கிரகங்கள் வக்கிரித்ததால் மழையில்லாமல் நதிகளுந் நீரின்றி வறழ்ந்து உணவுவிளைவில்லாமையால் உயிர்களெல்லாம் வாடும்படி பகியால் வருந்தி அரசனுக்கு அவற்றைக் காக்கும்பொருட்டுப் பொருளில்லாமையால் நாடெல்லாம் வருந்த அப்பொழுது பாண்டியன் சபையிலுள்ள சோதிடரைப்பார்த்து இம்மழையில்லாமைக்குக் காரணம் யாதென்றுவினவ கிரகங்களெல்லாம் சூரியனையுற்றுநோக்கி யிருத்தலால் ஓர்வருடம் மழைபெய்யாதென்று சொல்லினர் அதைக்கேட்ட பாண்டியன் பிள்ளைக்குற்ற நோயைக் கண்டு தாய் கலங்குவதுபோல உயிர்களுற்ற நோயினல் வருந்தி சந்திரசூடனுகிய சோமசுந்தரக்கடவுளிடத்துச் சென்றுவணங்கி இவ்வுலகம் இவ்வாறு



வருந்துகின்றதே இதற்கென்னசெய்வேனென்று மிகவு மிரக்கமுற்றுக் கண் ணீர் ததும்ப நின்று இரந்துவேண்ட அதற்குக் காலகண்டராகிய சுவாமி காலத்தின்சமயங்களைநோக்கி இரக்கமில்லாதவர்போல ஒன்றுஞ்சொல்லாம லிருக்கப் பாண்டியன் அளவில்லாததுன்பக்கடலிலேவீழ்ந்து அரண்மனையிற் சென்றான் அப்பொழுதுசூரியன் அரக்கரதுபோற்கடலிலக்கடந்து மேற்கட லில் வீழ்ந்தான். அப்பொழுது பாண்டியன் தன்குடையின்கீழ்தங்கியவுயிர் களது பசிவருத்தமெல்லாம் தன்மனதிற் குடியாக விருத்தலால் முகம்வாடி நீங்குவதற்கரிய துன்பத்தின்மூழ்கிப் பூமியின்கண் துயின்றனன் அக்காலத் தில் வெள்ளியம்பலத்தையுடைய பெருமான் சித்தவேடராய்ப் பாண்டியன் கனவில்வந்து வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய அரசனே! இப் போது மழைகிடையாது. அதனை வேண்டித் துன்பப்படாதே மலைகளுக் கெல்லாம் அரசாயுள்ள மேருமலையினிடத்து ஒருகுகையில் அழிவில்லாத தும் அளவில்லாததுமாகிய ஒருசேமவைப்பு இருக்கின்றது நீ யாங்குச்செ ன்று அம்மேருவினது செருக்கடங்க உன்கைசெண்டினாற்புடைத்து உன்னு ஞ்ஞைக்குள்ளாக்கி அப்பொன்னறையைமூடிய பாறையைவிலக்கி நீவேண்டு மளவுந்தோண்டிபெடுத்துக்கொண்டு அப்பாறையை மீண்டுமடைத்துநின்று றியிட்டுவரக்கடவாயென்று சித்தமூர்த்தியானவர்கூற பாண்டியன் விழித்து க்கொண்டு சூரியன் உதயமாகுமுன்னர் காலைக்கடன்களெல்லாமுடித்து அங் கயற்கண்ணியின் கணவனை வலம்வந்து கடல்போன்றசேனைகள் புடைசூழக் கோபுரவாயிலைக்கடந்து கீழ்த்திசைநோக்கிப் பலவாத்தியங்கள் முழங்கச் சென்று வெண்கவரிதுள்ள, நான்மறையோ ராசீர்வாதஞ்சொல்ல, நாவலரே த்தப் பார்கிழிய திண்ணிய தேரைப் பாகர்நடாத்த, வூர்ந்து பவளக்காற் பிச்சமும் பொற்காலையுடைய பலமணிக்கோவைகள் தொங்குகின்றகுடைக ளும் தாளக்காலையுடைய பதாதைக்காடும், யானைகளும் குதிரைகளும் பூமி தேவியின் சரீரம் துவள தேர்க்கூட்டங்களும், காலாள்களும்சூழ்ந்துவரபுலி க்கொடியும் விற்கொடியும் சூழ்ந்துவர கயற்கொடியானது யானையின்மீது தோன்றிப் பெரிய ஆகாயத்தினது வயிற்றைக்கிழிக்க, தென்கடலானதுவட புறத்தை நோக்கிச் செல்வதுபோல பாண்டியனது சேனைக்கடல் தண்டமி ழையுடைய கன்னி நாட்டைக்கடந்து காட்டுவழியைக்கொண்டு சென்று சோழராஜன் எதிர்கொண்டுசெய்யு முபசாரத்தையேற்றுப் புன்னட்டைக் கடந்து அதன்பின்பு தண்டகநாட்டைக்கடந்து தெலுங்கநாடகன்றுதாழை வேலினையுடைய கருநாடக நாட்டைக்கடந்து காடும் மலையும் நதிகளுங் கடந்து மாளவதேசத்தைச்சேர்ந்து அங்கு நின்றெழுந்து நெருப்புமயமான பாலை நிலவழியாகபபோய் விராடதேசத்தையடைந்து அநேகங் காடுகளும் மலைகளுந் தாண்டி மத்தியதேபத்தைச் சார்ந்து அந்தப்பெரிய நாட்டைநீங் கிச் சிவனது சடையினின்று மிறங்கித் தீர்த்தமாகிய கங்காநதியாற் சூழப் பட்ட ஸ்ரீ காசிநகரத்தையடைந்து கங்காநதியைக்கடந்து நன்னெறியாகிய மார்க்கமாக அநேகதாவதஞ்சென்றபின்னர் சிங்கங்களும் யானைகளும் வழங் குதலால் மனிதர் வழக்கமில்லாத விடங்களைக்கடந்து ஆயிரம் போசனை யள வுள்ள காடுபொருந்திய குமரிகண்டத்தைக்கடந்து அதுபோல் எட்டுத்தட

ங்கெழு கண்டங்கொண்ட பாரத வருடங்கடந்து யாவையுமீன்ற டன்னை யின்ற இமைய பர்வதத்தைக் கடந்துபோகமிருந்த கிம்புருடகண்டஞ் சேர்ந்து அதைவிட்டு ஏமகிரியையடைந்து அதுபின்போகச்சென்று அதன்பின் காணப்படுகின்ற அரிவருடத்தை யடைந்து அதையுங்கடந்து அப்பாற்சென்று நிடதமலையைக்கடந்து சம்புநாவலாகிய பொற்றருவுமிழாநின்ற தேனுறுசெல்கின்ற இளாவிரத கண்டத்தையடைந்து திரிபுரத்தை ஓருமிக்க அழித்தநாளில்வந்து வில்லாக நின்ற மகமேருவைப் பாண்டியன்கண்டு தனது சேனைகளையெல்லாம் அதன்புறத்தி நிறுத்திச்சென்று தென்பக்கத்தில் சம்பு நாவலின் கனியின் சாறுவலமாகத் தழுவியோடுகின்ற பன்னிரண்டுமாற்றுப் பொன்மயமாய் நிற்கும் பசிய புவனங்களையும் காடுகளையும்நோக்கிச் சுற்றிக் கொண்டு தென்பாகத்தில்வந்து சேர்ந்து அம்மலை யாசனைப்பார்த்து மலைகளுக்காசே! எந்தையின் கையிலுள்ள வில்லே! உலகத்துக்காதாரமே! அளவற்றகாயத்தி லுறுகின்ற சூரியசந்திரரும் நவக்கிரகங்களும், தழுவிச் சூழுகின்ற தெய்வதவரையே; மேலானதேவர்களுக்காலயமே! என்று பாண்டியன் அழைத்தலும் மலையாசன் வருதல் தாமதிக்க அபபொழுது பாண்டியன் நாணி தன்கோபமும் மேருவின் செருக்குமாற ஆகாயத்தை யளாவிய அதனது சிகரத்தில் செண்டிரு லடித்து நின்றான்.

அவ்வாறுஅடிக்கஅசைவற்றமேருவானது அசைந்துபொற்பந்துபோல்துடித்தது சிகரபந்திகளுந்தேவர்கள்வசிக்கின்றமாடபந்திகளும்விடித்தன பானுமண்டலம்பிளந்து தூளாகிபூமியில் தெரித்தாற்போல்பலமணிகளுதிர்ந்தன, அன்றியும்பக்கதிலுள்ள மலைகளெட்டும் புறத்திற்றழுவிக்கிடக்கும்செம்பொன்னைகள் ஓர்நான்கு கிடங்களும் மலர்ந்துவிசாலமான நான்குமலர்ச்சோலைகளும் நான்கு விருக்ஷங்களும் சலித்தன யசமானன் துன்பப்பட்டால் அவனை யடுத்தவர்க்குச் சுகந்தோஷமுண்டோ! பாண்டியனடித்தபின்பு மேருவாகிய தேவன் தன்பக்கத்திலுள்ள மலைகளெட்டென்று சொல்லப்படைத்த வெண்டோளும் நான்குமுடியும் மேலே பொருந்தியவெள்ளியபிரகாசத்தையுடைய ஒப்பற்றகுடையும்பெற்ற வுருவத்துடனே எழுந்து நாணி வந்ததை மிகுந்தகிருபையையுடைய பாண்டியன் கோபந்தணிந்து பார்த்து இவ்வளவுநேரந் தாமதித்ததற்குக் காரணமென்ன அதற்குமேருவாகிய தெய்வம் ஞானத்தையுடைய நம்பி! நீ கேட்பாயாக அங்கயற்கண்ணியோடு பாம்பாபரணத்தையுடைய பரமசிவத்தை இந்தவுருவத்தைகொண்டு நாடோறுஞ் சென்று சென்று வழிபடுகின்ற நியமம்பூண்டேன் இன்றையதினம் ஐயனே! எந்திழை யொருத்தியின் காமமாகிய கடலில் மோகமாகிய சுழியிலகப்பட்டு வெள்ளிமன்றுளாடிய பொற்பாதத்தை வழிபடுதல் மறந்து தாமதித்து நின்றேன். அனையதீங்கினிமித்தத்தால் அடியும்பட்டேன். திருவடி பூசித்தலிற்றவரிய குற்றத்தை நீக்கிஎப் இதற்குக் கைம்மாறு என்னைற்செய்யத் தக்கதுமுண்டோ? அதுநிற்க, மணம்பொருந்திய பருத்த மலைபோன்ற மார்பையுடையவனே? நீ வந்தகாரியம்யாது! சொல்லுவாயென்று கேட்கப் பாண்டியராஜன் திரவியம்வேண்டிவந்தனனென்றான் ஐயனே உன்னுடைய தேசத்தோர்க்கேற்க உரைக்கப்படு மாற்றதாகிய பொன்னைப்போலும் விளங்

காநின்ற தித்திப்பாகிய மாமரத்தினீழலிலே புதைப்பட்டு கிடக்கின்ற செம் பொன் என்று மேருவாகிய தெய்வத்தன்மையாற் சுட்டிக்காட்டியது.

அப்பொழுது பாண்டியன் பொன்னறைக்குச் சமீபத்திற்சென்று அத னைமூடிய பாறையை நீக்கித் தனக்கு வேண்டியளவு செம்பொன் எடுத்துக் கொண்டு அறையைமூடிப் பின்னும் அதிலுள்ள பொன் தன்னதாகத்தன்மு த்திரையிட்டு மீண்டு தன்னுடைய சேனைகளோடு தென்றிசைநோக்கிப்பாக ன் தேரைச்செலுத்தப் பொன்னகவிளங்கு மலையும் போகபூமியும் மற்றவை களையுங் கடந்து நன்மையைக்கொண்ட மனிதர்களிருக்கு நிலந்நில்வந்தகா லத்தில் மாத்திமரும்-விராடரும்-மாளவரும்-தெலுங்கரும் ஆகிய அரசர்க ளும் மற்றவர்களும் தங்கள் தங்கள் பட்டணங்கடோறுமவரவுநோக்கித்தங் கள் சதுரங்க சேனையோடுஞ்சென்று உபசாரஞ்செய்யப்பெற்றுக் கன்னித் த மிழ்நாட்டைச் சேர்ந்தான் சேர்ந்து பொன்னுறச்செய்த மதிலாற்சூழபபட்ட செம்பொன் மயமான காவலையுடைய நகரத்திற்குச் சமீபனுகி கோபுரத்தை க்கண்டு வணங்கத் தேரினின்று மிறங்கி அஷ்டாங்க பஞ்சாங்கங்கள் பொரு ந்த வணங்கியெழுந்து மதுரையைச்சார்ந்தான் சேர்ந்தவுடனே அறத்துறை யந்தணரும் துறந்தவர்களும் பரமசிவன் ரூபபற்றி மற்றவைகளை மறந் த சைவபூதியரும் பரமனது கோபில் திறத்தின் வழிநிற்கும்தொண்டர்களு ம் திரண்டுவந் தெதிர்கொள்ள முத்திறத்தினதாகிய வையைநதியை நீத்து நெடிய மதிலையுடைய வாயிலை யடைந் துள்ளேசென்று வாசனைபொருந்திய அளகத்தையுடையமாதர்கள் குங்குமம் பனிப்பச்சிந்திய மங்கலத்தையுடை ய மறுகில்சென்று வேதங்கள் சூழ்ந்திருக்கின்ற ஆலயத்துளடைந்து தங்க ணையகனைப் பிரதட்சணம் வந்து வணங்கி யெழுந்து துதித்துவந்து திங்களரு ருகின்ற சிகரத்தையுடைய செல்வத்திருமணிக் கோயிலை யடைந்தான் அ டைந்து பொன்மலைக் கடவுளீந்த புண்ணியநிதியை நல்லமலைக்கொப்பாகக் குவித்துப் பல குடிகளுக்கும் கொடுத்து அக்குடிகளைப் பாதுகாத்துப் பொ திய மலைக்குரிய அகத்தியன் தெய்வம் பிதுர்க்கள் ஒக்கல் விருந்து இவர்க ளைக்காத்துத் தருக்கிலே டிருக்குநாளில் பஞ்சகிர்த்தியங்களையும் நடத்துமீ சனுடைய ஆஞ்ஞையால் மாறுபட்ட கிரகங்களும் ஒழுங்காகச்செல்ல பாண் டிநாடெங்கும் மழைபெய்து மிகுந்தவளப்பத்தைத்தா யாவரும்பிழைத்தலை யுடையவராகி தழைத்திருந்தனர் உலகத்தை யிம்முறையாகப்புரந்தளித்து ஆரம்பூண்ட பாண்டியன் தன்றிருமகனுக்கு ஏழுலகமுமறிய வீரபாண்டிய னென் றணிமுடிகவித்துத் தனதாசையளித்து நவநிரதிசய பூரண வின்ப ஞானக்கண்ணை யருளிய மதுரைச்சிவனடி நிழலிற் பிரிவறப் பழைய தே சொடு நிறைந்து வீற்றிருந்தனன்.

மேருவைச்சென்டாலடித்தபடலம்

முற்றிற்று.

ஓ

சிவமயம்.

பதிமூன்றாவது

வேதத்துக்குப் பொருளருளிச்செய்ததுபடலம்.


அநுசீடியாசிரிய விருத்தம்

உலம்பொருதடந்தோ ளுக்கிரச்செழிய னுயர்மேருமால் வரையைப்,
பொலம்புரிசெண்டாற் புடைத்துவைப்பெடுத்துப போந்தருளைடைந்வா பு
கன்றும், வலம்படுநிணிதோள் வீரபாண்டியன்கோல் வழங்குநாண்மதுரை
எம்பெருமான், புலம்பொருமுநிவர் தேறநால்வேதபொரு ளுணர்ந் தியதிற
ம்புகல்வாம்.

இதன்பொருள்

திரண்ட கல்லெப்போலும் பெரிய புயத்தையுடைய உக்கிரகுமார பாண்டியன் உயர்ந்த மகம்மேருமலையை பொன்னாகிய செண்டாலடித்து நிதி யைபெடுத்து அங்கு நின்று மீண்டு சோமசுந்தரக் கடவுளின் திருவருளைப் பெற்ற திருவிளையாடலைச் சொன்மேலும். இனி வெற்றி பொருந்திய நிண்ணி யதோள்களையுடைய வீரபாண்டியன் செங்கோல் செலுத்துங்காலையில் மது ராபுரியி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் பஞ்சேந்திரியங்களையும் வெ ன்ற கண்ணுவர்முதலிய முனிவர்கள் தெரிய நான்கு வேதங்களின் உண்மை ப்பொருளை யுணர்த்திய திருவிளையாடலைச் சொல்லுகின்றேம்.

பிரதிவிமுதலிய ஐந்துபெரிய பூதங்களும் தத்தம் நிலைதிரிந்துபதினை ன்காக வடுக்கியவுலகொடும் அயன்மால் உம்பர்களதுமேலானபதவிகளும் உ தித்தபடியே ஒடுங்கும்படியான ஊழிகால முண்டாகச் செவ்விய பொருளைச் சொல்லுகின்ற வேதங்களு மவ்வாறொடுங்கினபோது சூரியனுக்கு முன்புமல ராநின்ற தாமரைப்போல் பரமசிவனதுதிருமுன் உலகம்மலர்ந்தது அப்பொ ழுது முன்போலப்பின்னு முத்தொழில்நடந்தபராபரன் றிருவுளங்கொண்டு போர்செய்தற்குக் காரணமான சக்rயுதத்தையுடைய திருமாலத்தர அவர துநாபிக்கமலத்தில்வண்டுபோற் பிரமனுதித்து மூவுலகத்தையும் வரன்முறை யாகச் சிருஷ்டித்த காலத்தில் விஷத்தையுண்டு தன்னைத்துதித்த வானவர்க் கு உயிர்கொடுத்த பரமசிவத்தினது திருவாக்கினின்று பிரணவமுதித்தது அதினின்றும் வேதம் பிறந்தன அக்காலத்தில் நைமிசாரண்ணியத்தில்வசிக் கின்ற அருணிறைந்த முனிவர்களும் கண்ணுவர் கருக்கர் முதலிய மஹரிஷி களுங்கூடி அவ்வேதங்களின் பொருணிலை தெரியாது உள்ளமு முகமும்புலர் ந்தனராகி யிருக்க அப்போது இருண்ட மும்மலவலியை வென்றவராகிய அரபதத்தினென்னும் ஒரு மஹரிஷி வந்தார் அப்படி வந்தமஹரிஷியை அங் கிருந்த மஹரிஷிகள் எதிர்கொண்டு வணங்கி வேறே யாசனங் கொடுத்து உபசரித்த காலையில் அம்மறையவர் முனிவர்களை நோக்கி நீங்கள் பந்தவேத னைபும் விருப்பும் வெறுப்பு நீங்கிய பண்பினை யுடையவ ராயினீர் அப்படிப்



பட்ட நீங்கள் மனம் வேறுபட்டு முகம் வாடியிருக்குஞ் செய்தி யாதென, அதற்கம்முனிவர் மயக்கத்திற்குக் காரணமாகிய மாயையை நீங்கினவனுகிய பரமசிவன் சொல்லிய வேதங்களைப் பயின்று அவற்றின் பொருளைச் சொல் லுகின்ற ஆசாரியன் இன்றி இருளுண்டாகிய மனத்தையுடையேமாக விருக் கின்றேம் ஐயனே, இதற்கென்ன வுபாயமெனக்கேட்ட முனிவரை நோக்கித் தெளிந்த மனத்தையுடைய அரபத்தனென்னு மஹரிஷியானவர் அவ்வேதங் களைச் சொல்லிய சிவபரஞ்சுடரே அருளுருவங்கொண்டு அவற்றின் பொரு ளையு முணர்த்துமன்றி வேறே யென்ன வுபாயமிருக்கின்றது சொல்லுங்க ளென்று சொல்லிச் செய்த தவத்தால் யாதேனும் பொருள் கிட்டுமே யன்றி வேறில்லை அத்தவமும் புண்ணிய தலத்திற் செய்தாலன்றி சித்தியாகாது அப்புண்ணிய தலத்திலும் பரிசுத்தத்தையுடைய சிவதலத்தினில் இயற்றில் பயனைத்தரும் அச்சிவதலங்களிலும் அதிக புண்ணியதலத்திற் செய்யில் செ ய்கின்ற தவம் உடனே பயனைத்தரும்.

அந்தத் தகுதியானதலம் யாதெனில் உலகமும் அகிலமுந் தன்னுட ம்பான வித்தகன் சென்னிப் பன்னிருவிரலின்மேல் விளங்கிய தலம் அதுஜீவ ன்முத்தரால் அளவற்ற வானவர்கள் முனிவர்கள் முயன்று மாதவப்பய ன டைந்து மனதிலுள்ள மாசகன்று வசித்தற்கிடமாமென்று அறநூல் சொல்லி ய மதுரையென்னுநகரில் தெளிந்த ஆகாயத்தினின்று மிறங்கிய ஒப்பற்ற இ ந்திரவிமானத்தி லெழுந்தருளிய பரமசிவத்தினருகில் தென்பக்கத்தில் முளை த்திருக்கின்ற பருத்த வடியினையுடைய கல்லால விருக்ஷத்தி னின்றுநீங்காத முழுமுதலாகிய சிவத்தை வழிபடுகின்ற துறவோர்க்குக் கருணை முகமலர்ந் து அருங்கலையனைத்தையும் தெளிவித்து விளங்காநின்ற அக்கடவுளே உங்கட் குத் தான்சொன்ன வேதத்தின் பொருளை யுணர்த்தும் ஆதலால் அந்நகரத் தில் அக்கடவுளின்றிருமுன்பு அரிபதவமாகிய விரதங்களைச் செய்யுங்களென அக்கடவுளினது அருளைப்போல்வந்த அம்மாதவன்பின் பரிசுத்தத்தையுடை ய பெருமைபொருந்திய அம்முனிவர்களும் அங்கயற்கண்ணிபங்கனுகிய சோ மசுந்தரக் கடவுள் வீற்றிருக்கின்ற மதுரைப்பதியிற் சென்று ஆலயத்துட் புகுந்து பொற்றூமரையில் மூழ்கிக் கரைகடந் துள்ளங் கடந்த அன்பு தங்க ளைத் தள்ள விரைவிற் சென்று எட்டு வெள்ளை யானையினது பிடரியின்மேல் இருந்ததாகிய மேருமலைக் கொப்பான விமானத்தின்மேல் காணப்படுகின்ற கடவுளைக் கண்களாற்கண்டு பேரின்பமாகிய சமுத்திரத்திலும் பூமியின்மீது ம் விழுந்து எழுந்து கைகளைத் தலையின்மீது கூப்பிக் காசாணங்கள் கம்பித் துக் கண்களினின்றும் அருவி நீர்பெருக வதின்மூழ்கி வாய்குழறி பிரமனும் மாலும் இன்னமுந் தேடியறியாத காளகண்டத்தையுடைய வெள்ளியம்பல த்தில் திருநடனஞ் செய்கின்ற தேவநாயகனே தேவர்கள் பிழைக்கும்பொரு ட்டு விடத்தையுண்டு அமுதத்தை யவர்க்கருளிய உத்தமனே போற்றியென் றேத்தி வேதத்தின் பொருளறியா துள்ள மயக்க மடைந்து வாடுகின்றவெம க்கு நீயே அந்தநிறைபொருளாகி நின்றனை அதற்கு நீயல்லாற் பொருள்வே று யாது என்று இறைவனையும் இறைவன் பங்கிலிருக்கின்ற இறைவியையும் மும்முறையாக வேத்தி முறையாகவலஞ்செய்து கல்லாலினீழலிலமர்ந்தமூர்

த்திமுன் முனிவர்கள்வந்து குளிர்ந்த பளிங்கையொத்த திருமேனியும் பளிங்கு மலையிற்பதித்த பவளத்தையொத்த திருவடியும் சிவந்த மலர்போன்ற வாயும் முக்கண்ணும் தாமரை மலர்போன்ற நான்கு திருக்கரங்களும் வேத புத்தகமும் அமுதகும்பமும் உருத்திராக்ஷவடமும் மெய்ஞ்ஞான்போத முத்திரையும் தரித்திருக்கின்ற ஞானபோதன்முன் வணங்கி யெழுந்து துதித்து வடநிழலமர்ந்த மறை முதல்வனது ஞானத்தைத்தருகின்ற மதுவெழுத்தாகிய இருபத்திரண்டுந் திடமாக அரபத்தனல் தெளிந்து காத்திகைமாதமுதல் மார்கழிமாதம்வரையில் தருப்பணம் ஓமம் பார்ப்பனவுண்டி இவைகளை முப்போதுஞ்செய்து அடைவாகவுண்டு நோற்குமாதவர் முன்கல்லாலி னீழலில் மோனவடிவமாகிய முதற்குரவன் குற்றமில்லாத மூப்பத்திரண்டவயவ விலக்கணத்தோடு பதிஞ்றுவயதான காளைப்பருவத்தையுடைய மறையோனுகி நீண்டதிரிபுண்டரம் நெற்றியிலுள்ள அக்கினிக்கண்ணை மறைக்கக்காணுகின்ற தகையினையுடைய கண்டிகை சூழ்ந்து தொங்குகின்ற காதில் அணிந்த குண்டலம் கௌவப்பட்டு பொன்னுலும் பலமணிகளாலு மியற்றிய ஆபரணங்கள் ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற உதயசூரியனைக்கண்டு நகைத்து இருளையோட்ட உத்தரீயமாகிய வெண்பட்டு வலப்புறத்திலொதுங்க வெண்மையாகிய முப்புரிநூலிடுதி முத்தமிடையிலேயிட்டுக் கோவைசெய்த உருத்திராக்ஷமணிவடம் வீசுகின்ற வொளியால் அடியார்களை மறைத்த மலபந்தமாகிய விருளையோட்டக் கண்டிகையையணிந்த இருகரங்களும் இரண்டுதோளிலும் தரித்த மாலையானது விடத்தையுடைய வொளிபொருந்திய அரவாபரணத்தைப்பழிக்க வெள்ளியவஸ்திரத்தாலாகிய கோவண மடித்துக் கட்டிய தண்டில் அரியபட்டிகை சுற்றப்பட்டு ஒளிமிக வண்டுகள் பண்ணைப் பாடுவனபோல் பாதமாகிய மலரின்மீது அசையாநின்ற சிலம்புகள் சத்திக்க அடியார்களுடைய உள்ளத்திலுள்ள மாசாகிய விருளைக் கெடுத்து அவர்கள் முடியில் சூட்டப் படுகின்ற தாமரைபோன்ற அடியின் புறத்தில் வெற்றிபொருந்திய வீரகண்டாமணி யொலிக்க குற்றமற்ற பவுத்திரம் வலதுகையிற் பிரகாசிக்க ஞானநூலை யெழுதிய புத்தகம் இடக்கையிலிருந்து அழகு செய்ய ஓதியுணராமலறிந்து ஓலமிடுகின்ற வேதம் பாதுகைகளாகி இரண்டு பாதங்களாகிய மலர்களைத் தாங்க தேனையுடைய தாமரைக்குள் சுத்தியா நின்ற வண்டுகளின் ஓசைபோல நாவு மிதழும் புடைபெயர்ந்துள் எழாநின்ற வேதவொலி அடியார்களுடைய திருச்செவிகளாகிய வழியே சென்று உள்ளமாகிய வயலிலே புகுந்து உவகையாகிய பயிரை வளர்க்க குளிர்ச்சிபொருந்திய முத்தையொத்த பற்களையுடைய திருவாய் சிறிதரும்ப பெரியதவத்தையுடைய முனிவர்கள் காணும்படி வெளியேவந்து நாதமுடிவாகி அளவில்லாத நான்குவேதங்களின் முடிவாகிய ஞானஸ்வரூபனுய் எங்கும் பூரணமாக நிறைந்திருக்கின்ற புராணன்நின்றனன்.

வட்டமாகிய வெள்ளிய சந்திரனைக்கண்டு ஆரவாரிக்கின்ற சமுத்திரத்தைப்போல மாட்சிமைபொருந்திய சிட்டராகிய முனிவர்கள் காளைப்பருவத்தையுடைய தேசிக வுருவத்தை நோக்கி நீங்காத சந்தோஷ மேற்கொண்டு எமனைக் கோபித்த தாமரை மலர்போன்ற திருவடியைத் தங்கள் முடிக்கு

அழகிய மலராகக்கொண்டு சேவித்து அளவற்ற கலிகட் கெல்லா முறை வி டமாகிப் பேதங்களின் விளைபொருளாகி நின்ற வேதியனே சரணம் என்று துதித்து வணங்கிய அன்புபொருந்திய மனத்தையுடைய முனிவரைத் தேசி கனுகிய கடவுள் நோக்கிச் செய்தற்கரிய தவத்தை யுடையீர் உங்கள் விருப் பம் யாதென்று கேட்க, அவர்கள்வணங்கி அடியமோம் பிழைக்கும்படியாயும் உலகமெல்லாம் காக்கும்படியாயும் அளவில்லாத வரத்தைத் தருகின்ற வேத த்திற்குப் பொருளருளிச் செய்யவேண்டுமென்ன கொடியபாசங்களை நீக்கு கின்றவனுகிய ஆசாரியன் அம்முனிவரோடு அழிவில்லாத விளிங்கத்தின்முன் போய் வேதத்தின் பொருளைச் சொல்லத்தொடங்கி முனிவர்களே! நீங்கள் கேளுங்கள் மிகுதியான அறிய வேதப்பொருள்களெல்லாம் இரகசியமா கும் இந்த வேதப் பொருளை யறிதலே கெடாத போகப்பயனுக்கும் வரு த்துகின்ற பாசமாகிய பந்தத்தை நீக்குகின்ற வீட்டின் பயனுக்கும் கருவி யாகும் உத்தமமாகிய சுயம்புலிங்கங்களுக்குள் உத்தமமான தகுதியையுடை யதாகிமேலாகியதத்துவமாகும்இந்தச்சுந்தரசுயம்புலிங்கமானது அழிவில்லா ததாய்வேதங்களுக்கெல்லாநிதானமானபொருளையுடையதாய் உண்மையான தாய்ப் பரிசுத்தமாயிரண்டற்றதாகியசுயம்பிரகாசமாகும். அன்றியும் சாஸ்தி ரங்களைக்கற்றுணர்ந்த நல்லோர் நிறைபாபமென்றும் விஞ்ஞானமென்றும் நிராமயமென்றும்நூல்களாற்சொல்லப்படுகின்ற பரப்பிரமமாகும் இந்தப் பிர மசுநினுருவமேனகமாகும்வேதமானதுஇதனதுபொருளாகும். இந்தச்சந்திர வடிவாய் இவ்விடதத்துறைகின்ற சிவலிங்கமொன்றே யென்பார் ஆகையால் வேதமுமொன்றே அரிய வவ்வேதப்பொருளு மொன்றே ஆதலால் சாகையால் அது அநந்தமாகித் தழைத்தன சாகையெல்லாம் உவகையால்இவனேயேதுதி க்கும் உலகசிருட்டியாதிதொழில் நடத்தற்காக இந்த ஏகனுகிய பரப்பிரமத் தின் ஆஞ்ஞையால் பிரமன்முதலிய மூன்றுமூர்த்தியாகவிருந்தது அதுபிரம னுகி மூன்றுலோகத்தையும் படைத்த திருமாலாகி அவற்றை யளவில்லாமல் நிலைபெறச்செய்து முக்கணுதியாதி அவற்றையழித்து அம்மூவருக்குந்தலைவ னுகி மேலான ஆகாசசரீரிபாய் முதலுமீறுமின்றிஅழிவில்லாதசோதியாகிய இந்தச்சுந்தரவிலிங்கத்தினின்றும் முதலில் ஆத்மதத்துவமான பிரமன் பாக மும் நடுவில் விச்சாதத்துவமான விண்டுவின்பாகமும் முடிவில் சிவதத்துவ மான உருத்திரன்பாகமும்உதிக்கும் பேதப்பட்ட இம்மூன்றில் அளவில்லாத தத்துவங்களெல்லாம் உதிக்கும் இம்மூன்றினும் முறையாகச் சொல்லுதற்க ரிய அகாரமும் உகாரமும் மகாரமும் ஆகியப்பிரணவம் உதித்திடும் இப்படி க்குவிந்துநாதத்தோடு உதிக்காநின்றவிசாலமாகியபிரணவத்தினின்றும்மூன் றுபேதமாகிய பதத்தால் காயத்திரிபறக்கும் இந்தகாயத்திரி இரண்டு பேத மாகும் அந்தப்பேதம்யாதெனில், சமட்டி வியட்டியென்று இரண்டாம் இவ் விரண்டும் இச்சித்தவைக்கெல்லாம் காரணமாகும் இத்தன்மையவாகியஇவை யிரண்டும் இவனுடைய அருள்வலியால் நான்குவேதங்களையுமீன்றன. அந்த நான்கும்பின்னிவனது அருளிலால் அளவில்லாதனவாயின பிரணவாதி மந்தி ரங்களும் அவ்வாறுண்டாயின. அப்பிரணவ மந்திரத்தினின்றும் அகாரமுத லிய அக்காரங்களு முதித்தன சொன்ன அவ்வக்காரத்தினின்றும் சிவாகமநூ

லாகிய இருபத்தெட்டாகமங்களும் இந்தச் சிவலிங்கத்தின் நடுமுகமாகிய ஈசானியமுகத்தி னின்றும் உதித்தன கீழ்த்திசைமுகத்தில் இருக்கும்வேத மானது இருபத்தொருகிளையாகத்தோன்றிற்று தென்பான்முகத்தினின்றும் இரண்டாம்வேதமாகிய தைத்திரியமானது நூறுகிளையோடு மெழுந்தது கீழ்த்திசைமுகத்தின்சாமவேதமானது ஆயிரமுகத்தாலுதித்தது. வடதிசைமுகத்தில் நான்காமறையாகிய அதர்வணமானது ஒன்பதுருவோடுதோன்றிநடந்தது அரியவேதம் நால்வகையாதலால் வருணங்களும்ஆச்சிரமங்களும்நான்குவகையாம் அவ்வேதத்தின்றகைமையால் தருமகாண்டமும் யாகாதி கருமகாண்டமும் தோன்றின அந்தமறையும் கருமநூலென்றும் ஞானநூலென்றும் இரண்டுவகையாம் கருமநூலானது இவனது அருச்சனைக்கு வேண்டிய காரியங்களையுணர்த்தும் ஞானநூலானது இவனதுருவில்லா வுருவத்தையுணர்த்தும் மரத்தினது வேருண்டநீரால்சினைதளித்தாற்போல இம்முழுமுதலாகிய பரமசிவனுக்கு உண்பிக்கின்ற அமுது இவணுருவமாகிய தேவர்களுக்கும் பிறருக்குந்திருப்தியாகும் பரமனுகிய இவனதுமுகத்தில் நித்தியநைமித்திகம் பிராயச்சித்தம் ஆகிய முத்தொழில்களுக்கும் உலகத்தார் விரும்பிய போகத்தையும்கதியையும்பெறும்படி இயற்றுகின்ற சிவார்ச்சனையாகிய வினைக்கும் காரணமாகவிருக்கின்றது இச்சிவலிங்கம் வேதம் பலமுகங்களைக்கொண்டு அலறிவாயிளைத்துமயங்க வேறுபட்ட அகண்டபூரணமாய் நிறைந்திருக்கின்ற பரப்பிரமமாகும் இச்சிவலிங்கத்தை நல்லகருமநெறி வழாதுசெய்கின்ற பூசைமுறையினும் ஞானநெறியால் இப்பொருளை அருளினல் முயக்கற முயங்கும் அறிவினும் தெளியத்தக்கது உங்களுக்கு நாமுரைத்த அரியவேதப்பொருள்பிறராலரிதற்கரிதாகும் கருமத்தால் ஞானமுண்டாகும் அக்கருமத்தைச் சித்தசுத்திதரும் அதனுலேநீங்கியிருந்த சித்தசுத்தியைத்தருமநல்கும் அரிய அத்தருமத்தாலே சாந்தியுண்டாகும் மாட்சிமைபொருந்திய அச்சாந்தியாலே அட்டாங்கயோகம் பிறக்கும் கிரியையாலும் ஞானத்தினுலும்-சிவபக்தி-சிவபூசை-சிவதரிசனம்-சிவலிங்கதாபனம்செய்யில் பரமசிவனுக்குரிய அடியவர்பூசை உருத்திர சின்னத்தைத் தாங்குதல் அரிய தேசிகனிடத்துப் பக்தி இவைமுதலியயாவுந் தெரியலாகும் இம்மறைவழியால் வந்த மதங்களுக்கெல்லாம் வேதம் பிரமாணமாகும் அதன்வழியாகச்சென்றுசொல்லாநின்ற தருமசாஸ்திரங்களெல்லாம் அவைகளுக்கு அனுகுணமாகும் இத்தன்மையாகிய முறையினுல் ஸ்மார்த்தமென்று சொல்லப்படுவது அந்தஸ்மார்த்தஞ்சேர்ந்த துறைகள் வைதிகமென்று சொல்லப்படும் இந்தச் சுத்தமார்க்கத்தையே மேலாகச்சொல்லுவது தெளிவைப் பெறுகின்ற போகத்திற்கும் வீட்டிற்குங்காரணமாகிச் சிவமயமாகின்ற வேதப்பொருளை மயக்கமற வுங்களுக்குச்சொன்னேன் இந்தப்பொருளுக்குமேல்வேறுபொருளில்லை இப்பொழுது நாம் உமக்குச்சொல்லிய இந்தப் பொருள்களெல்லாம் மயக்கமறத் தெளியக்கடவீர்களென்று பத்திவழிதவறுத மாதரது முதுகைக்கிருபையோடு தன்கையாற் றடவிக் கிருபைமுதிர்ந்து வந்தாற்போல்வந்த தேசிகனவன் இலிங்கத்துட்புகுந்து மறைந்தனன்.

வேதத்துக்குப் பொருளருளிச்செப்தபடலம் முற்றிற்று.



உ

சிவமயம்.

பதினேழாவது

மாணிக்கம்விற்ற படலம்.

கலிநிலைத்துறை

சுகந்தவார்பொழின்மதுரைபெம்பிரான்றனதுணைத்தா
ளுகந்தவாவறுகண்ணுவமுனிமுதலோது
மகந்தவாதபோரன்பருக்கருமறைப்பொருளைப்
பகர்ந்தவாறிதுமாணிக்கம்பகர்ந்தவாபகர்வாம்.

இதன்பொருள்.

நல்லவாசனைபொருந்திய சோலைசூழ்ந்தமதுரையிலெழுந்தருளியசோ
மசுந்தரக்கடவுளின் இரண்டு திருவடிகளையும் விரும்பி ஆசைபொழிந்த கண்
ணுவர் முதலாகிய பேரன்பினையுடைய முனிவர்களுக்கு அரியவேதத்தின்
பொருளையுணர்த்திய திருவிளையாடலிதுவாகும் இனி மாணிக்கம்விற்ற திரு
விளையாடலைச் சொல்லுகின்றோம்.

அக்காலத்தில் வீரபாண்டியனுக்கு போகஸ்திரீகள் பெற்ற பிள்ளை
கள் மன்மதனைப் போலவும் நெல்லுப்பயிருக்குக் களைபோலவும் வளர்ந்தார்
கள் இப்படியிவர்கள் வளரப்பின்னும் வீரபாண்டியன் பட்டத்துக்குத்தகுந்த
பிள்ளை வேண்டுமென்று தானும் தன்குலபத்தினியும் அங்கயற்கண்ணி மணி
ளைகிய சோமசுந்தரக் கடவுளைக்குறித்து அஷ்டமி, சதுர்த்தசி சோமவார
முதலான விரதங்களை அனுஷ்டிக்க, அப்போது சோமசுந்தரக் கடவுளின்
திருவருளாலே சிறிதுகாலத்துக்குப்பின் அருந்ததிபோலும் கற்புள்ளதேவி
வயற்றிலே ஆலம்வித்தின்முளைபோல உலகமெல்லாம் ஒருகுடைநீழலிலாளு
ம்படி ஒருபுத்திரன்பிறக்க அந்தபிள்ளைக்கு மிகுந்தசந்தோஷத்துடனே சா
ஸ்திரப்படி ஜாதகர்மமுதலானை சடங்குகளெல்லாமுடித்து அந்தப்பிள்ளை வ
ளருங்காலத்தில் வீரபாண்டியன் வேட்டையாடப்போய் விதிவசத்தாலே பு
லியால்கொல்லப்பட்டுச் சுவர்க்கலோகத்தைபடைய அந்தச்சமாசாரம் மது
ரையிலுள்ள பெண்டுகளெல்லாருங்கேட்டுக் கையால் மார்பிலடித்துக்கொண்
டுகொங்கையிலணிந்த சந்தனமழிய கண்களில் முத்துமுத்தாய்நீரொழுக அ
ழுதுபிரலாபிக்கிற சமயத்தில் இறந்த அரசனுடைய போகப்பெண்கள்பெற்
றபிள்ளைகளானவர்கள் இதுதான் சமயமென்று யானை குதிரைமுதலான ஆ
பரணங்களையும், திரவியங்களையும் ராஜமுடியையும் களவுசெய்து மந்திரிப்பிர
தானிகளுக்குத் தெரியாமல் ஓடி ஒளித்துக்கொண்டார்கள்.

பின்பு வீரபாண்டியன் உத்திரவின்படி நடந்துவந்த மந்திரிமுதலான
வர்கள் குலபத்தினி குமாரனைக்கொண்டு இறந்த அரசனுக்குச் செய்ய வேண்
டிய கருமங்களெல்லா முடித்துப் பின்பு அந்தப் பிள்ளைக்குப் பட்டங்கட்ட

எண்ணங்கொண்டு பொக்கிஷசாலையிற் புகுந்து நவரத்தினகிரீடத்தைத் தேடிக்காணுமல் திரவியங்கள் முதலிய சில பொருள்களையும் காணுமல் திகைத்துவாடி மதிவியாதியால் வருந்தி கிரீடமுதலிய பொருள்களை மாற்றுராகிய புத்திரர்கள் கொள்ளையடித்துக்கொண்டு போனர்களென்று தெரிந்துவேறே கிரீடம் செய்யலாமென்றால் விலை அதிகப்படுமென்றும் உயர்ந்தரத்தினங்கள் கிடைக்காதென்றும் அரசனில்லாமல் கடல் சூழ்ந்த உலகமெல்லாம் வருந்துமென்றும் இதற்குநாம் என்னசெய்வதென்று மாலோசித்துப் பின்னும்சோமசுந்தரக்கடவுள் செய்கையெப்படி முடியுமோ பார்ப்போமென்று மந்திரிகள் அளவில்லாத கவலைகொண்டு மிகவுஞ் சிறியவனை ராஜகுமாரனைக்கூட்டிக்கொண்டு அரண்மனையைவிட்டு மஹாமேருபோன்ற கோபுரவாசலுக்கு முன்னே வரும்போது அவர்களுக்கெதிரே சரிகைச் சோமனுகிய கோவணவுடை விசாலித்து விளங்கவும்பலவிரத்தின மூட்டைதோளிற்றூங்கவும், அளவில்லாத விலைபெற்ற தோள் வளையங்கள் பளபளென்று மின்னவும், முப்புரிநூல் வலம்படவிளங்கவும், இந்திரவில்லைப்போல நவரத்தின மாலைமார்பில் விளங்கவும் அழகான ரத்ன குண்டலங்கள் தோள்மேல் அசைந்தாடவும், வேதங்கள் மகிழுகின்ற பாதங்கள் பூமியிற்படவும், பாண்டியர்களுக்குக்குலதெய்வமாய் அவர்கள் துன்பத்தை நீக்குதற்குச் சௌந்தரபாண்டியனுபசாண்ட சோமசுந்தரக்கடவுள் ஒருவர்த்தக வேடங்கொண்டுவந்து எதிரேவருகிறவர்களைக்கண்டு நீங்கள் என்னகாரணத்திலே வியாகூலசிந்தையாய் வருகிறீர்களென்றுகேட்க, அந்த மந்திரிகள் முன்னே நடந்த சங்கதிகளைச் சொல்லக்கேட்டு வர்த்தகராய் வந்தகடவுள்நீங்கள் என்விசனப்படுகிறீர்கள் என்னிடத்தில் ஒன்பதுவகை ரத்தினங்களுமிருக்கின்றன. அவைகள் பதிணுபிரங்கோடிபொன்விலை பெற்றதென்று அவைகளை வகை வகையாகக் காட்டுதற்குக்கிழக்குமுகமாயிருந்து நீலவஸ்திரத்தைவிரித்து நடுவிலும் கிழக்குமுதல் எட்டுத்திக்கிலும் முத்து முதலாகிய ரத்தினங்களைக் கொட்டி இந்தரத்தினங்கள் வலாசுரனுடைய தேகசின்னங்க ளென்றுசொல்ல மந்திரிகள் அந்த வலாசுரனென்பவன்யார்? அவனுடையதேகம் ரத்தினங்களானவிதம் எப்படிசொல்லுமென்றுகேட்க, அந்தவலவனென்பவன் முன்னாளிலே மூன்று மூர்த்தியும் தாணுகவிளங்குகிற முக்கண்மூர்த்தியாகிய பரமசிவனுடைய பாதகமலங்களைப் பூசைசெய்த தவத்திணலே கடவுள் பிரசன்னமாய் எழுந்தருளி உனக்கு என்ன வேணுமென்று கேட்க, அதற்கு வலாசுரன் தாழ்ந்து வணங்கி ஸ்வாமி! நான் யுத்தத்திலே யாராலும்சாகாதவரமும் அல்லது விதிவலியால் நானிறந்தால் எனது தேகம் பற்றற யோகிகளும் விரும்பத்தக்கரத்தினங்களாகவும் திருமைபெய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க, அப்படியே கடவுளருள்செய்ய வரம்பெற்ற வலாசுரன் இந்திரனிடத்திற்சென்று சண்டைக்கழைக்க அவனுஞ்சம்மதித்து இருவருஞ் சண்டைசெய்தபோது இந்திரன்வலனுடனே சண்டைசெய்யமாட்டாமல் தோற்று ஓடிப்போய் இந்தவலவன் சாகாவரம்பெற்றவ ணுகையால் நம்மால் எக்காலத்திலும் வெல்லப்படான் இவனை உபாயத்திணலேவெல்லவேணுமென்று ஆயுதங்களில்லாமல்தேவர்களுடனே கூடிச்சென்று அசுரசிங்கமாகிய வலவனைக்கண்டு நடுங்கி அசுரோந்திரா! உன்

னுடைபதிஜபகீர்த்தி எல்லா லோகங்களும் விளங்குகின்றதிறலே உன்னிடத்தில் அதிகசந்தோஷமுண்டாயிற்று அதனாலே உனக்குவேண்டியவரத்தைக்கேள், நான்தருகிறேனென்ன வலாசுரன்கேட்டு கைகளைக்கொட்டி மேகத்தினிடிபோல நகைத்து இந்திரா! நல்லவார்த்தைசொன்னப் எல்லாருஞ் சிரிக்க நீ என்னை முதுகு கொடுத்தோடச்செய்த ஜெயமும் அதனாலுண்டாகிய கீர்த்தியும் உன்பெருமையும் இப்போது நீசெய்தயுத்தத்தில் வெளியாயின, உன்னுடைய கீர்த்தி எங்கும்பிரசித்தப்பட்டன. இதைப்போலவே நீ கொடுக்கிற வரமும் நிலைநிற்குமல்லவா ஆதலால் எனக்குக் கடவுள்கொடுத்த நல்லவரமிருக்க உன்னிடத்தில் நான்பெறத்தக்கதுமுண்டோ? இனி உனக்குவேண்டிய வரத்தைக்கேள் கொடுக்கிறேன், அப்படிநான் கொடாவிட்டால் உன்னைப்போல் சண்டையில்முதுகிட்டோடின அவகீர்த்தியை அடைவேனென்றான். அப்படிச்சொல்லக்கேட்ட இந்திரன் அசுரேந்திரனுகிய வலனே! பரமசிவனுடைய வெள்ளிமலைச்சார்பில் ஒருயாகம்செய்யப்போகின்றேன் நீ அந்தயாகத்துக்குப் பசுவாய் வரவேண்டுமென்றான். அதுகேட்ட வலாசுரன் முன்னே ததீசிமஹாமுனி உனக்குக்கொடுத்தமுதுகெலும்பாகிய வச்சிராயுதத்தினாலே பெற்ற புகழுடம்புபோல் என்னுடம்பெலாம் நல்லரத்தினங்களாகச்சாகின்ற கொடையினாலும், அழியாதவீரத்தினாலும், புகழுடம்பு இரண்டுண்டாகுமல்லவா! ஆகையால் நீ எனக்குப்பகைவனல்லை நண்பனானைப் நீசெய்யும் வேள்வி புணைவைத்தேதவர்களெல்லாருஞ் உண்பதினாலேதருமமும் புகழும் எனக்குண்டாக யாகப்பசுவாக வேண்டுமென்கிறாய், அப்படியே யாகப்பசுவாவேன், கொடுப்பதே பெருமை, வாங்குதல் சிறுமையல்லவோ வென்றும் சம்மதித்து வலாசுரன் இந்திரனை முன்போகச்சொல்லிப்பின்புதன்குமாரனுக்குத்தன் அரசாட்சியைக்கொடுத்து வேதசாஸ்திரப்படியாகப் பசுவாய் இந்திரன்செய்கிற யாகசாலையினிடத்தில் வந்துநின்றான். அதுகண்டு இந்திரன் சொன்னபடி நடக்கவும் கொடுக்கவும் உன்னைப்போல் தாதா உண்டோவென்று கொண்டாட வலாசுரன் பின்னும் அதிகமானகளிப்புக்கொண்டு மேருமலையுடனே எதிர்த்த விந்தமலைபோல் உயர்ந்து என்னைவேள்விக்கம்பத்தோடே கட்டுங்களென்றுகிட்டிநின்றான். அப்போது அவனைத் தருப்பைக்கயிற்றால் சிலந்திநூலாலே சிங்கத்தைக்கட்டிறற்போல யூபத்திற்கட்டி வாயை மூடி மூச்சடங்கக்கொன்று மடித்தார்கள். மடிந்தவலனுகிய வள்ளல் தேவர் புஷ்பமாரி பொழிய விவானத்தின் மேலேறிப் பிரமலோகஞ் சேர்ந்தான்.

பின்பு இந்திரன்வேதஞ்சொன்னபடியே அந்தப்பசுவினுடைய வயை எடுத்து அக்கினியில் ஆகுதிசெய்து தேவர்களையும் உண்ணச் செய்து யாகத்தைமுடித்தான். அந்தப்பசுவினுடைய இரத்தமெல்லாம் மாணிக்கங்களாகவும், பல்லெல்லாம் முத்துக்களாகவும், மயிரெல்லாம் வைடூரிய மாகவும், எலும்பெல்லாம் வயிரமாகவும், பித்தம்பச்சைபாகவும், நிணம் கோமேதகமாகவும், தசை பவளமாகவும், கண்கள் நீலமாகவும், கபம் புஷ்பராகமாகவும் இப்படி நவரத்தினங்களுண்டாயின இந்த ஒன்பதுவகை ரத்தினங்களும்சேர்ந்த இடங்களும், நிறங்களும், சாதிகளும்தெய்வங்களும், ஒளிகளு

ம், குற்றங்களும், நன்முய்ச்சோதித்துத் தேகத்தில் அணிந்துகொள்ளுகிறவர்கள் பெறும்பயனையும் கிரமமாகச் சொல்லக்கேளுங்கள்.

கிரேதாயுகத்தில்மக்கதேசத்திலும், திரேதாயுகத்தில்காளபுரத்திலும், துவாபரயுகத்தில் தும்புரத்திலும், கலியுகத்தில் சிங்களதேசத்திலும், மாணிக்கங்களிருந்தன. அந்தமாணிக்கமென்கிற பதுமராகம் ஒன்பதுவகை நிறம். அவையாவன தாமரைப்பூ, மாதுளம்பூ, மாதுளவிரை, நெருப்பு, செங்கழுநீர், மின்மினி, நாரத்தம்பழம், விளக்கு, இந்திரகோபம், இந்த நிறங்களை பொதுவாகவுடைய மாணிக்கம் பிராமணஜாதி சாதசங்கம் கூடித்நியஜாதி, குருவிந்தம் வைசிய ஜாதி, சௌகந்திகம் சூத்திரசாதி, காவாங்கம் என்றுசொல்லப்படும் சாதாரங்கத்துக்கு நிறம் பத்துவகை. அவையாவன தாமரைப்பூ, கருநெய்தற்பூ, சூரியகிரணி, நெருப்பு, மின்மினி, மாதுளம்பூ, மாதுளவிரை, மேகம், விளக்கு, இந்திரகோபம், குருவிந்தத்துக்கு நிறம்எட்டுவகை, அவையாவன, குன்றிமணி, முபவிரத்தம், விளாம்பூ, பலாசப்பூ, மஞ்சாடிபூ, செவ்வரத்தம்பூ, முள்ளிலவம்பூ, எரிதொன், சௌகந்திகத்துக்கு நிறம் ஆறுவகை. அவையாவன இலவம்பூ, குயிலின்கண், அசோகின்றளிர், அவிர்தொன், செம்பஞ்சு, ஐவண்ணப்பூ, காலாங்கத்துக்குநிறம் நால்வகை அவையாவன, குரவம்பூ, குசும்பைப்பூ, செங்கல், கொவ்வைக்கனி, இவ்வகைநிறங்களையுடைய பதுமராகத்தைப் பொதுவாகச் சோதிக்குமிடத்தில் கெட்டியாய் மேலேகாந்திலல் உத்தமம், கீழேகாந்திலல் மத்திமம், சுற்றுப்பக்கத்தில் காந்திலல் அதமம் என்பார்கள், சாதாரங்கத்தை அணிந்தவர்கள் வித்தியாதானம் கோதானம், கன்னிகாதானம், அன்னதானமுதலான நல்லதானங்களைச்செய்த பலனும், அசுவமேதமுதலிய யாகங்கள்செய்தபலனும் பெறுவார்கள். குருவிந்தத்தை யணிந்தவர்கள் உலகமுழுதும் ஒருகுடைநிழலிலாண்டு வீரலட்சுமியுடனேகூடிவாழ்வார்கள். சௌகந்திமத்தையணிந்தவர்கள் செல்வம்கீர்த்திகளைப்பெறுவார்கள் காவாங்கத்தையணிந்தவர்கள்வீட்டில்பாலும், மலைபோல நெற்குவியல் முதலான பலபண்டங்களும் ஐஸ்வரிய மிகுதியும்பெற்று வாழ்வார்கள். இகழத்தக்க குற்றங்களெல்லாம் போக்கிக் குணங்களெல்லாங்கொண்டு விளங்குகின்ற பதுமராகத்தை அணிந்தவர்களிடத்தில் முத்துமுதலிய பல ரத்தினங்களும்வந்து பெருகும் லட்சுமியும் நல்ல செல்வமும் பாற்கடல்போலே பெருகும், வேறு நிறச்சார்பு, புள்ளி, புள்ளடி, கீற்று, தராசம் என்கிற ஐவகைக் குற்றங்களையும் போக்கி நல்ல குணங்களையுடைய ரத்தினத்தை அணியுமரசன் பகைவரைவென்று விஜயலட்சுமிக்கும் நேசனுவான். இன்னும் கொஞ்சதேசத்தையுடையவனுலும் அவன்குடைநிழலி லொதுங்கிச் சகல பிராணிகளும் வாழும். அவனைப்பாம்பு தஷ்டமிருகங்கள், பசாசு, பூதம், தாமத தெய்வங்கள், தரித்திரம், வியாதி, பாபக்கிரகங்கள், யமவாதை முதலிய உபத்திரவங்கள் சேரா வாம். இன்னமும் கற்றோர்கள் வயிரத்தையும், முத்தையும் பிராமணஜாதியென்றும், பவளத்தையும், மாணிக்கத்தையும், சூத்திரிய ஜாதியென்றும், புஷ்பராகத்தையும் வைடூரியத்தையும் கோமேதகத்தையும் வைசியஜாதியென்றும், நீலத்தையும்மரகதத்தையும்சூத்திரஜாதியென்றுஞ் சொல்லுவார்கள்.

இன்னும் முத்தையும் வயிரத்தையும் பச்சையையும் சாத்துவிதகுண மென்றும், பவளத்தையும் மாணிக்கத்தையும் கோமேதகத்தையும் இராஜத குணமென்றும், நீலத்தைத் தாமதகுணமென்றுஞ்சொல்லுவார்கள் இப்படிப் பட்ட ரத்தினங்களை அளந்து கண்டு மதிக்குங்காலமாவன, ஞாயிற்றுக்கிழ மையில் பதுமராகமும, திங்கட்கிழமையிலமுததும், செவ்வாயில்பவளமும், புதனில்பச்சையும், வியாழனில்புஷ்பராகமும், வெள்ளியில் வயிரமும, சனி யில் நீலமும் மதிக்கவேண்டு மென்பார்கள். ஞாயிறில் கோமேதகமும், திங்க ளில் வைடூரியமும் மதிக்கலாம். இரதநவரத்தினங்களை விலை மதிக்கிறவர்கள் உள்ளும்புறம்பும் பரிசுத்தராய் நல்லநடக்கையை யுடையரா யிருக்க வேண் டும். தாமரைப்பூ, சாதிப்பூ, செவ்வாம்பற்பூ, கோடற்பூ, கொடிமல்லிகைப்பூ, நாற்றிதழ்த்தாமரைப்பூ, செங்கழுநீர்பபூ, கொக்கிறகம்பூ, மந்தாரபபூவென்கி றஒன்பதுவகைமலர்களையும் வண்டுகள் மொய்ககத் தன்முடிமேலேசூடிப்பூமி யைமெழுகி ஆசனமிட்டு நல்லவஸ்திரத்தைவிரித்து மாணிக்கத்தை நடுவிலே வைத்து முத்து முதலிய எட்டுரத்தினங்களையும் கிழக்குத்திசைமுதல் எட் டுத்திசையும் வலமாக வரிசையாய்ச் சூரியமண்டலகிருதியாய் வைத்துப பது மராகமுதலிய ரத்தினங்க ளொன்பதையும், சூரியன் முதலான ஒன்பது கிர கங்களையும், முன்னேசொன்ன தாமரைமுதலிய மலர்களாலே அருச்சனைசெ ய்து சாஸ்திரவிதிப்படிவழுவாமற்பூசைசெய்யவேண்டும். இனி முத்து தலச மென்றும் சலசமென்றும் இருவகையாய்ச் சங்கு, மேகம், மூங்கில், பாம்புத் தலை, பன்றிக்கொம்பு, வெண்ணல், இப்பி, மீன்றலை, கரும்பு, யானைக்கொம்பு இந்தப் பத்திடங்களிலும் பிறக்கும். ஐவாய் மான்கை, பதிவிரதைகள் கழு த்து, கொக்குத்தலை இந்த மூன்றிடங்களிலும் பிறக்கிற முத்துகள் அருமை யாயிருக்கும் யானைக்கொம்பின் முத்து மாடப்புறுவின் முட்டைப்போலத் திரண்டு வெண்மைபாயிருக்கும். மேகத்தின்முத்து இளஞ்சூரிய னிறமாயிரு க்கும். மூங்கில்முத்து மழைத்துளினிறமாயிருக்கும். பாம்பின்முத்துநீலநிற மாயிருக்கும். பன்றிக்கொம்பின்முத்து இரத்தநிறமாயிருக்கும். நெல்லின்மு த்து பச்சையாயிருக்கும் மீன்முத்து பாதிரிப்பூ நிறமாயிருக்கும். கரும்பின் முத்துபொன்னிறமாயிருக்கும்மூங்கின்முத்தும் அப்படியிருப்பதுண்டு. வரு ணன்முத்து பால்நிறமாயிருக்கும். சூரியன்முத்து அவனிறமாயிருக்கும். விஷ் ணுவின் முத்து நீலநிறமா யிருக்கும். வாயுவின்முத்து ரத்தநிறமாயிருக்கும் யமன்முத்து பச்சைநிறமாயிருக்கும். இந்திரன் முத்து பொன்னிறமா யிருக் கும் நகஷத்திரங்கள்போல் வொளியும்-உருட்சியும்-அழுக்கில்லாமையும் கை யிலெடுத்தால் கெட்டியும் பார்வைக்குநன்றாயிருத்தலும் படிகம்போ லிருத் தலுமாகிய ஆறுகுணங்களுமுள்ள முத்துகளை அணிந்தால் மூதேவியும் தரித் திரமும் விட்டு நீங்கும். லட்சுமியும் செல்வமும் ஆயுசும் பிரபலிக்கும்.

இனி ததீசிமஹாமுனி யெலும்பும், வலாசுரன் எலும்பும், கோசலன்மு தலியநாட்டில் விழுந்துகிடப்பன. குணத்திற் சிறந்தது இலேசாய் தெள்ளி தாய்மதித்தால் விலையதிகமான தாய்மேம்பட்டவயிரத்தைக்குறுநிலமன்னனு மணிந்தால் குறையாத செல்வத்தை யடைந்து பகைவரைவென்று உலகமெ ல்லாம் செங்கோல் செலுத்துவான். தரித்திரம், வியாதி மிருகங்கள் இவைக

ள்சோரா, அற்பாயச, பூதகணங்களால் வருத்தல், இவைகளுஞ்சோரா, ரத்தினங்களுக்கெல்லாம்வயிரத்தைதயே முதற்சாதியென்று கற்றோர்சொல்லுவார்கள். இந்தவயிரம் ரத்தினங்களுக்கெல்லாம் துவாரமிடுதற்குஉசியாய்த்தனக்கும் துவாரமிட உசியாகிறதிலுலே ரத்தினங்களில்வயிரமே அதிகம் இனிவலாசுரனுடைய பித்தந்தைபக்ஷிகள் தமக்கிறையாகக்கவ்விக்கொண்டு பறந்தபோதுழுக்கிலுலேசிதறிவிழுந்தஇடங்களேமரகதத்துக்குப்பிறப்பிடமாகும். இன்னமும் வினதையென்பவள் அருணன்பிறந்த முட்டையோட்டைக் கருடன்ஓரிடத்தில் பத்திரஞ்செய்துவைக்க அந்தஇடந்தப்பி ஓரு கடல்சூழ்ந்த தீவில்விழுந்தது, அதுவிழுந்தஇடமும் மரகதத்துக்குப்பிறப்பிடமாம்விஷ்ணுமோகினிவடிவாய்சந்திரசேகரனுகிய பரசிவனுக்குபின்றுடர மந்தரமலைமட்டும்ஓட பின்னேபோனகடவுள் சிங்கேரூபோலத்தொடர்ந்துசென்று இந்திரியத்தைஓழுகவிட அந்த இந்திரியத்தில்அரியரசுமரன்பிறந்துகாட்டுந்தெய்வங்களோடு கூடிஞன் அந்தவிந்துவை கருடன் கவ்விப்பறந்து கடலிலும் துருக்கநாட்டிலும் பரவவிட்டதிலுலே அதெல்லாம் கருடபச்சையாயின, அந்த கருடபச்சைக்குக் காடம் சுப்பிரம் காளம் என்று மூன்று குணங்களுண்டு. அவற்றில் அறுகம்புல்லி னிறமுள்ளது காடம் அந்தக்காடம் சகுண மென்றும், சதோடமென்றும் இரண்டுவகைப்படும் அவ்விரண்டில் சகுணமானது காடம்-உல்லசிதம்-பேசலம்-பித்தகம்-முத்தம்-பிதுகமென ஆறுவகைப்படும் அவ்வாறில் காடம் புல்லினிறமாயிருக்கும். உல்லசிதம் மெலிதாயிருக்கும் பேசலம் குளச்செங்நெலி னிறமாயிருக்கும். பித்தகம் பச்சைக்கிளிச்சிறகினிறமாயிருக்கும் முத்தம்துளசிநிறமாயிருக்கும் பிதுகம் தாமரையிலையினிறமாயிருக்கும் சதோடமானது தோடலேசாஞ்சிதம்-துட்டம்-தோடமூர்ச்சிதம்-தோடலேசம்-மந்தோடமென் றைந்துவகைப்படும் அவ்வைந்தில் தோடலேசாஞ்சிதம் எலுமிச்சவிலை நிறமாயிருக்கும் துட்டம் அலரியிலை நிறமாயிருக்கும் தோடமூர்ச்சிதம்புல்லினிறமாயிருக்கும் தோடலேசம் தாமரையிலைநிறமாயிருக்கும் மந்தோடம் மயிலிறகினிறமாயிருக்கும். இப்படிப்பட்ட பச்சைரத்தினத்தை அணிவோர்கள் சதுரங்கசேனையுடனே ஆயுசு பெருகிவாழ்வார்கள்.

இனி வலாசுரனுடைய கண்களாகிய நீலம் பரமசிவனுடைய கழுத்திதாளிபோல இந்திரநீலம் மாநீலம் என்றிரண்டுவகைப்படும் இந்த இரண்டில்யிச்சுபரூபனை இந்திரன்கொன்ற காலத்தில் அந்தப் பாவந்தீரச் செய்த அசுவமேதயாகத்தில் உண்டாகிய வாசனைப்புகை அதிகரித்து அந்த அசுவத்தின் இமையாத கண்களில்நுழைந்துகலங்கிச் சேறுபோல வழிந்தொழுகின இடத்தில் உண்டாகியதே இந்திரநீலமாம் சூரியன் மனைவியான சுஞ்சுவியென்பவள் அவனுடைய வெப்பமான வுடலைத் தழுவம்மாட்டாமல் தன்னிழலைத் தானை அவனிடத்திலிறுக்கிக் காட்டிலேசென்று தவஞ்செய்ய அதை மந்திரசக்தியால் சூரியன் றெரிந்து பின்றுடர அவள் பெண்குதிரைவடிவாய்மறைய சூரியன் ஆண்குதிரையாகிக் காமம் பொருமல் இந்திரியத்தை ஓழுகவிட அவ்விந்திரியம் சிந்தினவிடமெல்லாம் உண்டாகிய நீலமே மாநீலமாம், இப்படிப்பட்ட நீலரத்தினத்தை அணிவோர்கள் மனிதர்களாலும் தேவர்

களென்று சொல்லப்படுவார்கள். இப்படிப்பட்ட நீலப்பிவள்ளைக்கலந்திருந் தால் பிராமணஜாதி, சிவப்புக்கலந்திருந்தால் க்ஷத்திரிஜாதி, செம்பொன்னி றம் கலந்திருந்தால் வைசியஜாதி மிகவும் கறுப்பாயிருந்தால் சூத்திரஜாதி யாம். இப்படிவிளங்குகின்ற இந்திரநீலம் உலகந்திலரிது. இந்தநீலம்பாற் குடம்போலப் பரிசுத்தமாய்ப பதினாயிரம்பொன் விலைபெற்றதா யிருக்கும். இதையணிவோர்கள் மங்களமடைந்து வாழ்வார்கள இனிவலாசுரனுடைய நிணங்கள் சிந்தின இடத்தில், உண்டானவைகளைக் கோமேதகம் என்பார்க ள் அது உருக்கியநெய்த்துளி தேன்றுளி தோயலும் இவைகளினிறத்தை ஒப் பாக சிவந்து பசுமபொன்னிறத்தையும் பெற்று மெல்லிபதாப்ப பரிசுத்தமா ய்க் கெட்டியாயிருக்கும் அதை அணிந்தால் அஞ்ஞானமும் பாவமும்போம் பரிசுத்தமுண்டாகும்.


இனி அந்தவலாசுரன் கபம்விழுந்தவிடத்தில் புருடராகமுண்டாயி ற்று இன்னமும் மகாவிஷ்ணுவராகாவதாரங்கொண்டு குசைபோலும்வாயை த்திறந்து சிரித்தபோது சிந்தின கபம் விழுந்தவிடத்தில் உண்டாயினதும் புருடராகமே இந்தப்புருடராக ரத்தினம் பாரியாத்திரகிரியிற் கொடுமுடி யா யிலங்கும் தெய்வமந்தர மால்வரைப புரஞ்சூழ் மேகலையாம் மபன் இந்த ப் புருடராகத்திலேலை இந்திரனுக்குப்பட்டணமும் அரசிருப்புமண்டபமும் உண்டுபண்ணினான். இந்தரத்நத்தை அணிவோர்கள் பகைவரைவென்று வெற்றிமாலையணிவார்கள் இனிவலாசுரன்மயிரெல்லாம் வைடூரியமாய் இரா விரதகண்டத்தில் கோரக்கம்-மகதம்-சிங்களம்-மலயம்-பாரசீகமதிரிகூடமும் முதலிய தேயங்களிலும், மற்றநதீவுகளிலும், உண்டாயின மேகம் இடிக்கு ம்போது கடலிலும் உண்டாகும் முங்கிலிலை-மேகம்-மயிலின்கழுத்து, பூனை க்கண் இந்தநிறங்களை உடையதாய்க் கனமாய்த் தெள்ளிதாய்க் கெட்டிபா யிமல்லியதாகி விளங்கும் இது அழகாய் வலப்புறத்தில் ஒளிவீசிலல் வை சியசாதி, கீழே ஒளிவீசிலல் பிராமணசாதி இடப்புறத்தில் ஒளிவீசிலல் க்ஷத்திரிசாதி மேலே ஒளிவீசிலல் வைசியசாதி, கீழே ஒளிவீசிலல் சூத்தி ரசாதி ஆகிய இந்தவைடூரியத்தை நல்லோர்கள் பூசைபண்ணி அணிந்துகொ ள்ளவேண்டும் வலாசுரன் மாமிசம் விழுந்தவிடத்தில் பவளம் உண்டாயிற்று இன்னமும்பிரமன் சந்திவடிவமாகிபதினபுலத்தாரை உண்டாக்கும்போது அவர்கள் உடலில் அழுக்குச்சிந்தின இடத்திலும், மகாவிஷ்ணு மதுகைட வரைக்கொன்றபோது ரத்தம் சிந்தினவிடத்திலும் இந்திர மலைகளைச் சிறகு வெட்டினபோது ரத்தம் சிந்தினவிடத்திலும் உண்டாயின பவளம்-முருக்க ம்பூ-பச்சைசக்கினிமூக்கு-செவ்வரத்தம்பூ - கொவ்வைக்கனி இவைகளினிற மாயிருக்கும், திருகல்-கோணல்-புழுவரித்தல்-முகமொடிதல் இவைகள் குற் றம் இரத்தப்பவளத்தை அதிகமாப்ப் பெண்களே யணிவார்கள். அணிந்தால் பிள்ளைப்பேறுமுதலிய லாபங்களுண்டாகும். இன்னும் சூரியனைக்கண்டுரு ருப்பைச் சிந்துகிற சூரியகாந்தக்கல்லும், சந்திரனைக்கண்டு நீரைச்சிந்துகிற சந்திரகாந்தக்கல்லும், நவரத்னங்களில் ஒன்றில் அடங்கும் என்று ரத்னங் களின் வரலாற்றுமாபைச்சொல்லி வர்த்தகராய்வந்த சோமசுந்தரக்கடவுள் வடதிசைபப்பார்த்துத் தோத்திரம்பண்ணி அர்ச்சனைசெய்து அந்தரத்ன

ங்களைக் கைகள்நிறைய வந்தி மதுரைக்கடவுளைப் பார்த்துக் கும்பிட்டு உட் பார்வையாலே இந்தராஜகுமாரனுக்கு அளவிறந்த ஆயுசும், செல்வமும்பெ ருகக் கடவதென்று வாழ்த்திக்கொடுக்க, ராஜகுமாரனும் இந்திரவிமானத் தைப்பார்த்துக் கடவுள திருவடிகளைவணங்கி இரண்டுகையாலும் வாங்கிக் கொண்டான் கொடுத்தவர்த்தகர் மந்திரிகளையும் இராஜகுமாரனையும் முகம லர்ந்துபார்த்து இந்தாத்தங்களைப்பதித்த நவரத்னகிரீடத்தைச் சூட்டி அபி ஷேக பாண்டியனென்று பெயரிடுங்களென்ன, அந்தமந்திரிகள் அந்தாத்தங் களுக்குள்ள விலைகொடுக்கத்தொடங்கி அந்தவர்த்தகரைப்பார்க்கக் காண மல் மயங்கினர்கள்.

அப்போது ஒருருவாய்வந்த வர்த்தகர் இடபவாகனத்தின்மேல்பா ர்வதிசமேதராய்க் கோயிலுக்குள் எழுந்தருளக்கண்டு வந்தவர்த்தகர் இவரே யென்று பின்தொடர்ந்து சென்று கடவுளைவணங்கி இந்தாத்தங்களுக்குவிலை கொடுக்க எங்களால்முடியுமோவென்று துதித்து எங்கள் உடல்பொருளாவி மூன்றுந் தேவரீரதாகையால் எம்பெருமானே?மேகஞ்செப்பும் உபகாரத்துக் குப் பிரதி உபகாரம் செய்வதுண்டோ என்று பலதரம் துதித்துக் கோயிலை வலம்வந்து அருள்பெற்றுக்கொண்டு வேதப்பிராமணர்கள் ஆசீர்வதிக்க, அரசன் கோயிலுக்குள் எல்லாரும்வந்து சோமசுந்தரக்கடவுள் ஒன்பது ரத் னங்களையும், நவசூத்திரங்களையுமே மணிகளாகச்செய்தாரோ அல்லது அவர் அணிந்தபாம்பின் மணிகளோ! யாதென்றுமதிக்கக்கூடும் இந்திரலோகத்தி லும் இந்த ரத்னங்கள்கிடையாதென்று ஆச்சரியப்பட்டு மயனிலும் சிறந்த கம்மாளர்களுக்குமிகுந்த சிறப்புச்செய்து ராஜகுமாரனுக்கு நவரத்ன கிரீட ம்செய்வித்துச் சாஸ்திரப்படி முடிசூட்டி அபிஷேகபாண்டியனென்று பேரி ட்டழைத்துப் பட்டணப்பிரவேசம் வந்து கடவுளையும்வணங்கி அபிஷேக பாண்டியன் சதுரங்கசேனைகள்சூழ சத்துருக்களெல்லாம் வணங்க மனுநீதி ப்படிப் பயிர்களைரக்ஷிக்கிற மேகம்போல உலகத்தைரக்ஷித்து வருகிறகாலத் தில் பழைபகிரீடத்தைத் திருடிக்கொண்டுபோனவர்களைத் தேடிப்பிடித்துக் கொண்டுவந்து சிலர்விட அவர்களிடத்தில் கொண்டுபோன பொருள்க ளெல் லாம் வாங்கிக்கொண்டு அரசாட்சி செய்தான்.

மாணிக்கம்விற்றபடலம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

பதினெட்டாவது

வருணன்விட்டகடலைவற்றச்செய்தபடல்

அறுசீரடியாசிரியவிருத்தம்.

காழ்கெழுகண்டத்தண்ணல்கௌரியன்மகுடஞ்சூட
வீழ்கதிர்மணிகளீந்தவியப்பிதுவிடையோன்சென்னி
வாழ்கருமுகிலப்போக்கிமதுரைமேல்வருணன்விட்ட
வாழ்கடல்வற்றப்பக்கண்டவாடலிப்பாடல்செப்பாம்.

இதன்போருள்.

கரிய காளகண்டத்தையுடையசோமசுந்தரக்கடவுள் அபிஷேகபாண்டியன்முடிசூடக் கிரணங்களையுடைய நவமணிகளைத்தந்த திருவிளையாடல் இதுவாகும் இனி இடபவாகனத்தையுடைய அச்சோமசுந்தரக்கடவுள் தமதுசடைமுடியின்மேல் வாழும் புட்கலவர்த்தமுதலிய சப்த மேகங்களையுஞ் செலுத்தி மதுரையின்மேல் வருணனேவிய ஆழ்ந்தகடலை வற்றச் செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.


அபிஷேகபாண்டியன் வெள்ளியம்பலக் கடவுளுக்குப் பலதிரவியங்களாற் செய்து சித்திரைமாசம் சித்திரை நக்ஷத்திரத்தில் நெய் சந்தனக்குழம்பு முதலானவைகளால் அபிஷேகம்செய்வித்துப் பின்னும் கற்பூரத்திருநீற்றினாற் பட்டிக் கடவுளைப்பார்த்து என்கர்ப்பூரசுந்தரனே யென்று சொல்லிப்பூசைசெய்யுமளவும் இந்திரன்வந்து வருஷந்தோறும் தான் பூசைசெய்யுங் காளானதினுலே காத்திருந்து பின்பு தான்பூசைசெய்து தன்னுலகத்தைப் போனான் அதைக்கண்ட வருணன் தனக்குள்ளேநாய் நீருங்காலம் வந்தபோது இந்திரன் முகத்தைப்பார்த்து இன்றைபத்தினம் முகம்வாடி யிருக்கவேண்டிய தென்னவென்று கேட்டான், அதற்கு இந்திரனும் மதுரைக்கடவுளைப் பூசைசெய்ய நானின்றுபோனபோது பூசிக்கக் காலதாமசமானதினுலே எனக்குக்கொஞ்சம்வியாகூலம் உண்டாயிற்றென்ன, அதை வருணன்கேட்டு அந்த இலிங்கம் அவ்வளவு சிறந்ததாவென்ன அதற்கு இந்திரன்மறுத்தென் சாபமும் ஜாவதத்தின் சாபமும் தீர்த்தவன் சோமசுந்தரக்கடவுளல்லவோ இதுவரையிலுமுனக்குத் தெரியாதோவென்ன வருணன்கேட்டு அப்படியானுல் தெய்வ வயித்தியராலும் தீர்க்கக்கூடாத உன் வயிற்றுரோகத்தை அந்தச் சோமசுந்தரக் கடவுள் தீர்க்குமோ வென்ன இந்திரன் உள்ளே நகைகொண்டு நீ சந்தேகித்துக் கேட்டது என்னகாரணமோ தெரியவில்லை, பிரமவிஷ்ணுக்களாலும் தீர்க்கப்படாத பிறவிரோகத்தைத்தீர்க்கவல்ல கடவுள் இந்தத் தேகவியாதியைத் தீர்ப்பதருண்மோ அந்தக் கடவுள் திருவிளையாடலை நீசோதித்துக் கண்டுகொள்ளென்ன வருணன் இந்திரனை இன்று உன்

னிடம் நான் வரும்போது காமதேனுவும் அதன்கன்றும் முன்னைவரக்கண்ட நன்மையிலுலே இந்த நல்லவார்த்தை கேட்டேனென்று சந்தோஷித்து வெள்ளியம்பலக்கடவுள் திருவிளையாடலைத் தெரிந்து தன்வயிற்றுநோயைத் தீர்த்துக் கொள்ள ஆலோசித்துக் கடலைக் கூப்பிட்டு நீபோய் மதுரைமுழுதும் அழித்துவரக் கடவையென்றனுப்ப உடனே கடலானது கொதித்துப்பொங்கி மரங்களை யொடித்து மலைகளைத்தோண்டித் திசைகளெல்லாம்போகவீசி வீடுகளை யிடித்துத்தள்ளிப் பிரளயகாலத்தைப்போல அலைகளை வீசிக்கொண்டுவர மதுரையிலுள்ள ஜனங்களும், தேவர்களும், வருணன் செய்தசெய்கை தெரியாமல் பிரமகற்பத்தும் அழியாத இந்த மதுராபுரிக்கு இடையூறு வந்ததேதையென்று கலங்கி இதுசொக்கநாதர் திருவிளையாடலோ! நாம்செய்த பாபந்தானே! ஆலகாலமோ! ஊழிக்காலமோ! என்று மயங்கி நடுநடுங்க அப்போது மண்ணுலகமும் விண்ணுலகமும் மறைபடமூடுகிற இருளைப்போலிருண்டுவருகிற வெள்ளத்தை அபிஷேக பாண்டியன்பார்த்து சோமசுந்தரக் கடவுள் பாதமே கதியென்று நடுநடுங்கிச்சமுத்திரத்திற்முன்றியவிஷத்தைக்கண்டு அஞ்சின விஷ்ணுவைப் போலவும், யமனைக்கண்டஞ்சின மார்க்கண்டேய முனிவரைப்போலவும் கலங்கிக் கடவுள் பாதத்தின் கீழேவிழுந்து முறையிட அப்படி முறையிட்ட அபிஷேக பாண்டியனுக்கு முன்னைநகைசெய்து பயப்படாதே யென்று சொல்லி மதுரைக்குச் சமீபத்தில் வந்த கடலை நீங்கள்போய் வற்றக்குடியுங்களென்று தமது ஜடையிலிருக்கிற நான்குமேகங்களையுமனுப்ப உடனே அந்தநான்குமேகங்களும் முழங்கிக்கொண்டுவந்து பெருகிவருகிற கடல்முழுவது முறுஞ்சிக் குடிக்க அப்படி யுறுஞ்சினவுடனே சிவபரஞ்சோதியே தெய்வமென்று தெளிந்தவர்கள் பிறவிக் கடல்போலப் படையறவற்றிக் காய்ந்தது. அப்போது பட்டணத்திலுள்ளசனங்களும்தேவர்களும் பாண்டியனும் கடவுள் திருவிளையாடலென்று தெரிந்து மிகுந்த சந்தோஷமாகிய கடலில் மூழ்கிப் பின்பு சுகமே வாழ்ந்திருந்தார்கள்.

வருணன்விட்டகடலை வற்றச்செய்தபடலம்

முற்றிற்று.

மதுரைக்காண்டம் முற்றிற்று.



சிவமயம்.

கூடற்காண்டம்.

பத்தொன்பதாவது

நான்மாடக்கூடலான படலம்.

சோமசுந்தரக்கடவுள்.

எழுசீரடியாசிரியவிருத்தம்

பூதங்களல்லபொறியல்லவேறுபுலனல்லவுள்ளமதியின்
பேதங்களல்லவிவையன்றிநின்றிபிறிதல்லவென்றுபெருநூல்
வேதங்கிடந்துதடுமாறும்வஞ்சவெளியென்பகூடன்மறுகிற்
பாதங்களேணைவவளையிந்தனுதிபகர்வாரையாயுமவரே.

இதன்பொருள்.

நான்மாடக்கூடலென்னும் பதியில் திருவடிகள்வருத்த வீதியிற்போந்து வளையலும், விறகும், பிறவும் விற்று விளையாடினவர் யாவர் என்றுவிசாரிக்குமளவில் அங்ஙனம் விசாரிக்கும் பெரியோர் அப்பரம்பொருளைப் பெருநூலாகிய வேதங்கள் பூதங்களென்றும், அல்லவென்றும், புலன்களென்றும் அல்ல வென்றும், கன்மேந்திரிய மென்றும், அல்லவென்றும், ஞானேந்திரிய மென்றும், அல்லவென்றும், அந்தக்காரணங்க ளென்றும், இவைகளன்றிவேறுகநின்ற மற்றைத் தத்துவங்களென்றும் அல்லவென்றுங் கூறி யிளைத்துத் தம்மாறும் பெருந்தகைய வஞ்சவெளியென்று கூறிநிற்பர்.

தடாதகைப்பி-ராட்டியார்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

திருமகள்வலக்கண்வாக்கின்சேயிழையிடக்கண்ஞானப்
பெருமகணுதற்கணுகப்பெற்றுவான்செல்வங்கல்வி
யருமைவீடளிப்பாள்பாவளவளுயிர்த்துணைவன்காண
வொருமூலைமறைந்துநாணியொசிந்தபூங்கொம்பினின்றுள்.

இதன்பொருள்.

இலட்சுமியை வலக்கண்ணுகவும், சரஸ்வதியை இடக்கண்ணுகவும், ருத்திராணியை நெற்றிக்கண்ணுகவும் பெற்றுத் தம்மை யடைந்தவர்களுக்கு முறையே செல்வம், கல்வி, வீடு என்பவைகளைத்தந்தருளுகின்ற லோகமாதாவாகிய தடாதகைப்பிராட்டியார்தமது உயிர்த்துணைவராகிய சோமசுந்தரக்கடவுள் தம்மைக்கண்டமாத்திரத்தில் தமக்குரிய மூன்றுமூலைகளில் ஒன்று மறைந்திட நாணத்தையடைந்துவளைந்த பூங்கொடியொத்துநின்றவராயினர்.

கதிர்மதிமிலைந்தவேணிக்கண்ணுதல்வருணனைய
வதிர்கடல்வறப்பச்செப்தவாடலீதுணபாதனைய

முதிர்மழையெழின்மேலுமுன்னைநாண்முகிலும்போக்கி
மதுரைநான்மாடக்கூடலாக்கியவண்ணஞ்சொல்வாம்.

இதன்பொருள்.

குளிர்ந்த கிரணங்களை வீசுஞ் சந்திரனைத் தரித்த சடைமுடியினையுடைய கண்ணுதலாகிய சிவபெருமான் வருணனால் விடப்பட்ட இறையுஞ் சமுத்திரமானது வற்றிபோகும்படிச் செய்த திருவிளையாடல் இதுவாகும். இனி, அந்தவருணன் ஏவிய முதிர்ந்த சப்தமேகங்களின்மீது எம்பெருமான் முன்னரேவியதுபோலவே நான்குமேகங்களையும் போக்கி மதுரையை நான் மாடக்கூடலாக்கிய திருவிளையாடலையுங் கூறுகின்றும்.

அதைக்கண்ட வருணன் தனதுசெய்கைதப்பி வெட்கப்பட்டு இரண்டு கண்களுஞ் சிவக்கக் கொந்தித்தெழுகின்ற கோபாக்கினியிலைலே உடம்பெலாம் வெதுமபிக் கடல்களும் நதிகளும் வெந்து வற்றுதலாக மானமும் பலமும் குறையாமல் அதிகோபங்கொண்டு சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடலைத் தெரியாதவனைப்போல் மின்னும் எழுமேகங்களையும் அழைத்து நீங்கள் கடல்களெல்லாம் வற்றக்குடித்து முழுங்கி நீரைப்பொழிந்துமதுரை முழுவதையும் விரைவிலே அழியுங்களென்றான். உடனே எழுமேகங்களும் கடல்களெல்லாம்வற்றி நிலந்தெரிய நீரைக்குடித்து உடம்பெல்லாங்கறுத்து மின்னி அஷ்டதிசைகளும் ஆகாசமும் செவிடுபடவும், பாதாளமும் பூமியும் அஷ்டகுல பர்வதங்களும் வெடிபடவும், மகாமேரு சாயவும், ஊழியகாலத்தில் அண்டகடாகம் வெடிக்கிற சப்தம்போலமுழங்கி நெருப்பிடிவிழப்பூமியைத்தாங்குகிற பாம்புகள் தத்தினங்களைக் கக்கிக்கொண்டு உடம்புகளை நெளிக்கவும், திக்குகளினின்றயானைகள் பயந்து நிலைகெடவும், பூசினிக்காய்கள்போலத் துளிகளும் திரண்டப்பனிங்குத் தூண்போலத் தாரைகளுமாக நகூத்திரங்களுடனே மீன்களும் துள்ளிவிழவும், உலகமெல்லாம்மூடிக்கொண்டு உலகத்தைவிழுங்கவுருவங்கொண்ட விஷ்ணுவைப்போல ஆகாசம், திக்குகள், பூமி இவைகள் தெரியாமல் பார்க்குங்கண்களுநுழையாமல் இரண்டு நவரத்தினங்களுஞ் சிந்தப் பிரசண்டவாயுமோத இப்படி மதுரையெல்லாங்கவிந்தபோது அபிஷேகபாண்டியனும் பட்டணத்துச் சனங்களும் உலகம் அழியுங்காலமிதுவேயென்று மயங்கி நடுநடுங்கி இன்னமும்மதுரைசேனை காக்கக்கடவனென்று சோமசுந்தரக்கடவுள் திருவிளையாடலை யறிந்துகைகண்ட பாண்டியன் பட்டணத்து ஜனங்களுடனே விரைவிலே சந்நிதானத்துக்குப்போய் இந்திரவிமானத்தில் விளங்குகின்ற கடவுளைவணங்கி விஷ்ணுவாகிய விடபந்தையுடையவரே! சமுத்திரத்திற்றோன்றிய விஷத்தைக் கண்டத்தில் தரித்தருளிய கடவுளே! கங்கையைச் சடையில் தரித்தருளியவரே! இபமுடைய உயிரைக்கவர்ந்த திருவடியையுடையவரே! மேருவாகியவிற்படையையுடையவரே! அடியேங்கள்படுகின்ற துன்பத்தையொழித்து ஆள்கின்றகடையினையுடையவராகி எங்களுக்கு இப்போதுநேரிட்ட ஆபத்தினின்றும்விலக்கிக் காப்பாற்றவேண்டும் பெருமானே! என்று துதிக்கும்போது எக்காலமும் பாண்டியர்களுக்குவருந் துன்பத்தைத்தீர்க்கும் சோமசுந்தரக்கடவுள்

முன்போலவே நாலுமேகங்களையும் பார்த்து இந்தமதுரையின் நான்கெல்லையினும் சூழ்ந்து நாலுவீடாகிப் பொழிகிற ஏழுமேகங்களையும்விலக்குங்களென்றனுப்ப உடனேவந்து நான்குதிக்கிலும் சூழுவளைந்து நாலுமாடமாகிச்சந்துவாய்தெரியாமல் ஒருபெரியகுடிலாய் வீடுகள்கோபுரங்கள்முதலியன போலநின்று அசையாமற்றுங்க அந்த நான்குமாடத்துள் சதுரங்கசேனைகளும், பட்டணத்துஜனங்களும், மற்றசராசரங்களும், மந்திரிகளும் அரசனும்முன்னிலும் இந்நாளதிக சுகமாகவாழ்ந்திருந்தார்கள்.

அப்போதுயர்ந்த மலைமேற் பொழிவதுபோலப் பொழியும் துளிகள் உடைந்து தெரிக்க ஏழுமேகங்களும் தங்களுடலும் வற்றிக் கடல்களும் வற்றப்பெய்து வருணனும் நாணி நடுங்கி மிகுந்தபயமும் மானமும் மேன்மேலாகக் கெருவங்குலைந்து பின்னுமனத்துள்ளே ஓர் மகிழ்வுதோன்றப் பொற்றூமணைத் தீர்த்தத்தில் கரையணுகுமுன்னே தன்வயிற்றுநோய் தீர்ந்து அதில்மூழ்கிப் பாசதாரணவருணன் மீளாதபோன்புகொண்டு கடவுளைப் பூசைபண்ணவேண்டித் திருவெண்ணீறுதரித்து உருத்திராக்ஷ மாலிகைபூண்டு கங்கைமுதலிய நவநதிகளும் பொற்குடத்திற் றிருமஞ்சனமும் முகந்துகொடுக்கப் பூவுஞ் சந்தனமும் கஸ்தூரியும் ரத்தினாபரணங்களும் பசும்பொன்னுடையும் பிறவுங் கற்பகங் கொடுக்கப் பஞ்சாமிர்தமும், பஞ்சகௌவியமும், திருவமுதும், தூபம் தீபமிவைகளைக் காமதேனு கொடுக்க அங்கயற்கண்ணி நாயகனைப் பூசித்துச் சகஸ்திரநாமார்ச்சனையும் முத்துமாலையுஞ்சாத்தி வணங்கிநிற்க, அந்தப்பூசையை மகிழ்ந்துகொண்டமுதற்கடவுள்வருணனே? உனக்கு வேண்டியதென்னவென்ன வருணன் ஸ்வாமி? ஒருவிதத்தாலும் தீராத என்வயிற்றுநோய் இந்தத் தீர்த்தத்தில் மூழ்கித்தீர்ந்தேன் வேதங்களாலும் காணுத தேவரீரது பெருமையை நானேகாணவல்லேன். தேவரீரோகுற்றத்தைக் குணமாகக் கொள்ளவல்லீர் ஆனாலுமிந்திரனிங்குவந்து காலதாமதமாய் அர்ச்சனைபண்ணிவந்த சோர்வுகண்டு இந்தச்சோர்வு உனக்கேன் வந்ததென்ன? அந்தஇந்திரன் பாண்டியனுலேநேரிட்டதென்ன பின்பு அவன்சொன்னபடியே நான் தேவரீரைச்சோதித்து கங்கையையும், சந்திரனையும் திருமுடியில் தரித்தருளிய கிருபைக்கடலே! அடியேனுக் குண்டாகிய வயிற்றுநோயேயன்றி அநாதியே மாறுபட்டு வருகின்ற இருவினையும் ஆணவமலத்தின் வலுமையுங்கெட மோக்ஷமடைய வேண்டுதற்குச் சாதனமாயுள்ள மார்க்கத்தையும் பெற்றேன். இனிவேறேமந்திரமேன்? மணியேன்? அவுஷதமேன் ஒன்றும் வேண்டுவதில்லை. உண்மையாக ஆராய்கின்றவர்களுக்கு இந்தப் பரிசுத்தம்பொருந்திய பொற்றூமறைத் தீர்த்தமே அவர்களுக்கு உண்டாகிய எல்லாப் பிணிகளையும் தீர்க்கின்றதன்றோ என்று துதித்து அடியேன் முன்னேசெய்த அபராதங்களினரண்டையும் பொருத்தருள வேண்டுமென்று சிலவரங்களும் வேண்டிப்பெற்றுக்கொண்டு மேற்றிசைக்கடவுளாகிய வருணன்செல்ல அக்காலத்தில் கடவுள்சடையிலுள்ள மேகங்கள்நான்கும் உயர்ந்து நான்குகூடமாக வருணன்பெய்த மழையைத்தடுக்க கூடுதலினாலே அன்று முதல் மதுராபுரிக்கு நான்மாடக்கூடலென்றும் ஒருபெயருண்டாயிற்று.

நான்மாடக்கூடலானபடலம் முற்றிற்று.

உ

சிவமயம்.

இருபதாவது
எல்லாம்வல்லசித்தரானபடலம்.


கலிநிலைத்துறை.

சத்தரான்மறைப்பொருள்வரைதள்ளுநீண்முடிமேல்
வைத்தகார்கணன்மாடமாமதுரைமேல்வருணை
னுய்த்தமாரியைத்தடுத்தவாறுரைத்துமேருயர்த்தோர்
சித்தராய்விளையாடியதிசயல்சிறிதுரைப்பாம்.

இதன்பொருள்.

சத்தவடிவாகிய நான்குவேதங்களின் பொருளினளவைக்கடந்துள்ள தம்முடைய நீண்ட திருமுடியின்மீது உலாவவைத்தமேகங்கள் நான்மாட்டக் கூடலாக மதுரையின்மீது வருணனேவிய மேகங்களைத் தடுத்த திருவிளையாடலைச் சொன்மேலும், இனி இடபக்கொடியை யுயர்த்திய அச்சோமசுந்தரக் கடவுள் எல்லாம்வல்லசித்தராக விளையாடிய திருவிளையாடலையுங் கொஞ்சம் சொல்லுகின்றேம்.

அபிஷேகபாண்டியனும் அந்தப்பாண்டியன் நாட்டாரும் உயர்ந்தசெல்வத்தைப்பெற்று வீட்டையும் அடையவேண்டி அந்த நான்மாடக்கூடலில் விளங்குகின்ற குணங்குறி கடந்த கடவுள் நீண்டசடையும் பூரணநான் மார்பும், பூசின விபூதிமேலணிந்த பொட்டும், இரண்டங்குலங்கள் தொங்கவிட்டவெள்ளை முத்திரையும் தோலால்விரித்துத்தரித்த அரைஞாணும், விபூதிப் பொக்கணந் தொங்குகின்ற தோளும், படிகமாலையில் கையில் விளங்குகின்ற கட்டங்கமும், உதரபந்தனமும் வேங்கைத்தோலால் கட்டியகோவணமும், புலித்தோலுடையும், இடைத்தோளிலிட்டயோகபட்டிகையும், பொற்பிரம்பும், பாதங்களிலணிந்த வேதகிண்கிணிகளும், உபநிடதமாகிய பாதுகையும் பூண்டு புன்னகையும் குறுவேர்வையுமுகத்திலேதான்றச் சச்சிதானந்தவடிவாகிய சித்தராய்வந்து கடைவீதி, சித்திரகூடம், நாற்சந்திவீதி, சூளிகை, உபரிகை, மாளிகைவாயில், தெற்றியென்னு மிடங்களெல்லாம்நின்று தெற்கேயிருப்பவர்போல வடக்கே போயிருப்பதும், கிழக்கே யிருப்பவர்போல மேற்கேபோயிருப்பதும் எல்லாருந்தேடிக்காணுதபடி இந்திரஜாலமாகமறைந்தும் எல்லாருங்காணத் தூரத்திலிருக்கிற மலையைச் சமீபத்தில் வரச்செய்தும், சமீபத்திலிருக்கிற மலையைத் தூரத்தில்போகச்செய்தும் கிழவனைக்குமரனாக்கியும், குமரனைக் கிழவனாக்கியும், ஆணைப்பெண்ணாக்கியும், பெண்ணை ஆணாக்கியும், மலடியைப் பிள்ளைபெறச்செய்தும், கூன்-செவிடு-குருடு-ஊமைமுடம் இவைகளைத்திருத்தியும் இரும்புசெம்புகளைத் தங்கமாக்கியும், செல்வர்வீட்டிலுள்ள பொருள்களெல்லாம் எளியவர் வீட்டில் வரச்செய்தும், சிநேகர்கள் பகைக்கவும், பகைவரை சிநேகிக்கவும், எட்டிமரத்தில் மாங்கனி பழுக்கவும் இப்படி வித்தைகளாடி நீர்வாதகாலத்தில் வையையாற்றிலே



நீர்வரச்செய்தும் வந்தநீரை வற்றச்செய்தும் நல்ல தண்ணீர்க் குளங்களையும் ஓடைகளையும் உவர்ப்பாகச்செய்தும், உவர்ந்த நீர்க்கிணற்றை நல்ல நீராகச் செய்தும், மாத்திரக்கோலை உயரவெறிந்து நிறுத்தி அதின்மேலுசியை நிறுத்தி அதன்மேல் காற்பெருவிரலையூன்றி ஆடியும் அந்தவுசிமேற்றலையும் ஆகாயத்திலே கால்களுமாகச் சுழன்று கருடனைபோலே பறந்து மேகத்தைப்பிடித்து இடியுடனே குடித்துப்பார்த்தவர்களுக் கதிசயந்தோன்ற அந்தநீரைப்பிழிந்தும், பழையபடி ஆகாயத்திலேபோக மேகத்தைவிட்டும் இராக்காலத்தில் உண்டாகிறபொருள்களைப் பகற்காலத்திலேகாணச்செய்து, பகற்காலத்தில் உண்டாகிறபொருளை இராக்காலத்திலே காணச்செய்தும், அக்கினித்தம்பம்-ஜலத்தம்பம்-வாயுத்தம்ப முதலிய விநோதங்கள் செய்தும், பிரம்பிலே தடவி பீளை யொழுகுகிறகண்களையுடைய கிழவனை யௌவனகுமாரனைக்கி ளவாய்க்கிழவியை மங்கைப்பருவப்பெண்ணைக்கி கூடச்செய்து கருப்பமுண்டாக விபூதிகொடுத்தும், அகரமுதல் மூன்றுகிய ஆகருஷ்ணம்-அதிரிசியமும-அஞ்ஞன வித்தையும்-வகரமுதல் மூன்றுகியவசியம்-வாதம்-அயத்தம்ப மிவைகளைச்செய்தும் வேதசாஸ்திரங்களைத் தெரியாதவர்கள் நாவிலே விபூதிசிந்தித் தெரிந்தவராகச் செய்தும், பாண்டியன் மனைவிகளோடுசஞ்சரிக்கின்ற பூஞ்சோலையில் நீண்ட தென்னமரத்தைப் பனைமரமாகச் செய்தும் மற்றமரங்களையும் பக்ஷிகளையும் பாஷாணமுதலிய விலங்குகளையும் ஒன்றையொன்றுகச்செய்தும், தம்மைக்கண்ட புருஷர்கள் பெண்ணுகி யணையவேண்டுகிற அழகிய வடிவங்கொண்டும், பாதாளலோகம் மேலுலகங்களிலுள்ளபொருள்களெல்லாம மதுரையிலே காணச்செய்து மிப்படி அனேகவித்தைகள் செய்துகொண்டிலாவுகின்ற சித்தயோகிகளுடைய திருவிளையாடலின்மேல் மனத்தை செலுத்திக் கண்கள் வாங்காமற் பார்த்துத் திகைத்துப் பிராமணர் முதலிய வருணத்தாரெல்லாரும் தங்களதங்கள் செய்கைகளைமறந்து இந்த வேடிக்கைகளைப்பார்த்திருப்பதை உழைபாலே பாண்டியனும்தெரிந்து அந்தச்சித்தரை அழைத்துவாருங்களென்று சிலரையனுப்ப அவர்கள் வந்து சித்தரைக்கண்டு அவர்செய்கிற வித்தைகளை அதிசயித்துப் பார்த்துக்கொண்டிருக்கப பிறனும் பாண்டியன் மந்திரிகளைபலுபல மந்திரிகள்வந்து சித்தரை வணங்கி அரசன்சபைக்கு வரவேண்டுமென்றழைக்க அதற்கு எல்லாம் வல்ல சித்தர் அந்த அரசனாலே எமக்கென்ன பிரயோசனம்? நாம் வாரோமென்ன மந்திரிகள் சென்று சித்தர் சொன்னதைச்சொல்ல, அதைப பாண்டியன் கேட்டுக் கடவுளருளைப்பெற்று இமமை-மறுமை-யின்பங்களை வெறுத்த யோகிகள் இந்திரன்-பிரமன்-விஷ்ணு முதலியோர்களையும் மதியாதென்றால் என்ன இந்தச் சித்தர் மதியாதிருப்ப தருமையோ வென்றிருந்தான்.

எல்லாம்வல்லசித்தரானபடலம்

முற்றிற்று.

சிவமயம்.

இருபத்தாறுவது

கல்லாவனைக்குக் கரும்பருத்திய படலம்.

கலி நிலைத்துறை.

செல்லார்பொழில்சூழ்மதுராபுரிசித்தரெல்லாம்
வல்லாரவராடலையாருரைசெய்பவல்ல
ரெல்லாரும்வியப்புறவித்தனிச்சித்தசாமி
கல்லாணைதின்னக்கரும்பித்தகதையுரைசால்வாம்.

இதன்பொருள்.

மேகங்கள் சஞ்சரிக்கும் சோலைகள் சூழ்ந்த மதுரையின்கண் எல்லாம் வல்லசித்தராகத் திருவிளையாடல் புரிந்தவரது மகிமையை யாவர் உளமிடத் தக்கவர்கள் இனியாவர்களும் அதிசயிக்கும்படி இந்த ஒப்பற்ற சித்தசாமியா னவர் கல்லாணையானது கரும்பருந்தும்படி கொடுத்தருளிய திருவிளையாடலை யுஞ் சொல்லுகின்றோம்.

பின்பு அன்பும் பயமும்தோன்றி அபிஷேக பாண்டியன் என்னகாரணம் பெரியோரை மதியாமலிங்கு வருப்படிச்சொன்னேன் இனிநான் வரச்சொன் னது குற்றமாஞல்நானேபோய்க்காணத்தக்கதன்று அன்று நைமாசப்பிறப் பானதிஞலே மதுரேசனேவந்துகண்டுசேவித்துச் சந்நிதானத்துக்குள்ளே பிர தக்ஷிணமாக அவன்வருவதற்குமுன்னே எல்லாம்வல்ல ஆநந்தசித்தர் அரசன் குறிப்புத்தெரிந்து முந்தி இந்திரவிமானத்துக்கு மேற்றிசையில் வந்திருக்கப் பிரதக்ஷிணம்வருகிற அரசனுக்கு முன்னே சந்தடிவிலக்கிவருகிற சேவகர்கள் வேங்கைத்தாலாசனத்தின்மேல் பஞ்சேசந்திரியங்களையும்வென்ற கோலத்து டனே யோக பட்டத்தராய்க் கட்டங்கத்தி லேறிட்டகையராய் வீற்றிருக் கின்றசித்தரைக்கண்டு கோலாலேதாட்டு எழுந்து அப்பாலேபோ! அரசன் வருகின்றானென்றுசொல்ல உடனேபின்னேவருகிறபாண்டியன் சித்தரைப்பார்த் து உம்முடைய ஊரெது? பேரெது? உமக்கென்னென்னதெயும்? உமக்கு இப்போதுவேண்டியதென்ன? சித்தரே சொல்லுமென்றுகேட்க, சித்தர் அப் பா நாம் எந்தநாட்டிலும் எந்தஊரிலும்சஞ்சரிப்போம்! ஆனலும் இப்போது ஆனந்தகானந்தொடங்கி இவ்விடங்களிலுள்ள சிவஸ்தலங்களெல்லாம் வணங் குந் தற்பரமாகிவந்தோம். நாமிருப்பது காஸ்மீரநாட்டிலுள்ள ஸ்ரீகாசியே, பரதேசிகளை, எமக்குறவினர், தினந்தோறும் விந்தைபாடிநிரிகிறசித்தரே யாம் இந்தமதுரை இம்மைபில் சீவன்முத்தியும், மறுமைபில் விதேக முத்தி யும் தருவதாதலால் இங்கிருந்து எம்முடைய விளையாடல்களைக்காட்டி யிவர் களுக்கு வேண்டியசித்திகளும் தருவோம், இன்னமும் வேதமுதலிய கலைஞா னங்களெல்லாம் தெரியும். அல்லாமலும் யாராருக்கென்ன பொருள்கள் வே ண்டுமோ அவைகளையெல்லாமெங்கிருந்தாலுமழைத்துக்கொடுக்கிற எல்லாம்



வல்லசித்தரென்று பெயர்கொண்ட நாம் உன்னிலைபெறவேண்டியபொருள் யாதிருச்கின்றதென்று உள்ளுக்குள்ளேசிரித்தார் அதைக்கண்டபாண்டியன் இந்தச்சித்தருடையபெருமையும்-களிப்பும்-மதிப்பும் நான்கண்டறிகிறேனென்று ஆலோசிக்கும்போது அங்கேயொருவன் யாவரும் கழுமென்றுநினைக்கும்படி ஒருபெரியகரும்பைக் கையிலேகொண்டு சித்தர்முன்னேசெல்ல அதைக்கண்டு பாண்டியன் தன்கையிலே வாங்கிக்கொண்டு முன்னே நின்று ஓய்சித்தரே வல்லாரில் வல்லேமென்றுமதித்திருக்கிற நீர் இந்தக்கல்லானதின்னும்படிச் செய்தீரேயானால் எல்லாம்வல்லசித்தரும் நீரே, இந்த மதுரைப்பெருமானும் நீரேயல்லாமல் வேறேயாருண்டு, ஆகையாலே உம்முடையமனத்தில் விரும்பிய பொருள்களெல்லாம் தருவேனென்று சொல்லக்கேட்டு சித்தர்பாண்டியனேவருகவென்று குறுநகைசெய்து உன்னிலே எமக்கு வேண்டியதொன்றுமில்லை. நாமே உன்னைசதீர வேண்டியது தருவோம் ஆனால் உலகத்தில் தூர தேசங்களிலே சென்றுகிலும் ஒருவித்தை கற்றுவந்தால் கற்றவன் எல்லாராலும் நன்குமதிக்கப்பட்டுப் பெரும்பயனை யடைவான் நாமோ எல்லாந் தெரிந்தோர் மாதலா லெமக்கொரு பொருளிலு மாசையில்லை, ஆனலும் இந்தக்கல்லானை இந்த கரும்பைத் தின்ன நீபார்ப்பாயாக வென்று கடைக்கண்ணிலே சைகைசெய்ய உடனே அந்தக் கல்லானை மும்மதங்களும் மழைபோலொழுக மேகமும் நடுங்கும்படி முழங்கித் துவாரம் பொருந்தியகையை நீட்டிப் பாண்டியன் கையிலிருந்த கரும்பைபிடுங்கிக்கடைவாய் வழியேசிந்துகிற சாற்றில் வண்டுகள்வந்துமொய்க்க மென்றுதின்று குதட்டிச் சாறுகுடித்துக் கையூசலாடக்களித்துத் தன்னிழலைக் கண்டு சீறிநிமிர்ந்து உயிருள்ள யானையாய் நிற்கப் பின்னும் சித்தர் கடைக்கண்காட்ட உடனே பாண்டியன்கழுத்தின்மாலையை எட்டிப்பரித்தது அதற்குப்பாண்டியன் கண்கள் சிவந்துசித்தமூர்த்திகளைப் பார்த்துக் கோபங்கொள்ள சமீபத்திலிருந்த சேவகர்கள்கோபித்துச் சித்தரை அடிக்கத்தொடங்கி அப்போது சித்தசாமி குறுநகைகொண்டு அடிக்கவந்தவர்களைக் கையால் நில்லுங்களென்றமைக்க அந்தச் சேவகர்கள் வைத்தகால் பெயர்க்கமாட்டாமல் சித்திரம்போலசையாது நிற்க அதுகண்டு பாண்டியன் கோபமாறி அன்புபெருகி அதிசயித்துச் சித்தசாமிகளுடைய திருவடிகளிலே தனது திருமுடிபட வணங்கிப் பெத்தனைய அடியேன்செய்தகுற்றத்தைப்பொறுத்தி ரக்ஷிக்கவேண்டுமென்றுதுதிக்க அப்போது அன்புக் கிரங்குகின்ற கருணைக்கடலான கடவுள் சந்தோஷித்துப்பாண்டியனே உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்கக்கடவா யென்னப் பாண்டியன் வணங்கி ஸ்வாமி எனக்கு நல்ல புத்திரனுண்டாக வேண்டுமென்ன அப்படியே அவனுக்கருள்செய்து முத்துமாலையைப்பறித்த யானைமேல்கிருபாதிருஷ்டிசெய்ய அந்தயானைகையைநீட்டி முத்துமாலையைக் கொடுக்கப்பாண்டியன் வாங்கிக்கொண்டு பார்க்கச் சித்தசுவாமியைக் காணாமல் யானையும் பழைய கல்லானையாய் நிற்கக்கண்டு பயந்து இந்தத் திருவிளையாடல் செய்தது எங்களுக்குயிராகிய சோமசுந்தரக் கடவுளே யென்று சந்நிதிமுன் வந்துநின்று சுவாமி உம்மைச் சோதிக்கத் தகுமோ? அறியீனகிய நான் செய்தகுற்றத்துக்கு அபராதம் தருகிறேனென்றுகொடுத்துக் கைகுவித்துநின்று,

வேதியாய்வேதவிளைபொருளாய்வேதத்தி
னீதியாய்நீதிநெரிகடந்தநீலொளியா
யாதியாயீறுப்நடுவாயவைகடந்த
சோதியாய்நின்றுயென்சோதனைத்தேதாநின்னியல்பே.

நின்னுண்மொழிந்தமறைநின்னடிகள்வந்தித்தும்
பன்னளருச்சித்தும்பாதந்தலைசுமந்து
முன்னமம்வாசித்துமுன்னைபறியேனென்று
சொன்னலடியனேன்சோதனைத்தேதாநின்னியல்பே.

பெரியதிலும்பெரியதுமாச்சிறியதிலுஞ்சிறியதுமா
யரியதிலுமரியதுமாயெளியதிலுமெளியதுமாப்க்
கரியதுமாய்க்காண்பாலுங்காட்சியுமாபவைகடந்த
துரியமுமாய்நின்றுயென்சோதனைத்தேதாநின்னியல்பே.

என்று இப்படித் தோத்திரஞ்செய்து அரண்மனைக்குவந்து சோமசுந்தரக்கடவுளருளின்படியே விக்கிரமன் என்கிற புத்திரனைப்பெற்றுவருகாலம் பழையபடியே நீதிசெலுத்தி பின்பு விக்கிரமபாண்டியனுக்குப் பட்டங்கட்டி ஜீவந்தரியனைச் சித்தசாமி திருவருளேணக்கத்தாலே யுண்டானபரிபாகத்தினிலேவிழுகிற வண்டுபோல கலந்திருந்தான் அபிஷேகபாண்டியன்.

கல்லாலனைக்குக் கருங்பருத்திய படலம்
முற்றிற்று.



க

சிவமயம்.

இருபத்திரண்டாவது

யானை யெய்தபடலம்.

கலி விருத்தம்.

கட்டவிழ்கடுக்கையர்கலாஞகழைதின்ன
விட்டதிதுபஞ்சவனிடத்தமணரேவி
விட்டமதயானைவிழுமேவலர்புரத்தைச்
சுட்டகணைவிட்டுயிர்தொலத்தமுறைசொல்வாம்.

முறுக்கவிழ்ந்த கொன்றை மலர்மாலையைத்தரித்த சோமசுந்தரக் கடவுள் கல்லானையானது கரும்பு தின்னும்படிச்செய்த திருவிளையாடலிதுவாகும், இனிபாண்டியனிடத்தில் சமணர்கள் ஏவிய மதத்த யானையானது விழும்படி முப்புரங்களையுமழித்த பாணத்தைதவிட்டு அதனுயிரைபபோக்கிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

அந்த அபிஷேக பாண்டியன் குமாரனை விக்கிரமபாண்டியனெட்டுதிக்குந் தனது செங்கோல் செல்லத் திறைகொண்டு செல்வம்பெருகி மிடிபோக ஆஞ்ஞாசக்கரம்செலுத்தி புத்தர் சமணர் முதலிய புறச்சமயக்களைகளைந்து வேதாகமப்பயிரை விளையச்செய்து உண்மையாகிய விதிப்படி பத்தியால் வரும்பயனை எல்லாருமனுபவிக்க மனுநீதிசெலுத்தி இந்திரனிமானத்துக்கு வடபக்கத்தருகே கோயிலுண்டாக்கி அருவமும் முருவமும் நீங்கிவந்து விளையாடினன. சித்தமூர்த்திகளின் திருவுருவைப் பிரதிஷ்டைசெய்து திருப்பணிகளுஞ் செய்துகொண்டு வருகிறநாளிலே சூரியகுலத்திலேபிறந்த சோழனெருவன் வஞ்சகனைக் காஞ்சியில்சமணர்கோட்பாடுகொண்டு விக்கிரமபாண்டியனுக்கு விரோதியாய்ச் சோமசுந்தரக்கடவுள் திருவடித்தியானமேநிறைந்த மனத்துடனே வீரசிங்கம்போல் விளங்குகின்ற விக்கிரமபாண்டியனுடனே நேரேபோர்செய்து வெல்லமாட்டாமல் வஞ்சனையினுலே ஜெயிக்கநினைத்து, அஞ்சனம்-கிரவுஞ்சம்-கோவர்த்தனம்-திரிகூடம்-காஞ்சி - குஞ்சரசையம்-எமகூடம்-விந்தமென்கின்ற எட்டுமலைகளிலும் வாசஞ்செய்கிற சமணசாரியர்களுக்கெல்லாம் ஓலையெழுதியனுப்பி வரவிட அங்கங்கிருந்த சமணர்களெண்ணுயிரம்பேரும் உடம்புபோல உள்ளமுமிருண்டு ஆத்திமாலையணிந்த சோழன் வரவிட்ட ஓலைகளை வாசித்துத் தெரிந்து அந்தந்த மலைகளைவிட்டு மேகங்கள்போலிறங்கி எல்லாருமொருமித்துக்கூடிய இருளானது திரண்டு வந்தாற்போலக் காஞ்சீபுரம் வந்துசேர்ந்து சோழன் அரண்மனைப்புறத்திலிருந்து அரசனைவலராலே அவனிருக்குமிடத்திலே சென்று சோழன் முடிமேலே மயிற்பீலியைவைத்து ஆசீர்வதித்து வாழ்த்த அப்போது சோழன் அவர்களைப்பார்த்து வசியமுதலான ஆறுவித்தைகளும் வல்லோர்களை! இப்

போது நீங்கள் ஆபிசாரஞ்செய்து பாண்டியனைக் கொன்றால் உங்களுக்கு என்னுடைய நாட்டிலே பாதிகொடுப்பேன். நீங்கள்போய் அதுசெய்யுங்களென்றான்.

அதற்குத் தவத்தைச்செய்தும் அவத்தையே செய்வார்போருடன்பட்டுப்போய், பாலியாற்றங்கறையிலே மூன்றுகாதவழியகலநீளமாக யாகசாலை வளைத்து யோசனையகலங் குழி, கல்லி, எட்டுக்கோணமாக வேள்விக் குண்டஞ்செய்து, எட்டுவிறகிட்டு வேப்பநெய் கலந்து விஷசெந்துக்களினூனு மிளகுப்பொடியும், ஊற்றெண்ணெயும், அகன்றகுழி நிறையப்பெய்து, உயிர்கொல்லாதவிரதிகள் உயிரைக்கொல்லுங் கொடியபழிப்பைதரும் வேள்விசெய்தனர். அப்படிச்செய்யும்போது காடுகள்-பொதும்பர்கள் - நந்தவனங்கள்-சோலைகள் யாவும்கருகி பக்கத்திலுள்ள ஓடைகள் - வாவிகள் - குளங்களெல்லாம்வற்ற மேகங்களுந்தீய சுவாலைகொண்டு கிளம்புகிற நெருப்புக்குழியிலே யமனைப்போலவும், அஞ்சனமலையைப்போலவும், காற்றுவீசுகின்ற காதுகளும், வாயிலே கிளைத்திருக்கிறகொம்புகளும், மாறுதுறுகிறமதமும், ஊசலாடுகிற ஒற்றைக்கையுமாக விஷம்போற்சீறி எழுந்தது யார்க்குமஞ்சாத ஒருயானை அந்தவேள்வி நெருப்புமவிய மும்மதமுமொழுகவந்த யானையை நீபோய்ப்பாண்டியனை மதுரையுடனே அழித்துவாவென்று எண்ணூயிரஞ் சமணர்களும் எவினர்கள் உடனே அந்தயானை ஈரமில்லாத நெஞ்சினராகிய சமணர்கள் தூர்ப்போதனையாலே நல்லஞானமும் வைதிகரனுஷ்டானமு மில்லாத சோழனுடைய சேனைகள் சூழ்ந்துவர இடிபோல் முழங்கிப் பூமியுங்கிழிய பாதாளத்திலே கால்கள்பதியவும் அண்டமுகட்டிலே தலைமோதவும், ஊழிக்காற்றைப்போலக் காதுகள் காற்றுவீசவும், அக்காலத்துக் கடல்போல்மதங்கள்பெருகவும், வடவாக்கினியைப்போலே கண்கள்நெருப்பு மூளவும், இதன்மதநாற்றந்தெரிந்து திக்கியானைகளஞ்சவும் புறப்பட்டு, மேகத்தின் வயிற்றைக்கிழித்து அதனடிகளைக் கீழேஉதிர்த்தும், தான்முழங்குதலிலுலே திக்குகளைச் செவிடாக்கியும், துவாரம்பொருந்திய துதிக்கையைநீட்டி ஆகாயத்தையளாவிய மலையைப்பிடித்து அதனுலே கடலிலே சுழற்றியும், உரல்போலுங்கால்களையூன்றி யமன்போல் வருகிறயானையின் வரவைக்கண்டவர்கள் போய்ச் சொல்ல விக்கிரமபாண்டியன்கேட்டு மனஞ்சுழன்று கொதித்து யானைகள் தாங்குகின்ற இந்திர விமானத்தையுடைய கோயிலுள்ளேபோய்ச்சோமசுந்தரக்கடவுளை வணங்கித் துதித்து இந்தயானையைக்கொன்று எங்களை ரட்சிக்க வேண்டுமென்று வேண்ட அப்போது ஆகாயத்தினின்று ஒருதிருவாக்குண்டாயிற்று.

எப்படியென்றால் நாம் ஒருவில்வீரனுகி அனுப்பினவர்கள் பெருமைகுறைய அந்தயானையைக்கொல்லுவோம் நீமுன்னேசென்று இந்தகருக்குக் கீழ்த்திசைப்புறத்திலே ஒரு அட்டாலைமண்டப முண்டாக்கென்ன, அதுகேட்டுப் பாண்டியன் உள்ளே பெருமகிழ்வுகொண்டு பொன்மயமான தூண்கள் திசைக்கு நந்நான்காகப்பதினாறு தூண்கள்நிறுத்தி அட்டாலைமண்டபம் அதிவிரைவிலேசெய்துமுடிக்க அந்தமண்டபத்தில் சோமசுந்தரக் கடவுளாகிய வில்வீரன் இரண்டு சந்திரர்போல் விளங்கச் செங்கைகளிலே சங்கக்குழைபணி

ந்து பிரமனுகிய அன்னமுங்காணுததிருமுடியிலே மயிற்கலாபஞ்சூடி இடை யிலே செங்கச்சுக்கட்டி உடைவாளுமிறுக்கி வேதங்களால்முழங்க வீரகண் டாமணியு முழங்காலின் கீழேகட்டி அம்புருத்தூணியு முதுகின்புடைதோ ன்றக்கட்டிதத் தோளில்தரித்தவில்லுடனே பசியவுருக்கொண்டுமன்மதனுமய ங்கும்படியான யௌவன பருவத்துடனே வந்தேறிப் பாண்டியனிடுக்கண்டீர் க்க யானைவருவதைபார்த்து ஐந்துகூப்பிடுதூரததில் அதுவர வில்வளத்து நாணேற்றிக் குணத்தோனிபண்ணிச் சிங்கநாதஞ்செய்து இடக்கையிலே வி ல்லேக்கொண்டு நாரசிங்கபாணத்தைதவைத்து இடக்கால் முன்னே செல்ல வ லக்காதளவும் வாங்கிவிட அதுசென்று அந்த யானையின் மத்தகத்தைக்கிழி க்க உடனே அந்த யானைமேகம்போல குமுறிக் கீழே விழுந்திறந்தது. அது அப்படிச்செத்தபின்பு திக்கியானைகள் தங்கள் பயந்தீர்ந்து நிலைநின்றன, கட வுள் காலாலுதையுண்டு விழுந்த யமன்போலவந்த யானைவிழ மார்க்கண்டே யரைப்போலப் பாண்டியன்காண, யானையின்கூடவந்தவர்கள் யமதூதர்போ லப்பயந்தோட, இருள்முகத்திலேதான்றின உதையசூரியன்போல அத னைற்றியிலே நின்று உதிரம்பெருகச் சோழனது கொடுங்கோலாகியயானை யைப் பாண்டியன் செங்கோலாகிய நாரசிங்க பாணம் கொல்ல செத்த யானை மேல் கழுகு-பருந்து-காகம்-பேய்-பூதங்கள் மொய்க்கக்கண்டு பாண்டியன் ம னமகிழ்ந்து கூடவந்த சமணர்களைச்சீற, உடனே அரசன்குறிப்பறிந்து வீரர் கள் சென்று அவர்கள் கையிலேகொண்ட தடிகளை முறித்துகொம்புகளை உ டைத்து மயிர்ப்பீலியையும், கட்டினபாயையும் கிழித்து வாய்க்கால்களிலே போகவிட்டு மானங்கெடுத்துச் சிலரைத் துரத்தினர்கள். சீலர் அடிபட்டுத் தாங்கள்செய்த கபடமுங் கெட்டுப்பாவமும் பழிப்பு மிகுந்து மழுங்கின தலை யினராகிய சமணர்கள் வருந்தித்துக்கித்து உடுத்தினபாயும் கையிற் செம்புமி ல்லாமலோடிப்போனர்கள் பின்பு யானையைக்கொன்று அட்டாலமண்டபத் திலேநின்ற விற்சேவகன் பாதங்களைப்பாண்டியன் தனதிருகையாலும் பற்றி க்கொண்டு சுவாமி! தேவரீர் இந்தவடிவாகவே இங்கிருக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ள அதற்குடன்பட்டுக் கடவுள் அவனுக்கு வேண்டிய வரங் களுங் கொடுக்கப் பாண்டியன் பரமசிவனைக் காலந்தோறும் வந்து வந்தனை வழிபாடுசெய்துகொண்டு வருகிறநாளில் இராஜசேகரனென்றொரு புத்திர னைப்பெற்று உலகத்தை ஆண்டுவந்தான், இதுநிற்க சோழன் அனுப்பின யானையாகிய மலையில் சாபவடிவுகொண்ட கடவுள் வில்வீரனுய்விட்ட நாசி ங்கபாணம் தங்கிநின்றது முன்னே உலகத்தையெல்லாமழித்து மீளவுமுண் டாக்குகின்ற உருத்திரசத்தியிற் சிலபெற்ற இரணியனை மார்பு பிளந்தசிங்க த்துக்கு நாயகனை உரோமச முனிவந்து தெரிசித்து அநேக தவங்களைச்செய் து தன்போலாலே ஒரு தீர்த்தமுமுண்டாக்கி மேலான பலனையடைந்தான். பிரகலாதனனும் வந்து தவஞ்செய்து வேண்டியவரங்களைப்பெற்றான்.

யானையெய்த படலம்

முற்றிற்று.

ஓ

சிவமயம்.

இருபத்துமூன்றுவது

விருத்தகுமாரபாலரான படலம்.


கலிநிலைத்துறை.

தழைபுலாங்கையமேவியதந்திமேல்விடைமே
லழகர்சேவகஞ்செய்தவாறறைந்தனமவரே
கிழவனுகிப்பின்காளையாய்க்நிஞ்சுகச்செவ்வாய்க்
குழவிபாய்வினையாடியகொள்கையைப்பகர்வாம்.

இதன்பொருள்.

மயிலிறகாலாகிய தழைபைக் கையிலேல கொண்டிருக்கின்ற ரிஷபர்கள் வலிய யானையின்மீது விடைமேலழகராகிய சோமசுந்தரக் கடவுள் சேவகஞ்செய்த திருவிளையாடலைச்சொன்மேனும். இனி, அந்தச் சோமசுந்தரப் பெருமானே கிழவனுகியும், குமரனுகியும், குழந்தையாகியும், விளையாடல் புரிந்த திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

அதன்பின்பு விக்கிரமபாண்டியன் அரசாட்சிசெய்துவருங்காலத்தில் மதுரையில் விரூபாக்கனென்றொருபிராமணன், அவன்மனைவி யுருத்திராபாலுங்கற்புள்ள சுபவிரதை ஆகிய அவ்விருவருக்கும்பிள்ளையில்லாமல் அரோக புண்ணியவிரதங்களை அனுஷ்டித்தப்பின்பு சுத்தமாதர்களிடத்திலண்டுகொண்டு மகாதவங்களைச்செய்து ஒருபெண்பிள்ளையைப்பெற்று கௌரியென்கிற பெண்பிறவிப்பிணியைத் தீர்ப்பதற்கான வுறுதிகொண்ட மனத்தையுடையவளாய்த் தன் தகப்பனைவணங்கி ஐயா இந்தப்பிறவி நீரும்படியான தெய்வமந்திரம் யாதென்றுகேட்க, அதைக்கேட்ட அந்த விரூபாக்கன்மிகவும் அதிசயித்து அரிதான தவஞ்செய்துபெற்ற தன்மகளுக்கு மனக்களிப்புடனேதெவிமந்திரத்தை யுபதேசிக்க அந்த மந்திரத்தைத் தன்பிதாவிடத்திலே தெளிந்து நாக்குத்தழும்பேறச்செபித்து முன்னளிற்செய்த தவக்குறை நிறைவேறப்பிறந்தவள் வளருங்காலத்தில் தகப்பனை விரூபாக்கன் தனதுதவப்புத்திரிக்குத் தகுந்தசைவாகமந்தெரிந்து பிரமசரியனுப் வேதவித்தானமேம்பட்டகுலத்தரசன் எக்காலத்தில் கிடைப்பானேவென்று மனத்துடனே சொல்லிக்கொண்டிருந்தான். அக்காலத்தில் அந்தப்பெண்ணுக்கு எட்டுவயதாய்க் கலியாணஞ்செய்யுங்காலம்வந்துகூட அப்போதொருநாள் ஒருவைணவப்பிரமசாரி வீடுகள்தோறும் பிச்சைவாங்கி உண்கிறவனுப்வேரூர் ஊரிலிருந்து அங்கேவந்து பிச்சைகேட்க, அவனைக்கண்ட விரூபாக்கன் தன்மனையாளிடத்திலுஞ் சொல்லாமல், உறவினரையும் விசாரியாமல், அவனுக்குத்தான் வருந்தித் தவஞ்செய்துபெற்ற கௌரி என்கிற பெண்ணைக்கொடுக்கச் சம்மதித்துப்பயப்படாமல் தாரைநீரை அவன்கையில் வார்த்தான்.



அது தெரிந்து அவன்மனைவியாகிய சுபவிரதையும், மற்றசுற்றத்தாரும் பிச்சைசக்கு வந்தவன் பெண்ணுக்கு மாப்பிள்ளையாதனென்று பெண்ணின் விதியும், பிரமசாரிப்பிராமணன் அதிர்ஷ்டமுங்கண்டு மனந்தளர்ந்து இந்த விருபாக்கன் குலம்-கோத்திரம்-குடி-நலம்-ஒழுக்கம்-வித்தை-ஊர் முதலான வைகளை விசாரிபாமல் எல்லாந்தெரிந்தவனுயிருந்தும் இப்படி தத்தஞ்செய்தாலல்லவோ, ஆனல் விதிவழியேமதிசென்றதென்று துன்புற்று அங்கு பிச்சைசக்குவந்தவன் குடிகோத்திரம் சூத்திரங்களெல்லாம்விசாரித்து நம்முடையகுலத்துக்குத் தக்கவனே, ஆனலும் மாயோன் சொன்ன வைஷ்ணவமதங் கொண்டிருியுங்குற்றமொன்றேயல்லது வேறேயாதொருதோஷங்களுமில்லை யென்று தெரிந்து இனித்தடைசெய்வ தெப்படியென்று கொடுக்கச்சம்மதித்தார்கள் அப்போது தாயுஞ சுற்றத்தாரும் சம்மதித்தபின்பு வேதத்திலே சொல்லிப எட்டுவகைக் கலியாணத்தில் பிரமசாரியமென்கிற முதற்கலியாணப்படி பெண்ணுக்கு ஆபரணங்கள்நிறையப்பூட்டி அக்கினி சாகூியாய் அவனுக்கு விவாகஞ்செய்துகொடுத்தான். அப்படிகொடுத்துப் பின்னும் நல்லவரிசைகளுங் கொடுத்துத் தன் மகளை மாப்பிள்ளைகூட அவனூருக்குப்போய்ச் சேர்ந்துவாழும்படி அனுப்பிவிட்டான் பின்புபிச்சைவாங்கும் பிராமணன் மாப்பிள்ளைக்கோலமாய்த் தரித்திரனுக்குப் பொன்முடிப்புக்கிடைத்தாற்போல மனமகிழ்ந்துலட்சுமிபைக்கூடி வருகிறவன்போலத் தன்மனையிற்போய்ப் புகுதக்கண்ட கொடிய சிலராய்ப் பொல்லாதவராய் வைஷ்ணவ மதங்கொண்டு நடக்கிற தாயுந்தந்தையும் பொருதவர்களாய் வந்த மணப்பெண்ணினுடைய சிவத்தியானமும் சைவாசாரமும் பார்த்து வெந்திருக்கிற தங்கள் தோள்கள் பொல மனமும்வெந்து, அந்தக் கௌரிபைவேறுகவொதுக்கிவைத்து, அவளை விரும்பாதவர்களாய் நிந்தித்துவந்தார்கள். அப்படிநிந்தித்துவந்தமாமனரும் மாமியும் ஒருநாள் தங்களுறவினரில் கலியாணமென்று வீட்டைப் பூட்டித் தனியே ஓரிடத்திலிருக்கச்செய்து தாங்கள் கலியாணம் நடக்கிறவூருக்குப் போனர்கள். அப்படிஅவர்கள்போனபின்பு உள்ளழுக்கைப்போக்குவதுதிருநீறென்னு மூபநிடதங்கள் சொல்லத்தெரிந்தும், அது பூசாமல் மண்பூசுகின்ற வைஷ்ணவர்கள் வீட்டிலே தனியே யிருக்கிறவள் ஐயோ? எனது தோஷம் போக ஒருசிவனடியாரையுங்காணப்பெற்றிலேனே, இன்று என்கண்ணுக்குத் தோஷ முண்டாகின்றதே யென்று கவலைகொண்டவளாய் சிவனடியார்க்கு அன்புசெய்யாதநெஞ்சே இரும்பு. அச்சிவனடியார்களுக்குஏவல்செய்து அவர்கள் குறிப்பின் வழிநடவாத தேகமே மரம் காது கண் முதலான வைத்தும் அவ்வடியார்கள் விஷயத்திலே செலுத்தாவிட்டால் அவ்வுறுப்புகள் மரப்பாவையுறுப்புகள் சைவநெறி யல்லாத தவநெறிகளெல்லாம் பவநெறியென்று தபித்துப்பின்னும் உயிர்களுக்கெல்லாம் முயிரான சிவன். அவனது ஞானம் பிறந்தவர்க்கு மனம் வாக்குக் காயங்களொத்த பத்திமார்க்கம் கிடைக்கும். அந்தப்பத்திவழியே நடக்கிறவர்களுக்குதியானவடிவு சிவனடியார்திருவேடமல்லவோவென்று துன்பப்படுகிறவளிடத்தில் அவன் நினைத்தபடியே சௌந்தரபாண்டியனு யாசாண்ட கடவுள் கௌரிக்கருள்செய்யுங் காலமிதுவேயெ

ன்று காதிலும்-கழுத்திலும்-மார்பிலும்-தலையிலும்-தோள்களிலும் கைகளிலும் உருத்திராக்ஷங்கள்பூண்டு தம்மைப்போலவே நெடுங்காலஞ்சென்ற ஒரு பெரிய பழையபுத்தகமுங் கக்கத்திலேகொண்டு கெண்டைமீன்முள்ளுப்போலநரைத்தநரையும், முதிர்ந்தத்திரைவுகளும், களைக்கிறதநஞ்சும், சரிந்தகோவணக்கட்டும், தலைநடுக்கமும் உத்தரியந தரித்த திருத்தோளும், முப்புரிநூல்கிடந்தலையும் விபூதியணிந்தமார்பும், விரித்தகுடையும், தடியையூன்றிக்குனிந்த நடையுங் கொண்டு தனியராய் வெகுகாலம் பட்டினிகிடந் திளைத்தவர்போலே வருந்திவாடி ஒரு கிழப்பிராமணராய் வந்து வீட்டிலே நுழைய ஆதைக்கண்டகௌரி மிகுந்த அன்போடெழுந்து மேன்மேலானபக்தியுடனே ஆசனமிட்டிருக்கச்செய்து கைகுவித்து இந்தச்சிவவடிவைக்காண என்னதவத்தை அடியேன் செய்தேனேவென்று கொண்டாட அதற்குவந்த கிழப்பிராமணர் நான்மிகவும் பசித்துன்னிடத்திலே வந்தேனென்ன கௌரி எங்களவர்கள் வீடுபூட்டிக்கொண்டு போனார்களே நானென்ன செய்வேனென்ன பிராமணர் சீபோய்க்கதவைத்தொடு பூட்டுவிடுமென்ன, அப்படியேகௌரிபோய்த் தொடுமுன்னே பூட்டுத்திறக்கச்செய்து பெண்ணே சீக்கிரம் சமையலாகவேண்டுமென்ன, அப்போது பார்ப்பதியின் திருவடிகளில் அன்பைச் செலுத்துகின்ற கௌரியானவள் உள்ளேபுகுந்து விரைவிலேசமையல்செய்து வெளியேவந்து செம்பிலே ஜலங்கொண்டு கொடுத்துச் சாப்பிட எழுந்தருளுமென்ன எழுந்த பிராமணர் பாதம்விளக்கி அந்நீரை சிரசின்மேற்றெளித்துக்கொண்டு தன் மனமாசுபோக்கி அவரை உள்ளேகொண்டுபோய் ஆசனத்தின்மேலெழுந்தருளப்பண்ணி பரிகலத்திலேமுல்லையரும்புபோலுஞ சோறும்-பருப்பும்-நெய்யும்-பல பொறிக்கறிகளும்-பலகாரங்களும்-பழங்களும் பரிமாறி உபசரித்தூட்ட ஐயர் அமுதுண்டுபசிதீர்ந்து தேவாமிர்தமுண்டவர்போலக் கிழத்தனம்போய் மன்மதா கிருதியாய், யௌவனகுமாரனுப் கௌரிகாண எழுந்த ருளியிருந்தார். எப்படியென்னில், விபூதிபோய் அது சந்தனமாகவும், உருத்திராக்ஷங்கள்போய் அவை பொன்னுபரணங்களாகவும், மூப்புப்போய் யௌவனமாகவும் விளங்குகின்ற தேஜோரூபத்தை கௌரிகண்டு நடுநடுங்கிக் கைகளை நெரித்துத் திகைத்து வேர்த்துக்கூசி ஒருபக்கத்திலே யொதுங்கி நின்றாள் அப்போது கலியாணத்துக்குப்போன வைஷ்ணவாபிமானிகள் திரும்பிவந்து தங்கள் வீட்டிலேநுழைய உடனே பதிறுறுவயதுள்ள பிராமணனைவர் நெற்றியிலே காப்பிட்டு ஒரு பச்சைப்பிள்ளை வடிவமாய் எழுதுதற்கரிய இருக்கு-யசுர்-சாமம்-அதர்வணமென்னும் வேதங்களாகிய சிலம்புகள்புறத்திலே கிடந்து சத்திக்க அன்பர்களுடைய இருதயமென்னும் மலரோடையில் மலர்ந்து சிவானந்தமாகிய தேனைச்சிந்துகிற தெய்வத் தாமரையாகிய தன் சிற்றடியின் பெருவிரலைச் சுவைத்து கண்ணீர் ததும்பும்படியாக வாய்விட்டுக் கதறியழுது அணையாகிய ஆடையிலிருந்தார் சர்வலோகங்களையுஞ் சிருஷ்டித்துக் காத்தருளுகின்ற பெருமான்.

அப்படிக்கிடக்கிற சோமசுந்தரக் கடவுளாகிய பிள்ளையைக்கண்டு மாமியானவள் இந்தப்பிள்ளை எதென்று கௌரியைக் கேட்க, கௌரி அம்மே தேவதத்தன் மனைவியோடும் இங்கேவந்துகொஞ்சநாளம் இந்தப் பிள்ளையை

பார்த்துக் கொண்டிருவென்று சொல்லிப்போனர்களென்று சொல்லுதற்கு முன்னே மாமியானவள் கண்கள்சிவந்துசீறி எலும்புகளை யணிந்துகொண்டு சுடுகாட்டிலே திரிகிறவனிடத்தில் அன்பு செய்கிறவனுடைய குழந்தைக்கு நீ அன்புள்ளவள் ஆகையாலே எங்களுக்கு நீ தகாத ஆசாரமுள்ளவள், இனி இந்தப்பிள்ளையை யெடுத்துக்கொண்டு வெளியே போவென்று துரத்திவிட்டாள். அப்போது கௌரி தாயில்லாத பிள்ளைமுகத்தைப்பார்த்துத தெருவிலேநின்று துக்கப்படுகிறவள் மனமே கோயிலாக வாசஞ்செய்கிற மதுரேசனை மனத்திலேலே தியானித்துக் கௌரியின் திருமந்திரத்தை செபிக்குமளவில் அழுதபிள்ளையை விடைமே லழகுக ஆகாயத்திலே தோன்றக் கண்டு பின்னும் அக்கடவுளிடப்பாகத்தமர்ந்த தேவி திருமந்திரத்தை உச்சரிக்கின்றவளைத் தேவிவடிவாகச்செய்து விடைமேலேற்றிக்கொண்டு ஆகாயமார்க்கத்திலே தேவர்கள் பூமழைபொழியச் சொக்காநாத ரெழுந்தருளினர். அதுகண்ட உலகத்தா ரெல்லோரும் அதிக ஆச்சரியங்கொண்டு கொண்டாடினர்கள்.

விருத்தகுமாரபாலரானபடலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

இருபத்துநான்காவது

மாறியாடினபடலம்.

திருத்தாய்மதுராபுரிமேவியசித்தாகியசெல்வர்
திருத்தாயினையவருமாய்மழவுமாய்வேடங்கொண்டடலேற்றி
னிருத்தாய்விளையாடியவாடலையுரைத்தனமினிமன்று
ணிருத்தாயவர்மாறினின்றுடியநிலைசிறிதுரைசெய்வாம்.

திருத்த முடையவரால் மதுரையின்கண் எழுந்தருளியிருக்குஞ் சித்தராகிய சோமசுந்தரக் கடவுள் கிழவனுகியும், குமரனுகியும், குழந்தையாகியும் வேடந்தாங்கி விளையாடி விருஷபாரூடராய் வெளிவந்தருளிய திருவிளையாடலைச்சொன்மேலும். இனி அந்தக்கடவுள் வெள்ளிபம்பலத்தின்கண் கான்மாறியாடிய திருவிளையாடலைக் கொஞ்சம் சொல்லுகின்றேம்.

பின்பு விக்கிரமபாண்டியன் தன்புதல்வனுகிய இராஜசேகர பாண்டியனுக்குப் பட்டங்கட்டிவைத்துப் பிரமலோகமுதலிய லோகங்களுக்கெல்லாமேலான சிவலோகத்தையடைந்தான். பின்பு இராஜசேகரபாண்டியன் உலகமெல்லாம் தன்னதாக அரசுசெலுத்தி ஒருகுடை நிழலிலாண்டு ஆனந்தவடிவாய் வெள்ளியம்பலத்துளாடுகின்ற சோமசுந்தரக்கடவுள் திருநடனத்திலே அன்புமிகுந்து அந்தப் பாதசாஸ்திரம்தவிர அறுபத்துமூன்றுகலை ஞானங்களுந்தெரிந்து வருகிறகாலத்தில் கோச்செங்கட்சோழனலே பூசிக்கப்பட்டுக் காவேரிக்கரையிலே திருவானைக்காவிலே வளர்கிற கடவுளினிடத்து அன்பு பெருகினவனுய் அறுபத்துநான்குகலைஞானங்களுந்தெரிந்த கரிகாற்சோழன் அரசாட்சிசெய்யும்போது அவன்சபையிலிருந்து ஒருபுலவன்வந்து பாண்டியனைக்கண்டு ஐயா? எங்கள் கரிகாற்சோழனுக்கு அறுபத்து நான்கு கலைஞானங்களுந்தெரியும் உமக்கு பாதசாஸ்திரம் ஒன்றும் தெரியாதிருக்கின்றதே யென்று துதித்துச் சொல்ல, பாண்டியன் கேட்டு மறுதேசத்து வித்துவான் சொல்லுகிற சொல்லிலுலே மிகவுமான்முண்டாகியாகுலசித்தனுய் வேதாந்தமாகிய வெள்ளியம்பலததிலே திருநடனஞ்செய்கிற கடவுளாடலை நானும் கற்று ஆடுதற்கு என்மனம்விரும்புகின்றதே. இதுவும் எனதாண்டவன் அருள்விதிதானென்று அதுகற்கத்தொடங்கி பாதநூலளவு கண்டவராய்அந்தநூலின்படி ஆடவும்வல்ல நாடகநடைதெரிந்தவித்துவான்களைத்தேடி அவ்வித்துவான்களுக்குத் தனதுமகிழ்விலேவேண்டியவஸ்திராபரண திரவியங்கள் போதும்போதுமென்னக்கொடுத்து இராஜசேகரபாண்டியன் கசடறப்பாதசாஸ்திரங்கற்ற வகையாவது பாவம்-அராகம்-தாளம்-ஆகியமூன்றுஞ்சொன்னமுறைப்படிபாதகமென்பதில்அங்கம்-உபாங்கம்-பிரத்தியாங்கம்-முகாகம் கரப்பிரசாரம்-சிரக்கர கருமம்-கரகேத்திரம்-கரசரணம்-தானகம்-சுத்தசாரி



தேசிசாரிநியாயம்விருத்தி-பிரவிசாரம்-பூமண்டலம்-ஆகாசமண்டலம்- சுத்தக்காரணம்-உற்புலிதகாரணம்-அகங்ககாரம்இரேசிதம்என்றுசொல்லப்படுகிற இருபதுபேதமும் கற்றுப்பின்னும்அவற்றிலேமமேபாவமுதலாகிய எட்டுவகை நிருத்தங்களில் சாரிநிருத்தமாகிய தாண்டவமகமார்க்கம்-தேசி-வடுகு-சிங்களம்என மூன்றும். அதனிலே ஆறுமுவிரண்டுபதமும், இரேகாதி அங்கப்பிரதினெட்டும், நால்வகைக்காரணமும், இருவகைக்காரணமும், நால்வகைபுரிகை முதலாகிய பதிணறும், காவான் மஞ்சுமுதலாகிய இரண்டும், மடிப்புவகை எழுநான்கும், சுத்தசாரிபெனும்பூசாரி பதிணறும், ககனசாரிபதிணறும், திக்கிராந்த முதலாகிய முப்பத்திரண்டு தேதிசாரிகளும், தேர்ச்சக்கரமுதலாகிய ககனசாரிகைகள் முப்பத்தைந்தும், வித்துவற் பிராந்தமுதலாகிய சாரிபத்தொன்பதும்ஆகிய இவைகளெல்லாம்புட்பபுடத்திலக்கணமாகிய முதற்பொருள்களை ஆசவாத்தியமுன்பொருள் முதற்கலாசமுதலாகிய பாடபேதங்கள் பதிணறும், படகபேதம் பத்தொன்பதும், அளகமுதலாகிய பாடவகைகள் இருபத்தெட்டும், அதில் பூசலவார்த்திகத்துடனே ஐந்துவகைச சச்சபுட முதலாகிய தாளமாத்திரையும், மாத்திரையின்கதிகளும் கீதமும்,பாடமும், எழுந்தும், மணிபந்துமுதலிய கீதத்தில் வருந்த கட்டளை இருபத்தெட்டும், காளைமுதலியகட்டளைமுப்பத்தைந்தும், நன்முகப்பொருந்திப்பாவாதி மூன்றுலகடபீரூக வுண்டாக்கப்படும் கூத்தகமார்க்கம் என்று சொல்லப்பட்ட இந்தக்கூத்தைக் கற்கும்போதுபாண்டியன் தன்னுடம்பில் மிகவும் வருத்தத்தையடைந்து இந்தவருத்தம் நான்கு வேதங்களாலுந்தெளியலாகாதபொருளாய் ஞானமாய் வெள்ளியம்பலத்திலாடுகின்ற சோமசுந்தரக் கடவுளுக்குமுண்டல்லவா வென்று தன்னினைவிலே கொண்டு பிரமனும் விஷ்ணுவுங் காணக்கூடாத பாதமொன்றே நெடுங்காலமாய் வருந்த நிற்கின்றது ஐயோ? இப்படி வருத்தஞ் செய்வதாகிய அந்தக்கூத்தை நான் கண்டிருக்கலாவதே, இதுவேதருமமென்று மனதுநொந்து பிறவிக்கடலைக் கடக்கவெண்ணினவர்கள் வந்துதெரிசிக்க ஆடுகின்றஆடலை நானெப்படித்தடுக்கலாகும். தடுப்பது தகாது அப்படிதடுக்காவிட்டால்பாதம்வருந்துமல்லவோ ஆனால் இந்தவருத்தம் போக இப்படிச்செய்தால் நன்றென்று துணிந்து எழுந்துபோய் னிசிராத்திரியில் சோமசுந்தரக் கடவுளுக்கு அளவிறந்த பூசைகள் நான்கு சாமமுஞ்செய்து திருவடிகளைத்துதித்துப் பின்பு வெள்ளியம்பலத்து ளாடுகின்ற சோதியின் மெஞ்ஞானக் கூத்தைக்கண்டு மனமகிழ்ந்துவணங்கி ஆனந்தக்கண்ணீரொழுகக் கைகளைத்தலைமேற்குவித்துநின்று எம்பெருமானே தேவரீர் ஊன்றினகாலைத் தூக்கித் தூக்கினகாலை ஊன்றி இன்றுநான் தெரிசிக்கமாறியாடி என்வருத்தமெல்லாம் போகும்படிச்செய்யவேண்டும். இப்படி நீர் செய்யாதிருந்தால் இந்தச்சரிகைக்கத்திமேல்விழுந்து இறந்துபோவேனென்றுகத்தியைநட்டு அதில்விழுந்துசாவத்தொடங்குமுன்னே இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கி அந்த நிருமலக்கடவுள் மாறியாட அதைப்பாண்டியன்கண்டுசேவித்துத் தன்கவலைகளெல்லாந் தீர்ந்து பரமானந்தக் கடலின்மூழ்கி அப்படித் தேனில்மூழ்கினவண்டுபோல சச்சிதானந்தக் கடலின்மூழ்கியெழுந்து பின்னும் திரிகரணங்களு மொருமித்து அன்புவடிவாய் நின்று,

பெரியாய்சரணஞ்சிறியாய்சரணங்
கரியாகியவங்கணனேசரண
மரியாயெளியாயடிமாறிநடம்
புரிவாய்சரணம்புனிதாசரணம்.

நதியாடியசெஞ்சடையாய்நகைவெண்
மதியாய்மதியாதவர்தம்மதியிற்
பதியாய்பதினெண்கணமும்பரவுந்
துதியாய்சரணஞ்சுடரோசரணம்.

பழையாய்புதிதாய்சரணம்பணிலக்
குழையாய்சரணங்கொடிவெண்ணிழுவா
ளுழையாய்சரணம்முருகாதவர்பால்
விழையாய்சரணம்விகிர்தாசரணம்.

இருளாய்வெளிவாய்சரணம்மினையும்
பொருளாகநினைந்துபுரந்தரன்மா
தெருளாதநடந்தெரிவித்தனையா
ளருளாயசரணமமழகாசரணம.


அயனத்தினைனப்படுமாடரவச்
சயனத்தவனைதருதத்துவநால்
வயனத்தவவானவர்வானவதேச
னயனத்தவணுயகனேசரணம்.

கதவெங்கரியின்னுரியாய்சரண
முதலந்தமிலாமுதலேசரணென்
றதிர்பைங்கழனூபுரவண்டலறும்
பதபங்கயமுன்புபணிந்தாசன்.

இவ்விதமாகத்துதித்துப் பெருமானுடையதிருவடிகளில்விழுந்து சேவித்தெழுந்து நின்று எம்பெருமானே! இப்படியே எக்காலமும் இந்தத் திருநடனத்தை எல்லாருங்கண்டு தெரிசிக்க வெள்ளிபம்பலத்திலே நின்றருள அடியேன் வேண்டுகின்ற வரம் அருளவேண்டுமென்று வணங்குகிறேன். அப்படியே அன்றுமுதல் இன்றளவும் கால்மாறினபடியே கடவுள்நின்றருளினார்.

கால்மாறியாடினபடலம்

முற்றிற்று.



சிவமயம்.

இருபத்தைந்தாவது
பழியஞ்சினபடலம்.

அறுசீராடியாசிரியவிருத்தம்.

ஈறிலான்செழியனன்புக்கெளியவனாகிமன்றுண்
மாறியாடியகூத்தென்சொல்வரம்பினதாமேகங்கை
யாறுசேர்சடையான்றூணேரும்பழியஞ்சிந்தென்னன்
றேறலாமனதைத்தேற்றுந்திருவிளையாடல்சொல்வாம்.

இதன்போருள்.

மூடிவில்லாதவராகிய சோமசுந்தரக்கடவுள் பாண்டியனது அன்புக் கெளியவராகி வெள்ளியம்பலத்திற் கான்மாறியாடிய மகிமையை யான்சொல்லுந்தகைமைத்தோ! இனிகங்கையைச் சடையிற்றரித்தருளிய அந்தக்கடவுள் பாண்டியன் பழியஞ்சினவனாகித் தெளியாது உள்ளங்குழம்பியிருந்த காலத்தில் அவனைத்தெளிவித்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

இராஜசேகரபாண்டியன் இப்படியாகச் சிலகாலங்கழிந்தபின்பு தண்புத்திரனை குலோத்துங்கபாண்டியனுக்குத் தன் அரசாட்சியைக் கொடுத்துவினைகளைக்கடந்து வெள்ளியம்பலத்தி லாடுகின்ற கடவுளின் திருவடிநிழலிலே கலந்து பேரின்பத்தை யடைந்தான். பின்பு குலோத்துங்க பாண்டியன் கூடனுயகனைத் தினந்தினஞ் சென்று வழிபடுகிற நீங்காதடக்கி நியமத்தைக் கொண்டு பதினுயிரம் பெண்கள் போகங்களையனுபவித்து ஒவ்வொருபெண்ணுக்கு அவ்வாறு பிள்ளைகளாய் அறுபதினுயிரம் பிள்ளைகளைப்பெற்று அந்தப்பிள்ளைகளின் மூத்தப்பிள்ளையான அனந்தகுணபாண்டியன் இளமையான ஆண்சிங்கம்போலக் கலைஞானங்களும், இரதம் பானையேற்றம், குதிரையேற்றம், கத்தி கேடகம், வில்வித்தை முதலியவைகளுங்கற்று வல்லவனாகஇப்படியே எல்லாப்பிள்ளைகளும் வல்லவராய் வருகிற செய்கையைக்கண்டு கடல்சூழ்ந்தவுலகமெல்லாம சந்தோஷித்து வாழும்படி அரசுசெலுத்திவருகிறகாலத்தில் திருப்புத்தூரிலிருந்து ஒருபிராமணன் தன்மனைவியுடனேபெற்றகைக்குழந்தையை யெடுத்துக்கொண்டுகாடுகடந்துமாமனிருக்கிற மதுராபுரியை நோக்கி வரும்போது வழியிலே தாகத்துக்கு நீர்வேண்டுமென்றுதாகத்துடனேவருகிறமனைவியை ஒருபெரியஆலமரத்தினிழலின்கீழே குழந்தையுடனே இருக்கச்செய்து தான்நீர்தேடிச்சென்றான். அதற்குமுன்னே மிகுந்த இலகளையுடைய அந்த ஆலமரத்தின்மேலே வெகுநாளைக்குமுன்னே ஒருவனெய்த அம்புதைத்துக்கோத்துக்கிடந்தது. காற்றலக்க அசைந்து கீழே யிருக்கிற பிராமணப் பெண்ணின் வயிற்றிலே விழுந்து உருவத் தைத்தது. அதுதைத்தவுடனே அந்தப்பிராமணப் பெண்ணுக்கு ஆயுசுமுடிவுகாலமாய் இறந்துபோனாள். அப்போது அவ்விடத்திலே அம்புகோத்த வில்லையுடையவனையொ

ருவேடன் வெயிலுக்கொதுங்க நிழல்தேடிவந்து அந்தமரத்தினிழலி லொரு புறத்திலே இளைப்பாறிநின்றனன் உடனே தண்ணீர்க்குப்போன பிராமணன் குளங்கண்டு தண்ணீர்முகந்து திரும்பித் தன் மனையாளிருக்கிற ஆலமரத்துக்குவந்து ரத்தவெள்ளம்பெருக இறந்துகிடக்கிற மனைவியைப் பார்த்துக் கூர்மையான அம்புதைத்துருவி யிறந்துபோனளென்று தெரிந்து பெண்ணே உனக்கென்னகாரணம் இப்படிநேரிட்டதென்று மத்திலுடைபட்ட தயிர்போற்கலங்கி மனந்தளர்ந்து மதிகலங்கி இந்தப்பெண்கொலை செய்தவர் கள்யாரோவென்று தெரியாதவனுப் தேடும்போது அந்தமரத்தி னிழலிலே ஒருபுறத்தில் அம்புவில்லுமாக வெயிலுக்கொதுங்கி நிற்கிற வேடனைக்கண்டு இவனே செருபபுப்போட்டகால்களும், கத்திவைத்துக்கட்டிய கச்சையும் அம்பேற்றிய வில்லுமாய்க் கொலைசெய்யுங் கோலமாக இவ்விடத்தி னிற்கிற திலே இவனே என்மனைவியைக் கொன்றனன்என்று மதித்து எண்டா வேடா! யமன்போல் என்மனைவியைக் கொன்றுய் கொன்றவன் நீயேயாதலால் அரசனுணை அப்பாலே செல்லக்கூடாதென்று ஆரவாரித்து அவனைப்பற்றி இறந்த மனைவியை முதுகிலே சுமந்து பிள்ளையை இடையிலேகொண்டு பால்வேண்டி யழுகிற பிள்ளைமுகத்தைப் பார்த்துப்பார்த்துக் கண்ணீர்விட்ட முதுசென்று பாண்டியனுடைய மதுரைக்குவந்து உள்ளே குற்றமில்லாதவே டனை முன்னே நடத்திக்கொண்டுபோய் நிறுத்தித் தன்னுடைய மனையாளு டலை நேரேகிடத்திப் பாண்டியனுடைய மந்திரிமுதலானேர்கள்கேட்கக் கண் களிலே நெருப்புச்சிந்தக் கைகளை உயரத்தூக்கி அபயமிட்டுச் சொல்லுகின் றனன்.

ஐயா! இராஜநீதி கோணுதராஜசிங்கமே! ராஜலட்சுமி விளங்குகின்ற மார்பனே சந்திரகுலத்திலேபிறந்து குற்றஞ் செய்தவனுக ஒப்புக்கொண்டு கையை அறுத்துக்கொண்டவனே உனக்கு அபயம் அபயம், அரசனைனவன் தூங்கும்போதுந் தனது ஆக்கினைவழுவாமல் உலகங்களை ரக்ஷிக்கிறவனென் பது இந்தவேடன்செய்த கொலையை விசாரியாவிட்டாலெப்படி மெய்யாகும் என்றுமுறையிட வாயில்காப்பவர்கள் இதைக்கண்டு பாண்டியனிடத்தே சென்று ஐயா? ராஜாதிராஜனே நமது அரண்மனைக்குமுன்னே ஒருபிராமணன் தன்மனையாளைக் கொலைசெய்தானென்று ஒருவேடனை முன்னேவிட்டு இறந்த பிணத்தையும் இங்கேகொண்டுவந்துபோட்டுத் தானெருவனுய்ப் பரிதபிக்கி ன்றனன்என்றுதெரியச்சொன்னர்கள் அதுகேட்டபாண்டியராஜன் என்குடை நிழலும் என்காவலும் செங்கோலும்பயந்தீர்த் தரசாளுகின்றநீதியும்உலகத் தில் கலிதோஷம்போகத்தாங்குகின்ற பொறுமையும் நன்றுயினவென்று வெ குண்டு வெளியேவந்து பிராமணனிற்கிற நிலையைக்கண்டு மெலிந்து ஓய் பிரா மணு? நீவந்தகாரியமென்ன? என் துன்பப்படுகின்றுய் உள்ளதைச் சொல்லெ ன்ன பிராமணன்பாண்டியனேநோக்கி உயர்ந்தநீதியைச் செலுத்துகின்ற ரா ஜனே? கேளுமென்று நடந்தவரலாறெல்லாஞ்சொன்னன். கேட்டபாண்டிய ன்பிராமணன்சொன்னதெல்லாம் உள்ளேகொண்டு வேடனைப்பார்த்து உன் செய்தி யென்னவென்ன ஐயா சுவாமி நான் வெயிலிலினைத்து அந்தமரத்தி னிழலிலே ஒருபுறத்தினின்றேனையல்லது நான்கொன்றவனல்லேன். வேறே கொன்றதையும் யான்காணேன் என்ன, அதுகேட்டு முன்னே நின்றவர்கள்

இவள் மார்பிலே அம்புபட்ட தெப்படியென்ன வேடன் அம்புபட்டிருந்தது மெய்யே நான் அங்குநடந்த செய்கைகளொன்றுந் தெரியேனென்றான் அப்போது மந்திரிகள் கொலைசெய்தவன் கொன்றே னென்பானேனை அல்லாமலும் வேடன் வார்த்தையிது மெய்யுண்டோ, இவனைக்கண்டிருந்தாலல்லது மெய்யிளங்காதென்ன, அதை அரசன்கேட்டு அப்படியே செய்புங்களென்ன, தண்டனைசெய்வோர்கள் தண்டித்து உண்மையைச் சொல்லென்று கேட்க யாதொரு குற்றமுஞ் செய்யாத வேடன்முன்னே சொன்னபடியே சொல்லித் தன்னு லொரு தோஷமு மில்லாமைபாலே அவ்வேடன் என்னதான்செய்தான். தண்டிப்பவர்களைப்பார்த்து இன்னும் நீங்கள் நன்றுய் விசாரியுங்கள் நான்தண்டிக்கப்படுவேனல்லேன் என்றுசொன்றான். அதைப பாண்டியன்கேட்டு இந்தவேடன் எவ்வளவு தண்டனைசெய்தாலும் சொல்லுவதொருபடியே சொல்லுகிறான் கொலைசெய்தவனுக முகத்திலே தோன்றவில்லை அல்லது இந்தப் பார்ப்பானுக்குச் சத்துருக்கள் யாராயினுமிருந்து கொன்றார்களோ? அல்லது மிருகங்களோ? பக்ஷிகளோ? இன்னும் வேறே யாரோ இவனைக்கொலைசெய்ததனாலே என்னபயனுண்டாகும் அல்லது இந்த வேடனுவது இன்னும் வேறையாராவது மிருகங்களை யெய்தபாணம் தப்பி இவள்மேலே விழுந்ததோ? இந்தப் பிராமணத்தி இறந்தகாரணம் தெரியவில்லையே யென்று விசனப்பட்டுப் பின்னும பாண்டியன் சாஸ்திரிகளை நோக்கிச் சாஸ்திரங்களாலே விசாரித்துச்சொல்லுங்களென்ன சாஸ்திரிகள் ஐயா இதநியாயம் சாஸ்திரங்களாலே தெளியத்தக்கதன்று. தெய்வத்தாலே தெளியப்படுவதென்ன, பாண்டியன் பிராமணனைநோக்கி நானிதை நன்றுய் விசாரித்து உன்கவலையைத்தீர்ப்பேன் நீ யஞ்சவேண்டாம். உன்மனைவிக்கு மயானக்கடனைமுடித்துப் பின்பு இங்கே வாவென்றனுப்பிவிட்டு வேடனைக் காவல்வசப்படுத்தி தன்மனைவிக்குச்செய்யுங் கடனைச்செய்து வந்தபிராமணனை தன் அரண்மனைவாசலிலிருக்கச் செய்து தான்போய்த் தங்கள் குடிக்குலதெய்வமாயிருக்கிற சோமசுந்தரக் கடவுள் சந்நிதானத்திற்சென்று கடவுளைவணங்கி சுவாமி! இந்தவேடனே பிராமணத்தியைக் கொன்றானே? அல்லது வேறேயாவராயினும் வேறொரு விதங்களாலே கொல்லலாயிற்றே இது தருமசாஸ்திரங்களாலே தெரிந்துகொள்ளக் கூடாததாயிருக்கின்றது தேவரீர் திருவருளினாலே தெரியப்படுத்தவேண்டுமென்று மிகவும் வேண்டுக்கொள்ள அப்போது ஆகாயத்திலிருந்து ஒரு அசரீரிவாக்கு இந்தப்பட்டணத்துக்கு வெளியே ஒருபுறத்திலுள்ள செட்டித்தெருவில் ஒருகலியாணம் நடக்கின்றது அங்கே நீ அந்தபிராமணனையுங் கூட்டிக்கொண்டுவந்தால் உனக்குத்தெளியாத செய்தியெல்லாம் தெளியச்செய்கிறோமென்றுசொல்ல பாண்டியன் தன் இரண்டுகாதுகளு நிரம்பக்கேட்டுத தன் அரண்மனைவாயிலிற் காத்துக்கொண்டிருக்கிற பிராமணனோடு கூடிப் பகற்காலத்தைக்கழித்து இராத்திரிவந்தபின்பு தான் வேற்றுருவங்கொண்டு அந்தக்கலியாணவீட்டுக்குள்ளேபோய் ஒருபக்கத்திலே சுகமேயிருக்கும்போது அன்றையதினம் கடவுளருளாலந்தப் பிராமணனும் பாண்டியனுங் கேட்கயமனுலே அனுப்பப்பட்ட தூதர்கள் அந்தவீட்டிலே கலியாணமாப்பிள்ளைக்கு ஆயுள்முடிந்ததினாலேவந்து ஒருதுதனமற்றொரு தூதன்பார்த்து

அண்ணேன்? நமதரசனுகிய எமதருமராஜன் இன்றையத்தினமே இவனுயிரைக் கொண்டுவாருங்களென்றனுப்பின வுத்தரவின்படி உடம்பிலே யாதொரு வியாதியுமில்லாதிருக்கிற இந்த மாப்பிள்ளையினுயிரை எவ்விதத்திலே நாம்கொண்டுபோவதென்றுகேட்க, அந்தத் தூதன் வழிநடந்துவந்து நிழலுக்கொதுங்கியிருந்த பாப்பாத்தியை எக்காலத்திலேயோ மரத்திலேயிலைதத்துக்கிடந்த அம்பைக் காற்றினல் விழச்செய்து எப்படி அவளுயிரைக்கொண்டுபோனேம், அதுபோல இந்தக்கலியாணத்திலே கொட்டுகிற மேளவாத்தியங்களுக்கு மருண்டு கன்றின்றபசு கட்டுத்தாம்பை அறுத்துக்கொண்டுபோய்ப் பாயச்செய்து இவனுயிரைக்கொண்டுபோவோமென்றுன் அந்த வார்த்தையைப் பாண்டியன்கேட்டு ஓய் பிராமண! கேட்டாயோவென்ன, பிராமணன் மெய்யேகேட்டேன் இங்கே இந்த மாப்பிள்ளையானவனிறந்தால் அப்படியே என்மனைவியிறந்ததுமெய்தான். ஆகையாலே என்மனக்கவலைதீர இந்த மெய்யைக்காணவேண்டுமென்று பாண்டியன்கூடவே பிராமணனுமிருந்தான். அப்போது மிகவும் சம்பந்தமான பலபந்துக்களும் நெருங்கிக்கூடிக்கலியாணஞ்செய்யத்தொடங்கிக் கொட்டுகின்ற பலவாத்தியங்கள் முழங்கக்கூடியபெரிய ஓசைக்குப்பயந்து கட்டியிருந்த கயிற்றையறுத்துக் கொண்டுபோய் ஒரு கன்றுத்தாய்ப்பசு ஓடிப்பாயஅதுபாய்ந்தவுடனேமாப்பிள்ளையிறந்துபோனுன்.

அப்போது மணமகனே பிணமகனுய், மணப்பறையே பிணப்பறையாய், மங்களவாழ்த்தோசைபோய் அழுகைக்குரலோசையாய் முடிந்தன ஆதலால் ஒருக்ஷணப்பொழுதுக்குள்ளே பிறந்து முடியும்படியான இந்தத்தேகத்தால் வரும்பயனை அறிவுடையோரடைவார்கள். அறிவில்லாருக்கிந்தத்தேகத்தாலொருபயனுமில்லை என்னைக்கண்ட பிராமணன் ஐயோநான் எனிப்படி வீண்வளர்த்தேனென்று மனைவியிறந்துபோன துன்பத்திலும் அதிகதுன்பங்கொண்ட பிராமணனேடே பாண்டியன் தனதரண்மனைக்குச்சென்று மந்திரிகளுக்கும் எல்லாருக்கு மிந்தவுண்மையைத் தெரிவித்துப் பிராமணனை இன்னுமொருகலியாணம் செய்துகொள்ளச்சொல்லி அதற்குத்தக்க பொருள்களைக்கொடுத்து அவனைப்போகவிட்டு காவற்கிடங்கிலேகிடந்த வேடனுக்குவிலங்குவெட்டிவிட்டு ஆலோசித்துத் தெளியாமல் நாங்கள்செய்த தண்டத்தை நீ பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று வேண்டிப் பரிபூரணகடாக்ஷம்பண்ணி அவனுக்குவேண்டிய பலபொருள்களுங் கொடுத்து தயாளுவான குலோத்துங்கபாண்டியன் அந்த வேடனை அவனிடத்துக்குப் போகவிட்டு யானையெய்த சோமசுந்தரக்கடவுளைப்போய் கண்டு தொழுது அன்புபெருகி சுவாமி அடியேன்பொருட்டுத் தேவரீரும் பழியஞ்சு கடவுளானீர் தேவரீருக்கு அடியேனினிச்செய்யத்தக்கதுமுண்டோவென்று பத்தியுடனேபுகழ்ந்து பலதாமும் தோத்திரமுஞ்செய்து அளவில்லாத பூசைகளுநடத்தி உயிர்களுக்குவருந்துன்பங்களைநீக்கி உயிர்களுக்கெல்லா மோருயிர்போல அரசாண்டிருந்தான்.

பழியஞ்சினபடலம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

இருபத்தாறுவது
மாபாதகந்தீர்த்தபடலம்.

கலி விருத்தம்.

வேதநாயகன்வெம்பழியஞ்சிய
நாதனைநலனிதுநல்கிய
தாதையைக்கொலைசெய்ததனயன்மா
பாதகந்தனைத்தீர்த்தமைபாடுவாம்.

இதன்பொருள்.

வேதநாயகராகிய சோமசுந்தரக்கடவுள் கொடியபழியஞ்சியநாதராகிய திருவிளையாடல் இதுவாகும். இனி அந்தக்கடவுள் தன்னை யீன்றருளியபிதாவைக்கொன்ற ஓர் புதல்வனது மகாபாதகத்தைத் தீர்த்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

பின்பு சூலாத்துங்க பாண்டியன் உலகமெல்லாஞ் செங்கோல்செலுத்தித் தனியரசு நடத்துகிற காலிலே அவந்தி யென்கிற பட்டணத்திலொருபிராமணன், அவன்மனைவியானவள் லட்சுமிபும்மன்மதனும் அவன்தேவியாகிய ரதியும் பிரதிமையும்விரும்பத்தக்க ஒப்பில்லாத அழகையுடையவள். அவள் வயிற்றிலே மகனென்று ஒரு கொடும்பாவி பிறந்து கொலை முதலிய பாவங்களேறுகின்ற கப்பலைப்போலே அவன் வளருங்காலத்திலே கோடானுகோடி வில்லைவளைத்துக் கோடானுகோடி அம்புகளைப்பூட்டிக் கோடானுகோடிவிகாரங்களைக்கூட்டிக் கோடானுகோடி மன்மதர்கள் எய்ததிறலோ? இளமையான பக்குவத்தையுடைய தேகத்தையுடையவனுகி மயக்கத்தை தருகின்ற காமமும் வலிபாபமும் தலைதீர்த்தவிறலே தன்னைவயிற்றிலே வைத்துத் தாங்கிப்பெற்ற தாயைப்புணரவிரும்பினன். அதற்குத்தாயென்னும் அறிதகவினள் தன்புருஷனில்லாதகாலத்திலே நாண முதலிய நான்கு குணங்களுநீங்க அவனுஞ்சம்மதித்தாள். இன்பமானது சிறிது இதனல்வருந்துன்பமோமிகப்பெரிது. என்பதைபாவருமறிய மயக்கமாகிய பாம்பானது தன்மதியைவிழுங்க அந்தக்கொடியவன் தாயைப் புணர்ந்துச் சுகித்துவருகிறசெய்தியைக்குறிப்பாலறிந்து பக்கத்தார் அறியாமல் மனத்திலே அடக்கிக்கொண்டு வருகிறபோது வேறெயொருநாள் வெளியாக்கக்கண்டு அந்தப் பிராமணன் யாதொன்றும் பேசாமலிருக்க, மகனைவன் அதிககோபங்கொண்டு கொல்லநினைந்தெழுந்ததைத் தாயானவள் கண்டு அவனைப்பார்த்து நீயோ தாயோடுகூடிச் சுகத்தையடைந்தாய் தகப்பனைக் கொன்றதிறலே என்னபயன்கிடைக்குமென்றுதடுக்க அதற்குக்காமுகரானவர்க்குத் தாயாரு லென்ன? தகப்பனுலென்ன? தயவேது? தருமமேது? நில்லென்று மண்வெட்டியைக்கொண்

நி காமமென்னுங் கள்ளைக்குடித்த மயக்கத்திலே வெட்டி இராத்திரியிலே கொண்டுபோய் மயானவினையை முடித்து வேடர்கள் கைக்கு வேண்டியபடியா ருளுடனே தாயோடுகாட்டுவழிச் சென்றுனதக்காட்டிலே வேடர்கள்கண்டி சூழ்ந்து அம்புவில்லுடனே இடிக்கொப்பாகமுழங்கி போகாதே நில்லென்று அவன்கையிலுள்ள பொருள்களெல்லாம் பறித்துகொண்டு அவன்தாயைம், தாங்கள்கைப்பற்றிக்கொண்டுபோனர்கள். அப்போதவன் தூரதேயங்களிற் போய்ச் சுகமடையலாமென்றுநினைத்ததொன்று முடிந்ததொன்றுனதிலே, (நாமொன்றுநினைக்கத் தெய்வமொன்றுநினைத்ததென்னும்) பழமொழி அவ னிலே உண்டாயிற்று. அப்போது தகப்பன் யிறந்துபோனலும் பிள்ளைக்குத் தாயும் போனளே துணைவேறே ஒருவருமில்லையே யென்றுதான்துணையாக வந்து அவனைப்பிடித்துக்கொண்டது. பற்றினபாவம் ஐயைபோ வென்னும் அழும் சிவனேயென்னும், பாவம், பாவம், இதுவோபழியென்னும், ஐபகோ வென்னும், கைகளைகுலைத்தெறியும், நிழல் வடிவைப்போலவிடாமல் பின்பற் றிச்செல்லும், நல்லதீர்த்தங்கள், சிவஸ்தலங்கள், நல்லோரிடங்களாகிய இவ் விடங்களிலே செல்லவொட்டாது, சிவனது நிருநாமங்களைக் காதுகளிலே நுழைப வொட்டாது, மனத்திலும் புகுதவொட்டாது, நாவாலுஞ்சொல்ல வொட்டாது, தூங்கவுமொட்டாது, சுற்றும்முன்னும்பின்னும்பக்கமும்சூழ் ந்து தன்னிடுப்பு முறியப்பற்றி யிழுக்கும், இப்படியாகிய மகா பாதகத்திலே அலைந்து இனி என்னசெய்யத்தக்கதென்று பொறுக்கமாட்டாமல் துன் பப்பட்டு அன்னியதேசங்களெல்லாம் பயங்கொண்டு அலைவாளுகி துன்பவி யாதியை வெகுகாலமடைந்து உலகமெல்லாந் திரிகிற மகாபாதகன் தனது பலமெல்லாமொடுங்கிக் கடவுளருளாலே இனி அந்தப்பாதகந்தொலையுங்கா லம் வந்து மதுரையைக்கிட்டினுன் அப்படி கொடியபாதகனுகிவருகிறவனுக் குமுன்னே அங்கயற்கண்ணியானவள் இரண்டு காதிலுந் தந்தக்குழையிட்டு புலிப்பல்லாகிய தாலியும் பூண்டு, மயிர்ச்சடையானது பிடரியிலே அசைய, பழிக்கஞ்சாத ஒருவேடிச்சிவடிவங்கொள்ள, முன்னேபழிக்கஞ்சினகூடற்க டவுள் தலையிலே வேங்கைப் பூமாலையைத்தரித்து மான்கொம்புபோலக்கோ ணியதாடியும், வீற்பிடித்த நீண்டகையையுமுடைய ஒருவேடவடிவங்கொண் டுதோன்றிக்கோபுரவாயிற்புரத்திலேபனங்கருக்குப்போலும்பற்களையுடைய வேட்டைநாய்கள் சூழ்ந்துகொண்டுகிடக்க அம்புவில்லும் பக்கத்திலேவிரா ங்க அங்கயற்கண்ணியாகிய வேடிச்சியுடனேசூதாடிக்கொண்டிருந்த அவ்வி டத்தே பெருநுளம் புண்ட விளங்கனிபோல ஒன்றுமில்லாதவுருப் மிகுந்த வருத்தத்துடனே வருகிறமகாபாதகனைக்கண்டு யாராலுமனத்திலுல்நினை க்கக்கூடாத கொடியபாவிவருவதைப் பாரென்றுவேடிக்கையைப் பார்த்துப் பெண்ணை எல்லாருக்கும் வருத்தநோயைச் செய்கின்ற மன்தலைலேஅலைச் சற்பட்டு வருந்தினவர்கள் மனமானது செல்லவேண்டிய விடங்களிலேசெல் லாது, குணமும், குலமும், ஒழுக்கமும்குறையுமென்றும், கொலைபழிபாவம் வளருமென்றும் பாராது, உயிர்க்கு முடிவுவருமென்று மெண்ணது, கள்ளுக் குடித்தல் போல்வதே காமமென்பது மனத்தை மயங்கச்செய்தலிலேலை ஆ லுமெல்லாராலு மிகழத்தக்ககாமத்தைப்போலநினைத்தாலும் கண்டாலு

ம்கேட்டாலும் உள்ளுண்டாகிய மனத்தைக்கெடாது, கள் உண்டால் மனத்தைக்கெடுக்கும் ஆதலால் கள்ளிலுமகொடியகாமமே கொலைகளுக்கெல்லாம் காரணம் காமமே களவுக்கெல்லாங் காரணம். எமனுமஞ்சத்தக்க காமமே கள்ளுண்டற்குங்காரணம், காமமே நரகலோகததைக் காணியாகஆளச்செய்யும் என்றுசொல்லிக் கொலைசெய்த பாவம்பிடிக்கப்பட்டுவருகின்றவன் முகத்தைப்பார்த்து எனடாபார்ப்பான்! இபபடிமிருந்த துன்பங்கொண்டு வருந்துகிறுயென்ன, அப்படிக்கேட்ட கடவுள்கிருபாதிருஷ்டிபட்டுக் கொஞ்சம் பாவந்தணிந்து தன்புத்தியுண்டாகி முன்பிறப்பிலேசெய்த அதிகபாவத்திலேபிறந்து தகப்பனுக்குப் பகையானதும் தகப்பனைக்கொலைசெய்ததும், பின்பு அந்தப்பாவம் பிடித்து எங்குமலைக்க அலைந்துநீராமல் இந்த மதுரைக்குவந்துசேர்ந்ததும் தெரியச்சொல்லி யழுதுநின்றான்.

அதுகேட்டுவேடவடிவுகொண்டு மனத்திலேஅருள்பெருகி விளங்குகின்றகிருபாசொரூபியாகிய கடவுள் அப்படிக்கெட்டுப்போனவனைப் பார்த்து உன்னையடைந்திருக்கின்ற இந்தமகாபாதகம் எங்கேபோலுந் தீராது இங்கேதானே தீருமென்று அது தீரும்படியாகவெண்ணி ஓப்பிராமண! நீசெய்த பாவம் உன்குலத்தாரும் நரகத்தில் விழும்படியானது, அதை யாராலேதீர்க்கக்கூடும் ஆனலும் இப்போது நாம்எமது கண்ணுலே பார்த்ததிலேளிதிலேதீரும்படிச் சொல்லுகிறோம் அதாவது ஒருசிவராத்திரியில் சிவனடியார்களுக்கேவின பணிவிடைசெய்து பிச்சையெடுத் தொருபொழுதுண்டு சூரியனுதயமாகுமுன்னேளெழுந்து அறுகம்புல்லெக்கொய்துவந்து பசுக்களுக்குக் கொடுத்துப்பத்தியுடனே மூன்றுகாலமுங் கோயில் வெளித்தொட்டித் தீர்த்தத்திலே தீர்த்தமாடிச் சிவபெருமானே நூற்றெட்டுதரம் பிரதட்சினஞ் செய்து இப்படியாகத் தவத்தைச்செய்தாயானல் உனக்கிந்த பாவந்தீருமென்று கடவுள்கூற அதைக்கேட்டு வேடிச்சியாய்ப் பக்கத்தேயிருந்த அம்மை வேடனைநோக்கி சுவாமி இந்தக்கொடியபாவி, அளவில்லாதகாலம் நாலேழுகோடி நரகத்திலே வீழ்ந்து கிடந்தாலும் தீராதபாவந்தீரும்படி அருள்செய்ததென்ன காரணத்திலே யென்றுகேட்க அதற்குக்கடவுள் பழி பாவங்களுக்கஞ்சாத நீசாணுலு நினைத்தாலும்அஞ்சத்தக்கபாவத்தைச் செய்து அதுபீடிக்கலாகி எங்குந்தீராமல் வேறொரு ஆதாரவுமில்லாதே அலைகின்ற பாவியாகியஇவனுக்கல்லவோ நாம் அருள்செய்து காக்கத்தக்கதென்று சொல்ல, அதுகேட்ட வேடிச்சிசுவாமி! நீர்யாதேனு மொன்றைச் செய்தற்கும், செய்யாமைக்கும், வேறொயொன்று செய்தற்கும் காரணமாக விளங்குகின்றீர் ஆதலால்தீர்செய்யவேண்டுமானல் எப்படிப்பட்ட பாவிகளையும் புண்ணியவான்களாகச் செய்வது உம்முடைய அருள்விளையாட்டல்லவோவென்று மனமகிழ்வுதோன்றச் சொல்லும்போது வேடனுகிய கடவுளுமறைந்து வெள்ளியம்பலத்திலே பரிபூரணமாக மேகமறைய மின்னலுங்கூட மறைந்தார்போல அம்மையுங் கூடமறைந்தருள அறிவில்லா மாபாதகன்கண்டு தான் ஆச்சரியங்கொண்டு பின்பு கூடனையகன் சொன்னபடியே மாதவக் கோலங்கொண்டு அப்புண்ணிய விரதங்களையணுஷ்டித்து வருங்காலத்தில் மூன்று மாதத்துக்குள் அவனுடைய பாதகந்தீர்ந்து தெய்வீகத் தன்மையான பிரமாமண வடிவாகிச் சோமசுந்தரக்

கடவுளின் திருவடிகளிலே அனேகம் வடமொழி மாலைகள்பாடிச் சச்சிதா னந்த சோதியின் பொன்னடியிலேசேர்ந்து சிவானந்தவாழ்வடைந்தான். ஆன பின்பு தாயைப்புணர்ந்து தகப்பனைக் கொன்ற பாவந்தீர்ந்து மோட்சத்தைய டையச் செய்தது அந்தப்பொற்றூமரைத் தீர்த்தமேயாலல் நீரிழிவு - குஷ்ட ம்-மகோதரம்-காசம்-சூரமுதலிய வியாதிகளையுந் துன்பங்களையுந் தீர்க்குமெ ன்பதோ இந்தத் தீர்த்தத்துக்குப் பெருமை ஆதலால் அந்தக்கெட்டபிராம ணனுடைய மகாபாதகததைத் தீர்த்தது தெரிந்து பாண்டியன்மந்திரிகள்ஊ ரிலுள்ளவர்கள் வேற்றூரிலுள்ளவர்கள் ஆகாசவாசிகள் இவர்களெல்லாரும் அதிசயித்து வாக்கு மனதுக்கெட்டாத பேரருளை இந்த அறிவீனனிடத்தி லேசெய்தது என்னகாரணத்திலோ வென்று ஆனந்தக் கண்ணீர் பொழி ந்து நான்மாடக்கூடல் நாயகனைத் துதிசெய்து பேரின்பக் கடலிலே மூழ்கி னர்கள்.

மாபார்தகந்தீர்த்தபடலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

இருபத்தேழாவது
அங்கம்வெட்டினபடலம்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

வேதகந்தரித்தமுக்கண்வேதியன்மறைபோன்றெய்த
பாதகந்தவிர்த்தவாறுபகர்ந்தனம்விஞ்சையீந்த
போதகன்மனைக்குத்தீங்குபுந்திமுன்னுகச்செய்த
சாதகன்றனைப்போலூற்றித்தண்டித்ததண்டஞ்சொல்வாம்.

இதன்பொருள்.

இருக்கு-எசுர்-சாமம்-அதர்வணமென்னும் நான்குவேதங்களுமுழங்கும்அழகியகண்டத்தையுடைய முக்கண்வேதியராகிய சோமசுந்தரக்கடவுள் ஓர் பிராமணப்பிள்ளையினது மகாபாதகத்தைத்தீர்த்தருளிய திருவிளையாடலச்சொன்றேம். இனி, தனக்குவித்தைகற்பித்த ஆசிரியனதுமனைவியைஅபகரிக்கமுயன்றவனுகிய ஓர் பாபியை அந்தமதுராபுரித்தலைவனெதிர்த்து அவனங்கத்தை வெட்டியருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றேம்.

குலோத்துங்கபாண்டியன் உலகமெல்லாங்காத்து அரசாளுகிறகாலத்தில் வேறேயொருதேசத்திலிருந்து அந்தமதுரைக்குவந்துவாள்வித்தைகற்கவேண்டினானுக்கு வாள்வித்தைகற்றுக்கொடுத்து மிகவுங் கிழவனுய்வாழ்கின்ற ஒருவன் சோமசுந்தரக்கடவுளை வழிபாடுசெய்கின்ற அன்புடனே தினம்தினம் கோயிலுக்குப்போய் வணங்கித் துதித்து இருவினையையும் வெல்லும்போறிவுடையவனுயிருந்தான். அப்படிப்பட்ட போறிவுடையவனை வாள்வித்தையில் வல்லவனவணங்கிப்பகைவரைவெல்லகற்கின்றஆண்சிங்கம்போன்ற குமார்களில் நல்வினை தெரியாத பாவியான சித்தனென்பவனொருவன் அந்த வாள்வித்தை முழுவதும் வரும்விதியாலே நிரம்பவுங்கற்றவனுய் அந்த வித்தையதிகலே தலைமேலாகுமதித்து மிகவும் கருவமுங்கொண்டு தலைமுசிரியனுய்கே எதிரியாகத் தானுமொருவித்தை கற்குமிடமுண்டாக்கிப்பலருங் கற்கும்படி கற்பித்து அந்த ஆசிரியனிலும் அதிகமாகத் திரவியங்கள்சம்பாதித்துப்பின்னும்தானொருவனேஇருவர்வரவையும் கொள்ளவேண்டுமென்னுங் கருத்துள்ளவனுய் அந்தக்கிழவனை அவ்வூரினின்றும்போகச்செய்யவெண்ணி அந்தக்கிழவனிடத்திலே கற்கின்ற குமரர்களையெல்லா மனம்வேறுக்கி நாள்தோறுமிப்படி விரோதித்துவருகிறவன் முன்னேதாயைப்புணர்ந்தவனுக்குத் தம்பியைப்போல அந்த ஆசிரியன் மனைவியையும் புணர விரும்பினன்.

அப்போது தோண்டத்தோண்டப் பொறுத்துக்கொள்கிறபொறுமையுள்ளபூமியை ஒத்தவளான அந்த ஆசிரியன் மனைவியிடத்திலே ஆசிரியனில்லாதபோதெல்லாம்போய்ப்போய் எப்போதிடங்கிடைக்கும் எப்போதிடங்கிடைக்குமென்று பலதரமும்போய் அஞ்சாமல் கேட்டுக்கேட்டுப் போவான் அப்படி அவன்கேட்கும்போதெல்லாம் அந்த ஆசிரியன்மனைவி பேசாதிருந்

தாள். அப்படி யிருக்கையில் பின்னு மொருநாள் அந்தச்சித்த னென்பவன் அங்கேசென்று அவள்கையைப்பிடித்திழுக்க அவனைத்தள்ளிவிட்டு வலிதா னகதவைச்சாத்தித் தாள்போட்டுக்கொண்டு தன் கற்புக்கு அழிவுவாராமற் செய்துகொண்டாள். அப்போதுசித்தன்மிகவுங் காமாக்கினியாலே வெம்பிப் பாவிகளிலும் புறங்கடைநின்ற பாவியாய்ச் செய்தசீமையைத் தன்புருஷனுக்குந் தெரியப்படுத்தாமல் அந்தமகாபதிவிரதையானவள் தன்மனத்துள்ளே அவன் செய்தனவெல்லா மடக்கிக்கொண்டு எல்லாவுயிர்களிலு நிறைந்திருக் கின்ற சோமசுந்தரக்கடவுளை நினைந்து வருந்திளள்.

அதைச் சோமசுந்தரக்கடவுள்தெரிந்து அந்தச்சித்தன்செய்தகுற்றத் துக்குத்தக்கபடிதண்டிக்க திருவுள்ளத்திலெண்ணி ஒருநாள் அந்தக்கிழவ னிய ஆசிரியன்போல்வடிவுகொண்டு சித்தனிருக்குமிடத்திற் சென்று சித்தா! யௌவனனுகிய நீயும் மிகவும் வயதுசென்ற கிழவனுகிய நானும் வாள்கொ ண்டு போர்செய்து நம்மிருவருடைய பலமும் தெரிந்துக் கொள்ளுவோம், நாளைக்கு இந்தப்பட்டணத்துக்கு வெளியே ஓரிடத்திற்குவாவென்று சொல் லிப்போனர். அப்படிக் கடவுளாகிய ஆசிரியன்சொன்னதற்குச் சித்தனும்சம் மதித்து நாளைக்குப்போர்செய்துவெல்வோமென்று மனைதித்த நாலாம்பா தகனை அவன்மனம்போல சூரியன் அஸ்தமித்து இருள்மூடி இராத்திரியா ய்ப்பொழுதுவிடிந்து சூரியனுதயமானபின்பு சித்தன் சிங்கவாகினியைவண ங்கிக் கச்சுக்கட்டிக் கத்திகேடகங்கொண்டு அந்தக்கிழவன்சொன்ன இடஞ் சென்றுநின்றனன். பின்புவாள்யுத்தத்துக்குவாவென்று நேற்றுவலியவரச்சொ ல்லிப்போனவராகிய கொடிய ஆண்புலிபோல் முதிர்ந்துவளைந்துகூனிய ஆசி ரியனும் வீரகண்டாமணிகட்டிக் கச்சுங்கட்டி விபூதியும் பூசிக்கொண்டு பிர காசமான கத்தியுங் கேடகமுங்கொண்டு அந்தபுத்தியீனனுக்கு நேரேவந்து சிங்கமுஞ்சிங்கமு மெதிர்த்தாற்போலக் கடவுளாகிய ஆசிரியனும் சித்தனும் எதிர்த்து யுத்தஞ்செய்யத்தொடங்கி ஒருவர்க்கொருவரெதிர்கொண்டு நின் றும், பின்வாங்கியும் நேரேசென்றெழுந்தும் இடியேறுபோலக் கொச்சித்தும் பின்பு கேடகத்துள்ளே குனிந்தொடுங்கியும் வெளியே தெரியவந்தும் கத்தி யையுருவி இடசாரி வலசாரியாகத் திரிந்து வீசிவெட்டியும் அப்படி வெட்டு வதை ஒருவர்க்கொருவர் கேடகத்தாலே தடுத்தும் மீண்டு கொதிப்புக்கொ ண்டு கிட்டிச்சென்று நகைத்தும் ஆண்மைகள்பேசியும் மாறிமாறி எதிரிட்டும் பின்புமுதுகுகாட்டி ஓடுகிறதுபோல ஓட்டங்காட்டியும் சக்கராகிருதியாய்ச் சுழன்றுகூப்பிட்டும் மறுபடிவெட்டுகின்ற கத்தியைமார்பிலேதாங்கியும் அப் படிவெட்டுவதைத் தப்பித்துக்கொண்டும் இப்படியாக நாலைந்து நாழிகைநே ரம் யுத்தஞ்செய்தார்கள். அப்படி யுத்தம்பண்ணுவதைப் பார்க்கிறவர்களெ ல்லாருங் கேட்கக் கிழவனுகிய ஆசிரியன் என்மனைவியை யெண்ணின நெஞ் சைக்குறித்தும் உடன்படச்சொன்ன நாவைக்குறித்தும் அவளைத்தொட்ட கையையும் பார்த்தகண்களையும் சித்தா! தப்பித்துக் கொள்ளென்று பலதர முஞ் சொல்லிச் சொல்லி அந்த நெஞ்சுமுதலானவைகளுக்குத் தக்க தக்க படி தண்டித்துத் தலையையும் வெட்டிக்கொன்று தமது திருவுரு மறைந்து போயினர்.

அப்போது சண்டைபண்ணுவதைக்கண்டுகொண்டுநின்ற வாள்வீரர் கள் கிழவாசிரியனைக்காணுமல் அவன்வீட்டிற்குப்போய்த்தேடி அவன்மனை யாளை ஆசிரியன் எங்குசென்றனனென்று கேட்க, அவள் கடவுள் கோயி லுக்குப்போயினனென்றுசொல்ல அப்பொழுதே கடவுள்கோயிலுக்குப்போ ன ஆசிரியன் திரும்பிவருவதைத் தேடிக்கண்டவர்கள் ஐயா! நீர் சித்தனுட னே போர்செய்து அவனைவென்றபின்பு நாங்கள் அந்தபுத்தக ளெல்லாம் தேடித்தேடி இங்குவருதுகண்டோமென்று சொன்னர்கள் அதுகேட்ட ஆசி ரியன் நான்சித்தனுடைய அங்கம்வெட்டினவனல்லேன். நீங்கள் சொல்லுவ தென்ன காரணம் என்னைப்போ லங்குவந்து சித்தனுடனே போர்செய்து கொன்றவன்யார்? ஆனால் இப்படிநடந்தது இந்தநான்மாடக்கூடநாயகன் திருவுளந்தானேவென்றான். அதுகேட்டு நின்றமனையாள் அங்குநிற்கிறவர்க ளெல்லாருங்கேட்க சித்தன் நெடுநாளாய்த்தன்னைநெருங்கி அடித்தடித்துவ ந்து உடன்படும்படி கேட்டதும் நேற்றையதினம்வந்து கையைப்பற்றி யிழு த்ததும் மனம்வெந்து தான் அவனைத் தள்ளிவிட்டுப்போய்க் கதவைமூடித் தாளிட்டு கொண்டிருந்ததுந் தெரியச்சொன்னள் அதுகேட்ட மாணாக்கர்க ளெல்லோரும் ஐயா? இந்த அம்மைசொன்னபடியே அங்கு உம்மைப்போல் வந்த வாள்வீரர் சொல்லிச்சொல்லிச் சித்தனைக் கொலைசெய்தானென்றுசொ ல்ல ஆசிரியன் கேட்டு இப்படிநடந்தது நம்மையெல்லாம் ரக்ஷிக்குங் கடவு ளான சொக்கலிங்க மென்னுஞ் சோமசுந்தரப்பெருமான் திருவிளையாடலே யென்று தன்மனையாளும் மாணாக்கர்களுங் கூடிவரக் கோயிலுக்குள்ளேபோ ய்க் கடவுளை வணங்கிப் பிரமா விஷ்ணுகளுக்கெல்லாம்தெளியக்கூடாத உன் பெருமை மிகவுஞ் சிறிய எழைபான அடியேன்பொருட்டுத் திருவிளையாட லாயிற்றே யென்று துதிக்கப் பாண்டியனும் பட்டணத்துஜனங்களும் கடவு ள் திருவிளையாடலைக்கண்டு ஆனந்தக் கண்ணீரிலே முழுகி அடிக்கடி வணங் கி வணங்கிக் கீதங்கள் பாடியாடித் துதித்து நின்று இந்தச் சோமசுந்தரக்க டவுள் அடியார்க் கெளியவர் அநாதி ரக்ஷகரென்று கொண்டாடிக்குலோத் துங்கபாண்டியன் மாணிக்கமாலையென்னும் அவன்மனையாளுடனே அந்தக் கிழவாசிரியனை யரனைமேலேற்றிய பட்டணப் பிரவேசஞ்செய்வித்துப்பின்பு தன்புதல்வனை அனந்தகுணபாண்டியனுக்குத் தன்னரசாட்சியைக் கொடு த்துப் பின்பு சத்து அசத்து என்னும் பொருள்களைச் சந்தேகமறத் தெளிந் து பாசபந்தங்களையொழித்து அந்தக்கரணங்கள் ஒருமித்துச் செல்ல ஐம் புலன்வழியே மனதைச்செலுத்தாது திருவருணெறியே செலுத்திப் போத மாகிய தனதுவல்லமையை மூடியிருந்த மலவலியானது விட்டுநீக்க இராகு வென்னும் பாம்பிலால் உமிழப்பட்ட சந்திரனைப்போலத் துல்லியனுப் வெள் ளியம்பலத்திற் கான்மாறியாடிய சோமசுந்தரக்கடவுளின் திருவடி நிழலைப் பிரியாத பேரின்பமாகிய மோக்ஷத்தையடைந்தான்.

அங்கம்வெட்டினபடலம்
முற்றிற்று.

உ

சிவமயம்.

இருபத்தெட்டாவது

நாகரிமய்தபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்

செங்கண்மால்விடைமேல்விடங்கர்செருக்களத்திடைவாலெதிர்
தங்கம்வெட்டியபேசுவகத்தைபறைந்தனந்தமிழ்மாறன்மேற்
சங்கையிட்டமணீசராற்றியதறுகண்வேல்விழிமூஷாத்தகாத்
வெங்கண்வாளரவைத்துணித்துவிளித்தவாறம்விளம்புவாம்.

இருன்பொருள்.

சிவந்த கண்களையுமுடைய மால்விடையூறும் விடங்கராகிய சோமசுந்தரக்கடவுள் யுத்தகளத்தையடைந்து கையில்வாளேபெடித்து குருபத்தினிக்குத்தீங்குசெய்ய எண்ணியபாதகனது அங்கத்தைதவெட்டிய திருவிளையாடலைச்சொன்னேம். இனி, பாண்டியன்மீது சமணர்களாகிய நீசர்கள் ஓர்யாகஞ்செய்து அதினின்று முண்டுபண்ணி யேவிய சர்ப்பத்தின்மீது (அந்தப் பாண்டியனைக்கொண்டு) கணேபவி அதனைத்துணித்துக்கொன்றருளிய திருவிளையாடலையுஞ் சொல்லுகின்றேம்.

குலோத்துங்க பாண்டியன் மோக்ஷமடைந்தபின்பு அவன் மகனாகிய அனந்தகுணபாண்டியன் சிவனுருவமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரமும் உருத்திராக்ஷமும் விபூதிசாதனமுமே உண்மைப்பொருளென்றுறுதிக்கொண்டு தனதுதகப்பன் முதலாகிய அரசர்களெல்லாரிலுஞ்சிறந்தவனைப் நடக்கிறதிருவிலைகடவுளின் ஸ்ரீபஞ்சாக்ஷரவொலியும் திருநீற்றுவொளியும் உள்ளிருளையும் வெளியிருளையுமோட்டப் பரமசிவனது திருவுருவமாகவே பாண்டி நாடெல்லாம் விளங்கியது. இப்படி விளங்குகின்றதை எண்ணுயிரஞ் சமணர்களுந்தரிந்து கோபங்கொண்டு நெருப்பில்விழுந்த இரும்புபோல அபிமானஞ் சுடப்பொறுதவர்களாய் அந்த நாயிலுங்கடையான சமணர்கள் பாண்டியனைக்கொல்லவெண்ணி வஞ்சனையான ஒருவேள்விசெய்வதற்குக் காதவழியெல்லைபளவுவேள்விச்சாலைசெய்து அக்கினிகுண்டமுந்தோண்டி நெருப்பிட்டு எட்டுத்திக்கிலும் புகைபடரமூட்டி. நகூத்திரங்களெல்லாம் நெல்லுப்பொரிபோலுதிர்ந்து சிதற, அக்கினிச்சுவாலை ஆகாயத்தையளாவ நெருப்பை வளர்விக்க அப்படிகொதித்தெரிகின்ற குழியிலிருந்து இருண்டபடமும் வாயினிருபுறத்திலும் பாதிச்சந்திரனிரண்டு விளங்கிறற்போன்ற பற்களும் வடவாக்கினிபோன்ற கண்களுமேதான்ற, பாதாளத்திலிருந்து ஒருமலையெழுந்தாற்போல ஒரு அசுரனெழுந்தான். அப்படியெழுந்த அசுரன்கோபித்தெழுந்துசமணர்களே! எனக்கு வடவாக்கினியும் வெந்துபோகத்தக்க உதராகினி பற்றிப்பசிதாகமாயிருக்கிறதினாலே நீங்கள் இனிஎனக்கேவும் வேலையென்னவென்று




கேட்க, அதுகேட்டுச் சமணமுனிவர்கள் நீபோய் பாண்டியனை மதுரையோ டே யெடுத்து விழுங்கி வருகவென்றேவிக் கூடத்தைதாடர்ந்தார்கள். இப்ப டிப் பாயுடுத்துகின்ற சமணர்கள் அனுப்பவருகின்ற பாம்புரூபமான அசுரன் பூமியும் ஆகாசமும் நிரம்பினவுடம்புடனே விஷமூறிச் சிந்துகின்ற துவாரம் பொருந்திய பற்களும் வடவாக்கினிபோ லெரிகின்ற கண்ணுமை இருள் நிரம் பின மலைக்குகைபோன்ற பிளந்த வாயுமாய் நெடுந்தூர நீண்டமலைபோல் வரு கிறபோது பாதாளலோகம் வெளிபேதோற்றவும், உடலழுந்து தலைலைபூமி பள்ளமாகவும், கண்களிநெருப்புத் தோன்றச் சுவாசமவிடும்போது முன்னே யுள்ள பயிர்கள் தீயவும், காடுகளெல்லாம் பற்றி வேகவும், மரங்களி லிருக்கி ன்ற பட்சிகளின் சிறகுகள் சுருண்டுவிழவும், உலகமெல்லாமஞ்சவும், உலகத் தைத் தாங்குகின்ற ஆதிசேட நடுங்கவும், சூரியசந்திரர்க ளஞ்சவும், இவர் களை விழுங்குகின்ற இராகு கேதுக்களஞ்சவும், திக்கியாணைகளஞ்சவும், தண் டகாரனை யமனும் பயந்தோடும்படி மதுரைக்கு மேற்குத்திசையில் வருகிற தைக்கண்டவர்கள் ஓடிப்போய்ப் பாண்டியனுக்குத்தெரிய அவனை வணங்கி ஐயா ! நமது மதுரைக்குமேல்முகமாக வொருபெரியவிடப்பாம்பு பூமியாகாச மெலலாந் தன்வாய்க்குளிட்டு விழுங்கும்படி வருகின்றதென்றுசொல்ல, அப் படி வாயைத்திறந்துகொண்டு வருகின்றதென்று சொன்னதைப் பாண்டியன் கேட்க அஞ்சாதவனுப் இந்தப்பாம்பு முன்னேயானையை அனுப்பின சமணர் களை வரவிட்டார்களென்றுநிதானித்து ஆனலும் இந்தப்பாம்பையும் கொல் லுதற்கு நமது குலதெய்வமான சோம சுந்தரக்கடவுளை யிருக்கிறுரென்று தேறி ஆகாயத்திலிருந்திறங்கின சூரியன்போலவிளங்குகின்ற இந்திரவிமான க்கோயிலுக்குப்போய்க் கடவுளைவணங்கிச் சுவாமி! பாரம்பரியமாய் அடிமை செய்து உமது திருவடியை ஒருபோதுமறவாம லெப்போது மடிமைசெய்கின் ற அடியேன் உமது சொல்வழியே நீதிசெலுத்தி வருகின்றேன் இப்போது இந்த மதுரை முழுதும் அழியும்படி சமணர்களெண்ணி வரவிட்ட பாம்பை உமதருளினுலே கொல்லும்படி வேண்டுகின்ற அடியேனைக் கிருபைசெய்தரு ளவேண்டும் இதுவே உமது கடனென்று வேண்டிக்கடவுளிசைபெற்று வணங் கி அவர்திருவடிகளை உள்ளத்திலே தியானித்துக்கொண்டு வெளியேவருகின் ற பாண்டியன் வில்லுமம்புங்கொண்டு மதுரைக்கு மேற்றிசையில் வருமுன் னே மலைபோனீண்டுயர்ந்துவருகின்ற பாம்பைக்கண்டான். அப்படியவன்கா ணும்போது பாம்பாய்வருகிற அசுரன் அநேகம்புள்ளிகளையுடைய விரிந்தவா யோடுகூடியபடத்தை அகலமாகப்பரப்பி எங்குமிருள்மூடநஞ்சொழுகுகின்ற பல்லை அதுக்கிப் பெருமூச்சுவிட்டுச்சீறி அந்த மதுரைமுழுதும் விழுங்கும் படியாக வாயை ஆவென்றுதிறந்தான். அப்போது ராஜசிங்கமான பாண்டி யன் இடியோசைஞ்ச அட்டகாசம்பண்ணிக் கையிலிருக்கிற வில்லை இருபுறமும் வளையவளைத்து நாணேறிட்டு அக்கினிசுவாலையான சூரியபாணத்தைத்தொ டுத்துவிட்டான். அப்படி அவன்விட்ட பாணங்களெல்லாம் வெறுந்தூளாக க் கழித்துத் துப்பியுதிரன். அதற்குப் பாண்டியன் சகியாமல் பரமசிவ னது பாதபங்கயத்தைநினைத்து ஒருகொடிதான அர்த்தசந்திர பாணத்தை

பிரயோகித்துவந்த பெரிய பாம்பினது வளையுமுடலைத் துண்டு துண்டாக்கி னன். அப்போது இடிபோலேகுமுறி மலையிலிருந்துவிழுகிற அருவிபோல இரத்தவெள்ளமோட நீண்டவுடல்புரளக் கூரியவால் நெளியச்சாகிற அசுரன் முற்காலத்திலே வாசுகிகக்கின ஆலகாலவெள்ளம்போல் இருண்ட விஷத் தைக் கக்கினன் உடனே அந்த விஷாக்கினி பொங்கிப் பட்டணமெல்லா நெ ருங்கின. சோலைகள்-கிணறுகள்-குளங்கள்-நாற்சந்தி கூடுமிடங்கள்-கல்விச் சாலைகள்-அகழ்க்கிடங்குகள்-மதில்கள்-அரசனரண்மனைகள்-மாடங்கள் - உப் பரிகைகள்-மேடைகள்-கோபுரங்கள்-நாடகசாலைகளாகிய எவ்விடங்களிலும் பரவி வியாபிக்கப் பட்டணத்து ஜனங்களெல்லா மயங்கித் தூங்கினவர்கள் போல மடிந்தார்கள். எப்படியென்றால் நிலைமைகுலைந்து உடம்புகள்விம்மி வேர்வைகளுண்டாகிப் புலன் பொறி கரணங்கள் தடுமாறிப் பேசும் பேச்சு கள் குழறித் தழுதழுத்து நாவுங்காய்ந்து சுவாசமேலிட்டு அறிவழிந்துமயங் கி மூச்சொடுங்கி உள்ளிருக்கிறவுயிர் போகிறது வருகிறதாக இப்படிக் கிடந் தார்கள். அதைப் பாண்டியன்கண்டு விஷத்தைக்கண்டஞ்சின விஷ்ணுவைப் போலக் கடவுள்கோயிலுக்குள்ளேபோய் வணங்கி எங்கள் குலதெய்வமே! உமது திருவடிகளேயே சரணமென்றடைந்தேனுகையால் முன்னேவந்தகடலே வென்றும், மழையைத்தடுத்தும், யானையை எய்துகொன்றும், இந்த மதுரை யைக்காத்ததுபோலவே இந்த விடத்தினல்வந்த வருத்தத்தையுந் தீர்த்தரு ளவேண்டுமென்று பலகால்வேண்ட கிருபைக்கடலான சோமசுந்தரக்கடவுள் தம்முடைய சடையிலேதங்கிய சந்திரகலையின் முகத்திலே சிறிதுசிந்திவிட அவர்சிந்தினவுடனே எவ்விடங்களிலும் அந்த அமுதம்பெருகிப் பாலிலே பி ரைமோர்போலக்கலந்து முன்னுள்ள மதுராபுரியாகவே பரிசுத்தஞ்செய்து விஷத்தைப் போக்கியது. அப்போது சூரியன்முன்னே இருள்போலவும் க டவுள் திருவருளின்முன்னே மலவலிபோலவும் சந்திரகலையின் முகத்துளியி னலே விஷந்தீர்ந்து எல்லாரு மூர்ச்சைதெளிந்து ஆனந்த பரவசமாயெழுந் து வாழ்ந்திருந்தார்கள். பாண்டியமாஜனும் சொக்கலிங்கக்கடவுளுக் கன்பு ருவாகி உலகமெல்லாம் அரசாண்டிருந்தான்.

நாகமெய்த படலம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

இருபத்தொன்பதாவது
மாயப்பசுவைவதைத்த படலம்.

கலிநிலைத்துறை.

சுருதியின்புறத்தவர்விடுமாவினைச்சுருதி
கருதரும்பரனருளுடைக்கிளரியன்றுணித்த
பரிசிதங்குபொருதமண்படிறர்பின்விடுப்ப
வருபெரும்பசுவிடையினன்மாய்த்ததும்பகர்வாம்.

இதன்பொருள்.

வேதபாபியராகிய சமணர்கள்விடுத்தசர்ப்பத்தை வேதங்களுக்கிகட்டாத சோமசுந்தரக்கடவுளின் திருவருளையடைந்த பாண்டியன்துணித்த பெருமைபொருந்திய திருவிளையாடலிதுவாகும். இனி, அதனைச் சகியாமல் பாபிகளாகிபசமணர்கள் பின்னர்விடுத்தபசுவை (அச்சோமசுந்தரக்கடவுள்) தமதுவிருஷபத்தைதவிடுத்துக் கொன்றருளிய திருவிளையாடலையுஞ் சொல்லுகின்றோம்.

அனந்தகுணபாண்டியன் அந்தப்பாபம்பைத்துண்டாக்கினபின்புஅதன் கூடவந்த சமணர்கள் பிரசண்டவாயுவீசக் கலங்கிதாடுகிற மேகங்கள்போலக் கலங்கிபோடி ஓரிடத்திலே கும்புகூடி நான்முன்னே யனுப்பிய பாம்பையைக் கொன்றுற்போலவே இப்போதனுப்பினபாம்பையுங்கொன்றுர்கள். இனிநாம்செய்வதென்னென்று ஆலோசித்து இனி அவர்கள் சைவர்களாகையினாலே பசுவைக்கொல்லார்கள், படிக்கஞ்சுவார்கள், இதுவேதக்கதானதந்திரமென்றுகூடிமுன்போலவே ஒருவேள்விசெய்து அக்கினியைவளர்க்க அதினின்றும் ஒரு அரசன் பசுவடிவாகித்தோன்றினன். அப்படித்தோன்றினபசுவை முன்போலவே அனுப்பினர்கள், அப்போதந்தப் பசுவானது ஆகாயத்திலோடுகிற மேகங்களைக் கொம்புகளினாலே குதறிக்கோத்து ஆதிசேடனுடையதலையும் எதிரேதோன்றுகிற மலைகளுந் தூளாகக்கால்களாலே மிதித்துப்பிரசண்டவாயுவுமஞ்சப் பெருமூச்சிறிந்து அந்தப்பசுவிடுகிறமூச்சினாலே சராசரங்களெல்லாம் பூளைப்பூபோலேபறக்கவும், அதன்கோபாக்கினியினாலே உலகமெல்லாந்தியவும், பட்சிகள் மிருகங்கள் பயந்தோடவும், நெருங்கின காடுகளையும், மலைகளையுங்கொம்பாலேகுத்திச் சண்டமாருதம்போலே வேகங்கொண்டு வழியிலேகண்டபோர்களையெல்லாந் துரத்திக்கொன்று இடிபோலேமுழங்கிப் பின்னும் யமன்வருகிறதுபோலே அந்தப்பசுவானது பாண்டியன் மதுரையைநோக்கி மிகுந்தபலத்துடனே வருகின்றதை பாண்டியனும் பட்டணத்துஜனங்களுந்தரிந்து சோமசுந்தரக்கடவுளை மனதிலேதியானித்துத்துதித்துவந்த துன்பத்தைத் தெரிவிப்போமென்று கோயிலுக்குப்போய்க் கடவுளைத்தொழுது, சர்வலோகங்களுக்கும் நாயகராயுள்ள பெருமானே! அபயம்

வெள்ளியம்பலத்திற் கான்மாறியாடிய ஸ்ரீபாதங்களை யுடையவரே! அபயம், பலவுயிர்களுக்கு முயிராயிருந்து ஞானத்தை யுணர்த்துகின்ற ஞானசொரூபரே! அபயம், பரிசுத்தம்பொருந்திய வேதபுராணங்களின் பொருளாயுள்ளவரே அபயமென்றுகூவி முறையிட்டார்கள்.

இப்படிநின்று முறையிடுகின்றவர்களைக் கடவுள்தமது திருவருட்பார்வையிலேபார்த்து மனமிரங்கித் தமதுநந்தியைக்கூப்பிட்டு நீபோய்அந்தச் சமணர்கள் யனுப்பின பசுவைவென்று வருகவென் றருள்செய்தனுப்ப உடனே அந்தநந்தியமனுந்தன்னைக்கண்டஞ்சக் கண்கள்கொதித்துச் சுவாலவீசநாக்கைநீட்டி மூக்கைத்துழாவிக் கடைவாயிலே நுரைசோரத் தலை ஆகாயத்தை அளாவ எழுந்து நெற்றியிலேபட்டமின்ன கொம்புகளிலேபூண்கள் விளங்க, முதுகிலேபரும்பம்குலுங்க, கொம்பிலேகட்டின தொங்கற்குஞ்சங்கள் நெற்றிமுன்னே அசைய பூட்டினமுத்து முகவட்டுகளிலங்க கழுத்திலே சதங்கைமாலைகள்ஆரவாரிக்க, பெரியமணியுங்கணைகணின்ன முத்துத்தண்டைகளும், கிண்கிணிமாலைகளும், அரசிலைத்தொங்கல்களும்,பலஆபரணங்களும் விளங்க, நான்குகால்களிலும், சிலம்புகள் ஒலிக்க, கால்களைத் தூக்கிவைத்து நிலத்தைக்கிண்டி எட்டுத்திக்கும் தூளிகள்எழுந்துமறைக்கச் சுவாசம்விட்டு பூமியைக் கொம்பிலேகுத்திக் கோத்து மேகங்கள்நேராகஎதிர்நின்றுநோக்கி நெருங்கி இரண்டுகண்களிலுநெருப்புச் சிந்தாநடந்தது. அப்படிநடந்த நந்தி இரண்டு கொம்பிலுஞ மேகத்தைக்கிழித்துத்தள்ளி ஒரு வெள்ளிமலைபோல நடந்து சென்று அந்தப்பசுவின்மேற் கோபங்கொண்டு நாற்றம்பற்றிப் பெருமூச்செறிந்துகிட்டி மேற்குள்ளதுகிழக்காகவும், கிழக்குள்ளதுமேற்காகவும், வடக்குள்ளது தெற்காகவும், தெற்குள்ளது வடக்காகவும் இப்படிமுடுக்கிக் கொம்பிலே கோத்து முதுகுகீழாகத்தள்ளி மலைகளைக் கொம்பிலுலே குத்தி திசைகளுக் கப்பாற்போய் விழுவெறிந்து வீசி அந்தமலைகளின் சிகரங்களையுடைத்து இன்னுமொரு சிகரத்தில் விழுவெறிந்து ஆகாயத்தையளாவின ஆலமரங்களின் கிளைகளை ஒடியமுறித்துச் சமுத்திரத்திலேபோய்விழவீசி இப்படிநந்திதேவர் விளையாடி அந்தச்சமணர்கள் நினைத்தபடியே பசுவுடனே போர்செய்துகொல்லாமல் உயர்ந்த ஜாதியான இடபம் தன்னுடைய பெரிய அழகைத்தெரியக்காட்ட அதைவந்த பசுவானதுகண்டு காமங்கொண்டு மன்மதபாணந்தைக்கப்பட்டு உயிருடனே வீரியத்தையும்விட்டுக்கீழ்விழுந் திறந்து ஒருமலைவடிவாய் முடிந்தது. அதுகண்டு மதுரைமாநகரமெல்லாம் அளவில்லாத சந்தோஷத்தையடையவேப்பமாலையைத்தரித்த பாண்டியன்மேருள்கள்பூரிக்க சூரியனைக்கண்ட இருள்போலப் பசுவின்கூடவந்த சமணர்கூட்டங்களெல்லாம் நாணி யோடினார்கள், அன்றுமுதல்வந்த இடபமும் உலகங்களுக்குத்தெரிய ஒருஇடபமலையென்று சொல்லும்படி விளங்காநின்றது, பின் புகூட்சுமரூபமாய்க் கடவுள் திருவடியிற்சென்றுவணங்கக் கடவுளும் பழைய வடிவுடனே நீயிங்கேயிருக்கக் கடவையென்று நிலைபெறச்செய்தார்.

அப்போதுபட்டணத்துஜனங்களும் பாண்டியராஜனுமிருந்தசந்தோஷத்தையடைந்துசென்றுசந்நிதியிலிருந்த நந்திதேவர்பாதங்களை வணங்கிப் போகச்சோமசுந்தரக்கடவுளும் நந்திதேவருடைய ஜெயத்தைக்கொண்டாடி

அங்கயற்கண் ணம்மையுடனே மகிழ்ந்திருக்குங் காலத்தில் அந்த இடபமலை மேலே இலங்கையி லிராவணனைக்கொல்ல வரும்போது இராமனும் இலட்சு மணனுடன் அனுமான் சுக்கிரீவன்முதலானவானரசேனைகள்சூழ வந்திறங்கி னன். அதுகேளிந்து அகத்தியமகாமுனிவர் அங்கேவந்து இராமனுக்குஆசீர் வாதஞ்சொல்லிச் சோமசுந்தரக் கடவுளுடையதிருவிளையாடல்களைச்சொல்ல அக்கடவுள் பெருமையைகேட்டுத் தலைமேற்குவித்தகையனுய் அகத்தியரு டனேகூடப்போய்பொற்றுமரைத்தீர்த்தத்திலேமுழுகிச் சோமசுந்தரக்கட வுளடிகளைவணங்கிச் சிவாகமப்படி அருச்சனைசெய்து துதித்துக்கணிந்த அன் புடனே தலைமேற்கைகுவித்துக்கடவுளே? இந்தப்பூமண்டலத்திலே அநேக மான சிவஸ்தலங்களுள்ளன அவைகளிலே இந்த மதுரைமிகுந்த ஆச்சரிய மான தலமானதிலே இதுமிகவும் அழகுள்ளதென்ப தெப்படியென்றால் உலகங்களெல்லாம் உன்னிடத்திலே யுண்டாகி நிலையாக நீசெய்த செய்கை போலவே உன்விளையாடலென்றுதெரிய சாணைமலையென்றும், நாகமலையென் றும், பசுமலையென்றும், இடபமலையென்றும், நிலைகொண்டு விளங்குதலாலே இந்தமதுரையே சிறந்தது. இன்னும்கண்டவுடனே துன்பங்களைப்போக்குத் தற்கும் அளவில்லாதசெல்வங்களைக்கொடுத்தற்கும் கருணைகொண்டு நீயிங்கே விளங்குகின்ற சிறப்பிலுலே தெய்வநாயகனே! இந்த இலிங்கத்துக்கொப்பா னதொன்றுண்டோ? அல்லாமலும் முழுகினவுடனே முன்செய்தபாவங்களெ ல்லாந்தீர்ந்து உனது சிவானந்தபோகத்தைக் கொடுக்கின்ற இந்தத்தீர்த்தத் துக்கொப்பான தீர்த்தந்தா னென்றுண்டோ? இன்னமும் எந்தத்தலங்களி னுமொவ்வொன்று சிறந்ததாயிருக்கும் இங்கேமூவகைச்சிறப்புமுண்டு ஆத லால் இந்தத்தலத்தை அடைந்தவர்களுக்குச் சித்தசுத்தியும் பலவிதங்களா னசித்திகளும் உண்டாகும் ஆனபடியிலுலே அடியேனெண்ணிச் செல்கிறகா ரியமும் முடிவதரிதாலுலு மெப்படியுமுடியும்படியாகத் திருவருள்செய்யவே ண்டுமென்று வணங்க அதற்குச்சோமசுந்தரக்கடவுள் அசரீரியாக இராமா கேட்பாயாக நீ யினக்குதெ தென்கீழ்த்திசையிலே சென்று கடலுக்கணைகட்டி அந்தராவணனுடைய பத்துத்தலைகளையுமறுத்துச்சீதைசிறையைநீக்கிமீண்டு உன்னுடைய அயோத்திக்குச்சென்று பலகாலம் உலகங்களையாண்டு பின்பு வைகுண்டமடையக்கடவையென்றும். அமுர்தம்போலத் தித்திக்கத்துன்பப் படாதேதென்றும் திருவருள்செய்ய அப்படிச்சொன்ன அசரீரிவாக்கைக்கே ட்டுவணங்கித் துதித்துக் கடவுளிடத்திலே விடைகொண்டு சென்று வேதத் துக்குப் பொருளருளிச்செய்த கடவுளருளின்படியே இலங்கையிற்சென்று பாவியான ராவணனைக்கொன்று அவன்தம்பிவிபீஷணனுக்கு அந்த இலங்கை யைக் கொடுத்துப்பின்பு திருவிராமேச்சுரத்திற்குப்போய்சிவலிங்கப்பிரதிஷ் டைசெய்து பூசித்துத் திருவருள்பெற்றுத் தன்னைப்பற்றினபழியைத் தொ லைத்து இந்திரன்பழிதீர்த்தகடவுளைமீண்டும் வந்துவணங்கித்துதித்துச்சீதை யுடனே இராமன்அயோத்திசென்றான். பின்பு அனந்தகுணபாண்டியன்தன துபுதல்வனெகிய குலபூடணனுக்கு அரசாட்சியைக்கொடுத்துத்தான்சிவலோ கஞ் சேர்ந்தான்.

மாயப்பசுவைவதைத்தபடலம் முற்றிற்று.

சிவமயம்.

மூப்பதாவது

மெய்க்காட்டிட்டபடலம்.


கோச்சகக்கலிப்பா.

பாவமெனவடிவெடுத்தபடிற்றமணர்பழித்தழல்செய்
தேவவருமறப்பசுவையேறுயர்த்தோன்விடைநந்திக்
காவலனேவிடுத்தழித்தகதையுரைத்துமட்டாலச்
சேவகன்மெய்க்காட்டிட்டுவிளையாடுந்திறமுரைப்பாம்.

இதன்பொருள்.

பாவமேதமக்கு உடலாகப் பெற்றுழன்ற பாவிகளாகிய சமணர்கள் நிந்தைக்கிடமாகிய யாகத்தைச்செய்து அதினின்றுமுண்டாகிய பசுவை யேவியதற்கு அந்தப்பசுவை நந்தியாகிய விடைப்பெருமானை விடுத்துக்கொன்றருளிய திருவிளையாடலச்சொன்றேம் இனி, அட்டாலமண்டபத்தேறிச் சேவகம் புரிந்தவராகிய சோமசுந்தரக்கடவுள் மெய்க்காட்டிட்டு விளையாடல்புரிந்ததிறத்தைச் சொல்லுகின்றேம்.

பின்பு குலபூடணபாண்டியன் தனதுசெங்கோல்செலுத்தி அரசாண்டுவருகிறகாலத்தில் அவனுடையசேனைகாவலனாகிய சவுந்தரசாமந்தனென்பவன் சிவனடியார்களைப் பரசிவமாக அன்புசெய்து பூசித்து நடந்து அரசனுக்கு இம்மை மறுமைக்குந் துணையாகிவருகிறபோது வேடர்களுக் கரசனனசேதிராயனை ஒருவேடன்மிகுந்த பாலாஷ்டியனுய்மேலிட்டு ரதகஜ துரகபதாதிகளுடனே குலபூடணபாண்டியன் மேலே படையெடுத்துச்சென்று வெல்லவேண்டுமென்றெண்ணங்கொண்டு வலிசெய்வதைக்குலபூடணபாண்டியன்றெரிந்து தனது பாதநிழலிலே வணங்கி நின்ற சவுந்தர சாமந்தனைப்பாத்துச் சாமந்தா! நமது பொக்கிஷத்தை திறந்துவேண்டிய திரவியங்களையெடுத்துக்கொண்டு செலவுசெய்து இன்னமும் சிலசேனைகள் சேகரமாக்கிப் படைவலிமைசெய்துகொள்ளென்று ஆக்ஞாபிக்கச் சாமந்தன் அந்தவுத்தரவு கேட்டு அவனுக்கினபின்னேதள்ள சிவனருள்வந்துமுன்னேபற்றியிழுக்கவிரைவிலேசென்று பொக்கிஷத்தைத்திறந்து இராஜநீதிப்படியே சம்பாதித்துச்சேர்த்திருக்கிற திரவியங்களில் தனது ஆசை நிரம்பத்தக்க பொருள்களைகைக்கொண்டு அளவிறந்த மகிழ்ச்சியுடனேகடவுள் கோயிலுக்குப்போய்ப்பொற்றூமனைத் தீர்த்தத்திலேமுழுகி நீராடித்தனதுள்ளே மெய்யன்புவடிவமான வேதப்பொருளைவணங்கித்துதித்துப் பரமேட்டியானகடவுளே! உமது திருவருளாலே நான் எண்ணினகாரியமுடிக்கவேண்டும் அதாவது இப்போது நான்கொண்ட பொருள்களெல்லாம் உனக்கும் உன்னடியார்களுக்குமே ஆக



வேண்டுமென்று வேண்டிக்கொண்டு புண்ணியவழியாகவந்த அந்தப்பொருள்களெல்லாம் சிவ புண்ணியத்தாலேயே செலவுசெய்ய நினைவுகொண்டு கடவுளுக்கு ஆகாயத்தை யளாவுகின்ற கோபுரங்களும், ஆயிரக்கால்மண்டபமும், கண்டிகையும், வயிரமணிக்கோளகையும், குண்டலமும், முத்துக்குடைகளும், கொடிகளும்செய்து தேவர்களுக்குப் பூசையும், பிராமணப்பிள்ளைகளுக்குப் பூணூனூற்கலியாணங்களும், வேள்விகளும், பிராமணசமாராதனமும், துறவிகளுக்கு ஆடைஉணவுமருந்துகளும்பலவேறு தருமங்களுமேன்மேலாக விருத்திசெய்து யாராலுலும் சிவவேடமாகக்கண்டால் அவர்களை எதிர்கொண்டுவணங்கி அவர்களே தனதுபிறப்பறுக்கத் திருவேடங் கொண்டவர்களென்று விசுவதித்து மாறுதஅன்பு உள்ளத்திலேகசிந்துபெருகப் பூசித்து அறுசுவைப் போசனமுமுண்பித்துத் தினந்தோறுமிருஞ்சின வெச்சிலுண்டு இன்று ஆயிரம்பேருக்குப்போஜனம் நாளை இரண்டாயிரம்பேருக்குப்போஜனம் நாளைக்கழிந்துவருநாள் மூவாயிரம்பேருக்குப் போஜனம் இப்படி நாளுக்குநாள்மேன்மேலும் அபிவிர்த்திசெய்து பாண்டியனுடைய பொருள்களெல்லாம் சிவனுக்கும் சிவனடியார்களுக்குமாகச் செலவுசெய்வதைப் பாண்டியனுக்குசிலர்தெரிவிக்க, சேனதிபதியான சாமந்தன் பாண்டியன் அரசாட்சிமண்டபத்திற்சென்று இராஜகாரியம் பார்க்கிறவர்களோடுகூடி வெவ்வேறு நாடுகளிலுள்ள வீரர்களுக்கெல்லாம் திரவியங்களனுப்பி அவரவர்களைச் சேவகத்திலே பதிவுசெய்கிறவரைகப் பாவனைகாட்டித் தாக்கீதான ஓலைகள் தெலுங்கர்கலிங்கர்-விராடர்-மராடர்-கொங்கர்-வங்கர்-துருக்கர் முதலானவர்களுக்குமெய்போலப் பொய்யாகவெங்குமோலைகளனுப்பி விட்டிருக்க இப்படி ஆறுமாதக்காலமளவும் அந்தச்சேவகர்கள் வரக்காணுமல் பாண்டியன் சேனதிபதியை அழைத்து நாளைச் சூரியனுதயமாகுதற்குமுன்னே நீ கூட்டின அந்தச் சேவகர்களெல்லாம் வந்துசேரவேண்டுமென்று தண்டனைசெய்தான். அப்படிகண்டிப்பாய் உத்தரவுசெய்தபாண்டியன் மனதுக்கிசைவாகச் சாமந்தனு மொப்புக்கொண்டு வெள்ளியம்பலத்திலாடுகிறகடவுள் பாதங்களிலே விழுந்து வணங்கிப் பெருமானே! பாண்டியன் கொடுத்த திரவியங்களெல்லாமுழுதுங்கொண்டு என்னையும் பணிவிடைகொண்டாயல்லவோ இனி அந்தச் சேவகர்களாகிய சேனைகள்வந்து சேருவதெப்படியென்று வேண்டிநிற்க அப்போதுதன் அடியார்கள் குறையைத் தீர்த்தாளுவதே விரதமாகக்கொண்ட சோமசுந்தரக்கடவுள் திருவருளிலுலே சாமந்தா! நீ வாங்கினபொருளளவுக்கேற்ற சேனைகளுடனே நாளைவருகின்றோம், நீபாண்டியன்சபையிற்போயிருவென்று ஆகாயத்திலிருந்துதிருவாக்குண்டாக, அந்தவார்த்தைகேட்டுச் சாமந்தன் பெரிதானமகிழ்வுகொண்டு தன்வீட்டிற்போயிருந்துபொழுதுபோனபின்புவிடிவதெப்போதாவென்று தூங்காமல் அடிக்கடி ஆகாயத்தைப் பார்த்து நக்ஷத்திரங்களையெண்ணியெண்ணிச் சோமசுந்தரக்கடவுள் வருவதைக்குறித்து நாழிகைபார்த்துப் பார்த்து அன்றிராத்திரி கழிக்க சோமசுந்தரக்கடவுள் தமது பூதகணங்களை வீரராகச்செய்து, தாமுமொரு குதிரை வீரராய்த் தமதன்பனை சாமந்தனுக்காக வருவதைப் பார்க்கவேண்டினவன்போலச் சூரியனுதயமானன்.

அப்படிச் சூரிய குலத்துப மாலய வடதேச வீரர்கள் சிங்கமான சாமந்தன் எழுந்துசென்று கிருபாமூர்த்தியான கூடற்கடவுளைவணங்கித்துதித்துக்கொண்டுமீண்டுபோய்பாண்டியன் அரண்மனையை கிட்டுமுன்னேசங்குகன்னன்முதலானபிரதமகணங்களுமகுண்டோதரன்முதலாகியபூதவீரர்களுங்கூடிமகாவீரர்களாய் வேல்-வாள்-குந்தம்-தோமரம்-சக்கரம்-சூலம்-வில்முதலானபதினெட்டாயுதங்களுங்கொண்ட கையர்களாய்ப் வீரகண்டாமணி தரித்த காலகளையுடையவர்களாய்ச் சூழ்ந்துவர நந்தி மாகாளன்-பிருங்கி-நிகும்பன்-கும்போதரன் முதலான தலைவர்கள்சூழக் கவசங்களிட்டு நெற்றியிலே திரிபுண்டரந்தரித்து, கத்தி கேடகங்களுங்கொண்டு முன்னேகுதிரைச்சேவகராய்ச் சூழ, சாமரங்கள்-பிச்சங்கள்-குடைகள் கொடிகள்தான்ற எங்கும் வாத்தியங்கள்முழங்கத் தமதுவிடையையே குதிரையாகமேற்கொண்டு சோமசுந்தரக்கடவுளுமொருதனியீச்சராய்வந்தார், அப்படி வருகிறபோது முன்னே மதுரையிலே கடல்பொங்கி வந்ததுபோல பல வாத்தியங்கள் ஒலிக்கிற சத்தங்களும், பாய்கின்றகுதிரைகள் அனுமானிக்கிற சத்தங்களும், இடிபோலவீரர்கள் கெர்ச்சிக்கிற சத்தங்களும், ஒன்றுப்க்கூடிக் கல்லென்ற சத்தமாய்க்கலந்துவருகிற சேனைகளின் வரவைக்கண்டு பாண்டியன் சபைக்குப் போகிற சேனாதிபதியான சாமந்தன்பாண்டியனுக்குமுன்னேபோய் இதோசேனைகள் வருகிறதென்றுசொல்லப்பாண்டியன்மிகுந்த சந்தோஷத்தைபடைத்து அரண்மனைக்கு வெளியேவந்து ஒருமண்டபத்திலேயிட்ட சிங்காசனத்திலிருந்து பகைவனை வெல்லுவோமென்கிற மகிழ்வுகொண்டு சேனைகளின் பெருக்கத்தைக்கண்டு இந்த வீரர்கள் எந்த எந்தத் தேசத்தார்கள்சொல்லென்ன, பாண்டியன்முன்னே நின்று துன்பந்தீர்ந்த மனத்தையுடையசாமந்தன் தன்கையிலிருக்கிற பொன்பிரம்பைநீட்டி அவரவர்களை வரிசையாக நிறுத்தி ஐயா? இவர்களெல்லாம் கொங்கதேசத்தார்கள், இவர்கள்குருநாடர்-இவர்கள்கங்கநாடர், இவர்கள்கருநாடர், இவர்கள் அங்கநாடர், இவர்கள் ஆரியநாடர், இவர்கள் வங்கநாடர், இவர்கள் மாளவநாடர், இவர்கள் குலிந்தநாடர், இவர்கள் கொங்கணநாடர், இவர்கள் தெலுங்கநாடர், இவர்கள் சிங்களநாடர், இவர்கள் கலிங்கநாடர், இவர்கள்கௌடநாடர், இவர்கள்ஒட்டியநாடர், இவர்கள் கொல்லநாடர், இவர்கள் கூர்ச்சரநாடர், இவர்கள் பல்லவநாடர், இவர்கள் பரப்பரநாடர், இவர்கள் வில்லாடர், இவர்கள் பல்லவநாடர், இவர்கள்கடாரநாடர், இவர்கள் சேகயநாடர், இவர்கள் மாகதநாடர், இவர்கள் மராடநாடர், இவர்கள் காஞ்சிநாடர், இவர்கள்நாகரிகநாடர், இவர்களெல்லாம்நம்முடைய நாட்டைச் சேர்ந்தவர்களென்று மெய்க்காட்டித் தெரிவித்துப்பின்னும் இப்படிப்பட்ட தேசத்தார்களெல்லா மெப்படி வந்தார்களென்றால் உமது கொடைப்பொருள்களிலே வந்தார்களென்று சொன்னன்.

அப்போது அந்தச் சேனைகளிலே தூரத்திலே ஒரு குதிரைமேலேறிக்கொண்டுபின்தாங்கிநிற்கிற தனிவீரரைப்பார்த்து இவர்யாரென்றுபாண்டியன்கேட்க சாமந்தன்வணங்கி ஐயா! இந்தவீரர்களில் யாரைத்தான் இன்னாரென்று தெரிவதென்றுசொல்ல, பாண்டியன் அந்தவீரரை இங்கேகூட்டிவாவென்ன, பாண்டியன் ஆக்கினைக்கடங்கினவர்போலேசட்டையணிந்து நிற்கிற

அந்தவீரரும் அருகேவரக்கண்டு பாண்டியன் அளவில்லாத மகிழ்வுகொண்டு பொன்னுபரணங்கள், ரத்தினுபரணங்கள், பொன் வஸ்திரங்கள் முதலான வெகுமானங்கள்கொடுக்க மெய்யன்பனை சாமந்தனுக்காக அவரும்வாங்கித் தரித்துக்கொண்டு தம்மோடு தகுதியான வீரர்களுக்குங்கொடுத்துத் தாமே றினகுதிரையை நடத்திய ஐந்துவகை வேகங்களையுங்காட்டிப் பின்பு தமது சேனைத்திரளிலேபோய்க்கூடினர். அப்போது வேடராசனகிய சேதிராயன் வேட்டைக்குப்போய் புலியாலடிபட்டிறந்தானென்று ஒருதூதன்வந்துசொல் லப் பாண்டியன் சேனைகளைநோக்கி முகமலர்ச்சியாய்ச் சந்தோஷங்கொண்டு சாமந்தனுக்கு அளவில்லாத சிறப்புக்கொண்டமுதன்மையும் வரிசைகளும் அதிகமாகக்கொடுத்து மெய்க்காட்டின சேனைகளெல்லாம் அவரவர் இடங் களுக்குப்போய்ச் சேரச்செலுத்தென்று சாமந்தனுக்கு விடைகொடுக்க, அ ப்படியே சாமந்தன் அவரவர்களுக்கு உத்தரவுகொடுத் தனுப்புகிறவன்போ ல நடைகாட்ட, தனிவீரரானகடவுளும் அங்கே நின்றது நின்றுற்போலவே தமது வீரர்களோடேகூட மறைவாயினர். அதுகண்ட பாண்டியன் அதிச யித்துத் தன்னுள்ளே சந்தேகித்து நன்றுய் ஆலோசித்துப்பார்த்து இது நம தது குலதெய்வமான கடவுள் திருவிளையாடலென்று நினைத்து ஆனந்தக்கண் ணீர் சிந்தி புளகாங்கிதனுய் மெய்யன்புவடிவாய்த் தனக்குஉயிர்த்துணையான சாமந்தனைப்பார்த்து உனக்கு எளிதேவந்தவர் கூடற்கடவுளையாலல் எனக் கு அக்கடவுள் நீயேயல்லது வேறுண்டோவென்று மிகவுங் கொண்டாடிச் சாமந்தனுக்குப் பின்னும் அதிக சிறப்புகள்செய்து பகைவரால்வரு மனக்கவ லதீர்ந்து வாழ்ந்திருந்தான் குலபூடணபாண்டியன்.

மெய்க்காட்டிட்டபடலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

முப்பத்தொன்றுவது

உலவாக்கிழியருளினபடலம்.


அறுசீரடியாசிரியவிருத்தம்.

அடியார்பொருட்டுப்பரிவுபவராகிச்சிறியன்காணவிடைக்
கொடியார்வந்துமெய்க்காட்டிக்கொடுத்தவண்ணமெடுத்துரைத்நுங்
கடியார்கொன்றைமுடியாரக்கன்னிநாடன்றனக்கிசைந்த
படியாலுலவாக்கிழிகொடுத்தபடியைபறிந்தபடிடகர்வாய்..

இதன்பொருள்.

சௌந்தரசாமந்தரென்னும் அடியவர்பொருட்டுப் பாண்டியன்கண்டு சந்தோஷிக்க விருஷபக்கொடியை யுடையவராகிய சோமசுந்தரக்கடவுள் மெய்க்காட்டிட்ட திருவிளையாடலைச்சொன்றேம். இனி வாசனைபொருந்திய கொன்றைமாலையைத் திருமுடியிலே தரித்தருளிய அந்தக்கடவுள் அழியாத நிலையைப்பெற்றுவிளங்கும் பாண்டிநாட்டதிபனுக்கு இசைந்து உலவாக்கிழி கொடுத்தருளிய திருவிளையாடலை யாமறிந்தபடிச் சொல்லுகின்றேம்.

பின்புகுலபூடணபாண்டியன்சோமவாரந்தொடங்கிச்சிவதருமங்களெல்லாம்வழுவாமல் அனுஷ்டித்துவருகிறபலத்திலே தன்னாட்டிலேயுள்ள பிராமணர்களை அசட்டைசெய்ய அதனாலேமழையில்லாமல் நீர்பெருகுதலின்றிபாண்டிநாடெல்லாம் விளைவுகுறைந்தது. அக்காலத்திலே முனிவர்களெல்லாம் வறுமையையடைந்து பூணூலும்-வேதநூலும்போய் முனிவர்கடன்-தேவர்கடன்-பிதிர்க்கள் கடன்களாகிய யாகங்களெல்லாம்போய் அக்கிராமங்களைச்செய்து பசிபொறுமல் அந்நியதேசங்களுக்குப் போய்விட்டார்கள் குடிகளெல்லாம் பசியாலேபுழுங்கி யழிந்து எந்தநாட்டுக்குப் போவோமென்று மிகவும் வருந்துகின்ற செய்கையைக்கண்டு பாண்டியன் ஐயோவென்றிரங்கிச் சோமவாரத்தினன்று பொற்றுமரைத் தீர்த்தத்திலேபோய் முழுகிச்சித்திவிநாயகரைப் பூசைசெய்து தனது மெய்யன்பிலே மீளட்சி சுந்தரேசுவரை அருச்சனைசெய்து சந்நிதியிலேவிழுந்து நமஸ்கரித்துக் கைகளைக் குவித்துத் துதித்துஆனந்தித்துசுவாமி! உலகத்திலுள்ள வுயிர்களுக்கெல்லாம் நீஉயிர் அல்லையோ! இந்தவுயிர்கள் பசியால்வருந்துகிற வருத்தம் அடியேனைவருத்த வேண்டியதென்ன? நான்சம்பாதித்த பொருள்களெல்லாம் தருமவழியே தானேசெலவாயின இனி எம்பெருமானே உம்முடைய மனமகிழ்ந்து எனது துன்பநோயைத்தீர்க்கக் கிருபாநோக்கஞ் செய்யவேண்டுமென்று மிகவும்வேண்ட, அப்போதுகடவுள் தன்னைவேண்டுகின்ற பாண்டியன் குற்றத்தைச் சிறிது உள்ளத்தேதெகொண்டு அவன்சொல்வது காதில்விழாததுபோலப் பேசாமலிரு-



க்க, அப்போது பாண்டியன் தன்விட்டிற்குப்போய்க் கடவுள் திருவடியிலன்பு பெரும்படியெண்ணி வெறுநிலந்தே கிடந்து நித்திரைகொண்டான். அப் போதுவெள்ளியம்பலவாணர் புவன்கனவிலே சங்கக்குழைபணிந்து திருவெ ண்ணீறுதரித்துச் சரிகோவணங்கட்டி மார்பிலே சிங்கதேதால் கிடந்துவிளங் கஒருசித்தராக வெழுந்தருளிப் பாண்டியன் முன்னேநின்று நீபாண்டியனே! நீபோதாந்தன்னிடத்திலே அன்புள்ளவன், உலகந்தில் உண்டாகிறதுன் பங்களைப்போக்கித் தொண்டுமல்நிசெலுத்துகின்ற செங்கோலுடையவன் ஆ னதும் உன்னிடத்திலே ஒரு குறையுண்டானதிலே எக்காலத்தும் குறை வுபடாதவனாநாட்டிலே இக்காலத்திலே வேள்விகள் குறைந்து வறுமை நோயுண்டாயிற்று. ஆதலால் எமக்குவேதமே நிடிகை, வேதமே பாதுகை, வே தமேவாகனம், வேதமேசிலம்பு, வேதமேகோவணம், வேதமேகண்கள், வேத மேபேச்சு, வேதமேவடிவம், இன்னும் வேதமே எமதாக்கினை சத்திரூபமாய் விதிவிலக்காய் ஞானபோதனைசெய்து நிலைநிருத்திப்பலவுயிர்களுக்கும்போக ங்களைக்கொடுத்து வேறுபாடு செய்கிற வியாதிகளைத்தீர்த்து மோகூத்தையு ந்தரவல்லது எமதுசெங்கோலும் அந்தவேதமே, அந்தவேதங்களை நீலமிபற ச்செய்கிறவேதியர்கள் அந்தவேத நூலின்வழியே கலிதோஷத்தைத்தீர்த்து யாகங்களைவளர்த்து எம்மிடத்திலே தங்கள்மனத்தைச் செலுத்துகின்றவர் கள் அவர்களாலே செய்யப்படுகிற வேள்விகளைமழைக்குக்காரணம் அப்படி ப்பட்டபிராமணர்களை நீயிகழ்ந்து கைவிட்டாய் அதனாலே மழையில்லாமல் வறுமையுண்டாயிற்று. ஆதலால் மூன்றுலோகங்களுந்பிழைக்க மூன்றுதீயு ம் வளர்க்கின்ற இந்தப் பிராமணர்களையாதரமதித்து நாள்களெல்லாம் பல வகையான தருமங்களைப் பெருகச்செய்து செங்கோல்செலுத்தி ஆக்கினைசக் கரஞ்செல்ல வாழுக்கடவையென்று பாண்டியனது முற்காலப்பயன்போலே எளிதாய்வந்த சோமசுந்தரக்கடவுள் உலவாக்கிழியொன்று கொடுத்து இந்த க்கிழியிலே நீயெவ்வளவு பொன் எடுத்துச்செலவுசெய்தாலும் இந்தக்கிழி பழையபடியே நான்கொடுத்த அளவிற்குறையாமலிருக்கும் ஆகையாலிதை க்கொண்டுவந்தவறுமையைத்தீரென்று கொடுத்துப்பாண்டியன் மனக்கவலை தீரத் திருநீறுசாத்திக் தமது திருவுருமறைந்தார்.

உடனேபாண்டியன் தான் கண்டகனவை மெய்யாக வணங்கியெழுந்து சோ மசுந்தரக்கடவுள் சித்தராய்வந்துகொடுத்த பொற்கிழியை தனதுமணிமு டிமேலேகொண்டு போனதும் விளங்க ஒரு முகூர்த்தகாலம் கூத்தாடி மந் திரிகளுக்கும் படைத்தலைவர்களுக்குங் காட்டித் தெரிவித்துத் தனதுசிங்கா சனத்தின்மேலே அந்தப் பொன்முடிப்பைவைத்து வேதங்களுஞ்சங்கங்களு முழங்கச் சந்தனம்பூசி புஷ்பமாலைகளணிந்து பத்துவித வாசனைத் தூபங் கொடுத்து நெய்விளக்குக் கற்பூரவிளக்குகள்காட்டி கங்காதரக்கடவுளாகநி னைத்துப் பூசைசெய்து கிட்டிவணங்கி வலஞ்செய்து பொன்முடிப்பை யவிழ் த்துவெண்டிட அளவுகொண்டு முத்தீயைவளர்க்கும் வேதியர்க்கும் வேள்விக ளுக்கும் இன்னும் மல்லாருக்கும் கொடுக்கக்கொடுக்க அந்தப்பொன் முடிப் புக் குறையாத மோகூரின்பம்போலே வளர, அந்தப்பொன் முடிப்பினாலே

உண்டாகுகின்ற பொருள்களைக்கொண்டுருசுச்செய்து இந்திரவிமானக்கோ யிலை உள்ளும் புறம்புமெழுகி ஞானக்கொழுந்துபோலும் அங்கயற் கண்ணி யென்னு மீனாட்சியம்மையில் அறுகாற்பீடம்வாயில் முதலானவெல்லாம் அலங் காரமாகப் பொன் மயமாக்கிப் பின்னும் அந்த பொற்கிழியாகிய கடலிலே பொன்னுகிய நீலா மொண்டு மொண்டு திளைத்தினம் குலபூடண பாண்டிய னென்னு மேகம்பொழிய தெய்வதருமங்கள வளர்ந்ததிலேலே விட்புறமேக ங்கள் முந்நீர்க்கடலிலே மொண்டுமொண்டு பெய்ய அப்பாண்டிதத்திருநாட்டி லே பலவளங்களும் வளர்ந்து கன்னிநாடு அளகைநாடுபோலச்செல்வந்தழை த்துவையாகரணர்களும் நையாயிகர்களும் வைதிகர்களும்-வேதாகதிகளும்-தருமசாஸ்திரிகளும்-பூர்வாசிரமிகளும்-தீக்ஷிதர்களும-சைவாகமிகளும் சந்தி யாசிகளுமநிறைந்து வசித்தலிலேலே தென்னுடு திருமால் வடிவாகிய வையக த்திலே திருமால் திருவுருத்போல விளங்கி அந்த உந்திப்பொருட்டுப்போன் றபொதிகையில் நான்முகன்போல அகத்தியமாமுனிவர் விளங்கி முத்தமி ழ்வேத முழங்கும்படி விளங்கிக் கொண்டிருந்தது.

உலவாக்கிழியருளிய படலம்

முற்றிற்று.



மூப்பத்திரண்டாவது

வளையல்விற்றபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வேதந்தனதுவடிவென்றுவிண்ணின்றிழிந்தவிமானமறைக்
கீதன்செழியன்றனக்குலவாக்கிழிதந்தளித்தவழியிதுவப்
போதந்தங்கடந்தபொருள்வணிகப்புத்தேண்மாடமணிமறுகு
பாதந்தடவநடந்துவளைபகர்ந்தபரிசுபகர்கிற்பாம்.

இதன்பொருள்.

வேதத்தினது வடிவமென்றுசொல்லும் விண்ணிழிவிமானத்தி னினி தெழுந்தருளியிருக்குஞ் சாமகீதம்போல்பவராகிய சோமசுந்தரக்கடவுள், பாண்டியனுக்கு உலவாக்கிழிகொடுத்த திருவிளையாடலிதுவாகும். இனிஆன் மபோதத்துக்கெட்டாத மெய்ப்பொருளாகியகடவுள் வைசியத்தலைவராகி மாடங்கணிறைந்த அழகியபதிகளில் வளையல்விற்றுலாவிய திருவிளையாட லுசொல்வாம்.

மேல் குலபூடண பாண்டியன் ஆக்கிரைசக்காஞ் செலுத்திவருகிற காலத்திலே முன்னாள் தாருகாவனத்திலே வாசஞ்செய்கிற தெய்வரிஷிபத்தி னிகளின் கற்புநிலையை அளவுசெய்யவேண்டி மன்மதனையெரித்த கடவுள் தாமே ஒரு கபாலிவடிவங்கொண்டு பிச்சைவாங்குகிறவராய் வேதமே கோவ ணமாகத் தமதுதிருமேனியெல்லாம் விபூதிதூளிதராய்க் கீதங்கள்பாகிற சிவந்தகணிபோன்றவாயும், உள்ளே நகையும், கிண்கிணியணிந்த திருவடிக ளும், அவைகளுக்கிட்ட பாதுகைகளும், பிக்ஷாபாத்திரமுங் கொண்டு இர திதேவியின் புருடனாகிய மன்மதனே தவமேவடங்கொண்டாற்போலத் திரு வேடங்கொண்டு வரும்போது பாதகமலங்களிலணிந்த சிலம்பிணையியும், கண்டமதிரப்பாடுகிற சங்கீதவொலியும், கையிலேகொண்ட உடுக்கையி னொ லியும் சென்று அந்தரிஷிபத்தினிகள் காதுகளைக் கிழித்துக்கொண்டு மனமு ம் வேறுபட்டு அவர்கள் கற்புநிலையைபுந் தளரச்செய்ய அவர்கள்கையிலே பிச்சைகொண்டு பள்ளத்திலே பாய்கிற நீர்போலத் தங்கள்வீட்டுக்கு வெளி யேவந்து பிச்சையிடுகிறவர்கள் ஐயர் பலிபாத்திரத்திலேயிடுகிற பிச்சைச் சோற்றோடுகூடக் கையில்வளைகளுங் கழன்றிடுவார்கள் பின்னுந் தங்கள் கரு த்திலுள்ள நாணையிழப்பதை யல்லாமல் இடையிலணிந்த மேகலை நாணுமிழ ப்பார்கள். (நாண்-வெட்கம்-கயிறு) மார்பிலே மன்மதன் அம்புபட, தங்கள் கண்ணம்பும்படநின்று சோர்வார்கள். (அம்பு-பாணம்-நீர்) பின்னுமந்தப் பெண்கள் ஐயர்முன்னேவந்து ஓப்-ஐயோ, எங்கள் கைவளையைத் தாருமெ ன்ன, ஐயர் வளை உங்கள் கண்டத்திலிருக்கிறதென்றார். (வளை-வளையல்-சங் கு) அந்தப்பெண்கள் ஐயரே எங்கள் கலைபினைத்தாருமென்ன ஐயர் உங்கள் முகத்திலேயிருக்கிறது கலையென்றார். (கலை-ஆடைவொளிபெண்கள்) இடை யறிந்துவந்து எங்களைச்சேருமென்ன, ஐயர் பெண்களே உங்களுக்கு இடை யோ காணக்கூடாதிருக்கிறதென்றார். (இடை-சமயம்-இடுப்பு) பெண்கள் அது அப்படியாலல் எங்கள்பழைபநிறத்தைத்தந்து எங்களுக்கு விடை கொடுமென்ன, ஐயர் பெண்களே நமது விடைகடலிலே கிடந்து தூங்குமெ

ன்றூர். (விடை-உத்தரவு-இடபம்.) பெண்கள் இந்தக்கபாலிக்கு எப்போதும் நடுவில்லையென்ன, ஐயர் நடுவில்லாமை உங்களுக்கேயென்றூர். (நடு-நியாயம் இடுப்பு) பெண்கள் இந்த ஐயர் நெஞ்சு கல்லென்ன, ஐயர் பெண்களே உங்கள் தொங்கைகளே கல்லென்றூர் (கல்-இளகாமை-மலை.) பெண்கள் ஐயரே கங்கைநீர் சுமப்ப தென்னகாரணமென்ன. ஐயர் பெண்களே உங்களிடத்திலே பலிபேற்கவென்றூர். (கங்கைநீர்-கங்காசலம்-தலையோட்டைக் கையிலே கொண்டநீர்) பெண்கள் ஐயரேநீர்சொன்னசெப்பு எப்படிப்போ லிருந்ததென்ன, ஐயர் பெண்களே உங்கள்கொங்கைபோலிருக்குமென்றூர். (செப்பு-உத்தரவுசெப்பு.) பெண்கள் உம்முடைய கந்தரம்கறுத்தது என்னகாரணமென்ன, ஐயர் மழைபெய்தற்கென்றூர், (கந்தரம்-கழுத்து-மேகம்.)பெண்கள் என்னவுத்தரஞ்சொன்னீரென்ன, ஐயர் தெற்கேநின்று பார்த்தால் உத்தரந் தெரியுமென்றூர். (உத்தரம்-விடை-வடக்கு) பெண்கள் ஐயர்கண்ணிலே தங்களுருவைக்கண்டு அதைப்போலவே எங்களையுமிருக்கச்செய்யுமென்ன ஐயர் பெண்களே உங்கள்கண்ணிலும் நம்மிலுஞ் சிறந்தவரிருக்கிறூர். அவரைக்காணுங்களென்றூர். இப்படியாகப் பெண்களிலே சிலர்கும்பிட்டுக்கொண்டு நிற்பார்கள் சிலர் சரணமென்று பாதத்திலே விழுவார்கள். சிலர் தங்கள் கைகளேநீட்டியெட்டி தழுவுவார்கள். அதற்கு ஐயர் அகப்படாமல் நிற்பார், அதற்கப்பெண்கள் ஐயரே! நீர் எங்களைத் தழுவாமற்போனாலும் எங்களிடையிலிருந்து அவிழ்ந்தகலையை உடுத்துமென்பார்கள், சிலர் ஐயரே உம்மிடத்தானையால் நாங்கள் வருந்துவதுகண்டு எமதுதலைவர்கள் கோபிக்குமுன் கழன்றவிளையகலையெடுத்து எமதுகையிலேயிடுமென, ஐயர் நாளைவந்திடுகிறுமென்றுசொல்லி மறைந்தார்.

அப்போதுபெண்கள் ஐயர்கொண்டுபோன நாணும் உள்ளமும்மீளும்படி செய்யமாட்டாதவர்களாய்க் கலையுஞ்சங்குந்துள்ள மன்மதபாணத்திலே நெஞ்சுதொளைப்பட்டு மார்பெல்லாம் பசலைப்பூப்பநிற்கிறதை அவர்கள் புருஷர்கள்கண்டு அம்முனிவர்கள் திரிகாலஞானிகளாகையிலே நான்மாடக்கூடற்கடவுளே இப்படிக் கபாலிவேடங்கொண்டுவந்து நம்முடைய பத்தினிகள் கற்பையும் நாணையும்வாங்கிப்போனரென்றுதெரிந்து அந்தப்பெண்களைப்பார்த்து நீங்கள் கற்புநிலைமை தவறினீர்களாகையால் மதுரையில் வணிகர்கன்னிகளாகப்போய்ப்பிறக்கக் கடவீர்களென்ன, பெண்கள் அம்முனிவர்களிட்ட சாபத்தைதேயேற்று எங்களுக்கிந்தச்சாபம் எப்போது நீங்குமென்றுகேட்க முனிவர்கள் அந்தமதுரைக்கடவுளேவந்து உங்கள் கைகளைத் தொடும்போது நீங்குமென்ன, பெண்கள் மனந்தளர்ந்து முல்லைமாலைபணிந்த வைசியர்குலப் பெண்களாகவந்து பிறந்து பேதை, பெதும்பைப் பருவங்கள் கடந்து மங்கைப்பருவப்பெண்களா யிருக்கிறகாலத்திலே சோமசுந்தரக்கடவுள் சடையிலே கங்கையும், கண்டத்திலே விஷமும், நெற்றிக்கண்ணும், பாதிப்பெண்வடிவும், மான்மழுவும் தெரியாமல் மறைத்து வளையல்விற்கிற செட்டிவடிவாய் விஷ்ணுவாகிய வராகமுங்காணுத பாதங்கள் நிலத்திலேபொருந்த முன்னளிலே ரிஷிபத்தினிகளிடத்திலேகொண்ட வளையல்களுக்கேபட்டுக்கயிறு கோத்துவைத்திருந்து பின்னுமந்தப் பெண்களுக்கே யிடுவோமென்னு முள்ளக்கருத்துடனே அடியார்கள் சூட்டின ஐந்துநிறப் பூமாலைகள்போல,

தோளிலே ஐந்துவகையான வளைபல்களைத் தோட்சுமையாகமேற்போட்டுக் கொண்டு அந்தசுசெட்டி நகிதருவிலே வளையலோவளையலென்று நான்குவே தப்பொருள்களையுமருளிச்செய்த திருவாயாலேசொல்லிக்கொண்டுவர மேகத் தின் ஓசைகேட்டுக் களித்தெழுகின்ற மயில்கள்போலத் தங்கள் மணிமேகலை களொலிக்க வணிகர் குலப்பெண்கள் மாளிகைகளிலிருந்து வீதியினிடத்தே புறபபட்டு வளைகளிட்டுக்கொள்ள மின்போலநுடங்கிவந்து செட்டியார் திரு வுருவைக்கண்டு அப்பொழுதே அவரைக்கூட மிகுந்த ஆசைகொண்டு நாண் மடம்-அச்சம் - பயிர்ப்பென்கிற குணங்களாலே தடைபட்டு மனம்வருந்தி தடுமாறி மேகலை-சிலம்பு-குண்டலம்-கேயூரம்-கண்டிகைமுதலிய ஆபரணங்க ளெல்லாம் அணிந்திருந்தாலும் கைகளுக்கு வளையல் இல்லையாலல் பெண்க ளுக்கு அழகுபோதுமோ? ஓய்செட்டியாரே நல்லவளையல்களாக எங்கள்கை களுக்குத் தகுதியாகப் பார்த்திடுமென்று செட்டியாருக்கு முன்னேதங்கள் கைகளைநீட்ட செட்டியாரும் மீனாட்சியம்மையாரைத் தொட்ட தமது திருக் கரங்களினுலே அந்தப்பெண்கள் கைகளைத்தொட்டு வளைகளேற்றும்போதே, கை மையலுங்கூட வேற்றியிட அப்பெண்கள் முன்னிட்ட வளையல்களை உடைத் தெரிந்துவிட்டு மறுபடியும்வந்து எங்கள்கைகளுக்கேற்ற வளையலிட விலைசொ ல்லுமென்று மிகவும் ஆசை அதிகரித்துக் கைகளை நீட்டுவார்கள் சிலர் சிலர் ஓய் செட்டியாரே ! எங்களுக்குப்போதும் எங்களுக்குப் போடுமென்று பின் தொடர்ந்து சென்று மன்மதவேதையாலே நாண்முதலியகாவலுமிழந்து நிற் பார்கள். சிலர் முன்னேயிட்டவளையல் கைக்குப் பெரிதாய்க்கழன்றுபோயி ற்று வேறேபொருத்தமாக இடுமென்றுசொல்லி அவரிட்டபின் அந்தவளைய லும் அப்படியே பெரிதாகிக்கழல இன்னமுஞ் சிறிதாய்ப் பார்த்திடுமென்பா ர்கள். பின்னுமிட்ட வளையல் கழன்றுபோனதிலுலே துன்புற்று ஓய் செட் டியாரே ! நீரிட்டவளையல் கழலுவதேயன்றி இடையிற்கலையுஞ் சரிகின்றதே. இதற்குக் காரணமென்ன வென்பார்கள். சிலர் செட்டியாரே இந்தவளைய லைப்போலே வளையல் நாங்கள் எக்காலத்தும் கண்டறியோம். இந்தவளையல் எங்கேசெய்தது? கண்டவுடனே எங்கள் தேகம் புளகாங்கிக்கின்றதென்று நாளைத்தினமும் இங்கேவாருமென்பார்கள். நாங்களிட்டுக்கொள்ளும் வளை யலுக்கு இப்போதே விலைதருகிறோம் கொண்டுபோமென்றார்கள். அதற் குச்செட்டியார் பெண்களே நாளைக்கு நான்வந்து விலைவாங்கிக் கொள்ளுகி றேன் இன்றுவேண்டாமென்று சொல்லி ஆண்சிங்கம்போலே செட்டியார் நடந்தருளக்கண்டு பெண்கள் பலருங்காணப் பின்னே தொடர்ந்துசெல்லும் போது செட்டியார்சென்று இந்திரவிமானக்கோயிலுள்ளே புகுந்து சிவலிங்க வடிவாயினர் அதுகண்ட பட்டணத்து ஜனங்களெல்லாம் ஆனந்தக்கண்ணீ. சொழுக வளையல்விற்ற செட்டியார் சோமசுந்தரக்கடவுளையென்று தெரிந்து கொண்டாட அக்கடவுள் திருக்கைகளாலே தொட்டதிலுலே அந்தச்செட்டி ர்பெண்களெல்லாமளவிறந்த் புதல்வனைப்பெற, பிறந்தபிள்ளைகள்பெருமையி ரம்சாமர்த்யம்கீர்த்தி மிகுந்து வளர்ந்திருந்தார்கள். அந்தபெண்களெலாம் சிலகாலஞ்சென்றபின்பு பரமசிவனது திருவடிகளை யடைந்து வாழ்ந்தார்கள்.

வளையல்விற்றபடலம் முற்றிற்று.

சிவமயம்

முப்பத்துமூன்றாவது

அட்டமாசித்தியுபதேசித்த படலம்.

எழுசீராடியாசிரியவிருத்தம்

கொத்திலங்குகொன்றைவேய்ந்தகூடலாதிமாடநீள்
பத்தியம்பொன்மறுகணைந்துவளபகர்ந்தபரிசுமுன்
வைத்தியம்பிணமியக்கமாதர்வேண்டவட்டமா
சித்திதந்ததிறமினித்தெரிந்தவாறுசெப்புவாம்.

இதன்பொருள்.

கொத்தாகவிளங்கும்கொன்றைமாலையைத்தரித்தருளும் நான்மாடக் கூடலழகராகிய சோமசுந்தாக்கடவுள் மாடங்கள்நீண்ட வரிசையாகவிளங்கும் அலங்காரத்தையுடைய பொன்மயமாகிய வீதிகளிற்சென்றுவளையல்விற்ற குளிய மகிமையை முன்னேசொன்னோம், இனி, யக்ஷஸ்திரீகள் வேண்டிக் கொண்டவாறு அவர்களுக்கு அட்டமாசித்தியை யுபதேசித்த திருவிளையாடலை யாமறிந்தபடி சொல்லுகிறோம்.

சோமசுந்தாக்கடவுள் குலத்தரசனை பாண்டியன் அரசாளுநாளிலே கைலாயமலையினிடத்திலே ஆலமாத்தினிழலிலே வேதப்பொருளாகிய கடவுள் அருகிலேவெள்ளிமலையினருகே ஒருமாகதமலைபோலே பருவதராஜபுத்திரியான பார்வதியார் வெற்றிலைச்சுருள் மடித்துக்கொடுக்க அன்புபெருகுகிற சுகாசாரியனைப் எழுந்தருளியிருக்கும்போது பிருங்கி நந்திமுதலாகிய கணங்களும், சனகாதிநால்வரும்வணங்கிச் சிவசரித்திரங்கள்கேட்க, அவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளிச் செய்துகொண்டிருக்கிற சமயத்திலே கடலிலே சஞ்சரிக்கின்ற சூரன்முதலானவர்களைவென்று ஜெயங்கொள்ளத் திருவவதாரஞ்செய்த குமாரக்கடவுளுக்குத் திருமுலைப்பால்கொடுத்த யக்ஷகன்னிகளாகிய ஆறுபேர்களும் உடம்பெல்லாந்திருநீறணிந்துசடைமுடிதரித்தாக்ஷமாலிகை முதலிய சைவதவக்கோலமாய்வந்து பெருமானுடைய வேதமாகிய சிலம்பு களலம்புகின்ற பாததாமரைகளிலே வந்தணைசெய்து சுவாமி! எங்களுக்கு அட்டசித்தியு முபதேசிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கக் கடவுளாகிய ஆசிரியர் தம்முடைய மடியின்மேலெழுந்தருளி யிருக்கின்ற பார்வதியைக்காட்டி இவளேபராசத்தியாகியமகேஸ்வரியாக அணிமாமுதலிய அஷ்டசித்திகளும்வணங்கிக்குற்றேவல்செய்யுஞ் சேடிகளாய்ச்சூழ்ந்துசேவிக்க விளங்குவாள் ஆகையாலிவளைநீங்கள் தியானித்தால் உங்கள்விண்ணகமைப்போக்கி அஷ்டசித்தியுந் தருவாளென்றருளிச்செய்து அந்தச் சித்திகளைட்டையும் தெளியுசெய்யக் கேட்டபெண்கள் பூர்வகருமத்தால் அந்தச்சித்திகளை மறந்துபோக அப்போது சிவபரஞ்சோதியான கடவுள் அந்தக் குற்றத்தைத் தெரிந்து பெண்களைக்



கோபித்து நீங்கள்பட்டமங்கையில் ஆலமரத்தடியிலே சடமான கல்லுப்பா றையாய்க் கிடக்கவென்றுசபிக்க, அந்தப்பெண்கள் மிகவுந் துன்பங்கொண்டு கடவுளைவணங்கி சுவாமி! நாங்கள் இந்தச்சாபத்தை எக்காலந்தீர்ந்துதெளி வோமென்றுகேட்க, அதற்குக்கடவுள் நீங்கள் இப்படிக்கருங்கற்பாறைபாய்ப் ஆயிரம்வருஷகாலம் கிடந்தீர்களானால் அப்பால்நாமே மதுரைபினின்றும்வ ந்து உங்கள்சாபத்தைப்போக்கிப் பழைபவடிவுகொடுத்து உள்ளங்கை நெல் லிக்கனிபோல் அஷ்டசித்திகளும் தெளிவுசெய்வோம் போங்களென்றார். அப்போதந்த ஆறுபெண்களும் பட்டமங்கையென்னுமூரிலே ஆலம ரத்தடியிற்பாறையானார்கள். அப்படிப் பாறையாய் ஆலம்பழங்கள் ஆபரண ங்கள்போல மேலேபுதிர்ந்துகிடக்க மூடுபட்டு ஆயிரவருஷமுங்கழியமதுரை க்கடவுள் திருவுள்ளமிரங்கித் தமதிஷ்டப்படியே ஒரு ஆசாரியவடிவாய் அ ங்கே எழுந்தருளிப் பெண்கள்சாபநீங்கத் திருவருட்பார்வைபாலே பார்த்த போது புடம்போட இரும்பு பொன்னைநிற்போல பலவிருள் நீங்கியெழுந்து அன்புடனே கடவுளடிகளிலேவந்துவணங்க, கடவுளும்பார்வதியையொத்த அந்தப்பெண்கள் தலைமேலேகையைவைத்து அவர்களைப்பார்த்து அவர்கள் புத்திக்குத் தெளிவுதோன்றக் கேளுங்கள் பெண்களே யென்று உபதேசஞ் செய்தருளுகிறார். எப்படியென்றால் அணிமா-மகிமா-இலகிமா-கரிமா-பிரா த்தி-பிரா காமியம்-ஈசத்துவம்-வசித்துவம் என்றுசித்திகளின்பேரெட்டு அவை களிலே சிறியவுயிர்களிலே பரமகாட்டையான அணுரூபமாய்ப் புகுந்திருப் பதே அணிமா பிருதிவிமுதல் சிவமீறுனமுப்பத்தாறு தத்துவமும் உள்ளும் புறமும்நீங்காதிருந்து நிறையும் பெருமையே மகிமாமேருமலைபோலக்கனமா னதூலமாய் எடுத்தால் இலகுவாயிருப்பதே இலகிமா பரமாணுப்போன்ற வ டிவாய் எடுத்தால் மேருமலைபோலிருப்பதே கரிமா பாதாளத்திலிருந்து பிர மலோகம்போய் மீண்டும் பாதாளத்துக்குவரத்தக்கதே பிராத்தி ஒருதேகத் திலிருந்து வேறொருதேகத்திலேபுகுதலும் ஆகாசத்திலே சஞ்சரித்தலும் இ ச்சித்த போகமெல்லாம் தானினைத்தபடியே அனுபவிக்கவரச்செய்தலுமிவை யெல்லாம் பிராகாமியம் முத்தாழிலுஞ்செப்து சூரியன் முதலான கிரகங்க ளெல்லாந் தான்சொன்னபடியே நடக்கச்செய்வதே ஈசத்துவம் அசுரர்-பட் சிகள்-மிருகங்கள்-பூதங்கள்-மனிதர்கள் இந்திரன்முதலிய அஷ்டதிக்குப்பா லகர்களெல்லாரையுந் தன்வசமாக்கிக்கொள்வதே வசித்துவம் ஆகிய சித்திக ளை எம்மைத்தெரிந்தயோகிகள் விரும்பார்கள் ஆனலும் இந்தச்சித்திகள் அ ந்த யோகிகளைப்பின்தொடர்ந்து அவர்கள்நிழல்போலக்கூடநின்று உலகத்தா ருக்கவர்கள் பெருமையைத் தெளிபச்செய்யுமென்று அஷ்டமாசித்திகளை யு பதேசித்துத் தெளிவுசெய்ய அப்படிக் கடவுளுபதேசித்த சித்திகளை அந்தப் பெண்கள் பார்வதியாகிய தேவியைப் பாவனையாகத் தியானித்து நன்றாப் அப்பியாசம்பண்ணிக்கொண்டு ஆகாசமார்க்கமாகச்சென்று கடவுளின் ஸ்ரீ கைலாபமலையைச்சேர்ந்து வாழ்ந்தார்கள்.

அட்டமாசித்தியுபதேசித்தபடலம்
முற்றிற்று.

சிவமயம்.

மூப்பத்திரண்காவது
விடையிலச்சினையிட்டபடலம்.

எழுசீரடியாசிரிய விருத்தம்.

சந்துசூழ்மலயச்சிலம்பர்தவம்புரிந்தவியக்கிமார்க்
கந்தராவிருசிதிதந்ததறைந்தனந்தனதடிதாழா
வந்துமீள்வளவன்பொருட்டுவடதுவாயிறைஞ்சைழத்
திந்துசேகரன்விடையிலச்சினையிட்டவாறுவிளம்புவாம்.

இரண்டொருள்.

சந்தனமரங்கள் சூழ்ந்தபொதிகைபின்கண் தவஞ்செய்துகொண்டிரு
ந்த யகஸ்திரீகளுக்கு அட்டமாசித்திபையுபதேசித்தநிருவிளையாடலொரா
ன்றேம். இனிசந்திரனை திருமுடியில்தரித்தருளிய சோமசுந்தசக்கடவுள்தம
துதிருவடியைதஞ்சியினின்றுபம்வந்து தரிசித்துதிரும்பியசோழராஜன்பொரு
ட்டுவடவாசலத்திறந்துவிடையிலச்சினையிட்டதிருவிளையாடலுசொல்வாம்.

ஸ்ரீகாஞ்சீபுரத்திலே காதிவெட்டிய சோழனென்பவன்உத்தமர்கா
கியசிவபத்தர்களிலே மிகமுத்தமன், சந்தனமுதலியபலவைகளாலும் ஆபரணங்க
ளாலும்பொய்யென்றுநீக்கி விபூதி ருத்திராக்ஷங்களாணிந்துக்கொள்வான். உண்
மையான வேதபுராணங்களிலே சொல்லும் பொருள்களெல்லாம்பரமசிவமே
பரதத்துவமென்று தெரிந்ததன் பின்னும் சைவபுராணங்கள்கேட்டுப்பரமசி
வனிடத்திலே மெய்யன்புகொண்ட கருத்துள்ளவன் சொக்கநாயகன் திருவி
ளையாடலுங்கேட்க அன்புகொண்டவளைக்கேட்டு மீளாஷிசுந்தரசுவாமர்பா
தங்களைவணங்க மிகவுமன்புகொண்டு மதுரேசன் பாதங்களைகாணப்போது
வணங்கப்பெறுவேனென்று பரிவுகொண்டு இராத்திரியிலே தூங்குறவன்
மீளட்ஷிசுந்தரேசுவரை தியானித்துக்கொண்டிருந்திசைசெய்யஅன்றிராத்தி
ரியில் அந்தக்காடுவெட்டின சோழன்கனவில்வெள்ளியம்பலத்தில் திருநடனை
ஞ்செய்கிற கான்மாறியாடியவர்ஓர்சித்தராய் அவன்முன்வந்துஇன்றேமதுரை
யில் நம்மைதரிசனைசெய்துபோவாயாகவென்றுசொல்லிமறைந்தருளினர்.

அதுகேட்டுச்சோழராஜன் மிகவுமாச்சரியங்கொண்டு மந்திரிமுதலிய
சேனைகளொருவருமில்லாமல் தானொருவனுப்பப் புறப்பட்டுக் கடவுளருளே
துணையாய்நின்று வழிகாட்டஅன்றிராத்திரியிலே மலைகள்காடுகளாறுகளெ
ல்லாங் கடந்து கரும்புகளும் செந்நெல்களும் வளர்ந்தோங்குகின்ற வையை
யாற்றங்கரையையடைந்து நெருங்கும்போது வையையாறுகரைகளையுடைத்
துக்கொண்டும், மரங்களை முறித்துக்கொண்டும் வெள்ளம்பெருகிவர, சோழ
ராஜன் வடகரையிலேநின்று எது மதுரேசனை வணங்குதற்கு இதுவிக்கினமா
யிருக்கிறதென்று சுவாமிபொன்பாதந்தரந்திலே அமுதத்தையிட்டுஉண்ணும்
போது தடித்தாற்போலாயிற்று இந்தவெள்ளந்தடுப்பதுவிடிந்தால்பாண்டிய
ன்துன்பப்படுத்தத்தொடங்குவான் இதற்கென்செய்வேனென்று கிலேசப்ப
டும்போது கடவுள்முன்னை சொப்பனத்திலே வந்தாற்போலவே அப்போ
தும்சித்தவடிவாகவே எதிர்வந்துநின்று பெருகிவருகிறவெள்ளம் வற்றும்படி
க்கிருபாலோக்கஞ்செய்ய சோழன் வற்றினவாற்றை உடனேகடந்துவந்துவ

டக்கு வாயிலுந்திறக்க உள்ளேநிறைந்துள்ள காவலெல்லாங் கடந்து வீதிக ளுங்கடந்து பொற்றூமணைத்தீர்த்தத்திலே முழுகச்செய்து தமதுதிருக்கோ யிலுக்குள்ளே புகுதவுஞ்செய்து இந்திரவிமானத்துள்ளேவிளங்குகின்ற தம் மையும் வணங்கசெய்து சர்வலோகங்களையும்பெற்ற தாயாகிய அங்கயற்க ணிமைமையையும சேவிக்கும்படிசெய்து போரானந்தத்திலே முழுகவுஞ்செய் தார், அச்சித்தசாமி அப்போது சோழராஜன்.

எண்ணியவெண்ணியாங்கேயான்பெறமுடித்தாய்போற்றி
பண்ணியன்மறைகடேறுப்பான்மொழிமணாளேபோற்றி
புண்ணியர்நமக்குவேதப்பொருளுரைபொருளேபோற்றி
விண்ணிழிவிமானமேயசுந்தரவிடங்கபோற்றி.

எவ்வுடலெடுததேதன்மேலுளெண்ணிலாப்பிறவிதோறு
மவ்வுடலெல்லாம்பாவமறும்பொருட்டாகவன்றே
தெவ்வுடல்பொடித்தாயுன்றன்சேவடிக்கடிமைபூண்ட
விவ்வுடலொன்றேபன்றேவெனக்குடலானதையா.

என்று பலபலவிதமாகத் தோத்திரஞ்செய்து வரங்கள்வேண்டுகின்ற சோழனைப்பார்த்து இனி உன்னைப்பாண்டியன்கண்டால் துன்பப்படுத்த வெ ண்ணுவானென்று சித்தசாமிசொல்லி அவனைவடக்குவாயில்வழியே அழை த்துக்கொண்டுசென்று வையைவடகரையிற் கொண்டுபோய் நிறுத்தி அவன் நெற்றியில் விபூதி அணிந்து உன் அன்புக்கேற்க வழித்துணையுண்டாகக்கட வதென்றுவாழ்த்தி அவனை அனுப்பிவிட்டுவந்து கதவைமூடிக்கதவில்விடைக் குறியிட்டுத் திருக்கோயிலுக்குள்ளே எழுந்தருளியிருந்தார் விடிந்தபின்பு வாயில்திறப்பவர்கள்வந்து வேறு குறியிட்டிருப்பதைக்கண்டு சந்தேகித்து மற்றைவாயில்கள் மூன்றையும் போய்ப்பார்த்து மீனக்குறி தப்பாதிருக்கவட வாயிலுக்கு மாத்திரம் வேறுகுறி யுண்டாயிருக்கவேண்டிய காரணமென்ன வென்று பாண்டியன்முன்னேசென்று ஐயா வடக்குவாயிற்கதவிலே மீனக்கு றியையழித்து விடைக்குறியிட்டிருக்கின்றது அந்தக்குறியிட்டவர்கள் இன் னரென்று தெரிந்திலோமென்றுசொல்ல வுடனேபாண்டியன் வந்துபார்த்து இதென்னமாயம். இப்படியஞ்சாமற்குறியிடவல்லவர்யாரென்றுவிசாரித்துத் தெரியாமல் தன்கோயிலுக்குள்வந்து வியாகூலசித்தனைப் போசனமுங்கொ ள்ளாமல் பட்டினியாக வெறுந்தரையிலேபடுத்து நித்திரைகொள்ள அப்போ தவன் கனவிலே சோமசுந்தரக்கடவுள்வந்துபாண்டியனேகாடுவெட்டின சோ ழன் மிகுந்தபத்திமாணைகையாலே இங்குவந்துநம்மைத் தெரிசிக்கவேண்டினை ன். நாம்அழைத்துவந்து வடக்குவாயிலைத்திறந்து தெரிசிக்கச்செய்துஅவனை அனுப்பிவிட்டுப்பின்பு கதவைமூடி விடைகுறியிட்டோமென் றருள்செய்ய, பாண்டியன்விழித்தெழுந்து பயந்துவெயர்த்து விம்மித்தோத்திரங்கள்செய் துபரமானந்தக்கடலிலேமுழுகி வெளிப்பவந்து எல்லாருக்கு மின்னபடியும் ன்று தெரியச்சொல்லித் தன்னைபோலவேயெல்லாரும பேரின்பக்கடலிலே முழுகசெய்து பின்தன்செங்கோலும் வெண்குடையும் ராஜமுடியுந்தன்புத்ர னை ராஜேந்திரபாண்டியனுக்குகொடுத்து கடவுள்திருவடியையடைந்தான்.

விடையிலச்சினையிட்டபடலம் முற்றிற்று.

சிவமயம்.

மூப்பத்தைந்தாவது.

தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

சம்புமதுரைப்பரனிரயதனிபேவந்துதனைப்பலிந்த
வெம்புகதிரோன்மருமானவிடுத்துபீண்டுதாழிறுக்கி
யம்பொற்கதவின்விடைபொறித்தநறுந்தென்னவடுபடைக்கு
வம்புமலர்தோப்படுனற்பந்தர்வைத்துக்காத்தவகைசொல்வாம்.

இதன்பொருள்.

சம்புவென்னும் பெயரையுடைய மதுரைக்கடவுளானவர் இராக்காலத்திலேவந்து தம்மைவணங்கிய சூரியகுலத்தோன்றலாகிய சோழமகாராஜனை வெளியிலேவிடுத்துப் பழையபடிபோதாவிட்டு அழகிய பொன்மயமாகிய கதவினிடத்து விடையிலச்சினையிட்ட அற்புதத்தைச்சொன்னேம் இனிபாண்டியனது சேனைகளுக்கு வாசனையுடைய மலர்தோய்ந்த தண்ணீர்ப்பந்தல் வைத்துக் காத்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

இராஜேந்திரபாண்டியன்செங்கோல்செலுத்துகிறகாலத்தில் காடுவெட்டினசோழன் பின்புதான் எல்லாருந்தெரிய மதுரையில்வந்து கடவுளை வணங்க நினைத்துப் பாண்டியன் சிநேகமாகும்பொருட்டு அவனுக்குச்சில கைக்காணிக்கைகள் கொடுத்தனுப்பினன் அப்படிச் சோழன் அனுப்பிய பொன்றுபாணம் பொன் வஸ்திரங்கள் மூதலானதெல்லாம் பாண்டிய னேற்றுக்கொண்டு சோழனுடனே தானுமுறவாகவேண்டுமென்று நினைத்துவேறு சில கைக்காணிக்கைகள் கொடுத்தனுப்ப அதற்குச் சோழன் மனமகிழ்ச்சியாய்த் தன்னுடைய பெண்ணைப் பாண்டியனுக்குக் கொடுக்கச் சம்மதித்திருக்க அந்தச்செய்தியை இராஜேந்திரபாண்டியனுக்கிளவலான இராஜாதிராஜகமென்பவன்கேட்டுப் பழிபாவங்களுக்கஞ்சாமல் வஞ்சனையாய்த்தான்போய்ச்சோழன்மகளைக் கலியாணம்பண்ணிக்கொள்ளநினைத்துக் காஞ்சிபுரம்போய்ச்சேர, அப்படிக் காஞ்சீபுரத்துக்குவந்த இராஜேந்திரபாண்டியன் கும்பினையத்தன்சேனைகளுடனே யெதிர்கொண்டுபோய்க்கண்டுகூட்டிவந்து மூத்தவனுக்குக்கொடுக்க நியமித்தபெண்ணை அவனுக்குக் கலியாணஞ்செய்துகொடுத்துத் தமையன் அரசாட்சியைத்தம்பிக்குக்கொடுக்க ஆசைகொண்டுகாடுவெட்டினசோழன் இராஜேந்திரபாண்டியனைப்பிடித்துத் தன்வசப்படுத்திக்கொள்ள ஆலோசித்து மருமகனுடனே இராஜாதிராஜபதாகிகள்சூழப் பாண்டியன்மேலே யுத்தஞ்செய்வதற்காகப் போகையடித்துப்பலவாத்தியங்களுழங்கத் திரண்டுவந்து மதுரைக்கிரண்டுபோசனைக்கப்பாலிறங்குதற்குமுன்னே தூதர்கள்சென்று பாண்டியனுக்குத் தெரிவிக்கப்பாண்டியன்தெரிந்து சோமசுந்தரக் கடவுளுக்குத்தெரிவித்து வேண்டுவோமென்று திருக்கோயிலுக்குப் போய்க் கடவுளைவணங்கி சுவாமி! அப்போது பாதிராத்திரியிலேவந்து உம்மைவணங்கி உம்முடைய திருவடிக்கன்பளிப்போனேசாழன் இப்போதும்



அப்படியே பிரசித்தமாய்வந்து உம்மைவணங்கும்பொருட்டு எனக்குவேண்டியசிலவரிசைகளனுப்பி உறவுகொண்டுமனத்தில்வேறுன்றையெண்ணிப் போர்க்குவந்ததினாலே அக்காலம் தருமநீதிக்குடன்பட்டதவரீர்இக்காலம் அவன்செய்யவந்த வீரத்திற்குத் தகுந்தவீரஞ்செய்து நான்வெல்லும்படி செய்யவேண்டுமேமென்று மிகவும்வேண்டிக்கொள்ள அப்போதுகடவுளருளாலே அசரீரிவாக்காகப் பாண்டியனே நீ அஞ்சாமல் உன்சேனையுடனேசென்று வந்தபகைவருடனே போர்செய்தாயாகு லுனக்கே ஜெயமுண்டாகும்படி செய்கிறேமென்றுசொல்ல, அந்த அசரீரிவாக்கைக்கேட்டு, இராஜேந்திரபாண்டியன்கடவுள் திருவடியிலே மிகுந்தஅன்பும் ஆனந்தமுமான கடலிலே முழுகிவணங்கியெழுந்து தன்கோயிலுக்குபோயிருந்து சூரியோதய மாகுமுன்னேயெழுந்து சந்தியாவந்தனை முதலியவைகளை முடித்துச் சிவபூசையுஞ்செய்துகொண்டு கடலின்மேலே ஓராறு செல்வதுபோலச் சோழனுடைய அளவிறந்தசேனைகளின்மேலே தனது சுருங்கின சேனைகளுடனேபோயெதிர்த்துநிற்க அப்போதிருநிறத்துச்சேனைகளிலுள்ள வீரர்களும் இடிபோலமுழங்கிச்சண்டமாருதம்போலே வேகங்கொண்டு வடவாக்கினிபோலே கொதித்து வீரகைகெய்து சேனைகளை அணியணியாகவகுத்து மடித்தவாயுடனே கைகலந்தார்கள்.

அப்போது சோழன் சேனவீரர்களுக்குப் பாண்டியன் சேனவீரர்கள் ஒருவர்அதிகமாகக்கடவுளருளாலேதான்ற அப்படியே தோன்றுகிறதே தோதையும் குதிரைகளனுமானிக்கின்றதேரதையும் யானைகளின் முழக்கமுங்கூடவீரர்கள் பொருதுகூறவொலியும் தோள்தட்டுகின்ற வொலியுங்கூடிச் சமுத்திரத்தி னோசைபோல ஒரே முழக்கமாகக்கலந்தபோது வில்வீரரும்வாள்வீரரும் வேலாளிகளும் வேலாளிகளும், மல்லாளிகளும் மல்லாளிகளும், யானைவீரரும் யானைவீரரும், குதிரைவீரரும் குதிரைவீரரும், தேர்க்காரரும் தேர்க்காரருமாகப் போர்செய்யும்போது ஒருவர்விட்ட அம்புக்கொருவர் தப்பிக்கொண்டு குரூரமானபாணங்களையெய்து பின்னுந்தொடுக்கிற அம்புடனேவில்லைமறுத்துவிடுவார்கள். பின்னும்அளவில்லாதஅம்புகள்மார்பிலேதைகஅந்தஅம்புகளைப் பிடுங்கிக்கொண்டு வருகிறபகைவரை அவ்வம்புகளாலேயெய்து கொல்லுவார்கள் சோழன்சேனவீரர்கள், அபபடிப்பட்ட சோழன்சேனவீரர்கள்மேலேபாண்டியன்சேனவீரர்கள்விடாதமழைகள்போலே பாணங்களைப்பொழிந்துநின்று கூத்தாடிவருகிற பாணங்களுக்குத்தப்பியொதுங்கிநின்றுகொடியபாணங்களாலே அவர்கள்வில்லையும் அம்பையுமறுத்தெரிந்து இன்னும்வருகிறவர்களெல்லாம் வாருங்களென்றுகூப்பிடுவார்கள் இப்படிப்போர்செய்யும்போது கால்கள்முறிந்தன, தலைகளருண்டன,மலைகள்போலதோள்கள்சரிந்தன தேர்களுடைபட்டன பலவிதமான ஆயுதங்களுமுறிபட்டன, யானைகளின் துதிக்கைகளறுபட்டு இரத்தவெள்ளத்திலேவிழுந்தன பருந்துகளும்-பூதங்களும்-கூளிகளும்-மொய்த்துநெருங்கின. இப்படி இருதிரத்தரசர்சேனைகளும் ஒருவருடனிழலிலே ஒருவரொதுங்கும்படிசூரியன் வெயிலெறிக்க மத்தியானமாகுமளவும் பெரும்போர்செய்ய அன்றைத்தினத்தில் சிவனது நெற்றிக்கண்போல அதிதீக்ஷ்ணியமாய்எப்படிப்பட்ட குளங்களு

ம் ஆறுகளுமவற்றுமபடி சேகாடடவிழ்வீச மண்ணுமிவடிக்குப்பாதாளந் தோற்றமலைகளுந்பிளகது வரிசைகளாகக் கணக்கில்லாமணிற்கிற சோலைகளி லே இலைகளெல்லாமுதிர்ந்து சூரியகிரணங்களாலே பெங்குங்கானலாக வேர் வைநீரையெல்லாம் பெங்குமநீரில்லாமல்வற்றிநின்றநிலங்கொதிக்கபாணைகள் மதநீர்மாறிச் சோரவும், குநிலைகள்தளர்ந்து கபிக்கவும் பதாதிகள் சூறைக் காற்றிலைலசுழற்று தண்ணீர்த்தாகங்கொண்டு கானிமரத்தினிழலிலேயொ துங்கவும், இலைகளுதிர்ந்து பெறிதாய்நிற்நிறமரத் நிழலைக்கண்டு சிலசோட வும், யாணைதேர் குதிரை இந்நிழல்கானிலே பொதுங்குகிறவர்களுமேகடங்க ளைநிழலுக்குக்குடையாகப்பிடித்துச்செல்லுகிறவர்களுமே வேறேயொதுங்க நிழல்கிடையாமல் வீரசொர்க்கத்தைச்சன்றவர்களைக் கல்லாகச்செய்து நிற்கிற நிழலிலே பொதுங்குகிறவர்களுமாக இப்படிவானதப்படுகிறசமயத்தில் எல் லாவுயிர்களுக்கும் பொதுவானகூடற்கடவுள் பாண்டியன் சேனைகளினடுவே காலுகாவிரிலே ஒருதண்ணீர்ப்பந்தல்பண்ணி அந்தப்பந்தலினடுவேறேறிய லேதிரிபுண்டரங்களணிந்துகாதிலேகுண்டலமும், பாதத்திலொற்றச்சிண்கிணி யும் தோலாடையும் பார்த்தவர்கள்மனத்தையும் கண்களையும் பிடிக்கின்ற க கையும் கிருபாதோக்கமுமுண்டுகொண்டு வேதங்களினடுவேநின்றுர்போல தவவே டமாகநின்று ஆற்றுநீரைப் பார்த்திரங்களிலே நிரப்பிக்கொண்டுஒருகமண்ட லத்திலேநீர்மொண்டுகொண்டு ஒருவருக்கொன்றுநூறாயிரம்பேருக்கு நூறா யிரம்பேருக்கு நூறாயிரமுமாகக்கொண்டு கைச்செர்பிலே பிறதுவாதத்திலே வார்த்துவார்த்துத் தாகத்தைத்தீர்க்கஅப்போது சோமசுந்தரக்கடவுள் வை த்ததண்ணீர்ப்பந்தலிலேபாண்டியன் சேனைவீரர்களெல்லாருமுவந்து தன்னீ ர்ப்பருகி இளைப்புத்தீர்ந்து பலம்வந்தபின்பு சோழன்சேனைவீரர்கள்மே லே றிச்சேனைகளையெல்லா மோடத்துரத்தித் துட்டைமாலையணிந்து போர்செய் துசோழன்சேனைகள்கடலுடைந்தாற்போல உடைந்தோட வெற்றிமாலை யுத்தரித்துச்சோழனையும் அவன்மருமகனையும்கைப்பிடியாகப்பிடித்துவந்து பா ண்டியனுக்கு முன்னேவிட, பாண்டியன் அவ்விருவரையுங் கொண்டுபோய்ச் சோமசுந்தரக்கடவுள் சந்நிதியிலேநிறுத்தி, சுவாமி! தேவரீர்திருவுள்ளமிப்ப டியென்று வணங்கிகேட்க, அதுகேட்ட சோமசுந்தரக்கடவுள் பாண்டியனே! நீதருமவானல்லோயோ உன்மனதிற் கினைந்தபடி செய்வாயாகவென்று அசரீரி யாகச்சொல்ல அந்தஅசரீரிவாக்கைப்பாண்டியன்கேட்டு தருமசாலிநிழலுக்குச் சிலதானமுதலாகபதாதிகளுக்குஞ் சில ஆபரணங்களுங்கொடுத் தனுப்பிவிட்டான். பின்புதன் தம்பியான இராஜசிங்கமென்பவனுக்குத் தன் னிராஜ்ஜியத்திலே சிலதுபிரித்துக்கொடுத்து அவனையொதுக்கிவிட்டு எல்லா வுயிர்களுக்குந் தாய்போல ரக்ஷகனுகிக் கடவுளருளாலே பலவளங்களுமபெ ருக இராஜநீதிசெலுத்திக்கொண்டு வாழ்ந்திருந்தான்.

தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்

முற்றிற்று.

ல்

சிவமயம்.

மூப்பத்தாறுவது

இரசவாதஞ்செய்தபடலம்.

கலிநிலைத்துறை.

வரதண்மீனவன்படையிடைவந்துநீர்ப்பந்தர்
விரதனுகிரருத்திபவினையுரைசெய்தும்
பரதநூலியலுடகப்பாவையாலொருத்திக்
கிரதவாதஞ்செய்தருளியவாடலையிசைப்பாம்.

இதன்பொருள்.

அடியார்களுக்கு வரங்களைக்கொடுத்தருளுகின்றவராகிய சோம சுந்தரக்கடவுள் மீனக்கொடியையுயர்த்திய பாண்டியனது சேனைகளுக்குட் புகுந்து நல்ல விரதத்தையுடையவராய்த் தண்ணீர்ப்பந்தல் வைத்து அந்தச் சேனைகளுக்குத் தண்ணீரருத்தியதிருவிளையாடலைச்சொன்னேம். இனி, பரதநூலிலக்கணப்படியே நாடகம் புரியவல்ல ஓர்பெண்ணுக்கு இரசவாதஞ் செய்தனுக்கிரகித்த திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

அந்தப்பாண்டிவளநாட்டிலே வையையாற்றுக்குத் தென்கரையிலே மதுரைக்குக்கிழக்கே திருப்பூவணமென்று ஒருசிவஸ்தலமுண்டு. அந்தத்தல த்துப்பூவணநாத சுவாமிகளின் திருக்கோயில் மகாஜனங்களும் பரிசாரகர்க ளும் தாசிகளுஞ்செய்த தவப்பயன்போன்றவளாய் பெண்களிற் சிறந்துவளா ய் தேவர்களுங்கண்டு மோகிக்கத்தக்க வடிவுள்ளவளாய்க் கடலமுதம்போ லுஞ்சாயலுள்ளவளாய் பொன்னையாளென்னும்பெயர்கொண்டு வீணையிற் பாடல் ஆடல்முதலானவற்றுல்தவசம்பைகளிலும் மேம்பாடுடையவளாய்த் தருமநீதிதவராமல் நடக்குந் தகுதியுள்ளவளாகையால் தன்னுடையதோழி களுடனே பொழுதுவிடியுமுன்னேயெழுந்து வையையினீராடிச் சிவபூசை செய்துகொண்டு பின்புசந்நிதானத்துக்குப்போய் பூவணநாதரைச்சேவித்து அங்கேநடனஞ்செய்து சிவனடியார்களையே பொருளாகவெண்ணி அவர்க ளைப்பூசித்து அவர்களை அறுசுவைப்போசனமும் பொசிக்கச்செய்து பின்பு தான்பொசிப்பதே நியமமாகக்கொண்டு நடந்துவருகிறநாளில் அவளன்பின் திறத்தைவெளியிடவேண்டிய பூவணநாதர் தமது திருவுருவை நூதனமாகப் பிரதிஷ்டை செய்விக்கவேண்டுமென்கிறகருத்தை அவளுக்குக்கொடுத்தருள அவர்தந்த பொன்பே வடிவாய் மான்மழுவேந்திய கடவுள்வடிவைக் கருவில் வார்த்துப் பிரதிஷ்டிக்க அந்தப்பொன்னையாளென்பவள் தனக்குத்தினந் தினங்கிடைக்கிற பொருள்களெல்லாம் சிவனடியார்பூசைக்கேசெலவாகி மிகு தியாகாமையிருதேல கடவுள் திருவுருவை யெப்படிக் காணத்தக்கதென்று

திருவிளையாடற் புராணம்.

பாண்டியனுக்கு உலவாக்கிழியருளின சோமசுந்தரக்கடவுளைத் தியானித்துக்கொண்டிருந்தாள். அப்படியெண்ணுகின்றவள் நினைவைத்தொடர்ந்து கூடற் கடவுள் நிறைய விபூதிபூசின திருமேனியும், கட்டகமேகலையும், யோக பட்டங்கட்டின இடையும், விபூதிப்பையும் கோவணத்தின் மேலேசூழ்ந்த வுடையும், சிவந்தசடையுங்கொண்ட ஒருசித்தராகிய பொன்னனையாள் மாளிகைக்குவந்து தினந்தினம் அவள்வீட்டிற் போசனத்துக்காக வருகிறவர்களுடனேகூடித் திரு வமுதுசெய்யாமல் ஒருபுறத்திலே யொதுங்கி யிருந்தார்.

அங்கேசிவனடியார்களெல்லாம் திருவமுதுசெய்துபோக, தாமொரு வரும் அமுதுசெய்யாமல்வேறேயிருக்கின்றவரைவேலைக்காரிகள்கண்டு சுவாமி உள்ளே யெழுந்தருளுமென்ன, அதற்குச்சித்தர் நல்லது உங்கள் தலைவியை யிங்கேவரும்படி சொல்லுங்களென்ன, அந்தவுழியக்காரிகள்சென்றுபொன் னனையாளைக்கண்டு அம்மேவந்தசிவநேசரெல்லாரும் அமுதுசெய்தெழுந் தருளினார்கள். அவர்களிலொருதம்பிரான் எங்கும் காணக்கூடாதகுணமுள்ள வராய்ச் சிறுகைகொண்டருளி உன்னைத்தம்மிடத்தேவரும்படி சொல்லுகின்றுசொல்ல அதைப்பொன்னனையாள்கேட்டு நவரத்நிலபரணங்கள் புஷ்பித்தபூங்கொம்புபோலே நடந்துவந்து கண்டு நீர்வந்ததுநல்வரவல்லவோ வென்றுதுதித்து அருக்கியபாத்தியமுதலியவைகள்கொடுத்து இவர்திருவடி தனது முடியிலேபொருந்த வணங்கித் தேவரீர் இங்கே எழுந்தருளுவதற்கு அடியேன் பூர்வத்தில் என்ன தவஞ்செய்தேனென்றுகொண்டாடிச்சித்தர் திருமேனியும் அவயவங்களினழகும் கண்டுநின்று கைகுவிக்க, சித்தர்கிருபா நோக்கங்கொண்டருள உடனேபொன்னனையாள் அவர் அருள்வலைக்குட்பட் டவளாய்ச் சுவாமீ தேவரீர் உள்ளேயெழுந்தருளியுல் அடியேலைலாகிய திரு ப்பணிகள் தேவரீர் மனதுக்கிசைந்தபடிநடப்பேனென்று மிகவும்வேண்டசித் தர்தம்முள்ளேநகைகொண்டுநோக்கி வடிபெண்ணே, என்னகாரணத்திலேல உன்இடை இளைத்திருக்கிறதுபோலவே நீயும் மிகவும் இளைத்திருக்கிறயென் றுகேட்டருள அதற்குப்பொன்னனையாள் சுவாமி! அடியேனுக்குயாதொருவ ருந்தமுமில்லை. ஆனாலும்எங்களபூவணநாதசுவாமி திருவுருவைக்கருவிலேலே கண்டு பிரதிஷ்டைபண்ணவேண்டுமென்னுங்கருத்துள்ள எனக்கு தினந்தின ங்கிடைக்கிற பொருள்களெல்லாம் உங்கள்பூசைக்கேயல்லது மிகுதியாகவி ல்லை இதுவே அடியேன்கருத்தென்ன, சித்தர் அவளன்புதித்திக்கக்கேட்டுப் பெண்ணே நீயோ தேகம் இளமை செல்வம் இவையெல்லாம் நீர்மேற்குமிழி போல் நிலையற்றதென்று தெரிந்தவளாய், தருமநிலையானதென்று தெரிந்து அதிலும்சிவதருமமும் சிவார்ச்சனையும் அதிகம் அதிலும்சிவனடியார் பூசை யதிகமென்று பூசித்தருச்சிக்கிறாய். ஆதலால் இம்மைக்கு மறுமைக்கு நன் மைமெகாண்டாய் இனிஇருமைக்கும் உன்பெயராலேவிளங்கசுவர்னத்திலேல கடவுள் திருவுருச்செய்துவைக்க நீவிரும்பியபடியே சித்தியாகப் பெருமை ஆனதிலேல உன்வீட்டிலுள்ளபித்தளை ஈயஞ்செம்புமுதலானபலபாத்திரங் களையுங் கொண்டுவாவென்றருள்செய்தார். உடனேசித்தர் சொன்னபடியே பலவனையான நவலோகங்களுங்கொண்டுவந்து சித்தர்முன்னே கலகலவென்

னக்குவித்தாள். அப்போதுசித்தசாமி திருநீற்றை அவைகளின்மேலே தெளித்து அவையெல்லாம் பொன்னுகவெண்ணி ஏடிபெண்ணே இன்றிராத்திரி முழுதும் இவைகளையெல்லாம் நெருப்பிலே புடமிட்டெடுத்தால் அவ்வளவும் உயர்ந்தபசும்பொன்னுகும் அதைக்கொண்டு நீ திருப்பூவணநாதர் திருவுருச் சமைத்துக்கொள்ளென்றுசொல்ல, பொன்னனையாள் சுவாமி தேவரீர் இன்றைய இராத்திரிமுழுதும் இங்கேதானேயிருந்து திருவமுதுசெய்து இது முடிந்தபின்பு போகலாமென்றுவேண்ட அதற்குச் சித்தசாமி மீனுக்ஷியம்மையைப் பிரியாத சுந்தராசாகையாலே யாம் மதுரையிலிருக்கிற சித்தரென்று மறைந்தருளினர்.

அபபடியவர் மறைந்தருளினபின்பு சித்தராய் வந்தவர் வெள்ளியம்பலவாணரென்று பொன்னனையாள்தெரிந்து ஐயோ! எம்பெருமான் மறைந்தருளினரேயென்று கொஞ்சம் தளர்ச்சிகொண்டு ஆனலும் நமதுகவலையை நீக்கினரென்று மகிழ்வுகொண்டவளாய் சித்தர் திருவருள்செய்தபடியே பலவகையான லோகபாத்திரங்களையெல்லாம் நெருப்பிலேயிட அவையெல்லாம் நெருப்பிலே கூடினபின்பு கடவுள் திருவடிநிழலை யடைந்தவர்கள் மலமிருளாகிய களங்க நீங்கிறற்போலக் களிம்பெல்லாநீங்கிச் சுவர்ணமாக அதைக்கொண்டு பூவணநாதர் திருவுருக்கண்டு அந்த உருவினதழகைப்பார்த்து அச்சோ அழகியபிராணேவென்று அள்ளி முத்தங்கொண்டு தனது அன்பினுக்கண்ணை பழயகடவுளைப் பிரதிஷ்டைசெய்து திருவிழா திருத்தேர் முதலியவைகளெல்லாநடத்திச் சிலநாள்கழிந்தபின்பு வீடுபெற்றுள் அன்றுமுதல் பொன்னனையாள் தனதன்பிஞலே அந்தப்பெருமான் கன்னத்திலே செய்தநகக்குறிகொண்டு கலிகாலத்திலே செம்பொன்வடிவுநீங்கிக் காலத்துக்குத் தக்க கோலமாகத் திருப்பூவணநாதர் திருவுருவிளங்குகின்றது.

இரசவாதஞ்செய்த படலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

முப்பத்தேழாவது

சோழவினமதிவில்விழுத்திய படலம்.


அறுசீரடியாசிரியவிருத்தம்.

மின்னனையபூத்தொங்கன்றைவேணியிரசவாதம்
பொன்னனையாண்முன்செப்புபோதத்துபுகன்றேமார்த்தார்
மன்னனைமதிவில்வீட்டிமலரடிக்கன்பனை
தென்னனையமரிற்காத்ததிருவிளையாடல்சொல்வாம்.

இதன்பொருள்.

மின்னலையொத்த திருமேனியையுடையவரும் அழகிய கொன்றை மாலையைதரித்த சடைமுடியையுடையவருமாகிய சோமசுந்தரக்கடவுள்பொன்னனையாளென்னும் அடியவளொருத்திக்கு முன்னேவந்து இரசவாதஞ்செய்த திருவிளையாடலைச்சான்றோரும். இனி, ஆத்திமாலையைச்சூடிய சோழனை மதிவில்லைதள்ளித் தமது திருவடிக்கன்பனாகிய பாண்டியனை யுத்தத்திற்காத்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

இராஜேந்திரபாண்டியன் இந்திரன்முதலான தேவர்களெல்லாந்துதிக்கச் சிவலோகமடைந்தான், பின்பு அவன்புத்திரன் இராஜேசபாண்டியன் அவன்புத்திரன் இராஜகெம்பிரன், அவன்புத்திரன்வாங்கியதீபன், அவன்புத்திரன்புரந்தரசித்து அவன்புத்திரன்வங்கியபதாகன், அவன்புத்திரன்சுந்தரசோசபாதசேகரன் இந்தப்பாண்டியன் கூடற்கடவுளுக்குமிகுந்த அன்புள்ளவனுப்தனதுதிகொலிவேலிஞலே கொடுங்கோன்மைசெய்கிற குறுநிலமன்னர்களையடக்கி உலகத்தில் உயிர்களாகியபயிர்களை வளர்க்குநாளிலே பத்துத்தேருரும் நூறுயாகைகளும், ஆயிரங்குதிரைகளும், பதினாயிரம்வீரர்களுமான இவ்வளவுசதுரங்கசேனைக்கூட்டி இவைகளுக்குத்தக்க சம்பளங்கள்கொடுத்துமிகுந்தபொருள்களெல்லாம் சிறந்தவடிவான சிவனுக்கே கண்டிகைமகுடமுதலான ஆபரணங்கள்செய்தும்கோபுரம் மண்டபமுதலானவைகளுக்கு ரத்தினங்கள்பதித்தும் இப்படிகோயிலுக்குவேண்டிய திருப்பணிகளெல்லாஞ்செய்துவருகிற இவனுடையசேனைகளின் சுருக்கத்தைத்தெரிந்து ஆயிரங்குதிரைகளுக்கொருசேவகனென்றுசொல்ல, வல்லவனுகிய ஒருசோழராஜன் இந்தச்சுந்தரசோசபாதசேகரபாண்டியனென்று நிஜபங்கொள்ளநினைத்து வஞ்சிமாலைசூட்டிக்கொண்டு அனேகமாயிரம் ரதகஜதுரகபதாதிகளுடனே கடல்பொங்கிவருவதுபோல வெழுந்து பாண்டிநாட்டைக்குறித்துவர அதைப்பாண்டியன்தெரிந்து சோமசுந்தரக்கடவுள் சந்நிதியிற்போய் வணங்கிநின்று சுவாமிதேவரீர் திருவருளாலே அடியேன் அரசாட்சிசெய்துவருகிறது தெரியாமல் எனதுசேனைகளின் சுருக்கத்தைக்கண்டு எனதுநாட்டைத் தன்னைவசமாக்க



வெண்ணி காவிரிநாடனுகிய சோழன் தனது சேனைக்கடலிலே வடவாக்கினி போலமூண்டுவருகின்றன். இதற்குநான்செய்வதென்னென்றுவேண்ட ஆகாயத்திருந்து அசரீரியாகப் பாண்டியனே நீளவ்வளவு மஞ்சுவேண்டாம் நாமே பொருது வென்று உனக்குவெற்றியுண்டாகச் செய்கிறேமென்றுசொல்ல பாண்டியன்கேட்டுச் சூரியனைக்கண்ட தாமரைபோல முகமலர்ச்சியாய் கடவுள் திருவடிக்கமலங்களை மனத்துள்ளே தியானித்துக்கொண்டு வெளியேவந்து பலவாத்தியங்களுழுழங்கத் தனது சேனைகளுடனே புறப்பட்டுக் கொல்லிமலைக்கதிபனை சோழன் சேனைக்கடல்முன்னே ஒரு ஆறுபோலச்சென்றுலும் அந்தச்சேனைகள் கண்களுக்குப் பாண்டியன்சேனையும் கடவுளருளாலே ஒருகடல்போலவே தோன்றலாயிற்று.

அப்போது கூடற்கடவுள் பாண்டியன் சேனைக்குமுந்தி வேதமாகிய குதிரைமேலேறிக்கொண்டு (மேருவாகிய வில்லைவளைத்துவாசுகியாகியநாணைப்பூட்டித் துளசிமாலையணிந்த விஷ்ணுவாகிய அம்பை அதிலேநாட்டி வாயினெருப்பை முப்புரத்திலே மூட்டி வெற்றிக்கொண்ட) தாமே ஒருவேடன் வடிவாகிக் காதிலே தந்தக்குழையும், கழுத்திலேமுத்துமாலையும், வெட்சிமாலையுமயிலிறகுமுடித்த கொண்டையும், கைகளிலேதந்தக்கடகங்களும் சோழனைக்கொல்ல வெழுந்தவிடம்போற் கறுத்ததிருமேனியும், எமன்போல் விளங்கும் வேலுமாகநிற்க, அவரைச்சோழன்கண்டு ஆயிரங் குதிரைக்குகாருசேவகன் நான் நீயெவ்வளவென்ன வேடனுகியகடவுள் நீயிவ்வளவுதானே நான் அளவில்லாத குதிரைகளுக் கொருசேவகனென்ன, அதுகேட்டஞ்சி நிற்கிற சோழன்முன்னே மின்னலீட்டிக்கொண்டு செல்லுமேகம்போலகடவுளாகிய வேடன்தனதுகைவேலைச்சுழற்றிக்கோபித்து அதிர்ந்துசீற, சோழன்பயந்து இனி இவன்கையவேலாலேநாமிறப்பதற்கெவ்வளவுஞ் சந்தேகமில்லையென்றெடுணன் அப்போது கடவுள் வேடன்மறைய பாண்டியன் குதிரையுடனேறுகிற சோழனைத்துரத்திக்கொண்டுபோகச் சோழன்திரும்பிப்பார்த்து இவன் அந்தவேடனல்லவென்று பயந்தீர்ந்து பாண்டியனை மதுரையளவுந் துரத்திணன். அப்போதோடுகின்றபாண்டியன் தனதுமதுரைக்குள்ளே அவசரமாய் துழைய நினைந்துவருகிற வேகத்திலே ஒருமதங்கொண்ட யானைபோலேதவறி ஒரு அகழ்கிடங்கிலேவிழுந்தான். அப்படிப் பாண்டியன்விழுந்தமேற்றிசை அகழிலே கூடவேதொடர்ந்துவந்து சோழனுங் குதிரையுடனேவிழுந்தான். அப்படிவிழுந்த இருவரில் சோமசுந்தரக்கடவுளின்திருவருளாலே பாண்டியன் யானைபோலெழுந்து கரையில்வந்தான். சோழன் அதிலே அழுந்தியிறந்தான் அப்படியிறந்த சோழனுடைய ஆடையாபரணங்கள் ரதகஜதுரகபதாதிகளையெல்லாங் கொள்ளைகொண்டு தங்கள்கடவுளுக்கு வேண்டியவைகளைக் கொடுத்துக் கடவுள் திருவடிக்கன்பனுய்பெருகி அரசாண்டிருந்தனன்.

சோழனை மடுவில்வீழ்த்தியபடலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

மூப்பத்தெட்டாவது

உலவாக்கோட்டையருளியபடலம்.


எழுசீரடியாசிரியவிருத்தம்.

மின்பனிக்கதிர்வேணிவானவன்மீனவன்றனைமானவேன்
மூன்பனிக்கவலந்திருத்துமுடுக்கிநேரியடுக்கலான்
மின்பனிக்கமலத்தடத்திறவிட்டவாறிதுபெருமைசா
லன்பனுக்குலவாதகோட்டையளித்தவாறுகிளத்துவாம்.

இதன்பொருள்.

விளங்குகின்ற குளிர்ந்தசந்திரனைச் சடையில் தரித்தருளியசோமசுந் தரக்கடவுள் பாண்டியனைச்சத்துருவினது வலிந்தவேலைக்கண்டு அஞ்சுங்க வலையினின்றுமொழித்து யுத்தத்திலேசெலுத்தி நேரிமலையையுடையவனுகி ய சோழமகாராஜனைப்பின்பு குளிர்ச்சிபொருந்திய தாமரைமலர்களையுடைய மதுவில்லீட்டிய திருவிளையாடலிதுவாகும். இனி, பெருமைமிகுந்த ஓரடியவ ருக்கு உலவாக்கோட்டையருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

அந்தமதுராபுரியில் விளங்குகின்ற சோமசுந்தரக்கடவுளுக்குமிகுந்த அன்பனை ஒருவேளாளன் தருமத்திற்கும் புகழுக்கும் சிறந்தவன் அவன் ம னையாள் ஈகையிலுலும் கற்பிலுலும் சிறந்த தருமசீலியென்பவள் எல்லாரும் நன்குமதிக்கத் தன்கணவனுக்கு இனிமையானவள் அப்படிப்பட்ட மனைவி யோடுவாழ்கின்றவன் அதிகம் எர்கள்வைத்து உழவுதொழில்செய்து விளைபு ம்பலன்களைக்கொண்டு அரசருக்குக்கொடுக்கும் பகுதிச்செலவுபோகமிகுந்த வைகளையெல்லாம் தன்மனையாளாலே அறுசுவையுண்டிகள்சமைத்துச் சிவன டியார்களைப்பூசித்துப் புசிக்கச்செய்து விருந்தென்னும் வேளாண்மையும்செய் துசிறந்தவனுப் இருக்க அவன் அப்படிக்கொடுக்கக் கொடுக்க மணற்கேணி போல் செல்வம்பெருகி வளர்கிறகாலத்தில் இவனது நற்குணங்களையெல்லா ருக்கும் தெரிவிக்கவேண்டி மதுரேசர் அவனது விளைநிலத்தில் விளைவுகுறை யச்செய்தார். அப்படியாலுலும் யார்க்கும் இல்லையென்னுதபடி சிவனடியார் பூசைமுன்போலவே குறையாமற்செய்து பின்பு தான்கொண்டவிரதத்துக்கு ப்பொருள்போதாமல் தன் உடம்பைவருந்தச்செய்து இதுவரையிலும்நமக்கு வேண்டியபொருள் கொடுத்துவந்த சோமசுந்தரக்கடவுள் கடன்படச்செய்து விளைபொருளும் குறையச்செய்தால் நம்மால் என்னசெய்யத்தக்கதென்று நி னைத்து சிவனடியார் பூசைநியமத்துக்குத் தடையுண்டாய் மிகவும் வருந்தி த்தினம்தினம் சிவனடியாரைப்பூசித்துப் பின்பு தான்புசிக்கிறவனைபோலே ஒ ருநாள்தானும் தன்மனைவியும் பட்டினிபாய் உதராக்கினியாலேபுழுங்கி இனி



இறந்துபோகத்தக்க இந்த உடம்பிலே பிரயோஜன மென்னவென்று வெறுத்துத்தன்மனைவியுடனேகோயிலுக்குப்போய் இந்தச்செய்தியைக்கடவுளுக்குத் தெரிவித்துப்பின்புநாம் இறந்துபோவதேதுணிவென்றுதுணிந்து திருக்கோயிலில் விளங்குகிறகடவுள் சந்நிதிமுன்னேவந்து வணங்கிநின்றுதேவர்கள் பிழைக்கச் சமுத்திரத்திற்றோன்றிய விஷத்தையுண்டு அவர்களுயிரைக் காத்த கடவுளே ! உம்முடையமெய்யன்பர் பூசைக்கிடையூறுய் எம்முடைய விளைநிலமெல்லாம் விளையாமற்போயின, கடனும் மிகுதியாயின, இனிக்கடன்கொடுப்பாருமில்லை ஆதலால் இனிபாரையாகிலும் கடன் கொடுக்கும்படி செய்தீரேயாகில் இந்தவுடம்பை வைத்திருப்போம், அப்படி செய்யாவிட்டால் இந்தவுடம்புச் சமையைத்தாங்கமாட்டோமென்று மிகவும் வேண்டும் போது சோமசுந்தரக்கடவுள் அவர்களைப்பார்த்து நீங்கள் அஞ்சவேண்டாம் உங்கள்வீட்டில்நல்ல சம்பாநெல்லுக்கோட்டை யிருக்கச்செய்தோம் அந்த நெல்லுக்கோட்டைநீங்கள் எடுக்க எடுக்கக்குறையாதிருக்கும் அதைநாள் தோறும் பூசைசெய்து அதில்வேண்டியநெல் எடுத்துக்கொண்டுதினம்நமதன்பர்களுக்கும் யார்க்கும் அன்னதானமுதலிய பலவிததர்மங்களும் செய்துகொண்டிருங்கள் பின்புபோரின்பவீட்டைத் தருகிறோமென்று ஆகாயவாக்காகச்சொல்ல, அந்தத்திருவாக்கைக்கேட்டு ஆனந்தபரவசராய் வேதப்பொருளான கடவுளை வணங்கித் துதிசெய்து பின்பு தங்கள் வீட்டுக்குவந்து முன்னேதேடின தவப்பயன்போலக் கடவுள் அருளிய உலவாக்கோட்டையைக் கண்டு சந்தோஷித்து அந்தக்கோட்டையைக் கடவுளாக எண்ணி, தினம்தினம் சந்தனபுஷ்பதூபதீபங்களால் ஆராதனைசெய்து உணவுக்கும் அதற்கு வேண்டிய பலவிதச்செலவுகளுக்கும் அது கொடுக்கப்பெற்றுச் சிவனடியார்களுக்கும், வைதிகர்களுக்கும், தென்புலத்தார்-தெய்வம்-விருந்து-சுற்றம்முதலானயார்க்கும் மேகம்போலவரையாதுகொடுத்துக் குபேரன்போலவாழ்ந்து பின்பு தாணுந்தன் மனைவியும் சிவலோகஞ் சேர்ந்தார்கள்.

உலவாக்கோட்டையருளிய படலம்

முற்றிற்று.

சிவமயம்.

முப்பத்தொன்டாவது

மாமழுங்கவழ்ந்துவழக்குரைத்தபடலம்.

அறுசீராடியாசிரியவிருத்தம்.

தாமமாறிதழிபார்த்தமர்க்கண்பன்வறுமைபட்டோட
ணுமஞாலவாக்கோட்டையருளியமுறைபிழையன்
றேமமணிமுல்லைநீர்ந்தார்சிறுசுணைவளைகற்காக
மாமழும்படிவங்கொண்டுவழக்குரைவண்ணஞ்சொல்வாம்.

இதன்பொருள்.

மணம்பொருந்திய கொன்றைமாலையைத்தரித்த சோமசுந்தரக்கடவு ளுடைய அடியார்களிடத்தில்மிகுந்த அன்பராகிய ஒரு வேளாளருக்குவறு மைவந்தகாலத்தில் (அவ்வறுமைநீங்கும்பொருட்டு) உலவாக்கோட்டையரு ளிய திருவிளையாடலிதுவாகும். இனி, அக்கடவுள் தேன்பொருந்திய புதிய முல்லைமலர்மாலையைதரித்த ஒருவணிகசிறுவனுக்காக அவன்மாமனுக திருவு ருக்கொண்டுவந்து (தாயாதிகளிடத்தில்) வழக்குரைத்த திருவிளையாடலை சொல்வாம்.

அந்தமதுரையில் வணிககுலத்திலேபிறந்து குபேரன்போல் பெருஞ் செல்வத்தையுடையவனுப்த் தனபதியென்னும் பெயர்கொண்ட ஒருவனும், அவன்மனைவியாகிய அருந்ததிபோலும் கற்பும்மகாலட்சுமியை யொப்பான அழகுடைய சுசீலையென்பவளும் நெடுங்காலமாகப் புத்திரனில்லாமல் வருந் தித் தனபதியென்பவன் தன்தங்கைப்பிள்ளையாகிய மருமகனைத் தனக்குப் பிள்ளையாகக்கொண்டு தன்மனைவியிடத்தில் மகிழ்ந்துகொடுக்க அவளும்வ ணங்கி வாங்கிக்கொண்டு அந்தப்பிள்ளைக்குத் தரிக்கவேண்டிய ஆபரணங்க ளைத்தரித்து அன்புடனே நன்முகவளர்த்துவருங்காலத்தில் தனபதியென் பவன் பிள்ளையில்லாதவளையும்தன்மனைவியிடத்து அதிகமோகங்கொண்டு தன் தங்கைமேல் நாள்தோறும் மனவிகிமித்தமாக அதிக சண்டைசெய்து விரோதித்துவர அக்காலத்தில் ஒருநாள் தங்கையானவள் தமபனைக்கோபி த்து பிள்ளையில்லாதமலடனெனவுனக்கு என்மகளைல்லவோ இவ்வளவுபெரு மையுண்டாகி இம்மைப்பயனும்மறுமைப்பயனும் அடையயோக்கியனையை ன்ன அதுகேட்டதனபதிமிகவும் நாணங்கொண்டு இனிவருபிறப்புக்காயினும் பிள்ளையுண்டாகத் தவஞ்செய்வேனென்று நினைத்துத் தன் செல்வமெல்லாம் தன்மருமகனுக்கே ஆகச்செய்து காட்டில் தவஞ்செய்யப்போயிருன் பின்பு அப்படி தவஞ்செய்யப்போனவன் நெடுங்காலம்வராதிருக்க அவன்தாயாதி கள் அவன் மருமகன்கொண்ட செல்வமெல்லாம்வழக்கிட்டுப் பறித்துக்கொ ண்டார்கள். அப்படிவிளைநிலங்கள்-அடிமைகள்-ஆபரணங்கள்-திரவியங்கள்-பசுக்கள்முதலான எல்லாமிழந்து சிறுகொடிந்தபட்சிபோலவருந்துகின்ற மக னும்தாயும் ஐயோ சார்பில்லாதவர்களுக்கெல்லாஞ் சார்பான ஆதரவா யிரு க்கிற கூடற்கடவுளே உன்திருவடிகளேசரணமென்று இந்திரவிமானக்கோ யிலுக்குள்ளேவந்து சுந்தரேசர்திருவடிகளைந்தாழுது துதித்து எவர்க்கும் மாதாபிதாகுருதெய்வமுமாகிய நீரே எங்களுக்கும் ஆதாரமாகவேண்டுமெ ன்றுபிரார்த்தித்து சுவாமி! என்தமைபனை தனபதிதனக்குப்பிள்ளையில்லா



திணமேல என்மகனைத் தனக்குமகளைக்கொண்டி எல்லாருக்குமுன்னே தன் செல்வமெல்லாம் கொடுத்துத் தவஞ்செய்யப்போயினன் அப்படிஅவன்கொ டுத்தசெல்வத்தையெல்லாம் தாயத்தார்கள் தங்கள்பலத்தினமேல பறித்துக் கொண்டார்கள் ஆதலால்ஒருத்தியாகியஎன்மகன்மிகவுஞ்சிறியவனுப் வேறே ஆதாரமில்லாமல் இருக்கிறதினமேல நானிப்படி வருந்துகிறது கிருபாநிதியா கிய உமக்குத் தெரியவில்லையோவென்று பின்னும் பூமியிலேஉடல்படியவிழு ந்து வணங்கி அப்படியேசோர்ந்து கடவுள் அருளாலே கொஞ்சம்நித்திரை கொண்டாள் அப்படி நித்திரைசெய்கிறவள் கனவிலேசோமசுந்தரக்கடவுள் ஒருபிராமண வடிவங்கொண்டுவந்து ஓய்வணிகப்பெண்ணே! நீகாலையுதயமா னவுடனே உன்தாயத்தரை அரசனுணையிட்டு மறித்துச் சபையேற்றிவழக்கி ட்டுக்கொண்டிரு அப்போது நாம் அங்கேவந்து பெரியோர்களெல்லாருஞ் சம்மதிக்க உன் வழக்கைத்தீர்த்துதருகிறேம்நீயெழுந்துபோவென்றருள்செ ய்ய உடனே அந்தவணிகபெண் விழிதுதெழுந்து மிகவும் அதிசயித்துயாரு மில்லாதவர்களுக்குத் தெய்வமே துணையென்பது மெய்யேயென்றுமீளட்சி சுந்தரசுவரைவணங்கித துதித்து தன்மகனுடனேவீட்டிற்குவந்து நித்தி ரைசெய்துபொழுதுவிடிந்தபின் வெள்ளியம்பலவாணர் திருக்கோயில்வந்து வணங்கிக்கொண்டு அவராருள்செய்தபடியே தொடுவழக்கிட்டு வென்றுகொண் டதாயத்தார்களைத்தடித்து நீங்களியாவரும் அடுப்பில் நெருப்பிடக்கூடாது. அநியாயவழக்கிட்டு உங்களைவென்று போகொட்டேன் இதைவிட்டுப்போ காது அரசன் ஆணையிட்டேன். இனி நியாயசபைக்குச்சென்றுஅந்ததருமநீதி யார்தீர்த்தபடிகேட்டு எங்களுடையபொருள்களைகொடுத்துப் போகவேண்டு மென்று தாயத்தார்கள் எல்லாரையும் தடித்தாள். அப்படித் தடுத்தபோது தாயத்தார் துர்வார்த்தைகளால் வைது தள்ளி மகனையும் தாயையும்அடித்த னர் அப்படி அடுக்கும்போது கூகூவென்றுகூச்சலிட்டுக்கொண்டுபோய் நியா யசபையார்முன் முறையிட்டாள். அதைக்கேட்டசபையார் கூடஅனுப்பின சேவகரோடே தனபதிதங்கையானவள் தாயத்தார்களைகாட்டிசபைக்குகூட் டிவந்தாள். அவ்வேளையில் பார்வதிசமேதரான வெள்ளியம்பலவாணர்காதில் அதிகவிலைபெற்றகுண்டலங்களும், தோள்களிலே ரத்நகேயூரங்களும், கழு த்திலேரத்தினகண்டிகையும், கையிலே வயிரமோதிரமும்விளங்க அந்தத்த னபதிசெட்டியாரைப்போல மேட்டிமையான நடைகொண்டுவந்து கண்டுவா டினதாமரைபோல பங்காளிகளுக்கு முகங்காட்டி வெறுத்தும் மருமகனைத் தீதடிக் கண்ணாருள்கொண்டு பார்த்தும், தன்உளைக்குறிப்பைத்தெரிவித்து நியாயசபைமுன்னேநின்று ஓ! ஓ! இங்கே அரசனில்லையோ, ஞாயமறிந்தபெ ரியோர்களில்லையோ ராஜநீதிகோணலாமோ நூல்களிற்சொல்லுகின்றதெய்வ மும்கிடையாதோ, நிலபானதருமம் எங்கேபோய்மறைந்ததுஎன்றுசொல்லி வருந்துகிற தனபதிசெட்டியாரை வஞ்சனைபண்ணினதாயாதிகள் கண்டு மன ங்கலங்கி முன்வலித்துவென்ற உறுதி அழிந்து பயமும் வெட்கமும்நிறைந்து நிற்க அப்போதுமாமனுஷிவந்த செட்டியார் மருமகனைத்தழுவி தங்கைக்கு ஆதரவுசொல்லிச் சாமவேதகீதம்போல ஐயையோ! இப்படி அநாதிகளாய்ப போனீர்களேயென்றுஅழ தங்கையும் மருமகனும் அழுது பாதங்களில்கண்

ணீராட்டத் தாமும் மருமகனைக் கட்டிக்கொண்டு அழுது, தங்கைமேலும் மருமகன்மேலும் கண்ணீராட்டி மருமகனைப்பார்த்து வியசனமாய் மார்பிலே நாணணிந்த ஐம்படையைக்கண்டிலேன். கால்களில்சிலம்பையும் கண்டிலேன் தோளில் மதாணியுங்கண்டிலேன். காதில் கடுக்கனையுங்கண்டிலேன். முகத்தில்அசைகிறசுட்டியையும்கண்டிலேன்ஐயோவென்றுஉடம்பைத்தாங்கொண்கிறேன். இந்தப்பங்காளிகளுக்குப் பிள்ளை நகைகள் என்னவிலைபெறுமென்று ஆசைபட்டுப் பறித்துக்கொண்டார்கள். என்றுநியாயசபையார்எல்லாருங் கேட்க வாய்விட்டு அழுது தங்கையையும் அழுகைமாற்றித்தமதுகையாலே முதுகைத் தடவிக்கொடுத்து என்கண்முன்னே நீங்கள்என் அழுகிறீர்கள் இந்த அநியாயம் பண்ணினவர்கள் வழக்கு நாளுள்ளளவிலும் ஜெயங்கொள்ளுமா உலகத்திலே நான்சம்பாதித்தபொருள் விசுவாசபாதகம் பண்ணியோ இம்மி அரிசியுங்கொடாமல் அதிகவட்டிவாங்கியோ இப்படி ஆனது. ஆனலும் நம்முடையபொருள் நம்மைவிட்டுப் போகுமோவென்றுகோயில்மதிலே சுவைப்பார்த்துத் தலைமேல் கைகுவித்து ஓ! ஓ! மாணிக்கத்தை விலைமதித்து விற்ற எங்கள் குலத்துச்சிங்கமே! எங்கள் வழக்கை இந்த நல்ல பெரியோர்கள் முன்னமே நீரே தீர்த்துத்தாவேண்டுமென்று பிரலாபித்து அழுதார். மறுபடியும் அந்தக்கள்ளவஞ்சகச் செட்டியார் கோபித்துநியாயசபையாரை நோக்கி, தாசுமுனைபோல் எங்கள்வழக்கையும் இந்தப்பங்காளிகள் வழக்கையுந் தீர்த்துத்தாவேண்டுமென்றுநடைத்துமூத்தபுலிபோலநின்று சொல்ல சான்றோர்நடுங்கி இருதிறத்துவழக்கையும் தாங்களெடுத்துப்பேசி விசாரித்துப் பங்காளிகள் வழக்கிடுவது குற்றமென்ன, பங்காளிகள் உறுதிமான்கள் போலஇவர்தனபதிசெட்டியாரல்லரென்றுசொல்ல, செட்டியாராகியசுவாமி சபையைப்பார்த்து இரண்டுகையையுங்கொட்டிச்சிரித்து அந்தச்செட்டிகள் குடிப்பேர்-பட்டப்பேர்-காணிப்பேர்-தந்தைபேர் - தாய்பேர் - மாமன்பேர்-மாமிபேர்-பங்காளிகள்பேர் இவர்களைப்பெற்றவர்கள்பேர்-பிள்ளைகள்-உடன்பிறந்தார்-பெண்டாட்டிகள்-உறவினர்-குணம்-நடக்கை-அடையாளம் இவைகளில் எவ்வளவும் தளராமற்சொல்ல சபையார் எல்லாரும்பார்த்துத் தனபதிசெட்டியார் இவரேயென்று தீர்ப்புக்கொடுக்க, பங்காளிகள்வழக்கு இழந்து இந்தத்தீர்ப்புக்கு வேறுசொன்னல் வேப்பமாலையணிந்தபாண்டியன்தண்டிப்பானென்றுபயந்துவீட்டுக்குப்போய்வருகிறேனென்றும், குளத்துக்குப்போய்வருகிறேனென்றும், மலபாதைக்குப்போய்வருகிறேனென்றும், காற்றடிக்க மழைகலங்கிறற்போல் கலைந்துபோனர்கள். அப்போதுநியாயசபையார்தனபதிசெட்டியார் மருமகனுக்கே அவர்செல்வமெல்லாமென்று தீர்ப்புச்செய்துவாங்கிக்கொடுத்தார்கள். அவர்கள்கொடுத்தவுடனே மாமனுகிவந்து வழக்குரைத்தசெட்டியாராகிய கடவுள்மறைந்து திருக்கோயிலுக்குள் எழுந்தருளினர். அதுதெரிந்து வந்தவர் கூடற்கடவுள் அல்லவோவென்றுசெட்டிப்பிள்ளைக்குபாண்டியன்மனமகிழ்ச்சியாய் அநேகசிறப்புகள்செய்து சோமசுந்தரக் கடவுளின் கோயிலகனகமண்டபமாய்ப்புதுக்கித்தண்புதல்வனுகிய வரகுணபாண்டியனுக்குத் தன் அரசாட்சியைக்கொடுத்துபின் ஸ்வாமிதிருவடிசேர்ந்தான்.

மாமனுகவந்துவழக்குரைத்தபடலம் முற்றிற்று.



உ

சிவமயம்.

நாற்பதாவது

வரகுணனுக்குச்

சிவலோகங்காட்டிய படலம்.

எழுசீரடியாசிரிய விருத்தம்.

பண்கொண்டவேதமுத லிடையூறுநாடறிய பரமாமனுகியொரு வணிக, னெண்கொண்ட காணிபொருள் கவர்ஞாதிமாதுலரை யெதிரேறிவென்றபடி யிதுவாந், தண்கொண்டநேமிவர குணதேவனெய்துபழி தன்னைத்துடைத்த னையமனவன், கண்கொண்டுகாணவுயர்ச் சிவலோகமதுரைதனில் வருவித்த காதையினி மொழிவாம்.

இதன்பொருள்.

சுரவடிவாகிய வேதமானது ஆதியும், நடுவும், அந்தமும் கண்டறியக்கூடாத பரம்பொருளாகிய சோமசுந்தரக்கடவுள் ஒரு செட்டிபிள்ளைக்குமாமனுக எழுந்தருளி, அவனுடைய விளைநிலங்களையும், பொருள்களையும் வீண்வழக்கிட்டு பிடுங்கிக்கொண்ட பங்காளிகளைச்செய்தருளிய திருவிளையாடலிதுவாகும் இனி, ஆஞ்ஞாசக்கரத்தையுடைய வரகுண பாண்டியன் அடைந்தபழியையெொழித்து அந்தப்பாண்டியன் கண்ணிலுல்கண்டு தரிசிக்கும்பொருட்டு மதுரைப்பதியில் சிவலோகத்தை வருவித்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றேம்.

வரகுண பாண்டியன் இந்திரன்போல யாகங்களைச்செய்து நிலைபெற்ற வீரமும் சூரியன்போல் பிரதாபமும் மன்மதன்போ லழகுங்கொண்டவனுய் இயமானன்-சந்திரன்-சூரியன்-நிலம்-நீர்-தீ-காற்று-ஆகாயமென்கிற எண்வகையாகத் திருவுருவங்கொண்டுவிளங்குகிற சோமசுந்தரக்கடவுளைமனம்வாக்குக்காயமென்னும் திரிகரணங்களாலும் குறையாதவழிபாடுசெய்யும் அன்புகொண்டு வேதாகமங்கள்முதலிய கலைஞானங்களுமியாகாதி பலகிரியைகளும் உலகத்திலே நிலைபெற்றுவிளங்கச்செய்து நான்முகனுகவும், அஷ்டலட்சுமிகளும் நித்தியாவாசம்பண்ணப்பெற்றிருத்தலாலே திருமாலாகவும், ஜிதேந்திரியனுய் முழுத்துந்தோரிந்ததிலுலே பரமசிவனுகவும், உலகத்தை யரசாட்சிசெய்து வரும்போது ஒருநாள் அங்குவேட்டையாடி வரவெண்ணி வனங்களெல்லாஞ் சென்று மிருகங்களைத்தேடி புலியானபன்றிகளைக் கலைத்தோட்டிச் சூரியன் அஸ்தமிக்குமளவும் வில்லும் அம்புங்கொண்டுதிரிந்துகொன்று பட்டணத்துக்குத் திரும்பும்போது வாயுவேகங்கொண்டுசெல்கிற குதிரைமேலேறிவர அங்கேவரும்வழியிலே ஒருபிராமணன் மயங்கிச்சோர்ந்து முகத்திலே குறுவேர்வைதோன்ற நித்திரைசெய்ய அவன்மேலே இவன் ஏறிவருகிற

கடுநடைப்புரவி கால்கலைவைக்க உடனே அந்தப்பிராமணனிழந்தான். அது தெரியாமல் வரகுணபாண்டியன் அம்புபோல்வருகிற குதிரையுடனே தன் அரண்மனைவரது சேர்ந்துநிற்க, குதிரைக்காலிலே மிதிபட்டிறந்துபோன பிராமணனை அவன் பந்துக்கள் எடுத்துக்கொண்டுவந்து பாண்டியன் கடைத் தலையிலிட்டு அங்கேகடந்த செப்தியைச்சொல்ல, பாண்டியன் நினைத்துணர்ந்து எடுத்துவந்த பிராமணர்கள்கையிலே அநேகதிரவியங்களைக்கொடுத்து இறந்தவனுக்கு மயானவினைகளைமுடிக்கச்சொல்லி அனுப்பினன். பின்பு அந்தப்பிராமணக்கொலை பாண்டியனைக் கொஞ்சமாயினும் விடாமல் பிடரியைப் பிடித்துக்கொண்டது.

அப்படி அந்தப்பழிவிடாமற் பற்றிக்கொண்டதுநீர வேதப்பிராமணர்களுக்கு அனேகதானதருமங்கள்செப்தும், வன்னி அரசுவேம்புகளைப்பிரதட்சிணஞ்செப்தும், அறுகம்புல்லைப்பறித்துக்கொண்டு வந்து பசுக்கள்வாயிலுண்ணக்கொடுத்தும், அங்கமருடஸ்தானங்கள் ஓமங்கள்செப்தும், பஞ்சகௌவியம்பசுவின்கொம்பு தோப்த்தநீர் பருகியும் இன்னும் அநேகதானங்கள்செய்தும் அந்தப்பழிநீங்காமல்பின்னும் பலமாகநெருப்பிலே நெய்வார்த்தாற்போல மூண்டு வரகுணபாண்டியன் கண்ணுக்குத்தோற்றவளைந்துசூழ்ந்தது. எப்படியென்றால் அழும், பெருமூச்சுவிடும் கைநெறியும், மலேபோலுயரும், குறுகும், கோபித்து முழங்கும், முன்னும் பின்னும் பக்கங்களுந்தொடரும் சிரிக்கும், பகுவாயைமெல்லும், விலகும், கிட்டிவரும், பழிதாவென்று கோபித்து எதிர்நின்றுபோராடும் இப்படியாகவரகுணபாண்டியன் அழுக்கடைந்தமாணிக்கம்போலவும், பாம்புவிழுங்கினசந்திரன்போலவும், ஒளிமழுங்கிப்பெரும்யாளைபுண்ட விளங்கனிபோல உள்ளறிவின்றித் துன்புறுவதுகண்டு வேதப்பிராமணர்கள் ஐயா, நமது கூடற்பெருமானைத்தினம் ஆயிரத்தெட்டுப்பிரகாரம்பிரதட்சிணஞ்செய்காயாலல் அக்கடவுளை உன்பழியைத்தீர்ப்பார். அல்லாமலும் உறுதியாய் அப்படிபத்துநாள் வலஞ்செய்துவந்தால் அக்கடவுளை அதற்கு வழிகாட்டுவாரென்றுசொல்ல, வரகுணபாண்டியன் சோமசுந்தரக்கடவுளின்திருக்கோயிலுக்குள்ளேபோய் இந்திரன்பழியும்மகாபாதகமுந் தீர்த்தருளியபெருமானே! அடியேன்பழிபாவங்களையும்தீர்க்கவேண்டுமென்று வணங்கித்துதித்துப்பெரியோர்கள் சொன்னபடியேவலஞ்செய்ய, அப்போதுசோமசுந்தரக்கடவுள் ஆகாசவாணியாகப்பாண்டியனே! நீசெய்யும்வலத்துக்காக நாம மிகவுஞ்சந்தோஷித்தோம், எவ்வளவும் இந்தப்பழிக்கஞ்சவேண்டாம் உன்னுடனே சோழன் சண்டை செய்பவருவான் அவனோடு நீயுஞ்சண்டைக்கெதிர்ப்பாய், அப்போதுசோழன் உனக்கு முதுகிட்டோடுவான் நீயவனை எட்டிப்பிடிப்பதுபோலதூத்திக்கொண்டுபின்னே ஓடும்போது எம்மைமேயாம் அர்ச்சனைசெய்து கொண்டிருக்கிற தலத்துக்குப்போவாய் அபோதங்கே உன்பழியைத்தீர்க்கிறேமென்றுசொல்ல பாண்டியன் மீளாட்சிசுந்தரேசர்திருவருளாலுமகிழ்ந்துகொண்டு தன்கோயிலில்போயிருக்கும்போது சிலநாளைக்குப்பின்சோழராஜன் புலிக்கொடிகட்டிவருகிற சேனைகள்சூழ கடல்போலப் பலவாத்தியங்களுமுழங்கப் பாண்டியதேயைநிலவந்துசூழ, பாண்டியனுந்தனது சேனைகளுடனே சோழன்சேனைகளோடு எதிர்த்துபுத்தம்பண்ண மந்திரகி

யாற் கலங்கினகடல்போலே சோழன்சேனைகள் கலங்கிப்போட சோழனும் நா
ணிமுதுகிட்டோடும்போது வரகுணபாண்டியன் அவனைப்பின்பற்றிச்சென்று
காவிரிகாட்டிலேவந்து பூசத்துறையிலேஸ்நானம்பண்ணி காவேரித் தென்க
ரையிலே வாசஞசெய்கிற திருவிடைமருதப்பனைக்கண்டு சேவிக்கக் கிழக்கு
வாயிலைக் கடந்துள்ளே போகும்போது பாண்டியனதுபாசமும் பழியும் வெ
ளிப்பே நின்றன. தெய்வமருநிலே வேதவண்டுகள்பாடிமொய்க்கவிளங்குந்தே
னைக்கண்ணுரப்பருகி அழலைசேர்ந்த வெண்ணெய்ப்பாவைபோற் கரைந்து
அறிவுமயமாய்வரகுணபாண்டியனின்று, நிராமயனே! பரமானந்தமாகிய திரு
நடனத்தைசெய்கின்றபெருமானே நான்மாடக் கூடலென்னு மதுரைப்பதி
யிலெழுந்தருளிய பரத்துவப்பொருளானவனே இமையாத சோமசூரியாக்கி
னிகளென்னுந் திரிநேத்திரங்களையுடைய கடவுளே பர்வதராஜ புத்திரியாகி
யபார்ப்பதிசமேதனே பழமைக்கும்பழமையானபெருமானே சர்வலோகநா
யகனே புண்ணியப்பொருளானவனே திருவிடைமருதூரென்னும் திருக்கோ
யிலில்விளங்குகின்ற கடவுளே சர்ப்பாபரணத்தையணிந்த சடைமுடியை யு
டைய கருணைக்கடலேயென்று அளவில்லாத தோத்திரங்களைச்செய்தான்.

அப்படித்துதிசெய்கிற பாண்டியனைப்பார்த்து மருதவாணர் பாண்டி
யனே, கிழக்குவாயிலிலேதானே பிராமணக்கோலநின்றுவிட்டது, இனிநீ அ
ந்தவழியேபோகாமல் மேற்குவாயில்வழியாக நமதுமதுரைக்குப்போவென்ற
ருள்செய்ய, வரகுணபாண்டியன் அந்த அருள்வார்த்தையைக்கேட்டு மருத
மரத்தைப்பிரதக்ஷிணஞ்செய்து நீங்காத அன்பிலுலே அடிக்கடிவாயில்களை
ல்லாம் விழுந்து சேவித்துமேலைவாயில்வழியேபோகின்றவன் தன்பெயராலே
கோபுரஞ்செய்துசிலநாள் அங்கிருந்துதிருக்கோயில் திருப்பணிகளெல்லாஞ்
செய்துதென்றிசையை நோக்கிச் செல்லுமபோது வழிகளிலுள்ள சிவஸ்தல
ங்களெல்லாம்கண்டு வணங்கிக்கொண்டுமதுரைபோய்ச்சேர்ந்து தன்பழியை
த்தீர்த்தாண்ட சோமசுந்தரக்கடவுள் பாதகமலங்களைதினந்தோறும்வந்து
வணங்கித்துதித்து இப்படியாக உலகமெல்லாம் தனது செங்கோல்செலுத்தி
வருகிறகாலத்தில் வரகுணபாண்டியன் பெரியோர்களாலே அமுதம்போலும்
சிவபெருமானுடைய புகழைப்பலவாகக்கேட்டுவேதம்-ஆகமம்-புராணம்-மிரு
திகள்முதலான நூல்களெல்லாம்உலகங்களுக்கெல்லாம் மேலானது சிவலோ
கமென்பதை உட்கொண்டு அந்தச்சிவலோகங்காணவேண்டிய கருத்துடனே
சிவனிராத்திரியினன்று கடவுள்சந்நிதானத்துக்குள்ளேபோய் மீளட்சிசுந்த
ரேசரைவணங்கிசுவாமி! இந்தப்பிறவிக்கடலைக்கடந்துதேவரீர்திருவடிநிழலை
யடைந்தவர்கள்சூழத் தேவரீர் சிவலோகத்தில் வீற்றிருப்பதைத் தெரிசிக்க
வேண்டுமென்னும் ஆசைஅடியேனுக்கு மிகுந்திருக்கிறதினாலேதிருவருள்செ
ய்யவேண்டுமென்ன, அதற்கு அன்புக்கெளியரானவெள்ளியம்பலவாணர் அ
ந்தஉலகத்தை இங்கேவருவித்துஇவனுக்குக்காட்டவேண்டுமென்று திருவுள்
ளங்கொள்ளஉடனே சிவலோகந்தெரிந்து சூரியசந்திரர்களெல்லாம்மின்மினி
போலொதுங்க கோடிசந்திரமண்டலங்கள் ஒன்றுப்க்கூடி வந்தாற்போல ஆ
காயத்திலிருந்து சிவலோகங்கீழ்பிறங்க, கடவுள் நந்திதேவரையழைத்து
எம்மிடத்தில் அன்புமிகுந்துவரகுணபாண்டியனுக்கு அவனைசைப்பட்டபடி

யே சிவலோகமுழுதுங் காணக்காட்டென் றருள்செய்ய வேத்திரைப்படை கொண்ட திருநந்திதேவர் தொழுதுவந்து வரகுணபாண்டியனை வாவென்று அழைத்துக்கொண்டுபோய் திருமாலும்நான்முகனும்வேதங்களும் அளந்தரி யக்கூடாத சுயம்பிரகாசசூரியனை கடவுளாருகின்ற சிவலோகம் இதுதான் பாரென்று சொல்லுகின்றார்.

கருப்பூரவாசனைபரிமளிக்க, இளந்தென்றல்வீச, அரும்புகள் விண்டு ஆயிரம்யோசனைதூரம் வாசம்வீச, வெண்டாமரைகளும் செந்தாமரைகளும் பூத்துவிளங்குகின்ற ஓடைகளும், பக்கங்களிலுள்ள ஆறுகளும், அளவில்லா தஉருத்திரகணிகைகள் தங்கள்மதுரவாயைத் திறந்துதேன்போற்பாடுகின்ற எழிசைகளும், யாழிசைகளும்மலர்ந்த பூந்தருக்களிலேவண்டுகள்பாடு மிசை களும் தும்புருநாரதர் பாடுமின்னிசைகளுமே எங்கெங்குமாய் அழுதவாவிக ளும், பொற்றுமரைக் குளங்களும், குயில்கள்கூவுகின்ற தேன்சோலைகளும், அஞ்ஞானவிருள்போன தேவர்கள் வாழுமிடமும், திருப்பாற்கடல்போன்ற அகழிகளும், பொன்னாலாகியமதில்களும், கோபுரங்களும்மிகுந்தநன்மைகள் விளங்குகின்றவீதிகளும், புதிதுபுதிதாகநாள்தோறும்உண்ணக்கிடைத்த நா ல்வகையுண்டிகளும், சந்தனகந்த புஷ்பதாம்பூலங்களும், செம்பொன்மாலைக ளும், வீணைப்பாடலும், ஆடலுஞ்செய்கின்ற சித்திரப்பாவைபோன்றபெண்க ள்கூட்டங்களும், உருத்திரப்பெண்களோடுகூடிவாழுகின்ற மாளிகைவரிசை களும், அவர்கள்செல்வங்களும், போகங்களுந்தெரியக்காட்டி நான்முகனிட மிது, திருமால்வாழ் பரமபதமிது, இவைகளெல்லாங்கடவுள் வடிவுகொண்ட உருத்திரர்கள்வீது, திக்குப்பாலகர்களுறைவிடமிவை, விடியுமுன்னே யெ ழுந்து நீராடி நமதுகடவுள்கோயிலுக்குத் திருவலகுபறிமாறிநந்தவனங்களை வளர்த்து ஆய்ந்து பூவெடுத்துச்சிவபெருமான்றிருநாமங்களைக்கேட்டு உலக வாணராகிய சாலோகம்பெற்று வாழ்கின்றவர்களிவர்கள், பரிசுத்தாந்தக்க ரணராய்ப் பஞ்சசுத்திகளுஞ் செய்துகொண்டு உள்ளும்புறமுமொத்த அன்பி னராய் விதிப்படி சோடசோபசாரங்களும் திரிகரணசுத்தியாய்ப் பூசித்துக் கடவுளருகே யிருக்கின்ற சமீபம்பெற்றவர்களிவர்கள், மேலெழுகின்ற வாயு விலேலே அக்கினியை உயரச்செய்து மேலேநெருங்கிப் பின்கலை நாடிக்கும் இடைநாடிக்கும்நடுவே சிந்துகின்ற சந்திரமண்டலத்தில் விளைந்த அழுதர சத்தைப் பானம்பண்ணி நமதுகடவுள்வடிவை வெற்றியென்கிற புருவமத்தி யத்தின்மேலே தியானஞ்செய்து அக்கடவுளதுசாரூபத்தைப் பெற்றவர்க ளிவர்கள், கடவுள் விஷயமாக வேள்விகளைச்செய்து முடித்துவந்த வேதியர் களிவர்கள், தண்ணீர்ப்பந்தல் முதலான முப்பத்திரண்டு தருமங்களும் புக ழும் நிராசையாகச் செய்துவந்தவர்களின் வேதாகமப்படியேவிபூதியணிந்து கடவுளது பஞ்சாக்ஷரத்தைச் செபித்துச் சிவபுராணங்கள்கேட்டு வினை வலிகடந்த சிவபத்தர்களிவர்கள், வேதத்திலே சொல்லுகின்ற சதருத்திர மந்திரத்தைச் சொல்விக்கொண்டு விபூதிருத்திராக்ஷமாலை யணிந்தவர்கள் யாராலுலும் அவர்கள்குணம் குலம்பாராமல் ஆவ்வன்பர்களையே சிவபெரு மானுகவெண்ணிப் பத்திசெய்து பிறவிவேரறுத்துவந்தவர்களிவர்கள், பஞ்ச கௌவியங்களால் அபிஷேகங்கொள்ளுகிற கடவுளே சிவமென்று அந்த ஞா

ணுபதேசஞ்செய்தும், சிவதருப்பணஞ்செய்தும், சாமகாணஞ்செய்தும், ஆல யஞ்சமைத்துச் சிவலிங்கஸ்தாபனஞ்செய்தும், பிறவிதீர்ந்துவாழ்கின்ற உத்த மர்களிவர்கள். சிவார்ச்சனை செய்பவர்களுக்கு வேண்டியவைகளைச்செய்தும் சிவனடியார்களையே சிவகைவெண்ணி அறுசுவையமுத முண்பித்துப் பூசித் துச் சிவனடியார்க்குத் திருப்பணிகள் பலவுஞ்செய்து மேம்பட்டவர்க ளிவர் கள், சோமசுந்தரக்கடவுளுக்கு ஆலயமுதலிய திருப்பணிகளும் அருச்சனை யும் நிரம்பச்செய்து பூதிசாதனப்படியே இந்த மதுரையையாண்டு சிவலோக ஞ்சேர்ந்த உன் குலத்தரசர்களிவர்கள் என்று பிரம்பாலேகுறித்துக்காட்டித் திருநந்திதேவர் பின்பு சிவனடியார் கூட்டத்தையுந்தெரியக்காட்டிச்சொல்ல வரகுணபாண்டியன் அங்கங்கே நின்று வணங்கி வணங்கித் தலைமேற் கை குவிக்க பின்பு கிரமப்படியே திருநந்திதேவர் தேவர்நாயகரான கடவுள் சந் நிதிமுன்னே கொண்டுபோய்விட்டார்.

அங்கே வேதங்களும் ஆகமங்களும் வடிவுகொண்டு இருபுறத்திலும் துதிக்கவும், தும்புருவுடன நாரதரும் வீணைகள் பாடவும், வண்டுகள் மொய்த் துபபாட அசைகின்ற பூங்கொம்புகள்போலே அரம்பையர்நடனஞசெய்யவும், சேவிக்கவந்த தேவர்களை இடம்நெருங்கிநிற்கவும், விநாயகக்கடவுளும் முரு கக்கடவுளும் வீரபத்திரக்கடவுளும் விழுந்து வணங்கிநின்று எவின பணிகே ட்டு நிற்கவும், இடையிற்கட்டித் தொங்குகின்ற சோமனை ஒதுக்கிக்கொண்டு இரண்டுகைகளாலும வாயை மூடிக்கொண்டு பிரம்ம விஷ்ணுக்கள் ஒதுங்கி நின்று தாங்கள் குறைகள் சொல்லவும், இந்திரன்முதலான திக்குப்பாலகர் கள் தாங்கள்செய்கிற காவலிற் குறைகள் சொல்லவும், எழு தண்டு முதலிய வைகளைக் கைக்கொண்டு வாயைமென்று பல்லைக்கடித்துப் பூதத்தலைவர்கள் நிற்கவும், கோடி யமன்கள் கண்டுநடுங்க முத்தலைச் சூலங்களைக் கைக்கொண் டு சிவகணங்கள் சூழ்ந்துகாத்துநிற்கவும், தேவர்-சித்தர்-அசுரர்-சாரணர்-விஞ்சையர்-கின்னரர்-மாதவர்-இயக்கர்-உரகர்-கருடர்-பாதாளவாசிகள்-சுத் தயோகிகள்முதலான கூட்டங்கள் நின்று துதிக்கவும், கிருபைக்கடலாகிய க டவுளைநோக்கி இனிவருகிற பிறவியைத்தீர்த்து எங்களை ரக்ஷிக்கவேண்டுமெ ன்று அன்புமிகுந்து ஆனந்தக்கண்ணீரொழுக மயிர்புளகிக்க முனிவர்கள் சிவ சிவ சங்காவென்று முழங்கவும், எல்லாருக்கும் கிரமமாக உபசாரஞ்சொல்லி ப் பார்வதி குறுநகைகொள்ள ஆயிரங்கிரணங்கள்வீசுகிற சிங்காதனத்தின் மேலிருக்கிற கடவுளைக்கண்டு வரகுணபாண்டியன் விழுந்து வணங்கி பேச்சுத் தடுமாற உரோமஞ்சிலிர்க்க அருட்கடலிலே அன்பாகிய ஆறிழுக்க மிதந்து போய் வாக்குக்கெட்டாத ஆனந்தாமிர்தத்தை வாய்மடுத்துண்டபின்பு தன் காணங்களும் கடவுள் விஷயமாகச்செய்து அன்புவடிவாய் நின்றான். அப் போது அவனுக்கு முன்னேதான்றின சிவலோகம் பழைபபடியே மதுரை யாய் அங்கயற்கண்ணம்மையும் தாமுமாகச் சோமசுந்தரக்கடவுள் விளங்கினர். அபபோது வரகுணபாண்டியன் கடவுளருட்பெருமையை யோசித்துக் கடவுள் பாதங்களிலேவிழுந்து வணங்கி அன்புமிகுந்து ஆனந்தக் கண்ணீ ரொழுக வாய்குழறச் சுவாமி !

நாயினேனெண்ணை நடுக்கும்பழியகற்றித்
தாயினேராகித் தலையளித்தாய்தாள்சரணஞ்
சேயினேன்காணச் சிவலோகங்காட்டிப்பின்
சோயினேர்நின்றவருட் குன்றேறிநின்றருள்சரணம்.

மாழாந்துசெய்யும் வினைவழிபோம்வண்ணாகிற்
றூழாதடியனேற் கன்புதந்தாய்தாள்சரணம்
ஏழாதிரான்கு வகையாயெழுபிறப்பும்
பாழாகவென்னைப் பணிகொண்டாய்தாள்சரணம்.

வெங்கட்பழியின் வினையேனைவேறுக்கித்
திங்கட்குலக்களங்கந் தீர்த்தாய்நின்றருள்சரண
மங்கட்சிவபுரமுண் டன்புடையார்க்கென்யதையின்
றெங்கட்குக்காட்டி யிசைவித்தாய்தாள்சரணம்.

என்று துதித்துப் பெருமானுடைய திருவருளைப்பெற்றுப் போண்டு கொண்டு பின்னும் வெவ்வேறே பலபூசைச்சிறப்புகள்செய்து வரகுணபாண்டியன் வாழ்ந்திருந்தானென்று சொன்ன அகத்தியமகாமுனிவரை இருஷிகள் பார்த்து ஐயா! அக்காலத்திலே இந்திரன்சாபம் வெள்ளையானைசாபம் தகப்பனைக்கொன்று தாயைக்கூடின பாபங்களெல்லாம் மதுரையிலேதீர்ந்து வரகுணபாண்டியனுக்குத் திருவிடைமருதூரில் பழிநீங்கவர்ந்தந்தது யாதுகாரணமருளிச்செய்யவேண்டுமென்ன அகஸ்தியமுனிவர் நன்றென்று சோமசுந்தரக் கடவுள் எல்லாப் பழிபாவங்களையும் ஒழிக்கின்றவரென்று பிரசித்தமானதினாலே இனி மதுரையிலுள்ளவர்கள் அஞ்சிப் பழிபாவங்கள் செய்யாதிருக்கவேண்டி வரகுணபாண்டியனைத் திருவிடை மருதூருக்குப் போகச்செய்து பழி தீர்த்தாரென்றுசொல்ல, அதை முனிவர்கள்கேட்டு அதிசயானந்தக்கடலின் மூழ்கினர்கள். அன்றுமுதல் மதுராபுரியானது சிவஸ்தலங்களுக்கெல்லாம் சிகாமணியாய்ப் பூலோகத்திலே சிவலோகமென்று பதினாலுலகங்களும் புகழநிலைபெற்று விளங்கியது.

வரகுணனுக்குச்சிவலோகங்காட்டியபடலம்

முற்றிற்று.



நாற்பத்தொன்றுவது

விறகுவிற்றபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நெடியவன்பிரமன்றேடநீண்டவன்றன்னற்கேழின்
முடியதாஞ்சிவலோகத்தைக்காட்டியமுறையீதையன்
படிமிசைநடந்துபாடிப்பாணன்றன்விரகாளாகி
யடிமையென்றடிமைகொண்டவருட்டிறமெடுத்துச்சொல்வாம்.

இதன்பொருள்.

விஷ்ணுவினாலும்பிரமனாலும்தேடியறியக்கூடாத சோமசுந்தரக்கடவுள் வரகுணபாண்டியனுக்குச் சதுர்த்தசபுவனங்களையுங்கடந்த சிவலோகத்தைக்காட்டியருளியதிருவிளையாடலிதுவாகும். இனி, அந்தச்சோமசுந்தரக்கடவுள் தமதுதிருப்பாதங்கள் வருந்தப்பூமியில்நடந்துபாணபத்திரரது அடிமையென்று விறகுசுமையைத் தலைமேற்சுமந்து சாதாரிராகத்தைப் பாடித்திரிந்து அந்தப்பாணபத்திரரை அடிமைகொண்டருளிய திருவிளையாடலையெடுத்துச் சொல்லுகின்றோம்.

பின்பு அகஸ்தியர் சொல்லுகிறார். வரகுணபாண்டியன் இந்திரனைப்போல் மதுரையில் விளங்குநாளில் வடதேசத்திலிருந்து ஏமநாதனென்னும் ஒருவீணைப்பாடகன் அநேகம் ஜயவிருதுகளுடனே மதுரைக்குவந்து அரசன் அரண்மனைக்குள்ளே ராஜசபையில் வரகுணபாண்டியனைக் கண்டு வணங்கி பாண்டியன் கீர்த்திகளைப் பலவிதமாகப்புகழ்ந்து கொண்டாடி ஏழிசைத்தந்திபூட்டின வீணையை யிடதுதோளிலே சாத்திச் சுருதிகூட்டித் தேன்போலு மின்னிசைகளைப் பாண்டியன் காதுகள்நிரம்பப்பாடினன் அப்படிப்பாடக்கேட்டபாண்டியன் தன்தலையசைத்துமெச்சி ஏமநாதனுக்கு ரத்தினபரணங்கள்கொடுத்துப் பலவகையான போஜனங்களுக்குவேண்டியவைகளுங்கொடுத்து அவனிருக்கவீடும்வேறுயமைபச்செய்வித்துப்பின்னும்வேண்டியசன்மானங்களுஞ்செய்ய ஏமநாதன் தனக்கெதிரொருவருமில்லாதகருவத்துடனே மறைதித்துத்தானிருக்கவமைந்த இடத்துக்குப் போனன். பின்பு பாண்டியன்வந்த ஏமநாதன் மிகவுங் களித்திருக்கிறானென்றுதெரிந்து சேவகரைவிட்டு நம்முடைய பாணபத்திரனையிங்கே அழைத்துவாருங்களென்ன உடனே சேவகர்கள்போயழைக்கக்கேட்ட பாணபத்திரன் ராஜசபைக்குவந்து பாண்டியனைக்கண்டுவணங்கிநிற்கபாண்டியன்பார்த்து பத்திரா- இப்போதுபுதிதாகவந்திருக்கிறவீணைப்பாடகனுடனே பாடவல்லீயா? வென்னபத்திரன்வணங்கி, ஐயா! பாண்டியர் குலசிகாமணியே! உம்முடைய தயவின்பல

மும் சோமசுந்தரக்கடவு ளருளின்பலமுங்கொண்டு என்னுலானவரைக்கும் பாடி அந்த ஏமநாதன்கொண்ட விருதைப்பரித்து அவனையும்பாட்டால்வெ ல்லுவேனென்ன பாண்டியன்கேட்டு நீஇவ்வாவந்துபாடக்கடவையென்றுத்த ரவுசெய்தனுப்ப பத்திரன் தன்வீட்டுக்குபபோயிருந்தான். அங்கேவமநாத னிடத்திலேயிருக்கிற கற்றுச்சொல்லிகளானபாடகர்கள் கடைத்தெருவுகள் நாற்சந்திகூடுமிடம் அம்பலச்சாவடிவீதியாகிய இந்த விடங்களெல்லாம்போ ய்ப்போய்ப்பாடித் தங்கள்பெருமைவிளங்கும்படி திரிந்தார்கள்.

அபபடிஅவர்கள்பாடுகிறபாடல்களைப் பாணபத்திரன்கேட்டுஆச்சரி யப்பட்டு ஏமநாதனுடனே சீடர்களை இவ்வளவுபாடவல்லவராலுல் அவன் எவ்வளவு வல்லவனேனென்றுமதித்து இப்படிப்பாடவல்லவனை அந்த ஏம நாதனை நாளை யெப்படி நாம்பாடிவெல்லுவதென்று மதுரேசனை வந்தனைசெ ய்து எம்பெருமானே தேவரீருடைய அருளாகிய துணையிக்காலத்தில் முழு தும் வேண்டுமென்று துதித்துக்கொண்டுபோய் தன்வீட்டிலிருந்தான். இப் பால் இந்திரவிமானதநிலை நிலைபெற்றுவிளங்குகின்றசச்சிதானந்தமயமான சோமசுந்தரக்கடவுள் தமதன்பனை பாணபத்திரனது இசைப்பகையைவெ ல்லத் திருவுளங்கொண்டு விறகுசுமந்துவந்து விற்கிற கிழவனுகத்தமதிச்சை ப்படி மிகவும் அழுக்குப்பிடித்த கந்தைத் துணியை இடையிலேசுற்றிக்கொ ண்டு வெட்டிவெட்டிமழுங்கித்தேய்ந்தவெட்டறுவாளை வலப்புறத்திலேசொ ருகிக்கொண்டு கிழிந்து பழையதாய்த்தேய்ந்த தோற்செருப்புகளை கால்களி லேபோட்டுக்கொண்டு பழையதாய்க்கிழிந்து தைத்தபோர்வையான உறைக் குள்ளேகிடக்கிற வீணையையும் ஒருதோளிலே மாட்டிககொண்டு பிடரிக்கு மேலே தோள்களிலேதாங்கக் காதுகளிலேகளாக்காய்களைக்கொத்துடனே சொருகிக்கொண்டு தலைமயிர்ச்சரிந்துதாங்கச்சும்மாடுகட்டிவைத்து அதன் மேல்விட்டினவிறகுசுமைகளைத் தினந்தினஞ்சுமந்து அழுத்தித்தேய்ந்த த லையுடையவராய் அப்போதும் விட்டின விறகுசுமையைத்தலையிலே சுமந் து கொண்டு சளைப்பிடிப்பில்லாமலும் எலும்புகள்தெரிய இளைத்தவுடம்புடனே பார்த்தவர்கள்ஐோபாவென்றிரங்கும்படியாகப் பூமியிலேபாதங்கள்படமுகத் திலேவெயர்வுதான்ற இருமிவிறகாளாகவருகிறவர்சுமைதாங்கிக்கல்லைக்கண் டுஅதன்மேலே விறகுசுமையைச்சாத்தி அங்குள்ளமடுவிலேபோய்க்கையால ள்ளி நீர்குடித்துவந்து விறகுசுமையைத் தலைமேற்கொண்டு உச்சியெரிவுதீர அடிக்கடியெடுத்தாற்றிக்கொண்டு மதுரைக்குள்ளேவந்து விலைகேட்கிறவர்க ளுக்குவாங்கத்தகாதவிலைசொல்லி வீதிசந்திமூடுக்குகளெல்லா மலைந்துதிரி ந்து பிரமா-விஷ்ணு-வேதங்களாலுங் காணப்படாதவர் ஏமநாதனிறங்கியிரு க்கிற வீட்டுக்கடைத்தலைக்குப்போகும்போது சூரியன் அஸ்தமித்துசெவ்வ ல்லிமலர்கள்மல, சந்திரோதயமாக பட்சிகள் கூடுகளிலடங்க, வண்டுகள் தாமரைகளிலேதூங்க, குரங்குகள் சோலைகளிலேமறைய இடையர்கள்மாடு களைப்போட்டுக்கொண்டுவந்துசேரபள்ளிக்கூடங்களிலே பிள்ளைகள் படித்துப் போக பூமிக்குக் கறுப்புப்போர்வைதரித்தாற்போல இருள்வந்து கவியமன்ம தன்பாணங்களையெங்கும் பிரயோகிக்க சந்திரனுகிய முகத்திலே அதிற்களங் கமானதிலகம்விளங்க இருளாகியகூந்தலுடனே நக்ஷத்திரங்களாகிய முத்து

மாலென எணிந்துகொண்டு பார்வதிதேவியார் தனதுநாயகரைத் தேடிக்கொ
ண்டுகூடவந்ததுபோல மாலைக்காலம்வந்துகூட, அந்தவேளையில்விறகாளான
சோமசுந்தரக்கடவுள் சுமந்துவந்த விறகுசுமையை ஒருபுறத்திலே இறக்கிச்
சாத்தி யூன்றிவிட்டு அந்த ஏமநாதன் வீட்டு வெளித் திண்ணைமேலிருந்து
இளைப்பாறினபின்பு தகுந்த இன்னிசையைக கொஞ்சம் எச்சாகக்கொண்டு
பாடினர்.

அப்போது அந்தராகத்தைக்கேட்டு ஏமநாதன் இப்படிப்பாடுகிறவன்
யாரென்று வெளியேவந்து விறகாளைப்பார்த்து நீயாரென்றுகேட்க அதற்கு
விறகாளாகியகடவுள் நான் இந்தமதுரையில் வீணைப்பாடகராகிய பாணபத்
திரரடிமையென்றார் பின்னும் பாணபத்திரரிடத்தில் கற்பவர்கள் அநேகரு
ண்டு, அப்படிக்கற்றவர்களிலே நானுமொருவன், என்னை இசைத்தலைவரான
பாணபத்திரர் நீ மிகவுங் கிழவன் பாடத்தக்கவனல்லன் இனிபாடியோக்கிய
ரகாயென்று தள்ளிவிட்டார். நாணைவேறுசிவனங்கிடையாமல் விறகுவெ
ட்டிக்கட்டித்தூக்கிக்கொண்டுவந்துவிற்று வயிறுவளர்க்கிறேனென்றுசொல்ல
இசைநூல்வல்லவனை ஏமநாதன்கடவுளைப்பார்த்து விறகுவிற்கிறவனே நீமு
ன்னேபாடின இராகத்தை இன்னுமொருதரம்பாடென்றுசொல்ல விறகாள
னைகடவுள் குண்டுப்பள்ளம்வற்றினாற்போல வாயகன்ற சுரப்பதரையுடைய
வீணைதண்டத்தை இடைத்தோளிலேசாத்தித் தெரித்துப்பார்த்துமுறுக்கா
ணிகளைமுறுக்கிப்பற்றின முறுக்காணிகளின்றுபடர்ந்து செல்லவிட்டுத்தேன்
ரைபோல இறுக்கிச்சுறுதிகூட்டிவேகத்துடனே மெட்டுகள்தோறும் விரல்
கள்நடந்துசென்றுவர இசைகள் எழினிடத்தும் பலவேறுக இன்னிசையாய்
விளங்குகின்றசாதாரிராகத்தின் ஆலாபனையுடனே நீண்டுசெல்லுதலு முடு
கியலாகிய அராகமும் நரம்பாகியதந்தியும், கண்டமும் ஒருகுரலாக நன்கொ
லிக்க வயிறுகுழியவாங்கல்-அழுமுகங்காட்டல் - புருவமேறல்-தலைநடுங்கல்-
கண்ணுடல்-மிடறுவீங்கல்-பையைப்போலே வாயைத்திறத்தல்-பல்லைக்காட்
டல் ஆகிய உடற்குற்றங்களில்லாமல்வெள்ளை-காகுளி-கீழோசை-வெடிகுரல்
குழறுநாசி ஆகிய இசைக்குற்றங்களைநீக்கி ஓரிடத்திலே நின்றிராட்டித்துச்
சொல்லுதல் அளவுகடந்துமிக நீண்டொலித்தல் இளைத்துநெடுமூச்சுவிட்டு
துடித்தலெனும் பாடற்றொழிற்குற்றங்கள் முதலியனவெல்லாம்விட்டு எழுதி
னசித்திரம்போலிருந்து இழுமெனு மருவியோதை மத்தளவோசை வெண்க
லத்தொனி சங்கநாதம் வண்டின்குரலாகிய இசைக்குணங்களும் மூங்கிலினி
ன்றும் உதிருமிலைபோலவும் மீன்கொத்திக்குருவி மீன்மேல் விழுதலைப்போ
லவும் பாடுதலின் குணங்களும், மந்திரம்-மத்திமம்-தாரம்-துள்ளல்-தூங்கல்
மெலிதல் - மிகுதல் ஆகிய நாதகீதங்கள்தப்பாமல் கேட்டவர்களெல்லாம்
இதென்ன புதுமையென்னப் பாடியருளினர் விறகாளாகிய கடவுள் எப்படி
யென்றால்.

விரைசார்மலரோனறியாவிகிர்த
னரசாய்மதுரையமர்ந்தானென்னே
யரசாய்மதுரையமர்ந்தானவனென்
புரைசார்மனனும்புகுந்தானென்னே.

பாடன்மறையுந்தெளிபாப்பமன்
கூடல்கோயில்கொண்டானென்னே
கூடல்போலக்கொடியேனகமு
மாடலரங்காவமர்தானென்னே.

நீலவண்ணன்றெறுநிமல
ணுலவாயிலமர்ந்தானென்னே
யாலவாயானலரில்வாசம்
போலென்னுளமும்புகுந்தானென்னே.

என்று இப்படிப்பாணபத்திரனே ரட்சிக்கும்பொருட்டுப் பருந்துட னே நிழல்போகுதல்போல வீணைநரம்புடனேசரப்பாடின இன்னிசைத்தே னைது ஆகாயவாசிகளுடைபதிசவியாகிபவாய்க்கால்வழியேயோடி மயிர்த்து வாரங்களிலைவழிபத்தேதங்கி அவர்களுடைய அழுதமயமானவுடலை இன்னி சைமயமாகச்செய்தபின்னும் மரங்களெல்லாம் அசையாதுநின்றன. கடல்க ள் ஓலியாதிருந்தன. நீண்டமலைபருவிகளும் நதிகளும் புரண்டுதுள்ளாமனின் றன இப்படிகருணைக்கடலான விறகாள்பாடினசாதாரியான இன்னிசைத்தே னைப்பருகிச்சித்திரமெழுதவல்லவன் எழுதிவைத்த சித்திரங்கள்போலச்சரா சரங்களெலலா மசையாதிருக்க விஞ்சையர்களிலை சிலர்வீணையைக்கைநழுவ விட்டுச்சோர்ந்தார்கள் சிலர்விரல்நடாத்துகின்ற வீணைநரம்பிலெலியும் கண் டத்தானியும்வெறுகிவேர்த்தார்கள் சிலர் நாணி சந்தோஷம் அதிகமாய்நா க்குக்குழறத்தாங்கள்நாயகிகள்மேலேமயங்கிவிழுந்தார்கள் பின்னும் இந்த வி றகாளான சோமசுந்தரக்கடவுளின்பாடல்கேட்டுப் பிரமன் கடவுளின்பாதத் தியானமானன். விஷ்ணு ஆனந்தக்கடலில்முழுகினன், இந்திரன் எனக்கு ஆயிரங்கண்களும் ஆயிரங்காதுகளாகவில்லேயேயென்றன். தேவதனர்களு ம் முத்தர்களும் சித்தர்களும்கடவுளாகிய கடலில்தங்களன்பாகிய ஆற்றுட னைகூடி ஆனந்தக்கண்ணீர்வெள்ளம்பாய பேரின்பக்கடலிலேமுழுகினர்கள். இன்னும்நாயகருடனே கூடினபெண்களெல்லாம் கூடிக்கலவிக்கடலிலே முழு கினர்கள். நாயகனைப் பிரிந்த பெண்களெல்லாம் நாயகர்மேல் மனஞ்செல்ல மன்மதபாணத்திறலே வருந்தி மயங்கினர்கள். பாம்புகள்-மயில்கள்-யானை கள்-சிங்கங்கள் மான்கள்-புலிகள் எல்லாமயங்கித் தங்கள் தங்கள் பகைதெரி யாமல் இந்த இன்னிசைவலைக்குளகப்பட்டுசோர்ந்தன. பூமிவெடித்துவெம் மையேறக் கிளைகள்சரிந்தமரங்களுக்குக்காதறிவுண்டாகி நல்லோர்கள்போல எங்குந் தளிர்த்துமுகமலர்ந்தன. தேவர்-மனிதர்-விலங்கு-புள்முதலானவை களெல்லாம் அந்தக்காரணங்களடங்கக்கடவுள்பாடின இன்னிசைமயமாயின. இப்படிகடவுள்பாடின முல்லேப்பண்ணுகிய சாதாரிராகம் சராசர வுயிர்களே யும் உலகையும் எட்டுதிக்கையும் விழுங்கித்தன்மயமாக்கி எமநாதனே அவ னுடம்பையுமுயிரையும் உருகச்செய்தது. அப்போதுவமநாதன் பாவசுயி ருக்க, பாடினவிறகாள் தம்முடைய விறகுசுமையுடனே மறைந்தருளினர்.

அவர்போனபின்பு வமநாதன் அந்தச்சாதாரிராகம் இதுவரையிலுநா ன்தெரிந்தேயன்றுதெரிந்தேதனென்று ஒருவர்சொல்லவுங்கேட்டிலேன் ஆலல்

இதுதேவராகம்இந்தத்தேவராகத்தையார் இவனுக்குச்சொல்லிக்கொடுத்தார்களோ இந்தராகம் கடவுளேயன்றி மனிதர்களிலே தெரிந்தவர்களாரென்றுமிகவும்அதிசயித்துதள்ளும்படியான இந்தக்கிழவன்பாடலே யிப்படியாஞல் இதுகற்றுக்கொடுத்த பாணபத்திரன் பாடலெப்படி யிருக்குமோவென்று மதித்துப்பயந்து தன்னுடைய சமையலாள்கள்முதலான கூட்டங்களெல்லாம் நடுநடுங்கித்தொடர அன்றிராத்திரியே பிரயாணமாய்ப் பலவிதமான சோமன் உடுப்புப்பெட்டிகளும் ஆபரணப்பெட்டிகளும் மடக்குப் பெட்டிகளும் அங்கங்கேகிடக்க வெட்கமும்பயமுமிஞ்சி வீணைகளையும்போட்டுவிட்டு வடதிசையைக்குறித் தோடிப்போனன் அவன் போகும்போது பல்லக்கு ஒருவழி, பாடகிகளொருபுறம், குடையொருபுறம், கற்பவர்களொருபுறம், வேலையாள்களொருவழி, நாணழிந்து பாடற்கீழ்மக்கள் ஒருவழியாகத்தானும் பயந்துபோயினன். அன்றிராத்திரியேவிடைமேலழகரான சோமசுந்தரக் கடவுள் பாணபத்திரன்கனவிலேயெழுந்தருளி ஓபத்திரனே உனக்குளதிரியர்ய்வந்த வமநாதனிடத்திலே இன்றுசாயந்திரம் விறகுதலையாளாய்ச்சென்று நான் பத்திரனடிமையென்றுசொல்லிப்பாடி அவனேவென்று துரத்தினேன் இது தானே நீ என்னைவேண்டிக்கேட்டுக்கொண்டதென்று மறைய பாணபத்திரன் விழித்தெழுந்து மனத்தாலும் நினைக்கக்கூடாத சொல்லைக்கேட்டு மிகவும்பயந்து இப்படிச்சொல்லுதற்கோ நான் கடவுளை வேண்டினதென்று சூரியோதயமாகுமுன்னே திருக்கோயிலுக்குப்போய் சோமசுந்தரக்கடவுள் சந்நிதியில் வணங்கிநின்று எம்பெருமானே தேவரீர்.

கடியகானகம்புகுதவோகட்டியவிறகை
முடியிலேற்றவோமுண்டகத்தாள்கமிணைந்திடவந்
தடியனேன்பொருட்டாதசொற்பகரவோவஞ்சக்
கொடியனேன்குறையிரந்தவாவிளைந்ததேதகுற்றம்.

நெடியனேமுதல்மானவர்நெஞ்சமுஞ்சுருதி
முடியனேகமுங்கடந்தநின்முண்டகப்பாதஞ்
செடியனேன்பொருட்டாகவிச்சேணிலந்தோய்ந்த
வடியனேற்கெளிதாயதேதாவையநின்பெருமை.

நாதவந்தமுங்கடந்தமெய்ஞ்ஞானவானந்த
போதமென்பரஃதின்றெருபுடவிமானிடமா
யாதபந்தெறச்தறிந்தவிந்தனஞ்சுமந்தடியேன்
பேதையன்பளவாயதேதாபெருமநின்னுருவம்.


மறிந்ததெண்டிரைகிடந்தவனுந்நியில்வந்தே தா
னறிந்ததன்றரும்பொருள்வரம்பகன்றெழுவிசும்புஞ்
செறிந்தவண்டமுங்கடந்ததுசிறியனேன்பொருட்டாத்
தறிந்தவிந்தனஞ்சுமந்தேதாதம்பிரான்முடியே.

என்றுபத்திரன் மீளட்சிசுந்தரேசரைத்துதித்துவலஞ்செய்துதொழுதுமீண்டு வரகுணபாண்டியன் அரசாட்சிமண்டபம்வந்து அரசனைவணங்கி

நிற்க, பாண்டியன் சேவகனையழைத்து வடக்கேயிருந்துவந்தபாடகனை இங்கே அழையுங்களென்ன சேவகர் அவனிருக்குமிடம்போய் அவன்பயந்தோடிப்போன சங்கதிதெரியாமல் அங்கெல்லாந் தேடிக்காணுமலுழல, அயல்வீட்டுக்காரர்தங்களுக்குத்தெரிந்ததைச் சேவகரோடுசொன்னதாவது, ஐயா சேவகர்களே அந்தப்பாடகன் நேற்று இங்கேயிருந்தான் ஒருவிறகுதலையன் பத்திரனடிமையென்று சாயந்திரம்வந்துபாடினான் அவ்வளவுதானெங்களுக்குத்தெரியும்பின்பு பாதிராத்திரியில் பிரயாணமாய்ப் போய்விட்டானென்று சொல்லக்கேட்டுச் சேவகர் விரைந்துசென்று பாண்டியனவணங்கி அயல்வீட்டார் சொன்னபடியேசொல்ல, சபையாரெல்லாம் அதிசயித்துக் கூத்தாடினர்கள். அப்போதுவரகுணபாண்டியன் அனுமானங்கொண்டு தன்னைச்சேர்ந்த பாணபத்திரனைப்பார்த்து அந்தப்பாடகன் என்னகாரணத்திலேராத்திரியே பிரயாணமானான். நீநேற்று என்னிடத்திலிருந்துபோனபின்பு என்னசெய்தாயென்றுகேட்க, பத்திரன் வரகுணபாண்டியனவணங்கி ஐயா நேற்று இங்கிருந்துநான்போய் சோமசுந்தரக்கடவுளைவணங்கி என்குறைகளைச் சொல்லிக்கொண்டு பின்பு என்வீட்டிற்போயிருந்தேன் இராத்திரி என்கனவிலே கடவுள்வந்து பத்திரா உனக்காகவிறகுதலையனுப்சென்று உன்னெதிரிமுன்னே சாதாரிராகம்பாடி அவனெவென்றுதரத்திணைமென்றூர் நான் உடனேவிழித்தேன் இதுதான் நடந்ததென்று சொன்னேன். அப்போது சேவகர்போய் விசாரித்து வந்துசொன்னதும் பத்திரன் கனவின்செய்தியும் ஒத்திருந்ததினாலே இதுகடவுள் திருவிளையாடலிலொன்றென்று பாண்டியன் தெளிந்து பத்திரன் அன்பையும் கடவுளருளையும்வியந்துகொண்டாடி மதுரேசரைப் போய்வணங்கி பாணபத்திரனை யானைமேலேற்றி மதுரைவலஞ்செய்வித்து அனேகம் வெகுமானஞ்செய்து பாணபத்திரனைப்பார்த்து பிரமன் முதலாகிய எல்லாரையும் ஏவல்கொண்டகடவுளே உனக்குவிறகாளாய் வந்து ஏவல்செய்து உன்குறையைத் தீர்ப்பாராலால் எல்லாரும் உனக்கு ஏவலாளிகளல்லவோ? ஆதலால் இனிநானும் ஏவலாளிபோலிருந்து இனி நீர் இன்றுமுதல் வேதநாதனையே பாடத்தக்கதென்று உபசரித்தனுப்பினன். பத்திரன் தனக்குப் பாண்டியன்கொடுத்தனவெல்லாம் தன்னையடுத்த வித்வான்களுக்கும் கற்றுச்சொல்லிகளுக்கும் பங்கிட்டுக்கொடுத்துத் தன்னுடைய பாடகர்களுடனே வீட்டுக்குவந்து அளவில்லாதமகிழ்ச்சிகொண்டிருந்தான்.

விறகுவிற்றபடலம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

நாற்பத்திரண்டாவது
திருமுகங்கொடுத்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

முன்னவன்மதுரைமூதூர்முழுமுதலிசைவலானை
யின்னிசைபாடிவென்றதென்னுரைசெய்தேனந்தத்
தென்னவன்சேரன்மாடதிருமுகங்கொடுத்துப்பாணர்
மன்னவன்றனக்குச்சமபொன்வழங்கியவழக்கஞ்சொல்வாம்.

இதன்பொருள்.

முழுமுதற்கடவுளும் மதுராபுரித் தலைவருமாகிய சோமசுந்தரக்கடவுள் இசையிலே வல்லவனாகிய எமநாதனை அவனஞ்சியோடும்படி இசைபாடிவென்ற திருவிளையாடலை நான் என்னவென்றெடுத்துச் சொல்லுவேன். இனி, அந்தச் சோமசுந்தரக்கடவுள் பாணபத்திரருக்காகச் சேரர்பெருமானிடத்தில் திருமுகமனுப்பி அளவில்லாதபொற்குவைகளை வாங்கிக்கொடுத்த திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

பின்புபாணபத்திரன் பாண்டியன்சொன்னதே சரியென்று அன்றுமுதல் பாண்டியனிடத்தில்பாடுந்தொழிலிலவிட்டு கடவுள் திருக்கோயிலுக்குப்போய் மூன்றுகாலமும்தினந்தோறும் சந்நிதிமுன்னேநின்று பாடுவதேநியமமாகக்கொண்டு பாடிவருகிறநாளில் கடவுள் திருக்கோயிலுக்குப்போய் பாடுவதேயன்றி வேறே தொழிலில்லாமையினாலே பத்திரன் அதிகவறுமையினாலே வருந்த அவன் அப்படிவருந்துவதைச் சோமசுந்தரக்கடவுள் தரிக்காமல் பாண்டியனுடைய பொக்கிஷத்திலுள்ள திரவியங்களைக் கொண்டுவந்து தம்முன்னே நின்றுபாடுகிற பாணபத்திரன் கண்ணுக்குமுன்னே சிலநாள் வைத்துக்கொண்டுவந்தார். சிலநாள் பொன்பூவராகன்வைத்தார். சிலநாள் பத்திரபாணங்கள் வைத்துவந்தார். சிலநாள் பொன்னுடைகள் வைத்தார். சிலநாள் சாமரைக்காம்புத்தகட்டுப் பொன்னைவைத்தார். சிலநாள் சிங்காசனப்பொன்றகடுகளைக்கொண்டுவந்துவைத்தார். இப்படி ஒருவருக்குந் தெரியாமல் கடவுள் கொடுத்துவந்த பொருள்களெல்லாம் பத்திரன் நெருப்பிலிட்டுருக்கி அழித்துடைத்துத் தன்னைச்சேர்ந்தவர்களுக்கும், யாசகர்களுக்கும், தன் கைபார்த்திருக்குமவர்களுக்கும், பிறருக்கும்மாறுமல்கொடுத்து அவர்கள் துன்பமும் தன்வறுமையுந் தீர்ந்துகொண்டுவந்தான். இப்படிப்பாணபத்திரனுக்குத்தினங்கொடுத்துவந்த சோமசுந்தரக்கடவுள் பின்புசிலநாள்கொடாதிருந்தார். அக்காலம் பாணபத்திரன் திருக்கோயிலுக்குப்போய்க் கடவுளைவணங்கி ஒன்றும்பெறாமல் சும்மாவந்து பெருந்துன்பத்திலழுந்திவேறு பிழைக்கும்வகை கிடையாமல்மிகவும் இளைத்துவாடித் தரித்திரம்பொறுக்கமாட்டாமல் நித்திரைசெய்தான். அப்படி அவன் தூங்கும்போது கடவுள்கனவில் ஒரு சித்தவடிவுகொண்டுவந்துநின்று அப்பா பத்திரா! உனக்காகயாம்பாண்டியன் பொன்னறைக்குள்ளிருந்தபொருள்களைப்பெருநுளம்புண்டகனிபோல்கொண்டுவந்துகொடுத்தோம் இனிஅப்படிக்கொடுத்தால் எம்மிடத்தில்

மிகுந்த அன்புள்ளவனை பாண்டியன்தெரிந்தால் இவ்வளவுகட்டுக்காவலிலிருக்கிறபொருள்களைக்களவுசெய்து கடவுளேயென்றுமனம்வேறுபட்டுபொக்கிஷம் காக்கிற காவலாளிகளைத் தண்டித்தாலும் தண்டிப்பான் ஆதலால் இனிஉன்போலனம்மிடத்தில் அன்புள்ளவனைசாமானுக்கு ஒருஓலையெழுதிக்கொடுக்கிறேம்நீ அந்த ஓலையுடனேபோய்ச்சாமானைக்கண்டுவாவென்றுசொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மதிமலிபுரிசைமாடக்கூடற்
பதிமிசைநிலவுபானிறவரிச்சிறை
யன்னம்பயில்பொழிலாலவாயின்
மன்னியசிவனியான்மொழிதருமாற்றம்.

பருவக்கொண்மூப்படியெனப்பாவலர்க்
குரிமையினுரிமையினுதவியாளிதிகழ்
குருமாமதிபுரைகுலவியகுடைக்கீழ்ச்
செருமாவுகைக்குருதேசரலன்காண்க.

பண்பால்யாழ்வல்லபாணபத்திரன்
றன்போலென்பாலன்பன்றன்பாற்
காண்பதுகருதிப்போந்தனன்
மாண்பொருள்கொடுத்துவரவிடுப்பதுவே.

திருச்சிற்றம்பலம்.

எனத்திருமுகப் பாசுரத்தை யெழுதிப் பாணபத்திரன் கையிற்கொடுத்துச் சித்தராகவந்தவர் மறைந்தருளினர். உடனேபத்திரன்நித்திரைதெளிந்துவிழித்தெழுந்து ஆடிப்பாடி ஆனந்தக்கடலிலேமுழுகித் தான்பெற்றதிருமுகத்தைப்பட்டுவஸ்திரத்தில் முடிந்துகொண்டு சோமசுந்தரக்கடவுள் பாதங்களைவணங்கித் திருக்கோயிலைவலஞ்செய்து பத்திரன்விரைவிலே மேற்றிசையைக் குறித்து வழிபிடித்துக்கொல்லைகளும்-குறிஞ்சிநிலங்களும்-பாலைவனங்களும் கடந்துசென்று பலாச்சோலைகள் பழங்களுடனே காலிலேதடுக்க மிகுந்தவளப்பம்பொருந்திய மலைநாட்டுக்குப்போய்கடலாகிய உடையாடையும் மலைகளாகிய முலைகளோடுவிளங்குகின்ற மலைநாடென்கிற பெண்முகத்திலிட்ட திலகம்போன்ற திருவஞ்சைக்களமானது அறப்பெருஞ்செல்வமும் ஐஸ்வரியமும், வீரமும்-வடமொழி தென்மொழிகளும் சிறந்துவிளங்குகின்றதைக் கண்டு பத்திரன் அந்தப்பட்டணத்தில் ஒருபுறத்திலே ஒரு தண்ணீர்ப்பந்தலில் வந்திருந்தான். இப்பால் அந்தத் திருவஞ்சைக்களத்தையாளுகிற சேரமான்கனவிலே அன்றிராத்திரி சோமசுந்தரக்கடவுள், ஒருசித்தராயெழுந்தருளி ஓசேர்மான்பெருமானே! யாம் மதுரையிலிருக்குஞ்சித்தர் எம்முடைய ஓலைகொண்டு பாணபத்திரனென்பவன் திரவியங்கள்வேண்டி உன்னைக்காண இங்கேவந்திருக்கிறான், அவனுக்குவேண்டிய பொருள்களெல்லாங்கொடுத்து அவனைச்சிக்கிரம் நம்முடைய மதுரைவந்துசேரும்படி செய்வாயாகவென்று சொல்லிமறைந்தருளினர் உடனேசேரமான்பெருமான் விழித்தெழுந்துவிடிந்தபின்புதன் மந்திரிபிரதானிகளுக்குத்தெரியச்சொல்லி இப்போதுமீளாட்சிசுந்தரேசர் திருமுகங்கொண்டுவந்த பத்திரர் எங்கேயிருக்கிறார்தேடி அழை

த்து வாருங்கோளென்று ஏவல்வீரரைபணுப்ப அந்தஏவல்வீரர்வீதிதிண்ணை முடுக்குசாவடிசத்திரங்களெல்லாம்போய்த்தேடித் தண்ணீர்ப்பந்தலி லிருக் கிறபத்திரனைக்கண்டுதெரிந்துவிரைவிலேசென்றுசேரமான் பெருமானுக்குத் தெரியப்படுதிறுர்கள். உடனேசேரமான் சேனைகளுடனே எதிர்கொண்டு போய்ப் பத்திரனைக்கண்டு கைகளைத்தலைமேற்குவித்துக்கொண்டு துதிகள் பாடிக்கூத்தாடி நிலத்திலேவிழுந்து தேனைக்கண்ட வண்டுபோல்மகிழ்ந்து தி ருமுகத்தைதவாங்கிக்கண்களிலேயொற்றி முடிமேல்மாலைபாகச் சூட்டிக்கொ ண்டுஆனந்தக்கண்ணீர்துளும்பஉடம்புபூரித்து ஓலையைப்பிரித்துவாசித்தனர்.

மின்னலைப்போல்விளங்குகின்றசெம்பொன்னுலும்ரத்நங்களாலும் அ மைந்தஉப்பரிகைகள்நிறைந்த மதுரையிலிருக்கும் சிவனுடியயாம் எழுதிவிடு க்கும்பாசுரத்தை அழகானதேகம்போல்புலவர்களுக்குக்கைம்மாறுகருதாது கொடுக்கிற சேரநரபாலன் காணக்கடவது தன்னைபோல் நமதிடத்தன்பனு கிய இன்னிசை யாழ்ப்பத்திரன் தன்னிடத்திற்கு வருகிறதிறலே அவனுக் குவேண்டிய மிகுந்ததிரவியங்களைக்கொடுத்து அனுப்பக்கடவை.

என்று பாண்டியர்குலதெய்வமானசோமசுந்தரக்கடவுளனுப்பின தி ருமுகத்தின்செய்தியைபபார்த்துச்சேரமான் பெருமான்தனதுமகிழ்வுக்குமு டிவுதெரியாதவராய் அந்தஓலையைப் பொற்றட்டின்மேல்வைத்து அதைமத யானைத்தலைமேலேற்றிப் பாணபத்திரனை முன்னேவைத்துத்தான்பின்னேயி ருந்துசாமரம்பணிமாறிப் பலவாத்தியங்களுழுழங்கப் பட்டணத்தை வலஞ் செய்வித்து மங்கிலியப்பெண்கள் மங்களதீபங்கொண்டுஎதிரேவரத் தன்னர ண்மனைக்குக்கொண்டுவந்து திருமஞ்சனஞ்செய்துபஞ்சவர்ணங்களாலும் சித் திரவிசித்திரமானமணிமண்டபத்திலேபாணபத்திரனை எழுந்தருளப்பண்ணி ப்பொன்னுசனத்தி லிருக்கச்செய்து சித்து அறுசுவைப்போசனங்களுமுண் ணச்செய்து சந்தனகளபகஸ்தூரி பனிநீர் புஷ்பதாம்பூலாதிகள்கொடுத்துப் பின்பு கடவுள் அனுப்பிவிடுகவென்று எழுதியிருத்தலிலேபத்திரனையழை த்துக்கொண்டுபோய் செம்பொன்னறையைத் திறந்துகாட்டி இந்தப்பொரு ள்களெல்லாம் ஐயாபத்திரரே! உம்மதே ஒப்புக்கொள்ளுமென்ன, அதற்குப் பத்திரன் சேரமானை வணங்கி ஐயா நீரோகடவுளருளுக்குப் பாத்திரமானவ ராதலால்நீர்கொடுத்தீதெனக்குப்போதுமென்ன சேரமான்பெருமான்தான் நினைத்தபடியே கொடுக்கக்கொடுக்கப் பத்திரன் போதும்போதுமென்று மிடி தீர்ந்து பல்லக்கு யானைகுதிரைபொன்னுடைகள்பொன்னுபரணங்கள் அனே கந்திரவியங்கள் முதலானபொருள்களெல்லாம் கொடுக்கப் பெற்றுச்சேரமய ன்பெருமான் எழுடிபின்தொடர்ந்து வழிவிட்டு மீண்டு நிற்க பத்திரன்மீண்டு மதுரைக்குவந்து முத்தமிழ் மதுரசசரைக்கண்டு தொழுது பாண்டியனது ம துரையிலுள்ளவர்களெல்லாந்தெரிய எல்லாருக்கும் வேதியர்க்கும் புலவருக் கும் இசைப்பாணருக்கும் முறைப்படி கொடுத்துப் பாணரில் தர்மதேவதை போல்வாழ்ந்திருந்தான்.


திருமுகங்கொடுத்தபடலம்
முற்றிற்று.

உ

சிவமயம்.

நாற்பத்துமூன்றுவது

பலகயிட்டபடலம்.



கோசகக்கலிப்பா.

கருந்துழாய்முகிலொருபாற்கலந்தவர்பத்திரற்குநிதி
திருந்துதாருதியனிடைத்திருமுகமீந்தளித்ததிது
வருந்தியாழுவனிசைப்பமழைதூங்குநள்ளிரவி
லிருந்துபாடெனப்பலகையிட்டதூஉமினிப்பகர்வாம்.

இதன்பொருள்.

துளபமாலையைத் தரித்த கரிபமேகம்போன்ற விஷ்ணுவைத்தமது திருமேனியில் பாதியாகவுடைய சோமசுந்தரக்கடவுள் சேரர்கோனிடந் திருமுகமனுப்பி அவரிடத்தில் அளவில்லாதபொருளைவாங்கியும் பாணபத்திரருக்குக்கொடுத்தருளிய திருவிளையாடலிதுவாகும் இனி அந்தபாணபத்திரர் மழையிலே நனைந்தபடியே இராக்காலத்தில் இசைபாடிக்கொண்டு சிவத்தியானத்திலிருக்கையில் அவருக்கு இதன்மேலிருந்து பாடக்கடவாயென்று பொற்பலகையிட்ட திருவிளையாடலைச்சொல்லுகின்றேம்.

பின்பு பத்திரன் தன்னை யுகந்தடிமைகொண்ட சோமசுந்தரக்கடவுளின் திருக்கோவிலுக்குப்போய் மூன்றுகாலமும்வணங்கிவருநாளிலே திருமுகங்கொடுத்துப்பொருளருளியபின்பு அர்த்தசாமத்திலுஞ்சென்றுவிடையின் பின்னேநின்றுளமிசையும்பாடிக் கடவுள் அடியார்களும், தேவர்களும்வணங் கழுத்துப்பல்லக்கின்மே லேறிக்கொண்டு தேவி பள்ளியறைக்கெழுந் தருளும்போது சேவித்து இப்படி தினநியமந்தப்பாமல் நடந்து வருகிற நாள்களிலே இந்தப்பத்திரன் என்னவிக்கினங்கள் வந்தாலும்தான்கொண்டநியமம் விடாதவனென்பதை எல்லாருக்குந்தெரிவிக்க கடவுள்திருவிளையாட்டாக ஒருநாள்பள்ளியறைதரிசனஞ்சேவிக்கப்போகும்போது மேகங்கள்குமிறித் திக்குகள்தெரியாமல் ஆகாயமெங்குநிறைந்துமுன்புவருணன்விட்ட மழையைப்போலேமின்னிப்பாம்புகள் பயந்தொடுங்க இடித்துஉக்ஷத்திரங்களும்தரியாமலிருண்டுஆகாயமானது கருங்கடலேஅடியோடேவாரிக் கவிழ்த்தாற்போலவும், இருப்புக்கம்பிகளை எங்கும்ஊன்றிணற்போலவும், அஞ்ஞானிகள்மனம்போலவும் கீழ்மேலொன்றுந் தெரியாதபடி மழைபொழிய அந்த மழையில் பத்திரன்நனைந்து அந்தமழையைப்பூமழைபொருவதாகநினைத்து வந்தகடவுள்கிருபையாகிய மழையிலேநனைந்து தேன்மழைபொழிவதுபோல நந்தியின் பின்னேநின்று வீணையை யிடதுதோளிலே சாத்திச்சுருதிகூட்டி ஆலாபனம் பண்ணிச் சோமசுந்தரக்கடவுள் செவிவழியேபோய் அருட்பயிர்தலையெடுக்கத்தான்தொடுத்த தமிழினிசையமுதம் மடைதிறந்துநரம்புநனைந்துஓசைம

முங்கவும், உடல்குளிர்ந்து நடுக்கவும், கைவிரல்கள் மிறைத்திழுக்கவும், மயிர் சிலிர்க்கவும், கால்கள் சேற்றிலழுந்தவும் நின்று அன்புமிகுந்து என்பையும் உருக்கத்தக்க அழுதவிசை பாடுகின்றான். எப்படியென்றால்,

மாதர்நகையாப்மதுரேசருண்பலிக்கெம்மனைவாய்வந்து
காதன்முகத்தரும்பிக்காட்டியென்சிந்தைதகவர்ந்தார்போலுங்
காதன்முகற்றரும்பக்கையறவுதீரக்கலப்பேன்பாதி
பேதைவுருவாயிருந்தார்நாணிவிழித்தாவிபிழைத்தேன்போலும்.

ஒண்ணுதலாய்வெண்டலைகொண்டுண்பலிக்குநம்மனையினூடேகூடற்
கண்ணுதலாருள்ளாளக்கானமிசைத்தென்னுள்ளங்கவர்ந்தார்போலுங்
கண்ணுதலார்பாடுமவினயங்கண்டாகலங்கலப்பேன்பாதி
பெண்ணுருவமாயிருந்தார்வெள்கிவிழித்தாவிபெற்றேன்போலும்.

ஐயரியுன்கண்ணுப்திருவாலவாயுடையாரையங்கொள்வான்
மையனகைசெய்தென்வனமுலையின்மேற்சங்கைவைத்தார்போலு
மையனகைசெய்தென்வனமுலைமேற்கைவைப்பமாழ்கிச்சேர்வேன்
றையவிடங்கண்டுநடுநடுங்கிவிழித்தாவிதரித்தேன்போலும்.

என்றிப்படிப் பாடுகிற தும்புருநாரதருக்கு வெகுமானமாகக்கொடுத்த சங்கக்குழையணிந்த திருச்செவிகளிலேபத்திரன் இன்னிசைத்தேனூறுகின்ற அடிமைத்தனத்தைக் கடவுள்கண்டருளி இதன்மேனின்று பாடென்று ஆகாசவாக்காகச்சொல்லி ஒருபலகைபத்திரன்முன்னே காணவிட்டார் அப்படி கடவுளிட்டபொற்பலகையின்மேல் பெருமானுடைய அருளாணைக்குப்பயந்தேறி மதுரகீதம்பாடிக்கடவுள் திருவடிகளைத்தியானித்துப் பலகையையுமெடுத்துக்கொண்டு பத்திரன் தன்வீட்டுக்குப்போகும்போது மழைவிட்டு நக்ஷத்திரங்கள்விளங்க வீடுவந்துபுகுந்திருந்தான். இப்பால்வரகுணபாண்டியன்பொழுதுவிடிந்தபின்பு தங்கள்குலதெய்வமான கடவுள் பாணபத்திரனுக்குநின்றுபாடப் பலகையருளின சிறப்புகேட்டுப் பாணபத்திரனையழைத்துவந்து அந்தப்பலகைமே லிருக்கச்செய்து, இந்தப்பத்திரனே மதுரேசனென்றுகினைத்து ரத்நாபரணங்கள், விளைநிலங்கள் முதலான பல சிறப்பும் போதும்போதுமென்னக் கொடுத்துப் பத்திரனுக்குமுன்போலவே மாதச்சம்பளமும் நடத்திக்கொண்டுவந்தான். இப்படி பாண்டியனாலே வரிசைபெற்ற பத்திரன் கடவுள் திருக்கோயிலுக்கு நாலுகாலமும்போய்ப் பாடுந்தாழிலவிடாமல் நடத்திக்கொண்டுவருகிறநாளில் வரகுணபாண்டியனும் வேதத்தின்முதற்பொருளாகிய சோமசுந்தரக்கடவுளின் சந்நிதானத்தில்வந்துசேவித்துத்துதிக்கும் நியமம்வழுவாமல் சிலநாள் கழிந்தபின்பு கடவுளதுசாரூப்பியம்பெற்றுச் சிவபுரமடைந்தான்.

பலகையிட்டபடலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

நாற்பத்துநான்காவது

இசைவாதுவென்றபடலம்.


எண்சீராடியாசிரியவிருத்தம்.

கூடலம்பதியிலாடகமேருக்கொடியவிற்குருசிலடியவனுக்குப
பாடலின்பரிசிலாகியசெம்பொற்பலகையிட்டபடிபாடினமன்னன்
வீடரும்பொருவில்கற்புடையாளோர்விறலியைப்பரமனிறையருள்பற்றி
மாடகஞ்செறியும்யாழ்வழிபாடிவாதுவென்றவரலாறுமிசைப்பாம்.

இதன்பொருள்.

நான்மாடக்கூடலென்னும் மதுரையின்கண் பொன்மலையைவில்லாகக் கொண்டருளிய சோமசுந்தரக்கடவுள் அடியவராகிய பாணபத்திரர்தம்மைப் பாடியபாட்டின்பரிசாகப் பொற்பலகையிட்டருளிய திருவிளையாடலைச் சொன்னேம், இனிகெடுதலில்லாத நிகரற்றகற்பினையுடைய அந்தப்பாணபத்திரரது மனைவியார் ஓர் யாழ்ப்பாணப்பெண்ணைச் சோமசுந்தரக் கடவுளது பூணைகடாகத்நிலை முறுக்காணியையுடைய யாழைப்பாடி இசைவாது வென்ற திருவிளையாடலைச் சொல்லுகின்றேம்.

அப்படி வாகுணபாண்டியனுக்குப்பின் அவன்புத்திரனை ராஜராஜராஜபாண்டியன்முடிசூடி அரசாளுங்காலத்தில் அவனுக்குக் குலபத்தினிகளனேகர் காதற்பரத்தைகளனேகரில் ஒருபரத்தை அந்தப்பாண்டியனுக்கு அமுதும் ஆவியும்போன்றவள். பின்னும் அவன்மகிழ மதுரகீதம்பாடும் வித்தையிலும்வல்லவள், அப்படிப்பட்ட அவளுக்கும் பாணபத்திரன்மனைவிக்கும் கீதம்பாடும்விஷயத்தில் பகையுண்டாகி மிஞ்சிப்பாண்டியன் பரத்தையானவள்பத்திரன்மனைவிக்கெதிராக இன்னுமொருபாடகியை வரவழைத்துவிட்டுப்பாடி இவளைகருவபங்கம் பண்ணவேண்டுமென்று நினைத்துப் பாண்டியனுக்குத்தெரியப்படுத்த அவன் அவள் சொல்வழிநடக்கிறவனைகையாலே தடாரழநாட்டில் நின்றும் ஒருசமர்த்தியானபாடகியைவரவழைக்க அவள்தன்னுடையதோழிக்கூட்டங்கள் பக்கங்களிலேநெருங்க ராஜசபைக்குவந்து பாண்டியனைக்கண்டுவணங்கி ஒருபுரத்திலிருந்து கின்னரமங்கைபோல வீணைகானம்பண்ணிநிற்க அவள்மேல்மனஞ்சென்றபாண்டியன் பழிநோக்காமல் அந்த ஈழநாட்டாளைப்பார்த்து நீ இப்போது உன்னுடன்பாடவருகிற பத்திரன்மனைவிபக்கமாகநாங்கள்பேசினதும் நீவிடாமல் அவள்வெட்கும்படி ஆணையிட்டுமறித்துப்பாடி வெல்லவேண்டுமென்றுசொல்ல, பின்பு நீ நாளைக்கு வாவென்றுவிடைகொடுத்தனுப்பிவிட்டு பத்திரன்மனைவியைவரவழைத்து உள்ளான்றுவெளியொன்றுகொண்டுபாடவல்லவரு முண்டோவென்று கருவங்கொண்



டு ஒருத்திவந்திருக்கிறாள் அவளோடு நீபாடவல்லையோ வென்று கேட்டான் அதற்கு ஐயா பாண்டியமஹாராஜனே! எனதுகற்பும் மதுரேசன் கருணையும் நிலைகொண்டிருக்கையாலே வந்தவளோடு பாடிவெல்வதே யல்லாமல் நான் பயந்திருக்கிறவ ளல்லவென்று பத்திரன்மனைவிசொல்ல பாண்டியன் அவளையும் நாளைக்குவாவென்றனுப்பிவிட்டு மற்றைநாள் பாண்டியன் சபையிலே இரண்டுபாடினிகளையும் வரவழைத்துப் பாடவிட்டுப் பாடல்கேட்கு முன்னே யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல்வழியாகவந்த பாடினிபத்திரன் மனைவியைப் பார்த்திகழ்ந்து குற்றமெத்தனை, குணமெத்தனை, வீணைக்குத்தெய்வம் யார் முன்னே இசைப்பது எந்தவுயிர் உயிரளவெத்தனை, மெய்யளவெத்தனை உயிர்மெய்யளவெத்தனை இவைகளுக்கு மறுமொழிசொல்லிப்பின்பு நீசாமர்த்தியாலுல் என்னோடுபாடு இல்லாவிட்டால் நீதோற்றவள் யென்று சொன்னுள் அதற்குப் பத்திரன்மனைவி நீயோ கப்பலிலிருந்திரங்கிவந்த பெருமையும் வித்தையும் வாதஞ்செய்வதில் உற்சாகமும் யாரும் ஆசைபடத்தக்க உன் பெண்மையழகின் செருக்கும் இந்தராஜகுமாரன்முன்னே உன்வாயை திறவாவிட்டால் எப்படி விளங்கும் எடிபெண்ணே உன்னோடு இசைவாதுவெல்ல நான் ஒப்புவேனே யல்லாது சும்மாவாய்ச்சண்டைசெய்ய நான் எதிரியல்லேன் உன்னைப்போலே மானம்விற்றுண்டு பிழைக்கும்வேசிகளே வாய்ச்சண்டைக்குத் தக்கவர்களென்று பத்திரன் மனைவி மறுமொழி சொன்னுள். அப்போது பாண்டியன் அவ்விருவரையும் சண்டை விலக்குகிறவன்போலே விலக்கி இப்போது நீங்களிருவரும் பாடுங்கள் தோற்றவள் வென்றவளுக்கு அடிமையாவதே சபதம் என்று ரோஷமுண்டாக்கிவிடவும் ஈழநாட்டுப்பாடினியானவள் முந்தி வீணையை இடதுதோளிலேசாத்தி அவள் சுரவின் படியே கைவிரல்கள் தந்தியைத்தெறிக்க பெருமிதநகை உள்ளேநின்று சிறிதுதோன்ற எழிசைப்பாடலை ராஜகுமாரன் காதுக்கின்பமாக மழலையமுதம் போலப் பாடினுள் அதற்குப்பத்திரன்மனைவி வீணையைக்கொண்டு முறுக்காணிகளை முறுக்கிச் சுருதிகூட்டி யக்ஷக்கின்னரர்கள்நாண விரல்கள்செல்லும் வழியே நாவில்வருகிற இன்னிசை யமுதத்தைப் பலருங்கேட்கப் பாடினுள்.

அப்போதுபாண்டியன் மனக்கருத்தைச்சபையார்தெரியாமல்பாணபத்திரனுடைய மனைவியானவள் பாடினபாடலை மெச்சிக்கொண்டாடினுர்கள். பாண்டியன் இலங்கையிலிருந்துவந்த பாடினிபாடலைமகிழ்ந்து கொண்டாடினுன். அப்படியான பாண்டியன் கருத்தைத்தெரிந்து சபையார் பாண்டியன் கொண்டாடினபடியே இலங்கைப்பாடினிபாடலைக்கொண்டாடினுர்கள் (மன்னவனெப்படி மன்னுயிரப்படி) என்கிறபடியே கொண்டாடின சபையாரைப் பார்த்துப்பாண்டியன்தனக்கு இன்பமானபரத்தை சுகபோகத்தைமகிழ்ந்து நீதிதவறி இன்றுஒருநாளிலே இவ்விருவர்பாடலையும்தெரிந்து சொல்லக்கூடுமோ போங்களென்றனுப்பிவிட்டான். இலங்கைப்பாடினியானவள் "பாண்டியன்தன்னை மெச்சினதே வென்றியாகக்கொண்டு பெருங்களிப்படைந்து தன்னிடத்துக்குவந்து தூங்குமஞ்சத்தின்மேலிருந்து இளைப்பாறிக்கொண்டிருந்தாள் இப்பால்பத்திரன்மனைவி மீனாட்சிசுந்தரேசர் திருவடிகளைவணங்கி வருந்தினின்றுகண்ணீர்சொழுக அழுது ஸ்வாமி! சோமசுந்தரபாண்டியனுகிநீதி

செலுத்தினகடவுளே? இந்தப்பாண்டியன் பக்ஷபாதமான வழக்குச்சொல்ல வுடன்பட்டான், சபையாரும் அவன்சொன்னபடியே சொன்னால் எப்படி நியாயமான தீதிவிளங்கும் ஆனதினாலே உம்முடைய திருவருளாகிய துணைசெய்து எனக்குவந்தபகையைவென்று தரவேண்டுமென்றுவேண்ட கடவுள் அசரீரிவாக்காய் பெண்ணே? நீபயப்படாதை நாளைக்கும் நீயேவெல்லும்படி செய்கிறேம். போவென்ன, பத்திரன்மனைவி வீட்டிற்குப்போயிருக்கமற்றைநாள் பாண்டியன் அந்தஇரண்டுபாடினிகளையும் வரவழைத்து நேற்றுச்சொன்னபடியேசொல்லிப் பாடுங்களென்ன சபையாருமப்படியேசொல்ல அப்போது பத்திரன்மனைவி ஐயா? பாண்டியராஜனே நீரோபக்ஷபாதமானநியாயம்சொல்லுகிறீர் சபையாரும் அப்படியேசொல்லுகிறார்கள், ஆனதினாலேதராசுமுனைபோல நியாயஞ்சொல்லுதற்கு நம்முடையகடவுள் சந்நிதிமுன்னேநின்று பாடினால் இருவர்பாட்டையுங்கேட்டு யாராகிலுமொருவர் இன்னுள்ளவென்றுளென்றுசொன்னற்போதும் ஆகையால் அப்படிச்செய்யவேண்டுமென்னஅதற்குப்பாண்டியன் அப்படியே நாளைக்குச் செய்யுங்களென்றுவிடைகொடுத்தனுப்பிவிட்டான், மறுநாள் பாண்டியனும் மந்திரிகளும் தர்மார்த்தகாமமோக்ஷமென்னுநான்கு புருஷார்த்தங்களையுந்தெரிந்தபெரியோர்களும் கூடிப்போய் வெள்ளியம்பலவாணர் மண்டபத்திலிருந்துகொண்டு அந்த இரண்டு பாடினிகளையும் கூட்டிவாருங்களென்ன ஏவலாளர்விரைவிலோடி அழைத்துவந்தார்கள் அப்போது இலங்கைப்பாடினி இந்தக்நிழவி இன்றுதோற்று எனக்கடிமையாவதற்குச்சந்தேகமில்லையென்னு மனக்களிப்புடனே முன்னேவந்தாள். பத்திரன்மனைவியும் தனதுகற்பும் கடவுள் நிருவடிமேலன்பும் நிலையாகக்கொண்டுவந்தாள் அப்போதுசோமசுந்தரக்கடவுள் முத்தாரங்களும் ரத்தினகேயூரங்களும் இன்னும்பலவிதஆபரணங்களும்விளங்க அலங்கிருதராய்த்தாமும்ஒருவித்வாளுகிப் பெரியோர்கூட்டத்திற் கூடிவந்திருந்தார், அப்போதுகப்பலிறங்கி வந்தவள் முன்னேபாட அதுகேட்டுச்சண்பபார் ஒன்றுங்கொண்டாடாமற்பேசாதிருந்தார்கள். அப்போது பத்திரன் மனைவி சரஸ்வதிபோலிருந்துவீணையைக்கொண்டு பாடினாள் எப்படியென்றால்,

குடங்கைநீரும்பச்சிலையு மிடுவார்க்கிசையாக்குஞ்சரமும்
படங்கொள்பாயும்பூவணையுந் தருவாய்மதுரைப்பரமேட்டீ
படங்கொள்பாயும்பூவணையுந் தருவாய்கையிற்படுதலைகொண்
டிடங்கடோறுமிரப்பாயென்றேசுவார்க்கென்பேசுவதே.

தேனுர்மொழியார்விழிவழியே செல்லாதவர்க்கேவீடென்று
நானுவேதபொருளுரைத்தாய் நீயேமதுரைநம்பரனே
நானுவேதப்பொருளுரைத்தாய் நீயேபாதநிழலருளே
வானுயென்றுபிறர்பழித்தா லுனையென்விடையேதறைதேவனே.
வாதனுகியெவ்வுயிர்க்கு மாபாவிருந்திவலிபடக்கிச்
சாதமானவீட்டின்பந்தருவாய் மதுரைத்தனிமுதலே
சாதமானவீட்டின்பந்தருவாய் வீடுபெறுவார்போல்
வாதனோகநிலைபடைநாயென்பார்க்கென்னுன்னிளம்புவனே.

என்று மதுரேசனைத்தியானித்து இப்படிஇசைப்பாட்டாலேகனிந்து பண்ணுதல் பரிவட்டனைமுதலாக இசைநூலிற்சொல்லிபதாழில்களெட்டும் வார்தல்வடித்தல்முதலாகிய இசைக்காரணங்க ளெட்டுந்தான்ற மண்ணுலகத்தார் செவிகளுக்கேயல்லாமல் விண்ணுலகத்தார்செவிகளுக்கும் இன்னிசையாகிய வமுதத்தைவார்த்தாள். இப்படி இடை பிங்கலை இயங்காமல் மூலாதாரம்தொடங்கி அசைந்துபொதுவானதொழிலால் பிரமாந்திரபரியந்தம் நடக்க இசைக்கு முள்ளான மிடறுவீங்காமலும், கண்களிமையாமலும், பல்தோன்றுமலும், புருவம்மேலேநிமிராமலும், கொடிறுதுடியாமலும்பாட எல்லாருங்கேட்டுக்குதூகலங்கொண்டு மெச்சத்தொடங்கும்போது பாண்டியன் முன்னே தான்கொண்டாடினவளேயே கொண்டாடநினைக்கஅப்போதுசோம சுந்தரக்கடவுளருளாலே பாண்டியன் மணக்கோணல்தீர்ந்து பத்திரன்மனைவியே நன்றுப்பாடினளென்றுமெசசி இலங்கைப்பாடினி கழுத்தின்மேலே பத்திரன் மனைவிபைக்கொண்டுவந்து வையுங்களென்று சொல்லும்போது வித்வாளப் வந்திருந்தகடவுள் இந்தபத்திரன்மனைவி பாடலே ஆச்சரியம் ஆச்சரியமென்று கொண்டாடி சபையார்காண அப்பொழுதே மறைந்தருளினர். அதுகண்டசபையாரெல்லோரும் அதிசயித்தார்கள். பாண்டியன்பயந்து இதுவிடைமேலழகர் திருவிளையாடலென்றுதெரிந்து சபையாரும்பாண்டியனும் அடியவரன்பையும் கடவுளருளையும் ஆராய்ந்துபார்த்து ஆனந்தக்கண்ணீர்பெருகப் பேரின்பக்கடலில் மூழ்கினர்கள். உடனேபாண்டியன் கப்பலிரங்கிவந்தவள் பிடரியின்மேலிருக்கிறவளை இறங்கச்செய்து அவளுக்குமுன்னே ஆடையாபரணங்கள்முதலான பலவெகுமானங்கள்செய்து பின்பு கப்பலிரங்கி வந்தவளுக்கும் சிலவரிசைகள் கொடுத்து ராஜசபைக்குவந்து மீனாக்ஷிசுந்தரேசராகிய வித்துவானுக்கும் ஆபரணாதிகள் முதலான சிறப்புச் செய்து ராஜாக்கள் பலமெல்லாம் தெய்வபலத்தின் முன்னேநில்லா. அந்தத் தெய்வபலமும் மதுரேசன்முன்னேநில்லா என்றுசொல்லும் பழமொழி இந்தப்பத்திரன் மனைவியாலே விளங்கக் கண்டோமென்று அதிசயித்துக் கடவுளிடத்தில் விடைகொண்டு திருக்கோயிலைப்பிரதக்ஷிணம்வந்து ஆடல்பாடல்களுடனே தன்னரண்மனைக்குவந்துவாழ்ந்து பின்பு ராஜராஜராஜபாண்டியன் சுகுணபாண்டியனென்னும் புதல்வனைப்பெற்று வாழ்ந்திருந்தான்.

இசைவாதுவென்றபடலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

நாற்பத்தைந்தாவது

பன்றிக்குட்டிகளுக்கு முலைகொடுத்தபடலம்.


அறுசீரடியாசிரியவிருத்தம்.

இருளைக்கந்தரத்தில்வைத்தேதான்றன்னிடத்திதன்றுமன்பின்
றெருளைத்தந்தவட்குமாறுதரிவையையிசையால்வெல்ல
வருளைத்தந்தளித்தவண்ணமறைந்தனந்தாயாய்ப்பன்றிக்
குருளைக்குமுலைதந்தாவிகொடுததவாறெடுத்துச்சொல்வாம்.

இதன்பொருள்.

கருமைநிறம்பொருந்திய விஷத்தைக்கண்டத்திலேதரித்தருளிய சோமசுந்தரக்கடவுளிடத்தில் எப்பொழுதும் விடாது பேரன்புசெலுத்தியபாண பத்திரன்மனைவிக்கு விரோதியாக யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இசைப்பாடினியை வெல்லும்பொருட்டு அக்கடவுள் தமது திருவருளைத்தந்தருளிய திருவிளையாடலைச் சொன்றேம் இனி அந்தச்சோமசுந்தரக்கடவுள் தந்தையுந்தாயையுமிழந்து வருந்துகின்ற பன்றிக்குட்டிகளுக்குத்தாயாகித்திருவுருவங்கொண்டு அப்பன்றிக்குட்டிகளுக்கு முலைகொடுத்து அவைகளினுயிரைக்காத்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றேம்.

முன்னே தேவர்களுக்காக விஷத்தையுண்டதற்குச் சாக்ஷியாகக் கழுத்திலே விஷத்தைத்தரித்தருளிய சோமசுந்தரக்கடவுளுடைய மதுரைக்குத் தெற்கே குருவிருந்ததுறையென்றொரு ஊருண்டு. அந்த ஊரில் தவக்குருவாகிய வியாழபகவானிருந்து தவஞ்செய்ய அவருக்காகவேண்டிய வரங்களைக் கொடுத்து சித்திரத்தேர் வலவனுகிய பிரமனும், லட்சுமிநாதனுகிய விஷ்ணுவும் வணங்கக்குருநாதனென்னும் பெயரிலேவிளங்கத்தக்கது குருவிருந்ததுறை அந்த ஊரில் சுகலனென்றொருவேளாளனுண்டு அவன்மனைவி சுகளையென்பவள் மகாபதிவிரதையாய் வாழ்ந்துபன்னிரண்டு பிள்ளைகளைப்பெற்றுள். அந்தப்பிள்ளைகளைத்தாய்தகப்பன்மார் தங்களுக்குள்ள செல்வப்பெருக்கிலேலை எவ்வளவும் தண்டியாமல் மிகுந்த அன்புகொண்டு வளர்க்குநாளில் அந்தத் தாயுந்தகப்பனுமிறந்துபோக அந்தப்பிள்ளைகள் எவ்வளவுமஞ்சாதவர்களாய்வேடருடனேகூடிக்காட்டிலே வேட்டையாடிவெயில்படாத ஒரு மாப்புதலின் கீழேயிருந்து தவஞ்செய்கிற தேவகுருவைக்கண்டு கைகளைக்கொட்டிச்சிரித்து கல்லும்மணலும்வாரி அவர்மேலே வீசினர்கள். அப்போது தவஞ்செய்கிற தேவகுருவானவர் அந்தப்பிள்ளைகளைக் கோபித்துப்பார்த்து நம்முடையதவத்துக்கு விக்கினஞ்செய்தார்களேயென்று மனதொந்துபிள்ளைகளே உங்கள் நல்லதொழிலைவிட்டு வேடத்தொழில் செய்கிறீர்கள். ஆனலும் நீங்கள் உழுகிற தொழிலாளிக ளானதிலேலை பன்றியின்வயிற்றிலேபிறந்து குட்டிகளாய் தாயையும் தகப்பனையு மிழந்து அலைந்து துன்பப்படக்கடவீர்களென்று கடியசாபமிட்டார்.



பின்புபாபரூபிகளான அத்தப்பன்னிரண்டுபிராமணருமபயந்து சாபத்தையேற்றுக்கொண்டு ஐயாபெரியவரே எங்களுக்கிட்ட சாபம் எப்போது தீருமென்று மிகவும்வேண்டிக்கேட்க அதற்குத்தேவகுரு குருநாதனுடைய திருவடிகளைத்தியானித்துத் தமதுகோபத்தைத்தணித்துக்கொண்டுபிராமணர்களே உங்களுக்குமதுரேசரே தாயாய்வந்து முலைகொடுத்து உங்களை யாகப்பாற்றிப்பின்பு உங்களை மந்திரிகளாகச்செய்து பின்பு அழியாதவிடைகந்தருளுவாரென்று சாபத்திற்குவிமோசனஞ்சொல்ல, பின்பு அத்தப்பன்னிரண்டுபிள்ளைகளும் அந்தக்குருவிருந்ததுரைக்குப் பக்கமானகாட்டில் அதிசயம்பன்றிகளுக்குத்தலைவனான பன்றியரசனது பெட்டைப்பன்றியின்வயிற்றில் வந்து குட்டிகளாகப்பிறந்து வளருகிறநாளில்மதுரையில் ராஜாதிராஜனான பாண்டியன்மதுரையைவிட்டு மேற்புறக்காடுகளெல்லாந்தடி மான்வேட்டையாடுதற்கு மதயானைமேலேறிக்கொண்டு தன்சேனைகள்நெருங்கிவர அப்படியவன்வரும்போது மிருகங்கள் சஞ்சரிக்கிற இடங்கள்தெரிந்த வேட்டைக்காரர்கள்தோல் செருப்பிட்டக்கால்களுடனே மிருகங்கள்செல்லுகிற அடிச்சுவடுகண்டு புலால்நாறுகின்றவாயும் நெருப்பு விழிகளும்கொண்ட புலிகள்-பன்றிகள்-கடமைகள்-மான்கள் மேய்கின்ற கும்பல்கண்டோடிவந்து சொல்ல சிலவேட்டையாடிகள் சிக்கிரத்திலேபோய் அந்தக்கும்பலைச்சுற்றி வலைகட்டி அதிர்வெடிமுழக்கி நாய்கள்சுற்றிலும்நிற்க மிருகங்களைக்கலைத்து ஒருபுரத்திலேயொதிக்கி ஈட்டி வேல்கள்கொண்டு வீரர்கள்சூழ்ந்துநிற்க யானைமேல் பாண்டியன் ஏறியிருக்க-பம்பை-தவண்டை-சங்கு கொம்புமுதலிய பறைகளாலே திசைகள் செவிடுபடமுழங்கப் பலவிதங்களான பார்வைமிருகங்களை வைத்துக்காட்டி அந்தமிருகக்குரல்களுங்காட்டி புலி-கரடி-யானை - கடமை-மான்முதலியவைகள் மருண்டு கலங்கச்செய்து விற்களை வளைத்து வீரபாணங்களைப்பொழிந்தார்கள்.

அப்போது அங்கேகூடின மான்களெல்லாம் கால்கள்முறிந்தனதலைகளுடைந்தன, ரத்தங்கள்பீரிட்டன, வெள்ளைநிணம் வெளியேசரிந்து கைகளொடிந்து யானைகளிறந்தன, கரடிகள்-புலிகள்வாய்கள்கிழிந்து விழுந்திறந்தன, கடித்தபல்லும் கிழங்குகளுமாக அவசரத்துடனேவந்து கண்ணிக்குள்ளகப்பட்டன, சிலசாயல்கண்டு பார்வைகளின்மேலே விழுந்தகப்பட்டன,சிலகட்டின வலைக்குத் தப்பி அப்பால் நாய் கௌவிப்பிடிக்க அகப்பட்டன, சில வீரர்கள் கைவேல்களினுலே குத்துப்பட்டிறந்தன, பல இப்படி இறந்தவைகள்போக சிலகொலவிலங்குகள் வலையைத்தாண்டி அங்கேநிற்கிற வீரர்களோடெதிர்த்து மீண்டு பார்வைவிலங்குகளோடுகூடிநிற்பன, சிலவீரர்கள் விட்ட அம்புகள் புலிகளைத்துளைத்துச்சென்றும், மான்களைஉருவியும், மலைக்கரடிகளைத்துளைத்தும் யானைகளைப்பொடித்தும், இப்படியாக மாண்டன, பல அம்புபட்டுத்தப்பி வலையைக்கிழித்துச்செல்கிறமானை நாய்கள்பிடித்துக்கொண்டுநிற்க, யானைகள்மேலேபட்ட வேலாலாகிய புண்வழியே மலைமேல் நெருப்பெரிவதுபோ லிரத்தங்கள் பொங்க நின்றன, சிலவீரர்களாலியும், பம்பைச்சத்தமும், கொம்புச்சத்தமும், அம்புகள்பட்டு விழுகிற விலங்கின் ஓசையுந்தப்பி ஓடுகிறமான்மேலே தாவிப்பாய்ந்து நாய்குலைக்குஞ்சத்தமும்,

அந்தக்காடெல்லாம் நிறைந்து இடிமுழக்கம்போலாக, இப்படி பலமிருகங்க ளையும்கொன்று பாண்டியராஜன் மேலெத்திக்கில் போகும்போது ஒருபன்றிக ண்டு தங்கள்பன்றி யரசனிருக்கிற காட்டுக்கோடி முன்னேநின்று ஓபன்றிரா ஜனே! கேளும்பாண்டியன் இந்தக்காட்டிலுள்ள மிருகங்களையெல்லாங் கொ ன்றுகொண்டு இதோவருகிறன் நீர் அசட்டைபண்ணலாமோவென்ன பன்றி யரசன் மிகுந்த மதோரதங்கொண்டு தன் பெட்டுப் பன்றியைப்பார்த்து ஓய் பெண்ணே! நான் இன்றுபாண்டியனுடனே சண்டைசெய்து வென்று வரு வேனோ? அல்லது சாவேனோ? இனி நீ உன்குட்டிகளைக் காத்துக்கொண்டு இங்கே சாக்கிரதையாயிருவென்றுசொல்ல அந்தப்பெண்பன்றி ஓ ஓ அங்கே உயிர்போனால் உடல்பிழைக்குமா? பாவிகளான நாமிருவரும்பெற்ற குட்டிக ளைக்கொடுத்த தெய்வபலத்தினாலே ஜெயங்கொண்டுவந்தீராலால் உயிர்வாழ் வேன் அன்றேல் நீர் இறந்தவிடத்திலேயே உயிர்விடுவேன், உடலையல்லாமல் நிழலிருக்குமா? நானும் கூடவருகிறேன், வாருமென்றுகுட்டிகளையும் சூழவி ட்டுக்கொண்டு பெட்டுப்பன்றி பின்னேபற்றிவர மகாவேகத்துடனே பன்றி யரசன் வீரர்கூட்டம்போல பலவகை முள்ளன்பன்றிமுதலான பன்றிக்கூட் டங்கள்முன்னேதிரண்டுவர இந்தப்பன்றியரசன் கண்களிலே நெருப்புப்பொ றிகள்பறக்க முழுரோஷத்துடனே வருகிறபோது பாண்டியன் சேனைவீரர்க ள்விடாதமழை பொழிவதுபோல் அந்தப் பன்றிக்கூட்டத்தில் பாணவருஷ ங்களைப்பொழிய பாணங்கள்பட்டு முன்னே இரத்தவெள்ளம் பெருகின, அ ந்த இரத்தவெள்ளத்திலே உடல்கள்மிதந்தன, குடல்கள்சரிந்தன, எலும்பு கள்முறிந்தன, நிணங்களு மூளைகளும் சிதறின, பருந்து காகங்கழுகுகள்மே லேபடர்ந்து பறந்தன, உடல்வேறு பன்றிகளுயிர்வேறுயின, அப்போதுபன் றிகள் நெருப்பைப்போல கொதித்துப் பாண்டியன் சேனைகளில் சிலரைக்க டித்தும், சிலரை உதைத்தும், வாயிலே உதிரம்பெருகக்கொம்பாலேகுத்தியு ம்சிலநெஞ்சுநேரே பிளந்தும் பன்றிகள்கொல்ல, சிலவீரர்கள் காலொடிந்தா ர்கள். சிலர்தலையுடைந்தார்கள். சிலர் தோள்முறிந்தார்கள். சிலர் கையாயுத ங்கள்முறிந்தார்கள். சிலர் உயிர்போனார்கள்.

இப்படிபாண்டியன் சேனவீரர்கள் சாவக்கண்டு பாண்டியன்மந்திரிக ள்சீறி இருப்புலக்கைசக்கரமுதலியவைகளைக்கொண்டு அடிதது நறுக்கியும், குத்தியும், வெட்டியும், குறைத்தும், துணித்தும், பலவகையாகக் கொன்று தொலைக்க அதெல்லாங்கண்டு பெண்பன்றியானது தனது தலைவனை பன்றி யரசனைப்பார்த்து ஓய் தலைவனே? இப்போது நாம்முன்னே அனுப்பின பன் றிக்கூட்டங்களெல்லா மிதோ கொஞ்சக்காலத்திலிறந்தழிந்தன, நாமினிசெ ய்யத்தக்கதென்ன கிடக்கிறது இனிநாம்வீணே இறந்துபோகாமல் தப்பிப்பி ழைத்தோடிப்போவதே நல்லகாரியமென்று வேண்டிச் சொல்ல, அதுகேட் டுப் பன்றியரசன் சாவதற்கஞ்சாமல் (நுண்ணறிவுடையவராய் நூலொடுபழ கினும் பெண்ணறிவென்பது பெரும்பேதமைத்தே) ஆதலால் உன்னுடைய அறிவுக்கேற்றபடியே சொன்னாய், மானமுள்ளவர்கள் போர்க்குப்பின்வாங்கி னால் குற்றமானபழிப்பலவோ? இன்னும் இரண்டுசிங்கங்கள் தங்கக்கிடக்கிற தீர்த்துறையில் ஒருபன்றிவந்து நீர்குடித்துமீளும், ஒருபன்றியிருக்கிற நீர்த்

துறையில் வீரத்தில்மிகுந்த சிங்கம்வந்து தண்ணீர்குடிக்கப் பாயப்படும், அப் படிப்பட்ட வீரவுறுதிகொண்டகுலத்திலே பிறந்தேதனைதிலேலிந்தீவப் பமாலையணிந்தபாண்டியனுடைய வீரத்தினையடக்கி என்கீர்த்தினை எங்கும் பரவச்செய்ய வல்லேனேயல்லது மடிவேன், அழிவது பூதவுடம்பே யல்லது புகழுடம்பழியுமோ நீசும்மா இங்கேதானே நில்லென்றுதனதுபெட்டுப்பன் றினையிறுத்தி மற்றைப்பன்றிகளெல்லாம் என்காற்புறத்தில்நின்று பாண்டிய ன்சேனைகளைக் கொல்லவேண்டுமேயல்லது ஓடக்கூடாது என்று சொல்லிப் பாண்டியா! ஓடிப்போகாதைநில்லென்றுகோதித்துவந்து நிலத்தைக்கிண்டிப் பள்ளமாக்கி அதிலிருந்து கிளம்புறதூளியிலேலே ஆகாசமெல்லாமறையத்தா ன் தனியேவருகின்ற டன்றிபரசனைப் பாண்டியன்பார்த்து அதன் வீரத்தை மிகவும் புகழ்ந்துகொண்டாடி வில்லைவளைத்துப் பாணங்களைப்பொழிந்தான் அப்போது பன்றிபரசன் பாண்டியன்விடுகிற பாணங்களைப்பறித்துச்சிலபா ணங்களைக் காலாலேதெய்த்தும், சிலபாணங்களைமுறித்தும், சிலபாணங்களை வாலாலேயீசியுதிர்த்தும், இப்படி சின்னபின்னம்பண்ணுவதைபாண்டியன் க ண்டு நாணித் தன் யானைக்கையிலே இருப்புலக்கைபைக்கொடுத்துவர அது கண்டு இடியேறுபோலேசீறிப் பன்றியரசன் அந்த யானைபைக்கொல்ல நினை த்து அதன்கையை வாழைத்தண்டுபோல ஒடியச்செய்து தன் கொம்பாலே குத்திச் சிதைத்துக்கொல்ல உடனே பாண்டியன் ஒருதேர்மேலே பாய்ந்தே றிச் சக்கரத்தைச் சுழற்றி அதன்மேலேவிட்டான் அந்தச்சக்கரத்தைப்பன் றியரசன் தடுத்துவிட்டு மிகுந்தவேகத்துடனேபாய்ந்து அவனேறினதேரை யுடைக்கப் பாண்டியன் வேறே குதிரைமேலேறி வேலாயுதத்தைச்சுழற்றும் போது பன்றியரசன் அவனேறினகுதிரையின்பின்னேசென்று பாய்ந்துகுட ல்சரியவும், ரத்தமொழுகவும், கொம்பால்குத்திக் குதிரையைக் கொல்ல பா ண்டியன் மனம்பொறுமல் கீழேகுதித்துத் தன்கையிலுள்ள இரும்புத்தடி யாலே அந்தப்பன்றியரசன் தலைமேலே ஓங்கியடிக்கப் பன்றியரசனிறந்து விமானமேலேறி மன்மதாகிருதியாய்த் தேவர்கள்வியந்து பூமழை பொழியச் சுவர்க்கலோகத்திற்போய்த் தேவகானங்களைக் கேட்டும் அமுதம் புசித்தும் தேவரம்பைகள் போகசுகமும் அனுபவிக்கலானன். பின்புபெண்பன்றி என தருயகன்சாக நான்கண்டிருக்கலாமோ? வெல்லாவிட்டாலும் நானும்கூடச் சாகிறேனென்றுகோபித்துதிர்க்க, அதுகண்டு அரசர்கள் பெண்மிருகத்தை க்கொல்வது நீதியன்றென்று விலக்க, வீரர்களுக்குத்தலைவனாகருச்சரனை ன்பவன் அத்துடனே போர்செய்யவளைந்து வெகுதேசகாலம்போராடப்பெ ண்பன்றி மிகவுஞ் சினந்து அந்தச்சருச்சரனுகிப வேடவீரனைமுட்டிக்கீழே தள்ளிக் கொல்லும்போது அதன்தன்கையிலிருந்த இரும்புத்தடியாலே அத ன்தலைமேலே யோங்கியடித்து அதைக்கொன்று தானும்அத்துடனேவீரசுவ ர்க்கம் சேர்ந்தான்.

பின்புபாண்டியன் மதுரைபோய்ச்சேர்ந்தான். அந்த ஆண்பன்றி விழு ந்து ஒருமலையாய் இன்னமும் பன்றிமலையென்று விளங்குகின்றது அந்தமலை யில் தபோதனர்கள் அளவில்லாதபேர்கள் மோக்ஷமடையத்தவஞ்செய்கிறு ர்கள்என்றுசொன்ன அகஸ்தியமகாமுனிவரைப்பார்த்துகேட்ட முனிவர்கள்

ஐயாமகாரிஷியே, அறிவில்லாத பன்றிவடிவா யிருக்கிற மலையிலேமுனிவர்க ளிருந்து தவஞ்செய்வது என்னகாரணமென்ன? அதற்கு அகஸ்தியமுனிவர் சொல்லுகின்றார் கேளுங்கள் முனிவர்களே! முன்னாளில் மன்மதனேபோலவி ளங்குகின்ற ஒருவிச்சாதரன் புலத்தியமகாமுனிவர்செய்கிறதவத்துக்கு விக் கினமாக வீணையிசை பாடினான், அதைக்கேட்ட புலத்தியமகாமுனிவர் அவ னைப்பன்றியாகச்சபித்தார். அதற்கு அவன்பயந்து ஐயாமுனீந்திரரே? என க்கு எப்போது இந்தச்சாபம்தீருமென்று கேட்க முனிவர்ராஜாதிராஜனை பாண்டியன்வேட்டையாடவந்து பலமிருகங்களையுங் கொன்று உன்னையுங் கொல்வான்பின்புஇந்தவடிவைப்பெறுவாயென்று சொன்னர் அவர்சொன்ன படியே அந்தவிச்சாதரன் பன்றியாய்ப்பிறந்திறந்து பழையவடிவைப் பெற் றான். ஆதலாலே அந்தப்புண்ணியன் உடல்கிடந்தபடியே மலையாய் அதிலே பெரியோர்களெல்லாரும் வாசஞ்செய்கிறார்கள், மதுரேசராகிய சோமசுந்தர க்கடவுளை மங்கேவிரும்பியிருக்கிறர் என்று முனிவர்கள்கேட்ட கேள்விக்கு மறுமொழிசொல்லி இப்பால் அந்த ஆண்பன்றியையும்பெண்பன்றியையும் கொன்றவிடத்திலேயே அவர்கள்போட்டுவிட்டுப் போனபின்பு பன்னிரண்டு குட்டிகளும் திகைத்துத் துன்புற்றுற் தாயென்று இன்னுமொருபன்றியின் பின்னே ஓடும், நல்லநிழலைத்தேடியலையும், பால்குடிக்கபசியுந்தாகமுமிருந்து உபத்திரவப்படும், வெயிலாலே வெதும்பும், இப்படி இந்தக்குட்டிகள் படும் பாட்டை யாராலேசொல்லிமுடியும், அப்போது மீனாட்சிசுந்தரேசர் தமதிச் சைப்படி விமானமேல் வந்தவர் கண்டிரங்கி அந்தக்குட்டிகள் துன்பந்தீர்க்க வெண்ணி அன்புடையதாய்ப்பன்றியின் வடிவுகொண்டுகிட்டிவரகுட்டிகள் கண்டு தந்தாயென்றுகிட்டிமுட்டிமொய்த்துஅதன்முதுகின்மேலேறி எட்டி எட்டிக்கால்களாலுதைத்து நிலத்தைக்கிண்டித்துத் துள்ளிகுதித்து மீண்டு திரும்பி இப்படிப்படுகின்ற குடிகளைப்பார்த்துப் பன்றிகாணைதாய்ப்பன் றியானது தன்மயிர்ச்சிலிர்த்துத் தழுவிமோந்து முலைகுடிக்கச் செய்து அந் தக்குட்டிகளுக்கு மிகுந்தபலமும், வீரமும், ஞானமும், பெருமையும், நல்ல குணங்களு முண்டாகச்செய்து முகமாத்திரம் பன்றி முகமாகவும் உடம்பெ ல்லாம் மனிதவடிவாகவுஞ் செய்து (கங்கைநாயகன் கடவுளர்நாயகன் கயற் கண்-மங்கைநாயகன் கருணையாந்திருவுருமறைந்தருளினர்) ஆகையால் அவ ரே அறிவில்லாத பன்றிவடிவாகி அறிவுண்டாகச்செய்வாராலால் இனிநமக்கு த்தாயுந்தந்தையுமாய்க் காக்கவல்லவரவரேயென்று பின்னும் சொல்லுகிறார்.

பன்றிக்குட்டிகளுக்கு முலைகொடுத்த படலம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

நாற்பத்தாறுவது

பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியபடலம்.

கலிநிலைத்துறை.

தந்தைதாயிழந்தலமருங்குருளையைத்தாபாப்
வந்துநாயகன்முலைகொடுத்தருளியவகையி
தந்தவாறிருமைந்தருமந்திரமாகி
யெந்தையார்சிவபுரம்புகுந்திருந்தவாறிசைப்பாம்.


இதன்பொருள்.

தந்தையையுந் தாயையுமிழந்து வருந்தியிருந்த பன்றிக்குட்டிகளுக்குச் சோமசுந்தரக்கடவுள் தாயாகத் திருவுருவங்கொண்டெழுந்தருளி முலை கொடுத்தருளிய திருவிளையாடலிதுவாகும். இனி அந்தப் பன்னிரண்டு பன்றிக்குட்டிகளும் (பாண்டியராஜனுக்கு) மந்திரிகளாயிருந்து (அரசு செலுத்திப் பின்பு) எமது பெருமானுகிய பரமேஸ்வரன் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ மதுரை கைலாசத்திற்குப் புகுந்து சிவகணநாதராக விளங்கிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

முதற்பெருங் கடவுளாகிய பெருமான் அவ்வாறு திருவுருமறைத்தப்பின்பு அந்தப்பன்னிரண்டு பிள்ளைகளும் பன்னிரண்டு சூரியர்களும் கூடினாற்போல அந்தப்பன்றிமலையிலே எல்லாங்கற்றுணர்ந்து பலகலைகளிலும் வல்லவராய்க்கூடியிருந்தார்கள். அவர்களப்படியிருக்குங்காலத்தில் கடவுளருள் எல்லாவுயிர்க்கும் பொதுவாயின்பம்தருமென்பதை எல்லாருந்தெளிய அங்கயற்கண்ணம்மையானவள் தன்மணாளரான சோமசுந்தரக் கடவுளைப்பார்த்து சுவாமி! உலகத்திலே மிருகங்களிலே கெட்ட அறிவில்லாத மிருகமாகிய இந்தப் பன்றிக்குட்டிகளுக்குத் தாயாய் முலைகொடுத்து விளங்கறிவைப் போக்கி நல்லறிவருளினது என்னகாரணத்திலேயென்றுகேட்க அதற்குச் சோமசுந்தரக்கடவுள் பெண்ணே! எல்லாவேதங்களும் ஆகமங்களும் என்னைச் சகல சீவதயாபரனென்று சொல்லுகிறதிலே எனக்குச் சேதனங்களென்றும், அசேதனங்களென்றும் வேறுபாடில்லை அவ்விரண்டும் பொதுவாகையாலே தாயையிழந்து உதராக்கினிபான பசிபாலேவெந்து வெயில் உடம்பெல்லாஞ்சுடக் காட்டிலேகிடந்துதீய்கிற பன்றிக்குட்டிகளுக்கு மனமிரங்கித் தாயுமாகிப் பால்கொடுத்தோம் அதனால் அளவில்லாத வீரமும் பலமும் நல்லவித்தையும் ஞானமும் பெற்றார்கள். இனி அந்தப்பிள்ளைகள் நம்முடைய பாண்டியனுக்கு மந்திரிகளாகி அநேகநன்மைகளைச்செய்து பின்பு போக்குதற்கரிதான மும்மலங்களையும் போக்கிக்கொண்டு நம்முடைய சிவகணங்களோடு வந்து சேருவார்களென்று நாயகிக்குவிடைசொல்லி அன்றிராத்திரியே பாண்டியன்

கனவிலேவந்து பாண்டியனே! சொல்லக்கேள் இந்தப்பன்றிமலையிலே பன்னிரண்டுவீரர்கள் பேரறிவுடையவர்களாக விருக்கிறார்கள். அவர்களை உனக்கு மந்திரிகளாக வைத்துக்கொள்ளென்று சிவபெருமான் சொல்லியருள, பாண்டியராஜன் அதிக சந்தோஷங்கொண்டு சூரியோதயமானவுடனே தன் மந்திரிகளுக்குத் தெரியச்சொல்லி அந்தப் பன்றிவீரர்களைக் கூட்டிக்கொண்டு வாருங்களென்ன, உடனே மந்திரிகள் அந்தப் பன்றிமலைக்குப்போய் அவர்களைக்கண்டு பாண்டியராஜனைக்காண நீங்கள் வரவேண்டுமென்றுவேண்ட அவர்களும் பாண்டியன்சமுகம்வந்து கூடினார்கள். அப்படி வந்தவீரர்கள் பாண்டியனை வணங்கி நிற்க அவர்களைப் பாண்டியன்பார்த்து மிகவும் அதிசயானந்தங்கொண்டு சோமசுந்தரக்கடவுளருளின்படியே அவர்களுக்கு மந்திரித்தனங்கொடுத்துப் பின்னும் பலவரிசைகளுங்கொடுத்து முன்னே பழையவர்களான மந்திரிகள் பெண்களைவிசாரித்து விவாகங்களுஞ்செய்வித்து இது மிகவும் அழகிதென்று கொண்டாட நடத்திணன் அந்தப் பன்றிவீரர்களும் பாண்டியனுக்கு கண்ணும் கவசமும்போலநடந்து பன்னிரண்டுடலுக்கு ஒருயிர்போல மனவொருமையாய் ஐந்தலைநாகம் விழுங்குமிரைபோல ஒருதன்மையாய்ப் பொருள்வழியைத்தெரிந்து அரசனுக்கீட்டிப் பாண்டியனுக்குக் கல்வியைத்தருகின்ற ஞானம்போல மகிழ்வுண்டாக, பாலுந்தேனும்போல மதிநுட்பமும் நூல் வல்லமையுங்கொண்டு பகைவரு மனங்களிக்கப் பேசும் சொல்வில்வல்லவராய் பிறர்வாய் நுண்பொருளுணர்ந்து அரசனல் மதிக்கப்பெற்றும். பழைய மாணேமென்று இருமாப்படையாமல் குற்றேவலாளிகள்போல மிகவு மஞ்சியொடுங்கி அரசன்வேண்டினதைத் தங்களுக்குவிடமாகவெண்ணி அகலாதணுகாது தீர்க்காய்வார்போல் அரசனிழல்போல எதுசொன்னாலுந் தடை சொல்லாமல் அபராதப்பொருள் பகைவரை வென்றுகொள்ளும்பொருள்கள் இவைகளில்லாமல் விளைநிலத்து வாரப்பொருளே ஈட்டும் பொருள்களாகச் சம்பாதித்து அரசன்மனக்கருத்தைக் கண்ணுடிபோலத் தங்களுள்ளே தெரிந்துகொண்டு அதுநீதியாறற் செய்தும் அல்லவாணல் உயிருக்கானி வந்தாலும் செய்யவொண்ணாராய் இப்படி நடக்கிற பன்னிரண்டுபோர்களும் தானமும் தருமமும் புகழும் பாண்டியனுக்கு வளரச்செய்து திக்குவிஜயங்களும் பண்ணி பின்பு பரமேஸ்வரன் எழுந்தருளியிருக்கின்ற சிவபுரம்போய்க் கணநாதருடனெகலந்து நிலையாக வீற்றிருந்தார்கள். பாண்டியனும் மேலான பதவியடைந்தான்.

பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியபடலம் முற்றிற்று.



நாற்பத்தேழாவது

காரிக்குருவிக்குபதேசஞ்செய்தபடலம்.

கோசீசகக்கலிப்பா.

வரிக்குருகிப்பத்திரற்குப்பலகையிட்டமனிதன்ட
னரிக்குருளைவடிவானவடல்வீரச்சுரசன்டார்
பரிக்குமமைச்சியலரித்தபரசுரைத்தாம்பரபதியார்
காரிக்குருவிகுருமொழிகேட்டருளடைத்தகதைபகர்வாம்.

இதன்பொருள்.

பாணபத்திரரது பாடலுக்குருகி அவருக்குப் பொற்பலகையிட்டருளிபசோமசுந்தரர் பன்றிக்குட்டிகருவமடைந்தசுத்தவீரர்களைபாண்டியனிடத்தில் அமைச்சுரிமைதாங்கி உலகத்தைப்பரிபாலிருக்கும்படி அருள்செய்ததிருவிளையாடலைசொன்மேலும். இனி, பசுபதியாகிய சோமசுந்தரர் ஞாலேபதேசஞ்செய்ய காரிக்குருவியொன்று அவரது திருவருள்பெற்ற மகிமையைச்சொல்வாம்.

பின்பு சுகுணபாண்டியன் கடலாற் சூழப்பட்ட வுலகமெல்லாம் தன் ஒருகுடைநிழலிலேவாழ அரசுசெலுத்திவருநாளில்முற்காலத்திலே ஒருவன் மிகவுந் தருமங்களேயேசெய்துதன்னுலே தள்ளப்படாத ஒருபாவத்தைச்செய்து அந்தப்பாபபலத்தினாலேவந்து அசேதனமான ஒருகாரிக்குருவியாய்ப்பிறந்து காகமுதலான பறவைகளெல்லாங்கொத்தி யமவாதையைப்போலதுன்பஞ்செய்யத்தஞ்சித்துகிற தலையுடனே பறவைகளுக்கெல்லாம் எளிய பறவையாய் அப்பறவைகளாலே உண்டாகின்ற துன்பத்துக்காக பட்டணங்களிலே சஞ்சரிக்கப்பயந்து காட்டிலேபோய்நடைவழியிலே ஒருபுறத்திலேநிற்கிறமரத்தின்மேலிருந்து நாணிச்சோம்பிகெடுமூச்சுவிட்டிருக்கும்போது ஒருவன் விபூதிருத்திராக்ஷங்களணிந்து உள்ளுரும்புறம்பும் பரிசுத்தனுப்கையிற்பிடித்தகுடையுடனே தீர்த்தயாத்திரைசெல்லுகிறவனுப் அந்தமரத்துநிழலிலேவந்தான். அப்படிவந்தவன் அங்குள்ள சிலரைப்பார்த்து எல்லாருக்கும்பேறுதருகின்றதலம்தீர்த்தம்-மூர்த்திகளாகியமதுரைபொற்றமரைசுந்தரேசர் என்றுமூவகைச்சிறப்புமுள்ளது உலகத்திலெங்குமில்லை மற்றையிடங்களிலே ஒன்விவான்றே சிறந்தது இந்தமூவகையாலுஞ்சிறந்தது மதுரையேயல்லாமல் வேறெங்கேயுண்டு ஆதலால் இந்தமதுரேசர் அன்பர்க்களியவராய்நினைத்தவரங்களெல்லாம்வருபிறவிக்கெண்ணுமல் இப்பிறவியிலேதருதலாலே எல்லாக்கடவுளுக்கும் சோமசுந்தரக்கடவுளே அதிகமென்றுன். அதுகேட்டுகொம்பிலிருந்த காரிக்குருவி ஞானம்பெற்று தான்பட்சிபாய்ப்பிறந்ததும் அப்படிக்குப்பிறந்த காரணமுந்தெரிந்து இனி இந்தச்சன்மத்தை நீக்கவேண்டுமென்றெண்ணி இங்கே இந்தப்புண்ணிய புருஷன்சொன்னதே உறுதியென்றுகொண்டு அந்தக்காட்டைவிட்டு மதுரைப்பொற்றமரைத் தீர்த்தத்திலேவந்து ஸ்நானஞ்செய்து மீனுக்ஷிசுந்தரேசரை வலஞ்செய்து மனத்தாலேதாழுது அர்ச்சிக்க இப்படி மூன்றுநாள்கழிந்தபின்பு மீனுக்ஷியம்மையார் சுந்தரேசரைவணங்கி எதிரேநோக்கி சுவாமி! இந்தக்காரிக்குருவி யிங்கேவந்துசேர்ந்ததென்ன காரணமென்றுகேட்க, கடவுள் அதன்வரலாறெல்லாந் தெரியச்

சொல்லி பத்தி நியமம் பூண்ட அந்தப்பக்ஷியின்மேலே தமது கிருபாதிருஷ்டி கொண்டுபார்த்து முன்னை மார்க்கண்டேயருக்கு நித்திபத்துவங்கொடுத்து யமனைவென்றசத்தியஞானமிர்த்பஞ்சயத்தினையுபதேசஞ்செய்தருளினர். அப்படி ஒப்பில்லாத சோமசுந்தார்சொன்ன மந்திரத்தைகேட்டவுடனே சிற்றறிவுபோய் தனதுதுன்பமெலாந்தீர்ந்து சிவபெருமான் திருவடிகளைதியானித்து

எண்ணிலாவுயிர்க்கிறைவபோற்றிவான்
றண்ணிலாமதிச்சடிலபோற்றியென்
புண்ணியப்பயன்போற்றியங்கயற்
கண்ணிநா தநின்கருணைபோற்றியால்.

தெளிதலின்றியேசெய்ததீமையால்
விளியுமென்னையுமாளல்வேண்டுமோ
வெளியமெங்குளாவென்றுதேர்ந்துதேர்ந்
தளியையாவதுன்னருளின்வண்ணமே.

உம்மைநல்லறமுடையநீர்மையா
லிம்மையிம்மனுவியம்பிலையிது
வம்மைநன்னெறிக்கேதுவாதலான்
மும்மையுந்நலமுடையமொய்ம்பினேன்.

என்றுதுதித்து எம்பெருமானே? ஆனலும் எனக்கொருகுறையுண்டு அதென்னவென்றால், கெட்டபறவைகளெல்லாமென்னை வாதைப்படுத்தினதினாலேயுண்டாகிய மானமும் எல்லாப்பக்ஷிகளுக்கும் எளிமையுங்கொண்டேன் ஆகையினாலே என்மானத்தைக்காத்து ரக்ஷிக்கவேண்டுமென்று கரிக்குருவி சொல்ல, அதைச் சோமசுந்தரக்கடவுள்கேட்டு நீ அஞ்சவேண்டாம், இனி உன்னைவாதித்த பக்ஷிகளுக்கெல்லாம் வலியை ஆவாயென்று வரங்கொடுக்க அதற்குக்கரிக்குருவி கடவுளைவணங்கி சுவாமி அடியேனுக்கு இன்னுமொரு வரம்வேண்டும் அதாவது தேவரீர்என்னைவலியவாவென்றுசொன்னது என் குலத்துக்கெல்லாம்வலியன் என்பதுண்டாகவேண்டும் இன்னும்தேவரீர் எனக்குபதேசித்தமந்திரத்தை உச்சரித்து என்கலியும் தீரவேண்டும் என்றுகேட்க, கடவுள் கிருபையுடனே உனக்கப்படியே உண்டாகக்கடவதென்றுசொல்லி மூன்றெழுத்தாகிய அந்தமந்திரத்துக்குதெய்வம்-இருடி-சந்தம் இவைகளெல்லாம் தெரியச்சொன்னர். அப்போது அந்தக்கரிக்குருவிகுருவுபதேசம் பெற்றுத் தன்குலமெல்லாம் வலியனென்றுபெயர்கொண்டு உலகத்திலே நிலைபெறச்செய்து பின்புதானும் அந்தச்சோமசுந்தரக்கடவுளின் திருவடிநிழலைச் சேர்ந்துவாழ்ந்தது உலகத்திலே ஒருவன் சுகமேவாழ்ந்தால் அவன்பந்துக்களெல்லாம் சுகப்படுவார்களென்கிற பழமொழி இந்த ஒருகரிக்குருவியாலே அதன்குலத்துக்கெல்லாம் வலியனென்று பெயருண்டாய் விளங்கினது.

ஈசனடிக்கன்பில்லார்போலெளியாரில்லையாவர்க்கு
மீசனடிக்கன்புடையார்போல்வலியாரில்லையாவர்க்கு
மீசனடிக்கன்பின்மையினாலெளிதாய்த்திரிந்தவிக்கயவா
ஈசனடிக்கன்புடைமையினால்வலிதாயிற்றேயெவ்வுயிர்க்கும்.

கரிக்குருவிக்குபதேசஞ்செய்தபடலம் முற்றிற்று.



உ

சிவமயம்.

நாற்பத்தெட்டாவது

நாரைக்குமுத்திகொடுத்தபடலம்.

கலி விருத்தம்.

அத்திதந்தவிடானமழகபார்
பத்திதந்தபறவைக்குமந்திர
சித்திதந்ததிறனிதுநாரைக்கு
முத்திதந்தகருணைமொழிகுவாம்.

இதன்பொருள்.

அட்டகஜங்கள் தாங்கிய இந்திரவிமானத்திலெழுந்தருளியிருக்கின்ற சோமசுந்தரக்கடவுள் மிகுந்தபத்தியையுடையகரிக்குருவிக்கு உபதேசஞ்செய்தருளிய திருவிளையாடலிதுவாகும் இனி அம்மதுராபுரித்தலைவர் நாரைக்குமுத்திகொடுத்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

மிகுந்தநீர்வளம்பொருந்தியவையையாறுசூழ்ந்தபாண்டிநாட்டிலேதென்றிசையில் சத்திரமென்றொன்றுண்டு அதனிடத்தே தாமரைத்தடாகமொன்றுண்டு அத்தடாகமோ அதிக ஆழமுள்ளது அதிலுள்ள மீன்களையுண்டுகொண்டு சங்குகள்மிகுந்து முத்துகளைப்பெற்றுவளரும் அந்தத்தடாகத்தருகே வெகுநாளாய் வாழ்ந்துக்கொண்டிருந்ததொரு நாரை அந்தச்சென்காநாரைக்குப் பிறவிப்பெருங்கடல் வற்றுங்காலமாக சிலநாள் மழையில்லாமல் அந்தத் தாமரையோடை நீர்வற்றிப்போயிற்று அப்படி நீர்வற்றவேநாரைக்கிறைகிடையாமல் தான் தங்கியிருந்த தடாகக்கரையைவிட்டு மிகவும் பசித்துஇரைதேடியிளைத்து வேறேயொரு அநேகம்பெரியோர்கள் வாசம்பண்ணுகிறகாட்டிலேவந்துவிழுந்தது. அந்தக்காட்டிலே அநேகம் முத்தரான முனிவர்கள்சூழ பரிசுத்தம்பொருந்திய பேரின்பக்கடலிலே முழுகி மனமாசுதீர்ந்து சிவமயமான சத்தியத்தவமுனிவரென்பவர் வாசஞ்செய்யகூப்பிடுதூரவிளவுசதுரமாகச்சுற்றும்படிக் கட்டியுள்ளதாய் அலங்கிருதமான கட்டுக்கோப்புடனே குளிர்ந்தசுத்தியாமாடமும், குளமும், அவ்விடத்தேயுண்டு இன்னும் சண்பகம்-பாதிரிவேங்கை-வஞ்சி-மகிழ்-குராமரா-செம்முருக்கு - மருதமுதலான பலசாதி விருக்ஷங்களும் அங்கேசூழ்ந்திருக்கும், ஆனல் அந்தக்குளத்துக்குப்பேர் அதோதீர்த்தமென்றுசொல்லப்படும், அந்ததீர்த்தக்கரையிலே பசித்திளைத்துவந்த சென்காணுரையானது அமர்ந்து அந்தத்தீர்த்தத்திலே பெரியதபோதனர்களெல்லாரும்வந்து வந்து முழுகியெழும்போது அவர்கள் சடையோடுகூடந துள்ளிவிளையாடுகிற மீன்களைக்கண்டு அச்சோ? இந்தமகாமுனிவர்கள்திருமேனிகளைத்தூண்டுதற்கு இந்தமீன்கள் என்ன புண்ணியங்கள் செய்தனவோவென்றதிசயித்து இவ்வளவுபோக்கியதைகொண்ட இந்தமீன்களை நாம் தின்னலாகாதென்றுவெறுத்து அங்கே சும்மாபட்டினியேயிருந்தது அக்காலத்தில் அங்கேயிருக்கிற சந்நியாசிகளெல்லோரும் அந்தத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து நித்தியகருமானுஷ்டானங்களெல்லாம் முடித்

துக்கொண்டு அந்தச்சந்தியாமடத்திலேயிருந்து முன்னே சுந்தரபாண்டிய னரசாண்ட சோமசுந்தரக்கடவுள் மதுரைபபுராணமாகியசாஸ்திர சாலேஷு பந்தொடங்கிக் கடவுளருள்விளையாடல்களும் அந்தமூர்தநதிதீர்த்தம தலப் பெருமைகளும் அன்பர்க்கெளியாவனென்றும், அவர்கள்சொல்லக்கேட்டி அங் கேயிருக்கு நாரையானது தனதஞ்ஞான நீங்கிப் பாசவினையவிழ்ந்து மெபஞ் ஞானந்தோன்றி சிவபரஞ்சோதியின் திருப்பாதத்தியானதநினபு வாவெ ன்றிழுக்கவெழுந்து உடனே பரமேஸ்வரன் எழுந்தருளி யிருக்கின்ற மது ராபுரிக்குவந்து பொற்றுமரைத் தீர்த்தத்திலேமுழுகி தெய்வயானை தாங்கு கின்ற இந்திரவிமானத்தில் விளங்குகின்ற சோமசுந்தரக்கடவுளை வணங்கிப் பிரதக்ஷணஞ்செய்து கிருபாதிருஷ்டிதோன்றத் தெரிசித்து சந்நிதிமுன்னே யிருந்து கடவுளது கிருபாசொரூபத்தைதத்தியானித்து இப்படிப் பதினைந்து நாளளவும் நியமந்தப்பாமல் பின்னும் அப்படியே நாரைபொற்றுமரைத்தீர்த் தத்திலே முழுகவேண்டிமதிலின்பக்கமாகவரும்போது பசியிளலே வெந்து இந்தத்தீர்த்தத்திலே துள்ளுகின்றவேல்வாள்போன்ற மீன்களைப்பிடித்துண் போமென்று கொஞ்சம் மனதிலேநினைத்துப் பின்னும் கடவுளருளாலே ஞா னந்தோன்றி ஐயோ இந்தத்தருமதீர்த்தத்தின் மீனையும் உண்ண எனக்குப் பசியுண்டாயிற்றே ஐயோ! எனக்கு இந்தப்பிறவி எக்காலந்தீருமென்று துக் கித்துப் பின்னும் சோமசுந்தரக்கடவுள் திருவடித்தியானத்திலே மனம்வை த்திருக்கும்போது தேவர்களும் வேதங்களுங்காணுதவராகிய கடவுள் அந் தநாரை நினைத்தவடிவாய் தன்முன்னேதோன்றி ஓ நாரையே! நீயெனக்கு மிகவும் பிரியவஸ்துவானுய் ஆகையாலே உனக்கிப்போது வேண்டியவர மென் னென்ன, அதுகேட்டுச்சங்காளுரை வணங்கி சுவாமி! இந்தப்பிறவியை த்தீர்த்து உன்னடியார்கள் வாழ்கின்ற சிவலோகத்தை நான்சேரும்படிக்குத் திருவருள்செய்யவேண்டும் இன்னும் என்குலபறவைகளும் வேறுசாதி பற வைகளும் இந்தப்புண்ணியரூபமாகிய பொற்றுமரைத்தீர்த்தத்திலுள்ள மீன் களையுண்டால் எக்காலத்துந் தீராதபாவம்வந்து சம்பவிக்கும் ஆகையாலே எக்காலத்தும் இந்தக்குளத்திலே மீன்களில்லையாகச்செய்யும் வரமும் வேண் டுமென்ன, நல்லதென்று வெள்ளியம்பலவாணர் அந்த வரமிரண்டுந் தந்து மறைந்தருளினர், உடனே நாரையுஞ் சிவலோகமடைந்தது ஐவகை வாத்தி யங்களுமுழங்க விமானத்தின்மேலேறி நான்கு தோள்களும் மூன்று கண்க ளுமாய் பூமழைக்குள்ளே முழுகிப்போய் திருநந்திதேவர்கூட்டத்திலே யிரு க்கலாயிற்று அன்றுமுதல் இன்றளவும் பொற்றுமரைக்குளத்திலே மீன்க ளேயல்லாமல் நீர்வாழுயிர்கள் யாவுமில்லாமற்போயின, ஆனதினாலே இந் தநாரை தன்குலத்தும் வேறுபறவைகளுக்கும் நல்லகதி யடையச்செய்ததெ ன்றுபுகழலாமோ? கடவுளருளேயேபுகழலாமோ! ஆனலும்சிவனடியாரானு ல் அவர்களுக்கு அருமையான பொருள் ஒன்றுமில்லை பின்பு சுகுணபாண்டி யன் நீதியோடு அரசுசெலுத்திப் பின்பு சுவர்க்கமடைந்தான்.

நாரைக்குமுத்திகொடுத்தபடலம் முற்றிற்று.

கூடற்காண்டம் முற்றிற்று.



உ

சிவமயம்.

திருவாலவாயீசர்துணை.

நாற்பத்தொன்பதாவது

திருவாலவாயான படலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பாயுடையார்விடுத்தபழியழல்வழுதியுடல்குளிப்பபதிகமோதுஞ்
சேயுடையாரணங்கிலைக்குஞ்செவியுடையாரளவிறந்ததிசைகளெட்டுந்
தோயுடையார்பொன்னிதழித்தாடையுடையார்விடவரவுநுசுற்றுமாலை
வாயுடையார்புகழ்பாடப்பெறுவதேமல்வேண்டுவதிம்மணிதயாக்கை.

இதன்பொருள்.

ஈச்சம்பாயை ஆடையாகவுடைய சமணர்கள் (திருஞானசம்பந்தப்பிள்ளையார் எழுந்தருளியிருந்த திருமடத்தில்) வைத்த பழிபையுடைய நெருப்பானது (அவர்களுக்குச்சார்பாயிருந்த) கூன்பாண்டியனது உடல்முழுதுஞ் சென்று வருத்தும்படிக்கு (செய்யேனை திருவாலவாய்) என்னுந்திருப்பதிகமோதியருளிய அந்தத்திருஞானசம்பந்தப்பிள்ளையாரதுதேவாரத்திருப்பதிகங்களாகிய தமிழ்வேதத்தை ஆநந்தமாகக்கேட்டுச் சந்தோஷிக்கின்ற திருச்செவியையுடையவரும், விசாலம்பொருந்திய எட்டுத் திசைகளும் ஆடையாகவுடையவரும், பொன்போலும் நிறத்தையுடைய கொன்றைமலர்மாலையைத் தரித்தவரும், விஷம்பொருந்திய சர்ப்பத்தினால் சூழப்பெற்றதிருவாலவாயென்னுந் திருப்பதியை யுடையவருமாகிய சோமசுந்தரக் கடவுளது புகழாகிய திருவிளையாடலைப்பாடும் புண்ணியமுண்டாதல் இந்தமானிட சரீரமானது இன்னும் மிகுதியாக விரும்பத்தக்கதாகும்.

மீனாட்சியம்மையார்.

வேதநெடுமாலாதிவிண்ணோடர்மண்ணோடர்விரதியோகர்
மாதவர்யாவருங்காணமணிமுறுவல்சிறிதரும்பிமாடக்கூட
னாதனிருதிருக்கரந்தாட்டம்மியின்மேல்வைத்தகயற்கட்செல்வி
பாதமலரெழுபிறவிக்கடனீந்தும்புணையென்பர்பற்றிலாதோர்.

(இ-ள்) பிரமனும் விஷ்ணு முதலிய தேவர்களும், பூலோக வாசிகளும் விரதத்தையுடைய யோகியர்களும், பெரியதவத்தை யுடையவர்களும் மற்றவர்களுங்காணும்படி நான்மாடக்கூடலழகராகிய சோமசுந்தரக்கடவுள் புன்சிரிப்போடும் தமதிரண்டு திருக்கரங்களாலுந் தொட்டெடுத்து (திருக்கலியாணசமயத்தில்) அம்மியின்மேல் வைத்தருளிய ஸ்ரீமீனாட்சித்தாயாரதுதிருவடித்தாமரையை எல்லாப்பற்றுகளையுந்துறந்தபெரியோர் தமதுபிறவிப்பெருங்கடலைக்கடக்குந்தெப்பமாகக்கொண்டு துதிப்பார்கள்.

வெண்பா.

ஓலவாய்மறைகளோட வொருவன்றன் னுலகந்தன்னைச்
சேலவாயுழ வுநாரைக் கருளிபசெயலீதம்ம
நீலவாய்மணிநோர்கண்ட நெடியநான்மாடக்கூட
லாலவாயாகச்செப்த வருட்டிறமெடுத்துச்சொல்வாம்.

(இ-ள்.) வேதங்கள் ஓலமிட்டும் உணரக்கூடாத சோமசுந்தரக்கடவுள், மீனை விரும்பிச்சென்ற நாறைக்கு மோகூஷவீடாகிய தமது சிவலோகத்தைக் கொடுத்தருளிய திருவிளையாடலிதுவாகும், இனி, நீலரத்தினம்போலவிளங் குந் திருமிடற்றினையுடைய அச்சிவபரஞ்சுடர் நான்மாடக்கூடலை திருவால வாயாக்கிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

அந்தச் சுகுணபாண்டியனுக்குப்பின்பு சித்திரவிரதன்-சித்திரபூடணன் சித்திரத்துவசன்-சித்திரவருமன்-சித்திரசேனன் சித்திர விக்கிரமன்-இராஜ மார்த்தாண்டன்-இராஜசூடாமணி-இராஜ சார்த்தூலன்-துவிதராஜகுலோத் தமன்-ஆபோதனப்பிரவீணன்-இராஜகுஞ்சரன்-இராஜபயங்கரன் உக்கிரசே னன்-சத்துருஞ்சயன்-வீமதீர்மன்னன்-வீரபராக்கிரமன்-பிரதாப மார்த் தாண்டன்-விக்கிரமகஞ்சுகன்-சமரசோகலாகலன்-அதுலவிக்கிரமன்-அதுலகீர் த்தி என்று இப்படி இருபத்திரண்டுபாண்டியர்களொருவனுக்கொருவன் பு த்திரனுய்மதுரையை அரசாண்டபின்பு அந்த அதுலகீர்த்திப்பாண்டியனுக் குமகனுன கீர்த்திபூடண பாண்டியன் மதுரையை ஆளுங்காலத்தில் கடல்க ளேழும் தமக்குக்காவலான கரையைக் கடந்து பொங்கி முழுதும் வெளியே வந்து முழங்கிவிரைந்து அதிவேகமாய் மேலுலகமும், இந்தஉலகமும், எட்டு யானைகளும், எட்டு மலைகளும், சக்காவாளகிரியும் மறையப் பிரளயக் காலம் வந்துகவிந்துகொண்டது அந்தமகாப்பிரளயமானவெள்ளத்திலே எல்லாவுல கங்களும், சப்ததீவுகளும், இவைகளிலுள்ள சராசரங்களும்மலைகளுமழிந்து போயின, மீளாட்சியம்மைதிருக்கோயிலும் இந்திரவிமானமும்பொற்முமரை க்குளமும்சோமசுந்தரக்கடவுள் திருவிளையாடல்களிலுலேயுண்டான இடப மலை-யானைமலை-நாகமலை-பசுமலை-பன்றி மலையாகியஇவைகளழியாதிருந்தன பின்பு அந்தப்பிரளயம் வற்றிப்போகக்கண்டு முதற்கடவுளான சிவபெருமா ன் பழையபடி உலகங்களுமுயிர்களுமுண்டாகச்செய்து சோமசூரியாக்கினிக ளான மூவர்குலத்துத்தமிழ்நாட்டு மூவரான சேரசோழபாண்டியர்களையுமு ண்டாகச்செய்து சந்திரகுலத்தரான பாண்டியரில் அறுபத்துநாலுகலைகளுங் கொண்டதொருசந்திரன்னென்றுசொல்லும்படி வங்கியசேகரபாண்டியன் பிற ந்துதங்கள் கடவுளின் திருக்கோயிலைச் சுற்றிக்கொஞ்சமாகப்பட்டணை முண் டாக்கி அதிலிருந்து நரசிங்க மூர்த்திபோல உலகாண்டு வருகிறகாலத்திலே அந்த வங்கியசேகர பாண்டியன் மனுநீதிப்படியே செங்கோல் செலுத்துகிற திலே கலிதோஷந்தீர்ந்து அவனுடல்லாஞ் செழித்து விளைவுமிகுதியாய் பல்வகை வளங்களும்பெருகி ஜீவராசிகளும் அதிகமாயின அக்காலத்திலே அந்தப்பாண்டியன் சோமசுந்தரக்கடவுள் திருக்கோயிலுக்குபோய் வணங் கி சுவாமி உம்முடைய அருளின்பலத்தாலே இந்தப்பூமிபாரந்தாங்கிவந்தேன்

எனக்கிப்போதொரு குறையுண்டாயிற்று அதாவது ஜனங்களதிகமாய் இருக்க இடம்போதாமல் நானும் உம்முடைய திருக்கோயிலுக்குள்ளேவந்துகுடியிருக்கும்படியாய் கேரிட்டதாகையாலே இவ்வளவுமனிதர்களுக்கும் இருக்கத்தக்கதான பட்டணமொன்றுண்டாக்க நான்வேண்டினால் முன்னேயோர்கள் கட்டியிருந்த அளவுதெரியவில்லை ஆதலால் இப்போது முன்னிருந்தபட்டணத்தினளவிப்படியென்று எனக்குத்தெரியக் காட்டவேண்டுமென்று மிகவும் வேண்டினான். அப்போது அணுவுக்கணுவாய் இந்திரவிமானத்திலுழந்குளியிருக்கிற சோமசுந்தரக்கடவுள் பாண்டியனுக்காக அன்புக்கெளிய சித்தராகதிருவுருவங்கொண்டு கிருஷைக்கடலாகக்கடிசூத்திரம்-கோவணம்-பூணூல்-சன்னவீரம்-குழை-குண்டலம்பாதகிண்கிணி-சிலம்பு-கங்கணமுதலானவெல்லாம் பாம்பாக அணிந்துகொண்டு வந்து பெரிய மண்டபத்திலேன்று தமதுகையிற் கங்கணமாயிருக்கிற ஒரு ஆலவாய்ப் பாம்பைப்பார்த்து நீ இந்தப்பாண்டியனுக்கு இந்தப் பட்டணத்தினளவைத்தெரிந்தளந்து காட்டக்கடவாயென்ன அதற்கு அந்த ஆலவாய்ப் பாம்பானது சித்தர்பாதங்களை வணங்கிசுவாமி இனி இந்தப்பட்டணம் என்பெயராலே விளங்கச்செய்யவேண்டுமென்ன அப்போது சித்தரானக்கடவுள் அப்படியே யாகவென்றருள்செய்ய உடனே அந்த ஆலவாய்ப்பாம்பு விரைவிலேசென்று கிழக்குத்திக்கிலே தன் வாலைநீட்டிப் பட்டணத்தைதவலமாகப் பூமியிற்படிந்து உடலைவளைத்து வாயிலே வாலைவத்துப்பாண்டியனுக்கு அளவுதெரியக்காட்டி மீண்டு சித்தர்கையிற் கங்கணமாகவந்து பொருந்திற்று. அப்போது சித்தராகியகடவுள் தம்முடைய திருக்கோயிலுக்கெழுந்தருளினர் பின்புபாண்டியன் அந்த ஆலவாரிசூழ்ந்தார்போலாகித் தெற்கேதிருப்பரங்குன்றமும், வடக்கே இடபமலையும், மேற்கே திருவேடகமும், கிழக்கேதிருப்பூவணமும் இப்படிநான்குதிசைக்கும் நான்குவாயிலெல்லையாகவகுத்து அந்தமதிலுக்குகாலவா யென்றுபெயரிட்டு முற்காலத்துள்ளபடியே மதில்கள் - மண்டபங்கள்-கோபுரங்கள்-வீதிகள் சோலைகள் முதலானவெல்லாம் புதிதாக அமைத்துக்கடவுளுக்கும் பெரிய கோளகை-கிரீடம்-திருவாபரணங்களெல்லாம் ரத்தினங்களாலும்தங்கத்தாலும் வெவ்வேறேசெய்து பின்னும் பலவங்கையான குடிகளெல்லா நிரம்பச்செய்து இந்திரலோகத்திலும் அதிக சிறப்புள்ளதாக எல்லாவளங்களும் பெருக முன்னுளிலே குலசேகரபாண்டியன் செய்த மதுரையை இக்காலத்தில் திருவாலவாயென்று பெயர்விளங்கச்செய்தான்.

திருவாலவாயானபடலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஐம்பதாவது

சுந்தரப்போரம்பெய்ததடைலம்.

அறுசீராடியாசிரியவிருத்தம்.

அங்கணைநூகமணிக்தருள்வடிவமடைந்தசகமகிழக்
கங்கணைவிடவரவங்கொடுகடிதகர்கண்டருண்முறையிதுவாஞ்
சங்கணிகுழையினர்பஞ்சவன்வழிபடுதம்பெயரெழுதியகூர்
வெங்கணைகொடுவளவன்படைமுடுகியவென்றிபையினிமொழிவாம்.

இதன்பொருள்.

அழகிய கண்ணுளராய் விளங்கும் சோமசுந்தரக்கடவுள் சர்ப்பங்களை ஆபரணமாகவணிந்த சித்தவடிவந்தாங்கிவந்து பாண்டியன் சந்தோஷிக்கும் படி தமது திருக்கரத்தில் தரித்திருந்த கங்கணமாகிய பாம்பைவிடுத்து மதுராபுரியின் எல்லைகண்டருளிய திருவிளையாடலைச்சொன்மேலும். இனி சங்கக்குழையினையணிந்த அந்தப்பரமேஸ்வரர் பாண்டியன் வழிபடுகின்ற தம்முடைய திருப்பேரெழுதிய கூர்மையுடைய வெவ்விய பாணங்களை விடுத்துச் சோழனுடையசேனை முறிபடச் செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றேம்.

அந்த வங்கிய சேகரபாண்டியன் வெண்கொற்றக்குடை நிழலிலேபூமி தேவியும் லட்சுமிதேவியும் சரஸ்வதிதேவியும் நிலைபெற்றுவாழுங்காலத்திலே அநேகம் யானைப்படைகள்சூழ எதிர்த்தபகைவரை வென்றுதன்பாதங்களை வணங்கச்செய்து வெற்றிமாலைசூடிய விக்கிரமசோழனென்பவன் இந்தச் சந்திரகுலத்தானான வங்கியசேகர பாண்டியனை வெல்லு முபாயங்கொண்டுகடல்போலுந்சேனைகள் சூழ கஜபதி-நரபதி-துரகபதி முதலான வடதேசத்து ராஜர்களுடனே பலவாத்தியங்களு முழங்கத் தேர்மேலேறி நடத்திக்காவேரியாற்றினருகேவந் திறங்கிக்கொண்டு வலீசெய்யத் தொடங்க அவன்சேனை வீரர்கள் கோபித்துப்பாண்டிநாட்டிலுள்ள பசுக்களை ஓட்டிக்கொண்டுவந்து குலம்புகண்பண்ணியும் குளங்களிலிகளையுடைத்துவிட்டும் அந்த ஆலவாய்க்குவருகிற பலசாக்குகளையும் வழிகட்டி அடித்துக்கொள்ளையிட்டும் வருவார் போவார்களை வரவும்போகவு மொட்டாமல் வாதைப்படுத்திப் பயங்காட்டியுமிப்படிச் சண்டைக்கு ஆரம்பித்து மதுரையாகிய ஆலவாயைக்கிட்டினர்கள். இப்படி இவர்கள் பலாத்காரம் பண்ணுவதைப்பாண்டியன் கேள்விப்பட்டு இனியென்னசெய்வோம் சோழன்சேனையோ அளவில்லை அவைவந்துசண்டை செய்யத்தொடங்கினால் எய்ஞல் வென்றுமுடியாது, ஆகையாலே இந்தச்செய்தியை சந்திரனையும் கங்கையையுந் தரித்த சடாதரரான கடவுள் திருவடிக்கு முன்னேநின்றுசொல்லி வரம்பெறுவோமென்று திருக்கோயிலுக்குப்போய்க் கடவுளை வணங்கிக் கிருபா சொரூபியான தெய்வமே? அடியேனேதி விக்கிரமச்சோழன் சண்டைசெய்து வெல்ல அன்னியதேசத்தரசர்களுடன்வந்து கூடாரங்களடித்துக் கொண்டிறங்கினன் அவன் சேனைகளோடெதிர்த்துச் சண்டைசெய்யத்தக்க சேனைகளெனக்கில்லை இன்னும் அவன் அவ்வளவுசேனைகளுடனே வந்துபுகுந்தால் எனக்குக்காவலாக வேறேகோட்டை



புண்டோ? ஓகோ மதப்வமே! இனிமேலெனக்கு நிகர்ன நதியென்று வேண்ட அதற்குக்கடவுள் ஓய் பாண்டியா! நீ முந்திசென்று சண்டைபண்ணுகிற படியே சண்டைபண்ணு, நாமும் பின்னே உனக்குத் துணையாய்க்கூடவேவந்துநீயே வெற்றி கொள்ளும்படி சண்டைசெய்கிறோம், பயப்படாதையென்று ஆகாசவாக்காகச் சொல்ல அவ்வார்த்தையைப் பாண்டியன்கேட்டு மனங்களித்து ஆனந்தக்கண்ணீரொழுக இரண்டுகைகளையுந் தலைமேலேகுவித்து வணங்கிக்கொண்டு வெளியே புறப்படும்போது ஒரு தூதன்வந்து ஐயா பாண்டியமகாராஜனே விக்கிரமசோழனுடைய சேனைகள் நம்முடையஇடபமலைக்கருகே வந்துவிட்டதென்று சொல்ல அதுகேட்டபாண்டியன் பலவாத்தியங்களும் முழங்க வலம்புரிச்சங்கமூத தேரைமனவேகமும்பின்னிடும்படி சாரதிசெலுத்த ரதகெஜதுரகபதாதிகள் சூழ தன்னுடைய திருவாலவாய் மதிலைச்சுற்றினகழிபோல வந்துவளைந்த சோழனுடைய சேனைகளுக்கெதிரேவஞ்சிமாலை சூடிக்கொண்டுசேனைகள்நெருங்கஅந்தஇருநிறத்துசேனைகளும் யுத்தகளத்தையடைந்து அநேகசபதங்கள்சொல்லிஒருவருக்கொருவராக தேர்வீரருடனே தேர்வீரரும் யானைவீரருடனே யானைவீரரும், குதிரைவீரருடனே குதிரைவீரரும், வில்லாளிகளுடனே வில்லாளிகளும்,வேலாளிகளுடனேவேலாளிகளும், கத்திகேடகக்காரர்களுடனே கத்திகேடகக்காரர்களும்,சிங்கங்களுடனே சிங்கங்களெதிர்த்தாற்போலச் சண்டைசெய்ய, அப்போது பாண்டியன் தேர்மேல்வருகிற சோழனுடனே சண்டைசெய்யத் தொடங்கினதுசந்திரனும்சூரியனுமெதிர்த்ததே சரியென்றுசொல்ல துள்ளுகின்ற குதிரைகளனுமானிப்பும், மதமழை பொழிகிற யானைகளின் சத்தமும், ரதங்களிரைசையும், வீரர்கள்கர்ச்சனையும், அவர்கள் வீரகண்டாமணிச்சத்தமும், பலவாத்தியங்களினுடைய ஓசையும்கூடி எங்குங்கல்லென்றொலிக்க கடல்நீரைக்குடித்துவந்து மேகங்களொன்றுடனே யொன்றெதிர்த்தாற்போல வெதிர்த்து இடியேறுபோலமுழங்கி நீண்டமலைப்பாம்புபோலத் தொங்குகிற கைகளுடனே ஒன்றுளதிர்த்து இருப்புலக்கைகளையெடுத்து ஒன்றையொன்றடித்து ரத்தங்கள்பெருகியோட யானைகள்உயிர்சோர்ந்து உழுகின்றன, தானைப்தபாணங்களைத் தடுத்துப் பின்னும் பாணங்களைவிட்டு மார்பைத் துளைசெய்யக்கண்டு சிரித்து அவன்வீரத்தை மெச்சுவான். மற்றொருவன் மிகவுங் கூறியதானவேலையெடுத்தெறிய அந்தவேலை இன்னுமொருவன் தன்கைவாளாலே வெட்டித் துண்டாக்கினன்.

இப்படி யொருவர்க்கொருவர் பின்வாங்காமற் போர்செய்யும்போது மிகுந்தசேனைகளையுடைய சோழராஜனுக்குத் துணையாகவந்தவடதேசத்தரசர்கள் உலகமுடியுங் காலத்திலே சூறைக்காற்று வீசக் கொதித்தெழும்பினவடவாக்கினிபோல கொதித்துப் போர்மூண்டுசெய்யும்போது பாண்டியன் சேனைகள் நிலைகொள்ளாமல் பளபளவென்று மின்னுகிற கத்திகளுடனேவில்லுகளுமிழந்து எறினதோற்களுங்குதிரைகளுமிழந்துவீரர்களும்பாகர்களும் ஓடும்போது அவர்களை சோழராசன்கண்டுபாண்டியன் போர்செய்யமாட்டாமல்தோற்றனென்று இனி வெற்றிதன்னதென்று நினைத்து மிகுந்தகெருவத்துடனே தன் வெற்றிச்சங்கையெடுத்தூதினன் அப்படிப்பட்ட சமயத்திலே

முன்னுளிலே தண்ணீர்ப்பந்தல் வைத்தும் மடுவிலே தள்ளியும் ஜெயம்பெறச் செய்தகடவுள் அப்போதுவந்தபடியே இப்போதும் ஒருவேடராஜனுக வடிவங்கொண் டெழுந்தருளிப்பாண்டியன் சேனைக ளோடாமனிற்கச் செய்து தாமோசுஷகாராய்க்கைவில்லவளைத்துச் சுந்தரேசனென்றுதமதுபேரெழுதின கூறிய பாணங்களைப் பிரயோகித்துத் தானே வென்றதாகச் சங்குமுழக்கின சோழன் சேனைகளோடும்படி செய்யும்போது அவர்விடுகிறபாணங்களில் ஒவ் வொரு பாணம்நூறு நூறு மகாவீரர்களைக்கொல்லக்கண்ட சோழன் இதெ ன்னபுதுமைஒருபாணம் நூறுபேரைக் கொல்வதற்குக் காரணமென்ன அந்த பாணத்துக்கிவ்வளவு வலிமையெப்படிவந்ததிதன்று சந்தேகித்து அந்தப் பா ணத்திலொன்றைக் கொண்டுவாச்சொல்லி அதிலெழுதி யிருக்கிற பெயரை வாசித்து இதுசுந்தரேசனென் றெழுதியிருக்கிறதிலேபாண்டியனுக்குத்தி ருவாலவாய்க்கடவுளே துணையாகவந்து போர்செய்தால் நம்மாலே வெல்லக் கூடுமோவென்று பயந்து தனது காவிரிநாட்டைக் குறித்து மீண்டுசெல்லும் போது அவனுக்குத்துணையாகவந்த வடதேசத்தரசர்கள், துருக்கர்கள் ஓட் டியர்கள் முதலானெ வெல்லாரும்வந்து நில்லும் சோழமகாராஜனே யென்று கோபங்கொண்டு வைது நாங்களெல்லாமிருக்க நீதோற்றோடினுல் உன்கருத் தும் ஆண்மையும் புகழும் எத்துடன்சேரும் நீ ஓடவேண்டாம் வாவென்று கோபித்து இடிபோல்முழங்கிப் பாண்டியன்சேனைமேல்விழுந்துகும்புகும்பா கநின்று விற்களைவளைத்துக் கொடிய பாணங்களைப் பந்திபந்தியாக விட்டுச் சேனைகள்தெரியாமல் மறைத்துமூட அதுகண்டு முன்காயம்வாங்கிவேடவீர ணுகநின்ற சோமசுந்தரக்கடவுள் முன்னேதாம்கொண்டமகாமேருவைப்போ ன்ற வில்லைவளைத்துஒருபாணத்தைதவிட்டு அவர்கள்விட்ட பாணங்களெல்லா வற்றையும் அறுத்துத்தொலைத்துப் பின்னும் பத்தம்பைவிட்டுஆயிரந்தேரை யுடைத்து, மறுபடியும் பத்தம்பிறலே ஆயிரம்யானைகளைக்கொன்று பத்தம் பிறலே ஆயிரம்குதிரைகளையறுத்து பத்தம்பிறலேஆயிரம்வீரர்களைக்கொ லைசெய்து நூறம்புவிட்டு பதிறுயிரங்குதிரைகளைக்கொன்றுபின்னும் நூறம் பிறலே பதிறுயிரம் யானைகளைக்கொன்று, நூறம்பிறலே பதிறுயிரம் தேர் களையழித்து, நூறம்பிறலே பதிறுயிரம் மகாவீரர்களைவென்று, ஆயிரம்பா ணங்களைவிட்டு நூறுயிரங் குதிரைகளைக்கொன்றுபின்னும் ஆயிரம்பாணங்க ளாலே நூறுயிரம் யானைகளைக்கொன்று ஆயிரம்பாணங்களாலே நூறுயிரம் தேர்களையழித்து ஆயிரம்பாணங்களாலேநூறுயிரம்பதாதிகளைக்கொன்றுஇ ப்படிச்சண்டைசெய்ய தோள்களறுபட்டன, கால்கள்முறிபட்டன, தலைகள் மண்ணிலேபடிந்து விழுந்தன, ரத்தவெள்ளங்கள் இறந்த பிணங்களை இழுத் துக்கொண்டோடின, அவர்கள் புனைந்துவந்த தும்பைமாலைகளற்று விழுந்த ன, ரதகெஜதுரகபதாதிகளெல்லா மடிந்தன, மிஞ்சின சேனைகள் எதிர்நிற்க அஞ்சியொதுங்கிபோயின, பின்னும் உயிர்கள் சூரியமண்டலத்தின் வழியே முன்னேதாமுங் கூடப்போவதுபோல அநேகந் தலைகளறுபட்டு உயரச்செல் கின்றன, சிலகுறைத்தலைகள் கூக்குரலிட்டுக் கூத்தாடக்குற்றுயிரான உடல் கள் கைகளைக்கொட்டித் தாளம்போடுகின்றன. ஒருபுறத்தில்பூமிபிலே விழு ம்படி தமதுதலையை யறுத்தவர்களை தலைபோனவுடல்கையிலிருக்கிற வேலா

லே குத்தித்தள்ளுகின்றன, ஒருபுறத்தில்சிலகவந்தங்கள் எதிர்நின்று மார் பைத்தட்ட அற்றதலைகள் வாயைமென்று பல்லைக்கடித்துவிழுந்து கொக்கரிக் கின்றன. ஒருபுறத்தில் இரண்டு தலைகளற்றுவிழ அத்தலைகள் ஒன்றற்கொ ன்றுமுகப்பழக்கத்திலே வெண்பற்கள்தான்றச் சிரித்துப்பிரியாமல் கூட வேவந்தாயேயென்று அன்புகொண்டு எதிரேசொல்லிச்சேர ஒன்றுக்கொன் றுமோந்துவாடிநின்றன. பின்னும் ஆகாயத்திலேபறக்கிறபருந்துகளும், காக ங்களும், கழுகுகளும் அந்தபோர்க்களத்திலே இறந்து விழுந்தவர்கள் உடல் களின்மேலே வேர்வைபோக விசிறிகள்கொண்டு விசிறுகிறதுபோலச் சிறகடி த்துக்கொள்வன. ரத்தவெள்ளங்கள் இழுக்கமிதந்தோடுகிற தேர்களுடனே பேய்ப்பிள்ளைகள்கடலிலே கப்பல்களைத்தள்ளிச்சாய்க்கிற மகாமீன்கள்போல கீழேமுழுகி மேலேதான்றுகின்றன ஒருபுறத்தில் இறந்தவருடல்களை ஒரு புறங்கத்தியறுத்திழுக்க ஒருபுறங்கழுகுபருந்து காகங்கள்கொத்திக்கொத்தி யிழுக்க ஒருபுறம் பூதங்களிழுக்ககூளிகள் மொய்த்துக்கொண்டொருபுறமி ழுக்க ஒருபக்கத்தில் வால்களெல்லாம் அகப்பைகளாகவும் முறம் செவிக ளாகவும், கொம்பின்முத்துகள் அரிசிகளாகவும், கால்கள் உரல்களாகவும், கொம்புகள் உலக்கைகளாகவும், உடல்கள் பானைசட்டியாகவும் இரத்தமே நெருப்பாகவும், மத்தகம் அடுப்பாகவும், இப்படி யானைகளிறந்த விடங்கள் மடைப்பள்ளிபோலாக ஒருபுரத்தில் பிணங்களாலே, கரைகட்டி ரத்தவெள் ளத்தைத்தேங்கச்செய்து குடிக்கப்போகிற பேய்களை உதைத்துத் தள்ளிவி ட்டு முன்னே வையையாறு பெருகிவர மண்டிபோட்டிருந்து குடித்த பூதத் தைப்போலவே ஒரு பெரியபூதம் அந்தக்கரையை யுடைத்துவிட்டு நிணமுங் கொழுப்புமாகவருகிற ரத்தவெள்ளத்தைக் கையாலணைத்துக்கொண்டு எதி ரேயிருந்து குடிக்கின்றது.

இப்படியாகத் திருவாலவாய்க்கடவுள் சுந்தரனென்று பெயரழுதி யிருக்கிற பாணங்களைப் பிரயோகிக்க அந்தப் பாணங்களாலே சோழனுக்கு த்துணையாகவந்தவர்களும் எட்டிமரத்தைச்சேர்ந்த சந்தனமரங்களும் கூடக் காட்டுத்தீயால் வெந்ததுபோலமடிந்தார்கள் கடவுள்பாணங்களாலிறந்தோர் உடல்களையுண்ணமொய்த்த கூளிகள்பருந்துகள் காக்கைகள்கழுகுகள் முத லானவைகள் ஒன்றற்கொன்று எனக்குனக்கென்று சண்டைசெய்யத்தொடங் கின, இப்படிவேடவீரழிகியகடவுளாலே தன்சேனைகளெல்லா மடியக்கண்ட சோழன் பகைவர்களையும் மிஞ்சினசேனைகளுஞ்சூழ்ந்துபின்னைவர தான்மு துகிட்டோடிப்போனான். பின்புவில்லுடனே யிறங்கினமேகம்போன்றகடவு ள்ஜயங்கொண்டபாண்டியன் முகத்தைப்பார்த்துப் புன்னகைசெய்து தமது திருவுருமறைந்தருளினார். அப்போது வேப்பமாலையணிந்த பாண்டியன் தன தது வெற்றிச்சங்கைவாயில் வைத்தூதி முழக்கிப் பட்டத்தியானமே லேறிக் கொண்டி பல்லாண்டு மங்களங்கள்பாடத் திருவாலவாய் நகரையடைந்தான். அப்படிப்பட்டணத்துள்வந்துகடவுளுக்குப் பொன்னுலும் ரத்தினங்களாலும் ஆபரணங்கள்செய்துதரித்து நீண்டவில்லும் சுந்தரனென்னும் திருப்பேரெழு தின அம்பும்பண்ணிச்சாத்தி வங்கியசேகரபாண்டியன் கடல்சூழ்ந்தவுலகமெ ல்லாம் தருமநீதிபெருக அரசாக்ஷிசெய்திருந்தான்.

சுந்தரப்பேரும்பேயிதுபடலம் முற்றிற்று.

ஐம்பத்தொன்றுவது

சங்கப்பலகைதந்த படலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வேடுருவாகிமேருவில்லிதன்னுமக்கோலெய்
தாடமாடித்தென்னனடுபகைதுரந்தவண்ணம்
பாடினஞ்சங்கத்தார்க்குப்பலகைதந்தவாறோடோப்பக்
கூடிமுத்தமிழின்செல்வம்விளக்கியகொள்கைசொல்வாம்.

(இ-ள்.) மேருமலையை வில்லாகக்கொண்டருளிய சோமசுந்தர் வேடுருவந்தாங்கி, தம்மூடைய திருப்பேரெழுதிய அம்புகளைத்தூவி வெற்றியுண்டாகச் சண்டைசெய்து பாண்டியனது பகையை யொழித்த திருவிளையாடலைச்சொன்னேம். இனி சங்கப்புலவர்களுக்கு சங்கபபலகைகொடுத்து அந்தபுலவர்களோடுதாமுமொருவராக எழுந்தருளியிருந்து (இயலிசைநாடக மெனும்) முத்தமிழின் செல்வங்களைவிளக்கியருளிய திருவிளையாடலை சொல்வாம்.

அந்த வங்கியசேகரபாண்டியன் நீதிசெலுத்தி அரசாளுங்காலத்தில் தாமரைப்பூவாசனததிலே வாசஞ்செய்கின்ற நான்முகனை பிரமதேவன்ஸ்ரீகாசிப்பட்டணத்துக்குவந்து பத்து அசுவமேதயாகஞ்செய்து பெரியோர்களெல்லாம்சந்தோஷிக்க வேதாகமப்படிமுடித்தபின்பு ஸ்நானம்பண்ணுதற்குத் தன்பத்தினிகளான வாணி-சாவித்திரி-காயத்திரியென்னும் மூன்றுபேர்களுடனேகூடிக் கங்கையைநோக்கிப்போகும்போது வழியில் அந்தமூவரிலொருத்தியான வாணியென்பவள் ஆகாயமார்க்கத்திலேசஞ்சரிக்கிறவளான ஒருவிஞ்சையர்கன்னிபானவள்பாடுகின்றகானத்திலேதன்மனத்தைச்செலுத்திக் கூடப்போகாமலங்கேதானேநிற்க பிரமதேவன்மற்ற இருவருடனே கங்கைக்குப்போனபின்பும் வாணிவராமல் காலதாமதஞ்செய்யபிரமதேவன் ஒன்றும்யோசியாமல் அந்தஇருவருடனேகூடிக்கங்கையில் ஸ்நானஞ்செய்து கரையேறும்போது வாணிவந்துஎன்னையல்லாமல்நீஎப்படிஸ்நானஞ்செய்யக் கூடுமென்றுகோபிக்க அதுகேட்டபிரமதேவன் ஓவாணியே! குற்றம்உன்மேலிருக்க நீயென்னை வீணேகோபித்தகுற்றந்தீர நீ அளவில்லாத மனிதப்பிறவிபிறந்து இந்தக் குற்றந்தீரக்கடவையென்று சாபங்கொடுக்க அந்தச் சாபத்தையேற்ற வாணியானவள் மிகவும்பயந்து புலம்பித் துக்கித்து சுவாமிபிறப்பில்லாத வழக்குப்பாரியானநான் இப்படிமனிதப் பிறவியிலகப்பட்டு மயங்கலாமோவென்றுகேட்க அதற்கு அந்தவெண்டாமரைச் செல்வியானவாணியினுடைய துன்பம்போகவெண்ணிப்பிரமதேவன் ஓவாணியே! உன்சொரூபமான ஐம்பத்தோரெழுத்தில் அகரமுதலாக நாற்பத்தெட்டு எழுத்துகளும் நாற்பத்தெட்டுப் புலவர்களாக உலகத்திலே பிறக்கக்கடவது, அந்தந்த வருக்கங்களிலு மற்றவைகளிலுமேறி அந்தப்படியேயாய் இன்னும்வெவ்வேறு உச்சரிப்புகள் தோன்றவுஞ்செய்கிற அகரவுயிர்க்கு முதலாக விளங்குகின்ற கடவுள் திருவாலவாய்க் கடவுளேயாகலான் அக்கடவுளும் ஒருபுலவருருக்கொண்டு சங்கப்பலகையேறியிருந்து நாற்பத்தொன்பதின்மராகி மற்ற நாற்பத்தெண்மருக்கும் உள்ளேநின்று, ஞானந்தோன்றச்செய்து அங்கேமுத்தமிழ்ப்புலமைபு நிரம்பச்செய்வாரென்று பிரமதேவன்சொல்ல அப்படியே அந்த



நாற்பத்தெட்டெழுத்தும் உலகத்திலே வெவ்வேறே மனிதஜாதிகளாகப் பிறந்து பலவகைபான மாட்சிமைகொண்ட சாஸ்திரங்களின் வகைகளெல்லாந் தெரிந்து தகுதியான தென்கலையிலேநுண்ணறிவுடையபாய் அத்தமிழ்ப்புலமையில் தலைமைபானவர்களாய் உயர்ந்துவயிராக்கியத்தினங்கள்பதித்த ஆபாணங்களையல்லாமல் ஸ்ரீருத்திராக்ஷமாலிகைகளும் பூணுகின்றதுல்லியமானதிருநீறணிந்த திருமேனியை யுடைபவர்களாய்ச் சோமசுந்தரக்கடவுளுக்குத்தாங்கள்வழுவறக்கற்றதமிழ்மாலைசூட்டுவதேதயன்றி ஆப்ந்துகொண்டுவந்த பூமாலைகளுஞ்சூட்டி அருச்சனைசெப்வார்கள் பின்னும் ஊர்கள்தோறும்போய்தங்கள்புலமைத்தனத்தாலே ஜெயங்கொண்டு பொருளையாற்று வளங்கொண்டபாண்டிநாட்டில்வந்து உலகமெல்லாம் ஆளுகின்ற செல்வச்சொருப்பானிறைந்திருதிபோலும் பாண்டியன்செங்கோல்செலுத்துகின்றமதுரைப்பதியைநோக்கி அவர்கள் வரும்போது பலகலைப்பயனன அற்புத மூர்த்தியென்னுந் திருவாலவாய்க்கடவுள் தாமும் அங்கே ஒரு புலவராகிப் பாதங்கள் நிலத்திலேபடிய வந்துகூடி அங்கேவருகின்ற புலவர்களைப்பார்த்து நீங்கள்யார் எங்கேயிருந்து வருகிறீர்களென்று கேட்க, அப்போதவர்கள் ஐபா நாங்கள் புலவர்கள், சகல பாவங்களையுந் தீர்க்கத்தக்க பொருளை நாட்டுக்குப்போக வருகிறோமென்றுசொல்ல அப்போது, தனியேவந்தபுலவர் அந்தப்புலவர்களைப்பார்த்து நீங்கள் தமிழ்வளம் பொருந்திய திருவாலவாயில்விளங்குகின்றனங்கள் கருணைமூர்த்தியை வந்து வணங்கவேண்டும், ஆதலால் என்கூடவாருங்களென்ன அதற்குப்புலவர்கள் ஐயாநீரே எங்கள்வினைகளெல்லாம் தீர்க்கும்சோமசுந்தரக்கடவுளென்றுகொண்டாடதனிப்புலவர் அந்தப்புலவர்கள்சூழ திருக்கோயிலுக்குப்போய் மீனாக்ஷிசுந்தரேசரைவணங்கச்செய்துமறைந்துபோனர்.

பின்புவந்த சான்றோர்களாகிய புலவர்கள் இந்திரவிமானக்கடவுளைத் தனித்தனியே தமிழ்ச் செய்யுள்கள் பாடித்துதித்து வணங்கிக்கொண்டு வெளியேவந்து பாண்டியனைப்போய்க்கண்டார்கள். பாண்டியன் வந்தபுலவர்கள் கல்வி கேள்விகளைத்தெரிந்து இவர்கள் ஒழுக்கத்தாலுயர்ந்த சான்றோர்களென்று மதித்து மனமகிழ்ந்து சோமசுந்தரக்கடவுளின் திருக்கோயிலுக்குவடமேற்றிசையில் ஒருசங்கமண்டப முண்டாக்கி அப்புலவர்களுக்குத் தகுந்த சிறப்புகளுஞ்செய்து நீங்கள் இந்தமண்டபத்திலேதானே அமர்ந்திருங்களென்று அந்தப்புலவர்களை நிலையாயிருக்கச்செய்தான் அப்படிப்பாண்டியன் வேண்டிய சிறப்புகள்செய்யக்கண்ட பழைய புலவர்கள் பொறுமல் மனம்புழுங்கி அந்தச்சங்கப்புலவர்களோடு பலவிதமான தர்க்கங்கள் செய்து முன்னிருந்த புலமைத்தனமும்போய்த் தோற்றுத் துன்புற்றுப்போனர்கள் இப்படியே அன்னியதேசத்துப் புலவர்களெல்லாரும் வந்துவந்து கேள்விகள்கேட்டுவாதஞ்செய்துதோற்க, அவர்களை வென்றுகொண்டிருக்கிற சங்கப்புலவர் ஆலோசித்து மீனாக்ஷிசுந்தராகிய புலவரெழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்குப்போய் முந்துநூல் மொழிந்தமுதற்கடவுளை முறையேவணங்கி ஸ்வாமி எங்களைப்பலரும் வந்து வாதஞ்செய்கிறதிலுலே அறிவு நிறைகாண்பதாக எங்களுக்கொரு சங்கப்பலகை தந்தருளவேண்டுமென்றுகேட்டு வணங்கினர்கள் அப்போது முன்னேபாடின பாணனுக்கு வலியபலகைதந்த சோமசுந்தரக்

கடவுள்வேண்டுமென்று கேட்கிற புலவர்களுக்குக்கொடுக்கத் தாமுமொரு புலவராய் ஒருபலகையுடனே அவர்கள்முன்னேவந்து இந்தபபலகை சதுர மாயிரண்டு சாணளவுள்ளது சந்திரனிலும் பரிசுத்தமானது மந்திரபலமுள் ளது மூதறிஞரான உங்களைப்போல்வார்க்கு ஒருமுழம் வளர்ந்து இருக்க இடங்கொடுக்குமென்று சொல்லி வாணிவடிவாகியபுலவர்களுக்கு அந்தவா ணிபீடமான வெண்டாமரைமலர்போன்ற பலகையைக்கொடுக்கஉடனே சங் கப்புலவர்கள் அப்பலகையை வாங்கிக்கொண்டு திருக்கோயிலை வலம்வந்து தங்கள் கல்விக்கழகமாகிய சங்கமண்டபத்துக்குப்போய்ப் பலகைபவைத்து நல்லபூமாலைசாத்தி பனிநீர்குழைத்த சந்தனம் பூசி புது வஸ்திரம்சாத்தி தூபதீபமுங்கொடுத்துத் தனித்தனியே பூசைபண்ணி வணங்கித துதித்து முன்னே நற்கீரர்எறிணர் பின்பு கபிலரும்பாணரும் எறிணர்கள் பின்பு புலவ ர்கள்எல்லாரும் முறையேயேறியிருக்க இடங்கொடுத்துச் சோமசுந்தரக்கட வுள்தந்த பலகை ஒன்றுதானே எல்லாப்பொருளுஞ்சொல்ல இடங்கொடுக் கிறமுன்னோர் நூல்போல விளங்கிற்று பின்பு யாராயினும் வாதஞ்செய்பவந் தால் அந்தமேம்பாடு பெற்ற சான்றோர்கள் விளங்கக் காரணமும் உதாரண மும் ஏழுவகை மதமும் பேசும்போது கேட்டறிந்த கிளிகளும்பூவைகளுமே தடுத்து செவ்வையாக நிலைநிற்கச்செய்யும் இவ்விதமாக அந்தநாற்பத்தெட்டு புலவர்களும் ஆராய்ந்தறிந்த கல்விகேள்விகளின் பயன் விளங்கத்தனித்தனி யே பாடல்கள் பாடிக்கொண்டிருந்தார்கள்.

அப்படியிருக்குங் காலத்திலே பலருஞ்செய்த நூல்களும் அந்தநூல் களிலுள்ள சொல்லின்பமும்பொருளின்பமும் செய்யுட்குறிப்புகளு மொரே தன்மையாய் வேறுபாடு தெரியாமல் அவர்களே அதிசயித்து இது நீர்பாடி யது இதுநான்பாடியதென்று அவர்களில் ஒருவர்க்கொருவர் பகைகொண்டு மயங்கவும் தெளியவும்செய்த சொல்லும்பொருளுமான மதுரேசர் அந்தச் சங்கப்புலவர்கள் முன்னே தாமுமொரு புலவராகவந்து நீங்கள்மயங்கித்துன் பமடையும்படியான பாடல்களைக் கொண்டுவாருங்களென்ன சங்கபபுலவர் கள் சுவாமீ இவைகளைநாங்கள் பாடினபாடல்களென்று முன்னைவைத்தா ர்கள் அப்போது சுந்தரேசராகிய புலவர் சங்கப்புலவர்கள் சொல்லின் தொ டர்பும்பொருளின் தொடர்பும்தெரிந்து அவரவர்கள்பாடினபாடல்களை அவ ரவர்களே ஒப்புக்கொள்ளஎடுத்துக்கொடுத்தருளினர். அப்படிக் கொடுக்கப் பெற்ற சங்கப்புலவர்கள்மனமகிழ்ந்து ஐயாபுலவரே! நீரும் எங்களோடு ஒரு புலவராய் இருக்கவேண்டுமென்று மிகவும்வேண்டிப்பொன்னைசனமிட்டு அதி விருக்கவைத்தார்கள். அப்போது அந்தப்பொற்பீடத்தின்மேல் பொன்மலை யின்நடுவே ஒரு நாகரத்தினம் விளங்கிறற்போலே மதுரேசரும் வீற்றிருந் தார். பின்பு அவரோடுகூடி நாற்பத்தொன்பது புலவர்களாய்த் தமிழ்ப்பாட ல்கள் பாடிக்கொண்டு தங்கள் நுண்ணறிவுதான்ற வாழுங்காலத்தில்வங்கிய சேகரபாண்டியன் தன்மகனுகிய வங்கிச சூடாமணி பாண்டியனுக்கு முடிசூ ட்டி அரசாட்சியுங்கொடுத்துப் பின்பு பாசவினைகளை வென்று பரமசிவன்திரு வடிகளைச்சேர்ந்து பேரின்பமுற்று வாழ்ந்திருந்தான்.

சங்கப்பலகைதந்தபடலம் முற்றிற்று.



சிவமயம்

ஐம்பத்திரண்டாவது

தருமிக்குப் பொற்கிழியளித்தபடலம்.

கலிநிலைத்துறை.

சொற்குவைதேரும்பாவலர்மேவத்தொருபிட
மற்குவைகண்டத்தண்ணலளித்தசைத்தேடற்
றற்குவைதந்தாலுப்குவலென்னுத்தருமிக்குப்
பொற்குவைநல்கும்வண்ணமெடுத்துபுகல்கிற்பாம்.

இதன்பொருள்.

கூட்டமாகிய சொல்லுகளைக்கற்று ஆராய்கின்ற சங்கப்புலவர்கள் இனிது ஏறியிருக்கும்படி அவர்களுக்குமாத்திரம் இடங்கொடுக்கத்தக்க ஆசனமாகிய சங்கப்பலகையை இருவிபோதிந்த கண்டத்தினையுடைய சோமசுந்தரக்கடவுள் கொடுத்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோம். இனி தனக்கு (பாண்டியன் கட்டிவைத்திருக்கின்ற பொற்கிழியைத்தந்தால் நான் கவியாணஞ்செய்துகொண்டு) பிழைப்பேனென்று திருச்சங்கத்தில் முறையிட்ட முத்தருமியென்னும் ஆதிசைவப்பிள்ளைக்காக அவன்கோரியபடியே அவனுக்கு அத்தப் பொற்கிழியை வாங்கித்தந்த திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

இராஜாதிராஜனை வங்கியசூடாமணியென்னும் பாண்டியன்முன்னே மதுரையைச் சுந்தரபாண்டியனுகி யரசாண்ட சோமசுந்தரக் கடவுளுடைய திருமுடிக்குத் தகுதியாய் பலவகை மலர்களுந்தரும்படியானநந்தவனம் வைக்கிறதான திருப்பணிசெய்யவெண்ணி குருக்கத்தி-பாதிரி-ஆத்தி-வில்வம்மந்தாரம்-மல்லிகை-முல்லை-மரிழ்-சேதங்கு-கொன்றைதாக்கணம்-அலரி-நந்தியாவட்டம்-செருந்தி-குருந்து-புன்னகம்-தாமரை-கீல முதலானமுவகை மலர்களும் எட்டுத்திக்கும் பரிமளிக்கும்படி வண்டுகள் தேனைக்குடித்து எங்கும் இசைகள்பாட நந்தவன முண்டுபண்ணி அதிலே சண்பகப்பூந்தோட்டமும் வேறேவைத்து இந்தச் சண்பகமரங்களெல்லாம் பூத்துப் பொன்னுபரணங்கள்நிறையப்பூண்ட பெண்கள்போல விளங்கக்கண்டு வங்கியசூடாமணிபாண்டியன் மிகவுமனமகிழ்ந்து வண்டுகள்மொய்க்காத சண்பகப்பூக்கள் கொய்து இண்டைமாலை தொங்கன்மாலை தாமமாலை கண்ணிமாலைகளாகத் தொடுத்து திரிபுரதகனரான சோமசுந்தரக்கடவுள் திருமேனியில் அணிந்து அலங்காரஞ்செய்து அந்தப் புதுவலங்காரத்தைக்கண்டு மகிழ்ந்து அதிசயித்து மதுரை சுற்றிவணங்கி அந்தக்கடவுளைச் சண்பகசுந்தரனென்று பெயரிட்டுத் துதித்தான். அதுமுதல் இன்றளவும் சண்பக சுந்தரனென்றும் பெயர் விளங்கலாயிற்று.

அக்கடவுள் திருமுடிக்குச் சண்பகமலர்களால் அலங்காரஞ்செய்துவ ணங்குகிறதிறலே வங்கியசூடாமணி பாண்டியனுக்குச் சண்பகபாண்டியனென் னும்பெயருண்டாயிற்று. இப்படிச்சண்பகபாண்டியன் சண்பகசுந்தரசை வணங்கித் தினந்தோறும் அன்புநீங்காமல் திருப்பணிகள்செய்துக்கொண் டுவருங்காலத்தில் மன்மதகோலாகலமாக வசந்தகாலம் வந்தது, எப்படியென் றால், உலகத்தார் தங்களுக்குண்டாகிய வெயர்வைத்தீர்க்கிற தென்றற்கா ற்று தனக்குமொரு தென்றற்காற்றுத்தேடவும், குளிர்ந்திருக்கிறசோலைகளு ம் தமக்குமொரு குளிர்ந்தசோலைதேடவும், குளங்களும் வேறுகுளங்கள்தே டவும் சந்திரனும் தனக்கொரு சந்திரன்தேடவும், ஆகாயத்திலுள்ள விருக்ஷ ங்களோடுபகைகொண்டு சீறிச் சிவந்தெழுந்தாற்போல மாமரங்கள் உயர்ந்து களிரீனவும் செருந்திமரங்கள் பெண்கள் ரத்னங்கள்பதித்த குண்டங்களணிந் தாற்போலமர்ந்துநிற்கவும், பலாமரங்கள் உதையகாலத்துச் சூரியன்போல முழுதுமலரவும் காஞ்சிமரங்கள் மேகவாகனனிந்திரன்போல்மலரவும், குங் குமமரங்கள் சந்திரன்போல மலரவும், காயாமரங்கள் விஷ்ணுநிறமாக மலர வும், பூமியைக் கிழித்துக்கொண்டோடுகிற வையையாற்றங்கரையிலே கரிய மணற்கொழிப்புகள் அல்குலாகவும் அந்த ஆற்றினலையொலிகள், மேகமலை யோசையாகவும், அவ்விடத்தே புருஷவிந் தொழுகுறற்போலே ஞாழற்பூ துகளுதிரவும், புன்னைவிருக்ஷங்கள் மரகதம்போல தழைத்து வெள்ளை முத்து ப்போலே அரும்புகள்விட்டுப் பொன்னைப்போல பூக்கள் மலர்ந்து கடலெல் லாம் பவளக்காடாகச் செம்பராகங்களைச் சிந்தவும், மற்ற மரங்களெல்லாம் புருடசோடுபிணங்கின பெண்கள் தங்கள் ஆபரணங்களையெல்லாங் கழலவி ட்டாற்போல முன்னே இலைகளெல்லா முதிர்ந்து பின்பு மணந்த பெண்கள் போலத் தழைத்துப் பிரிந்த பெண்கள்போல பசந்து கண்ணீரொழுகின, மிகவு மையல்கொண்ட பெண்களவர்போல அவருண்டாய் விளங்கவும் புரு ஷன்யெலியத்தானுமெலிந்து நெஞ்சுகுழைந்து நிற்கும் பதிவிரதையைபோ ல சூரியகிரணத்தாலே மரங்கள்தீயத் தாமுந்தீய்ந்து பின்பு அந்த மரங்கள் தழைக்கச் சூழ்ந்த கொடிகளெல்லாந் தழைக்கவும், நட்டுவன் ஆட்டுவிக்க முகத்திலே வேர்வையொழுகப் பாட்டுகள் பாடிக்கொண்டாடுகின்ற பெண் கள்போல தென்றற்காற்றசைக்க அசைந்து தேன்களொழுக வண்டுகள்பாட ச்சாய்ந்து வளைந்து பூங்கொம்புகளாடவும், உத்தமகுலத்துச் செல்வர்கள் செல்வங் குறைந்தகாலத்திலும் இல்லையென்று வந்தவர்களுக் கில்லையென்று சொல்லாம லுயிரைமாறியாயினும் கொடுப்பதுபோல்செவ்வந்தியும், மகிழ்ம் மலர்ந்து முதிர்ந்து வாடியும், காய்ந்து வண்டுகள் மொய்த்துத்தேனை நக்கு ம்படி கிடக்கவும், ஆண்குயில்கள் மாந்தளிரைக் கோதிக் கோதிக்கூப்பிட்டு பெட்டைக்குயிலை மனமுருக்கவும், தன்னிலும் பெரிய அரசன்பிரசித்தனுப் விளங்கக்கண்ட மற்றோரரசன் அடங்கிறற்போல மயில்களொடுங்கியடங்க வும் கண்டதுகற்கும் பண்டிதன்போலத் தென்றற்காற்றும், சோலைகளிலே நுழைந்து வாவிகளிலேபுகுந்து தாமரைமலர்களெல்லாந்துழாவி இருவாட்சி முல்லை மல்லிகைப்பந்தல்களிலே உலாவி பலபலவாசனைகளையுங் கொள்ளை கொண்டுகுளிர்ந்து மெதுவாகச் சஞ்சரிக்கவும் வசந்தகாலத்தரசன் மகுடஞ்

சூடிக்கொண்டு தாமரைமலராகியபடிக்கமேந்த குரிலோசையாகிய மந்தளங் கொட்ட மருவவிருக்ஷத்திலே கிளிகள் மங்களங்கள்பாட, வண்டுகள் சங்கீதம்பாட, தாழைமடலாகிய சர்வாலங்தோன்ற, வாழுமிடமாகவேவந்தச்சோலவிளங்கவும், பௌவளபுருடர்கள் சந்திரகாந்தக்கல்லாலே செய்திருக்கிற மண்டபங்களிலும் சித்திரித்தபுதுவீடுகளிலும் தோட்டங்களிலும்தாமரைத் தடாகங்களிலும் தண்முத்துமாலையணிந்த பெண்கள் முலைகளிலுமே அந்தக் கோடைகால வெம்மைதீரநினைத்துத்திருவாலவாய்மதில் சூழ்ந்த மதுரையில் மேலுலகத்துத் தேவர்களும் விரும்பும்போகசுகத்தைத் தருகிற மங்கையர்க ளுடனேகூடி விண்ணைட்டிலே சுற்பகக்காடுபோல் விளங்குகின்ற பூஞ்சோலை களிலே சகிக்க யானைகள்மேலே சிங்கங்கள்போலவும், குதிரைகள்மேலே யா னைகள்போலவும், தேர்கள்மேலே சூரியன்போலவும், மாலைகளிலே வண்டுகள் மொய்க்கக் கால்களிலேவண்டுகள் மொய்க்கக் கால்களிலே சிலம்புகள் கழல் களொலிக்க நடந்தும் புருஷர்கள்செல்ல மங்கையர்கள் கறுத்தபெட்டாளை கள்மேலே, மற்றுருபெண்யானைபோலவும், முத்துபல்லக்குகள்மேலே சர ஸ்வதிகளைப்போலவும், குதிரைகள்மேலே ரதிதேவிகளைப்போலவும், புருடர் கள் கைகளைப்பற்றிக்கொண்டும் இப்படியாகவண்டுகள் மொய்த்திருக்கின்ற பரிமளமாலைகள்சூடின புருஷர்களும் மன்மதனுடைய சேனைபோன்ற பெண் களும், வெள்ளைமுத்துகளை மலைகள்போல கொழித்துக்குவிக்கின்ற வையை யாற்றங்கரையில் மணல்மேடுகளிலுள்ள பூஞ்சோலைகளுக்குவந்து பெண்யா னைகளிலும் பெண்குதிரைகளிலு மேறிவந்தபெண்கள் புருடர்கள்தாள்கொ டுத்திருக்க அவர்கள்தாளிலுள்ள வீரலட்சுமிபோல இரங்கிப்பூங்கொம்புக ளிலே பூங்கொத்துகளினின்றுபொடிகளுதிர்ந்தாற்போலேகலவைச்சந்தனங் களுதிர வனமங்கைகள்போலே பொன்மலைகளைபோத்தகொங்கைகளைக்கொ ண்டுநடக்குஞ் சித்திரம்போலே குருக்கத்திப்பூவைக்கண்டு இதனருகேசிலர் போக புன்னைநிழலிலேசிலர்வர மாமரத்துநிழலிலே சிலர்செல்ல, செருந்திமர நிழலிலேசிலர்கிட்டமன்மதன் ஆயுதசாலைபோலதோன்றுகிறதாழைநிழலிலே சிலர்நிற்க அந்தப்பெண்டுகளுடையகூந்தலே மேகமென்றுமனதில் நினைத்துச் சிலமயில்கள்நின்று கூத்தாடும், சிலமயில்கள் அந்தப்பெண்களின் கண்களை அம்பென்றுநினைத்துப்பயந்தோடும், குயில்கள் அந்தப்பெண்கள் மேனியை மாந்தளிரென்றுதின்னவந்துபின்பு அவர்கள் பேசுமிசைபைக்கேட்டு ஓதுங்கி வெட்கிப்போகும், அந்தச்சோலையில் ஆலைகள்மிகுந்திருக்கிற குளங்கள் பூத் திருக்கிறதேபன்றி கொம்புகளிலும்செங்கழுநீர்-செவ்வல்லி-தாமரைமுதலிய மலர்களைபூத்தாற்போலபெண்கள் தமதுகண்கள்வாய் முகம்விளங்க நெருங்கி னர்பின்னும் பெண்யானைகள்போல நடந்துலாவின பெண்கள் கூடவே சிலநா யகர்கள் கொடிகள்படர்ந்துமாதவிப்பந்தலுக்குள்ளேபுகுந்து இயக்கர் கூட் டமாகக்கூடி பனிநீர்தெளித்து வேடைபைதீக்கிக்கன்றினபாதங்களைப்பிடித் துச் சேடிபர்களுக்குதவிசெய்வார்கள் சிலபெண்கள் பூங்கொம்பைவளைத்து மலர்களைப்பறிதது மோர்ந்து ஆபாசந்தீர்ந்து அந்தப்பூங்கொம்புகளுக்குத் தங்கள் குழையுந்தோடுமணிந்து அழகுபார்த்து சந்தோஷித்து நாயகர்கள் மார்பிலேதைக்க பறித்தமலர்களை மன்மதபாணங்கள்போல எறிவார்கள்,

சிலபெண்கள் பூங்கொம்பைவளைக்க அக்கொம்பிலே அலர்ந்த மலர்களிலே மொய்த்திருக்கிற வண்டுகளும் பேடைகளுமிசைபாடிக்கொண்டே இவர்கள் கூந்தலிலேவந்து மொய்த்துப் பாணகர்களைபோலேநெருங்கின இன்னுமஇவ் வுலகத்திலே மோகூத்தைத்தருந்தெய்வம பெண்களேபென்பவர்கள் வார்த் தைமெய்யே எப்படியென்றல் அந்தபெண்கள் வளைக்கவளைந்து நடுங்கி அவ ர்களடியிலே மலர்களைச்சிந்தி மலர்முகங் கண்ணீர்சோரப் பூங்கொம்புகளும் வணங்குமாலல் புருடர்கள் வணங்குந் தெய்வமென்னலாகாதோ? ஒருத்தி எட்டாத ஒருபூங்கொம்பை எட்டி வளைக்கும்போதெல்லாம் அது வளையா மையாலே அவள் வாடினகொடிபோலேநிற்க அதைமன்மதனேயொத்த அழ குள்ள ஒருவன்வந்துகண்டு என்வருந்துகிறாய்? என்றுள்மேலேறிக்கொண்டு மலர்களைப்பறியென்று தன்றுண்மேலேற்றிக்கொண்டுநின்றான் இன்னுமொ ருத்தி அப்படியே எட்டாத பூங்கொம்பை எட்டி எட்டிவருந்திநிற்க அதுக ண்ட அவள்புருடன்மிகவும்பொறுமல் இதுவென்ன பிணங்கினவளோவென் றுவளைத்துக்கொடுத்துவேண்டினமலர்களைப்பறித்துக் கொள்ளென்று சொ ல்ல அவள்கொம்பைநோக்காமல் பிணங்கினவளவளோவென்று கண்ணீர் விட்டழுதாள். இன்னுமொருத்திகாதிற்பொன்னோலையிலேசெருந்திப்பூவை ச்சிருக்கிப்பார்த்து அவள்புருடன் இந்தஓலைஅழகாயிருக்கிறதென்றுசொ ல்லஉடனே அவள் அந்தஓலையிட்டவளுக்கே இந்த ஓலையுமிட்டுப்பாரென்று அவனைமயக்கித்துண்புறச்செய்தாள். ஒருத்திமாமரத்திலுள்ள கூட்டிலிருக்கி றபெட்டைக்குயிலானது தன்னுடையசேவற்குயிலைக் கூப்பிடக்கண்டு தன்க ணவனைக்கடைக்கண்ணாலேவரக்கூப்பிட்டு வண்டுகளுந் தேனும்பொருந்திய ஒருமாதவிப் பந்தலுக்குள்ளேபுகுந்தாள். ஒருத்தி தான் பூசிக்கொண்ட சந் தனவாசனையைக்காற்றுவீசவிடுத்தும் அரைநால்மாலையோசைநாயகன் காதி லே விழநடந்து கல்விகளைச்சித்திரித்திருக்கிறபுடவையை புடுத்தியும், போ ர்த்தும், இப்படித்தூதனுப்பினவள்போலத் தலைவன்வரும்வழியே எதிர்பார் த்துநின்றாள். ஒருத்திதனக்கு மலர்கொய்துகொடுக்கிறவன் உடம்பெல்லாம் அந்தப்பூந்தாதுகள் சந்தனகஸ்தூரிகள்போலச் சிதறியிருக்கக்கண்டு நீயா ரோடுகூடிவந்த சந்தனமிதுவென்றாள், அவன் என்மனத்திலேஉன்னையுங் கூ டச்சுமந்துபறித்த சண்பகத்தாதுகள்சந்தமல்லவென்றாள். அவள் என்னை யன்றி இன்னுமியாரை உன்மனத்தேதிகொண்டு சுமந்தாயென்று நெய்வார்த்த நெருப்புப்போற் கொதித்தாள் இன்னுமொருத்தி தன்பிணைக்குத் தீரவந்து கணவன்வணங்கும்போது தன்னிழலை அவன்முடிமணியிலே யிருக்கக்கண்டு நீர்என்னை என்வணங்குகிறீரென்றுசிரித்து துன்பமுண்டாக்கப்பண்ணினாள்.

ஒருவன் ஒருத்தியைப்பார்த்துபபெண்ணே உன்பாதங்கள்தாமரைம லரோ! கைகள் காந்தள மலர்களே! கொங்கைகள் கோங்கரும்புகளே! கண் கள் நீலமலர்களே! உன்வாய் செவ்வல்லிப்பூவே! உன்பல் எந்தப்பூ? அதையு ந்திறந்து காட்டிவிட்டு போகக்கடவாயென்று அவளைவேண்டி அடுத்து நின் றான், தனிவிடைபோலுமொருவன் ஒருத்தியைத் தன்முன்னேகண்டு ஏடி பெண்ணே! உன்னிடத்திலே என்மனம்வந்து மறைந்துகொண்டது உன் அ ல்குலாகிய சுனையிலோ கொங்கையிலோ உனதுபூம்பட்டாடையைத்திறந்து

காட்டிவிட்டுப்போவென்று அவள்பின்னே தொடர்ந்தோடிச்சென்றான் இன்னும் பதிவிரதைபானவளை விட்டுப் பலரும் அறியாமல் உடம்பெல்லாம் கச்சிலா னதேவசியர்களைக்கூடுகின்ற அறிவிலார்போல பெண்கள் வளைக்கவளைந்த பூங் கொம்பிலுள்ள வண்டுகள் அவர்கள் கூந்தலில் முடித்திருந்த பழம்பூமாலைகளி லேவந்து மொய்த்தன. இப்படி புருடர்களைத்தழுவி அவர்களிடத்திலுள்ள பொருள்களைபெல்லாம் கொள்ளைகொண்டாற்போலப் பெண்கள் பூங்கொம் பைத்தழுவி மலர்களைபெல்லாம் பறித்துக்கொண்டபின்பு கைப்பொருளில் லாதவன்போல அத்தப்பூந்தோமாலைகளெல்லாம் வறுமையாயின பின்புபெண் கள் தங்கள் புருடர்களைதேடி கூத்தாடிக்கொண்டு விளையாடுகின்ற புருடரைப் போல உடம்பைபுங் கண்களையும் வாயையும் வேறுபாடிசெய்கிற பொய்கை நீராட இறங்கினதோறு அத்தக்குளங்கள் தாமரை-நீலம்-குமுதமாகிய மலர் களை மலர்வதிதபன்றி முல்லை-சண்பகம்-தாழம்பூ முதலாகிய மலர்களையும் ம லர்த்தாற்போல விளங்கின. அபபெண்கள்குலத்தில்புகுமுன்னே தோற்கண் டைகளும்-பாம்பும்-ஆமையும்-கண்டும்-வாளும்-அன்னங்களும்-வலிய பகை வரைக்கண்டஞ்சி ஓடிஒளிற்போலோடின அப்பெண்கள் நீராடும்போதுபலவித மானமலர்களும் அலைகளால் அலைவதுகண்ணுமிலைமலரும்முகமும் தாமரை மலரும் வாயும் செவ்வல்லிமலரும் கண்டைசெய்வதுபோலவும், பாசிபோலக் கூந்தல்கள்விரியவிட்டுத்தாமரை அரும்புபோலக் கொங்கைகள்தோன்ற தா மரைமலர்போல முகங்கள்தோன்ற ஸ்நானந்தொடங்கி கரையேறுகிற தனது நாயகியைக் கண்டபுருஷன் அவள்வாயும்கண்களும் வெளுத்திருந்ததிலே மயங்கி என்னுயிர் போன்றவள் எங்கேபென்றுகேட்டான் அதற்கு அவள் எ ன்னையல்லாமல் உனக்குநாயகி வேறுண்டோவென்றுபுலம்பி அழுதாள், ஒரு த்திநீராடத் தனதுநாயகன்கையைப்பிடித்துச்செல்லும்போது அவன் நீராடி வருகிற ஒருத்தியைப்பார்க்க இவள் சீச்சீ இவளாடின எச்சல்நீரிலே நான்மு ழுகவாரோனென்றுகரையிலேதானேநின்றாள் ஒருத்திநாயகன் நீராடும்போது அவன்மார்பில்பூசிய குங்குமத்தில் தாமரைமொட்டழுந்தி யிருக்கக்கண்டு இப்படி உன்மார்பிலே காயஞ்செய்தவளெவளென்று வருந்தினாள் ஒருத்தி தனது இஷ்டநாயகன்செய்தகுற்றமாகிய வேலாலே பிளவுபட்டநெஞ்சினளா ய்ப்பிணக்கும்காமநோயும் தாங்கமாட்டாமல் அவன்பார்க்க ஆழமானநீரிலே முழுகுகிறவளைபோல முழுகிப்போய் அங்கேயிருக்கிற அன்னத்தைப் பார் த்துக் கைகொடு கறைபோறவென்றுவேண்டினாள் நீரிலே விளையாடுகின்ற ஒரு த்தியினுடையமுகமானது தாமரைமலர்களிலொன்றுகத்தோன்றுவதுகண்ட நாயகன் இவள்முகமிது தாமரைமலரிதுவென்று சந்தேகித்து வருந்த அ தற்கவள் குறுநகைசெய்ய அதுநகைபோளிபோலே முகமென்று தெரிந்து கொண்டான் ஒருத்தி களித்தவனைநாயகன் மொக்குகளிலேதனதுநிழல் த ன்போலவே சிரிதுதுக்கொண்டு தோன்றுவதைத்தனக்குச் சக்களத்தி யென் றுநினைத்துத் தன்கைகீட்டித் தடவிப்பார்த்துக்காணுமல் இந்த நீர்க்குள்ளே ஒளித்துக்கொண்டாபோவென்று அவ்விடத்திலே உதைத்துச்சிறிஞர் ஓரி டத்திலே வழிப்போக்கர்கள் பொருளை யபகரிக்கின்ற திருடர்களைப்போலக ந்தப்பொடி கலவைச்சாந்து கஸ்தூரிகளைமாறிமாறிபூசி விளையாடுகின்ற புரு

ஷர் பெண்கள்மார்பிலே வண்டுகள் ஆகாசத்திலேபறந்துவந்து விழுந்து அவ் வாசனைகளைக் கவர்ந்துண்கின்றன ஓரிடத்திலே தாங்கள்பறித்த நீல லர்தா மரைமலர்களை மன்மதபாணம்போலாக மார்பிலே யெறிவார்கள் அபபடியெ ரிகிறமலர்களைக் கைகளாலேதடுத்தெரிய அம்மலர்கள்மீண்டுபோய் அவர்கள் முகத்திலேபடக்கண்டு மனமகிழ்ந்து சிரிப்பார்கள ஓரிடத்திலேபிடியானையும் களிற்றுனையும்போல ரத்திறுபரணங்கள்விளங்கக் கைகளாலேபனிநீர்கந்தப் பொடிகளைவாரி இறைப்பார்கள் பின்னும்பூசியிருக்கிற சந்தனமழிய நீரையும் வாரியிறைப்பார்கள். பின்னும் அந்தப்பெரிய குளத்திலே நீராடுகிறவர்களி லொருத்தி தன்சிவந்தவாய்நீரை நிறையக்கொண்டு ஒருவன்முகத்திலேகொ ப்பளித்துத்துப்ப அந்தநீரை அவன்செவ்வல்லித்தேதனென்றுமிகுந்த சந்தோ ஷத்தோடு குடித்தான் ஒருவன் ஒருத்தியைப்பார்த்து அங்கே ஆழம்போகா தைநில்லென்றுதடுத்து விலக்குகிறவனைப்போலே தன்கையால் வளைத்துத் தூக்கி மார்போடணைத்து இரதியையணைத்த மன்மதன்போல் மகிழ்ந்தான் இப்படி அவர்கள் பூசித்துவந்த சந்தனகளபகஸ்தூரி வாசனைகளை அந்தக்குள த்துக்குகொடுத்து அதிலுள்ளமலர்களின் வாசனைகளைகொண்டு கரையேறும் போது சிலபெண்கள்நனைந்துமெல்லிய வஸ்திரத்துக்குள் தமதுடம்புதெரிய அதற்குநாணிக்கரைமேல்நிற்கிற கணவரைப்பார்த்து ஐயனேநான்உடுத்தும் வஸ்திரம் எடுத்தெரியுமென கிருஷ்ணனை இடைப்பெண்கள்போலவேண்டுவர்.

இந்தப்பெண்களணிந்திருந்த செம்பஞ்சுக்குழம்பும் குங்குமக் குழம்பு ம்கரைந்துகுழம்பி அந்தக்குளமுழுதுஞ்சிவந்து ஆலாத்திநீர்போலாக அதை ச்சுற்றி நின்றவர்கள்போலச் சோலைகள்விளங்கின குளக்கரையேறின பெண் கள் பட்டுவஸ்திரங்களும் இன்னும் பலநிறமானசோலைகளும்பலவிதமானரத் திறுபரணங்களும் சந்தனகுங்கும கஸ்தூரிச்சேறும் பூமாலைகளுங்கொண்டு புருடர்களுள்ளமெல்லாங்கொள்ள வெண்ணினைர்கள். குளத்திலேதான்றக் கண்டதுபோல் தாங்களழகுபார்க்கிற நிலைக்கண்ணுடியிலும் கண்ணுகிய லைமும்முகமாகிய தாமரையும் வாயாகியசெவ்வல்லியுந்தான்றக்கண்டு கண் களாலே மன்மதனையு மேவல்கொள்ளவல்ல பெண்கள் பொன்னுலும் வெள்ளி யாலும் பளிங்காலுஞ்செய்த கிண்ணங்களிலே கூரியகத்தியை ஊன்றினர் போலவார்த்துத் தோழிகள்கொடுத்தமதுவைமொய்க்கிறவண்டைவிரலாலே தெறித்தோட்டிக் கொவ்வைக்கனிபோலும்வாயில்வைத்து நிரம்பக்குடித்தா ர்கள் இதக்குடத்திலிருக்கிற மதுவையெல்லாம் கொள்ளைகொண்டுபோகவ ந்தவைகளை இந்தக்கிண்ணங்களென்று கினந்து ாரும்வாளை அதனெஞ்சி யிலேயூன்றியீர்வதுபோலக்குடத்திலிருந்து கிண்ணத்திலே வார்க்க அப்படி ஈர்ந்து பிளப்பதைக்காண்பாரைப்போலவண்டுகள்மொய்க்க கள்ளைக்குடித்து மனமறக்கிறவொருத்தி இன்னும் ஒருத்திதான்குடிக்க வள்ளத்திலே ஊற்று கின்ற மதுத்தாரையை மயக்கத்தாலே ஈர்வாளென்றுநினைத்து அடைபயித்திய க்காரி வன்வாளாலேகிண்ணத்தை அறுக்கிறுயென்றுசிரித்தாள் இலமென்று சொல்லிப் பலரிடத்திலுமேற்றும் இன்மைநீங்காத எளியோர் கொப்பரை யோடே புதையற்பொருள்கிடைத்தால் விடாது கொள்வாரல்லவோ அப்ப டியேபலமலர்களிலு நக்கித்திரிகிற வண்டுகள் கையாலோட்டினுலும் போகா

மல் மதுக்குடமெல்லா மொய்த்துக்கொண்டிருக்கின்றன அதுகே நிரம்ப மதுவுண்டவொருத்தி பின்னு முண்ணும்போது அக்கள்ளிலேதோன்றுகின்ற தன் முகத்தையும் கண்ணையுங்கண்டு ஓஓ இதிலே தாமரை பூத்திருக்கின்றது. அல்லாமலும் உண்மையாகவே வண்டுகளு மொய்க்கின்றனவென்றுசொல்லிக் கைகளைக்கொட்டிச் சிரித்தாள். ஒருத்தி தான்குடித்து மிஞ்சின கிண்ணத்திலிருக்கிற கள்ளிலேதோன்றுகிற சந்திரனைப்பார்த்து யான் நாயகனை பிரிந்திருக்கிறபோது நீ நெருப்பாய் சுட்டவனலலோ, நீ இப்போது எச்சிற்கள்ளைக் களவாற் குடிக்கவந் தகப்பட்டுக்கொண்டாய், இனி உன்னை நான்விடமாட்டேன் இதிலேதானே கிடக்கக்கடவாயென்று வேறேயொரு கிண்ணத்திலேமூடிப் பத்திரஞ்செய்து குடியாதிருந்தாள், நிரம்பவுண்டவொருத்தி தன் கைக்கண்ணுடிக்குள்ளே தோன்றுகிற கண்சிவப்பும் வாய்வெளுப்புங் கண்டு பலரும்நிந்திக்க என்னழகை கொள்ளைகொண்டுபோனவன் யாரென்று மயங்கிவிழுந்தாள். ஒருத்தி மதுவுண்ணும்போது அநதமதுவிலே தன்வடிவைக் கண்டு தோழியைக்கூப்பிட்டு என்னுடனேகூட கள்ளுகுடிக்கிறவளைக்கண்டாயோவென தோழிபார்த்து தன்வடிவைக்கண்டு ஒருத்தியா இரண்டுபேர்குடிக்கிறார் இது இரண்டுபேர் எச்சிலென கீழேபெய்து சிரித்தாள் முழுக்குடியளான வொருத்தி தனதுவேறுபாடான வடிவைக் கண்ணுடிக்குள்ளே கண்டு இவள் அல்லவோ நான்தானே அல்லது யாரேனும் என்னைக்கொண்டுபோனவருண்டோ அடி சேடி நான் எங்கேயிருக்கிறேனே தெரியவில்லை என்னை நீ உடனேதேடிக்கொண்டு வரவேண்டும் என, என் பிராணநாயகன் வந்துதேடுவானே அவனுக்குயார் வழிசொல்லுவார்கள் நீசொல்லென்றாள் அப்படியே நிரம்பக்குடித்தவொருத்தி தன்பின்னேபுருஷன்நிற்பதுதெரியாமல் அவனே டுசோரத் தன்னையும்கண்ணுடிக்குள்கண்டு ஓஓமாற்றாளோடுகூடியிருக்கிறாயோவெனஓங்கியுதைத்தாள் சிலர்கட்டுச்சோறுண்கிறார்கள் சிலர்வீணைபாடினர்.

இப்படிப்பட்ட வசந்தகாலத்திலே சண்பகபாண்டியன் ஒருநாள் தன் மனைவியோடுகூடி வேறே ஒருபுறத்திலே சந்திரகாந்தச் சலவை மண்டபத்தில் வேடைக்கோடைபோக தனியாக ஒருகொம்பிலே மாந்தளிரும் கோங்கரும்பும்-முல்லையரும்பும்-காந்தள்-கமலம்-செவ்வல்லி-சண்பகம்-செங்கழுநீர் மலர்ந்தாற்போன்ற தேவிகூடவிருக்கும்போது தென்றற்காற்றானது நல்லதிவ்யபரிமளகந்த வாசந்தோன்ற முகத்துமுன்னேவீச, அப்படிவீசின வாசத்தை நன்றாய்மோந்துபார்த்துப் பாண்டியன் இதேதுபுதிதான நல்லதிவ்யபரிமளகந்தமாயிருக்கிறது பூஞ்சோலைக் காற்றுவீசின வாசமுமன்று காற்றுக்கோவாசமேகிடையாது இது எதினுடைய சுயவாசமோவென்று ஆராய்ந்து ஆலோசித்துத்திரும்பித் தன்தேவியைப்பார்த்தான் அப்போது அநதவாசம் அவள் கூந்தலிலிருந்து வீசக்கண்டு ஓஓ இநதவாசம் வண்டுங் கண்டிராது இதென்ன புதுமையென்று கொண்டாடி இவள் கூந்தலில் இநதவாசம் செயற்கையால் வந்ததோ இயற்கையேவந்ததோவென்று சந்தேகித்து இப்போது நான் சந்தேகித்த கருத்தைத்தெரிந்து பாடவல்லவருண்டானால் அவர்க்கு ஆயிரம் பொன்கொடுப்பேனென்று முடிப்புகட்டிக்கொடுக்க அங்கிருந்த ஏவலாளர்மெஞ்ஞானிகளான சங்கப்புலவர்களுக்குமுன்னே கொண்டுபோய்க்கட்டித்தோ

ங்கவிட்டார்கள். அக்காலத்தேதசங்கப்புலவர்கள் கடலிலே கப்பலைக்கண்டால் அதிலிருக்கிறபொருள் இன்னதென்று தெரியாமல் மதியிலேஇன்னதென் றுசொல்வதுபோல பாண்டியன்கருத்தை ஒவ்வொருவரும் தனித்தனியேவ ந்துசொல்லிச்சொல்லியஉண்மைவிளங்காமல் அவமானப்பட்டுகிலேசிக்கலா ர்கள். அக்காலத்திலே ஆதிசைவகுலத்துப பிரமசாரிஒருவன் அவரை தாய் தகப்பனில்லாத தனியனை தருமியென்பவன் அவன் தனக்குண்டாகியவ றுமைநீங்கும்பொருட்டு நான்முகங்களுடையபிரமனும் மகாலட்சுமியைமார் பிலேதரித்தருளிய விஷ்ணுவினாலும் தேடிக்காண்பதற்கரிய தேவநாயகரும் உருவம் அருவம் அருஉருவமென்னுமிவைகளைக்கடந்துள்ளவருவமாகியசோம சுந்தரக்கடவுளுடைய திருவடிகளைச்சேவித்து எம்பெருமானே அடியேன் தந்தையுந்தாயுமில்லாதவன் வேறையாதரவுகிடையாது அப்படிப்பட்டசிற வுகியநான்கலியாணஞ செய்துகொள்ளவேண்டுமென்கிற ஆசையையுடைய வுயிருக்கிறேன். அந்த ஆசையாகியநோயானது என்மனத்தைமிகவும்வருத் துகின்றது அந்தவருத்தத்தைதீர்ப்பதற்கு சமயம் இதுவேயாகும் ஆகையால் என் எண்ணத்தைநிறைவேற்றி யாட்கொள்ளவேண்டும் என்றுதுதித்தான்.

இப்படியாகச் சோமசுந்தரக்கடவுள் திருக்கோயில்முன்னேநின்று துதி த்து சுவாமிவேதாகமங்கள் முடியக்கற்றுஅவ்வழியேயானடைந்தேனாலும் இல்லறமான மனைவிவாழ்க்கையில்லாமல் உன்பாதவருச்சனைக்குபோக்கியமு வேறை மனைவியில்லாதவன் உன்னைத்தொடலாகாதே ஓகடவுளே இதுவே நல்லசமயம் எல்லாமறிந்திருக்கிற நீர் இந்தப்பாண்டியன் கருத்தறியீரோ, இந்தசமயம்நான்போய்சொல்லி ஆயிரம்பொன்பெறும்படியான ஒருகவிபாட பிரார்த்தித்தான் அப்போது பாண்டியர் குலதெய்வமாகிய சோமசுந்தரர்.

கொங்குதேர்வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி, காமஞ்செப்பாது கண்டதுமொ
பயிலியதுகெழீஇயநட்பின் [ழிமோ
மயிலியற்செறியெயிற்றரிவைகூந்தலி,—னறியவுமுளவோநீயறியும்பூவே.

என்கிற ஒரு செய்யுளைச்சொல்லி எழுதிக்கொடுக்க தருமியென்பவன் றெழுதுவாங்கித் தன்துன்பந்தீர்ந்து சோமசுந்தரக்கடவுள் சொன்ன பாட லைக்கைக்கொண்டு புதையல்கண்டெடுத்தவன்போல மனமகிழ்ந்து சங்கப்புல வர்களுக்கு முன்னேபோய் அங்கே கற்றுவல்ல சான்றோர்கையில் அந்தபபா டலைக்கொடுக்க அவர்கள்வாங்கி வாசித்துபபார்த்துச் சொற்சுவை பொருட் சுவைதெரிந்து நல்லநல்லவென்றுகொண்டாடி அந்தச்சான்றோர்கள் பாண்டி யனுக்குமுன்னேபோய்சொல்ல அதைப்பாண்டியன்கேட்டுத்தன்மனக்கருத் துக்கு ஒத்திருந்ததிலேதலையை அசைத்து மனமகிழ்ந்து இந்தச்செய்யுள் பாடிக்கொண்டுவந்த பிராமணன் முன்னே முடிப்புக்கட்டிவைத்த ஆயிரம் பொன்னும்யாதொரு தடையுமில்லாமல் பெறக்கடவனென்றுகொடுக்க, அப் போது பாண்டியனேவினபடியே கற்றுவல்ல சான்றோரோடு எவளாளிகள் கூ டவந்து சங்கமண்டபத்துக்குமுன்னே கட்டித்தொங்குகிறபொன்முடிப்பை தருமி அறுக்கும்போது நற்கீரர்நில்லென்றுவிலக்கி இதுசெய்யுளிலேகு ற்றமிருக்கிறதென்றுசொல்ல தருமியென்பவன்கேட்டுப் பசியன் னெடுங்கால மன்னங்கிணையாமல் பட்டினியேகிடந்து கிடைத்துண்ணப் போம்போது

கையைப் பிடித்துக்கொண்டால் அந்தப் பசியன் கலங்குவதுபோலக் கலங்கி மனதும் வாயுமுலர்ந்து பயந்து சோமசுந்தரக்கடவுளின் திருக்கோயில் முன் னேவைத்து சுவாமிநீர் என்னகாரணத்துக்காக இந்த வழுவானபாடலை எளி யேன் கையிலேகொடுத்தீர் தரித்திரமென்கிற வியாதி பிடித்துப்பலகாலமும் வழிபடுகின்ற உமதடியேன் இப்போதுகிடைக்கின்றபொருள் போயிற்றேயெ ன்று அதற்கே நான்முழுதும் வருந்தவில்லை தெய்வநாயகரான நீர்பாடினபா ட்டு குற்றமென்று அற்பாயசும் சிற்றறிவுமுள்ளவர்கள் சொல்லலாலுல் இனி உம்மையாவர் தெய்வமென்று மதிப்பார்களென்றல்லவோ நான்முழுதும் து ன்பப்படுகிறேன், இப்போது நேரிட்ட அவமானம் உமக்கேயல்லாமல் எனக் கென்னவுண்டு ஓகோ தெய்வமே யென்று முழுதும்மனம்வருந்தி அந்த ஆதி சைவப்பிராமணன்அழ அப்போதங்கே எல்லார்க்கும் பந்தம்-வீடு வேதம்-அ தன்பயனுகிய எல்லாமான சுந்தரேசர் ஒருபுலவராகண்டிகை-மதாணி-போ தரம்-கதிர்முடி-வயிரம்பதித்த கடுக்கன் இவைகளாலே அலங்கிருதராய்முத் தமிழும் வல்லவரிவரேயென்று அறியவிட்ட குறிபோலத் திரிபுரண்டாரங்கள் நெற்றியிலே யிட்டுக்கொண்டு நல்லபட்டங்கியும் போட்டுக்கொண்டு கங்கண ங்களணிந்த தோள்களையுடைய கற்றுச்சொல்லிகள் அடப்பைதாங்க காளா ஞ்சிதூக்கவும் கோடிகமேந்தவும், முத்துக்குடைநிழலின்கீழே பொற்காற்சா மரைவீசவும் வேதமேபாதுகையாகத் தாங்கவும் தாமருளிச்செய்தவைகளைக் கற்றுப் பாடவல்லவரான வேதாகமங்கள் தருமசாஸ்திரங்களெல்லாந் தெரி ந்தசான்றோர்கள்கூடின சங்கமண்டபத்துக்குவந்து அங்கே அவர்கள் முன் னேநின்று அவர்களைப்பார்த்து சுவாமியானவர் நாம்பாடியனுப்பின பாட்டி லே குற்றஞ்சொன்னவர் இவர்களில் யாரென்று கேட்குமுன்னே கீரன் அஞ் சாமல் நானேகுற்றஞ்சொன்னவனென்ன வந்தபுலவர் அதில்லதுகுற்றமென் றுகேட்க அவர்பெருமைகள் ஒன்றுந்தெரியாத கீரன் அப்பாட்டிலே சொற் குற்றமில்லை பொருட்குற்றமிருக்கிறதென்ன அதற்குப்புலவர் பொருட்குற்ற மென்னவென கீரன் தனக்குக் குற்றம்வருவது தெரியாமல் முடிக்கும் பூவால் வாசமேயல்லாமல் கூந்தலுக்கு சுயமே வாசமேது அப்படி வாசமுள்ளதாக (கூந்தலினறியவுமுளவோ) வென்றுவினவியதே குற்றமென்ன புலவர் பதுமி னிகூந்தலுக்குஞ் செயற்கைதாமே வென்னகீரன் அவள்கூந்தலுக்கு முடித் ததிலேதான் வாசமுண்டாகுமென்ன, புலவர்தெய்வப்பெண்கள் கூந்தலும் மந்தாரமுதலி யமலர்களாலேதான் வாசங்கமழுமென்ன, புலவர் நீதுதித்து வணங்குகின்ற பரஞ்சோதியானதிருக்காளத்தியப்பர்பாகத்தே வீற்றிருக்கின்ற ஞானப்பூங் கோதைகூந்தலுக்கும் அப்படியேசெயற்கையாலே தான்வாசங்கமழுமென்று முழுதும் ஓரோநிலையாகச் சாதிக்கும்போது வந்த கடவுட் புலவர் தமதுநெற் றிக்கண்ணைக் கொஞ்சந்திறந்துகாட்ட அதைக்கீரன்கண்டு பயப்படாமல் நீரேபரமசிவனுலுமாகுக. உம்முடையநெற்றியிலே யொருகண்காட்டினது போல உமதுடம்பெல்லாம் கண்களாக காட்டினாலும் இந்தப்பாட்டில் குற் றம்குற்றமேயென அப்போது கடவுள் நெற்றிக்கண்வெம்மை கீரன்மேலே தாக்கப் பொற்றுமரைக்குளத்திலே போய்விழுந்தான் கடவுள்மறைந்தனர்.

தருமிக்குப்பொற்கிழியளித்தபடலம் முற்றிற்று.

உ

சிவமயம்.

ஐம்பத்திமூன்றுவது

கோவனைக்கரையேற்றியபடலம்.

கலி நிலத்துறை.


மாரனைப்பொடிகண்டவனந்தனைமைந்தனுக்
காரநற்கனகக்கிழியீந்ததறைந்தன
மேரனத்திரள்சூழ்மலரோடையிடத்தினுங்
கோனைக்கரையேற்றியவாறுகிளத்துவாம்.

இதன்பொருள்.

மன்மதனையெறித்துப் பொடித்தருளிய சோமசுந்தரக்கடவுள் தருமியென்னும் பிராமணப்பிள்ளைக்கு (அவனுடைய கலியாணத்திற்குபயோகமாகும்பொருட்டு) மிகுதியாகப்பொற்கிழியளித்த திருவிளையாடலைச் சொன்னேம். இனி, அழகுபொருந்திய அன்னங்கள்சூழ்ந்து விளையாடுகின்ற பொற்றாமரைத் தடாகத்தினின்றும் நற்கீரனென்னும் சங்கத்தலைவரைக் கரையேற்றிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

தொங்குகின்ற நீண்டசடாபாரத்தையுடையசோமசுந்தரக்கடவுளின் நெற்றிக்கண்ணாலே தாக்கப்பட்ட கீரன் பொற்றாமரைத் தீர்த்தத்திலேவிழுந்து துக்கசாகரத்திலேபழுந்தித் துன்பப்படுதலை அவரோடுகூடின சங்கப்புலவர்கள்கண்டு பொறாமல் அரசனில்லாத குடிகளும்நாயகரத்தினமில்லாதகண்டியும் ஞானமில்லாதகல்வியும்போலச் சங்குங் குலைகுலைந்து ஐயையோ சொல்லும்பொருளுமான கடவுளோடு வாதுசெய்தகுற்ற மெப்படிதீருமோ? இனி கீரன்பிழைப்பதருமையென்று நினைத்து முன்னாளிலே வெள்ளிமலையை வேரோடுபெயர்த்த ராவணன்வந்து கைவீணையாலே இன்னிசை பாடக்கேட்டுமனமிறங்கினவராகிய கடவுள்பின்னும் அந்தராவணனுக்குத்தேரும் வாளும்கொடுத்துஅவன்செய்த குற்றத்தையும்பொறுத்தருளினாரல்லவோ? ஆகையாலே இக்குற்றத்தை ஒருவராலுந் தீர்க்கப்போகாது, எல்லார்க்குந்தெய்வமான சோமசுந்தரக்கடவுளை மனமிரங்கினால் தீர்ந்துபோகுமென்று துணிந்து சொல்லிக்கொண்டுபோய்ப் புலவர்கள் கடவுளடி நிழலிலே யொதுங்கி நின்றுசேவித்து.

திருத்தனைசரணஞ்சரணம்மறைச்சென்னிமே
னிருத்தனைசரணஞ்சரணந்நிறைவேதநூ
லருத்தனைசரணஞ்சரணந்திருவாலவா
யொருத்தனைசரணஞ்சரணங்களுனக்குநாம்.



பாயுமால்விடைமேல்வருவோர்பல்லுயிர்க்கெலாந்
தாயுந்தந்தையுமாகநின்றண்ணளிதாமரைக்
கேயுமாதவன்போனல்லநீயவியற்றினர்க்
காயுமின்பமுந்துன்பமுமாக்குவதாதலால்.

அத்தகற்றசெருக்கினறிவழிகீரனின்
விததகக்கவியைப்பழுதென்றவிதண்டையான்
மத்தகக்கண்விழித்துவெதுப்பின்மலர்ந்தபொன்
முத்தகக்கமலத்திடைவீழமுடிக்கிறுப்.

என்றுதுதித்து ஓ காளகண்டக்கடவுளே! இனி, இந்தக்குற்றத்தை மன்னித்தருளவேண்டுமென்று கபிலன் பாணன்முதலான புலவர்களெல்லாம் சரணமென்றுவிழுந்து வணங்கி மிகவும்வேண்டினர்கள். அப்போது அந்தத் திருப்பாற்கடலில்பிறந்த நஞ்சையுண்டகிருபாசொரூபியான சோமசுந்தரக்கடவுள்கரும்பின்மாதுரியத்தையும் வெல்லத்தக்கதீஞ்சொல்லையுடைய மீனாட்சியம்மையோடெழுந்தருளிவந்து நற்கீரன்கிடக்கின்ற பொற்றாமரைத்தீர்த்தத்தருகேபோய்குளிர்ந்த மதுரம்பொருந்திய சொல்லையுடையபுலவர் கூட்டத்திலேநின்றருளினர். அப்படிநினறருளின சோமசுந்தரக்கடவுள்முன்னே நெருப்புக்கண்ணலேபார்த்துவீழ்த்தி இப்போதருட்கண்ணலேபார்க்க ஆழ்ந்தநீரிலேகிடக்கிற நற்கீரன் பொறிபுலன் கரணங்களெல்லாம் கடவுள்விஷய மாயொருமித்து அவரதுகிருபைக்கடலிலே முழுகி அன்புருவாய், ஐயோ உலகமாதாவான ஞானப்பூங்கோதையம்மையார் திருக்கூந்தலுக்குங் குற்றஞ்சொன்ன என்வாய்க்குற்றத்தைச் சோமசுந்தரக்கடவுளையல்லாமல் யார் பொருத்தருளுவாரென்று காளத்திகையிலையென் றெடுத்த சொன்மாறி மாறியிசையவெண்பாவிலுலே ஒருதிருவந்தாதிப்பாடிததுதிக்க அதுகேட்ட சோமசுந்தரக்கடவுள் அவன்முன்னேவந்து அவன்கையைப்பிடித்துக்கரையேற்றிவிட்டார். கரையேறினகீரன் பிறவிக்கடலினின்று கரையேற்ற வல்லவராகியசோமசுந்தரக்கடவுளும் அங்கயற்கண்ணம்மையையும்வணங்கிஅவ்விருவருடைய கிருபைக்கடலிலேமுழுகிக் குற்றஞ் செய்தவர்களுக்குப் பயதண்டமும் நன்மைசெய்தவர்களுக்கு அன்புஞ்செய்கின்றதே பொருளாகக்கொண்டு கடவுளருளவேண்டிப் பாடுகின்றனன்.

அறனிலாணிழைத்தவேள்வியழித்தபோராண்மைபோற்றி
மறனிலாத்தண்டிக்கீந்தமாண்பெருங்கருணைபோற்றி
கருவியீழ்கூற்றைக்காய்ந்தகனகழற்கமலம்போற்றி
சிறுவனுக்கழியாவாழ்நாளளித்தருள்செய்திபோற்றி.

சலந்தரனுடலங்கீண்டசக்கரப்படையாய்போற்றி
வலந்தருமதனமாயோன்வழிபடக்கொடுத்தாய்போற்றி
அலர்ந்தசெங்கமலப்புத்தேணடுச்சிரமறிந்தாய்போற்றி
சிலந்தியைமகுடஞ்சூட்டாவரசருள்செல்வம்போற்றி.

திரிபுரம்பொரியநக்கசேவகம்போற்றிமூவர்க்
கருளியதலைமைபோற்றியனங்கனாகந்தீய
வெரியிடுநயனம்போற்றியிரதிவந்திரப்பமீளக்
கரியவன்மகனுக்காவியுதவியகருணைபோற்றி.

நகைத்திடவுதவந்தருசிரந்திருகிவாங்கிச
சிகைத்திருமுடிமேல்வைத்ததிண்டிறல்போற்றிகோயி
லகத்தவிசுடைத்தூண்டுமெலிக்கசாளமூன்று
சகத்தையுமளித்ததேதவர்தம்பிரான்சரணம்போற்றி.

பொருப்பகழ்ந்தெடுத்தோன்சென்னிபுயமிறமிதிதாய்போற்றி
யிருக்கிசைத்தவனேபாடவிரங்கிவாள்கொடுத்தாய்போற்றி
தருக்கொடுமிருவர்தேடத்தழற்பிழம்பாணுப்போற்றி
செருக்குவிட்டவரேபூசைசெய்யநேர்நின்றாய்போற்றி.

பருங்கைமால்யானையேனம்பாய்புலியரிமான்மீன
மிருங்குறள்யாமைகொண்டவிகல்வலிகடந்தாய்போற்றி
குரங்குபாம்பெறும்புராரைகோழியாணலவன்றேரை
கருங்குரீஇக்கழுகினன்புக்கிரங்கியகருணைபோற்றி.

சாலநானிழைத்தசீங்குக்கென்னையுந்தண்டஞ்செய்த
கோலமேபோற்றியஞ்சிக்கொடியனேன்மொழுதபுன்சொன்
மாலுகேட்டென்னையாண்டமலமகண்மணாளபோற்றி
யாலவாயடிகள்போற்றியம்மைநின்னடிகள்போற்றி.

ஆ மிகவுந்துன்பப்பட்டேன் அடியேனுக்கருளுரென்றிப்படிக்கோ பமும் பிசாதமுந்தோன்ற சோமசுந்தரக்கடவுளையும் அங்கயற்கண்ணம்மை யையும் போற்றிபோற்றி யென்றுபாடிப் பின்னும் தேவகானத்தோடு கூடிய எழிசை யெழுகூற்றிருக்கையும்பாடிச் சொக்கநாதருடைய சேவடிகள் தன் சிரசின்மேல்படவிழுந்து சேவித்தெழுந்தான் மற்றப்புலவர்களுந்தனித்தனி யேபாடித் துதித்துவணங்கினர்கள் பின்பு சோமசுந்தரக்கடவுள் தம்மைப்பா டித்துதித்த நற்கீரருக்கு இன்னருள்சுரந்து 'நீமுன்போலவேபாண்டியனூலி லமெச்சப்பட்ட புலவர்கூட்டத்திலே போயிருவென்றுசொல்லித் தமதுதிருவு ருமறைந்தருளி இந்திரன்விமானக்கோயிலுக்குள் அம்மைபோடெழுந்தருளி யிருந்தார் பின்பு நற்கீரரும் புலவர்களும் சங்கமண்டபத்திலே தொங்கக்கட் டியிருந்த பொற்கிழியென்கிற பொன்முடிப்பை அந்தத்தருமியென்னும்சை வப்பிராமணனுக்குக் கொடுத்துப் பாண்டியனூலும் வரிசைகள்கொடுக்கச்செ ய்துசோர்வில்லாத கல்விச்செல்வராயமர்ந்திருந்தார்கள். பின்புசண்பகபாண் டியன் மீளுட்சிசுந்தரேசரை வந்துவணங்கி நிறைந்தமெய்யன்புடனே பின் னும் திருக்கோயிலுக்கும் சோமசுந்தரக்கடவுளுக்கும் வேண்டியதிருப்பணி கள் செய்து கொண்டிருந்தான்.

கீரனைக் கரையேற்றிய படலம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

ஐம்பத்துநான்காவது

கோணுக்கிலக்கணமுபதேசித்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருந்தம்.

கொன்றையந்தெரியல்வேய்ந்தகூடலெம்பெருமான்செம்பொன்
மன்றலங்கமலத்தாழ்ந்துவழிபடுநாவலோனை
யன்றகன்கரைபேறிட்டவருளுரைசெய்தமிப்பாற்
றென்றமிழினையான்றோறத்திருட்டிபதிரஞ்சொல்வாம்.

இதன்பொருள்.

அழகிய கொன்றைமாலையைத்தரித்த சோமசுந்தரக்கடவுள் வாசனை பொருந்திய பொற்றாமரைத் தீர்த்தத்தில் விழுந்து வருந்திப் பின்பு வழிபட்டுவேண்டிய நற்கீரதேவரை அப்போது அகன்ற அந்தத தீர்த்தக்கரையினின்றும் ஏற்றியருளிய திருவிளையாடலைச்சொன்றேம் இனி, அந்தநற்கீரதேவருக்கு அகஸ்தியமகாமுனிவரைக்கொண்டு செந்தமிழிலக்கணத்தை யுபதேசித்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றேம்.

முன்பு நான்மாடக் கூடலென்னும் மதுராபுரியில்எழுந்தருளியமுதற் பெருங்கடவுளாகிய சோமசுந்தரப்பெருமானுடைய திருவருளாலேசென்று புலவர்கூட்டத்திற்கூடிவாழுகின்ற நற்கீரதேவர்தமதுள்ளத்திருந்தகோணல் தீர்ந்து மதுரேசர் திருவடிகளிலே மிகுந்த அன்புகொண்டமனத்துடனே ஆராய்ந்துபார்த்து முன்னே கடவுள் நெற்றிக்கண்ணிலே எரிந்தமன்மதன், பிரமவிஷ்ணுக்களாலும் உருவாகாமற்போனன். நம்மையும்அந்தக்கண்ணைசுட அந்தவெம்மையைத்தீர்த்து ரக்ஷித்ததல்லவோ இந்தப்பொற்றாமரைத்தீர்த்தம்ஆகையாலே இந்தத்தீர்த்தமே நம்மையெக்காலமும் ரக்ஷிக்கத்தக்கதென்று வேறுபாடில்லாதமனத்தையுடையவராய் மூன்றுகாலமும்போய் முழுகிமுழுகி என்தப்பணுகியும் திருவாலவாயென்னு மதுராபுரியிலெழுந்தருளியிருக்கின்ற பெருமானுகியும் அடியார்களுநக்குச் சோமசுந்தரக்கடவுளைச் சேவித்து அதுமுதல் தினந்தோறும் வழிபடுகின்ற நியமத்தையுடையவராகயிருந்தார்.

இப்படிக் களங்கமில்லாத மனதுடனேவந்து வழிபடுகின்ற நற்கீரர் நியமத்தைக்கண்டு சோமசுந்தரக்கடவுள் மனமகிழ்ந்து எழுந்தருளி இந்தக் கோணுக் கிலக்கணமின்னுந் தெளிவாக வரவில்லை ஆதலால் இதுசெஞ்சொல் இது வழுவுச்சொல்லென்று தெரிகிலன், இனிகுற்றந்தீர்ந்த கேள்வி யறிஞர்கள் யாரைக்கொண்டு இவனுக்குப் போதிப்போமென்று நினைத்து ஆலோசிக்கும்போது அம்மையானவள் தன்னுடையதாமரைமலர்போன்ற கைகளைக்குவித்துவணங்கி ஸ்வாமி உள்ளங்கை-நெல்லிக்கனிபோல எல்லாமொருங்குணர்ந்த உம்முடையசங்கைக்குவிடைசொல்ல வல்லவர்களெங்கே பாரிருக்கிறார்கள் ஆதலினின்னுந்தோற்றியதென்றுசொல்லுகிறேன் அதாவது

முன்னொருகாலத்திலேவெள்ளிமலையினிடத்து இந்திரன்பிரமன்விஷ்ணு சன
காதிமுனிவர்முதலான எல்லாருங்கூடினபோது அங்குப்பூமிதாங்காமல்வட
கீழ்த்திசை அழுந்தித் தாழ்ந்தது, தென்மேற்றிசை உயர்ந்தது. அதுகண்டு
தேவர்களெல்லாம் உம்மை வணங்கித் துதித்து சுவாமி உம்மை யொப்பான
ஒருவரைதென்மேற்றிசையிற்போயிருக்கவிடைகொடுத்தால் இந்தப்பூமி சரி
யாக நேராநிலைக்குமென்றார்கள். அப்படிச்சொல்லக்கேட்ட நீர் கடல்நீரைப்
பானம்பண்ணின அகத்தியமுனிவனே நமமை யொப்பானவன், அவன்மனை
வாழ்க்கைக்குரிய வுலோபாமுத்திரையே பார்வதியை யொப்பானவனென்று
அங்கே போயிருக்கும்படி அந்த அகத்தியமுனியை யனுப்பும்போது அந்த
முனிவன் சுவாமி! நான்போகும்படியான நாடோ தமிழ் வழங்குநாடு அந்த
நாட்டிலுள்ளவர்களெல்லாம் தமிழாராய்ந்துகேட்டுத் தெளிந்தவர்கள் அவர்
களுங்கெல்லாம் கேள்விக்கு விடைசொல்லவேண்டும் ஆதலால் அந்தச்செந்த
மிழிலக்கணம் எனக்குத்தெரியத் திருவுருள்செய்யவேண்டுமென்றான். அதற்
கவன் கேட்டுக்கொண்ட படியே இலக்கண முதனூலைத் தெளியச் சொல்லி
யருளினீர், அப்படி இலக்கணந் தெரிந்துக்கொண்ட பின்னும் சுவாமி இனி
எக்காலத்தில் தேவரீருடைபதிருவடியைக்கண்டுசேவிப்பேனென்ன அதற்கு
நீகடம்பவனத்திலே நம்மைக்கண்டு சேவித்துக்கொள்ளென்று இன்னும் உன
க்கு வேண்டியவைகளெல்லாம் அங்கேநம்மிடத்திலேபெற்றுக் கொள்ளக்கட
வையென்று விடைகொடுத்துப் பொதியமலையிற்போயிருக்கத் திருவுருள்செ
ய்தனுப்பினீர். அப்படியே இன்னும் உலோபாமுத்திரையுடனேகூடி அங்கே
தானேயிருக்கின்றான். இதுசெய்திஉமக்குஞாபகமுண்டாகத் தெரிவித்தேன்
உம்முடையதிருவுள்ளத்துக்குச்சம்மதமானால் இந்தக்கிரனுக்கு அந்தஅகத்
தியமுனியை அழைத்துஇலக்கணம்தெளிபடுத்துமென்று மீளுட்சியம்மை
யார்சொல்ல கடவுள்மனமகிழ்ந்து அக்காலத்துநடந்தவெல்லாம் இன்றளவும்
மறவாமலிருந்து சொன்னபல்லவோவென்றுகொண்டாடி அப்படியேசெய்கி
றுமென்று அந்தகுடம்பெற்றமுனியான அகத்திய முனிவரை நியமித்தார்.
இப்போது எல்லாமுடையநாயகரானசோமசுந்தரக்கடவுள் திருவுள்ளந்தெ
ரிந்து தலைமேலே கைகளைகுவித்துக்கொண்டு அரியதவ விமானத்தின்மேலே
தன் பத்தினியாரோடேறி ககனமார்க்கமாகவந்து அந்தத் தவத்தேரை விட்
டுப்பத்தினியுடனே தமிழ்முனிவரிறங்கிச் சோமசுந்தரக்கடவுள் திருக்கோ
யிலுக்குள்ளேபுகுந்து நான்குபுயங்களுடனேவிளங்குகின்ற கடவுளாகியசெ
ம்பவளமலையையும் அதனருகேவிளங்குகின்றதேவியாகிய இந்திரநீலமலையை
யும்வணங்கி அன்புபெருகுகின்ற மனத்திலே துளும்பிப் பொங்கவும், மெய்ந்
நாணனந்தம் பெருகவும், கடவுளருகே ஒருபுறத்திலிருக்க, அப்போது அவ்
விடத்தே நற்கீரரும் பொற்றூமரைக்குளத்திலே நீராடிக்கடவுளை முன்போ
லவே உருகுகின்ற அன்புடனே விரைவில்வணங்கவந்தார்.

அப்போது நற்கீரர் வரக்கண்டகடவுள் அகத்தியரைப்பார்த்து ஓய் அக
த்திய முனிவரே இந்தக் கிரனுக்கின்னு மிலக்கணம்தெளிவாய் நிரம்பவில்லை
ஆதலால் நீர்எம்மிடத்தேதெரிந்துக்கொண்டபடிகுற்றந்தீரத்தெளிவுபடுத்து
மென்று திருவாய்மலர்ந்தருளினர். உடனே சந்திரசடாதரனை கடவுளுக்

கரகித்ததைத் தலையிலு மனத்திலுங்கொண்டு நற்கீரரையழைத்து வணங்கு வித்து அகத்தியமுனிவர் நற்கீரருக்குவடநூலார்வியாகரணமென்கிற இலக்க ணஞ்சொல்லத்தொடங்கினர் எப்படியென்றால், பொதுப்பாயிரம்சிறப்புப்பா யிரங்களைக்கொண்டு எழுவகைமதங்களுடனே நான்கு பொருளுங்கூடிப் பத் துக்குற்றங்களையுமொழித்து பத்தழகும் முப்பத்திரண்டு புத்திகளும்பொரு ந்தியமுனைவன்கண்டமுதநூலைத் தொகைவகைவிரிவாக கருத்துரைபதவுரை முதலியகாண்டிகையுரையாலும் விருத்தியுரையாலும் நூலிலுள்ளபொருளை க்குற்றமில்லாமல்விளங்கத்தெரிவித்தார். அப்படித்தெரியப்படுத்தினவழிநூ லாசிரியனை அவர்சொல்லியவகைகண்டு அந்தநூலின் பொருள்வடிவானமுத நூலாசிரியன்சந்தோஷமும் இன்பமும் கருணையுந்தழைக்கத் தம்முடையதி ருக்கைகளாலே உள்ளமகிழ்வுபொங்க ஆலிங்கனஞ்செய்து அவருக்குவேண் டினவெல்லாம் அருள்செய்து பொதியமலையிலேபோயிருக்க விடைகொடுத்த னுப்பிவிட்டார் உடனே உலோபாமுத்திரையோடு அகத்தியமுனிவர் விடை பெற்றுப்போனபின்பு அங்கயற்கண்ணம்மை தன்கணவனைபபார்த்து சுவாமீ என்னகாரணத்திலுலே நீரேசொல்லாமல் கீரனுக்கு அகத்தியராலே இலக்க ணஞ்சொல்லுவித்த தென்றுகேட்க அதற்குமதுரேசர்தமதுதேவியாரைப்பா ர்த்து பெண்ணேகேள் நூல் சொல்லவேண்டியது தனக்குவழிபாடுசெய்வோ ன்மிகவும்பொருள்கொடுப்பவன் மனமாச்சரியமில்லாதவன், சொன்னசொற் கடவாதவன் ஆகிய இப்படிப்பட்டவர்களுக்கே சொல்லுவது தருமம் இந்தக் கீரன் என்றேடுகொண்டமனமாச்சரியத்தாலேநாமேசொல்லாமல் அகத்திய முனிவனுலே சொல்லுவித்தோமென்ன. அம்மைகேட்டுக் கவலைதீர்ந்துமகிழ் ந்திருந்தாள், பின்பு இலக்கணந்தெரிந்துகொண்ட நற்கீரர்தான்முன்னேபா டின கவிகளெல்லாம் ஆராய்ந்துபார்த்து அதிலுள்ள வழுநிலைவழாநிலைகளை ல்லாந்தெரிந்து ஐயோ நான்யாதுகாரணத்திலுலே முழுதோருங்குணந்தமு தற்கடவுள்பாடலிலேபொருள்வழுச்சொன்னேன் வேதாந்தங்களும் தொட் டரியப்படாத பாதங்கள் பூமிதொடும்படி வந்தருளின நிறைந்த பரஞ்சோதி நிராமயமான வெள்ளியம்பலவாணர் விஷயத்தில் அபராதியானேன், எப்படி யென்றால், அல்பமதிகளே அதிகமெருவிகளென்கிறபழமொழி என்மட்டாக வன்றேமுடிந்தது. இன்னும் அட்டமூர்த்திக்குச்செய்தகுற்றத்திலுலே அக் கடவுள்நெற்றிக்கண்ணே என்னுடம்பைச்சுட்டதேயன்றி என்னெஞ்சையுஞ் சுடுகின்றதேதென்றுபலவிதமாக மனநடுங்கிப்பின்னும் பிள்ளையைப்பெற்றத ாயானவள் கசக்குமருந்தை வாயிலூட்டிப் பிணியைத்தீர்த்தாற்போல் என்னு டனே பகைகொண்டுவலிந்து என் குற்றந்தீரத்தெளிவுசெய்த சோமசுந்தர க கடவுளுக்கு நான்செய்யக்கிடந்ததென்ன வென்று அளவில்லாதபேரின்பக்க டலிலேமுழுகி கடவுள் அகத்தியமுனிவராலே தமக்குத்தெளிவுபெறச்செய்த நூலை எல்லாபடிபுலவர்களுக்கு மன்புடனேபோதித்து, கடவுள்திருவடிக்கன்பு மிகுதி மேன்மேலாக நற்கீரர் சங்கத்தில் மிகுந்த அன்போடிருந்தார்.

கீரனுக்கிலக்கணமுபதேசித்தபடலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஐம்பத்தைந்தாவது
சங்கத்தார்கலகத்தீர்த்தபடலம்.


அறுசீரடியாசிரியவிருத்தம்.

காமனைப்பொடியாக்கண்டகண்ணுதறென்னூல்கீர
நாமநற்புலவர்க்கீந்தநலமிதுபொலம்பூங்கொன்றைத்
தாமனைச்சங்கத்துள்ளார்தலைதடுமாற்றந்தீற
வுமனைக்கொண்டுபாடலுணர்த்தியவொழுக்கஞ்சொல்வாம்.

இதன்பொருள்.

பன்மதனைப்பொடியாகவெரித்தருளிய நெற்றிக்கண்ணையுடையசோம சுந்தரக்கடவுள் (அகஸ்திய மகாமுனிவரைக்கொண்டு) நற்கீரதேவனென்னும் பெயரையுடைய சங்கப் புலவருக்குத் தருமிலக்கணத்தை யுபதேசித்தருளிய திருவிளையாடலிதுவாகும். இனி, பொலிவையுடைய அழகியகொன்றைமலர்மாலையைத்தரித்த சோமசுந்தரக்கடவுள் அந்தச்சங்கப்புலவர்கள் (நாற்பத்தெண்மரும்) கொண்டிருந்த மயக்கமானது நீங்கும்படிக்கு (உருத்திரசன்மனென்னும்) ஊமைபிள்ளையைக்கொண்டு அவர்கள்பாடலின் உண்மைப்பொருளையுணர்த்தி அவர்கள்கொண்டிருந்த கலகத்தைத்தீர்த்தருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

அளவில்லாத நிறைந்தகல்விகேள்விகளில்வல்லவராகிய சங்கப்புலவர்கள் நாற்பத்தெட்டுப்பேர்களும் தனித்தனி வெவ்வேறேசென்தமிழ்ச்செப்புள்கள்பாடி அவரவர்களும் தங்கள் தங்களுமெச்சிப் பெருமைகள்பேசி மாறுகொண்டுபின்பு அவரவர்தாதாரந்தெரிந்துசொல்லவல்ல மூதறிவாளராகிய கடவுள் சந்நிதிமுன்னேவந்தார்கள் அப்படிவந்தவர்கள் சோமசுந்தரக்கடவுளைவணங்கி சுவாமி! அடியேங்கள்பாடின இந்தப்பாடல்களில் நல்லதும்தீயதும்தெரிந்து வேறுபாடுகளை அளவிட்டுக்காட்டி அவைகளின்குற்றங்களைப்போக்கி எங்கள் சந்தேகந் தீர்த்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அதைக்கேட்ட வேதமுதல்வரான சோமசுந்தரக்கடவுள்முன்னே பிரமவிஷ்ணுக்கள்தடவளர்ந்துநெருப்புமலையாகநின்று அதிலிருந்துவந்த வடிவுபோலே சச்சிதானந்தசொரூபமாய் உலகுக்கெல்லாங் காரணமாக மூளத்த மூலவிலிங்கத்திலிருந்தும் காணக்கூடாத ஒருபுலவராகி எழுந்தருளிவந்து ஓப்புலவர்களை இந்தமதுரையிலே ஒருவர்த்தகன்குபேரன்போலும்பாக்கியவான் அவன்பேர் தனபதி அவன்மனபாள்பேர் குணசாலினி அவ்விருவருக்கும் அவர்கள்செய்த பெரியதவத்திலேலெள்ளறிவாளருடைய அஞ்ஞானவிருள்நீங்கஞானசூரியன்போல ஓர்புத்திரன் அவதரித்திருக்கிறன் அவனைதிதப்வத்தன்மையான மன்மதன்போலும் வடிவழகுள்ளவன் ஆனல்வாய் பேசாத



ஊமைப்பிள்ளை அவனிடத்தில்நீங்கள் எல்லோரும்போய்நீங்கள்பாடின பாடல்களையெல்லாம் சொல்லுங்கள். அவன்கேட்டுத் தன்புத்திக்கிசைந்து நன்றுனபாடல்களே எல்லாரு மதிக்கும்படியான பாடல்கள் என்றுசொல்ல அதற்குப்புலவர்கள் சுவாமி! அவன் ஊமைபபிள்ளையாலல் எங்கள்பாடல்களிலுள்ள நன்மைதீமைகளை எப்படித்தெரிந்துக்கொள்ளமாட்டுவானென்று கேட்க வெள்ளியம்பலவழகர் ஓப்புலவர்களே! அவன்செட்டிபிள்ளையாய் ஊமைபாயிருந்தாலும்உங்கள்பாடல்களிலுள்ள சொல்லழமும் பொருளாழமுங்கண்டால் தலையையசைத்து உடம்பெல்லாம் புளகித்து மனங்களித் தானந்திப்பான் அப்போதுஙகளுக்கெல்லாம் உண்டானகலகந் தீருமென்றுசொல்லி ஆலயத்துக்குள்ளேயெழுந்தருளினர் பின்பு புலவர்களெல்லாருங் கூடிப்போய் அந்தவைசியரத்நத்தை அன்போடுகண்டு அழைத்துக்கொண்டுபோய்த் தங்கள் சங்கத்திலே யிருக்கப்பண்ணி அவர்திருவடியை அருச்சித்து நல்லசந்தனகளபகஸ்தூரிபுஷ்பங்களாலே அலங்காரஞ்செய்து விசுவசித்துமுன்னே யிருந்துதாங்கள்பாடின அருமையான மதுரம்பொருந்திய தமிழ்ப்பாடல்களைச்சொன்னர்கள் அப்போதந்த ஊமைப்பிள்ளை அப்பாடல்களைக்கேட்டு சிலர் சொல்லாழங்களை மகிழ்ந்தான் சிலர்பொருளாழங்களைமகிழ்ந்தான் சிலர்சொற்கூட்டுகளை இகழ்ந்தான் சிலர் பொருட்கூட்டுகளை இகழ்ந்தான் சிலர்சொல்லின்பங்களைப் புகழ்ந்தான் சிலர்பொருளின்பங்களைப்புகழ்ந்தான் சிலர்சொல்லுறுதிகளையும் பொருளுறுதிகளையுந் தேர்ந்து கொண்டாடினன்.

இப்படிப் புலவர்கள்பாடின தமிழ்களை மனக்குறிப்பினாலதெளியப்பத்தின சிறியசெட்டிப்பிள்ளை மிகத்தெளிந்த நற்கீரர்தமிழையும் கபிலர்தமிழையும் பாணர்தமிழையும் அப்படியே கேட்கும்போதெல்லாம் கொண்டாடி அந்த மூவர்தமிழிலுநுணழந்துசொற்சுவையும் பொருட்சுவையு மிகச்சிறந்திருக்கஅனுபவித்து உடல்பூரித்து மனமொருமித்துச் சிரசையசைத்து மகிழ்ந்துருகி ஆனந்தக்கண்ணீர்விட்டு நவரத்தினங்களையும் தனித்தனியே விலைமதித்துச்சொல்லுந் தங்கள் குலச்செட்டிகள்போல புலவர்கள்பாடின தமிழ்ப்பாடல்களை தராசுமுனைபோல நிறுத்திப்பார்த்து இன்னதிப்படி இன்னதிப்படியென்று குறித்துக்காட்ட நல்வழிதெரிந்தபுலவர்கள் ஒருவருக்கொருவருண்டானபகைதீர்ந்து உறவாளர்கள். பின்பு அப்புலவர்கள்பாடின பாடல்கள் உலகமெல்லாம்பரவிச் சிறந்துவிளங்கின அந்தத்தெய்வப் புலவர்களும் தங்கள் கலகந்தீர்ந்து நூலாராய்ச்சிசெய்து பழையபடி சங்கங்கூடிப் பொலிவுபெற்று வாழ்ந்திருந்தார்கள்.

சங்கத்தார்கலகந்தீர்த்தபடலம்

முற்றிற்று.

ஐம்படித்தாழுவது

இடைக்காடன்பினைக்குதீர்த்தபடலம்.


அறுசீரடியாசிரியவிருத்தம்

குடைக்காடன் பகிக்கண்ணக் குழியருத்தி வேட்கையறக் கொடுத்தகங் ஙைகச், சடைக்காடன்புலவரிகறணிவித்த முறையிதுமேற்றன்னைப்பாடுந், திகா டைக்காடன் பகன்றிகழ்ந்த தென்னபினை முனிந்துதன்னைத் தொழுதுபோ னை, விடைக்காட னுடன்போய்ப்பின் பெழுந்தருளிபினைக்கறுத்தவிபுல்புசொ ல்வாம்.

இதன்பொருள்.

குடைக்குஆளாகியகுண்டோதரனென்னும்பூதத்தலைவனதுபசிதீரும் படி அன்னக்குழியை அவன்கொண்டிருந்த ஆவலடங்க உண்ணும்படிக்குக் கொடுத்தருளிய கங்கைதங்கிய சடாமுடியையுடைய சோமசுந்தரக்கடவுள் சங்கத்தாருடையகலகந்தீர்த்த திருவிளையாடலிதுவாகும் இனிதன்மேல் பா டிக்கொண்டுவந்த பிரபந்தத்தைக்கண்டு மகிழாமல் இகழ்ந்த குலேசபாண்டி யன்மேல்கோபித்து அதனைத் தம்முடைய சந்நிதியில்வந்து முறையிட்டுவண ங்கிப்போன இடைக்காட்டுச்சித்தரோடுசென்று மீண்டும்எழுந்தருளி அவரு க்குண்டாயிருந்த பினைக்கைத் தீர்த்த திருவிளையாடலைச்சொல்லுகின்றோம்.

அதன்பின்புசண்பகபாண்டியன்இந்திரனுக்குண்டாகிய பழியைத்தீர் த்து அவனுக்குமுன்னிருந்த அரசுரிமையும்பின்புமோட்சவின்பமுந் தந்தரு ளிய சண்பகசுந்தரர்பொன்னடிக்கு மிகுந்தஅன்புகொண்டு சண்பகப்பூ மாலை கட்டிச்சாத்திவணங்குகின்ற திருத்தொண்டுக்குத்தகுந்த அந்தரசூடாமணி யாய் விளங்குகின்ற சிவலோகத்தையடைந்தான் அவனுக்குப்பின்பு பிரதாப சூரியன்-வங்கிசததுவசன்-இரிபு மருத்தனன்-சோழவங்கிசாந்தகன்-பாண்டி வங்கிசேசகரன்-வங்கிசசிரோன்மணி-பாண்டீச்சுரன்-குலத்துவசன் வங்கிச விபூடணன்சோமசூடாமணி-குலசூடாமணிஇராசசூடாமணி பூபசூடாமணி குலேசபாண்டியன் என்றிப்படிப் பதினைந்து பாண்டியர்கள் மதுரையை யர சாண்டார்கள். அவர்களில்குலேசபாண்டியன் இலக்கணவிலக்கியமுதலிய எ ப்படிப்பட்டநூல்களின் முடிவுங்கண்டு தெளிந்தவனுதலினாலே முத்தமிழ்ச் சங்கம் அவனுக்கிடங்கொடுத்துக்கூடவிருந்தான், அப்படிக் கல்வி கேள்விக ளினாலே சிறந்தவனென்றுகேட்டு இடைக்காட்டுச்சித்தர் முழுதுந் தெரிந்த கபிலரைச் சினேகங்கொண்டு அவராலே அந்தப்பாண்டியனைக்கண்டு தமிழ் சொல்லவேணுமென்று நினைத்து தாம்பாடின பாடல்களைப் பாண்டியன்முன் னேவந்துசொல்லபாண்டியன் அப்பாடல்களின் சொற்சுவை பொருட்சுவைக ளெல்லாந்தெரிந்தும் தன்மனத்திற்பொருமைபாலேதலையசைத்தல்மனமகிழ் தல்முகமலர்தல்களிலொன்றுஞ்செய்யாமல்பேசாதிருந்தான். அப்போது சங் கத்தாரைவேண்டிவந்த இடைக்காட்டுச்சித்தர் மிகவும்நாணி அங்குநின்றும் சோமசுந்தரக்கடவுள் திருக்கோயிலுக்குப்போய் சந்நிதியிலேவிழுந்து சேவி



த்துதமிழறியும்பெருமானேதன்னைச்சேர்ந்தாற்பெறுதற்குரியசெல்வமே திரு
வாலவாயுடையநாயகனே இந்தப்பாண்டியன் கல்வியிற்சிறந்தவனென்று சொ
ல்லக்கேட்டுவந்து பாடல்கள்பாடினேன் அதற்கு அவன் எவ்வளவுந்தலையசை
யாமல் அவமதித்து அன்புகொண்டுபுகழ்ந்தவர்களுக்கு ஒருபயனு முதவாத
உவர்க்கடல் உப்பங்கழி காட்டுமிருகம்பட்சி முள்மரம் வெறுங்கல்லான மலை
வேம்பாலைநிலம் இவைகளிலொன்றுனை அசேதனம்போலிருந்தான். எம்மை
யனை இப்படிஅவன்னன்னையோ அவமதித்தான் அன்றுசொல்வடிவானஇந்த
அங்கயற்கண்ணம்மையையும் பொருள்வடிவான உம்மையுமே அவமதிப்புச்
செய்தான் ஆகையாலேனக்கொன்றுமில்லையென்று சந்நிதிமுன்னேநின்றிப்
படி விண்ணப்பஞ்செய்துவிட்டு இடைக்காட்டுச் சித்தர் தணியாத கோபத்து
டனே அங்குநின்றும் விரைந்துபோயினர் பின்பு அவர் சொன்ன சொற்கள்
சோமசுந்தரக்கடவுள் திருச்செவிகளிலே அருளோடுமேற்று விரைந்துசென்ற
இடைக்காட்டுப்புலவருக்கும் அவரைத்தொடர்ந்துசென்ற கபிலருக்கும் மன
மகிழ்வாகத்தாமும் ஞானமயமான தம்முடைய இலிங்கவடிவைத்தெரியாமல்
மறைத்துவிட்டு தேவியுடனேசென்று வெளியேபோய்த் தமது கோயிலுக்கு
வடபுறத்திலேவருகிற வையையாற்றுக்குத்தென்பாகத்திலே ஓரிலயந்தோ
ற்றி அதிலே எழுந்தருளியிருந்தார்.

பின்பு சங்கப்புலவர்களும் கடவுள் போனவழியே போய் அங்குத்தோ
ன்றின ஆலயத்தினிடத்திலேதானே வாசஞ்செய்திருந்தார்கள். அன்றிராத்
திரி விடிந்து விடியற்காலம் பள்ளியெழுந்தபின்பு சேவிக்கவந்த அடியார்கள்
ஞானமயமானசிவலிங்கத்தை அங்கேகாணுமல் இதென்ன மாயமென்று அதி
சயித்து சித்தங்கலங்கி இந்தச்செய்தியைப்பாண்டியராஜனுக்கோடிப்போய்த்
தெரிவிப்போமென்று போகும்போது மதுராபுரி பிராணநாயகனைப்பிரிந்தபெ
ண்கள்போலவும் லட்சுமிநீங்கிய தாமரைமலர்போலவும் அழகுகுலைந்து களை
யில்லாதிருப்பதைப் பார்த்துக்கொண்டு போய்ப் பாண்டியனைக்கண்டு நடுநடு
ங்கி நாக்குலர்ந்து ஐயா பாண்டியமகாராஜனே நாங்கள் சொல்லப் பயப்படுகி
றோம் ஆனாலும்உங்கள்குலதெய்வத்தைத் திருப்பள்ளியெழுச்சிகண்டு இன்று
சேவிக்கப்போனோம் அங்கே கடவுள்வடிவான சிவலிங்கத்தைக்காணோம் வெ
ளியே பட்டணங்களெல்லாம் அழகு குலைந்திருக்கின்றதென்று காய்ச்சினவே
லைக் காதிலேசொருகினாற்போலச்சொன்னார்கள் உடனேபாண்டியன் சிங்காச
னத்திலிருந்து அடியற்றமரம்போல மண்மேல் விழுந்து உயிரும் அறிவும் ஒடு
ங்கி மண்பொம்மை கிடந்தாற்போலக் கொஞ்சநேரங் கிடந்து கொஞ்சமும்
ஞாபகமுண்டாகி யெழுந்து இரண்டு கைகளாலுங் குவித்து அழுதகண்ணீர்
வெள்ளத்திலே முழுகி எங்குலதெய்வமே எம்மரசே அடியேன் என்னகுற்றஞ்
செய்தேன் தேவரீர் திரிபுரத்தை யெறித்த வில்லாகவளைத்த மேருமலைக்குப்
போனீரோ, அல்லது பழைபசிவபுரத்துக்குப் போனீரோ, கயிலைமலைக்குப்
போனீரோ தமைமைமறந்து உமமையேதியானிக்கின்ற அடியாருள்ளத்துக்கெ
ழுந்தருளினீரோ, அல்லதுஎப்போதுந துக்கித்துக்கொண்டேயிருக்கிறவே த
முடிக்கெழுந்தருளினீரோ, இப்போதெங்கேபோயினீர் என்று இவ்வாறுகப்
பாண்டியன் துன்பப்படும்போது சிலர் ஓடிவந்து ஓ ஐயா பாண்டிய மகாரா

ஜனை நாங்களொருஅற்புதங்கண்டோம், அதாவது வையையாற்றுக்குத் தென்புறத்திலே பிரமசிருஷ்டி உண்டான நாள்முதல் ஒருநாளுங் கண்டதில்லை இந்தத் திருவாலவாய்க்கடவுள் இங்கிருந்த சங்கப்புலவர்கள்கூட பார்வதிதேவியுடனெழுந்தருளி வாசஞ்செய்கிறரென்றார்கள் அந்த வார்த்தை காதிலே புகுந்திழுக்கவெழுந்து பாண்டியன்பயத்திலேமுழுகிக் காலாலேநடந்துபோய் வையையாறு தன்னுடைய அலையாகியகையிலேலே புட்பங்களைக்கொண்டருச்சனைசெய்துவணங்க தென்கரையிலே பார்வதி தேவியுடனே வாசஞ் செய்கின்ற தங்கள்குலதனமானகட்வுளைக்கண்டு ஓடிவந்துவணங்கி அன்பிலேலே உருகுகின்ற கண்ணீர்பெருகி ஆனந்தக்கடலிலே முழுகிக் கிடந்து பின்னுமெழுந்துநாக்குக்குழறித்தடுமாறிநின்று ஐயாசுவாமிவேதங்களுந்தேடிக்காணப்படாத திருவடிகள் சிவக்கவும் பட்டணமெல்லாம் துன்பப்படவும் ஜகதீஸ்வரியானஎமதுஅன்னையுடனே இங்கேவருவதற்குக்காரணமென்ன அடியேனுலேதாகிலுங் குற்றமுண்டோ அல்லது என்னைச் சேர்ந்தவர்களாற் குற்றமுண்டோ அல்லது என்பகைவர் திருடர் நாட்டுமிருகங்களாலே இடையூருண்டாயினவோ அல்லதுவேதபபிராமணர்கள் ஆசாரந்தப்பிநடந்தார்களோ அல்லதுதருமங்குறைந்ததோதவங்குறைந்ததோ இல்லறந்துறவறந்தவறினவோ எங்கள்குலதெய்வமே தெய்வமே எனக்கொன்றுந்தெரியவில்லை.

கள்ளேறுகடுக்கைநறுஞ்சடையானேபோற்றிபெருங்கருணைபோற்றி
வெள்ளேறுகொடியுயர்த்தவிடையானேபோற்றியருள்விகிர்தாபோற்றி
புள்ளேறுகொடியுயர்த்தபுனிதனயன்றோராதபுனிதாபோற்றி
வள்ளேறுசிறுகுழவிமதிநுதலங்கயற்கண்ணிமணாளபோற்றி.

பாதமலரிணைபோற்றிபன்னிரண்டுகையாணைப்பயந்தாய்போற்றி
வேதமுடிகடந்தபரஞானத்திலானந்தவிளைவேபோற்றி
போதவடிவாய்நால்வர்க்கசைவிலந்துநிறைந்தபரம்பொருளேபோற்றி
மாதவளநீறணிந்தமன்னுவங்கயற்கண்ணிமணாளபோற்றி.

பொக்கமுடையார்செய்யும்பூசைதவங்கண்டுநகும்புராணபோற்றி
தக்கன்மகம்பொடியாகத்திருப்புருவமெரித்தகொடுந்தழலேபோற்றி
செக்கமலக்கண்ணிடந்தகண்ணனுக்குத்திகிரியருள்செல்வாபோற்றி
மைக்குவளையனையமணிகண்டாவங்கபற்கண்ணிமணாளபோற்றி.

என்று பாண்டியன் இப்படி தோத்திரங்கள்பண்ணைக்கேட்டுக் கூடலழகர் ஆகாயவாக்காக, பாண்டியர இப்போதுன்னுடைய தோத்திரத்தைக்கேட்டு நாம்மிகவுஞ் சந்தோஷித்தோம் மெத்தவுநன்றாயிருக்கின்றது ஆனாலுமின்னமொன்றுண்டு அதேனென்றால் உலகத்திலேஉள்ளசிவஸ்தலங்களிலே திருவாலவாய்மிகவுமேலானது இங்கேசுயம்புலிங்கங்கள் அநேகம் அல்லாமலும் அசுரர்-இயக்கர்-சித்தர்-அரக்கர்-தேவர்-முனிவர்-மனிதர் ஆகியஇவர்கள்தங்கள் பெயர்கள்விளங்கிப் பிரதிஷ்டையாகச் செய்த இலிங்கங்கள் அநேகம் இந்த லிங்கங்களில் மேம்பாடுள்ளவைகள் அறுபத்துநான்கு இந்த அறுபத்து நான்கிலு மேம்பாடுள்ளவைகள் எட்டு இந்தஎட்டும் திக்குப்பாலகர்களாலே பூசிக்கப்பட்டன இப்போது நாம்புகுந்திருக்கிற லிங்கம் நமதுதோழனை குபேர

ணுலே பூசிக்கப்பட்டன. இந்தலிங்கங்களெல்லாம் ஓருழிக்காலத்திலேமறை ந்துபோயினவாணுலு மிங்கே இந்தலிங்கம் நமதுதோழன் பூசைசெய்ததான திணுலே இதிலேநாம்வாசஞ்செய்கிறேம். இனி இதுவடமதுரையென்று பே ராகக்கடவது ஆணுலும் நாம்கடம்பவனம் மதுரை-நான்மாடக்கூடல் திருவா லவாயென்கிற அவ்விடத்தைதவிட்டு ஓருநாளுநீங்கமாட்டோமென்ப தனக் கேநன்ருய்த்தெரியும் நீயோ எனக்கபராதியானவனென்று இடைக்காட்டுப் புலவன்செய்தசெய்யுளை நீ அலட்சியஞ்செய்தாயாகையாலே நாமந்தப் புலவ னிடத்திலேகொண்டிருக்கிற தயவினுலே அங்கேமறைந்து இங்கேவந்தோ மென்று சோமசுந்தரப்பெருமான் கட்டளையிட அப்படியோவென்று சுவாமி, சிறியோர்செய்தகுற்றம்பொறுப்பது பெரியோர்களுக்கழகுதானே ஆகையா லே பொறுத்து அடியேனைரட்சிக்கவேணுமென்று பின்னுந் துதித்துவணங்கி ணன் அப்படிவணங்கின பாண்டியனுக்கு இரங்கி யருள்செய்து வடமதுரைக் கடவுள் அவனை அவன்கோயிலுக்குப் போகச்சொல்லித் தாமும் சங்கப்புல வர்களும் மதுரைவந்து சேர்ந்தார்கள்.

பின்புபாண்டியன் விதிப்படிவாழை-கமுகு-சாமரம்-மேற்கட்டி-விள க்கு-பூமாலை-நிறைகுடம்-துகிற்கொடி ஆகிய இவைகளாலே அலங்காரமாக ரத்தினகசிதமான சங்கமண்டபத்திலே செம்பொன்னுசனத்தின்மேலேமாப் பிள்ளைக்கோலமாக இடைக்காட்டுச்சித்தரை அலங்கரித்துப் புலவர்கள்சூழ இருக்கச்செய்து தானும் சிங்காசனத்தின்மே லிருந்து மல்லிகை முல்லைமுத லிய வெள்ளைமலர்களால்செய்த மாலையும் வெள்ளைவஸ்திரமும் வெண்முத்து மாலையுமணிந்துகொண்டு மங்களவாத்தியங்கள் முழங்கவும்வேதப்பிராமணர் கள் ஆசீர்வதிக்கவும்மங்கிலியப்பெண்கள் பல்லாண்டுசொல்லவும் தமிழ்ப்பா டலைக்கேட்டு இடைக்காட்டுச்சித்தருக்குஞ் சங்கப்புலவர்களுக்கும் வரிசைப் படி வஸ்திரபூஷணபரணங்கள் பணிப்பெண்கள் மிகுந்த திரவியங்கள் யானை குதிரை விளைநிலம் முதலானவைகள் நிரம்பக்கொடுத்து எழுதிரூபம்பின்னே காலாலேநடந்துசென்று பரிசுத்தகவிகளான சங்கப்புலவர்களே நான் இப் போது இந்த இடைக்காட்டுச் சித்தருக்குச்செய்த குற்றமெல்லாம் பொறுத் துக்கொள்ளவேண்டும் எம்மடிகளே என்றுதுதித்துவணங்கினுன். அப்போது சங்கப்புலவர்கள் ஐயாபாண்டியமகாராஜனே உம்முடைய குளிர்ந்தசொல்லா கிய மழையினுலே எங்கள்கோபாக்கினி அவிந்தது இன்னமும் இந்தத் திரு வாலவாயில் விளங்குகிற் எங்கள்திருவாலவாய்க்கடவுள் கிருபாநோக்கத்தி னுலே உமக்குமிகுந்த புகழும் குறையாத செல்வமும் உண்டாகக்கடவதென் றுவாழ்த்திஞர்கள் பின்புபாண்டியன்செய்த தவமே ஒருவடிவுகொண்டாற் போல சோமசுந்தரக்கடவுள் அருளாலே அரிமருத்தனபாண்டிய னென்கிற புத்திரனைப்பெற்றுப் பலகாலஞ் சென்றபின்பு அந்தப்புத்திரனுக்குத்தன்னை சாட்சியைக்கொடுத்துச் சோமசுந்தரக்கடவுள் திருவடியைச்சேர்ந்தான்.

இடைக்காடன்பினைக்குதீர்த்த படலம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஐம்பத்தேழாவது

வலைவீசினபடலம்.

அறுசீராடியாசிரியவிருத்தம்.

மின்றிரித்தன்னவேணிவேதியனிடைக்காடன்பின்
சென்றுமீண்டானையான்கொண்டபிணக்கினைத்தீர்த்தவண்ணை
மின்றுரைசெய்துமுந்நீரொறிவலைவீசிஞாழன்
மன்றலங்குழலினுளமணந்துமீள்வண்ணஞ்சொல்வாம்.

இதன்போருள்.

மின்னலைத் திரித்தாற்போலும் விளங்குகின்ற சடாபாரத்தையுடை யசோமசுந்தரக்கடவுள் பாண்டியன்மீது கோபித்துச்சென்ற இடைக்காட்டுப் புலவரிடஞ்சேர்ந்து மீண்டுமவரை மதுரைக்கழைத்துக் கொண்டுவந்து அவர் கொண்டிருந்த பிணக்கைத்தீர்த்த திருவிளையாடலைச்சொன்மேலும். இனி அச்சோமசுந்தரக்கடவுள் சமுத்திரத்திலே வலைவீசி மீன்பிடித்து (அதற்குப் பரிசாக) குங்குமவாசனைசெறிந்த அழகிய கூந்தலையுடைய உமாதேவியைத் திருமணம்புரிந்த திருவிளையாடலைச் சொல்லுகின்றேம்.

பின்பு அந்த அரிமருத்தனபாண்டியன் அரசாளுங்காலத்தில் சோம சுந்தரக்கடவுள் வேறொருதனியிடத்திலிருந்து உலகமாதாவாகிய அங்கயற்கண் ணம்மைக்குரகசியமானவேதார்த்தங்களைச்சொல்ல என்னகாரணத்தினாலோ தெரியாதுபகவான்சொல்லுகின்ற நான்குவேதப்பொருள்களையெல்லாம் அம் மை தீவினைசெய்தவள்போலக் கொஞ்சங்கவலையுண்டானவளாய் அன்பில் லாமற்கேட்க அதுதெரிந்துபெருமான் தேவியைப்பார்த்து அஞ்ஞானத்தை யுடைய பெண்கள்போல நாம்சொல்லுகின்ற வேதப்பயனை அசட்டையாய் மனவொருமையில்லாமற்கேட்டாய் ஆதலாலே இந்தக்குற்றம்போகதருமவி ரதங்களில்லாமல் மீன்பிடித்து இழிதொழில்செய்கின்ற வலையர்மகளாகக்கட வையென்று சாபங்கொடுத்தார். அப்போதுதேவிபயந்து சுவாமி! உம்மைப் பிரிந்திருக்க என்னலாகுமோசொல்லுமென்று வணங்கிக்கேட்க அதற்குச் சோமசுந்தரக்கடவுள் தம்மைப்பிரிந்துபோகிற தேவி துன்பத்தைப்பார்த்து நீகடற்கரையில்வாழ்கிற வலைபர்களுக்கரசன் மகளாகி அங்கே வளருங்கால த்தில் நாம்வந்து உன்னைக் கலியாணஞ்செய்துக்கொள்ளுவோம் நீவருந்தவே ண்டாமென்றுசொல்லித்தேவியை விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தாம் தனி யேயிருக்க அப்போது அந்தச்செய்திதெரிந்து விநாயகக்கடவுள் தந்தைமு ன்னேவந்து இந்தப் புத்தகங்களாலேபல்லவோ இப்படி நடக்கலாயிற்றென் று அங்கேயிருந்த புத்தகங்களையெல்லாம் தம்முடைய ஐந்து கைகளாலும்



வாரிச் சமுத்திரத்திலே போய்விழ வெறிந்தார், உடனே முருகக்கடவுளும் அங்கேவந்து தந்தைகையிலிருந்தசிவஞானபோதநூலைப்பறித்து விரைவிலே அதுவும் கடலிலேபோய்விழ வெறிந்தார். அப்போது சோமசுந்தரக்கடவுள் வாயில்முன்னே காத்திருக்கின்ற திருநந்திதேவரை வெகுண்டுபார்த்து நாம் தனியே தேவியோடு வார்த்தைசொல்லிக்கொண்டிருக்கிற சமயமிதுவென்று நீ நினையாமல் இவர்களிருவரையும் என் உள்ளேவர விடுத்திருந்தாய் இந்தக் குற்றம்போக நீயும் இபபோதேதபோய்ஒருசுறுமீனிகிக் கடலிலேகிடந்தலையக் கடவையென்று சாபங்கொடுத்து பின்புவிநாயகக்கடவுளுக்குச் சாபங்கொடுத்தால் அந்தச்சாபம் தம்மையேதாடருமென்று சாபமிடாமல் முருகக்கடவுளைமாத்திரம் மதுரையில் செட்டிகள்குலத்தில் ஊமைப்பிள்ளையாய்ப் பிறக்கச்சாபமிட்டருளினர். இப்டால் லோகநாயகன் எவலாலே தேவியானவள் வலைப்பெண்ணுகவும் நந்திதேவர் சுறுமீனுகவும்பிறந்துதெங்கேயென்றால் வையையாறுசூழ்ந்த நாட்டிலே உவர்க்கேணிகளும், உப்பங்கழிகளும், அழகாகவளைந்து தாழைகளிருண்டு மதிலாகக்சூழ்ந்திருப்பது அதுவோ தண்டுறைப்பாக்கமென்று சொல்லப்படுவது அங்கே எவ்விடங்களிலும் கேடகத்துள்ளேயடங்கி வாளாயுதத்தைக்கையிலேகொண்டு ஒருவர்க்கொருவர் சண்டைசெய்கிறதுபோல முள்ளுகளையுடைய மடல்களிலேமறைந்து பூக்கள்காற்றலசையதாழைகள்நெருங்கிநிற்கின்ற அவ்விடங்களிலேபுலவுமீன்களை உலரப்போட்டு அவைகளைப் பலபட்சிகளும்வந்து தின்னுமல் அதட்டியோட்டுகிற சத்தமும் அவைகளை விலக்குவிற்கிற சத்தமும், வாங்குகிறவர்கள் சத்தமும் மீன்பிடிக்க வலைவீசுகிற சத்தமும், அந்தவலைகளையிழுக்கிறசத்தமும், கடலின் அலைபோசையடக்க அங்கே நுளையருடைய சிறுபெண்கள் களிமண்ணுலேசெய்த பொம்மைக்குதாழை தனதுமலரிலுள்ளசேறூட்ட கடல்முத்துமாலை சூட்டகுங்குமமரங்கள் பூமாலைசூட்டுகின்றன பின்னும் அங்கேவந்து சமுத்திரத்தில்ஸ்நானஞ்செய்துபோகிறவர்களுக்கு உபசாரஞ்செய்கின்ற தருமப்பிரபுக்கள் போல தாழை கட்டுச்சோறுத பூமலர்ந்துகொடுக்க முத்துமாலைபொன்மாலை பவளமாலைகள் புன்னைமரங்கள் மலர்ந்துகொடுக்கின்றன காய்ந்தமீன் விற்கிற வலையர்கள் குடிசைகள்மேலே கடலிலிருந்துதாவிப் பவளக்கொடிகள் படர வலைச்சிகள் அடிக்கடி குப்பல்குப்பலாகக்கூட்டி யொதுக்கும்படி வாசல்களெல்லாம் கடல் முத்துகளை அலைகளாலே ஒதுக்கிக்கொண்டே யிருக்கின்றன பின்னும் அந்தநுளைப்பெண்கள் விலைகூறிவிற்கிற கெண்டைமீனுக்கு நேராக அவர்கள்கண்களை பிறழ்ந்து விலையுயர்த்தவும் பேசுகிற வாய்வாசமும் கூந்தலில் முடித்திருக்கிற தாழம்பூவாசமு மீனிறற்றத்தைபொழித்துநல்லவாசம் வீசவும் உப்பங்கழியிலேமலர்ந்த குமுதப்பூவிலேமொய்க்கிறவண்டுகள் பனங்கள்ளுக்குடித்தவாயிலும் மொய்க்கின்றனவாகிய அப்பட்டணத்திலே ஒருவன்முன்செய்ததவத்தினுலே தேவர்களிலும் பரிசுத்தஞ்சுக்கொஞ்சம்பாசம் பந்தத்தாலே மீன்விற்றுபிழைக்கிறசாதியிற்பிறந்துமேம்பட்டு நுளையாகின்ற பெரியவாசலுடையவனுப் அவர்களுக்குஆறிலொருபங்குகொடுக்குங் காவலனுய் விடைக்கொடி நாயகனுக்கு மெய்யன்பனுகிய நற்குணனுய் வருங்காலத்தில் அவனுக்குப்பிள்ளையில்லாமல் வெகுநாள் இம்மைமறுமைப்பயன் பெறு

தவன்போல வருந்தி ஒருநாள் கடல்பார்க்கப்போகும்போது கரையோரத் திலே ஒருபுறத்திலே பர்வதராஜன்தவத்திலேயிடையிலும் பாண்டியன்செ ய்ததவத்திலே வேள்வியிலும், புத்திரியாய்ப்பிறந்த லோகமாதாவானவள் தனது நாயகராகிய சோமசுந்தரக்கடவுளின் எவலாலே மீன்விற்கிறவலையன் செய்த பூர்வபுண்ணியபலன் சித்தியாகத் தன்னிச்சைப்படி அவன் அன்புக்கி றங்கினவள்போலத் தனதுசெவ்வாய்மலைத் திறந்தழுதுகொண்டு ஒருகுழ ந்தைவடிவாய் ஒருபுன்னைவிருக்ஷத்துநிழலிலேகிடந்தாள். அப்படிக் கிடக்கி ன்றதை அந்தவலையர்க்கரசன்கண்டு ஓ! ஓ! இந்தப்பிள்ளை ஜலகன்னியோ அல் லது கங்காதேவியோ, அல்லது வனகன்னியோ அன்று கண்களிமைக்கிறதி லேலை இந்தவுலகத்தில் யார்பெற்ற பெண்ணேதரியவில்லை ஆனாலும்பிள்ளை யில்லாதவெனக்கிறங்கி மதுராபுரிவள்ளல் அருள்செய்த பிள்ளையே யிதுவெ ன்று நினைத்து வலத்தோள் துடிக்க அன்புமிகுந்து இரண்டுகைகளாலு மெடு த்துமார்போடணைத்துக்கொண்டுவந்து தனதுகற்புடைமனைவிகையிலே கொ டுத்தான். அவன் கொடுத்தபோது பிறவிக் குருடனுக்குக் கண்கிடைத்தாற் போலவும், நித்தியதரித்திரனுக்குப் பெருநிதிகிடைத்தாற்போலவும்அவன்ம னைவிமகிழ்ந்து வாங்கினள். அவள்வாங்கும்போது வலையர்களெல்லாம் கடல் போலமுழங்க வலைச்சிகளெல்லாருங் கைகள்கொட்டிக் கும்மியடித்துக் குர வைக்கூத்தாடமிகவுமகிழ்ந்து பிள்ளைத்திருநாள்கொண்டாடி அந்தவலையர்க் கரசன்மனைவியானவள் தான்பெறுமற்பெற்றெடுத்த பிள்ளையைத் தன்கொங் கைகளுங்கண்களுங்குளிரத்தழுவி முத்தமிட்டு உச்சிமோந்து மனத்திலன்பு பெருக அழகோடு மாணிக்கத்தீபம்போல்வளர்த்துவருகிறநாளிலே மீன்விற் றுத்தேடின பொருள்களாலே பலவகையான பிள்ளைப்பணிகளும் முத்தும் பாசிமணியும் ரத்தினங்களுங் கலந்துகோர்த்த கழுத்துமாலையும்கைகளுக்கு வளையல்களும் தங்கள்குலத்துக்கேற்ற அழகுவடிவானபிள்ளைக்குப் பின்னும் அழகுபெற அலங்கரித்துப் பாராட்டவளர்ந்து உயிர்களையெல்லாம் தாய் போல்வளர்க்கு மீனாட்சியம்மை தாமுருவலைப்பெண்ணாகி அங்குள்ள வலைச் சிறுமிகளோடுகலந்து கடற்கரைக்குப்போய் மண்ணாலே பொம்மைபண்ணி விளையாடியும் சிறுசுளகிலே முத்துகளைமுகந்துகொழித்தும் தாழம்பூ குங்கு மப்பூபறித்தும் கூந்தல்பின்னே அவிழ்ந்துதொங்கக் கடனீராடியும் தன்னை யன் தனக்குநியமித்தநாளும் தனதுகொடிபோன்ற இடையுங்குறைவாகத்த ன்னையன்மேல் வைத்த அன்பும் ஆசையும் கொங்கைகளுமவளரச் சிலகால த்திலேமிகவும்வளர்ந்து அந்தத்தண்டுறைப்பாக்கத்திலே வாசஞ்செய்திருந்த னள். அக்காலத்திலேசோமசுந்தரக்கடவுள் ஏவியபடியே கொன்றைமாலையும் இளம்பிறைச்சந்திரனும் விளங்குகின்றசடாமகுடமும் நான்குகைகளுங்கொ ண்டதிருநந்திதேவர் தாமுமொருசுறுமீனாகி முருகக்கடவுளும் விநாயகக்கட வுளும் அக்காலத்தேயெறிந்துவிட்ட புத்தகங்களையெல்லாம் தமதுசிறமேற் கொண்டுகடலிலேமுழுகிவிளங்களிக்குக் கன்டுரிந்தகண்ணுங் காணப்படாத கடவுள் திருவடிகளைமனதிற்கொண்டு அக்கடலிலேமுன்னேகலக்கின மந்தர மலைபோற்புகுந்து கலக்கி அங்குவருகிற தோணிபடவுகளை வேகங் கொண்டு மோதி உடைத்துக் கப்பல்களைச்சரக்குடனேகவிழமுட்டிச்சீறி அங்குச் சுழ

சரிக்கின்ற பலசுறுமீன்களையு முடுகத்துரத்தி மற்ற மீன்களை யெல்லாம் தன் கொம்பிலேகோத்திவீசி தாங்கவாரி நீரைக்கலக்கித் தந்திரங்கொண்டு புலவ ருக்கமுதுதந்து மந்தரகிரியைநிகராய் அலையோடுகூடிச்சென்று வலையர்கள்வீ கலையழித்துமேலேதுள்ளியெழுந்து மேகங்களைக்கலங்கக் கிழித்து அந்தக் கடல்வழியே கப்பல்கள்செல்லவொட்டாமல் இப்படித்திரியும்போது அந்தக் கடற்றுறைச்செல்வணை வலையர்க்கரசன் மனவருத்தங்கொண்டு இந்தச் சுறு மீனை எப்படிநாம் பிடிப்பதென்று தன்கிளையோடுகூடி ஆலோசித்துப் பெரிய கயிற்றுவலையைக்கொண்டு அங்குள்ள கடலெல்லாம் பரவப் படவின்மேலிரு ந்துவீசிஞன் அப்படிவீசியெறியவே சுறுமீன் அவனைறிநின்றுவீசினபடவை த்தன்கொம்பாலேகுத்தி உடைத்துவிட்டது அவனைறிவந்தபடவுடைய வே றேயொருதோணிமேற்பாய்ந்தான். அந்தத் தோணிமேலும் பாய்ந்துடைக்க அதைவிட்டு வேறொருசோங்கின்மேலேயேறிப் பின்னுமொரு பெரியவலையை வீசி இப்படி ஒருயிரே பலவுடல்களிலும் புகுந்தாற்போலே அந்தவலையக்கர சன்படவுதோணிசோங்குகளிலேயேறிவலைவீசிஞலும்அகப்படாமல்முன்னே வீசிஞல்பின்னேகிளம்பியும் பின்னைளரிந்தால்முன்னேயெழுந்தும் வலப்புறம் சென்றுவிடப்புறந்தோன்றியும் இடப்புறஞ்சென்றால் வலப்புறங் காணப்படும் ஒருகால் வீசினபோதகப்பட்டு அவன் சந்தோஷித்திருக்கும்போது அந்தவ லையினின்றும்வழுவப் பொதுமகளிருள்ளம்போல மெய்க்காட்டிப் பின்பு உண ர்ந்தார்க்குணர்வரிய பரம்பொருள்காணுமற்போய்மறையவலையர்தலைவன்தன் னைவலாருடனே இப்படிப்பலகாலும் அந்தமீனைப்பிடிக்கத் தக்க தந்திரங்க ளெல்லாஞ செய்தும் அகபபடாமற்போக அவன் இனியார்தான் இந்த மீன் பிடிக்க வல்லவரென்று அந்தக்கடற்கரையி லுள்ளவர்க ளெல்லாருடனுங்கூடி ஆலோசித்துமுடியாமல் மிகவுங்கலங்கி வருத்தப்பட்டு அந்தத் தண்டுறைப் பாக்கத்தான் இந்தக்கடலிலேமந்தரமலைபோலேகிடந்தலைகிற சுறுமீனைப்பிடி ப்பவன்யாரோ அவனை என்மகளுக்கு மாப்பிள்ளைஎன்று மனத்திலே நிச்சயி த்துக்கொண்டிருந்தான் அப்படிநந்திதேவரும் மீனாட்சியம்மையும் அவ்விடத் திருக்குநாளில் அஷ்டகெஜங்களுந்தாங்குகின்ற இந்திரவிமானத்தி லெழுந்த ருளியிருக்கும்சோமசுந்தரக்கடவுள்நினைந்துஉயர்ந்தசாதிகளையும்தங்களிலும் இழிவான ஜாதிகளி லென்று கசந்திருக்கிற வலையர்குலப்பெண்ணை விவாகஞ் செய்யவேண்டி நாம்போய்ப்பெண்கேட்டால் அவன்வெறுத்திகழாதபடியான மீன்பிடிக்கும் வலையணிகப் போவோமென்று திருவுள்ளங் கொண்டு இருண்ட கறுப்புக்கச்சையும் அதிலேசொருகினசிற்றறிவாளரும் தோள்மேலணிந்தவஸ் திரமும் குடுமியிலேமுடித்த நெய்தற்பூமாலையும் பெரிய தேவரிருவரும் வேத ங்களுந்தேடிக் காணுமலிலைக்க ஒருவலபன்வடிவாய் தன் கணதிபர்கள் எண் நம்மூடையக வுள் மீனாட்சிதேவியைவலச்சியாகச்சபித்து தாமும் ஒருவனை ணைரென்றதிசயிகத் திருவேடங்கொண்டு மீன்பிடிக்கவீசுகின்ற வலையைத் தோள்மேற்போட்டுக்கொண்டு அதுமுதுகில் புறத்திலே கனங்கொண்டுதா ங்க மற்றொருதோளிலே சுமையாகமீன்போடுகிறகூட்டத்தைத்தரித்து அது பின்புறமிழுத்துக்கொண்டுபோக அந்தத்தண்டுறைப்பாக்கத்தை நோக்கி உப் பங்கழிக் கரைகளெல்லாம் முள்ளிச் செடிகளும் தாழஞ்செடிகளும் நெய்தற்

பூக்கள் நீர்சுழிகளிலே முழுகிச்சுழல்கின்ற பள்ளங்களும் சுஃறென்றுபத்திக் கின்ற மாடங்களையுடைய பணைமரங்கள் நடக்கும் வழிகளிலே மாட்டின தோ ண்டி கலயங்கள் நிரம்பிக் கள்ளைவார்க்கவும் அந்தக்கள்ளை வாயைத் திறந்து குடிப்பதுபோலச் செவ்வல்லிகள்மலர்ந்து நிற்பனவுமான கடற்கரைச் சோலை கள்சூழ்ந்த வலைச்சேரிக்குவந்து சொச்கலிங்கப்பெருமான்சேரும்போது அமு தம்போன்ற தேவியைப்பெறுமற் பெற்றுவளர்க்கத் தவஞ்செய்த வலையர்க்கர சன்தன்மனத்திலேஅதிசயித்து அங்கேவருகிற யௌவனபருவத்தையுடைய வலையனைக்கண்டு ஓய் நல்ல அழகியநமபி நீயார்சொல்லென்றான்.

அதற்கு நான்கு வேதங்களுந் தெளியக்கூடாத வடிவுகொண்டு வந்த மீன்வேட்டையாடி- ஓய் அரசனே மதுரையிலுள்ளவலையங்களுக்கெல்லாம் தந் தைபோற்சிறந்துள்ள ஒருவலையனுடையமகன்நான்ஆனலும் படைத்துக்காத் துத்துடைக்கும் வல்லெனவேன் அல்லாமலும் இங்குள்ளமீன்களை யல்லாமல் ஆகாயத்துள்ள மீன்களையும் வலீசிப் பிடிக்கமாட்டுவே னென்று சொல்ல அதைவலையர்க்கரசன் கேட்டு இவன்வலபனென்பது மெய்யோ முன்னைசொ ன்னதோன்று இப்போதுசொல்வதோன்றுயிருக்கின்றது ஆனலுமிந்தஇரண் டையும் பரிசோதித்தறிவோ மென்று சிவனுக்கடிமைத்தொழிலை உட்கொண் டிருக்குபவனை வலையர்க்கரசன் அப்படியானல் இந்தத்துறையிலே ஒருபெ ரியமீன் நெருப்பைப்போலகொதிக்குங் கோபத்தைக்கொண்டு கிடக்கின்றது ஐயா அதைநீகண்டு பிடிக்கமாட்டுவையேயானல் என்னுடையமகளை உனக் குக்கலியாணஞ்செய்து கொடுக்கிறேனென்று சொன்னன். அதுகேட்டு ஆண் சிங்கம்போல்வந்தவலையன் உடனேவாயுவேகமாகவிரைந்துசெல்லுகின்ற ஒரு படவின்மேலே பாய்ந்தேறி சங்குகளை வீசுகின்ற அலைகளைத்தடுத்து அந்தப் பெரியகடலைக் கிழித்துக்கொண்டு சென்று மீன்பிடிக்கும்வேலையாளான யௌ வனகுமாரன் தனது மலையையொத்த தோள்மேலே கனத்த தொங்கல்களு டனேகிடந்து தொங்குகின்ற வலையைஎடுத்து நன்றுப்பார்த்து மார்பு புரள வீசினர். அப்படிவீசவே பக்கமெல்லாங்கொண்ட மணிகள் பிரகாசமாகச்சுற் றிலும் வேகங்கொண்டு ஒலித்தும்படர்ந்துவிழுந்துபரவ அதற்குள்ளே சர்ப்ப மானது படத்தை விரித்து வாயைத்திறந்து விழுங்க அகப்பட்ட ஒருமீன் போல குரூரமானசெய்கையுடனே உழலுகின்ற அந்தச்சுறுமீன் அகப்பட்டுக் கொண்டது அது அகப்பட்டவுடனே அடியார் அன்பின் வலைக்குள்ளாகும் கடவுளாகியவலையன் தான்விசிறிபெறிந்தவலைக்குள்ளான மீனைச்சுருக்கி யிழு த்துகடற்கரைமேலேபோட அப்படிப்போடும்போது தேனைக்கண்டு மொய்க் கும் வண்டுகள்போல வலையர்களெல்லாம் வந்து நெருங்கிக் கண்டூர்களோ நாமும் நமதரசனும் நம்முடைய சாமர்த்தியமுழுதுங்கொண்டு பலகாலுமுய ர்ந்து வீசினவலையிலகப்படாதயிந்தமீன் இந்த இளங்குமரன் ஒருகால்வீசின வலைக்குளகப்பட்டதல்லவோ, ஆகையாலே இந்தப்பிள்ளையாண்டான் நம்மு டையகுலத்துக்கொருதெய்வமாகக்கொள்ளப்படுமென்று கொண்டாடினர்கள்

அப்போது அந்த கடற்கரைச்செல்வன் மிகவும் ஆனந்தித்துப் பம்பை முழங்கக் கள்ளொழுகும்வாயையுடைய நுண்ணிடைவலைச்சிகள் குரவையாட படங்கொண்ட பாம்பு கச்சைகட்டின வலைபனுக்குக் குங்குமப்பூமாலையுந்

தகாரஞ்சூழலுமணிந்த கூந்தலையுடைய பெண்ணைத் திருக்கலியாணஞ்செய்து கொடுத்தான் அப்போது கலியாணக்கோலங்கொண்ட மருமகனும்வேல்போலுங் கண்களையுடையமகளும் ஆகாசத்திலே விடைமேலேறித்தங்கள் சுபாவவடிவுகொண்டு தோன்ற கறைமேற்கிடந்த சுரும்பினும் தன்வடிவுகொண்டு நந்தியாய்முன்னேதோன்ற விடைமேலழகராய்க்காட்சிகொடுத்து அவர்கிருபாநோக்கம்பெற்றதிலேல பூருவகருமத்தால்வந்த அந்தப் பிறவியிலுண்டான சிற்றறிவு நீங்கிக் கடற்கரைச் செல்வனுக்கு நல்லறிவுதோன்றி மாணிக்கவல்லியோடுகூடின பொன்மயமாகிய மேருமலையை வில்லாகத்தரித்தசோமசுந்தரக்கடவுள் திருவடி நிழலின் கீழேவிழுந்து வணங்கி,

இரக்கமிலிந்தயாக்கையெடுத்தழலேழையேனைப்
புரக்கவின்றென்போல்வந்தடுண்ணியவடிவம்போற்றி
அரக்கெறிபவளச்செவ்வாயணங்கினைமணந்தென்பாசங்
காக்கவெள்விடைமேனின்றகருணையேபோற்றியென்றான்.

என்றுதுதிக்கின்ற அன்பனுடைய மலர்மிசை யேகுவானை சோமசுந்தரக்கடவுள் ஓய் கடற்கரைச்செல்வனே நீபலகாலமாகப் பிள்ளையில்லாமல் வருந்துகின்றதைக்கண்டு நாமபார்வதியை உனக்குமகளாகக் கொடுத்துதகுந்தபடியேநாமும் மருமகனுகவந்து விவாகஞ்செய்துகொண்டோம் இனிமேல் நீ இன்னமும்.இந்த உலகத்திலேகுபேரன்போலக் குறையாதசெல்வங்கொண்டு சுகபோகத்திலே முழுகிவாழ்ந்து பின்பு நமதுகுலத்தை யடைவாயென்று பெண்ணைக்கொடுத்த மாமனுருக்கு நல்லருள்செய்து அந்தத்தருமசொரூபமானமால்விடைமே லேறினபடியே திருநந்திதேவரும் அடியார்களுஞ்சூழ ஆகாசமார்க்கமாக உத்தரகோசமங்கைக்குப்போய் அங்கேயிருந்து அநாதிமூர்த்தியானகடவுள் நான்குவேதங்களுந் துதிக்கும் பாதங்களைத் தேவிவணங்கிக்கேட்க, அவளுக்கு வேதப்பொருள்களெல்லாந் திரட்டித்தேவாமிர்தம்போலத் தேவிகாதுகள் நிரம்பப்படிகட்டியருளினர். அப்போது அங்கே அறுபதினாயிரம் அடியார்களுக்கும் கிருபைசெய்து பாசக்கடலைக்கடக்கப்பண்ணி அழியாதசோபானந்த வீட்டைக்கொடுத்துப்பின்பு அங்கயற்கண்ணம்மையுடனே கூடி சுந்தரபாண்டியனுக வுலகாண்டபெருமான் மதுராபுரிக்கெழுந்தருளினர்.

வலைவீசினபடலம்

முற்றிற்று.

க

சிவமயம்.

ஐம்பத்தெட்டாவது

வாதவூரடிகளுக்குபதேசித்த படலம்.

கோச்சகக்கலிப்பா.

கலைவீசுமதிச்சடையோன்கடற்றுறைவன்றலைச்சென்று
வலைவீசியவன்பாசவலைவீசும்பரிசிதுவே
வலைவீசும்புனல்வாதவூரைவந்தவிச்சைவலி
நிலைவீசிப்பணிகொண்டநெறியறிந்தபடிமொழிவாம்.

இத்தன்போருள்.

கிரணங்களைவீசுகின்றசந்திரனைச் சடையில்தரித்தருளிய சோமசுந்தராக்கடவுள் கடற்றுரைக்குத்தலைவனுகிய பாதவர்தலைவனிடஞ்சென்று அவனனுமதியால் கடலில் வலைவீசி மீன்பிடித்து அவனுக்குத்திருக் குமாரத்தியாயவதரித்திருந்த உமாதேவியாரைத்திருமணம்புணர்ந்து அதனல் அவனது பாசமாகிய வலையையறுத்து அருள்புரிந்த திருவிளையாடலிதுவாகும். இனி அலைகளை வீசும் நீர்வளம்பொருந்திய திருவாதவூரில் அவதரித்தருளிய வாத வூரடிகளுக்கு அவ்விச்சையினது சத்திகெடும்படி அதனதுதன்மையை மாற்றி அப்பெரியோரைத் தமது அடிமையாக்கிக்கொண்ட அற்புதத்தை யாமறிந்தபடிச் சொல்லுகின்றும்.

உலகத்திலே நல்லோர்கள் தங்களுக்கு வரும்பொருளும் செலவும் தெரிந்து குடும்பத்தைப் பாதுகாத்துப் பொருள்வேண்டிக்கொடாதசெல்வரிடத்திலே போகாதிருத்தல்போலப் பாண்டிநாட்டிலுள்ள வயல்கள்குளங்களெல்லாம் நிரம்பப்பாய்ந்து தருமம்வளரச்செய்து கடலுலவாப்பென்று பாயாதவையையாற்றங்கரையிலே யிருக்கின்றது திருவாதவூரென்னுந் திவ்யநகரம் அவ்வூரில் எப்போதும்திருவிழாக்களும் வீடுகளெல்லாம் விருந்தோடுண்டலும் பிள்ளைப்பேறுகளின்மகிழ்ச்சியும் வேதமோதுதலும் மத்தளமுழங்குகின்ற நாடகசாலைகளும்மேகங்கள் நீங்காது சஞ்சரிக்கின்ற சோலைகளும் முப்போகவிளைதலிலுலே எப்போது முழுதுகொண்டிருக்கிறவயல்களும் உயிர்நிரம்பியவுடல்போல விளங்குகின்றன அப்படிப்பட்டவூரிலே அமாத்தியப்பிராமணர் குலத்தில்வேதநெறியும்சைவாகமநெறியும் விளங்கவும்விஷ்ணுவஞ்சனையாலே செய்த புத்தமதமாகிய இருள் தோற்றோடவும் சோமசுந்தராக்கடவுளருளாலே ஞாலேதய சூரியன்போலே ஒரு பெருந்தகையார் அவதரித்து திருவாதவூரென்னும் பெயர்கொண்டு தங்கள்குலத்துக்குத் தக்கபடியே சடங்குகளெல்லாம் செய்யப்பெற்று இளஞ்சந்திரன்போல் வளர்ந்து வேதமுதலான அறுபத்துநான்கு கலைஞானங்களும்பதிணறு வயதுக்குள்ளே உணர்ந்திருக்க இவர்செய்திபைத்தெரிந்தவர்கள் போய்ச்சொல்ல அரிமருத்தனபாண்டியன்



கேட்டு வரவழைத்துக்கண்டு மகிழ்ந்து தகுந்த சிறப்புச்செய்து தன்அரசாட்சிக்குத் தகுதியான மதிமந்திரித்தனங்கொடுத்து மேம்படுத்திக்கொள்ளஇவர்எல்லாக்கலைகளையும் உறுதியாக உணர்ந்தவராகையால் தனுர்வேதத்திலும் மனுசாஸ்திரத்திலும் விதிப்படி அந்தப்பாண்டியனுக்குக்கண்போன்று முழுதுந்தெரிந்த மந்திரிகளெல்லாருக்கு முதல்மந்திரியாப்பகைவர்வலிகளையடக்கி, இறைப்பொருள் வாங்கியும் சொல்லக்கூடாத பலவகைத் தீவுகளிலும் செங்கோல்செலுத்தவல்லவரான அரசர்களெல்லாம் தங்களிடத்துள்ள அரும்பொருள்களை வரவிடுத்து நல்லவர்களா யொப்புரவான நட்புக்கொள்ள நடந்து அரசனுக்குக் கண்ணுங்கவசமும்போல் ராஜகாரியஞ்செய்து தமது தயவிலேலே தமதுவுறவினர்போல எல்லாருமகிழ்ச்சிகொள்ளச்சந்திரன்போலுங் குடைநிழல்செப்பித்து நீதிசெலுத்திவாழுங்காலத்தில் நித்தியாநித்தியவஸ்துவின்லக்ஷணம் இன்னதெனப் பகுத்தறியும் விவேகந்தான்றிஇகபரபோக விரகராய்சமாதிசட்க சம்பத்திகொண்ட முமுட்சுவாகிபுத்தர்முதலானபுறச்சமயமார்க்கங்களும் வேதசாஸ்திரங்களைத்தழுவினஉட்சமயங்களும் மனமாசறுத்துச் சிவனருளைத்தெளிவிக்கமாட்டா அதனிலேமும்மலங்களும்போகா அதனிலே வீடுங்கிட்டாது ஆகையாலேபத்திசெய்து சிவனருளைப்பெற்றபத்தர்களுக்கேயல்லாமல் யார்க்கும்வீடுசேரக்கூடாதென்று பொதுவான வேதஞ்சொல்லுதலிலேலே அந்தமெய்ப்பொருளைநாடுதார்கள் அந்தமெய்ப்பொருளின் றெளிவெல்லாம் சத்திநிபாதருக்கு விளங்கச்சொன்னதேஆகமம் அந்தவேதாகமங்களின் முடிவிலேவிளைகின்றபொருளின் பேதாபேதங்களானபிணைக்குகளையொழித்து அஞ்ஞானமாகிய கட்டையவிழ்த்துபதியாகிய தன்னையும்பசுவாகிய என்னையும் தெரிவிக்கின்ற போதனுகிய குருபரன் வருவதெக்காலம் இன்னும்மறைப்பில்லாத மெய்யன்புக் கெளிபதாக விளங்குகின்றஅருட்குருவான ஞானசாரியனது நிறைந்ததிருவருளையல்லாமல்இந்தக்கொடிதானவெவ்வியபாசத்தை நல்லகேள்விகளாலே போக்கிக்கொள்வோ மென்பதுதெப்பத்தைக்கொண்டு நீந்தாமல் வெறுங்கையாலேகருங்கடலைநீந்த நினைப்பதுபோலல்லவோவென்று வாதவூரடிகள் இன்பவீட்டைச் சேரவேண்டிய ஆசைக்குள்ளே கட்டுண்டு வேதாகமநூல்களையுணர்ந்த பெரியோர்கள் திருக்கோயிலுக்கு வரும்போதெல்லாம்போய்க்கண்டும் கண்டபோதெல்லாம் விசாரித்தறிந்தும் இப்படிஅநேகம் பெரியோர்களைக்கண்டுகண்டு விசாரித்துணர்ந்த பொருள்களெல்லாம் தாகவிடாய்கொண்டவர்கள் உவர்நீருண்டாற்போலமனதுக்குப் பொருந்தாமல் அரசனுக்குஉயிருங்கண்ணுமாய் மந்திரித்தனத்தையுஞ்விடாமல் சோமநாயகனிடத்தே அன்புகொண்டு நடக்கின்ற பெண்பிள்ளைப்பேறிலே தேவர்களுபிரைக் காப்பாற்றும்பொருட்டு சமுத்திரத்திற்றோன்றிய விஷத்தையுண்டகடவுளிடத்தே உள்ளன்புகொண்டு ராஜகாரியமுங்கைக்கொண்டு இப்படிநடக்கின்றவொருநாள் அரிமருத்தன பாண்டியன்சபைக்குப்போய் அவனைதிரேநிற்கும்போது குதிரைபரிபாலர்கள்வந்து அரசனைக்கண்டுவணங்கிஒருபுறத்தேநின்று ஐயா பாண்டியமகாராஜனே நம்முடையகுதிரைக்கூட்டங்களிலேஇறந்த குதிரைகள்போகமிஞ்சின குதிரைகளெல்லா முழுதுநோய்கொண்டவைகளும் அதிகவயதுசென்ற கிழங்களுமா

யிருக்கின்றனவே யல்லாமல் நல்லகுதிரைகள் ஒன்றுவது கிடையாதென்று சொன்னார்கள்.

அதுகேட்டஅரிமருத்தனபாண்டியன் வாதவூரடிகளைப்பார்த்து இன்றையத்தினமேநீர்போய் நம்முடையபொக்கிஷசாலையைத்திறந்து வேண்டிய திரவியங்களெடுத்துக்கொண்டுபோய்க் கடற்கரையிலே குதிரைகள் வந்திறங்குவனதரிந்து நல்லசமயங்கொண்டு தாவத்தக்க குதிரைகள்வாங்கிக்கொண்டுவருவதற்குப்போமென்று விடைகொடுத்தனுப்பினன். அப்போது மனவேறுபாட்டினே மந்திரித்தனஞ்செய்துகொண்டு வருகின்றவாதவூரடிகள் கஜானு அறையைத்திறந்து நல்லகுதிரைகளாக வாங்கத்தக்க திரவியங்களை வேண்டியமட்டும் எடுத்துக்கொண்டு தாழிறுக்கிப்பொக்கிஷத்தை பூட்டிக்கொண்டு சந்திரகுலத்துப் பாண்டியனிடத்திலே உத்தரவுபெற்றுப்போகின்றவர் தாம்கொண்டபணமூட்டைகளை ஒட்டகங்களின் மேலேற்றி முன்னேபோகவிட்டுப் பின்பு ஆகாயத்தைபளாவிய சோமசுந்தரக்கடவுளின் திருக்கோயிலுக்குப்போய் பொற்றுமரைக்குளத்திலே ஸ்நானஞ்செய்து அந்தக்குளக்கரையிலிருக்கிற சித்திவிநாயகக்கடவுளைவணங்கிக்கொண்டு கருணைநாயகியான அங்கயற்கண்ணியெம்பிராட்டியினுடைய சிவந்ததாமரைபோலுந் திருவடிகளைவணங்கினபின்பு வருணனுடைய வ்யற்றுநோயைத் தீர்த்தாண்ட சந்திரசேகரராகிய சோமசுந்தரக்கடவுளினுடைய ஸ்ரீபாதங்களைவணங்கிமுன்னேநின்றுசுவாமினைக்கொருகுறைமுடிக்கவேண்டும் அதாவது இப்போது அடியேன்கொண்டுசெல்கின்ற பொருள்களையெல்லாம் உமக்குப் பஞ்சேந்திரியங்களையும்வென்று வேண்டுகின்ற உம்முடைய அடியார்களுக்குமே ஆகச் செய்யவேண்டும். ஓ! ஓ! வெள்ளிபம்பலத்தில் திருநடனஞ்செய்கின்ற கடவுளே இதுவேனைக்குள்ளே குறையென்று வேண்டிநின்று துதிக்கின்றவாதவூரடிகளுக்குச்சோமசுந்தரக்கடவுள் இன்னருள்போலும் ஆதிசைவனுகிய ஒருகுருக்கள்முன்னேவந்து விபூதிகொடுத்தார். அப்படிவிபூதிகொடுக்கப்பெற்றவாதவூரடிகள் நமக்குஇதுபோலு நல்லசகுனம்வேறில்லை இன்னமிதுவே நல்லவழிக்குக் காரணமென்று இரண்டுகைகளையுமேந்திவாங்கித் தரித்துக்கொண்டுவேதநாதனைகடவுளைவணங்கி விடைகொண்டுதிரும்பிப் பலவாத்தியங்கள்முழங்கவும், பதாதிகள்சூழவும், இரட்டைவெண்சாமரைகள்வீசவும் பவளக்கால்கொண்டசந்திரன்போலும் வெள்ளைக்குடைநிழலின்கீழே பொன்னலும் ரத்தினத்தாலுஞ்செய்த பல்லக்கின்மேலேறிக்கொண்டு நடந்தார்.

அப்படி அவர்வழிக்கொண்டு நடக்குமுன்னே வெள்ளியம்பலத்திலே கான்மாறியாடின கடவுள் வாதவூரடிகளினுடைய இருவினையொப்பும் மலபரிபாகமும்கண்டு அவரை அடிமைகொண்டு பணிகொண்டருள நினைத்து வேதங்களுந்தேடிகாணக்கூடாத தமதுகிருபையினுலே ஒருபிராமணகுலக்குருவாகித் தமதுதிருப்பாதங்களைவிட்டுநீங்காதபலசீடர்களுடனே திருப்பெருந்துறைக்குவந்து ஒருகுருந்தமரத்தினிழலடியிலே யெழுந்தருளியிருந்தனர் பின்பு கடல்போலுந்திரண்டசேனைகளுடனே முல்லைநிலங்களும் பாலைநிலங்களும்கடந்து எழுபிறப்பாகிய கருங்கடலைக்கடக்கவருகிற வாதவூரடிகள் கிருபைக்கடலாகிய பரமேஸ்வரன்நிறைந்து விளங்குகின்ற திருப்பெருந்துறை

யை அடித்துவரவர மனத்திலே ஆனந்தக்கடல்பெருகிக் கைகளைத் தலைமே
லே குவித்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீரொழுக வினைகளைப் போக்குகின்ற
கடவுளருளுங்கூடவந்து இதுபித்தென்று பிறர் நகைக்க வருவதான காலாஞ்
சத்தி பதியவும் தமது மெய்யறிவை மூடுகின்ற மும்மலங்களினின்றும் பய
ந்து சுமை தாங்குகின்றவனையும் பிணியாளனையுமொத்து நெருப்பிலிட்ட வெ
ண்ணெய் போலத் தமது மனமுருகக்கண்டு என்ன காரணத்திலோ தெரி
யவில்லை இங்கே என் மனமுருகுகின்றதிலே என்னை மறைந்திருக்கின்ற
மனவலியைக் கருக்குகின்றவனுப் என்னையாளுங் கிருபைக்கடல் விளங்குவ
தான இடமேயிதுவென்று திருப்பெருந்துறைக்குவந்து மழுவை வலங்கொ
ண்ட கடவுள் திருக்கோயிலுக்குள்ளே புகுந்து அங்குள்ள தீர்த்தத்திலே மு
ழுகிச் சந்நிதிமுன்னேவந்து தேகம் மண்ணிலேபடவிழுந்து வணங்கிக் கடவு
ளுடைய உண்மையான புகழைத் துதித்துக் கொண்டு ஆலயத்தினிடத்தே
திருக்கோயிலை வலமாகவரும் வாதவூரடிகள் மூலமறையும் ஓதிமுடியாதபொ
ருளைச் சிலமுனிவோர் தெளிய மோனவழியைத் தெளிவிக்குங்கோலமானது
வாசஞ்செய்கின்றதான வொருகுருந்தமரத்தைத் தமக்குமுன்னேகண்டார்.

அங்கே வேதசாஸ்திரங்களொருபுறத்திலும் உண்மைவழியான சிவ
ஞானபோதநூலொருபுறத்திலும் புராணங்களோடுகூடின இசைநூலொரு
புறத்திலும் உட்சமயம் புறச்சமயமென்னும் வேறுபாடான நூல்களொரு பு
றத்திலும் வாய்விட்டு முழங்கவும், வேதங்கள் சொன்ன அறம் பொருள் இ
ன்பம் வீடாகிய நான்கையும் நான்கு வேதங்களாலும் காணுதற்கரிதான வீ
ட்டுக் காரணமாமென்று சைவாகமங்களிலே சொல்லுகின்ற சரியை கிரியை
யோகம் ஞானமாகிய நான்கு முடிகளையுங் கண்டுணர்ந்து பெரியதான மாணு
க்கர் கூட்டங்களும் விடு விடை பேசிக்கொண்டிருக்கவும் சரியைதெரிந்த மெ
ய்யடியார்களும் கடவுளுக்கின்பமாகிய கிரியைசெய்கின்ற நல்லோர்களும் வி
ளங்குதலான சிவயோகந் தெரிகின்ற அப்பியாசிகளும் ஆசாரியத் தன்மை
கொண்டு போதிக்கின்ற சிவஞானிகளுமாக அளவில்லாதவர்கள் நிறைந்திரு
க்கவும் விரதங்களைவிட்டு ஆடாமலும் பாடாமலும் சகம் பேயென்று தம்மை
ச் சிறிக்க அழுகையு முவகையுங்கொண்டு பாசம்நீங்கிய கண்களாலே சிவவடி
வைத் தெரிசித்துக்கொண்டு உலகந்தெரியாமல் உலவுகின்ற அநேகம் வைரா
க்கியர்கள் கூடியிருக்கவும் மறைப்பில்லாத இருதயமாகிய ஆகாயத்திலேகுற்
றந்தீர்ந்து விளங்குகின்ற ஞான சூரியனுக்கு உதையாஸ்தமயங்களில்லாமை
யினாலே இராப்பகல்தெரியாமலிருந்து செய்கின்ற நித்திய கருமானுஷ்டான
விரதங்களை விட்டிருக்கின்ற வித்துவான்களுங் கூடியிருக்கவும் கோவணமே
வஸ்திரமாகவும் கையிற் பிச்சைவாங்குதலே சோறுகவும் சிவனடியார்களை
உறவாகவும் உருத்திராக்ஷங்களை ஆபரணங்களாகவும் வெறுநிலமே படுக்கு
மிடமாகவும் பகல் இராத்திரி ஆதி அந்தம் நடு இல்லாத இடத்திலே தூங்
குவதே அவர்களுக்கு வாழ்வாகவும் இப்படியாகிய அநேகம் அடியார்கள்
கூட்டங்களின் நடுவே கல்லால விருக்ஷத்தையொப்பான குருந்தமரத்து நிழ
லடியிலே ஒருகையிலே சிவஞானபோதமெழுதிய புத்தகமும் ஒருகையிலே
சின்முத்திரையுங் கொண்டிருக்கின்ற கருணை மூர்த்தியைத் தரிசித்து உட

னே அம்பலத்திலாடிய ஆனந்தவடிவமும் வடவாலவிருக்ஷத்தின் கீழிருந்து சனகாதிகளுக்கு அசைவறச்சொன்ன வடிவமும் ஆகிய இரண்டும் இப்போது நாயினேனுக்கு எளிதாக இங்கே தோன்றுகின்ற இந்த வடிவமேயென்று அப்போது கடவுள் திருவுள்ளக்குறிப்பு தம துள்ளத்துக்குத் தோற்றுவிக்கத்தெரிந்து முன்னேவந்து வணங்கி இரண்டு கைகளையு முடியின்மேலேறக்குவித்து துன்பமான வெவ்விய பிறவி வலையை அறுத்துக்கொள்ளவந்த திருத்தொண்டரான வாதவூரடிகள் தாம் காணுதற்கு நல்லவராய் எளிதாக வந்து தமது அன்பாகிய வலைக்குள்ளகப்பட்ட கடவுளாகிய ஞானதேசிகர் அருள்வலைக்குளகப்பட்டு உடம்பெல்லாம் நெக்கிட மனமுருகிய நல்லொழுக்கத்தையுடைய மாணாக்கர்கள் பக்குவந்தெரிந் துபதேசிக்கின்ற ஞானதேசிகனென்று சொல்லும்படி மூலவாகமத்தைச்சொன்ன கடவுள் திருவடிகளின் மேலே விகசிதமான செங்கழுநீர்மாலையை வன்கழலாகச்சுற்றி சந்தனக்குழம்பாலே அலங்கிருதஞ்செய்து காலமுங் காணக் காட்சியு நிமித்தமுங் கடிந்தவராய் நிற்க அப்போது ஞானதேசிகரானகடவுள் வாதவூரடிகளுடைய ஒழுக்கத்தையும் பேரன்பையுங்கண்டு அவருடைய உடல்பொருளாவி மூன்றையும் தத்தமாக வாங்கிக்கொண்டு மனக்கண்ணிலே ஆணவம் கன்மம் மாயையென்னும் மும்மலங்களையும் போக்கிப் பாதகமலத்தையுஞ் சூட்டிச் சென்தாமரைபோலுந் திருக்கையை அவர் தலைமேலேவைத்து சூட்சும பஞ்சாக்ஷரத்திலே சூழ்ந்த பாசக்கட்டையறுத்து மெய்ஞானந்தம் விளைநிலத்துய்த்துப் போக்கு மீட்சியுட் புறம்பிலாப் பூரணவடிவமாக்கினர்.

அப்போது ஒப்பற்ற ஞானவிளக்காகிய கடவுள் பார்த்த பார்வையாலே இரும்புண்ட நீர்போலே தம்மைப்பற்றி வாங்கிக்கொண்ட பரிசுத்தனையும் குருபதேசத்தையும் தம்மை மூடியிருந்த பாசத்தையும் தம்மையும் மறந்து மெய்ஞ்ஞானசொரூபமாய் ஒன்றுந்தெரியாதிருந்தார் வாதவூரடிகள் பின்பு தேனும், பாலும், கற்கண்டும், அமுதமாகத்தித்தித்து, ஊனும் உள்ளமும் உருக்கஉள்ளொளியைத்தெரிந்து ஆனந்தமானஆறுநிரம்பக் கரைபுரத்தேகசிவதுபோல நீங்காத ஞானவாக்கு சரஸ்வதிநாவிலேவந்து குதிகொள்ள கும்பிட்டகைகளும், நடுங்கியதலையும், நீர்துளும்ப அழுகின்ற கண்களும், புளகாங்கிதமானதேகமும் நாக்குத்தழுதழுத்த அன்புள்ள வார்த்தைகளுமாகத் தம்மை இழந்து அக்கினியிலேசேர்ந்தநெய்போலப்பின்னுமுருகி வணங்கித் துதிப்பவராய் குற்றமில்லாதசொற்களாகிய மாணிக்கங்களைப் பத்திசெய்து முழுதும் அன்பாகிய கயிற்றிலே வரிசையாகக்கோத்து மாலையாக அழுது சாத்துகின்றமெய்யன்பராகியவாதவூரடிகளுக்குஞானதேசிகராகியகடவுள் மனமகிழ்ந்து எக்காலமும்வழுவாமல்விளங்குவதாக மாணிக்கவாசகனென்று திருப்பேர் கொடுத்தருள வாதவூரடிகள் தமதுபாட்டுக்கு மனமகிழ்ந்தருளின குருபரன் திருவடிகளின்மேலே ஆநந்தக்கண்ணீராட்டிச் சொற்களாகிய மலர்களையணிந்து தற்போதமாகிய நல்ல அமுதத்தை ஊட்டி தற்பரஞான ஓமாக்கினியை மூட்டிச் சிவபூசை செய்வதன்மேல் முயற்சியுடையவராக அப்படி ஆசையிலுண்டாகின்ற பிறவிவாசனை தீர்ந்து மாணிக்கவாசகரான வாதவூரடிகள் தமது ஞானாசாரியனுக்கு மாணிக்கராய்ச்சொல்லுகின்ற வேதாகமமான உபநிடதப் பொருள்களைக்கொண்ட பாட்டல்களையெல்லாங்கேட்டுப் பின்னும் அந்தப்பாட

ல்களிலமிருந்த நேசங்கொண்டவராய் அப்படிப்பாடச்செய்து கடவுள் இன்னமும்சிலகாலம் வாதவூரடிகள் திருத்திக்கப்பாடுகின்றமாணிக்கவாசகங்களைத் தமது திருச்செவிகளாலேகேட்கவும் அவர்கையிலுள்ளபொருள்களையெல்லாம் பத்தியாகிய பெரிய அன்பைக்கொடுத்து வாங்கித் தமக்கு வேண்டிய திருப்பணிகளைக்கொண்டு பாண்டியன் இவருடைய குணங்களெல்லாந் தெரிந்துகொள்ளச்செய்து வீடுபெறச் செய்யவும் புத்தரை வாதுசெய்து முடிக்கவும் திருவுள்ளங்கொண்டு வாதவூரடிகளைப் பார்த்து மயக்கிச் சிறிதுகாரியமுண்டு இங்கேயிருவென்று அடியார்களுடனே தமது திருவுருமறைந்தருளினர்.

அப்போது கனவிலேதான்றும் பொருள்போலக் கடவுள் தமதுகிருபா சொரூபத்தைக் காட்டி மறைத்தவுடனே வாதவூரடிகள் கலக்கமாகிய கடலிலேமுழுகி இதென்னகனவோ அல்லதுகனவோ இன்றுநாதானவர் நாய்க்குத்தவிசிட்டநன்மைபோலே அடியேனுக்குநினைக்கவுங்கூடாத தமது திருமேனியைக்காட்டி அடிமைகொண்டு விட்டுப்போனதென்ன காரணமென்று சந்தேகித்துப்பின்னுமனந்தேறி எம்பெருமானே! உம்முடைய அடியார்திருக்கூட்டத்திலே என்னைக்கூட்டிக்கொள்ளாமல் என்னையும் என் வினையையும் விட்டுப்போனீரோ அப்படி நீர்போக அடியேன் வஞ்சனைசெய்கின்ற வினைக்குப்பாத்திரமான இந்தவுடலைத்தீயிலுமிடாதிருக்கின்றேன் அல்லது மலையிலிருந்துருண்டுவிழுந்து அழியாதிருக்கின்றேன் வாளால்வெட்டியாயினுங் குறையாதிருக்கின்றேன். இப்படிநான்செய்யப்பயந்திருக்கிறது இந்தவுடலும் உமதுடமையென்றல்லவோ அல்லதுதாழுகவாழுலும்சாகவில்லை சுவாமீ உம்மைப்பிரிந்திருக்கவுங்கூடவில்லை நானென்னசெய்வேன்சுவாமிசுவாமியென்று இரங்கிப்புரண்டழுது, பின்னும் தரித்திரமுகிய ஒரு பிறவிக்குருடனுக்குத் தன்கையிலேகிடைத்த அதிகவிலைபெற்றமாணிக்கம்போலவும் மழலைச்சொல்நிறம்பாத ஒருசிறுகுழந்தை கையிற்கொண்ட செம்பொன்மணிக்கிண்ணம்போலவும் எந்தத் தேவர்களுக்குங் கிட்டாத நீர் எளிதாகவந்து அடிமை கொண்டருளிய அருமைதெரியாத அடியேனைத் துன்பக்கடலிலே முழுகச்செய்து உம்மைப்பிரிந்தறியாத அடியார்களுடனேநீங்கிப்போயினீர் ஆதலால்கல்லாதமூடனுன் என்குறையேயல்லாது உம்மாலே என்னகுறை.

மண்ணுதியாழுறுமனந்துழாவித்தடுமாறிப்
புண்ணுகியெனைக்காணுதுழல்கின்றேனைப்போதவருட்
கண்ணுலவைமுழுதுங்கரையநோக்கியான்யானென்
றெண்ணுவினைத்தந்தாயெங்குற்றாயோவெந்தாயே.

வாணுதியைந்துமுதல்வகுத்தவோசைமுதலிந்து
மாணுதியங்குமன்மாதிரான்கும்வழியடைப்பத்
தேணுதியறுசுவையுங்கழியவூருந்தெள்ளமுதும்
யாணரநல்கினையாலெங்குற்றாயோவெந்தாயே.

மாசாய்மறைக்குமலவலியும்நானும்வேறின்றி
யாசாவிகாரமலமாயினேனைப்பொருட்படுத்திப்
பேசாதவின்புருவினின்றுடென்னைப்பின்வைத்த
வீசாவினையிங்கெட்டெங்குற்றாயோவெந்தாயே.

என்று வாயைத்திறந்து அழுது பிரலாபித்து அப்போதின்றகன்றைப் பிரிந்தபசுவைப்போலே மனங்கரைந்து கோபுரவாயிலின்புறத்தேபோய் அங் கேதிரண்டுநின்ற பாண்டியன் சேனைகளைப்பார்த்து நீங்கள்முன்னேபோய்பா ண்டியனுக்கு ஆடிமாசம்கப்பலிலிருந்துகுதிரைகள்வந்திறங்குமென்று சொல் லுங்களென்றுசொல்லி யனுப்பிவிட்டு வாதவூரடிகள் திருபபெருந்துறையிலே தானேயிருக்க குதிரைவீரர்களும்,தர்வீரர்களும் மதுரைக்குப்போய் பாண் டியனவணங்கி உள்ளதைச்சொன்னர்கள் அதுகேட்டுக் குதிரைகள் மெய்யா கவேவருமென்று பாண்டியன் ஒன்றும்பேசாமலிருந்தான் பின்பு வாதவூரடி கள் பாண்டியன் குதிரைவாங்கக்கொடுத்தபொருள்களையெல்லாம் குருந்தமர த்தடியிலேவந்திருந்து தம்மை அடிமைகொண்ட கடவுளுடைய திருப்பெருந் துறையிலுள்ள பிராமணர்களுக்கு மனத்தி லன்புபெருகுமுன்னே வேண்டிய மட்டுங்கொடுத்துப் பின்பு கடபுள்பூசைக்கும் திருவிழாச்சிறப்புக்கும் செல்வ நிறைந்த திருக்கோயில் திருப்பணிகளுக்கும் நிரம்பக்கொடுத்து சிவனடியார் களுக்குங்கொடுத்து அந்தத்திருப்பெருந்துறையிலேதானேயிருந்துகொண்டு இவ்விதமாக உலகத்தாசைதீரக்காலங்கழித்துக்கொண்டுவரும்போது பாண் டியன் வாதவூரடிகள்சொல்லி அனுப்பின கெடுவின்படி ஆடிமாசம் வந்தவு டனே இன்னமுங்குதிரைகள்வரவில்லையேயென்றுவாதவூரடிகளானதன்மந்தி ரிக்கு ஓலையெழுதிஅனுப்பிவிட்டான் அப்படி அவன் எழுதியனுப்பின திருமு கத்தை கிரமப்படியே வாதவூரடிகள்வாங்கி அதிலுள்ள சமாசாரந் தெரிந்து கொண்டு ஆதியந்தமில்லாதகடவுளுடைய திருவருட்கடலிலேமுழுகின வாத வூரடிகள் இனியென்னசெய்வோமென்று சோர்ந்து தம்முடைய மனமாகிய வினைநிலத்திலே சிவமாகிய பயிர்வளர பந்தபாசங்களின்வேரறக்களைந்து கட வுள்திருவருளாகிய நீரைப்பாய்ச்சி அந்தமாதியில்லாத ஆனந்தபோகத்தைத் தந்தருளின உழவுகியதேசிகனுடைய திருக்கோயிலுக்குப்போய் என்னுய கனே பொன்னுடையே ஏறு கொடியுயர்த்தமன்னு தென்னுபெருந்துறையே மணியே பாண்டியன்கொடுத்தபொருள்களெல்லாம் உன்ஆலயத்துக்கும் உன் அடியார்களுக்குமே செலவு செய்யும்படியான புத்தியைக் கொடுத்தாய் இனி அந்தப்பாண்டியனுக்கு நான் எப்படிகுதிரைகள்கொண்டுபோய்ச்செலுத்துவ தென்று வணங்கியெழுந்து துதித்துவேண்டினர். அப்படிவேண்டுகின்ற வாத வூரடிகளுக்கு முன்னே திருப்பெருந்துறைக்கடவுள் ஆகாசவாக்கிலே ஓய் மந்திரியே! பாண்டியனுக்கு குதிரைகள் எப்படியும்வந்து சேருமென்று ஓலை யெழுதியனுப்பென்றுசொல்லியருளக்கேட்டு வாதவூரடிகள் மனதிலேமிகவும் சந்தோஷித்து அப்படியே ஓலையெழுதியனுப்பினர் அந்தஓலைபோய்ச்சேர்ந்து வாசிக்கக்கேட்டுப் பாண்டியன் சந்தோஷித்திருந்தான்.

அப்போதுசூரியன் அஸ்தமிக்க அந்தச்சூரியனுலே வெந்தசூடு தணிக்கி றவனைச் சந்திரன் உதயமானன் அன்று இராத்திரியிலே தூங்குகின்ற வாத வூரடிகள்கனவிலே வெள்ளியம்பலக்கடவுள் குருந்தடியிலே தோன்றின ஆசா ரியவடிவுகொண்டெழுந்தருளி ஓய்வாதவூரே! நாம் பாண்டியன் சந்தோஷிக் கும்படியான குதிரைகளைப் பின்னேன்கொண்டுவருகின்றோம் நீர் முன்னே மது ரைக்குப்போமென் றருளிச்செய்ய உடனே வாதவூரடிக ளெழுந்திருந்து தே

வர்களுக்கும் கனவிலுங் காணக்கூடாத திருபாசொரூபம் நமக்கு நனவிலும் கனவிலும் எளிதாயிற் றல்லதோ வென்றெண்ணிக் கொண்டிருக்கும்போ தி வெள்ளியம்பலத்திலாடுகின்ற ஆனந்தசூரியன்மனத்திலுள்ள அஞ்ஞானவிரு ளைத்தின்றுகொண்டு விளங்குவதுபோல சூரியன் உலகைமூடின இருளை நீ ங்கிக்கொண்டு உதயமாஞன்.

அப்படி விடிந்தவுடனே வாதவூரடிக ளெழுந்திருந்து திருப்பெருந் துரைக்கடவுளை வணங்கிக்கொண்டு இனிப்பிறப்பிலழுந்தாதவராய் வழிநடந் ண்டு நடந்துபோய்திங்கட்கெழுந்தார் சடைபார்விடையார் தென்கூடலணை ந்து பாண்டியன்கோயிலுக்குள்ளே போய்பபாண்டியனைக்காண அப்போது பாண்டியன்வழிபாடுசெய்து முன்னேநிற்கின்ற வாதவூரடிகளைப்பார்த்து எவ் வளவு பொருள்கொண்டுபோயினீர் எவ்வளவுகுதிரைகள் வாங்கினீரென்றா ன். அதற்குவாதவூரடிகள் ஓப்பாண்டியமகாராஜனே! கொண்டுபோன பொ ருளின் கணக்கும் வாங்கினகுதிரைகளின்கணக்கும் குதிரைகள் வந்தபின்பு தெரிந்து கொள்ளலாம் இனிவருங்குதிரைகளாலேதுரங்கபதி என்றுபெயர் பெறுவீரென்றார் அதுகேட்டபாண்டியன்மந்திரிக்குச் சிறந்த வெகுமானங் கள்செய்து அனுபபிவிட வெளியேவருகின்ற வாதவூரடிகள் பொற்றுமரைக் குளத்திலே ஸ்நானஞ்செய்து சித்திவிநாயகரை வணங்கிக்கொண்டு தாழை எழுந்தருளிப்பக்கத்திலே அங்கயற்கண்ணம்மையுடனே விளங்குகின்றசொ க்கலிங்கபபெருமானைத்தரிசித்து மனம்வாக்கு காயமூன்றும் அன்புமயமா ய் முன்னேநின்றும் மன்னே! யென்னே! யாட்கொண்டமணியே! வெள்ளிம ன்றுடும் அன்னே! யென்றுதுதித்து அடியேன் வேண்டிக் கொண்டபடியே பாண்டியன் கொடுத்த பொருள்களெல்லாம் நீரே ஒப்புக்கொண்டு என்று அ டிமையையும் அங்கீகரித்தீர்கள். ஆனால் இனிமேல் என்னைப்பாண்டியமகாரா ஜன் கோபியாமல்மிகவும் சந்தோஷிக்கும்படியாய்க் குதிரைகள் வந்துசேருவ தெப்படியென்று வேண்டிநிற்கும்போது கடவுள்திருவாக்காக ஓ! ஓ! மெய் யன்புள்ளவனே நீவேண்டிக்கொண்டபடியே சூரியன் தேரையிழுக்கும் குதி ரைகள்போலுங்குதிரைகள் கொண்டுவருகிறோமென்று ஆகாயத்திலே உண் டாக அதுகேட்டுப் பொய்பன்பில்லாத வாதவூரடிகள் பரமசிவனுடைய பெ ருங்கருணையைப்போற்றிக்கொண்டு தமது மனைக்குப்போனார். அப்படி அவ ர்போனவுடனே அவரிடத்திற்கு வந்து சுற்றுப்புறத்திலுள்ளவர்களும் பங் துக்களும் அடிமைசெய்கிறவர்களும் அன்னிபர்களும் பிறரும்வந்து கூடிமே கங்கள் முழங்கிறற்போல முழங்கிப் புத்திகள் சொல்லுகிறார்கள்.

ஐயா மந்திரித்தனங்கொண்டு ராஜகாரியஞ் செய்கிறது பிராமணதரு மமேயன்று அல்லது அப்படிப்பட்ட மந்திரித்தனத்தை யொப்புகொண்டால் ராஜாக்கள் மனதுக்கேற்றபடியே செய்யவேண்டுமென்று தருமசாஸ்திரந்தெ ரிந்த சான்றோர்கள்சொல்லுவார்கள் அப்படிப்பட்ட அரசியலும் அமைச்சி யலுந்தெரிந்த உமக்கு நாங்கள்சொல்லக்கடவதென்ன விருக்கின்றது நீர்செ ய்வதோ ஒன்றும் நன்றுனதா யிருக்கவில்லை நாளைக்கு குதிரைகள் வருவதா கக்கெடுச்சொன்னீரே சொன்னபடியே குதிரைகள் வாவேண்டு மல்லவே"

இனிமேல் குதிரைகள் வந்துசேராவிட்டால் நாளைக்கென்ன சொல்லுவீர் நீ ரோ உம்மையடுத்த பந்துக்கள் சிநேகிதர்கள்சார்ந்தவர்கள் நல்லோர்கள்மு தலான யர்களை ரட்சிக்கவேண்டும்படியான கருத்தில்லாதவராயிருக்கிறீர் நீர் செய்நிறசெய்கை உமக்கே நன்றுகக்கொண்டீரென்று எல்லாருஞ் சொல்ல அதற்குவாதவூரடிகள் கேளுங்கள் நானேபந்துக்கள் சிநேகிதர்கள்-துன்பம்-இன்பம்-தேகாபிமானம்-பொருளாசை-கோபம்-கெருவம்-நல்வினை - தீவினை முதலான இவைகளெல்லாம் கற்றைவார்சடையான்கோலங்காட்டியாட்கொ ண்ட அன்றேவிட்டுவிட்டேன். ஆனால் இனியெனக்குத் தாய்-தகப்பன்-மா மன்-ஆசான்-பாட்டன் எல்லாம் சிவனே, நிராசையே மனைவி, உயிர்களே பி ள்ளைகள், சிவன்டியார்களேபந்துக்களாக எந்தையார்கருணைகாட்டி யென்னை யாட்கொண்டவன்றே கொண்டேன் ஊரெல்லாஞ் சமைத்தசோறென்னதே கடல்சூழ்ந்த உலகமெல்லாம் பாயலே, கோவணமேகட்டும் வஸ்திரம், விபூதி யேபூசுஞ்சந்தனம், உருத்திராட்சமே ஆபரணமாக நீரெல்லாஞ்சுமந்தவேணி நிருத்தனைட்கொண்டவன்றே எண்ணினேன். நான் இறந்தாலும் இன்றே இ றக்கக்கடவது சாவாமலிருந்தாலு மிருக்கக்கடவது. பாண்டியன் தண்டித் தாலும் தண்டிக்கக்கடவது. வெகுமானஞ்செய்தாலும் செய்யக்கடவது. சு வர்க்கம் சேர்ந்தாலும்சேருகிறேன் நரகம்சேர்ந்தாலும்சேருகிறேன், சிவனை மறக்கமாட்டேன் பழவினைப்பயனை யார்தான் விலக்கிக்கொள்ளுவார்களென் றுஅவர்களைத்தடுத்து வார்த்தையாடிக் கொண்டிருந்தார்.

வாதவூரடிகளுக்குபதேசித்த படலம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

ஐம்பத்தொன்பதாவது
நரிபரியாக்கிய படலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அரிகணைதொடுத்துவேழமட்டவன்செழியன்வாயிற்
றெரிகலையமைச்சேறற்றைத்தேதசிகவடிவத்தீண்டி
வரிகழல்சூட்டியாண்டவண்ணமிவ்வண்ணமைய
னரிகளைப்பரிகளாக்கிநடத்தியவாறுஞ்சொல்வாம்.

இதன்போருள்.

சமணர்கள் ஏவியயானையை அதற்குவைரியாகச்சிங்கமாகிய அஸ்திரத்தைத்தொடுத்துக்கொன்ற வீராகிய சோமசுந்தரக்கடவுள் அரிமருத்தனபாண்டியனிடத்தில் முதன்மந்திரியா யெழுந்தருளியிருந்தவாதவூரடிகளைக் குருமூர்த்தமாகத் தோன்றித்தமது பாததாமரைகளைச் சிரசிற்சூட்டி ஆட்கொண்டருளிய திருவிளையாடலிதுவாகும். இனி அச்சோமசுந்தரக்கடவுள் தமதன்பராகிய அந்தவாதவூரடிகள்பொருட்டுக் காட்டிலேதிரிந்த நரிகளையெல்லாம் குதிரைகளாக்கிக்கொண்டுவந்து பாண்டியனுக்குச் செலுத்திய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

இவ்விதமாக பந்துக்களாகிப பாசபந்தங்களையறுத்துப் பரிசுத்தராயிருந்த வாதவூரடிகளை மறுநாள் பாண்டியன்வரவழைத்து என் இன்னம் குதிரை ள் வரவில்லையென்ன அதற்குவாதவூரடிகள் இன்றுமுதல்மூன்றுநாளைக்குள்ளே குதிரைகள்வந்துசேரும் ஐயா அப்படிவருகிற குதிரைகளுக்கு வேறேபெரியலாயங்கள்கட்டவேணும் தண்ணீர்குடிக்கக்குளங்கள்தோண்டவேணும் பட்டணமெல்லாம் அலங்காரஞ்செய்யவேணுமென்றுசொல்ல அதுகேட்டுப் பாண்டியனும் அப்படியேசெய்யவேணுமென்றுஉத்தரவுசெய்யவேலைக்காரர்கள் குதிரைலாயங்கள் பெரிதாகக் கட்டிப் பட்டணமெல்லாம் அலங்காரஞ்செய்ய மண்வெட்டியாள்கள் மூன்று நாளைக்குள்ளே வேறேவாவிகளும் குளங்களும் வெட்டினர்கள். பின்புகெடுச்சொன்னமூன்றுநாளுங்கழிந்தபின்னும் பாண்டியன் இன்னும்குதிரைகள்வரக் காணுமேயென்றுவாதவூரடிகளைக்கூப்பிட்டுத் தானே தண்டிக்கிறவளைக் கோபங்கொண்டுஇவன் குதிரைவாங்கின தெங்கே என்றைக்குக் குதிரைகள்வருகிறதென்றுதனக்குமுன்னேநின்ற சிலசேவகரைப்பார்த்து பெரியதிருடனை இவனைக்கொண்டுபோய்த்தண்டித்து நம்முடைய பொக்கிஷசாலையிலுள்ளபொருள்களெல்லாங் கணக்குப்பார்த்து எவ்வளவுங்குறையாமல் வாங்குங்கள் போங்களென்று உத்தரவுகொடுத்தான். அப்படிஅவன்உத்தரவுகொடுக்கவே பாண்டியன் கோபத்துக்குப்பயந்து முன்னேநில்லாமல் ஒருகையிலே கயிறுகட்டிவாதவூரடிகளை நடுவேவிட்டுப்புறத்திற் சூழ்ந்துகொண்டுபோய் தண்டவீரர்கள் ஓப்மந்திரியே இனி எப்படிபணத்துக் கென்னவகை சொல்லுமென்று

கோபித்து அவனைநிற்கவைத்துத் தலைமேலே பெரிதான ஒருகல்லைச் சுமக்க வைத்து வாதிக்கவாதவூரடிகள் சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளைத் தியானித்துத் தலைமேலேற்றினகல்லுச்சுமையைச் சுமந்துக்கொண்டுநின்றார் அப்படி அவர்தாங்குகிறபாரத்தை அவரை அடிமைகொண்டாண்ட கடவுள் தாங்குகிறதிறலே வாதவூரடிகள் தமக்குக்கனம்தோற்றுமல்தாம்நிற்கிறவெயிலிலே சிவனதுபாதநிழலாகநின்றார். அப்படிஅவர்நிற்கிறநிலையைத் தண்டவீரர்கள்கண்டு இது ஏதோ மாயமாயிருக்கிறதென்று கொலைசெய்யவும் அஞ்சாத அத்தண்டவீரர்கள் மிகவுங்கோபங்கொண்டு வேதாந்தப் பொருளைத் தியானஞ்செய்துகொண்டு நிற்கிற வாதவூரடிகள் கையிலுங் காலிலுங்கிட்டி கட்டிநெருக்க அந்தக்கொடுந்தொழிலுக்கும்சலியாமல் சிவத்தியானமாயிருந்தார். அப்போது சூரியன் ஐயோ இந்தக்கொடிய தண்டகர்கள் இனிமிகவுந்தண்டிப்பார்களேயென்று பார்க்கமாட்டாதவனுப்த் தன்னொளிகள் மழுங்கிக்கடலிலே முழுகி அஸ்தமித்தான்.

அப்போதுவாதவூரடிகளான தமதன்பருடையதுன்பந்தீர்க்கிறதற்கு சோமசுந்தரக்கடவுள் அவர்முன்னே எழுந்தருளிஞற்போலச் செவ்வானந்தோன்றி அவர்மார்பிலணிந்தபன்றிக்கொம்புபோல இளஞ்சந்திரன் உதையமாகிப் பிரமதேவனுடையதலைமாலைபோல நக்ஷத்திரங்கள் விளங்கதுன்பமாகிய சுழிகளையுடைய பிறவிக்கடலிலேமுழுகிக்கழிகிற பாண்டியனைதன்னையுங்காக்கவல்ல சோமசுந்தரக்கடவுள் திருவடிகளைத் தியானித்து வழிபடுகின்றவாதவூரடிகள்பெருமைதெரியாமல்காவல்வசப்படுத்தின அந்தப்பாண்டியன்பழிபாவம்போல எங்குமிருண்டது அப்படியிருண்டவுடனேவாதவூரடிகள் காவிலேவிலங்கிட்டுக் காவலாளர்கள் கண்களிலேநெருப்புப்பொறிசிதறதவத்தைக் காவலுக்குள் ளாக்கிஞற்போலக் கோபங்கொண்டு தண்டித்துக் காவலறையிலே வைத்துக் கும்புகூடி எல்லாரும்வருத்தவாதவூரடிகள் அந்தச்சிறைக்கூட்டத்திலே கிடந்து மாலுமபனுங் கீழுமேலுந்தேட நின்றவரது செம்பொன்மயமான திருவடிக்கமலங்களைத் தமக்குத்தெப்பமாகக்கொண்டு தமக்குநேரிட்ட துன்பக்கடலைக்கடக்கஇருட்கட்லும்வற்றிவிடிந்தது. அந்த உதையகாலத்தில் அந்தமிலழகராகிய சொக்கலிங்கப் பெருமானையும் அங்கயற்கண்ணியையும் திருப்பள்ளியுணர்த்துதற்கு அடியார்கள்வந்து கூடிவந்தனைசெய்கிறசத்தமும் மங்கலசங்கத்தொனியும் நான்குவேதமுழக்கமும் வாதவூரடிகள் தமதுதிருச்செவிகள்நிரம்பக் கேட்டுக்கொண்டிருக்க அந்தச்சமயத்திலே போதவானந்தசோதியாகிய கடவுள் தமதுபரிசுத்தானமெய்யன்புருக்காக நாதமாகிய பேரிகைகள்முழங்க நரியாகிய குதிரைகள்மேலேறினவீரர்கள்சூழத்தாமும் வேதமாகியதாவுகின்ற பரிமேலேறிக்கொண்டுமதுரைவீதியில் இனிவருவதைத்தானுங்கண்டு தரிசிக்கஆசைகொண்டவன்போலத் தேர்மேல் சூரியனுதயமாயினன். அப்படிசூரியன் உதயமானவுடனே அங்கயற்கண்ணியுடனே திருப்பள்ளியெழுந்திருக்கின்றசோமசுந்தரனை கருணைக்கடல் விளங்குகின்ற இந்தவிமானத்தின் சிகரத்தைப்பார்த்துத் தமது கைகளைக்குவித்துக் கண்களிலே நீரொழுக நாதனைப்பாடத் தொடங்கினர். எப்படியென்றால்.

எந்தாயனைத்துலகுமீன்றெடுத்தேதவர்க்குந்
தந்தாய்செழுங்குவளைததாராய்பெருந்துறையில்
வந்தாய்மதுரைத்திருவாலவாயுறையுஞ்
சிந்தாமணியேசிறியேற்கிரங்காயோ.

மூவாமுதலாய்முதுமறையாயம்மறையுந்
தாவாதசோதித்தனிஞானபூரணமாய்த்
தேவாதிதேவாய்த்திருவாலவாயுறையு
மாவார்கொடியாயடியேற்கிரங்காயோ.

முன்னைமுதுபொருட்குமுன்னைமுதுபொருளாய்ப்
பின்னும்புதுமைக்கும்பின்னைகும்பேரொளியாய்த்
தென்னைமதுரைத்திருவாலவாயுறைபு
மென்னையகனேயெளியேற்கிரங்காயோ.

மண்ணைப்புனலாய்க்கனலாய்வெளியாகி
விண்ணையிருசுடராயித்தனையும்வேறுகிப்
பண்ணையிசையாய்ப்பலவலாயெங்கண்ணுங்
கண்ணையென்னுறுகண்காணவாரென்கொல்லோ.

பொங்குஞசினமடங்கல்போன்றுருத்துவெங்கூற்ற
மங்கும்புரியாவருந்துன்பத்தாழ்ந்துநான்
மங்கும்படியறிந்தும்வந்தஞ்சலென்கிலேபா
லெங்குஞ்செவியுடையாய்கேளாயோவென்னுரையே.

பூட்டியபருட்பாசமிருபாதம்பொறித்துடலிற்
கூட்டியடியாருளகப்படுத்தாட்கொண்டருமை
காட்டியவோவின்றென்னைக்கைவிட்டார்வெய்யசெனை
யாட்டியொருக்குமிடத்தாரேன்றுகொள்வாரே.

ஊராருனைச்சிரிப்பதேதாராயென்றுன்னடிமைக்
காராயடியேனயர்வேனஃதறிந்தும்
வாராயரசன்றமரிழைக்கும்வன்கண்ணேப்
பாராயுன்றன்மையிதுவோபரமேட்டீ.

என்று எவ்விதமாக துதிக்கின்றவருடைய அழுகைச்சத்தம் கடவுளின் திருக்காதிலே இளம்பிள்ளை அழுமோசைபெற்றதாய் காதிலேபுகுந்தாற் போல நுழையகேட்டுக்கூடற்கடவுள் அன்றைக்கேவாதவூரடிகளைச்சிறைக் கூடத்தைவிட்டு நீக்கத்திருவுள்ளங்கொண்டு திருநந்திதேவர்முதலான கணதிபர்களைக்கூப்பிட்டு உடனே அவர்கள்வந்து சேவித்துநிற்கநாம் இன்றைதினம் ஆவணிமூலநக்ஷத்திரம் பாண்டியன்மிகவுங் கோபங்கொள்ளுமுன்னே அவனுக்குள்ள குதிரைகளெல்லாம் செலுத்தவேண்டும் ஆகையாலே நீங்களெல்லாருங் காடடிலே சஞ்சரிக்கின்ற நரிகளையெல்லாஞ்சேர்த்து குதிரைகளாக்கி அந்தக்குதிரைகளை நடத்தும் வீரர்களாகி நீங்கள்முன்னே செல்லுவ

கள். நாமும் உங்கள்பின்னே ஒருகுதிரைவீரனுப்த்திருவுருவங்கொண்டு வருகிறேமென்றுவிடைகொடுக்க அந்த ஒப்பற்றகடவுள் இட்டருளிய ஆக்கினை கொண்டெழுந்த கணதிபர்கள் தேவர்களும் அதிசயிக்க காடுகளிலுள்ளநரி களையெல்லாந் திரட்டி வேகத்துடனே தாவுகின்ற குதிரைகளாகச் செய்து அந்தக்குதிரைகளை நடத்துகின்ற பாகர்களானார்கள்.

எப்படியென்றால் இடையிலே தூக்கிக்கட்டின செம்பட்டும் அதிலே செருகின சுரிகையாகிய பாங்கும், கால்களிலே செருப்பும் நெஞ்சிலே யிரும் புக்கவசமும் சினந்துபார்க்கிற கண்களும், திரிபுண்டரமணிந்த நெற்றியும் இடிபோல் அதிர்ந்துமுழங்குகின்றசிரிபடும், கொதித்துப்பொங்குகின்றகோப மும்கொண்டவர்களாய் வட்டமானகேடகமும் முதுகிலேகிடந்தசையக் கூர் மைபொருந்திய வாளேந்திய கைகளுமாகச் சிலர்வர, சிலர்தாமரஞ்சுழலக் கொண்ட கையினராய்வர, சிலர் முதுகிலே அம்புக்கூடுகட்டிக்கையிலேவில் லேந்திவர, சிலர்சிவந்த படாத்திலுலே போர்வையணிந்துக்கொண்டுவ்ர, சி லர்பச்சைப்படாத்திலுலே சட்டையிட்டுக்கொண்டுவர, சிலர் மேகவண்ணப் பட்டிலுலே போர்வையணிந்துக்கொண்டுவர, சிலர்செம்பொன்னிறமான சட் டையணிந்துகொண்டுவர, அனேகம்பேர்கள் மயிற்குடை பிடித்துக்கொண்டு வர, அனேகம்பேர்கள் சாமரங்கள் குடைகளுடனேவர, அனேகம்பேர்கள் சாலர்க்குடைகள்பிடித்துக்கொண்டுவர, அனேகம்பேர்கள் முத்துக்குடைகள் தடித்துக்கொண்டுவர, இப்படிவருகிறவர்களிலே தருமம்-அருத்தம்-காமம்-மோசுமென்கிற நான்கு புருஷார்த்தங்களும் நான்குகால்களாகவும், ஞான காண்டம்கருமகாண்டம் ஆகிய இரண்டும் இரண்டுகாதுகளாகவும், காட்சிய ளவையைக்கடந்த ஒருமையானபரம் அபரம் என்கிற உணர்வே கண்களாகவு ம், அருமையான விதையே முகமாகவும், நிஷேதமே வாலாகவும், பலநூல்க ளே முதுகலங்காரமாகவும், மந்திரங்களே சதங்கைகள் கிங்கிணி மாலைகள்-ரத்தினங்கள்-ரத்தினச் சிலம்புகளாகவும், சூரியனும்-சந்திரனும் இருபுறத்து ம் அங்கவடியாகவும் பெருமைபொருந்திய தாரகப்பிரமமந்திரமேகடிவாளமா கவும், புறச்சமயங்களான சேனைகள் தோற்றோடும்படி மூண்டுபோர்செய்து பகையைவெல்ல வல்லதாய் கடவுள் முகமாகிய லாயத்திலே தங்குவதாய் அண்டகோடிகளையெல்லாம் ஒருபிண்டமாக அடுக்கினதுபோலான முதுகின் மேலே உபநிடதமானசீனிகொண்டு பரிசுத்தமாய் விளங்குகின்றவேதமாகிய குதிரையின்மேலெழுந்தருளி வாதவூரடிகளுடைய கால்விலங்கைப்போக்கு தற்காக எழுந்தருளுகின்ற சோதியானவர் அவர்க்கேயல்லாமல் பாண்டியன் பிறவியைப்போக்கவும், காலிலேவீரக்கழல்கட்டிவேதமாகிய உறையினின்று மூருவினஞானமாகிய வாளானது புறத்திருளையும் போக்கிவிளங்கபிறக்கவே ண்டினவர்கள் மறந்து மிங்கேவராதிருங்கள், அந்தப்பிறவி தீரவேண்டினவர் கள் விரைவிலே இங்கேவாருங்கள் தமதன்பரைப் பாண்டியன்தண்டியாமை க்கு வருகின்றபெருமான் உங்கள்பிறவியைத் தீர்க்க வருகிறனென்பதுபோ லக்குதிரைக்கால்களிலே சிலம்புகள்சத்திக்கவும், சுவாமி! கங்கையை உம்மு டையமுடியின்மேலேமறைத்துவைத்திருக்கிறீர், அப்படியே எங்களையுமறை

த்து வைத்துக்கொள்ளுமென்று பெருமானேவேண்டிக் காவேரி தங்கபத்திரி முதலான நதிகளெல்லாம சூழ்ந்து பொங்கி விழுகிறதுபோல அந்தக் கங்கா நதியும் சாமரைகளும் புரண்டுவிழவும், பிரமதேவனுடைய நாவிலிருக்கின்ற சரஸ்வதி தேவியானவள் பார்வதி நாயகன் நான்கு வேதங்களே குதிரை யாக அதன்மேற் கொண்டு வருகின்றனென்றும் தாமரை வெள்ளைக்கு டையாகி மேலே பரவிவருகிறதுபோலே வெண்கொற்றக்குடை விளங்கவும், வேதங்களைக்கொண்டு சொல்லுகின்ற பதினெண் புராணங்களும் நாம் சொல் லுகின்ற கடவுளிவனே படைத்துக் காத்து அழிக்கிறவனுமிவனே இன்னும வேதங்களும் முறையிட்டுரைக்கின்ற பரமபொருள் இவனேயென்று வாய் விட்டுச் சொல்லுவதுபோலப் பதினெட்டு வாத்தியங்களு முழங்கவும், இப் படி நெருங்கின மாயக்குதிரைகளெல்லாம் மேற்குத்திசையைநோக்கி நட ந்து வருகின்றன, அவைகளிடுவே சோமசுந்தரக்கடவுளுடைய வேதக்குதி ரையும் நடந்து வரும்போது அங்கு கிளம்பின தூளிகள் ஆகாசமும் திக்குக ளும் மறைக்கக்கண்டு சூரியன் நாம் செல்லுகிறதற்கு வழி யெங்கேயென்று மயங்க நெருங்கின பலவாத்தியங்களினுடைய முழக்கமும் குதிரைகளினு லியும் வீரர்கள் சத்தமும், திசைகள் செவிடுபட வேதக்குதிரைமே லழகர் இன்னம் மதுரை அரைக்காத வழிதூரமென்ன எழுந்தருளினர்.

அதுகண்டபோர்கள் விரைந்து மதுரைக்கோடிவந்து அங்கே காவல் வசப்பட்டிருக்கிற வாதவூரடிகள் முன்னேவந்து சேவித்து மலர்ந்த சந்தோ ஷமுகத்துடனே ஐயா ராஜநீதிதவறுமல் நடத்துகின்ற மந்திரிகள் சிங்கமே பல நிறங்களைக்கொண்டு கடல் பொங்கி வருகிறதுபோல உள்ள குதிரைக ளெல்லாம் திரண்டு வருகின்ற இந்நேரம் கோட்டைவாயிலுக்குள்ளே அவை கள் வந்துசேரும் ஆதலால் பாண்டியனுக்குப்போய் சொல்லுமென்ன அது கேட்டு வாதவூரடிகள் மேகத்துக்கு விலங்கிட்ட உக்கிரபாண்டிய குலத்தா னிடமே சென்று ஐயா பாண்டியமகாராஜனே குதிரைகள் வருகின்றனவெ ன்று சொல்ல உடனே பாண்டியன் வாயுவேகத்துடனே குதிரைக்கடல் வரு கிறதென்று அணிந்த கங்கணங்கள்தரிக்க உடம்புபூரித்து மனமகிழ்ந்து பெ ரிய விலைபெற்ற ரத்தின ஆபரணங்களும் வஸ்திராபூஷணங்களும் வெகுமான ஞ்செய்து மந்திரியை மகிழ்வுடனே சந்தோஷப்படுத்திஞன் அப்படிச் சந் தோஷப்படுத்திச் சிங்காசனத்தைவிட்டு எழுந்து தலவாயலுக்குவந்து அங் குள்ள மணிமண்டபத்திலே ஒரு சிங்காசனத்தின்மே லிருந்துகொண்டு பெ ண்கள் சாமரங்கள் வீசப பெரியோர்கள் சூழ்ந்திருக்க குதிரைகளெங்கேவரு கின்றனவென்று பார்த்துக்கொண்டிருக்குமபோது கடவுள் திருவிளையாட் டால் சிறிதுநேரம் குதிரைகள்வாராமல் தாமதமாகநிற்க அதைக்கண்டுசந்தி ரகுலத்துப் பாண்டியன் மனம் நாணி இது பொய்யென்று நினைத்து அருகே நிற்கிற தண்டவீரர்களைக் குறித்துச் சினந்து நோக்க அவர்கள் பாண்டியன் மனக்குறிப்புத் தெறிந்து மந்திரிகளுக்கு முதல்வான வாதவூரடிகளை நெரு க்கிக்கொண்டுபோய் எவ்வளவும் அஞ்சாமல் மிகவும் தண்டனைசெய்ய அப் போது வாதவூரடிகள் தமது சுந்தரபாண்டியனை கடவுளை நினைத்து அவ ரது ஸ்ரீபாதங்களை துதிக்கின்றார்.

பூவார்முளரிப்புத்தேளரியாநெறிதந்தாய்
பாவார்தென்சொற்பனுவன்மாலைப்பணிகொண்டாய்
தேவாதேவர்க்கரசேசிறியேனுறுதுன்ப
மாவாவென்னவுஞ்சேலென்னபறனேயோ.
நெஞ்சேயுறையேசெயலேயெல்லாநினவென்றூப்
வஞ்சேபோலுமஃதேதலின்றுவாராயோ
பஞ்சேரடியாள்பாகாகூடற்பரமேட்டி
யஞ்சேலென்னுவிதுவோவருளுக்கழகையா.
காவிநேருங்கண்டாநாயிற்கடையான
பாவிபேனப்பொருளாக்கொண்டென்பணிகொண்டா
யாவியோடிவ்வுடலுநினதேதயன்றூவின்
றூவிவாளாதிருந்தால்யாரென்னுடையானே.

என்று துதித்தழுகின்ற வாதவூரடிகள்காதிலே பால்வெண்டிக்கத்து கின்ற இளங்கன்றின்காதிலே தாய்ப்பசுவின் கனைகுரலோசைவந்து புகுந்தாற்போல சின்னம்-காளம-காகளம் - முதலியவைகளொலிக்கு மோசைவந்து புகுதவும் செந்தூள்திசைகளெல்லாம் மறைக்கவும்கண்டார். அப்போதுபாண்டியனுங்கூடக்கண்டு வாதவூரடிகளை வரவழைத்து அவர் எல்லாரும் வணங்கும் குலத்தினராசையாலே அவரிடத்திலே மெய்யன்புகொண்டு எங்களுடையராஜகாரியம் உம்மைப்போலே செய்யவல்லவர்கள் யாரிருக்கிறார்களென்று கொண்டாடிச்சொல்லி முடியாத சந்தோஷங்கொண்டு பேசிக்கொண்டிருக்கும்போது படர்ந்த இருட்படலத்தைக் கிழித்துக்கொண்டு தனதாயிரங்கிரணங்களுந்தோன்ற உதயமாகிற சூரியர்களையொத்தவர்களாய்ச் சிறந்த திருமேனிகொண்ட பாகர்களுடனே கடலினுரைபோலே வாய்நுரைதோன்ற மாயக்குதிரைகளெல்லாம் வந்தன அப்படிவந்த குதிரைகளைப் பாண்டியன் தன்குலத்திலுள்ளவர்களும் என்றுங்கண்டறியாத லக்ஷணங்களையுடைய குதிரைகளிவைகளென்று பார்த்து அச்சோ இந்திரனைப்போல ஆயிரங்கண் நமக்குண்டானாலும் பார்த்து முடியாதென்று மனக்குறிப்புடனே தானென்றும் சந்தோஷமென்றும் வேறுபாடில்லாமல் அந்தக்குதிரைகள் மேல்வந்த வீரர்களையெல்லாங் கண்டதிசயித்து இந்தக் குதிரைவீரர்களுக்கெல்லாம் தலைவர்யாரென்று தன்மந்திரியான வாதவூரடிகளைக்கேட்க எல்லாந் தெரியவல்லவராகிய வாதவூரடிகள் ஐயா எனக்கது தெரியாதென்றூர். அந்தசமயத்தில் அண்டங்களெல்லாம் ஓருடலாகத் தாமே உயிராகி ரட்சிக்கப்பட்ட ஆனந்தமயமாகிய பரஞ்சோதியான சோமசுந்தரக்கடவுள் அந்த அண்டங்களைத் தாங்குகின்ற வேகத்தையுடைய வேதமாகிய குதிரையேதமக்கோராதாரமாகித் தம்மைத்தாங்கவும் ஒருகாலத்தும் அசையாதிருக்கின்ற தம்முடைய பாததாமரைகளசையவும் எல்லாருடைய ஆசாபாசங்களையும் நீக்குவதான கையிலே ஏறின குதிரைக்கடிவாளமாகிய பாசத்தைப்பற்றிக்கொண்டு பாண்டியனுக்கு முன்னே வந்து ஓ பாண்டியமகாராஜனே எங்களுடைய குதிரையேற்றத்தைக்கொஞ்சம் பார்ப்பீராக வென்றுசொல்லி

அந்தப்பாண்டியனும் அந்தப்பாண்டியன் சபையாருமேயல்லது தேவர்களு மயங்கும்படி எல்லா உலகங்களையும் அசைக்கவல்ல கடவுள் ஐந்து கதி யும் பதினெட்டுச் சாரியுமுதலான விசித்திர வேறுபாடுகள் தோன்றத் தாமசையாமல் குதிரையைச்சற்றே அசைத்தருளினர் அப்படியே மற்றைக் கணதிபர்களும் தனித்தனியே தங்கள் குதிரைகளை நடத்திக்காட்டக் கண்டுபாண்டியன் அவர்களைப்பார்த்து உங்களிலேதலைமைத்தனங்கொண்ட வர்யாவரென்றுகேட்டான் அதற்குகுதிரைவீரர்கள் எங்களுக்குத் தலைவரா னதனிவீரர் இவர்தானென்று கடவுளாகிய வீரரைக்காட்டினர்கள் அவர்க ள்காட்டினவுடனே சுட்டுதற்கரிய சோதியாகியகடவுள் வேதமாகிய தாவுகி ன்ற புரவியோடு பாண்டியன்முன்னேவர அவரது கிருபாதிருஷ்டிபாண்டிய ன்மேலேபட்டுத்தன்னை மறந்துதழுந்து இரண்டுகைகளையுந் தலைமேலே குவி த்துக்கொண்டு நின்றான் உடனே கடவுளருளாலேமயங்கினபாண்டியன் மன ந்தேறி இன்று ஒருகுதிரைவீரனைக்கண்டு நாம்எழுந்து தலைமேலே கைகள் குவித்துக்கொண்டு நின்றதற்குக் காரணமென்னவென்று சிங்காசனத்திலே மறுபடியும் இருக்கநாணி அப்படியே நின்றான்.

அப்படிநிற்கின்றபாண்டியன் முகத்தைப்பார்த்து எதிரேநின்றவேத ப்பரிமேலழகர் ஓ பாண்டியமகாராஜனே உன்னுடைய பொருள்களெல்லாங் கொண்டுவந்து உன்சொல்வழுவாத மந்திரியானவர் எனக்கும் என்னைச்சேர் ந்தவர்களுக்கும் நிரம்பக்கொடுத்ததிலே இந்தக்குதிரைகள் தேவர்களுக் கேயல்லாமல் மனிதர்களுக்குக் கிடைக்கத்தக்கதல்ல குதிரை லக்ஷணந்தெ ரிந்தவர்களாலும் விலைபலவு சொல்லக்கூடாதவைகளாய்சாஸ்திரத்திலேசொ ல்லியபலட்சணங்களமைந்துள்ளனவாய் நல்லகுதிரைக ளுமக்குவந்து சேர்ந் தன ஆனாலும் குதிரைவிற்கும் வர்த்தகத்தைச்சொல்லக்கேளும் இந்தக்குதி ரைகளை என்னிடத்திலே இன்றுநீர் கயிறுமாறி உம்முடையதாகக்கொள்ளு கிறதிலேலே இந்தக்குதிரைகள் நாலைக்கெப்படியானாலும் எனக்கும்உமக்கும் யாதொருவழக்கும் பேசக்கூடாது இதுவேகுதிரைவிற்கு நியாயமென்றுசொ ல்ல அதுகேட்டபாண்டியன்மனமகிழ்ந்து அதற்குச்சம்மதித்து அந்தத்தனி வீரரைப்பார்த்து என்னிடத்துள்ள மந்திரிகளிலேசிறந்த வாதவூர் உங்களு டைய சினேகிதரிலேபின்னும்எனக்குச்சிறந்தவராரென்று கொண்டாடிப் பாண்டியன்சொன்னான். அதற்குப் பாம்பாபரணந் தோற்றுமல் வேதக்குதி ரைமேல்வந்தவர் மரகதநிறமான வேப்பமாலையணிந்தபாண்டியனைப்பார்த்து குதிரை கயிறுமாறிக் கொடுக்குமுன்னே பொதுவானகுதிரைலட்சணங்கள் சொல்லத்தொடங்கி கேளும்பாண்டியமகாராஜனே இந்தக்குதிரை சமயம் வந்தால் மதிலும்கடந்துபோகுங் கண்ணுனுழைபாத பலகணிவாயிலுநுழை யும்கண்டவெளியெல்லாம் தனக்குவழியாகப்போகும்பசிவந்தால் எதுகிடை த்தாலுந்தின்னுமா இன்னும்ஒப்பில்லாதசிறந்தஇலக்கணங்களுள்ள இந்தக்கு திரைகளிலொன்று உன்னிடதிலிருந்தாலும்லட்சுமிகடாட்சமும் குறையா தசெல்வமும் மேன்மேலானகீர்த்தியும்பெறுவாய்நெற்றுமாந்தளிர்நிறமான நாக்கும் கீழேஊன்றுகின்ற உயர்ந்தகுளம்புகளும் நீண்டு சரியாத்திருக்கிற பற்களும்பாம்புப் படம்போலவிரிந்த கழுத்து மார்புங்கொண்டிருந்தால் அ தற்குப்பாடவமென்று சொல்லவேண்டும் விசாலமானநெற்றியும் நீண்டதலை

மயிர்போலேஒருநிறமானபுறமயிருடனே நின்றுகோணமாய்அழகியமுகமுள்ளதைக் கேட்கமென்று சொல்லத்தகும்ளதிர்த்தயுத்தத்திலேமுகத்திலேகத்திகொண்டுவெட்டிஞலும் எதிர்த்துச்சண்டைசெய்யவல்லதாய் குரங்கு-வேங்கை-யானை-நரி-சரபம்-முயல்கள்போலுங் கதியுடையதாஞல்அதை இவுளியென்று சொல்லப்படும் உன்னதமு நீளமுமுடையதாய்சங்குகற்கண்டுபோல் வெள்ளையானவாய் நுரையைஉமிழ்வதாய் பின்னமான ஒருநிறமும் மைநிறமுமுடையதை வன்னியென்று சொல்லவேண்டும் பலமான கழுத்திலே சிறந்ததிதய்வீகமான மணியும் அஷ்டமங்கலமும் அழகானபஞ்சகல்யாணமுமுள்ளதைக் குதிரையென்று சொல்லவேண்டும் குங்குமவாசனை கருப்பூரவாசனை அகிற்சந்தனவாசனை இவைகளை வீசுவதாய் சங்கு - மேகம்-சரபம்-சிங்கம்-இவைகள்போலனுமாணிப்பதைப் பரியென்னப்படும் நாலுகால்களுங் கடைந்தெடுத்து நாட்டிஞற்போல்வதாய் கொள்ளி வட்டம்போலே வட்டமிட்டுச் சுழல்வதாய் மேலேறினவீரன் காலுக்குள்ளடங்குவதைக் கந்துகமென்னத்தகும் கோட்டையும் மலைமேற்கோட்டையும் ஆறும்தாண்டும்பலமுள்ளதாய் இந்த முழுலட்சணங்களெல்லாம் முழுதுங்கொண்டதைப் புரவியென்று சொல்லவேண்டும் ஆனல் இந்தயெட்டுவகையும் எட்டுவயதுள்ளவைகளே பகைவனைவெல்லுவதான வல்லமைபொருந்திய இந்த எட்டுபகையும் பாண்டியராஜனே நீயேவறத்தக்கவைகளென்றுசொல்லி வேதத்தின் முதுகிலேறியிருக்கின்ற தனிவீரர் திரும்பித் தமதுகூட்டத்தார் முகத்தைப்பார்த்தார். அவர் பார்த்தவுடனேநெருங்கிக் கூடநின்றவீரர்களெல்லாம் குதிரைநூல் வல்லவர்களறிவும் பின்னிடும்படி தனித்தனி சாரிவிட்டார்கள்.

அதுகண்டுபாண்டியன் அதிசயித்துத் தன்பக்கத்திலேதனக்கு முழுதும் நம்புதலானமந்திரிகள் எல்லாரையும்பார்த்து அசையாத தலையையசைத்து மெள்ளமெள்ளத் தோன்றுகின்ற நகையோடு மிகவுஞ்சந்தோஷித்தான் அப்போது கடவுளரும் தமதுதெய்வத்தன்மைபொருந்திய குதிரையைச் செலுத்தி இடசாரிவலசாரிகொண்டு வட்டமாக வரும்போது கொள்ளிபோல வீதியெல்லாம் ஒரேகுதிரையாகத் தோன்றி வீதிகளெல்லாங் குதிரைகள் விற்பனவாக ஒருநிமிஷத்துக்குள்ளே முன்னே ஒருபாண்டியனுக்காக தமது கையிற் கங்கணமான பாம்புவளைந்து சுற்றினதுபோலே சுழல இன்னும் பல நிறங்கள்கொண்ட குதிரைகளும் வீதிகளெல்லாம்பின்னிஞற்போலப்பின்னி வட்டமாக மதுரையென்கிற ஒரு பெண்ணனவள் கையில்தரித்த நவமணிக் கடகம்போலவும் விளங்கின இன்னும் அந்த மதுரையிலுள்ள பெண்களடித்துக்கொள்ளும் பொன்னிறமான கந்தபொடிகள் சிந்திக்கிடக்கிற வீதியிலே நடக்கிற குதிரைகூட்டங்களாலே கிளம்பினதூளிகள் பொன்னுலகத்திலே குதிரைகள்செல்ல அங்குண்டான பொன்னிறப்பொடியை யொப்பாயின.

இப்படித்தேவர்களுமனிதர்களும் அந்தமதுரையிலுள்ளயாவரும் அதிசயிக்குமபடிகுதிரைபடத்தி அந்தமதுரைக்காசனை பாண்டியனுக்கு முன்னே கருணைக்கடலானகடவுள்வந்துநின்று அக்குதிரைகள் பிறந்தவிடங்களை வகுத்து இந்தப்பரிகள் காம்போசம், இந்தப்புரவிகள் காந்தாரம், இந்தக் குரங்குகளை வான்மீகம், இந்தக் கந்துகம் சிந்து, இந்தக்கனவட்டம் பா

ஞ்சாலம், இந்தக்குதிரை துளுவம், இந்தத்துரகம், இமயம், இந்தக்கற்கிகலிங்கம், இந்தப்பாடலம் ஆரியம், இந்த அச்சுவம், கூர்ச்சரம், இந்தத்துரங்கம் கேகயம், இந்தக்கொய்யுளை யவனம், இந்தக்கொக்குமக்களம், இந்த இவுளி வணையுசும், இந்தப்பாய்மாபல்லவம், இந்தக்கோரம் சவ்வீரம், இந்தக்கன்னி மாடம், இந்தவன்னி வாசந்திகம், இந்தக்கோடகம் காடகம், இந்த அயம் கான்மீரம், இந்தக்கோணம்மாளவம், இந்தக்குந்தம் கந்தாரம், இந்த அரிசவு ராட்டகம், இந்தக்கிள்ளைசாலிவேப், இந்தத்துரகதம்வெறுரு தீவாந்தரம் இந்தக் குரகதம்குருக்கேந்திரம் என்று இப்படிப்பலபலதேசங்களிலுண்டா கிய பெயர் வேறுபாடான குதிரைகளையெல்லாம் இந்த வாதவூர்கொடுத்த பொருளுக்காசைகொண்டு இவர்களைகொண்டுவந்தவர்கள் கேளும்பாண்டிய ராசனே இந்தக்குதிரைகளில் வெள்ளி-முத்து-பால்-சந்திரன்-சங்கு-வெண் பணி இந்தநிறமுள்ளது. வெள்ளைக்குதிரை-மாதுளம்பு-செம்பஞ்சுக்குழம்பு இந்தநிறமுள்ளது. சிவப்புக்குதிரை-குயில்-வண்டு-மேகம்-இந்நிற முள்ளது கறுப்புக்குதிரை-கோரோசனை நிற முள்ளது-பொன்னிறக்குதிரை இந்தநான்குநிறமுங் கலந்திருப்பது மிச்சிரம்-முகம்-மார்பு-உச்சி-வால்-கால்கள்நான்குஆக எட்டுறுப்பும் வெண்மைகொண்டது அஷ்டமங்கலம்தலை-வால்-மார்பு இந்த மூன்று நீங்கலாக ஐந்திடத்தும்வெள்ளையுள்ளது. பஞ்சகல்யாணிகழுத்தில் வலஞ்சுழித்திருந்தால் அதைதேயதெய்வமணி யென்றுதெரிந்தோர்கள் சொல்லுவார்கள்முகம்-தலை-நாசி-மார்பு இந்தநான்கிடத்தினும் இரண்டிரண்டுசுழிகளும் நெற்றிநடு பின்பக்கம் இரண்டிடத்திலுமொவ்வொருசுழியும் உள்ள குதிரையே லட்சணமுள்ளது. இந்தச்சுழிகளில்லாதிருந்தால் அதை இலக்கணப்பழுதென்று சொல்லவேண்டும் வெவ்வேறுக மார்பிலே ஐந்துசுழியுண்டானால் அதற்குப்பேர் ஸ்ரீவற்சம் நெற்றியில் இரண்டுசுழியாவது மூன்று சுழியாவதிருந்தாலும் நல்லதே அப்படியில்லாவிட்டால் நெருக்கமாகநான்கு சுழிவலம்புரியிருந்தால்நல்லது அப்படியன்றி இரண்டுசுழி முன்னங்கால்களிலும் மூலத்திலு மிருந்தாலும்நல்லதென்றே சொல்லுவார்கள் கண்டத்தினடுவே இரட்டைச்சுழியுடையகுதிரையானது தன்னுடைய தலைவனுக்குமிகவும் தரித்திரத்தையுண்டாக்கும் அல்லது தன்னைக்கொண்டவனுக்கு மிகுந்தசுன்பத்தையும் மரணத்தையும் உண்டாக்கும் அந்த இரட்டைச்சுழி கணைக்காலிலிருந்தால் அந்தக்குதிரையையுடையவனுக்குப் பயம்-துன்பம்-விலங்கு இவைகளுண்டாக்கும் மேலுதடு-முன்காலடி-கபோலம்-முழங்கால் இந்தநான்கிடங்களிலுஞ் சுழிகளிருந்தாலும் அந்தக்குதிரை தன்னைவாங்கிக்கொண்டதலைவனைக்கொல்லும் இந்தச்சுழியையுடையகுதிரையை ஏழுமல்லாயத்திலே கட்டியிருந்தாலும்குற்றமாம். இவைகளிருக்க குதிரைக்குப்பிராயம் முப்பத்திரண்டு அவஸ்தைபத்து அவஸ்தை ஒன்றுக்குவருஷம்மூன்றுமாதம் இரண்டுநாள்பன்னிரண்டு இன்னமும் எந்தநிற்பேதங்கள் மிகுந்திருந்தாலும் வெள்ளை நிறங்கலந்திருந்தால் அவ்விதமான குதிரைநல்லதே கறுத்தகுதிரைக்குவயிறுயினும் மார்பாயினும் சிவந்த நிறமாயிருந்தால் அதுமிகுந்தஜெயத்தைத்தரும் அந்தவயிறும்மார்பும்வெள்ளையாயிருந்தால் அதற்குப்பெயர்வாருணம் அது பகைவர்பேரிலே வெற்றிக்கொடுக்கும்பிடர் வெளுத்திருந்தால் உ

டையவனுக்குப்புத்திரப்பேறுண்டாம் மார்புவெளுத்திருந்தால் சந்தோஷத்
தைக்கொடுக்கும் மணிக்காலும் கண்டத்தினிடமும் வெளுத்திருந்தால்பொ
ருள்கொடுக்கும் முகம்வெளுத்திருந்தால் வெற்றி கொடுக்கும் பின்பக்கத்தி
னிடம் வெளுத்திருந்தால் சுகங்கொடுக்கும் இடைவெளுத்திருந்தால் சந்தா
னம் பெருகும் வலப்புறத்திலேவெண்மையாயிருந்தால் தனதானியங்கள்பெ
ருகும் முதுகு-வால்-முகம்-இந்தமூன்றும் வெளுத்த குதிரைஜெயங்கொடுக்
கும் உந்திதொடங்கிமுன்புறமெல்லாம் சூரியன்போலேசிவந்து சந்திரன்போ
லே பின்புறமெல்லாம்வெளுத்து அழகுள்ள குதிரைக்குப்பகலில் ஜெயமுண்
டாகும் சந்திரன்போலேமுன்புறம்வெளுத்துப்பின்புறமெல்லாம்சூரியன்போ
லேசிவந்தகுதிரைக்கு இராத்திரியிலே ஜெயமுண்டாகும் இந்த இருவகைக்
குதிரைகளும்வந்திருக்கின்றன குதிரைகாலான்றிலுல் பந்துவைத்தாற்போ
லவும், நின்றுல் மலைபோலவும், அனுமானித்தால் யானைபோலவும், சிங்கம்
போலவும், வேகத்தில் வாயுப்போலவும், ஆட்டத்தால் நட்டுவன்போலவும்
நடந்தால் யானைபோலவும்சிங்கம்போலவும், குலமகளைப்போலேகவிழ்ந்தமுக
மும் கருநெய்தல்போலே கண்ணுமேகம்போல சிறந்துவிளங்குகின்ற நிறமும்
கருநெய்தற்பூப்போலே வாசனையும் மலராலும் அகிற்சந்தனங்களாலும்ரத்தி
னபரணங்களாலும் அலங்கரித்தால் நீங்காத அதிகசந்தோஷங்கொண்டுவில
ங்குவது வுத்தமமானகுதிரையென்று சொல்லுவார்கள் உத்தமக்குதிரைக்கு
யர்வு ஈ-விரலளவுமத்திமக்குதிரைக்குயர்வு அசு-விரலளவு அதமைக்குதிரை
க்குயர்வு சுக-விரலளவு-என்றுநிலைபெற்ற நாகபந்தம் விருத்தம்நெடுவீதினென்
கிற குதிரையின்நடைபேதமெல்லாம் இனிது நடத்திக்காட்டினவெவ்வியகு
திரைகளுக்கு எஜமானைப்பார்த்ததிசயப்பட்டு பாண்டியன் சிரக்கம்பஞ்செய்
தணிலையில்லாதவஸ்திரமொன்றுகொடுத்தான் கடவுள் சவுக்கின்மேல் ஏற்று
புன்னகைசெய்தார். அப்படி ஏற்றுக்கொண்ட அரியவஸ்திரத்தை நேசத்தை
யுடையவனுப்க் காற்றைபோலச் சீக்கிரத்தில்வந்து விரைவாகத்தன்கையில்
வாங்கி வணங்கவில்லை சிரசிலேதரித்துக் கொள்ளவில்லையென்று பாண்டியரா
ஜன் திருநீற்றைத்தரித்த கடவுளினுடைய மறைப்பினுலே கோபங்கொண்
டான் வெளிப்படக்காணுதற்கரிய அருமைத்திருமேனியையுடைய பரமசிவ
னைவர் பார்த்தவர்கண்களும் மனமும்சந்தோஷமடையும்படி வருகிறதைப்
பார்த்தும் பாண்டியராஜன் காணவில்லை ஒளித்துக்கொண்டு உலகெங்கெணு
நிற்கின்றகடவுள் மிகுந்த ஞானவிதிப்பிரகாரமிருக்கிறபெரியகுதிரையினுடைய
இழிவும் உயர்வும் பிரகாசமாக உங்களுக்குள்ளேசாதித்து நம்மோடேசா

ல்லுமென்று சொன்னன் பாண்டிபராஜன் சொல்லிறற் பிரகாசிக்கப்பட்ட அஸ்வலட்சணத்தினுடைய உண்மையாகியபொருளைத் தெரிந்தவர்கள் வெற்றிபொருந்திய விரும்பத்தக்க குதிரைகளுக்குள்ளே குற்றத்தையும் குணத்தையும் பார்த்து மகமேருமலைபின்மேல் தன்னுடைய மீனக்கொடியை எழுதிவைததுத்திரும்பிய வெற்றிபைக்கொண்ட அரசர்க்கரசனுகிய பாண்டியராஜன்முன்பாக இந்தவிதமாகச்சொன்னர்கள். துன்பத்தைத்தருகின்ற சந்திரச்சுழி அண்டாவர்த்தமென்னுந் தண்டை யடியிலிருக்கின்ற சுழிகளும் உடலிலொருபக்கத்திலிருக்கின்ற சுழியாகிய கௌவகமும், காகாவர்த்தமும், மேன்மைபாகவிளங்கிய முன்வினையச்சுழியும்பாவிய செழுமையுள்ள கேதாரிச்சுழியும், காலிலிருக்கின்ற பிரதோசனமில்லா கொடிய சுழியாகிய கேசாவர்த்தமும், பொலிவோடுங்கூடிய கச்சைநிலையிற் பட்டையாகச் சொல்லப்பட்டசுழியும் ஆகிய இந்தச்சுழிகள் பொருந்தாவனவாம் கொம்பைபபோலிருக்கும் நீண்டகாதும் முறுக்கியகாதும் மூன்றுகால்விளர்த்து ஒருகால் கறுத்தும் கறுத்தகாலொன்றும், மூன்றுகால்கறுத்து ஒருகால்விளர்த்தும், விளர்த்தகாலொன்றும், விளர்த்தகண்ணும் தீனிகுன்றுமையும்வெம்புகின்றதீயையுடைய மயானருத்திரனைப்போலும் நீலகண்டம் பீஜமில்லாமையும் எறக்குறையவிருக்கும் பெரியபீஜமும் செவ்வையாகிய பதுமையும் அக்கினியும் சித்திரம்போ லசைவில்லாமலும் முகமும் வால் நாற்கால்களிவைகளிற் சுழியில்லாமையுமென இப்பூலோகத்தார் சொல்லிய குற்றங்களி லொன்றுமில்லாமல் கழுத்தடியில் மார்க்கண்ட மிரட்டையாயிராமல் சிரசிலே இரண்டு சுழியும் செழுமையுள்ள நாவிலே நான்குசுழியும் சிறந்தமார்பிலே இரண்டு சுழியும் நெற்றியிலே ஒருசுழியும் உதட்டிலே ஒருசுழியும் ஆகிய சுழிகள்பத்தும் குறையாமல் நரி-பூனை-கரியகாக்கை-பேய்-ஓரி - நாய்செழுமையுள்ளபன்றி இவைகளுடைய சத்தமில்லாதவையாய்ப் பெரிய அலையையுடைய கடல்மேகம் சங்கம் இடபம்பேரிகை இவைகளைப்போல் ஓசையுமுடையதாய் கோபித்துப் பகைக்கின்ற-புலி-காடி-கழுதை-செந்நாய் ஒளியையுடைய பூனை-நரி - தரிக்கப்பெற்ற கரியகாயம்-தீ-புகை இவைகளினுடைய நிறத்தைப் பொருந்தாதவைகளாய், இறுமாப்புடையனவாய், வாயுவென்னும் வேகத்தோடுங் கூடிய பிரகாசித்த கிரணங்களுடைய வெள்ளிய முத்துக்கள் சந்திரன் நீலரத்தினம் மெல்லிய தாமரையினுடைய மகரந்தம் செழுமைபொருந்திய பொன்காயா செவ்வரத்தமலர் நல்லபச்சக்கிளிஆகிய இசைகள்போல பொருந்திய உருவத்தை யுடையனவாகி நெற்றி பரந்து உயர்ந்த மேலுதட்டையுடையவாய்வெண்ணிறநிறைந்துதம்மிலே வரிசையாய் ஒத்துப்பிரகாசிக்கப்பெற்ற பற்களையுடையவாய், நிறைந்த நல்லவாசனைபொருந்தி நாக்கும்மாவினிலந்தளிர்போலும்செம்மைநிறம்பொருந்தி இரண்டிணையின்மயிருந் திரட்சியுடையவாய் உக்கிரமாகிய கண்பார்வையுடையவாய், தேகத்தினிடத்தில்அதிகமாமிசமில்லாமல் உள்ளேவளைந்து முக்கோணமாய்ப் பிரகாசிக்கின்ற முகத்தையுடையவாய்க்கழுத்துமயிரும் தலைமயிரும் ஒருநிறமாயிருப்பதாய்மார்பினுடனே கண்டமும்பாம்பின்படமும்போலொத்துச் சங்குகள்போலத் தொனியுண்டாக்குவித்துஉள்வாங்கி மண்டலஞ் செய்வனவாய் வலிமைகொண்ட குளம்புடையவாய்கிளைத்திருக்கின்ற நரம்புகள் மறைந்து தசையையுடையவாய்ப் பிரகாசிக்கின்ற முழங்கால் நெளித்தளில்லாமல் நெளிப்பாகிய முதுகும் பருத்ததுடைகளுந்திரண்டு தண்டைக்காலானது நீண்டு சிவந்த நிறத்தையுடையவாய்

மிகுந்த செழுமையுள்ள சாமவேதத்தினுடைய நாவிலும், பிரமதேவனுனவன் ஓமஞ்செய்யும்போது அவன்கண்ணினின்று கையில்வழிந்த நீரினிடத்தும் இந்திரன்முதலிய திக்குப்பாலக ரெண்மரிடத்தும், சமுத்திரத்திற் பிறந்த அமிர்தத்தினிடத்தும் அந்தப்பிரமனேமஞ்செய்த அக்கினியிடத்தும், நிறைந்தகருப்பையிலும் லட்சுமிசாபத்தாற் பிரமன் கோட்டாணுக அந்தக்கோட்டான் முட்டையிலும், ஆகிய இவ்வேழிடத்திலும் உற்பத்தியான பழமையுடையனவாய் நாலுகாலும் நெற்றியும்ஒக்க வெளுத்திருக்கும் பஞ்சகல்யாணியென்னுங் குதிரைகள் ஆகாசத்திலும நீரிலும் செல்லுகின்ற வழியுண்டாய் மங்காளனென்றும், சாரங்கனென்றும், கங்காநீலனென்றும், மௌவழுகனென்றும், கொங்காளனென்றும், சன்னசம்பாளென்றும், குங்குமச்சோரனென்றும் கரியானென்றும், நீலனென்றும், சாரனென்றும், பொல்லானென்றும், கருங்காற்சம்பானென்றும் பலநிறத்தையுமுடையசாதியாய், உயர்ந்த குதிரைகளிவைகளென்று சொல்லினர்.

அவர்கள் இவ்விதமாகச் சொன்னபின்பு பரிமேலழகராகிய சோமசுந்தரக்கடவுள் ஒரு நரிப்பரியைகாட்டி இதைப் பூசித்துவணங்கிக் கயிறுமாறிக் கொள்ளென்ன உடனே அரிமருத்தனபாண்டியன் அவர்காட்டின குதிரைக்கு முத்துமாலை சதங்கைச் சிலம்புகளால் அலங்காரஞ்செய்து நல்லபூமாலையும் சந்தனமுமணிந்து தூபதீபங்கொடுத்துப் பத்தியுடனே வணங்கி யெதிரேநிற்க அப்போது முத்தொழிலின்மூவராய் மூவர்க்குந்தெரியாத முக்கண்மூர்த்தியான பரிமேலழகர் திருவாலவாய்ப்பரனைப்பார்த்துத் தமதுகைகளைத்தலைமேலே குவித்து வாழிவாழியென்று குதிரையைக்கொடுத்துக் கயிறுமாறி உபநிடதமாகிய சீனியையுடைய குதிரையொன்றுதவிர மற்றைக்குதிரைகளை கொடுக்கப் பாண்டியன்வாங்கி குதிரைவீரர்களிடம்தர அவர்கள் லாயத்தில் கட்டினர்கள் பின்பு குதிரைவர்த்தகரான கடவுளுக்குப் பாண்டியன் வெள்ளைவஸ்திரம் வெகுமானமாகக் கொடுத்தான் பாணனுக்கு ஏவல் செய்தவராகிய சோமசுந்தரக்கடவுள் காணுமல் குதிரையை விட்டிறங்கி வாங்கி அந்த வஸ்திரத்தை மற்றொரு கங்கைபோலத் தமது முடிமேலே சூடிக்கொண்டார், அப்போது கணுதிபர்கள் நமதுகடவுள் குதிரைவிட்டிறங்கி இந்தப்பாண்டியராசனிடத்திலே யிரந்து தலைமேலே சூடிக்கொள்ளுகிறதற்குக் காரணமென்ன இனி இந்தப்பாண்டியன் கடவுளணிந்தகபாலமும், திகம்பரமும் பாம்பாபரணமுங் கொள்ளுவாரேனென்று தங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் பேசிவெகுண்டார்கள். பின்பு மனுநீதிப்படி அரசு நடத்துகிற பாண்டியன் குதிரைவீரர்க ளெல்லாருக்கும் வெவ்வேறே வஸ்திரங்கள்கொடுக்க அவர்களுமவாங்கிச் சூடிக்கொண்டார்கள். பின்பு அருள்வடிவாய்ச்சிறந்துவந்த பரிமேலழகரும் மற்ற மாயக்குதிரைவீரர்களும் மறைந்து போயினர்கள் அப்படி அவர்கள் போனபின்பு தனக்கு இம்மைக்கு மறுமைக்குந் துணையாகிய வாதவூரடிகளுக்கு அரிதானசிறப்புகள் செய்து அவரிடத்துக்கு அவரை அனுபபிவிட்டுபு பாண்டியன் உச்சிக்காலத்தில் தனதரண்மணைக்குள்ளேபோக மற்றைமந்திரிகளும் தங்கள் தங்கள் வீட்டிற்போககுதிரைகள் பார்க்கவந்த மதுரைப்பட்டணத்து ஜனங்களும் தங்கள் தங்கள் வீடுகளுக்குப்போக பரிமே லழகரும் தம்முடைய திருக்கோயிலுக்குப்போய்த் தம்முடைய திருவிளையாட்டெல்லாம் மீனாட்சியம்மையாருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

நரிபரியாக்கியபடலம்-முற்றிற்று.

† இந்த அடையாளமுதல் ‡ இந்த அடையாளம்வரையில் திருவாதவூரடிகள் புராணத்திலிருந்து சேர்க்கப்பட்டது.




உ

சிவமயம்.

அறுபதாவது

பரிதாபியாக்கிய படலம்.



கலிநிலைத்துறை.

ஞானநாயகனேயானரிபரிவெள்ள
மானவாறுசைசெய்துமீண்டப்பரிநரிபாய்ப்
போனவாறுகண்டமைச்சரைப்புரவலன்கூப்ப
வானவாறுபோல்வைகைநீர்வந்தவாறுரைப்பாம்.

இதன்பொருள்.

ஞானத்தலைவராகிய சோமசுந்தரக்கடவுளாது திருவாணையால் நரிகளெல்லாங் குதிரைக்கூட்டங்களாகச் சமைந்த திருவிளையாடலைச் சொன்மேலும் இனி, மீண்டும் அந்தக்குதிரைகள் நரிகூட்டங்களாகி ஓடிப்போய்விட்ட அதிசயத்தையறிந்து அதனைமோசமாகவெண்ணி மந்திரித்தலைவரைப் பாண்டியன்கோபித்து வருத்திய சமையத்தில் அச்சோமசுந்தரக்கடவுளது திருவாணையால் வையைநதியானது ஆகாசகங்கையைப்போல மதுரையிற்பெருகிய அற்புதத்தையும் சொல்லுகின்றோம்.

நெருங்கிய பலவாத்தியங்களின் முழக்கமும் சேனைகளும் அதிகமாகப் பெண்கள்கூட்டங்கள் எதிரேவந்து மங்கலங்கள் ஏந்தப் பாண்டியன்கொடுத்த வரிசைகளைப்பெற்றுக்கொண்டு வாதவூரடிகள் தமது திருமனையிலே வந்துபுகுக அப்படிவந்து புகுந்தவுடனே சுற்றத்தாரும் கல்வி கற்றவர்களும், மிகுந்தசிநேகிதர்களும், தங்கள்தங்கள் முறைப்படியே விசாரிக்கின்றவர்களுக்கெல்லாம் தமது திருவாக்காலே உபசார வார்த்தைகளும் சந்தோஷமுமுண்டாகச் செய்தனுப்பிவிட்டு வாதவூரடிகள் தாம்தனியே ஓரிடத்திலே யிருந்து கரந்தைமலர் மாலையைத்தரித்தருளிய ஆலவாய்க்கண்ணுதலாகியசோமசுந்தரக்கடவுள் நாம் வேண்டிக்கொண்டபடியே கொண்டுபோன பொருள்களெல்லாம் அடியார்களும் தாமுமாகவே ஒப்புக்கொண்டு நம்மையும்பணிகொண்டு நமதுதுன்பத்தை தீர்த்தார். அல்லாமலும் பாண்டியனுக்குச்சம்மதியாகவே குதிரைகளுஞ்செலுத்தினர் ஆதலால் இனிநமக்கு முழுதுங் கவலையில்லாமல் செய்த அவரேபிரபஞ்சமாயையையுமுழுதும் வெல்லதமதுபரஞ்சோதியினுக்குள்ளானந்தத்தைநாமடையும்படி நம்மை தவக்கோலஞ்செய்தருளவேண்டுமென்று அன்புமிகுந்து இகபரத்தாசைகளொன்றுமில்லாமல் அறிவினுக்குள்ளுணர்வாகத்தோன்றுகின்ற பூரணமாகிய சோமசுந்தரச்சோதியினுடைய வெள்ளியம்பலத்துள்ளாடிய திருவருளை மனத்துள்ளே தியானித்துக்கொண்டிருந்தனர். பின்புசூரியன் நாளைத்தினமும் திருவாலவாய்க்கடவுள் தமதண்பரை ஆண்டுகொண்டருளவேண்டி மண்சுமந்தருளுவாரெ

ன்று அதையும் பார்ப்பதற்காக ஊளையிடுகிறநரிக்குதிரைகளினுடைய தூளி களாலேமூடுபட்ட உடம்பைக்கழுவிக்கொண்டு திருப்பவேண்டுகிறவன்போ லக் கடலிலேகுளித்து மறைந்தான்.

அப்படி அவன்மறையவே சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடலால் வந்த குதிரைக்கூட்டங்களாலேயெழுந்த செந்தூளியாலே அழுக்காய்மழுங் கின ஆகாயத்தை வெள்ளைநிலவாகிய வஸ்திரத்திலே அந்தத் தூளிகளைத் துடைக்கிறவன்போல் முத்துகளை எறிகின்றகடல்முகட்டிலே குளிர்ந்தசந்தி ரன் உதையமாகிப் பின்னும்நகஷத்திரங்களே எழுத்துக்களாகஎழுதினஆகா ரணமாகியவெள்ளைவஸ்திரத்திலே துடைக்கிறவன்போலவும் விளங்கினான் அப்படி இராத்திரியானபின்பு பாண்டியன் லாயத்திலே புகுந்திருந்தமாயக் குதிரைகளெல்லாம்,திருவாலவாய்க்கடவுள் திருவிளையாடலாலே முன்னுள்ள தங்கள்வடிவுகொண்டு ஒன்றோடொன்றுபேசிக்கொள்ளுகின்றன எப்படியெ ன்றால் சங்கோசையும், பிணப்பறையோசையும்பெண்டுகள் அழுகுரலோசை யும்கொங்கைகள்சிவக்க இரண்டுகைகளாலு மாரடித்துக்கொள்ளுமோசையு மல்லவோநாம்எவ்விடங்களிலும் காதுகள் குளிர அமுதம்போலே கேட்போ ம் இப்போதுஅதைவிட்டு நாம்குதிரைகளாகி மனிதர்களைச்சுமந்து தாம்புச ங்கிவிகளாலே கட்டுண்டு பகலெல்லாம் சவுக்காலடிக்கத் துன்பப்பட்டுவருந் திறமும் இப்போதல்லவோநம்முடைய விதிவலியாலேநம்முடைய முன்னைய வடிவை நாம்கொண்டோம் ஆனால்முன்னேநாம்காடுகளிலே வாழுங்காலத்தி லே ஒருநாளாவது இந்தக்கவலையான துன்பத்தைக் கண்டறிந்திலம் இனிநா ம்கட்டுண்டதழும்பும் சவுக்கடித்தழும்பும் உடம்பிலேபோகவில்லை ஆகையா ல்இனி விடியுமுன் ஓடிப்போய்விடுவதேநல்ல காரியம் இவ்விடத்திலே மனந் திருத்தியாக நாம்தின்பதற்கு ஊன்சரிந்து சிந்துகின்ற தொள்ளைநத்தைக ளில்லை நந்துகளுமில்லை செலவுக்குள்ளேபுகுந்துமறைகிற கவைக்கால் நண் டுகளுமில்லை இவர்கள் கொடுக்கிற கடலை-கொள்-பயறு-புல்லுகள் ஆகிய இ வைகளைத்தின்னத்தகுமோ இனி அரசன் ஏவலாளரும் பட்டணத்துஜனங் களும்நம்மைக்கண்டால் அடித்துக்கொல்லுவார்களே இனி அவர்களடியா மல் விடியுமுன்னே கட்டிகளை அவிழ்த்துக்கொண்டு காட்டிற்கோடிப் போய் விடுவதே நல்லவுபாயமான காரியமென்று தயிரியங்கொண்டு ஊளையிடுகிற குறுநரிக்கூட்டங்கள் ஒன்றுய்க்கூடிப்பேசிக்கொண்டு கொள்கடலைகளை வெ றுத்து நண்டு-நத்தை-சங்குகளைவிரும்பி சங்கிலிக்கட்டுகளை முறித்துக்கால்க ளிலே கட்டினகயிற்றுடனே முளைகளைப் பிடுங்கிக்கொண்டு ஓடிப்போம்வழி பார்த்து ஊளையிட்டெழுந்து குதிரைலாயத்திலே முன்னுள்ள குதிரைகள் மேலே பாய்ந்து பல்லுடைய அழுந்தக்கடித்து மென்று இரத்தத்தைக்குடி த்து குதிரைகள்முழுதும் பயந்தோடும்படி அவைகளின் பீசங்களைக் கடித் துக் காயம்பண்ணும்போது அந்தநரிகளின் ஊளைச்சத்தங்கேட்டு திடுக்கெ ன்றிந்திரைபவிட்டெழுந்து இலாயங்காக்கின்ற காளைவீரர்கள்நேற்றுச் சிங்கங்களைப்போல்வந்த குதிரைகளெல்லாம் நரிகளாய் முன்னுள்ளகுதிரை களின் குடர்களைப்பிடுங்கித் தின்பனவற்றைக் கண்டார்கள்.

அப்படி அவர்கள்வந்து கண்டவுடனே சிலநரிகள் கெட்டியாய் வலி தான இரும்பு முள்ளுகள் நட்டிருக்கின்ற வேலியைத்தாண்டியோடின சில நரிகள் சாளரங்களின்வழியைத் தொளைத்துக்கொண்டோடின சிலநரிகள்கோ ட்டையிற் கள்ளவழியாயோடின சிலநரிகள் கும்பலுக்குள்ளே நுழைந்தோடி ன காலொடிந்த நொண்டி நரிகளும் கிழநரிகளும் ஓரிகளும் குருட்டுநரிகளும் வியாதிகொண்டநரிகளும் ஓடிப்போக இடங்கள் கிடையாமல் அந்தலாயத்தி லேதானே கத்திக்கொண்டு கிடந்தன அவைகளிலே சில நரிகள் கிட்டவந்த வர்களையும் அதட்டினவர்களையும் கீழேவிழும்படி கடித்து நடுவே புகுந்தோ டின சில நரிகள் தடுத்துப் பிடிக்கிறவர்கள் கால்களினடுவே நுழைந்தோடின சில நரிகள் அவ்விடத்தில்தானே கிடந்து ஊளையிட்டழுகின்றன சில நரிகள் குட்டி நரிகளைக் கூடக் கூட்டிக்கொண்டு வேலிகள் முறியத் தாண்டுகின்றன இப்படிப் பாண்டியன் அரண்மனையைக் கடந்து வெளியேபோன நரிகளெல் லாம் குளங்கள் தோட்டங்கள் வீரர்களின் வீடுகள் கோயில்கள் நாற்சந்தி கள் வீதிகள பட்டணங்களெல்லாநெருங்கி மன்றுகளும் சித்திரகூடங்களும் மாடங்களும் செய் குன்றுகளும் தெற்றிகளும் வாயல்களும் நகரத்திரங்களு ம் கிரகங்களுஞ் சுற்றுகின்ற உயர்வையுடைய சோலைகளும் எந்த இடங்களு ம் நிறைந்து நரிகள் தங்களினங்களுடனே ஊளையிட்டு அலைகின்றன அப்போ து யானைச்சத்தமும் பலவித வாத்தியங்களினுடைய சத்தமும் தேர்கள் குதிரைகளின்சத்தமும் முத்தமிழ் முழங்குமோசையும் பாணர்கள்பாடுகின்ற பா டலோசையும் நிரம்பின பட்டணங்களெல்லாம் நரிகள் ஊளையிடவே எல்லா ரும் விழித்தெழுந்தார்கள் வளர்க்கிற நாய்களெல்லாம் விழித்துநின்றன மயி ல்களும்பயந்து விழித்துக்கொண்டன கோழிகளும் விழித்தெழுந்தன வண் டுகளும் பயந்தெழுந்தன அன்னங்களுமெழுந்தன பட்சிகளும் யானைகளும் காகங்களும் விழித்தெழுந்தன.

இப்படியாக நரிகள் சமயல்வீடுகளிலே புகுந்து தங்களுக்கதிக பசியு ண்டாகிப் பாண்டங்களையுருட்டிக்காய்ச்சின குழம்பு சமைத்தசோறு பலவித மான உணவுமுதலியவைகளைக் குட்டிகளுக்குங் கொடுத்துத் தாங்களுந்தின் று ஊளையிட்டுத்திரிந்து புறுக்கள் மயிலைக்கள் கிளிகள் சிவந்த கொண்டைத் தலைச்சேவல் முதலியவைகளைப் பிடித்தும் தூங்குகின்ற பிள்ளையைக்கொண்டு போய் அதன்வாயையும் பல்லையு நக்கிக் காயம்பண்ணுமல் தங்களுக்குறவு போல விளையாடியும் வாசல்களிலே பந்தரிட்டுப்படர்ந்த கொடிகளைவேரோடு பிடுங்கியும் அதன்வாய்களைக் கடித்தும் கரும்புகளைச் சாறுழுக முறித்தும் வாயிலிட்டுக் குதட்டியும் வண்டுகள்வாயிலேமோய்க்க ஊளையிட்டுத் துள்ளிக் குதித்தும் திரிகின்றன பலவாகி முறுக்கமான கொம்புகளையுடைய ஆதிகளா யிரம் இரும்புபோற் கெட்டியான பன்றிகள் ஆயிரம் முருக்கமலர்களைப்போ ல் உச்சிக்கொண்டையையுடைய கோழிகளாயிரம் அதன்குஞ்சுகளாயிரமாக கொன்று பின்னேதொடர்ந்து நாய்கள் குலைக்கக் குலைக்கஓடி முன்னேகண்ட வுயிர்களைக்கொன்று கோபங்கொண்டு வீரர்கள்போய் வலிந்துவந்தால் அவர் களைக்கீறி இரத்தங்களொழுகக்கடிப்பன அநேகங்களாக பன்றிகள் கத்து கிற சத்தமும் பல புள்ளிகளும் முள்ளுப்போன்ற வாய்களையுடைய கோழிக

ளின் சத்தமும் ஆடுகளின்சத்தமும் நாய்கள்குலைக்கிற சத்தமும் வீரர்கள்சத் தமும்கூடி ஊளையிடுகிற நரிக்குரலுக்குச்சமானமாகிய தொருபக்கத்திலே அ ப்படியாகப் பொழுது விடிந்தவுடனே பட்டணங்களெல்லாங் கண்விழித் தெழு கோட்டை வாசல்களைக் காக்கிறவர்கள் வாயிற்கதவைத் திறக்குமள விஸ் தடையில்லாமல் எங்குங்கூடின நரிகளெல்லாம் கணப்பொழுதிலே இரு ள் சிதங்தோடிறற்போல காட்டுக்கோடிப்போயின அப்போது அழிவில்லாத சிவபரஞ்சோதிபோல சூரியன் கிரணங்கள் வீசுமளவில் தெளிந்த சாத்துவித குணமுடையவர்கள் முன்னே தாமதகுண தேவதைகள் நில்லாமற்போவது போல நகூத்திரங்களொளி மழுங்கிமறைப தேவர்களுக்குங்கிட்டாத வேத ப்பொருளான கடவுள் அழுது தொழுகின்றவராகிய வாதவூரடிகளுக்காக எளியராய் மண்சுமந்தருளுகின்ற வருத்தத்தைக்கண்டு அவர்பாதங்களைவரு குவதற்காகவே ஆயிரங்கிரணங்களாகிய கைகளுடனே சூரியன் கீழ்த்திசை யிலே உதையமாகவும் நேற்றைத்தினம் பாண்டியனுக்குக்குதிரைகள் செலு த்தித் தமதுகவலைதீர்ந்து சிவத்தைத்தியானித்திருக்கிற வாதவூரடிகள்மனம் பொற்முமரைகள் மலர்ந்தன ஒப்பில்லாத பரம்பொருளைத்தெரிந்து பேச்ச டங்கின மௌனிகள்போலக் குழுதங்கள் வாயொடுங்கின அப்போது இலா யக்காரர்கள் எப்படிப்போய்ச் சொல்லுவோமென்று பயந்து விரைந்தெழுந் து சென்று பாண்டியன் அரசாட்சிசெய்கின்ற சபையிலே அவனைக்கண்டு கும் பிட்டு உடல்நடுங்கி ஐயாநேற்றுக் காற்றினும் அதிகவேகமாய்க் கண்ணுக் கழகாய்வந்த குதிரைகளெல்லாம் முன்னிருந்த குதிரைகளுக்கு நமன்போ லாகிக் கடித்துக்கொன்று பட்டணமெல்லாங் கும்புகூடிப் பலவுயிர்களையும் வதைத்துக் காட்டுக்கோடிப்போயினவென்று சொன்னார்கள். அப்படிச்சொ ன்ன மனதுக்குப்பொருந்தாத இந்தச்சொல்லாகிய கடுங்காற்றினது அவன் காதாகிய துருத்திவழியேபோய்க் கோபாக்கினியைமூட்டிவிடக்கண்களிலே நெருப்புப்பொறி சிந்தச்சிவந்து அரிமருத்தனபாண்டியன் கோபித்ததைக்க ண்டு அங்குள்ள மந்திரிகளும் பயந்தொதுங்கினர்.

பின்புபாண்டியன் நேற்றுக்குதிரைகளைக்கண்டு அழுதமுண்டவன்போ லச்சந்தோஷக்கடலிலே முழுகி இன்று அந்தக்குதிரைகளெல்லாம் நரிகளா யோடிப்போயின வென்றவுடனேதுன்பக்கடலிலேமுழுகி அருகிலேயிருந்த மந்திரிகளைப்பார்த்துக் கண்டீர்களோ அந்தவாதவூரனுகிய கொடிய இருள் போலும் மனவஞ்சகன் நம்முடைய பொருள்களெல்லாங் கொண்டுபோய்க் காட்டிலேதிரிந்து மாமிசத்தையும் பிணத்தையும் குடலையும் பிடுங்கித்தின்ற நரிகளையெல்லாம் குதிரைகளாக்கிக்கொண்டுவந்துகாட்டிப்பின்பு இவன் மண் ணின மாயங்களுக்கு இவனை என்னசெய்வது என்றுகேட்க அதற்குமந்திரி கள் ஐயாஎங்களுக்கெல்லாம் கொடியபழிபாவங்களுண்டாகத் தவறுசெய்து உம்முடையசெய்நன்றியை மறந்தவனுக்கு நாங்கள்சொல்லக்கடவது என்ன விருக்கிறதென்று சும்மா தங்கள் தலையையும் அசையாமல் பேசாமலிருந்தார் கள்அந்தவேளையில்வாதவூரடிகள் இங்கேநடந்ததொன்றுந் தெரியாமல்பாண் டியனுக்கு குதிரைகள்செலுத்தவேண்டியகாரியத்தைநன்முகமுடித்து மனக்க வலைதீர்ந்தோமென்றுகாளகண்டராகிய சோமசுந்தரக்கடவுளைத் தியானித்து அறிவுமயமாகியபேரின்பக்கடலில் முழுகினவராய் அரசன்சபைக்குவந்தார். அப்படிவந்தவாதவூரரை சிவந்தகண்களிலே நெருப்புப்பொறிசிந்தக் கடுகடுத்

துப்பார்த்துப் பாண்டியன் ஓப்வாதவூராநீயென்னுடைய பொருள்களெல்லா
ங்கொண்டுபோய் நலலகுதிரைகள் வாங்கிவந்தாய் உனக்கே அழகாயிருக்கி
ன்றதல்லவா ராஜகாரியந்செய்து கீர்த்திபெறநிலைநிறுத்தத்தக்கவர்களில்உன்
னைப்போல்பாவர் இருக்கிறார்களென்று கோபித்துச்சீறும்போது வாதவூரார்
ஐயா அதகக்குதிரைகளுக்குக்குற்றமென்னவென்றுகேட்டார். அதற்குப்பா
ண்டியன் குற்றமேது அந்தக்குதிரைகள் இராத்திரி நரிகளாகி முன்னுள்ள
குதிரைகளினுடைய வயிரைவாங்கி இரததமொழுக நிணங்கள்சிதறக் குடர்
களைப்பிடுங்கித்தின்று முன்னேவந்தவர்களையுங்கடித்துக் காயங்கள்பண்ணி
க்காட்டுக்கு ஓடிப்போயின நீமுன்னே எனக்குக் கண்ணுங்கவசமும்போல்எ
ன்காரியங்கள்செய்துவந்தது சமயம்பார்த்து என்பொருள்களையெல்லாம் அப
கரித்துக்கொள்ளுகிறதற்கோ உன்மந்திரித்தனம் நன்றுயிருக்கின்றது ஐயோ
பிராமணர்குலத்தில்பிறந்து பரிசுத்தனென்று ஒருபேருங்கொண்டாயே நீ ப
ண்ணினகாரியத்துக்கு வேறுருசாதியாலல்அதிகமாகத்தண்டிக்கப்படுவார்
களேயென்று சினங்கொண்டு தண்டிக்கிற சேவகர்களைக்கூவி நீங்கள் இவனைக்
கொண்டுபோய் தடித்துமறித்து வாதைசெய்து உபத்திரவத்திலே பயந்து
கொடுக்க என்பொருள் முழுதும் வாங்குங்களென்றுசொல்ல அப்போது
இயமனுலும் தண்டித்துப பொருள்வாங்கவல்லவீரர்கள் சூரியனை யிருள்ம
றைத்ததுபோலக்கவிந்து வாதவூரடிகளை பிடித்துக்கொண்டுபோய் அடிகொ
திக்கின்ற கொடியவெய்யலில் நிறுத்தி சூரியனைப் பார்க்கச்சொல்லி இரண்டு
கைகளிலும் நெற்றியிலும் கல்லேற்றி தங்கள் கண்களிலே நெருப்புப்பொறி
சிந்தத்தண்டிக்க அதுபொறுக்கமாட்டாதவராய் சூரியனையும் சந்திரனையும்
அக்கினியையும் கண்களாகக்கொண்ட சோமசுந்தரக்கடவுளை நினைத்தழுது.

நாதவோநாதமுடிவிறந்தநாடகஞ்செய்
பாதவோபாதகணுமென்னைப்பணிகொண்ட
வேதவோவேதமுடிவன்விளந்ததனிப்
போதவோபோதநெறிகடந்தபூரணவோ.
ஐயவோவென்னுடையவன்பவோவன்பர்க்கு
மெய்யவோவெய்யில்வினையென்றலைவைத்த
கையவோசெய்யகழற்காலவோகாலனைக்காய்
செய்யவோவேதப்பரியேறுஞ்சேவகவோ.
அத்தவோகல்லாக்கடையேனையாட்கொண்ட
பித்தவோபொய்புலகைமெய்யாகப்போதிக்கும்
சித்தவோசித்தந்தெளிவித்தினைத்தந்த
முத்தவோமோனமயமானமூர்த்தியவோ.

என்று இவ்விதமாக உயர்ந்தபுகழையுடைய வாதவூரடிகள்துதிக்குங்
குரல்சோமசுந்தரக்கடவுள் காதிலேபோய்புகுந்தவுடனே கடவுள் இனிவாத
வூரடிகள்சிதம்பரத்துக்குப்போகவும் தம்முடையதலைமேல் மண்சுமையேறவு
ம்பிட்டுவிற்கிறகிழவி விமானத்தின்மேல் ஏறிக்கொண்டு சுவர்க்கலோகம்போ
கவும் எண்ணினவராய் கங்காநீர்வடிவாகிய வைகையாற்றைப்பார்த்துநீகடை

யுகத்தில்வரும் கடல்போலக்கண்டோரெல்லா மதிசயமடைப்பப் பெருகிவரக் கடவையென்ன அப்படி தும்பைச்சடைமுடிக்கடவுள் ஒருசொல் சொல்லுமுன்னே சங்குகளாகிய வளையலுங் கருமணலாகியகூந்தலும் உடையபெண்வடிவானவகையாருனதுழற்காலத்தில்கச்சைநெருக்கிவிம்முகின்ற தனங்களாலும் வரிவளையலாலும் தழும்புண்டாக அணைத்தபார்வதிதேவியின் தவங்குலக்கும்பொருட்டு மிகுந்தகோபங்கொண்டுவந்த கம்பாநதிபோலவேகங்கொண்டு கரைகளுடையவும் அங்குள்ளகழுகவிருக்ஷங்கள் குலமுறிந்துபழங்கள்சிந்தவும் மோதிப்படப்பைகளை அழித்தும் முத்துகளை வீசிக்கொண்டு வாழைத்தோட்டங்களை அடியோடுகீழ்சாய்த்து விளைந்த நெற்களைப்பறித்து பலவிருட்சங்களையும் வேரோடுபிடுங்கிவாரிக்கொண்டுகடுகி அநேகமாயிரந்தாமரைகளைப்பரப்பிக்கொண்டு இந்திரன்போலவும் செங்கழுநீர் முல்லைகரும்புகளைக்கொண்டுமன்மதன்போலவும் மணிகளையும் மலர்களையும்சிந்திகாஞ்சியும் சங்கமுமொலிக்க இருபக்கங்களிலேவீசி முகமாகிய தாமரையிலே கண்ணீரொழுகப் பிணங்கினபெண்போலவும் மலைத்தேன் முதலிபவைகளும் முல்லைநிலத்துள்ள-நெய்-தயிர்-பால்களும்-மருதநிலத்துள்ள கரும்புங் கருப்பஞ்சாறும் வாரிக்கொண்டு மதுரைக்குள்ளிருக்கிற எழுகடலைக்காண வருகிறதைப்போலப்பெருகிக் கோட்டைவாசலுக்குள்ளே நுழைந்து சிறுவீடுகளையெல்லாம் கீழேஇடித்துத்தள்ளி கப்பல்தோணிபோலமிதக்கமதிலையும் இடித்துத்தள்ளிக்கொண்டு வீதிகளும் பலபொருளும் விற்கிறகடைவீதிகளும் மன்றங்களும்-யானை-குதிரை-தேர்கள் செல்லுகிறவீதிகளும்பெருகி அலைமோதிவெள்ளம்வருகிறதைக்கண்டு பட்டணத்து ஜனங்களெல்லாம்பயந்து பிள்ளைகளை எடுத்துக்கொண்டோடுகிறவர்களும் பிள்ளைகளைக்காணமல்தேடியழுகிறவர்களும் பெண்கள் கைகளைபபற்றிக் கூட்டிக்கொண்டோடுகிறவர்களும் எங்கேபோய் நிற்போமென்று தடுமாறிமயங்குகிறவர்களும்பொருள்கள் ஆபரணங்கள்முதலானவைகளையெடுக்க நேரமில்லாமல் ஓடுகிறவர்களும் சிலபொருளைக்கொண்டு சிலபொருளை எடுக்கமறந்தவர்களும் உயர்ந்து நீண்ட மாளிகைகளின்மேல் ஏறுகிறவர்களும் ஆக இப்படி எல்லாருங்கலங்கி இந்தமதுரைக்கு இப்படிப்பட்ட துன்பம்வருவதற்குக் காரணமென்னவென் றுலோசிக்கிறவர்களாய் என்னைநேற்றுக்குதிரைகளெல்லாம் நரிகளாகினங்கும் மிகுந்தவாதைப்படுத்தின இன்று இப்படிவெள்ளம்பெருகி முன்கடல்பெருகிவந்தாற்போல் வந்ததென்று ஏதேனும்நம்முடையபாண்டியனிலை குற்றமுண்டோ அல்லது கடவுள் திருவிளையாடலோ அந்தக்கடவுளைபல்லாமல் இந்தவெள்ளத்தைத் தடுக்க ஆபிரங்குண்டோதரர்கள் ஒன்றுப்க் கூடிவந்து குடித்தாலும் அடங்குமோ ஆயிரமுகக்கங்கையுஞ் சடைக்கடவுள் தமதுசடையை இடங்கொடுத்தாலும் இந்தவெள்ளத்தின்கோபம் அடங்குமோஎன ஆகாசமங்க ஆயிரமுகங்கொண்டுபெருகி வருவதைப்போல வருகிறவெள்ளம் அடங்காமைக்கண்டு வாதவூரைத்தண்டிக்கிற வீரர்களும்பயந்து தங்கள் வீட்டிலுள்ளபொருள்களைப்பத்திரஞ்செய்யவேண்டி இவரைவிட்டுவிட்டுப்போய்விட வாதவூரடிகள் மதுரேசர் திருக்கோயிலுக்குள்போய் அழுதிசைபாடித் தொண்டிலகப்படும்பாதம்போற்றித் தொழுதுசேவித்துஅறிவுமயமாம்போரானந்தக்கடலில் மூழ்கிஎழுதினசித்திரம்போல் அசையாமல் அங்கே எழுந்தருளியிருந்தனர்.

பரிநரியாக்கியபடலம் முற்றிற்று.



உ

சிவமயம்.

அறுபத்தொன்றுவது

மண்சுமந்தபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பண்சுமந்தமறைநாடரும்பொருள்பதஞ்சுமந்தமுடியார்மனம்
புண்சுமந்தகுயர்தீரவந்தபரிநரிகளாயடவிபோனபின்
விண்சுமந்தசுரனதிபெனப்பெருகுவித்தவைகையிதுவிடையவன்
மண்சுமந்துதிருமேனிமேலடிவடுச்சுமந்தகதையோதுவாம்.

இதன்பொருள்.

உதாத்தமுதலிய சுரபேதங்களைக்கொண்ட வேதங்களால் ஆய்ந்தறியக்கூடாத பரம்பொருளாகிய சோமசுந்தரக்கடவுள் தமது திருவடிகளைச் சிரசிலேதாங்கிய அன்பராகியமாணிக்கவாசக சுவாமிகளுடையமனதிற் புண்ணுண்டாகநேர்ந்து துன்பமானது நீங்கள் முன்னேகொண்டுவந்தகுதிரைகள் பழையபடி நரிகளாகக்காட்டுக்குப்போய்விட்டபின்பு ஆகாயகங்கையைப்பெருகும்படிச் செய்த திருவிளையாடலிதுவாகும். இனிவிடைமேலழகராகிய சோமசுந்தரக்கடவுள் அந்தவைகையையடைக்கும்பொருட்டுமண்சுமந்து அந்தமண்சுமந்த திருமேனிமீது பாண்டியனடித்த பிரம்படித் தழும்பையுந்தாங்கிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

ஆகாயமுகட்டை யளாவியோடிவருகின்ற வைகையாற்றுவெள்ளத்துக்குள்ளே மதுரையானது கருங்கடற்சுழலுக்குள்ளே கிடந்தலைகின்ற கப்பலைப்போலச்சுழன்று கலங்கப்பாண்டியன்கண்டுமந்திரிகளையெல்லாங்கூப்பிட்டு நீங்கள்போய்க் கரையைக்கட்டியொதுங்கிப் பெருகிவருகிற வெள்ளத்தின் வேகத்தையடக்குங்களென்று உத்தரவுசெய்தவுடனே மந்திரிகள்வணங்கிக் கொண்டுபோய்த் தனித்தனியே குடிகளுக்கெல்லாம் பெயர்கொண்டெழுதி இன்னார் இவ்வளவுகரை இன்னரிவ்வளவுகரைகட்ட வேண்டுமென்றுகோல் போட்டளந்து அடையாளஞ்செய்து பங்குபிரித்துவிட்டு மதுரைப்பட்டணமெல்லாம் பறையடித்துக்கூவிச்சொல்லி அவர்கள்விடுகிற ஆள்களையெல்லாங்கும்புகூட்டிவிட்டு அவரவர்க்கு அளந்துவிட்டபடிவேலைசெய்து கரைகட்டுங்களென்றவுடனே மண்வெட்டி கூடையாள்கள்சிலர்மரங்கள் எடுத்துவருகிறவர்கள் வைக்கோல்கள் இலைகளைக்கொண்டுவந்து ஆகாசத்தையளாவும்படி குவிக்கிறவர்கள்சிலர் தச்சர்கொத்தர்கள்சிலர் ஆக இப்படிக்கடலிலே ஈமுகக்கவருகிற மேகங்கள்போல ஆற்றங்கறையிலேவந்துகூடிநெருங்கிநின்று குதிரைமரங்கள்நிறுத்தி வைக்கோலாலேபாம்புபோலும் நீளமாகப்புரிகள்திரட்டி முறுக்கி அடியிலே அழுந்தக்கிடத்தி அதன்மேலே தழைகளையும்வைக்கோற்கட்டிகளையும் போட்டுநிரப்பிக் கூச்சலிட்டுப்பறைகள் முழக்கிமணல்வெட்டி கூடைகள் தட்டுகளிலேநிரப்பி எடுத்துவிடுகிறவர்களும் அவைகளை எடுத்துக்

கொண்டு விரவிலேபோக அதட்டுகின்றவர்களும் திடீரென்று உடைப்பிலே கொண்டுவந்துகொட்டுகிறவர்களும் அந்தமணலாலேகரைபரப்புகிறவர்களும் கரையெழுந்தவுடனே சந்தோஷித்துக்குரவை குழறுகிறவர்களும்கரைகட்டு கிறவர்களும் வெள்ளம்வந்து உடைத்துக்கொண்டு மனம்கலங்குகிறவர்களும் வைகைநதியைப்பார்த்து எங்கள்தாயே எனிவ்வளவுகோபம் தணிபவேண்டு மென்று வேண்டுகிறவர்களும்மணல்கொட்டும்போது உடைபணித்த படங்கி யடைப்பண்டு மகிழ்வடைகிறவர்களும் குரவையாடிகுதிக்கிறவர்களும் எட் டுத்திசையுங்கேட்க முழங்கிப்பறையடிக்கிறவர்களுமாக இப்படி ஊரிலுள்ள வர்களெல்லாருங்கூலியாள்கள் வந்துமுன்னே அளந்துவிட்ட எல்லைகளிலே நின்று வேலைகள் தனித்தனியேசெய்துகரைகட்ட அப்போது அந்தமதுரை க்குக்கீழ்த்திசையிலிருக்கிற ஒருநரைத்தக்கிழவியாய் வெகுகாலங்கண்டவள் அவள்போர் வந்தி அவள் தினம் தினம் சுடுகிற பிட்டுக்களையெல்லாம் நான்கு தோள்களும் மூன்றுகண்களும்கொண்டருளிய கடவுளாகிய திருவாலவாயா னந்தத்தேவனுக்கு நிவேதனஞ் செய்து பின்புவிற்கிறவள்.

அப்படியே தினந்தோறும்பிட்டுவிற்று சீவனஞ்செய்கிறவந்தியென்னு ம்கூனற்கிழவிபங்குக்கு அளந்துவிட்ட கரையடைப்பதற்குக் கூலியாள்கிடை யாமல் மிகவுந்துன்பப்பட்டு இனியெப்படி பாண்டியன் தண்டித்தாலென்ன செய்வேனென்று மனந்தடுமாறிக் கூடல்நாயகராகிய சோமசுந்தரக்கடவுளை நினைத்து சுவாமீ நாஞ்ஞைபிட்டுவிற்றுப்பிழைக்கிறகிழவி நாளதுவரையிலும்எ ள்ளளவாயினும் துன்பமென்பதுதெரியாமல்சூரியன் எங்கே உதயமாகிறானென் றும் நினையாமலிருந்தவெனக்கு இன்றுபாண்டியன் உத்தரவினாலே துன்பம் வந்துசேரிட்டது ஐயோ எனக்குத்துணையுமில்லை மக்களுமில்லை தமருமில்லை பந்துஜனப்பெருக்கமுமில்லை ஆபத்துவேளைக்குதவத்தக்க அயலாருமில்லைஇ ந்தச்சமயத்தில்பற்றுக்கோடுபோலுதவுவாருமில்லாமல் துன்பத்திலேமுழுகி வருந்திப்புலம்புகின்ற பாவியேனுகிய எனக்காகவொப்புச்சொல்லி வேலைசெ ய்கிற ஆளுமில்லாமல் இப்படிப்பட்டத் துன்பத்திலே நான்வருந்துவது உம க்குதருமமோ தேவர்களுக்குமருமையானதெய்வமே அடியார்க்கெளியரான கடவுளே அரசனுவடைய ஆக்கினையினாலே இராஜநீதிப்படியே என்னைத்தண் டிக்குமுன்னே எனக்குப்பதிலாகப்போய்க் கூலியாளாய் வேலைசெய்கிறவர்க ளொருவரையுங்கண்டிலேன் இனிமிகவும் வழியானநான் என்னசெய்வேன் என்றுமிகுதியாகத்துக்கித்து ஆரேனுங்கூலியாளாகவருவதுண்டோவென்று தன் கொங்கைமேலேமழைத்தாரைபோற்கண்ணீரொழுக சோர்ந்தழும்போ துமுன்னே தம்மைக் குறித்து நிவேதனஞ்செய்கிற பிட்டையெல்லாம் இப் போதுலகமெல்லாங் காணவுண்டு அவள்துன்பந்தீர்ப்பதற்குப் பார்வதிபாக த்தைதமறைத்து கிருபாசொரூபத்தை முன்னே குண்டோதரன்தாகந்தீர்ந்து வைகையாருகப்பெருகின கங்காதேவியைப் பிரிய மாட்டாத போன்பிலேலே அவளைக்காணுதற்கு மீனாட்சியம்மையை வஞ்சித்துவடிவுமாறிவெளியே எழு ந்தருளிவருகிறவர்போல வருகின்ற ஞானவடிவானவர் அழுக்குபிடித்த ஒரு பழந்துணியை இடுப்பிலேதரித்துக்கொண்டு சிறந்த அடியார்திருக்கூட்டங்

உ

சிவமயம்.

அறுபத்தொன்றுவது

மண்சுமந்தபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பண்சுமந்தமறைநாடரும்பொருள்பகர்ந்சுமந்தமுடியார்மனம்
புண்சுமந்ததுயர்தீரவந்தபரிநரிகளாயடவிபோனபின்
விண்சுமந்தசுரனதிபெனப்பெருகுவித்தவைகையிதுவிடையவன்
மண்சுமந்துதிருமேனிமேலடிவடுச்சுமந்தைதியோதுவாம்.

இதன்போருள்.

உதாத்த முதலிய சுரபேதங்களைக்கொண்ட வேதங்களால் ஆய்ந்தறியக்கூடாத பரம்பொருளாகிய சோமசுந்தரக்கடவுள் தமது திருவடிகளைச் சிரசிலேதாங்கிய அன்பராகியமாணிக்கவாசக சுவாமிகளுடையமனதிற் புண்ணுண்டாகநோந்து துன்பமானது நீங்கள் முன்னேகொண்டுவந்தகுதிரைகள் பழையபடி நரிகளாகக்காட்டுக்குப்போய்விட்டபின்பு ஆகாயகங்கையைப்பெருகும்படிச் செய்த திருவிளையாடலிதுவாகும். இனிவிடைமே லழகராகிய சோமசுந்தரக்கடவுள் அந்தவைகையையடைக்கும்பொருட்டுமண்சுமந்து அந்தமண்சுமந்த திருமேனிமீது பாண்டியனடித்த பிரம்படித் தழும்பையுந்தாங்கிய திருவிளையாடலைச் சொல்லுகின்றும்.

ஆகாயமுகட்டை யளாவியோடிவருகின்ற வைகையாற்றுவெள்ளத்துக்குள்ளே மதுரையானது கருங்கடற்சுழலுக்குள்ளே கிடந்தலைகின்ற கப்பலைப்போலச்சுழன்று கலங்கப்பாண்டியன்கண்டுமந்திரிகளையெல்லாங்கூப்பிட்டு நீங்கள்போய்க் கரையைக்கட்டியொதுங்கிப் பெருகிவருகிற வெள்ளத்தின் வேகத்தையடக்குங்களென்று உத்தரவுசெய்தவுடனே மந்திரிகள்வணங்கிக் கொண்டுபோய்த் தனித்தனியே குடிகளுக்கெல்லாம் பெயர்கொண்டெழுதி இன்னார் இவ்வளவுகரை இன்னரிவ்வளவுகரைகட்ட வேண்டுமென்றுதோல் போட்டளந்து அடையாளஞ்செப்து பங்குபிரித்துவிட்டு மதுரைப்பட்டணமெல்லாம் பறையடித்துக்கூவிச்சொல்லி அவர்கள்விடுகிற ஆள்களையெல்லாம் கும்புகூட்டிவிட்டு அவரவர்க்கு அளந்துவிட்டபடிவேலைசெய்து கரைகட்டுங்களென்றவுடனே மண்வெட்டி கூடையாள்கள்சிலர்மரங்கள் எடுத்துவருகிறவர்கள் வைக்கோல்கள் இவைகளைக்கொண்டுவந்து ஆகாசத்தையளாவும்படி குவிக்கிறவர்கள்சிலர் தச்சர்கொத்தர்கள்சிலர் ஆக இப்படிக்கடலிலே காமுகக்கவருகிற மேகங்கள்போல ஆற்றங்கறையிலேவந்துகூடிநெருங்கிநின்று குதிரைமரங்கள்நிறுத்தி வைக்கோலாலேபாம்புபோலும் நீளமாகப்புரிகள்திரட்டி முறுக்கி அடியிலே அழுந்தக்கிடத்தி அதன்மேலே தழைகளையும்வைக்கோற்கட்டிகளையும் போட்டுநிரப்பிக் கூச்சலிட்டுப்பறைகள் முழக்கிமணல்வெட்டிகூடைகள் தட்டுகளிலேநிரப்பி எடுத்துவிடுகிறவர்களும் அவைகளை எடுத்துக்

யிலேபடியக் கட்டிக்கொண்டு முன்போலவேமண்ணைவெட்டி வாரிக்கொண்டு போய்க் கரையாகக்கொட்டி இப்படியாக இவர்ஒருதரம் இரண்டுதரம் மண் சுமந்திளைத்து கைகளிலும் தலையிலும் வடுவாகியழுந்த நீலவண்ணருகியவிஷ் ணுவினுலுந் தேடிக்கண்டறியப்படாதபாதங்களிலேசிவந்து நீர்சுரக்கநடந்து ஒருதழைத்தமரத்து நிழலுக்குப்போய் மலைமகளானபார்வதியும்நீர்மகளான கங்கையுமறியாமல் பூமிதேவிதொட்டு மகிழும்படி வெறுநிலத்திலே தமது தி ருமேனியைக்கிடத்திச் சுந்திரனை முடித்திருக்கிற தலையைக் கூடையைக்கவி ழ்த்து அதன்மேலேவைத்துக்கொண்டுசிவந்தமேருமலைபோலுங் கடவுள் தம தது அருள்வடிவை நினைந்து சற்றுநேரந்தூங்கி அந்தமாமேகல்லால விருட்சமா கவும் அலகள்வீசிக்கொண்டுவருகிற வெள்ளத்தையடைக்க வந்தவர்களெல் லாம் சனகாதிமுழுதுணர்ந்த மெய்ஞ்ஞானிகளாகக்கண்டுகளிக்க மெய்யுணர் ச்சியாகிய மோனமயச்சுத்தவருவைத் தெளிவிக்கிறவர்போலத்தெளிந்தெழு ந்து ஆடியும் சாமவேதம்போலத் தித்திக்கின்ற அமுதரசமானபாடல்கள்பா டியும் சிரித்தும் இவற்றையாராகிலும்பார்த்தால் உடனே மிகவும் பயந்தவர் போல வேலைசெய்தும் வேலைவாங்குகிறவர்கள் பராமுகமாஞல் அந்தக்கட்டு கரையிலுள்ள மணலைக்குவித்து அதன்மேலேகுதித்து தூளெழும்பகாலாலே பாய்ந்து ஓடியும் திரும்பிவந்து உன்மத்தங்கொண்டவர்போலப் பேசாமலுட் கார்ந்திருந்து வேலைமிகவுஞ்செய்திளைத்துவருந்தினவரைப்போலே உடம்பெ ல்லாம் வேர்வையொழுகப் பெருமூச்சுவிட்டு வாயாலூதிக் காற்றுவரச் செய் துகொண்டு மிகவும்பசித்தவர்போலேதளர்ந்து அடியாளிடும் பிட்டின்மேலே நினைவுகொண்டுவந்தி வீட்டைக்குறித்துத்திரும்பிவந்து துன்பவெள்ளத்தை நீந்திக்கரையேறி இன்பவெள்ளத்திலே முழுகியிருக்கிற கொடும்புற முதியா ளான கூனற்கிழவியைக்கண்டு அம்மே அளந்துவிட்ட கோலளவுக் கதிகமாக வே விசாலமாகக் கரைகட்டப்பட்டு வருகின்றது நான்மிகப் பசித்துவந்தேன் தாயே சீக்கிரம் பிட்டிடு நான்வேலைசெய்யப் போகவேண்டுமென்ன வுடனேவ ந்தியும்அப்போதுசுட்டபிட்டைக்கொடுக்க கூலியாளானகடவுள்இரண்டு கை களையுமேந்திவாங்கிக் கையுஞ்சுட வாயுஞ்சுட வாயிலே கொட்டிக்கொண்டு இரண்டுதாடைகளையும் பிடித்தொற்றிக்கொண்டு பதமாக்கி நீரைக்குடித்துத் தாம் கொண்டிருந்தபசிதீர்ந்து முன்போலவே கரையடைக்கவந்து பிட்டை வாய்நிரம்பத்தின்று பலங்கொண்டவராக மண்ணைவெட்டியெடுத்துக் கொண் டுபோய் வேற்றுப்பங்கிலேகொட்டி உடைப்படையக்கண்டு கெர்ச்சித்துத் த மதுவலிய தோள்களைக்கொட்டிப் பக்கத்தினிற்கிறவர்களைத்தழுவி மிகவுஞ் சந்தோஷித்துப்பின்பு வெட்டியெடுத்தமண்ணைக் கூடையோடேதடுக்கிவிழு ந்துவழுக்கி ஆற்றுவெள்ளத்தோடேபோய் நீந்திக்கொண்டு கூடையோடேவ ந்துகரைமேலேறிக் கூடையைக்கீழேஅடித்தடித்து ஈரமபோகச்செய்து அந் தக்கூடையில் அவிழ்ந்த கட்டைப்பிரித்துக் கட்டிக்கொண்டுபோய் மண்ணை வெட்டி ஒருகொட்டுமண்ணை எடுத்துக்கொண்டுபோய்க் கரையிலேகொட்டி ஓட்டின மண்போகக் கூடையை உடைப்பிலேவிழும்படிதட்டி அதுதவறிப் போக வெள்ளத்திலேவிட்டுவிட்டு மறுபடியும்அதைஎடுக்கிறவர்போலத்தாவி வெள்ளத்திலேவிழுந்து அலைபிலே யோடவிட்டுத் தாமொரு மரத்தைத்தெப்

பமாகப்பிடித்து மிதந்து பின்புகெட்டிப்பட்ட கரையிலே வந்துமோதி மறு படியுஞ் சுழியிலேசுழன்று அழுந்தித் தூரத்திலேபோய்த் தலைதூக்கியெழுந்து திரும்பிக்கரையேறிவந்து ைபிடியை விட்டுக்கொட்டுக் கழலச்செய்து மறுபடியும் அதிலேகோத்து ஆப்புவைத்திறுக்கித் தட்டிக்கெட்டி செய்து கொண்டு பெருமூச்சுவிட்டுத் தளர்ந்துநின்று இளைப்பாறி இடையிலே தரித்த கச்சிலிருந்த பிட்டை அள்ளித்தின்று யாறும்வேலை செய்யாதபடி சிலர்க்கு அந்தப்பிட்டை அள்ளிக்கொடுத்தும் வேலைசெய்யவில்லையென்று மாறு கொண்டோங்கி அடிக்கவந்தவரைப் பார்த்து இரண்டு கைகளாலும் அந்த அடியைத்தாங்கிக்கொண்டு சிரித்தும் இப்படியாக இகபரத்தாசையும் மண்ணைசைப் பெண்ணைசைப் பொருளாசையுமற்றுத் தம்மையும்விட்டுத் தத்துவந்தெரிந்த யோகிகள் ஞானக்கண்ணிலே யல்லது காணக்கூடாத பரஞ்சோதியான சோமசுந்தரக்கடவுள் உலகத்தார் ஊனக்கண்கொண்டுபார்க்க அவர்களுடனேகூடி முன்னே தமதருளிலே உலகங்களையெல்லாம் சிருஷ்டித்தும் ரட்சித்தும் அழித்தும் இப்படிப்பெரிய விளையாடல்செய்கின்ற சந்திர சேகரக்கடவுள் இப்போதும் ஒரு கூலியாளாகித் திருவிளையாடல் செய்யும்போது அங்கே ஆளோட்டுகிற மாறுகோல் கைக்கொண்ட வீரர்கள் கூட வேறின்றுவேலைவாங்குகிறவர்களாகையாலே அடைகரைபார்க்கவந்து அதிக வேகமான நெடிய அலைகளாதிங்கி வெள்ளம்போகும்படி அவரவர்கள் தங்கள் தங்களுக்களந்துவிட்ட பங்குகளெல்லாம் மலைபோலக்கரைகளிட்டு வருவதை ஒவ்வொரு பங்குஞ் சரிபார்த்து கடவுளாகிய கூலிவேலையாளையுங் கண்டு எதடா தம்பியென்றுகரைமேல் வந்தவர்கள் ஆயிரம்பிறைகண்டுதாழுதவந்தியென்னும் கிழவிபங்கு மாத்திரம் அடைபடாமையால் எல்லார்பங்கும் அடைபட்டிருக்க நீயேன் இன்னும் அடையாதிருக்கிறுயென்று கேட்டார்கள்.

அதற்குக் கடவுள் வேறுருபேச்சும்பேசாமல் மன்மதன்போலெதிரேநிற்க அந்தத்தண்டவீரர்கள் இந்த அடைபடாதபங்குயாருடையதென்று விசாரித்து வந்திக்குக்கூலியாளாய் வந்தவன்யார் நீதானேயென்று கோபங்கொண்டு அடிக்கிறதற்குப் பிரம்புகொண்டோங்கப்பயந்து மயங்கிநிற்க அப்போது கடவுள்தம்மை உணர்ந்த ஞானிகளுக்குப் பெருமைதோன்றத்தாம் அந்தவேலை வாங்குகிறவீரரை அசட்டைபண்ணி இறுமாப்புடனே நிற்கும்போது வெள்ளம் அதிகரித்துவந்த வந்தியின் பங்குக்கரையுடனே அடுத்த கரையையும் கல்லிக்கரைத்துக்கொண்டுபோக கண்டவர்களெல்லாரிலும்சிலர் இவன் சித்தனேவென்பார்கள் சிலர் அன்றுபேய்பிடித்த பித்தனேவென்பார்கள் அன்று வந்திபேபமாற்றிப் பிட்டுத்தின்னவந்த எத்தனேவென்பார்கள் சிலர் அல்லது இந்திரஜாலவித்தைகாட்டுஞ் சித்தன்றானேவென்பார்கள் சிலர் ஐயோ இவனே இன்னனென்று தெளியக்கூடவில்லையே என்பார்கள் சிலர் பாடல்விஞ்சையனே வென்பார்கள் சிலர் பண்ணுடனே பாடலுக்குநதக்கபடி ஆடும விஞ்சையனேவென்பார்கள் சிலர் அன்றுமகதைஸ்வரியமான செல்வச்செருக்கிலே கிடந்து முழுகிப் பின்புவறுமையாலிளைத்தவனே வென்பார்கள் அப்படியானால் கீர்த்தியுண்டாகவாழ்ந்த செல்வர்களில்யாருடை

யமகனே இவனென்பார்கள் ஆனலும் மன்மதனுங் கண்டு மோகிக்கத்தக்க இவ்வளவு கட்டழகுடையவன் இவனென்பார்கள் சிலர் அபபடி எங்குமில்லாத அழகுள்ள இவன் கூலியாளாக வந்தது என்னகாரணமென்பார்கள் அன்று தாய் தந்தையில்லாமல் தனியாகப் போனவனே வென்பார்கள் இவன் ஒருநாளும் வேலைசெய்தறியாதவனே என்று இவன் மேனியே சொல்லுகிறதென்பார்கள் அப்படியானலென்ன வந்தியிடத்திலே கூலியும் வாங்கிக்கொண்டு கணக்கிலும் தன்பேர் பதியவைக்கச்சொல்லி வேலையுஞ்செய்யாமல் ஒருவர்போய் நல்லவார்த்தைசொன்னலும் கேளாதவனுப் கல்லிலடித்த முளைபோல எதுவுங் காதிலே நுழைபாமல் அசட்டைபண்ணித் திரிகிறன் ஆகையால் இந்தச்செய்தியை நாம்போய் அரசனுக்குத் தெரிவிப்போமென்று பாண்டியன் சபையிலேபோய்க்கண்டு வணங்கி ஐயா பாண்டிப்பெருமானே இந்த வெள்ளத்துக்குள்ளான பட்டணத்து ஜனங்களெல்லாம் அளந்துவிட்ட பங்குகளை அவரவர்கள் ஒப்புக்கொண்டு மலைபோலே கரைகட்ட மண்சுமந்து வந்தடைத்தார்கள் இந்தவூரிலே பிட்டுவிற்கிற ஒருகூனற்கிழவி பங்குமாத்திரம் அடைபடாம லிருக்கின்றது அவளுக்குக்கூலியாளால் மன்மதனேவென்றமிகுந்த அழகனுயொருவன் வந்து பேர்பதியவைத்து பின்பு எவ்வளவும் வேலைசெய்யாமல் அரசர்பெற்ற செல்வக்குமாரன்போல் களிப்புக்கொண்டு பாடுகிறன் ஆடுகிறன் காலத்தை வீணேகழித்து வேலைசெய்யவேண்டுமேயென்று மனதிலெவ்வளவு மெண்ணுமல்யாரையும் அசட்டைபண்ணுகிறன் நாங்கள் அவனழகைப்பார்த்து அடிக்கப்பயந்து மகாராஜனே உமக்குத்தெரிவிக்கவந்தோமென்ன உடனே அதிககோபங்கொண்டு மந்திரிகளுடனே பாண்டியன் விரைந்தெழுந்து நாம்போய் அடைபட்டபங்குகளை யெல்லாம்பார்ப்போமென்று வைகையாற்றங்கரைக்கு வந்து கட்டின கரைகளையெல்லாம் மனங்களிகூரப்பார்த்துக்கொண்டு வருகின்றவன் வந்திபங்கையடைப்பாரில்லாமையாலே அந்தப்பங்கையும் அதற்கடுத்த பங்குக்கரையையும் அலைகள் குத்தி யிடித்துக்கொண்டு போகின்ற வெள்ளப்பெருக்கையுங் கண்டு கோபங்கொண்டு இந்தப்பங்கடைக்கிற கூலியாள் எங்கே போனனென்றுகேட்க அப்போது பாண்டியராஜன் கோபிக்கிறதைக்கண்டு அடிக்குங்கோலக் கையிலேகொண்டு நிற்கிறசேவகர்கள் பயந்து மீளாத கோபங்கொண்டு உள்ளம்புறம்பு மெரித்துநின்ற கள்வனை கூலியாள் கையைப்பிடித் திழுத்துக்கொண்டுபோய் இவன்முன் வந்தியினுடைய கூலியாளென்று காட்டிவிட பாண்டியன்கண்டு கோபித்துத் தன்கையிலே பொற்பிரம்புகொண்டு அண்டங்களையும் அளவில்லாத உயிர்களையும் தனக்குச் சரீரமாகக்கொண்ட கடவுள்முதுகிலே ஓங்கியடித்தான்.

அப்படி அடித்தவுடனே நிறைந்தசோதியான கடவுள் தாம் எடுத்துக்கொண்டுவந்த கூடையோடு மண்ணை ஆற்றின் உடைப்பிலே கொட்டிவிட்டு மறைந்தருளினர். அப்படி எல்லாவுயிர்களுக்கு ஞானவடிவான கடவுள்முதுகிலே அடித்தழும்பு பாண்டியன் முதுகிலும் அவன்பத்தினிகளுடம்பிலும் மந்திரிகளுடம்பிலும் ராஜகுமாரர்கள் மேலும் அங்குக்கூடிநிற்கிற வீரர்கள் மேலும் குதிரைகள்மேலும் யானைகளின்மேலும் பட்டதாக பின்னும் அந்தம

துரோசன்மேலேபட்ட அடித்தழும்பு ஒன்பதுகிரகங்கள்மேலும் பலநக்ஷத்திரங்களின்மேலும் ஐந்துபூதங்களின்மேலும் மேகங்கள்மேலும் வேதங்கள்மேலும் ஆறுசமய தேவர்கள்மேலும்மற்றைத்தேவர்கள்மேலும் இருஷிகள்மேலும் அடியார்களானமுனிவர்கள்மேலும்பட்டன, வானவரும்மனிதரும் நாகரும் பட்சிகளும் விலங்குகளும் பாம்புகறையான் எறும்புமுதலான சராசரங்கள்மேலும் மலைமாத்திரம் கொடி-புல்-முதலாகிய அசுரங்கள்மேலும் பட்டன தாய்வயிற்றிலுள்ளபிள்ளையும் அப்போதடிப்பட்டதழும்புடனே பின்புபிறக்கலாயின சராசரங்களெல்லாம் தாமேயான கடவுள் மேலேபட்ட அடித்தழும்பு உயிரில்லாத சித்திரங்கள்மேலும்பட்டு மற்ற எங்கும்படுதலால் திடுக்கென்று மாயோன் பாற்கடலிலேவிழித்தான் தாமரையாசனத்திலிருக்கிற பிரமதேவன் இதுஎன்னவென் றதிசயித்தான் இந்திரன் பயந்தான் மற்றதேவர்களெல்லாம் உடல்நடுங்கினர்கள் விஞ்சையர்-இயக்கர்-சித்தர்-சாரணர்களெல்லாம் உடம்பிலே அடித்தழும்புகொண்டார்கள் அப்படிப்பட்டதழும்பை ஒருவர்க்கொருவர் காட்டிப்பட்டவிதம்தெரியாமல் மயங்கினர்கள் அக்காலத்தில் ஒப்பில்லாதவராகிய சோமசுந்தரக்கடவுள் எல்லாவுயிர்களும் தானேயென்பதும் அன்பினுக்கெளியோனென்பதும் தெரிவிக்கவேண்டி அடிபட்டு அங்கே ஒரு கூடைமண்ணைக்கொட்டி வெள்ளம்வற்றச்செய்து கரையை உயர்த்திமிகுத்து உடனே வேலையைவிட்டு மறைந்துபோனதைக் கண்டு ஆளோட்டும் வீரர்போய்க் கிழவியைத்தொடர்ந்து வாதிக்க அவள் இன்னும் அரசனுலே துன்பமுண்டோ முன்னேபோன ஆள் என்னசெய்தான் இனியென்னுலே செய்துமுடியுமோவென்று தளர்ந்து எலும்புபோலே வெளுத்த தலையையுடைய கிழவி கூடற்கடவுளைப்பார்த்துநின்று அழுதாள் அப்படி அழும்போது அன்பேதனைக்கூட்டி உண்ணச்செய்த பிட்டை அமுதுசெய்தருளினவர் தமது பெருங்கருணையினுலே தாம் நந்திமுதலிய கணநிபர்களுடனே ஆகாசத்திலேசூரியன்போலேவிளங்குகின்ற திவ்வியவிமானத்தைப்பூமியிலே இழங்கச்செய்து தாயேவருவாயாக வென்று அவள் விமானத்தின்மேலேற்றிக்கொண்டு விரைவாகத் தேவர்கள் பூமழைபொழிய பண்ணேது கூடினபாட்டும் வேதமும் ஐந்து துந்துபியும் ஆகாசத்திலேமுழங்கச் சிவனருளைப் பெற்றவர்கள் வாழ்கின்ற சிவலோகம்போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு வெள்ளியம்பலவாணர் ஒருகூடை மண்ணைக்கொட்டிவிட்டு மறைந்ததும் அடக்குங்கரை நீண்டமலைபோலுயர்ந்ததும்தங்கள்மேலே பிரம்படிப்பட்டதும்பார்த்தது அடிஎன்மேலும்பட்டது என்மேலும்பட்டது இதுஅது என்று மந்திரிகள் நின்றுசொல்லுகிறதும் மற்றையெல்லாரும் அப்படியேசொல்லிக்கொள்வதும் பாண்டியன்கண்டு மனத்திலே ஆசங்கைகொண்டு நிற்க மண்ணை உடைப்பிலேகொட்டிவிட்டு மறைந்தருளின கடவுள் ஆகாசத்திலே நின்று பாண்டியனையும் அவன் சேனைகளையும்பார்த்து அசரீரியாக ஓய் பாண்டியாராஜனே நீ சம்பாதித்த திரவியங்களெல்லாம் தருமநீதிப்படிவந்ததாகையாலே அந்தப்பொருள்களெல்லாம் பரிசுத்தமாகவே எனக்கும் என்னடியார்களுக்குமே வாதவூரன் உதவும்படிசெய்தான் நீ அவனைத் தெரிந்துகொள்ளாமல்துன்பப்படுத்தினதினுலே நரிகளைக்குதிரைகளாக்கிக் கொண்டுவந்து கொ

டுத்தோம் அவைகளெல்லாம் இராத்திரியிலேபழையபடி நரிகளேயாய்ப்போ யின அதுகண்டுநீ பின்னும்வாதவூரனேநோக்கிவருத்தப்படுத்தினாய் நாம்அது பொறுமல் வைகையாற்றைப் பெருகிவரச்செய்தோம் செய்தும் வந்திக்குக் கூலியாளாய் அவள்கொடுத்த பிட்டை வாங்கித்தின்றுவந்து வேலையில் உன் னுலே பிரம்படியும்பட்டோம் உடனே வந்திபங்கு அடைபடவேண்டியநாமே மண்ணைக்கொட்டிக் கரையைச்சரிப்படுத்தி அங்கே அவளுக்குவந்த துன்பத் தையுந்தீர்த்து அவள் நமது சிவலோகஞ்சேரவும் செய்தோம் நாம் இவ்வள வெல்லாம் இந்த வாதவூரன்பொருட்டாகவேசெய்தோம் நீஇந்தவைதிகசிரே ஷ்டனுடைய பெருமைகளொன்றுந்தெரிந்துகொள்ளவில்லேஇந்தவாதவூரனை எம்மிடத்திலே அன்புகொண்டு உனக்கு இம்மைப்பயனும் மறுமைப்பயனுந் தேடிக்கொடுத்த உத்தமன் சந்தனபுஷ்பங்களாகிய புறப்பற்றுத் தீர்ந்தவன் ஆகையாலே இவன்மனநிறுத்தவல்ல யோகியென்றுகொண்டு அவனிச்சைப் படியே போகவிட்டு நீவேதவழியேநின்று நீதிசெலுத்துகின்ற அரசருக்குநி யமித்த ஆயுள்குறையாமல்நீங்காதசெல்வக்கடலிலேமுழுகி வாழக்கடவையெ ன்றுசொன்னவார்த்தையைப் பாண்டியன் இரண்டுகாதுகளும் நிரம்பக்கேட் டுப்பயந்து சந்தோஷமிக்க அதிசயக்கடலிலே முழுகி மறப்பில்லாத அன்பு கொண்ட வாதவூரர் எங்கேயிருக்கிறானென்று வந்துதேடி விஷம்பொருந்திய சர்ப்பத்தைக் கோவணமாகத்தரித்த கூடற்கடவுள் திருக்கோயிலுக்குவந்து தமதிச்சைப்படி இருக்கிற திருவாதவூரரைக்கண்டு விழுந்துவணங்கி ஐயா, இந்தக்கடல்சூழ்ந்த உலகத்தைபாண்டு கொதிக்குநாகத்திலே முழுகவல்லவ னென என்புத்திக்கேற்றபடியேசெய்தேன் நீரோநான்செய்த அநேகம்தவப்பல னுக எழுந்தருளிவந்து எனக்கு இகபரங்களுக்குக்காரணமாகி என்னுடைய துன்பப் பிறவியான நோய்க்கு, அரியமருந்தானீர் நான் உம்மைக்கோபித்து நினையாமல்செய்த இந்தக்குற்றங்களையெல்லாம மன்னித்தருளி நீர் முன்பு பொலவே உம்முடையதான பாண்டிநாடெல்லாம் ஆளுதல்கொண்டு துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யத்தக்கதென்னவேண்டிக்கொள்ள அதற்கு மண்ணைசீங்கின வாதவூரடிகள் உள்ளேநகைகொண்டு பாண்டியனைப் பார் த்து ஐயாபாண்டியமகாராஜனே அலைகள்வீசுகின்ற ஆற்றுநீர் ஊற்றுநீர்மேக நீர்கொண்ட சமுத்திரஞ்சூழ்ந்த நாட்டுக்கெல்லாம் இந்திரன்போல் அரசாட் சிசெய்யக்கடவீர் இனி உங்கள் தெய்வம் அருளிச்செய்தபடியே விரும்பிச் செய்யக்கடவீர் பரிசுத்தமான உங்கள்குலதெய்வம் அவராகையாலே அவரே உங்களுடைய குலோத்தாரகராய் நடத்திவரவல்லார்நான் உம்மைமயடித்திரு ந்தபடியினுலே வைதிகதர்மமும்லௌகீகதர்மமும் நன்றுய்த்தெளியலாயிற்று இப்படித்தெளிந்துகொண்டபடியினுலே மெய்ம்மையாஞ் சித்தசுத்தி விளைந் தது அதுவிளைந்தபடியினுலே பொய்க்கடவுளான பரமசிவனுடைய பத்தி தோன்றிற்று அப்படிவந்தபத்தியினுலே மாயையின் விருத்தியானபந்தமாம் வஞ்சவாழ்க்கை விளைவிறுட்பட்ட துன்பம் வெந்தது கருணையாகிய மெய்யு ணர்வு இன்பந்தன்னைத்தந்தது பாதஞ்சூட்டித் தன்மயமாக்கிற்று.

சச்சிதானந்தமாமத்தனிப்பரசிவனேதன்ன
திச்சையாலகிலமெல்லாம்படைத்தளித்தீறுசெய்யும்
விச்சைவானவரைத்தந்தமேலவன்பிறவித்துன்பத்
தச்சமூற்றடைந்தோர்க்காணவின்பவீடளிக்குமன்னோன்.

மந்தரங்கயிலமேருப்பருப்பதம்வாரணசி
யிந்தநல்லிடங்களோடாறுமிகபரபோகம்பார்க்குந்
தந்தருள்செய்தெம்போல்வார்தம்மனம்புறம்போகாமற்
சிந்தனைதிருத்திஞானத்திருவுருவாகிமன்னும்.

ஒப்பவர்மிக்கோர்வேறற்றொருவனையெங்குந்தங்கு
மப்பரஞ்சுடரேயிந்தவாலவாயுறையுஞ்சோதி
கைப்படிகனிபோன்மேனட்கண்ணுவனுதியோர்க்கு
மெய்ப்பொருள்விளங்கித்தோன்றுவேதத்தைவிருத்திசெப்தான்.

என்றிப்படி வேதத்துக்குப்பொருள் அருளிச்செப்தசோமசுந்தரக்கட வுள் தமதருளினுலே ஞானமயமான பொன்னம்பலத்தையுடைய தில்லைமூ தூருக்குப் போகும்படி எனக்கு அனுக்கிரகஞ்செய்தருளினர் ஆகையாலே நீரும் நான்தில்லை மூதூருக்குப்போகும்படியாகவே இசையவேண்டுமென்று திருவாலவாய்க் கடவுளை வணங்கிப் பலவிதமாகத் துதித்து விடைபெற்றுக் கொண்டு தமதுபிறவிக்கட்டை அறுத்த நாதனுடைய பாதங்களிலே கட்டு ண்டுபோக அவர்பின்னே தொடர்ந்து பாண்டியன்போகப்போக வாதவூரடி கள் நில்லுநில்லுமென்று சொல்லிக்கொண்டுபோகுமளவில் பாண்டியன் கூப் பிடுதூரம் கூடப்போய் அவர்சமீபமாகவணங்கி விடைகொண்டு திரும்பிஞ ன் இப்படி பாண்டியனைவிட்டுவிட்டு வாதவூரடிகள்போனபின்பு பட்டணத் துக்குள்ளேவந்து பாண்டியன் அறப்பெருஞ்செல்வி பாகத்தண்ணலாகிய சோமசுந்தரக்கடவுளை திருக்கோயிலிலே வந்துதரிசித்து தாண்பிரம்புகொ ண்டோங்க அதற்குமுதுகுகாட்டி அடியுண்ட கிருபைக்கடலானவர்சந்தோ ஷிக்க வணங்கி மனத்திலே நிறைந்தமகிழ்வு அங்கே நிலைகொள்ளாமல் வாய் வழியே பெருகிவர எதிரேநின்று.

அடையாளம்படவொருவனடித்தகொடுஞ்சிலத்தழும்புந்
தொடையாகவிவாருதாண்டன்தொடுத்தெறிந்தகல்லும்போற்
கடையாளேன்விவகுண்டடித்தகைப்பிரம்புமுலகமெல்லா
முடையானேபொறுத்தீதாவுன்னருமைத்திருமேனி.

கடியேறுமலர்மகண்மான்முதலாயகடவுளரும்
படியேழுமளவிறந்தபல்லுயிறுநீயேபோ
முடியேறமண்சுமந்தாய்முதுகுதனிலடிபட்ட
தடியேனும்பட்டேனின்றிருமேனியானேனே.

கைக்குமருந்தின்சுவைபின்காட்டுமாறெனவினைக்கும்
பொய்க்குமருங்கலனுகிமண்ணுண்டுபுலைநரகந்
துய்க்குமருந்துயர்களவான்மாறுய்ந்நின்றுணைபடிக்கே
யுய்க்குமருந்தவரிவரென்றறியாமையொறுத்தீதனே.

பாதியுமையுருவானபரமேட்டியெனக்கிம்மை
ஊதியமும்பரகதியுமுறுதியெனவிளைவிக்கும்
நீதியினுன்மந்திரியாய்நின்னருளாயவதரித்த
வேதியரையறியாதேதவெறுத்துநாமுறுத்தேனே.

மாயாவிருத்தியினுன்மாழாந்துமாதவரை
யாயாதொறுத்தேனருநரகத்தாழ்ந்துநான்
வீயாமவின்றனையார்மெய்ம்மையெலாந்தேற்றியவென்
ரூயாவுய்த்தண்ணளிக்கென்றமியேன்செய்கைம்மாறே.

நின்னையுணர்ந்தவர்வே தநெறிவேள்விசெய்தூட்டு
மின்னமுதிற்கழிசுவைத்தேதாவிவளிடும்பிட்டெவ்வுயிர்க்கு
மன்னவனேசெந்துவர்வாய்மலர்ந்தமுதுசெய்தனையா
லன்னையிலாவுனக்கிவளோரன்னையாய்வந்தாளோ.

அன்றுசிறுத்தொண்டரிடம்பிள்ளைக்கரியமுது
மென்றுசுவைதெரிந்தவேடனிட்டவூனும்போ
னன்றுநறைநாட்டிமிடுபிட்டுநயந்தருந்தி
யென்றுமடியார்க்கெளிவந்தாயெந்தாயே.

நரியாவும்பரியாக்கிநடத்தியுமம்பரமன்றித்
தரியாயான்றருதுகிலத்திருமுடிமேற்றரித்துமறைக்
கரியாய்நீயென்பாசமருக்கவருந்திருமேனி
தெரியாதேதபரியாசைதிளைத்திருமாந்திருந்தேனே.

விண்சுமக்கும்புள்ளாய்விலங்காய்ச்சுழன்றுமனம்
புண்சுமக்குஞ்சூழ்ச்சிவலியுடையபுத்தேளிர்
மண்சுமக்குமள்ளராய்வந்திலரேவந்தக்காற்
பண்சுமக்குஞ்சொல்லிபங்கன்பாதமுடிகாண்பாரே.

என்று பலவிதமாகத்துதித்து இக்கடவுள் தம்மையடுத்தவர்க் கன்பர் இவரைத்தெளிந்தால்மிகவுநன்று இகபரபோகவீடுகள் எளிதாய்ப்பெறலாம் என்றுபாண்டியன் அன்றைத்தினந்தொடங்கி திருப்பணி பூசைமுதலான வெல்லாம் அதிகமாகப்பெருகச்செய்து அழகுபொருந்திய வெள்ளியம்பல வாணர் திருவடிக்கன்பு உலகத்துயிர்களுக் கன்புங்கொண்டு நடந்துவாழுங் காலத்தில் முன்னே திருப்பெருந்துறைக் கடவுளுக்கும் அவரடியார்களுக் கும் தானதரும நீதிப்படியே சம்பாதித்து வாதவூரடிகளாலேகொடுத்தபொ ருள்கள்போய் அநேகமாய் தழைத்துவரும்பயனே போலவும் பௌர்ணமி யில் சந்திரனைக்கண்ட கடல்போலவும் நாள்தோறும் பலவிதமான செல்வங் களும்பெருக மகிழ்கின்றபாண்டியன் சகநாதனென்றொரு புத்திரனைப்பெ ற்று அளவில்லாத இன்பத்திலேமுழுகிப் பின்பு அந்தப்பிள்ளைக்கு முடிசூ ட்டி அரசளைகச்செய்து வாதவூரடிகளுடைய சார்பால் மெய்யான வழிதோ ன்றி இருவினையொப்புமையாலே பரமசிவனுடைய கிருபா திருஷ்டியால் மும்மலக்கட்டும் விட்டுச் சிவானந்தக்கடலிலேமுழுகி முக்கண்மூர்த்தியினு டைய சிவந்தமலர்போலும் பாதநிழலை அடைந்தான் அநிமருத்தன பாண் டியராஜன்.

* பின்பு வலியசவுரியத்தையுடைய அந்தப்பாண்டியராஜன் இந்தவித மாகச் சொன்னமாத்திரத்தில் திருவாதவூர் தென்றிசையை ரட்சிக்கின்ற நீதியையுடைய ஆவ்வரசனைப்பார்த்துப் பின்னேபிரகாசிக்கின்ற சடையையுடையகடவுள் நிலைபெற்றிருக்கின்ற திருப்பெருந்துறைக்குப்போகும்படி இன்றுளன்னையனுப்புவதே எனக்கு இந்தவுலகத்தை யாளும்படிக்குக் கொடுப்பதென்றார். தென்றிசைமன்னனாகிய பாண்டியனும் அப்படி சொல்லக்கேட்டு மனத்திலே மிகவும்வருந்தி முன்னேனாகிய சிவனுடைய அடியாருக்கு ராஜசம்பத்திலே ஆசையுண்டோவென்றுசொல்லி மாணிக்கவாசகருடைய மிருதுவாகிய பாதத்திலேவணங்கி ஐயரே மனதுக்குவேண்டியபடி செய்யக்கடவீரென்றுசெலவுகொடுத்துத் தன்னுடையகீர்த்திமிகுந்த மதுராபுரியிற் புகுந்தான் பாண்டியராஜன் போனபின்பு பரமசிவனிடத்து அன்புமிகுந்த மாணிக்கவாசகர் கடவுளுடைய பேரின்பவாழ்வு விரும்பி அவ்வரசனுக்காக கொண்டிருந்த வேடத்தைக் குறைவென்றுநீக்கி மேலாகியதவவேடங்கொண்டு அத்தனைப் மதுரையிலிருக்குஞ் சொக்கலிங்கப்பெருமானை வணங்கி மேகங்கள் தவழுகின்ற பிரகாசமிகுந்தசோலைகள்சூழ்ந்த அந்தமதுரைமாநகரைவிட்டுக் கடவுள் தம்மையாண்ட திருமேனியைக்கண்டு வணங்க வேண்டுமென்று திருப்பெருந்துறைக்குப்போக நினைத்துப் பிடித்தங்கொண்டவராய் அஞ்ஞானநீங்கத் திருவடியைவைத்த கடவுளுடைய திருப்பெருந்துறையைப்பார்த்துப் பிரயாணஞ்செய்யும் சமயத்தில் மழைவேகமும் வாயுவேகமுங் கடைபெற்றிருக்கின்ற இளங்கன்றை நாடிபோடுங்கபிலைப்பசுவும் நிறைந்துநின்று மடையையுடைக்கும் நீரும்போல் கண்களாலும்நுழையப்படாத கார்கலும் ஊர்களும் சீக்கிரத்திலேநடந்துபோய் அளவற்றமுனிவர்கள்வசிக்கின்ற அழகுபொருந்தியதிருப்பெருந்துறைக்குப்போய் புண்ணியத்தையுடைய முனிவர்கள்சூழ முன்போலிருந்த தேவர்களுக்கதிபனாகிய பரமசிவனுடைய திருவடியின்மேல்வீழ்ந்து வணங்கி முன்னிலே சத்தபுரியில் விசேஷமாகிய ஸ்ரீகாஞ்சிமாநகரத்தில் கம்பையாற்றில்காமாட்சியம்மையார் பூசைசெய்யும்போது அந்தப்பூசையின் உறுதியைச்சோதிக்க அந்நதியிலே சர்வதீர்த்தங்களையும் வரச்செய்து அது ஆகாசமளாவி வருகிறபோது சிவபூசைக்கு விரோதமாய்வருகிறதென்று பயந்து தழுவிக்கொள்ளுதலால் ஒருவராலுந்தொடுதற்கரியமார்பிலே அந்தக்காமாட்சி யம்மையாருடைய தனபாரங்களாலும் இங்கேஒருபிரம்பிரளயும் அடைந்ததழும்பையுடையவனே போற்றி வேண்டியவடிவங் கொள்பவனே வெவ்வியகுதிரையின்மேலேறிக்கொண்டு எங்களையடிமைகொண்டு அருள்செய்யவந்த ஐயனேபோற்றிபோற்றி என்று இந்தவிதமாகத் துதித்த மாணிக்கவாசகரது சிரசின்மேலே களங்கரகிதராகியகடவுளானவர் சிவந்தகையைவைத்து ஆசீர்வதித்து எழுந்திருவென்றுசொல்ல எழுந்தன்பு விபூதியுந்தரித்து அறிவுநிறைந்த கிருபாநோக்கஞ் செய்து அன்பையுடைய அடியார்கள் கூட்டத்தில் விளங்கியிருந்து முடிவு முதலுமில்லாத அடியவர்களைக்குறித்து வந்தகாரியமெல்லாம் முடித்தனம் மனமகிழ்ச்சியுண்டாக நம்முடைய ஒளியையுடைய திருவுருவைத் தரிசிக்கவேண்டுமென்று நல்ல கைலாசகிரியிலிருக்கின்றவர்கள் நினைவுகொண்டார்கள்

---

* இதுமுதல் திருவாதவூர்புராணப்படி உரையெழுதப்பட்டது.

ஆகையால் சீக்கிரத்தில் அவ்விடத்தில் நாம்போகவேண்டும் நீங்களிங்கே இ
ன்பமுடனே வாழ்ந்துக்கொண்டிருங்கள் நாம் செல்குவோமென்று சொல்ல
அப்போது அடியார்கள் வந்து சுற்றிக்கொண்டு அநேகத்துதிகள் சொல்லி
வணங்கி ஐயனே இனியாங்கள் தரிக்கிறது அருமையென்று பூமியில்விழுந்து
ஆயாசங்கொண்டு எங்களைவிட்டு விடுகின்றீரோவென்று அழுதார்கள்.

அப்படி அன்புகொண்டு அழுகின்ற அடியார்மேற் பரமசிவனும் அன்
புவைத்து வருத்தப்படுவதை நீங்குங்கள் இந்தவாசனைபொருந்திய குருந்
தநிழலிலேபொருந்திய தெய்வபீடமொன்று பிரகாசத்துடனேசெய்து அத
ன்மேல்திருத்தமாகிய வேதங்களுந்தேடுகின்ற நம்முடைய திருவடிகளைச்செ
ய்து தாங்குதற்கரிய துன்பநீங்கி நாமென்கிற தன்மையையறிந்து நீங்குதற்
கரிய பேரன்பிலே நாள்தோறுமகிழ்ந்து வணங்கி இவ்விடத்திலே கிருபை
மிகுந்த மனத்தையுடைய அடியார்களெல்லாம் விரும்பியிருங்கோள் அப்ப
டியிருக்கு நாளில் ஒருநாள் இந்தத்தீங்கில்லாத பொய்கையினிடத்திலே செ
ழுமைபொருந்திய அக்கினிவந்து தோன்றும் அவ்வக்கினி எழுந்துவிளைந்த
மாத்திரத்திலே நீங்கள் எல்லாருந்தடாகத்தினிடத்திலே விழுந்து பின்புறம்
மிடத்திலேவந்து உங்களுடையகவலையை விடுங்கோளென்று வணங்கத்தக்க
தவத்தைச்செய்யும் அன்பர்கள்சூழ்ந்துகொண்டு பின்னேவர செழுமையுள்
ளபிரகாசத்தைவிரும்பி எழுந்தருளிநீங்குதற்கரிய அன்பர்களெவரும் நில்லு
ங்கோளென்று சொல்லிநடந்தார் இங்கே அடியார்கள்நின்ற பின்னும் பெரு
மானுடைய பேரருளைப் பெற்றவராகிய திருவாதவூரர் தமது சுற்றமெல்லாம்
வாழும்படி குருமூர்த்தமாயெழுந்தருளிகடவுளுக்குப்பின்னே போனபோ
து உமாதேவியை யிடப்பாகத்திலே யுடையவராகிய அக்கடவுள் அன்பு
வைத்து இவர்வருதலைப்பார்த்து அங்கே ஒருகொன்றைவிருக்ஷத்தின்நிழலி
லே இருந்தபோது மெல்லிய திருவடிகளிலே வணங்கிக் கண்ணீர்விழ வழத்
தொழுது நிற்கின்ற அன்பராகியமாணிக்கவாசகரைப்பத்தியிலேபரமசிவன்
பக்கத்திலே வைத்தருளி முன்னேநாமடைந்த திவ்வியக்ஷேத்திரமாகிய சிற
ப்புப்பொருந்திய இந்தக்குருந்த நிழலிலே எந்தலோகத்திலும் எங்குமிருந்
தே மாயினும் இங்கே இருக்கின்றவர்களுடைய தீவினையை நீக்கி ஆளும்
பொருட்டு இந்தஸ்தலத்திலே வசிப்போம் மிகுந்த ஒளியையுடைய சூழிமு
னைநாடி யிடத்தில் சத்திக்கின்ற அடையாளமான மங்களகரத்தையுடைய ச
ங்கவாத்தியமல்லாமல் மற்றவாத்தியங்களெல்லாம்இந்தஸ்தலத்திலேநமக்கா
காவாம் அதெனினில் சத்தநீங்கிய இடமாகையினாலும் நமதுபாகத்திலிருக்
கும் பார்வதிகாண நடனஞ்செய்யுமிடமாகையாலும் ஒழுங்காக இந்தப்பிர
காரம்அறிந்து நல்லகுருந்தநிழலிலே செழுமையுள்ளதேவதனர்கூட்டத்து
டனே நீயும் நம்முடையபாதத்திற் சேவைசெய்து எழுகின்ற அக்கினியைம
ுகிற்கண்டால் யாவரும் அதிற்போய்விழுந்தபோது நீயுடனேவிழாமல் இந்
தவிடத்தினின்று நிங்கித்திருவுத்தரகோச மங்கையென்னும் நம்முடையஸ்
தலத்துக்குப்போய் அட்டமாசித்திகளோயும் அடைந்துதெய்வீகமாகியலிங்க
வடிவமாயிருக்கின்ற நம்முடைய ஸ்தலங்களிலே இந்த இந்தஸ்தலங்களை வ

ணங்கிணல் அங்கங்கும் இந்தப்பிரகாசமுள்ளவடிவே தெரிசிப்பாய் அப்படியேகாட்டுவோமென்று சொல்லிப்பின்னும் உயர்ந்ததிருக்கழுக்குன்றமென்னும் அந்தநெடிய ஸ்தலத்தையும்வணங்கி அவ்விடத்திலிருந்து இங்கேவந்து ஸ்ரீசிதம்பரத்துக்குப்போய் புத்தரைவாதில்வென்றபின்பு எம்முடைய பதவியானசாயுச்சியத்தைப் பெறுவாயென்றார்.

அவ்வாறுசொல்லிய கடவுள மாணிக்கவாசகசுவாமிகள்வணங்கி எம்பெருமானே திருப்பெருந் துறையில்லாமல் புண்டரீகமென்னும் பெயரினையுடைய ஸ்ரீசிதம்பரத்திற்பொருந்துதல் பாழுத்தியென்று அருளிச்செய்தது என்னகாரணமென்று விண்ணபஞ்செய்ய திருத்தமாகியதவத்தையுடையவனே நீகேட்பாயாகவென்றுசொல்லி புழுதன்னையெடுத்தவிடத்தி லல்லாமல்கொண்டுபோய் வைத்தவிடத்திலே குளவிவடிவங்கொள்ளும் அதுபோல உன்னைக்கண்ட இந்தஸ்தலத்திலே அன்பிலேல உண்மையறிவை உபதேசம் பண்ணினேம் மேன்மைபொருந்திய சிவானுபூதியாகியமோக்ஷம் ஸ்ரீசிதம்பரத்திலுண்டாம் அன்றியும் விசாலமாகிய தேகத்திலேமூலாதாரத்தினின்றும் எழுந்த நல்லசுழிமுனைநாடியுடனேநிறைந்த ஒளியாய் அந்த ஒளியிலேபஞ்சாட்சரமுமொன்றுப் நெடிய குழலோசையாய்ப் பிரகாசம்பொருந்திய அந்தவோசைநீங்கி அடங்கியவிடமே நாள்தோறுமநாம் ஆடுகின்ற ஸ்ரீசிதம்பரமாகும் அன்றியும் எண்ணிக்கையைத் தருகின்ற பிருதிவி, அப்பு, தேயு, வாயு-ஆகாசமென்றும் சொல்லப்பட்ட பூதங்களைந்தும் இடை-பிங்கலை-சுழிமுனை, என்னும்நாடிகள்மூன்றும் அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம் என்னும் மண்டலங்கள்மூன்றும் ஆகி நிலைபெற்ற சம்பந்தத்தாலேபிண்டமும் அண்டமாகும் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவனென்று சொல்லுகின்ற ஐந்துவடிவமாகக்கண்டவர்கள் நின்றவிதமும் இவ்விரண்டுவித்தத்திலுங் காணலாம் ஆகையினாலே இவ்வண்டத்தில் அரிதற்காரியபொருளாகி ஒன்றுங்குற்றமில்லாத மூலத்தைநாடிப் பார்த்தால் பிரகாசியாநின்ற, சிவலிங்கமேணிபாயிருக்கும் மேலாகிய அந்தநாதவெளியின்மேல் ஒளிபாய்பிருக்கின்றது சபை, அங்கே ஆகையால் உமாதேவிகாண மனம்பொருந்தத்திருநடனஞ்செய்வோம் அந்தநடனம் எதென்றால் சிருஷ்டி-திதி-சங்காரம்-திரோபவம் அனுக்கிரகமென்று சொல்லப்பட்ட பஞ்சகிருத்தியத்தைநடத்துவதாகும் பாசத்தளையையறுக்கின்ற இந்தவடிவமும் அதுவேயாகும். உலகத்திலே யிருக்கின்றவர்கள் யாவர்வந்து தரிசித்தாலும் பாழுத்தியைக் கொடுத்துகிருபையைத்தருகின்ற தெய்வஸ்தலமும் அந்த ஸ்ரீசிதம்பரமேயாகும் தாவுதற்காரிய சங்குசக்கரந் தரிப்பவராகிய மகாவிஷ்ணுவும், பிரமதேவனும்பதஞ்சலி வியாக்கிரபாதரும் திரிபுராதிகளும் தெய்வத்தன்மையுள்ள தில்லைமூவாயிரவரும், நாற்பத்தெண்ணாயிரமுனிவரும், மூப்பத்துமூக்கோடி தேவர்களும்போற்றும் எல்லையையுடையதும் அந்தத்தில்லைமாநகரமாகும் இவைகளையெல்லாந் தெளிவாகத் தெரிந்துகொள்வாயென்று வணங்கிநிற்கின்றமாணிக்கவாசகருடைய நெற்றியிலே விபூதிதரித்து நில்லென்று கடவுளானவர் நீங்குதலும் நில்லாதவராய்க் கொஞ்சதூரம்போனர் பரமசிவனானவர்பின்னும் இவருடைய தன்மையைக்கண்டுநின்று மாணிக்கவாசகர்காணும்படி எதிர

மறைந்தார் அதுகண்டுதிருவாதவூரர் அச்சங்கொண்டுஇரக்கமுற்றுவணங்கி கையைச்சிரசின்மேல் வைத்துக்கொண்டு பொருந்துதற் கரிய அடியார்களுடைய திருக்கூட்டைத்தை யடைந்தார் அரியதவத்தை நீங்காத மனத்தையுடைய அடியார்களும் மாணிக்கவாசகரும் அந்தத் திருத்தமாகியகுருந்தநிழலின்கீழே தெய்வத்தன்மையுடைய ஒருபீடஞ்செய்து அதன்மேலே வரத்தைத்தருகின்ற சிவந்த தாமரைமலர்போன்ற திருவடிகள்செய்து வணங்கி அங்கிருந்தார்.

அப்படியிருக்குநாளில்தெள்ளியமூன்றும்பிறையைத்தரித்த சடாபாரத்தையுடையகடவுளானவர் அன்பில்லாதவர்களேயாயினும் தன்னைப்பாடினவர்களிடத்தில் இரக்கஞ்செய்தருளுவாரென்றுநினைத்து எண்ணுதல்பெற்ற.

நமச்சிவாயவாஅழ்க நாதன்றாள்வாழ்க
விமைப்பொழுதுமென்னெஞ்சி னீங்காதான்றாள்வாழ்க

* * * * * *

செல்வச்சிவபுரத்தி னுள்ளார்சிவனடிக்கீழ்ப்
பல்லோருமேத்தப்பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

எனச்சிவனதனதிருமுறைமையானபழமையைச்சொல்லி
திருச்சிற்றம்பலம்.

மையலாயிந்தமண்ணிடைவாழ்வெனுமாழியுளகப்பட்டுத்
தையலாரெனுஞ்சுழித்தலைப்பட்டுநான்தலைதடுமாறுமே
பொய்யெலாம்விடத்திருவருடந்துதன்பொன்னடியிணைகாட்டி
மெய்யனுய்வெளிகாட்டிமுன்னின்றதேதாரற்புதம்விளம்பீனே.

செறியுமிப்பிறப்பினைநினையாதுசெறிகுழலார்செய்யுங்
கிறியுங்கீழ்மையுங்கெண்டையங்கண்களுமுன்னியேகிடப்பேனை
யிறைவனெம்பிரானெனல்லையில்லாததன்னிணைமலர்க்கழல்காட்டி
யறிவுதந்தெனையாண்டுகொண்டருளியவற்புதமறியேனே.

திருச்சிற்றம்பலம்.

(அற்புதம்-அதிசயம்)
என அனுபவ மாற்றுமையைச் சொல்லி
திருச்சிற்றம்பலம்.

வைப்புமாடென்றுமாணிக்கத்தொளியென்றுமனத்திடையுருகாதே
செப்புநேர்முலைமடவரலியர்தங்கடிறத்திடைநைவேனை
யொப்பிலாதனவுவமனிலிறந்தனவொண்மலர்த்திருப்பாதத்
தப்பணண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமோ.

இருடுணிந்தெழுந்திட்டதோர்வல்வினைச்சிறுகுடிலிதுவித்தைப்
பொருளைணைக்களித்தருநரகத்திடைவிழப்புகுகின்றேனைத்
தெருளுமும்மதிணெடிவரையிடிதரச்சினப்பதத்தொடுசெந்தீ
யருளுமெய்ந்நெறிபொய்ந்நெறிநீக்கியவதிசயங்கண்டாமோ.

திருச்சிற்றம்பலம்.

(அதிசயம்-மிக்கபெருமை.)
என முத்தியிலக்கணத்தைச்சொல்லி
திருச்சிற்றம்பலம்.

குழைத்தாற்பண்டைக்கொடுவினைநோய்காவாயுடைபாய்கொடுவினையே
ஞழைத்தாலுறுதியுண்டோதாஞமையாள்கணவாயெனையாள்வாய்
பிழைத்தாற்பொறுக்கவேண்டாவோபிறைசேர்சடையாய்முறையோவென்
றழைத்தாலருளாதொழிவதேயம்மானையுன்னடியேற்கே.
அழகேபுரிந்திட்டடிநாயேனரற்றுகின்றேனுடையானே
திகழாநின்றதிருமேனிகாட்டியென்னைப்பணிகொண்டாய்
புகழேபெரியபதமெனக்குப்புராணந்தந்தருளாதே
குழகாகோலமறையோனேகானேயென்னைக்குழைத்தாயே.

திருச்சிற்றம்பலம்.

(குழைத்தல்-குழையச்செய்தல்.)
என ஆத்துமநிவேதஞ்செய்து
திருச்சிற்றம்பலம்.

தேவதேவன்மெய்ச்சேவகன்றென்பெருந்துறைநாயகன்
மூவராலுமறியொணமுதலாயவானந்தமூர்த்தியான்
யாவராயினுமன்பரன்றியறியொணமலர்ச்சோதியான்
ஞாயமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிச்சூடுமே.
முத்தனைமுதற்சோதியைமுக்கணப்பனைமுதல்வித்தினைச்
சித்தனைச்சிவலோகனைத்திருநாமம்பாடித்திரிதரும்
பத்தர்காளிங்கேவம்மினீருங்கள்பாசந்தீரப்பணிமினே
சித்தமார்தருஞ்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே.

திருச்சிற்றம்பலம்.

(சென்னி-தலை.)
என சிவவிளவுகூறி
திருச்சிற்றம்பலம்.

கருடக்கொடியோன்காணமாட்டாக்கழற்சேவடியென்னும்
பொருளைத்தந்திங்கென்னையாண்டபொல்லாமணியேயோ
விருளைத்துரந்திட்டிங்கேவாவென்றங்கேகூவு
மருளைப்பெறுவாறைசப்பட்டேன்கண்டாயம்மானே.
வெஞ்சேலனையகண்ணார்தம்வெகுளிவலையிலகப்பட்டு
நைஞ்சேனையென்ஞானச்சுடரோநாதேர்துணைகாணேன்
பஞ்சேரடியாள்பாகத்தொருவாபவளத்திருவாயா
லஞ்சேலென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

திருச்சிற்றம்பலம்.

(ஆசை-பேரவா)
என ஆத்தும விலக்கணஞ்சொல்லி
திருச்சிற்றம்பலம்.

பாரொடுவிண்ணுப்பரந்தவெம்பரனேபற்றுநான்மற்றிலேன்கண்டாய்
சீரொடுபொலிவாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
யாரொடுநோகேனுனக்கெடுத்துரைக்கேனுண்டநீயருளிலையாலுல்
வார்கடலுலகில்வாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே.
பழுதிலுருல்புகழாள்பங்கபநில்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செழுமதியணிந்தாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
தொழுவனேபிறரைத்துதிப்பனேவெனக்கோர்துணையெனநினைவனேசொல்
மழவிடையானேவாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரிவாயே. [லாய்
திருச்சிற்றம்பலம்.

(வாழ்கிலேன்-இனிநிலைகொள்ளேன்)
எனமுத்தியுபாயஞ்சொல்லி
திருச்சிற்றம்பலம்.

செழுங்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கனுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
வழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே.
வழங்குகின்றுய்க்குன்னருளாமுதத்தைவாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்விக்கினேன்விஞையேனென்விதியின்மையாற்
றழங்கருந்தேனன்னதண்ணீர்பருகத்தந்துய்யக்கொள்ளா
யழுங்குகின்றேனுடையாயடியேனுன்னடைக்கலமே.
திருச்சிற்றம்பலம்.

(அடைக்கலம்-கையடை.)
எனப்பக்குவநிண்ணயஞ்சொல்லி
திருச்சிற்றம்பலம்.

பொய்யனேனகநெகப்புகுந்தழுதூறும்புதுமலர்க்கழலிணையடிபிரிந்துங்
கையனேனின்னுஞ்செத்திலேனந்தோ விழித்திருந்துள்ளக்கருத்தினையிழந்
னையனேயசேயருட்பெருங்கடலேயத்தனேயயன்மாற்கறியொண்ணைச் [தே
செய்யமேனியனேசெய்வகையறியேன்றிருப்பெருந்துறைமேவியசிவனே.
அளித்துவந்தெனக்காவவென்றருளிச்சந்தீர்த்தநின்னருட்பெருங்கடலிற்
றினைத்துந்தேக்கியும்பருகியுமுருகென்றிருப்பெருந்துறைமேவியசிவனே
வளைக்கையாளெடுமலாவனறியாவானவாமலைமாதொருபாகா
களிப்பெலாமிகக்கலங்கிடுகின்றேன்கயிலைமாமலைமேவியகடலே.
திருச்சிற்றம்பலம்.

(செத்திலேன்-இறந்திலேன்.)
எனச் சிவானந்தமளவறுக் கொணமையாய்
திருச்சிற்றம்பலம்.

சுடர்பொற்குன்றைத்தோளார்முத்தைவாளாதாழும்புகந்து
கடைப்பட்டேனையாண்டுகொண்டகருணைபினக்கருமால்பிரமன்
றடைப்பட்டின்னுஞ்சாரமாட்டாத்தன்னைத்தந்தவென்னுரமுதைப்
புடைபட்டிருப்பதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே.

காப்பாய்படைப்பாய்கரப்பாய்முழுதுங்கண்ணுர்விசும்பின்விண்ணேர்க்கெல்
மூப்பாய்முவாமுதல்வாமுன்னேயெனையாண்ட [லா
பார்ப்பானேயெம்பரமாவென்றுபாடிப்பாடிப்பணிந்துபாதப்
பூப்போதணைவதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே.

திருச்சிற்றம்பலம்.

(பொல்லாமணியைப்புணர்தல்-துவாரமிடாதமணியைக்கூடுதல்.)
என அத்துவிதவிலக்கணஞ்சொல்லி
திருச்சிற்றம்பலம்.

சோதியேசுடரேசூழொளிவிளக்கேசுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றுப்பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத்திருப்பெருந்துறையினிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேயடியேனுதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே.

திருந்துவார்பொழில்சூழ்திருப்பெருந்துறையிற்செழிமலர்க்குருந்தமேவியசீ
ரிருந்தவாறெண்ணியேசரூநினைந்திட்டென்னுடையெம்பிரானென்றென்
றருந்தவாநினைந்தேதயாதரித்தழைத்தாலலைகடலதனுள்ளேநின்று
பொருந்தவாகயிலைபுகுநெறியிதுகாண்போதராயென்றருளாயே.

திருச்சிற்றம்பலம்.

(அருளல்-கிருபைசெய்தல்.)
என மகாமாயாசுத்திசொல்லி
திருச்சிற்றம்பலம்.

மாதிவர்பாகன்மறைபயின்றவாசகன்மாமலர்மேயசோதி
கோதில்பரங்கருணையடியார்க்குலாவுநீதிகுணமாகநல்கும்
போதலர்சோலைப்பெருந்துறையெம்புண்ணியன்மண்ணிடைவந்திழிந்
தாதிபபிரமன்வெளிப்படுத்தவருளறிவாரெம்பிராணுவாரே.

அங்கணனெங்களமார்பெம்மானடியார்க்கமுதனவனிவந்த
வெங்கள்பிரானிரும்பாசந்தீரவிகபரமாயதோரின்பமெய்தச்
சங்கங்கவர்ந்துவண்சாத்திணேடுஞ்சதுரன்பெருந்துறையாளியன்று
மங்கையர்மல்குமதுரைசேர்ந்தவகையறிவாரெம்பிராணுவாரே.

(வார்த்தை-சொல்)

என அறிவித்தன்புறுத்தி

திருச்சிற்றம்பலம்.

பாருருவாயபிறப்பறவேண்டும்பத்திமையும்பெறவேண்டுஞ்
சீருருவாயசிவபெருமானேசெங்கமலமலர்போ
லாருருவாயவெண்ணரமுதேயுன்னடியவர்தாகைநடுவே
யோருருவாயநின்றிருவருள்காட்டியென்னையுமுய்யக்கொண்டருளே.

பாற்றிருநீற்றெம்பரமனேப்பரங்கருணையோடுமெதிர்ந்து
தோற்றிமெய்யடியார்கருட்டுறையளிக்குஞ்சோதியைநீதியிலேன்
போற்றியென்னமுதேயெனநினைந்தேதற்றிபுகழ்ந்தழைத்தலறியென்னுள்ளே
யாற்றுவணுகவுடையவனேயெனையாவவென்றருளாயே.

திருச்சிற்றம்பலம்.

(எண்ணம்-நினைவு.)

என ஒழியாவின்பத்துவகை தில்லையிலேகொண்டு

திருச்சிற்றம்பலம்.

வெய்யவினையிரண்டும்வெந்தகலமெய்புருகிப்
பொய்யும்பொடியாகாதென்செய்கேன்-செய்ய
திருவார்பெருந்துறையான்றேனுந்துசெந்தீ
மறவாதிருந்தேன்மனத்து.

இன்பம்பெருகியிருளகற்றியெஞ்ஞான்றுந்
தன்பந்தொடர்வறுத்துச்சோதியா-னன்பமைத்துச்
சீரார்பெருந்துறையானென்னுடையசிந்தையே
யூராகக்கொண்டானுவந்து.

திருச்சிற்றம்பலம்.

என அணைந்தோர்தன்மைகூறி

திருச்சிற்றம்பலம்.

பண்டாயநானமறையுமபாலனுகாமாலயனுங
கண்டாருமில்லைக்கடையேனைத்-தொண்டாகக்
கொண்டருளுங்கோகழியெங்கோமாற்குநெஞ்சமே
யுண்டாமோகைம்மாறுனை.

பேசும்பொருளுக்கிலகிதமாம்பேச்சிறந்த
மாசின்மணியின்மணிவார்த்தை-பேசிப்
பெருந்துறையேயென்றுபிறப்பறுத்தேனல்ல
மருந்தின்டியென்மனத்தேதவைத்து.

திருச்சிற்றம்பலம்.

(பண்டாயநான்மறையென்பது-பதிகமுதற்குறிப்பு.)
என அனுபவத்துக் கையமின்மையைச் சொல்லி

திருச்சிற்றம்பலம்.

போற்றியென்வாழ்முதலாகியபொருளே
புலர்ந்ததுபூங்கழற்கிணைதுணைமலர்கொண்
டேற்றிநின்றிருமுகத்தினமக்கருண்மலரு
மெழினகைகொண்டுநின்றிருவடிதாழுகோஞ்
சேற்றிதழ்கமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யேற்றுயர்கொடியுடையாயெனையுடையா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே.

புவனியிற்போய்ப்பிறவாமையிணைம்
போக்குகின்றோமவமேயிந்தப்பூமி
சிவனுய்யக்கொள்கின்றவாறென்றுநோக்கித்
திருப்பெருந்துறையுறைவாய்திருமாலா
மவன்விருப்பெய்தவுமலரவணைசப்
படவுநின்னலர்ந்தமெய்க்கருணையுநீயு
மவனியிற்புகுந்தினையாட்கொள்ளவல்லா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே.

திருச்சிற்றம்பலம்.

பள்ளியெழுச்சி-துயிலெழுப்பாடுதல்.
எனத் திருத்தாண்டகத் திருச்சால்வி

திருச்சிற்றம்பலம்.

இரும்புதருமனத்தேதனியீர்த்தீர்த்தெனன்புருக்கி
கரும்புதருசுவையெனக்குக்காட்டினையுன்கழலிணைக
ளொருங்குதிரையுலவுசடையுடையானேநரிகளெல்லாம்
பெருங்குதிரையாக்கியவாறன்றேயுன்போருளே.

நானேயோதவஞ்செய்தேன்சிவாயநமவெனப்பெற்றேன்
றேனையின்னமுதமுமாய்த்தித்திக்குஞ்சிவபெருமான்
றானெவந்தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தா
னானதுமுயிர்வாழ்க்கையொறுத்தன்றேறவெறுத்திடவே.

திருச்சிற்றம்பலம்.

ஏசறவு-இகழ்வறுகை.
எனச் சுட்டறிவொழித்து

திருச்சிற்றம்பலம்.

மின்னேரனையபூங்கழல்களடைந்தார்கடந்தார்வியனுலகம்
பொன்னேரனையமலர்கொண்டுபோற்றுநின்றூரமரரெல்லாங்
கன்னேரனையமனக்கடையாய்க்கழிப்புண்டவலக்கடல்வீழ்ந்த
வென்னேரனையெளினியுன்னைக்கூடும்வண்ணமியம்பாயே.

நரியைக்குதிரைப்பரியாக்கிஞாலமெல்லாநிகழ்வித்து
பெரியதென்னன்மதுரையெல்லாம்பிச்சுதேதற்றும்பெருந்துறையா
யரியபொருளேயவநாசியப்பாபாண்டிவெள்ளமே
தெரியவரியபரஞ்சோதிசெய்வதான்றுமறியேனே.

திருச்சிற்றம்பலம்.

என ஆனந்தமாலையென்னுஞ்சிவானுபவவிருப்பங்கொண்டபாடல்கள்

(எ) தில்லையிற்பாடி. திருச்சிற்றம்பலம்.

பைந்நாப்படவரவேரல்குலுமைபாகமதாயென்
மெய்ந்நாடொறும்பிரியாவினைக்கேடாவிடைப்பாகா
செந்நாவலர்பாசும்புகழ்த்திருப்பெருந்துறையுறைவா
யெந்நாட்களித்தெந்நாளிறுமாக்கேனினியானே.

வான்பாவியவுலகத்தவர்தவமேசெயவவமே
யூன்பாவியவுடலைச்சுமந்தடவிமரமானேன்
றேன்பாய்மலர்க்கொன்றைமன்னுதிருபபெருந்துறையுறையாய்
நான்பாவியனுனுனைநல்காயெனலாமே.

திருச்சிற்றம்பலம்.

(உயிருண்ணி-உயிராலுண்ணப்படுவது.)

எனதேசிவானந்தமேலிடுதலைச்சொல்லி

திருச்சிற்றம்பலம்.

கலந்துநின்னடியாரோடென்றுவாளாகளித்திருந்தேன்
புலர்ந்துபோனகாலங்கள்புகுந்துநின்றதிடர்பின்னு
நுலர்ந்துபோனனுடையானேயுலவாவின்பச்சுடர்காண்டா
னலந்துபோனேனருள்செய்யாயார்வங்கூறவடியேற்கே.

கூடிக்கூடியுன்னடியார்குனிப்பார்சிரிப்பார்களிப்பாரா
வாடிவாடிவழியற்றேன்வற்றன்மரம்போனிற்பேனு
டியுடியுடையாயொடுகலந்துள்ளுருகிப்பெருகிநெக்
காடியாடியானந்தமதுவேயாகவருள்கலந்தே.

திருச்சிற்றம்பலம்.

(பிரார்த்தனைவேண்டுதல்.)

எனச்சதாமுத்திப்பாடி

திருச்சிற்றம்பலம்.

பருவரைமங்கைதன்பங்கரைப்பாண்டியற்காரமுதா
மொருவனையொன்றுமிலாதவரைக்கழற்போதிறைஞ்சித்
தெருவாநின்றுருகிப்பரிமேற்கொண்டசேவகனு
மொருவரையன்றியுருவறியாதென்றனுள்ளமுதே.

கூற்றமென்றுங்கைவர்கோக்கஞையும்வென்றிழுந்தழகால்
வீற்றிருந்தான்பெருந்தேவியுந்தானுமோர்மீனவன்பா
லேற்றுவந்தாருயிருண்டதிறலொற்றைச்சேவகனே
தோற்றமிலாதவர்சேவடிசிக்கெனச்சேர்மின்களே.

திருச்சிற்றம்பலம்.

பாண்டியனுக்கென்று பாட்டில்வருதலாலே பாண்டிவிருத்தமென்று
இப்பதிகத்துக்குத்திருப்பெயராயிற்று
என சிவானந்தவிளவுசொல்லி

அங்ஙனந் தங்கியிருக்கப்பட்ட அடியார்களுடனேவாசஞ்செய்து சில நாள்செல்ல அதற்கு முன்னே பரமசிவன் அனுக்கிரகித்தபடியே தடாகத்திலே அக்கினியைக்கண்டு நினைக்கின்ற அழகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித்துக்காணும்படி பிரகாசம்பொருந்திய அக்கினியிலே கலந்திருக்கின்ற மிகுந்த அன்பையுடைய அடியார்களெல்லாம்போய் மூழ்கினர்கள் வீழ்ந்து மூழ்கினபோது கனகசபாபதியான கடவுள் இடபவாகனத்தின்மேலேறி உமாதேவியாருடனே முப்பத்துமுக்கோடிதேவர்களும் சூழ்ந்துகொண்டு அழகிய பஞ்சகற்பகமலரைத் தூவிதெரிசிக்க ஆகாயத்திலே எழுந்தருளிய மாத்திரத்தில் ஆழம்பொருந்திய தடாகத்திலிருக்கின்ற அக்கினியில் மூழ்கிய அடியார்கள் தங்கள்துன்பமெல்லாம் நீங்கச் சிவகணநாதர்களாய்த் திருவுருவங்கொண்டு பரமசிவனெதிராகவந்துவணங்கினர்கள். துரியத்தின்மூடிவில்விளங்கிய கடவுளும் வணங்கியெழுகின்ற அடியார்களுடைய முகத்தைப்பார்த்து கொஞ்சநேரமாகிலும் நீங்காதவராகிய நீர் இங்கேநீங்கத் தனியேநாம்போனதும் திருக்குளத்தில் அக்கினியில் மூழ்குவீரென்று சொல்லியதும் என்னகாரணமோவென்றுகேட்டால் உத்தமனென்கிற திருவாதவூரனை நிலைபெற்றஸ்ரீசிதம்பரத்திலே புத்தரைவாதில் வெல்லும்படி நாம் இந்தபூமியின்மேல் வைத்தோம் நாம் நீங்கினால் மனம்வருந்தித் துன்பமடைவானென்பது தெரிந்து உங்களையும் இந்தஸ்தலத்திலே சிலநாள் எம்முடன் வாதிருப்பீரென்று சொன்னேம் ஆணவம்-கன்மம்-மாயையென்னும் மலநீங்கினவர்களும் பூமியின்மேலே மானுடவடிவங்கொண்டு சிலநாளாயினும் இருக்குங்காலத்தில் மறுபடியும் மலவாசனைசேருமென்று அநேகமலர்கள் வசிக்கின்ற தடாகத்திலே சொல்லுதற்கரிய ஞானாக்கினியைச்சேர்வித்துபொய்பாகத்தோன்றிய மாயாதேகத்தைதவேகச்செய்து இந்தத்தேகத்தை இந்நாளிலே கொடுத்தருளினோமென்றார். இப்படியென்று அருளிச்செய்து கணநாதர்கள் எவ்விடத்திலுநெருங்க ஸ்ரீசிதம்பரத்திலே கனகசபைகள்விளங்கத் திருநடனஞ்செய்கின்ற நடராஜமூர்த்தியும் ஆகாயத்தில் மறைந்துவிட்டார் அப்போது நிறைந்த அறிவைத்தருகின்ற சிவநாமத்தையுடைய திருவாசகத் தமிழ்வேதத்தைச்சொல்வாராகிய மாணிக்கவாசகர்வேறுகப்போய்ச்செழுமையுள்ள ஒரு கொன்றைமரநிழலிலே பிரகாசத்துடனே சிவலோகஞ் சேர்ந்திருந்தார்.

அப்போது அடியார்கள் அக்கினியிலேபுகுந்த விதமும் கடவுள் இடபவாகனத்தின்மேல் வந்தவிதமும் முன்னே தமக்குவேண்டிய வடிவங்கொண்டு கடவுளினுடைய திருவடியைவணங்கினவிதமும் இனிக்கனகசபையிலே தான்போயடைவதும் ஆகிய இவையெல்லாம் ஒருகாலத்திலே இன்பமிருந்த உண்மைஞானத்தைத்தருகின்ற சிவயோகத்திலே சுபாவத்துடனே மாணிக்கவாசகர் அறிந்துகொண்டு சிவந்தகையைக்குவித்துக் கண்களிலே ஆனந்தபாஷ்பங்களைச்சொரிந்து எமது பிதாவாகிய கடவுளே வந்து பின்னெங்கே

யொளித்தாயென்று மயக்கமடைந்து பொய்கைக்கரைமீதில்வந்து கங்கை யைத்தரித்தசடைமுடியருள பரமசிவன் இடபவாகனத்திலேறிக் கண்ணெதி ரே எழுந்தருளிய ஸ்தலமோமென்று பூமியிலேவிழுந்து அழுது ஐயோவென நொந்து தாய்க்குச் சமானமானவரே என்னைநீக்கி அன்பரைத் திருப்பொய் கையிலே அக்கினியை யுண்டாக்கி அதில் மூழ்கச்செய்து அவரை யாளலா மோ பிரகாசிக்கின்ற வடிவுடையவரே உமது கிருபைபெறுவே கூடுதல் செய் யாத தீவினையையுடைய அடியேனுக்குத் துன்பத்தைக்கொடுத்து எங்கே யொளித்தீர் எனநொந்து அந்தநிலையைத்தெளிந்து திருப்பொய்கையை விட் டு நீங்கி உயர்ந்த திருக்குருந்த நீழலிலே சொல்லுதற்கரிய நான்குவேதங்க ளுந் தேடிக்காணுத திருவடிமலரைப்பற்றி வீழ்ந்து நிலைபெற்றபூமியிலே யு ள்ளவர்களுடைய தீவினைக்குக் காரணமாகிய பிறவிமாளும்படி இனிய அரு ளையுடைய திருச்சதகம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்தானரும்பிவிதிர்விதிர்த்துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம்
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றியென்னுங்
கைதானெகிழவிடேனுடையாயென்னைக்கண்டுகொள்ளே.

பாடவேண்டுநான்போற்றிநின்னையேபாடிநைந்துநைந்துருகிநெக்குநெக்
காடவேண்டுநான்போற்றியம்பலத்தாடுநின்கழற்போதுநாயினேன்
கூடவேண்டுநான்போற்றியிப்புழுக்கூடுநீக்கெனைப்போற்றிபொய்யெலாம்
வீடவேண்டுநான்போற்றிவீடுதந்தருளுபோற்றிநின்மெய்யர்மெய்யனே.

திருச்சிற்றம்பலம்.

(சதகம்-நூறுபாட்டுக்கொண்டது.)

இதில் பத்துவகைக் கருத்துகள்சொல்லி

அங்கே புலம்பிநின்று இருக்குஞ் சமயத்தில்கடவுளன்றருளிச்செய்த தையே மனதிலே நினைந்துபின்பு அந்தஸ்தலத்தை வணங்கிக் கடவுளிடத் தில் விடைபெற்றுக்கொண்டுபோய்த் திருவுத்தரகோச மங்கையென்னும் ஸ்தலத்துக்கெழுந்தருளி அங்கு சடாபாரத்தையுடைய பரமசிவ னெழுந்த ருளி யிருக்கின்ற திருக்கோயிலுக்குப்போய்த் தம்மைவந் தடிமைகொண்ட திருவுருவைக்காணுதவராய் மயக்கமடைந்து பெருமூச்சுவிட்டுக் கீழே விழு ந்து என்னை விட்டுவிடுகின்றீயோவென்று.

திருச்சிற்றம்பலம்.

கடையவனேனைக்கருணையிறற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விரல்வேங்கையின்றோ
லுடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
சடையவனேதளர்ந்தேதினம்பிரானெனைத்தாங்கிக்கொள்ளே.

எசினுமியானுன்னேயேத்தினுமென்பிழைக்கேகுழைந்து
வேசறுவேனைவிடுதிகண்டாய்செம்பவளவெற்பிற்
றேசுடையாயென்னையாளுடையாய்சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்சினவாலமுண்டாயமுதுண்ணக்கடையவனே.

திருச்சிற்றம்பலம்.

(நீத்தல்விண்ணப்பம்-விடைகேட்டுத்தரிவித்தல்.)

அவ்வாறு தெரிவித்தால் விடாதேகொள்ளென்று
பிரபஞ்சவைராக்கியஞ்சொல்ல

அப்போது கடவுள் தமதுபழைய திருவடியைக்காண்பிக்க அங்கேகண்டுகொண்டு வணங்கிச் சிலநாளந்தஸ்தலத்திலிருந்து தமது கடவுள்சொற்படியேபோய் தனக்குநிகரற்ற அனேக தெய்வஸ்தலங்களைவணங்கி நீங்கிச் சோழநாட்டுக்குப்போய்த் திருவிடைமருதூரிற்சேர்ந்து அந்தஸ்தலத்தை வணங்கினபின்பு அன்புடனே திருவாரூருக்குப்போய்ச் சொல்லுதற்கரிய தியாகராஜருடைய திருவடித்தாமரைகளை வணங்கி.

திருச்சிற்றம்பலம்.

பூங்கமலத்தயனெடுமாலறியாதநெறியானே
கோங்கலர்சேர்குவிமுலையாள்கூறாவெண்ணீராடி
யோங்கெயில்சூழ்திருவாரூருடையானேயடியேனின்
பூங்கழல்களையையல்லாதெனையாதும்புகழேனே.
உற்றுரையான்வேண்டேனூர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றுரையான்வேண்டேன்கற்பனவுமினியமையுங்
குற்றுலத்தமர்ந்துறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
கற்றுவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே.

திருச்சிற்றம்பலம்.

(புலம்பல்-பிரலாபித்தல்.)

எனச்சிவானந்தமுதிர்வுகொண்டு

தமதுஇளைப்புநீங்க வணங்கிப் பரமசிவனுல் அனுக்கிரகஞ்செய்யப்பட்டஸ்தலங்களெல்லாந் தப்பாமல் வணங்கி நீங்கி விசாலம்பொருந்திய மதில்சூழ்ந்த சீகாழியிற்சேர்ந்து மலையென்றுசொல்லும்படி விளங்குகின்ற ஆலயத்தினுடைய திருக்கோபுரவாசலுக்கடந்துபோய் அது ஸ்ரீகயிலாசவாசமாகிய செய்தியைக்கண்டு வணங்கும்பொழுது சிற்சபையிலே நிருத்தஞ்செய்த திருவடித்தாமரையைப் பிடித்துக்கொண்டு,

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட்காசேயொழிவறநிறைந்தோகமேயூற்றையென்றனக்கு
வம்பனெப்பழுத்தென்குடிமுழுதாண்டுவாழ்வறவாழ்வித்தமருந்தே
செம்பொருட்டுணிவேசிருடைக்கழலேசெல்வமேசிவபெருமானே
யெம்பொருட்டன்னைச்சிக்கெனப்பிடித்தேதினங்கெழுந்தருளுவதினியே.

புன்புலால்யாக்கைபுரைபுரைகனியப்பொன்னெடுங்கோயிலாப்புகுந்தென்
னென்பெலாமுறுக்கியெளியையாயாண்டவீசனேமாசிலாமணியே
துன்பமேபிறப்பேயிறப்பொடுமயக்காந்தொடக்கெலாமறுத்தநற்சோதி
யின்பமேயுன்னைச்சிக்கெனப்பிடித்தேதனெங்கெழுந்தருளுவதினியே.

திருச்சிற்றம்பலம்.

(பிடித்தல்-பற்றுதல்.)

என முததிக்கலப்புரைத்துப்

பின்புறத்திற் பிரகாசிக்கின்ற சடாபாரத்தையுடைய கடவுளின் திரு முன்னேபிடித்த பத்தென்பதை அருளிசெய்தார் பழவினைப் பகையுள்ளவர் கள் வணங்கிலுல் யாவரும் அதனை வெல்வார்களென்று அந்த ஸ்தலத்திலே விருப்புடனே சிலநாள்வாசஞ்செய்து பின்பு அந்தஸ்தலத்தைவிட்டு வனத் தையுடைய திருக்கழுக்குன்றத்தில் அன்பாய்ச்செல்வதற்குச் சம்மதித்துத் தில்லைநகரைத் திசைகுறித்து வணங்கிப்போய் நெடியவடக்குத்திசையிலேவ ந்துபிரகாசங்குறையாத மணிமுத்தாநதிசூழ்ந்த விருத்தாசலத்தைவணங்கிப் பின்பு உயர்ந்த திருவருட்டுறையென்று பெரியோர்கள்நினைத்து வசிக்கின்ற திருவெண்ணெய்நல்லூரிற்சேர்ந்து அந்தஸ்தலத்தைவணங்கிப் பின்பு அன்பு டனே நீங்கி நல்வழியிலேபோய் நடுநாட்டையும் உயர்ந்தகாட்டையும் அச் சந்தைத்தருகின்றயானையுஞ் சிங்கமும்வாசஞ்செய்கின்ற மலைகளையுங்கடந்து நிலைபெற்ற திருவண்ணுமலைக்குச்சமீபத்தில்வந்து உப்பரிகைகளுங்கோபுரங் களும், நிலைபெற்ற ரத்தினங்களும் முத்துகளும் பதித்த மதில்களும் பெரிய தோரணங்களையுடைய முகப்பும் நீண்ட கமுகங்காடுகளும் நெருங்கியுள்ள குளிர்ந்த சோலைகளையுங்கண்டு மகிழ்ச்சியடைந்து அருணசலத்தைக்கண்டு அன்று பிரம்மவிஷ்ணுக்கள்தேட அக்கினிமலையாய் நின்றவடிவமோ அல்லது மனத்திலேநிறைந்த பெரியவாழ்வோவென்றுவணங்கிக் கிருபைகொண்டு செ ழுமைபொருந்திய அருணைமாநகரத்திற்புகுந்து சந்நிதிவீதியிற்போய் மலர் மாலையும் மூன்றும்பிறையும் சர்ப்பமும் ஊமத்தைமலரும் திருமுடியின்மேல் வைத்த அண்ணுமலையாருடைய திருக்கோயிலவணங்கி தம்மை அன்றுவந் தாண்ட திருவுருவைக்கண்டு மகாவிஷ்ணுவும், பிரமதேவனும் தேவர்களும் வந்து உனக்கடைக்கலமென்று முறையிடும்போதில் ஆலகாலமுண்டிருண்ட கண்டத்தையுடையவனேபோற்றி அதிகரிக்கின்றபிறவிநோய்நீங்கதேவரும் மனிதரும்பசும்பாலுடன் அல்லது உமாதேவிபாகத்துடனேகலந்து உட்கொ ள்ளுகின்ற குளிர்ச்சியுள்ளமலைமருந்தேபோற்றி மகாவிஷ்ணுவராகமாய் நீண் ட பூமியைப்பிளந்துங்காணுத திருவடிகளை என்றலேமேல்வைத்த பெரியகிரு பைக்கடலேபோற்றி பூவுலகத்தை ரட்சிக்கின்ற உண்ணுமுலையென்னும் பச் சைமேனியையுடையகொடியை இடதுபாகத்திற்கொண்ட சிவந்த பொன் மலையேபோற்றிபோற்றி வெல்லுதல்செய்த தற்கையானவள் மகிடாசூரனைக் கொன்ற பாவந்தீர நினைத்துப்போற்ற அருள்செய்தவனே போற்றி அன்றெ ழுந்தருளிவந்து என்னை யடிமைகொண்டாண்ட அணியண்ணு மலையானே போற்றியென்று அன்பிலுலே வந்திவணங்கி அங்கேவசித்திருந்தார்.

அப்படி வசித்திருக்கும்போது அழகினைக்கொண்டபேதை-பெதும் பை-மங்கை-மடந்தை-அரிவை-தெரிவை - பேரிளம்பெண் என்னும் ஏழுவ கைப்ப ருவமங்கையர்களெல்லாம் மார்கழிமாதத்தில் திருவாதிரைக்கு முன் னைப த்துதினங்களிலெல்லாம் மேன்மைபொருந்திய வீடுகள்தோறும்போ ய் அழைத்துக்கொண்டு விடியற்காலத்தில் இவர்களெல்லாங்கூடித் தீர்த்தத் திலேபோய் ஸ்நானஞ்செய்வார்கள் அவர்களுடையவியற்கையைக்கண்டமா ணிக்கவாசகர் மங்கையர்கள் சொன்னதாக நிலைபெற்ற.

திருச்சிற்றம்பலம்.

ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்
சோதியையாம்பாடக்கேட்டேபும்வாட்டடங்கண்
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தோவிபோய்
வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்மறந்து
போதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ங
னேதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே
யீதேதயெந்தோழிபரிசேலோரெம்பாவாய்.

போற்றியருளுகநின்னுதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ்சென்னிகள்
போற்றியெல்லாவுயிர்க்கும்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்குமீறுமிணையடிகள்
போற்றிமாணன்முகனுங்காணுதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.

(ஏல்-ஏலுகின்ற, ஓர்-ஒப்பற்ற, பாவாய்-பாவைபோன்ற பெண்தெய் வமே, என அக்காலவிரததிதெய்வத்தை நோக்கி ஈதேதயெந்தோழி பரிசென அந்வயமாக்குக இனி இவைபோல்வனவெல்லாம் இன்ன.)

எனச் சுத்திவையவியந்து
திருவெம்பாவை சொன்னபின்பு மங்கையர்கள் பாடியாடுகின்ற அழ
கினைக் கொண்டஅம்மனையைக்கண்ட மாணிக்கவாசகர்
அவர்கள்சொன்னபாடலாக

திருச்சிற்றம்பலம்.

செங்கணெடுமாலுஞ்சென்றிடந்துங்காண்பரிய
பொங்குமலர்ப்பாதம்பூதலத்தேபோந்தருளி
யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொண்டு
தெங்குதிரள்சோலைத்தென்னன்பெருந்துறையா

னங்கணனந்தணையுயறைகூவிவீடருளு
மங்கருணைவார்கழலேபாடுதுங்காணம்மானுய்.
பெற்றிபிறர்க்கரியபெம்மான்பெருந்துறையான்
கொற்றக்குதிரையின்மேல்வந்தருளித்தன்னடியார்

குற்றங்கணீக்கிக்குணங்கொண்டுகோதாட்டிச்
சுற்றியசுற்றத்தொடர்வறுப்பான்றிருல்புகழே
பற்றியிப்பாசத்தைப்பற்றாநாம்பற்றுவான்
பற்றியபோரானந்தம்பாடுதுங்காணம்மானுய்.

திருச்சிற்றம்பலம்.

(அம்மானை-மகளிர்கைகளிற்கொண்டாடுவது.)

என ஆனந்தக்களிப்புக்கொண்டு

பின்பு மேன்மைபொருந்திய அந்தத்திருவண்ணுமலையைநீங்கி அன்புடனே ஸ்ரீகாஞ்சிமாநகரில்வந்து ஏகாம்பரத்தி லேகம்பரைவணங்கித் தெரிதற்கரிய திருக்காமக்கோட்டத்தில் காமாட்சியினுடைய சிறிய இரண்டுதிருவடிகளையும் வணங்கித் தேவர்கள் வரங்களைக்குறித்து வணங்குகின்ற தெய்வீகமுள்ள வளத்தையுடைய திருக்கழுக்குன்றத்துக் கெழுந்தருளி வேதகிரிநாதரை வணங்கி யான்கலங்காதபடி.

திருச்சிற்றம்டலம்.

பிணக்கிலா தப்பெருந்துறைப்பெருமானுன்ணுமங்கள்பேசுவார்க்
கிணக்கிலா தேதாரின்பமேவருந்துன்பமேதுடைத்தெம்பிரா
னுணக்கிலா தேதார்வித்துமேல்விளையாமலென்வினையொத்தபின்
கணக்கிலாத்திருக்கோலதீவந்துகாட்டிணுப்கழுக்குன்றிலே.

இயக்கிமாரறுபத்துநால்வரையெண்குணஞ்செய்தவீசனே
மயக்கமாயதோர்மும்மலப்பழுவல்வினைக்குளழுந்தவுந்
துயக்கறுத்தெனையாண்டுகொண்டுநின்றாய்மலர்க்கழறந்தெனைக்
கயக்கவைத்தடியார்முனைவந்துகூட்டிணுய்க்கழுக்குன்றிலே.

திருச்சிற்றம்பலம்.

என்று திருக்கழுக்குன்றத்திலே குருதரிசனஞ்
செய்துகொண்டு

அங்குசிலநாள் வசித்து வேதகிரிபெருமானைப் பணிந்து போற்றி பின்பு மத்தியப்பிரதேசத்திலே யிருந்துள்ள ஸ்தலங்களும் காடுகளும் கரியவிசாலமாகியமலைகளும், சோலைகளும், தடாகங்களும், நதிகளுங்கடந்துபடத்தையுடைய வெய்யசர்ப்பத்தோடு விளையாடி நரிகளையெல்லாங் குதிரையாக்கியசித்தராகி கடவுள் ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற அழகிய தில்லைமாநகர் மூன்றுகாதவழியென்றுசொல்ல எழுந்தருளினர்.

மாணிக்கவாசகர்புலியூராகிய ஸ்ரீசிதம்பரத்தில்வழியாகச்சென்று உயர்வுபொருந்திய மதிலும் சிற்பத்தொழிலின் மிகுந்த கோபுரவரிசைகளும் சிவந்தகும்பங்கள் பிரகாசிக்கின்ற அநேகவுப்பரிகைகளும் பார்க்குந்தோறு மகிழ்னைச்செய்வது கண்டு அஞ்சலியஸ்தராய்ப் புகழ்ச்சிசெய்து மகிழ்ச்சிகொண்டு அந்தத்தில்லைமாநகரத்தின் நெடியவீதிகளைக்கடந்துமலைபோற்பொருந்திய உயர்ந்த கோபுரவாசலின் வழியாகப்புகுந்து சிற்சபையை எதிரேகண்டு பொன்னம்பலத்திலே நின்று திருக்கூத்தாடிய நடராஜப்பெருமானைத் தம்முடைய சிரசிலே அந்தநாளிலே திருவடிகளைச்சூடிய குருவுருவமாகக்கண்டு இந்தச் சகத்துக்கெல்லாம் அரசனே உயிருக்கொப்பானவனே சபாநாயகனே உனக்கு அடைக்கலமென்றுசொல்லப் பலதரம் அன்புடனேதொழுது மிகவு மழுது, இரண்டுகண்களும் ஆநந்தபாஷ்பம் பொழிய நமஸ்காரம்பண்ணி திருவடிகளைமுடியிற்சூட்டிக்கொண்டு பின்பு எழுந்து அன்புடனே குறைவில்லாத திருவருள்நிறைந்து வண்டுகள்மொய்க்கின்ற கூந்தலையுடைய உமாதேவிபாகனாகிய கடவுளை,

திருச்சிற்றம்பலம்.

இந்திரியவயமயங்கியிறப்பதற்கேகாரணமா
யந்தாமே திரிந்துபோயருநரகில்வீழ்வேற்குச்
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லைகண்டேனே.

பூதங்களைந்தாகிப்புலனைகிப்பொருளாகிப்
பேதங்களனைத்துமாய்ப்பேதமிலாப்பெருமையனைக்
கேதங்கள்கொடுத்தாண்டகிளரொளியைமரகதத்தை
வேதங்கடொழுதேத்தும்விளங்குதில்லைகண்டேனே.

திருச்சிற்றம்பலம்.

(கண்டேன்-தரிசித்தேன்.)

என நிருத்ததரிசனஞ்செய்து

குறைவில்லாதகிருபையையுடைய திருமூலஸ்தானத்தி லெழுந்தருளியிருக்கும் சிவலிங்கமாகிய சோதியும்பொற்சபையாகிய சிதாகாசத்திலேமகிழ்ந்து திருநிருத்தஞ்செய்கின்ற சோதியும் ஒன்றென்று சொல்லும் அனுபூதியிலிருந்து ஒருசெயலுமில்லாதவராய் அசைவற்ற ஒருசித்திரம்போலானார்.

அப்போது மெய்காவற்காரர்கள் கருமைபொருந்திய கூந்தலையுடைய உமாதேவிபாகராகிய சபாநாயகரை வழிபடுவது மறந்து கையும் காலும் அசைவில்லாமலிருக்கின்றன கண்ணுங்கொஞ்சமாயினும் இமைக்கவில்லை செய்யுங்காரியம் என்னே இதுதெளியாத மயக்கமாயிருக்கிறதென்று மாணிக்கவாசகரை இனி அழகிய சபையைவிட்டுப்போமென்றார்கள் மெய்காவற்காரர் சொன்னதுகேட்டுத் தாண்டவம்புரிகின்ற அறிவின்றன்மையிது பழமையை

நாடிக் காணத்தக்க துரியாதீதமாகிய மிகுந்த பரத்தினை யுடைய ஒளியிலே மூழ்கிப் பரவசப்பட்டு நீண்ட ஒரு ஸ்தம்பமாகி நெடுநாழிகை நின்றார். அக் காலையில் மேய்காவற்காரர் இவர்போமென்றுல்போகார் ஒன்றும்பேசார்பயித்தியங்கொண்டவராகுமென்று பயந்துநின்று இறங்கும்போது இறந்தசேதனத்திற்கு உயிர்வந்தடைந்த தன்மைபைப்போல அஞ்சவிசபத தாமரை மலர்போன்ற திருக்காங்களைமுடிமேற்கொண்டு சிவசிவபோற்றி என்று ஆதியாகிய கடவுளுடைய பொன்னம்பலத்தை மூன்றுதரம் வலங்கொண்டு அங்கே தனக்குநிகரில்லாத திருமூலஸ்தானக்கடவுளைவணங்கி பின்பு உமாதேவி திருவடிகளை அன்புடனே வணங்கி அந்தப்பொன்னெளியையுடைய கோயிற்கு மேற்பாகத்தில் திருப்புலீச்சரத்திலடைந்து அந்தக்கடவுளுடைய தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கி அதற்கருகே திருநாகேச்சரத்திலிருந்த பரமசிவனுடைய திருவடிகளைவணங்கி நீங்கித் திருத்தமாகிய தில்லை மூவாயிரவர் வாழுகின்ற ஸ்ரீசிதம்பரத்தைச்சூழ்ந்த வீதியிற்போகும்போது அமிர்தமாகிய திருவாசகஞ்சொல்லத்தொடங்கி.

திருச்சிற்றம்பலம்.

ஓடுங்கவந்தியுமேயுறவென்றிட்டுள்ளசிந்து
தேடும்பொருளுஞ்சிவன்கழலேயெனத்தெளிந்து
கூடுமுயிருங்குமண்டையிடக்குனித்தடியே
ணுடுங்குலாத்திலையாண்டானைக்கொண்டன்றே.

கொம்மைமுலைக்கொம்பனையாள்கூறனுக்குச்
செம்மைமனத்தாற்றிருப்பணிகள்செய்வேனுக்
கிம்மைதருமம்பயனித்தனையுமீங்கொழிக்கு
மம்மைகுலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே.

திருச்சிற்றம்பலம்.

(குலாத்தில்லை-கொண்டாடுத்தில்லை.)

என அனுபவமிடையீடுபடாமையாய்

திருச்சிற்றம்பலம்.

மாறிநின்றென்னைமயக்கிடும்வஞ்சப்புலனைந்தின்வழியடைத்தமுதே
யூறிநின்றென்னுளெழுபாஞ்சோதியுள்ளவாகாணவந்தருளாய்
தேறலின்றெளிவேசிவபெருமானேதிருப்பெருந்துறையுறைசிவனே
யீறிலாப்பதங்களியாவையுங்கடந்தவின்பமேயென்னுடையன்பே.

தந்ததுன்றன்னைக்கொண்டதென்றன்னைச்சங்காவாற்கொலோசதுர்த்த
ரந்தமொன்றில்லாவானந்தம்பெற்றேனியாதுநீபெற்றதான்றென்பாற்
சிந்தையேகோயில்கொண்டவெம்பெருமான்றிருப்பெருந்துறையுறைசிவனே
எந்தையேயீசாவுடலிடங்கொண்டாயானிதற்கிலமெனர்கைம்மாறே.

திருச்சிற்றம்பலம்.

(கோயில்-ஸ்ரீசிதம்பரம்.)

என அனுபோகவிலக்கணஞ்சொல்லி

திருச்சிற்றம்பலம்.

உடையாருன்றனடுவிருக்குமுடையானடுவுணீயிருத்தி
யடியேனடுவுளிருவீருமிருப்பதாலடியேனுன்
னடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்துமுடியும்வண்ணமுன்னின்றே.

நல்காதொழியானமக்கென்றுன்னுமம்பிதற்றியனீர்
மல்காவாழ்த்தாவாய்குழறுவணங்காமனத்தானினைந்துருகிப்
பல்காலுன்னைப்பாவித்துபபரவிப்பொன்னம்பலமென்றே
யொல்காநிற்குமுயிர்க்கிரங்கியருளாயென்னையுடையானே.

திருச்சிற்றம்பலம்.

(மூத்ததிருப்பதிகம்-பெரிய திருப்பதிகம்.)

என அநாதியாகிய சற்காரியங்கூறி

திருச்சிற்றம்பலம்.

தில்லைமூதூராடிய திருவடி
பல்லுயிரெல்லாம்பயின்றனனுகி
* * * * * *

பொலிதருபுலியூர்ப்புக்கினிதருளின
ணெலிதருகயிலையுயர்கிழவோனே.

(கீர்த்தி-புகழ்.)

எனச் சிவனது திருவருட்புகழ்ச்சிமுறைமைகூறி

திருச்சிற்றம்பலம்.

அண்டப்பகுதியினுண்டைடப்பிறக்க
மளப்பருந்தன்மைவளப்பெருங்காட்சி
* * * * * *

அருளொடுபாவமுதாக்கினன்
பிரமன்மாலறியாப்பெற்றியோனே.

திருச்சிற்றம்பலம்.

(அண்டப்பகுதி-ஆகாயமாகியமுதல்.)

எனச் சிவனது தூலசூக்குமத்தையியந்து

நான்முகன்முதலாவானவர்தொழுதெழு
வீரடியாலேமூவுலகளந்து
* * * * * *

போற்றிபோற்றிபுராணகாரண
போற்றிபோற்றிசயசயபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

(போற்றி-பல்லாண்டு.)

எனச்சகத்தி னுற்பத்திகூறி.

இம்படிமூன்றகவலும் பாடியருளினர் அவ்விடத்தில் மாதர்களெல்லாம் கைகளிலே யிருக்கின்ற சங்கவளையல்கள் சத்திக்கச் செம்பொன்னாற் செய்த கிண்கிணிகள் சத்திக்க மயிற்சாந்துபூசிய கரிய கூந்தலின்மேல் வண்டுகள் மயங்கி இசையைப்பாடத் தேகத்திலே வேர்வையுண்டாக வெவ்விய போர்செய்கின்ற கண்ணுகிய கயல்களைப்புரட்டிப் பக்கங்களிலே இந்தவகையாகநின்று திருப்பொற்சுண்ணம் இடித்தார்கள் மாணிக்கவாசகர் அந்த மாதர்களுடைய பாடல்களைக்கேட்டு அவர்கள் சொல்லியதாக மெய்ம்மையாக தமிழினல் நன்மைமிகுந்த,

திருச்சிற்றம்பலம்.

முத்துநற்றுமம்பூமற்றுமம்நீமாலதாக்கிமுளைக்குடந்தாபநற்றீபம்மின்
சத்தியுஞ்சோமியுபார்மகளுநாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங்கவுரியும்பார்ப்பதியுங்கங்கையும்வந்துகவரிகொண்மி
னத்தனையாறனம்மானைப்பாடியாடப்பொற்சுண்ணமிடித்துநாமே.
வேதமும்வேள்வியுமாயினர்க்குமெய்ம்மையும்பொய்மையுமாயினர்க்குச்
சோதியுமாயிருளாயினர்க்குத்துன்பமுமாயின்பமாயினர்க்குப்
பாதியுமாய்முற்றுமாயினர்க்குப்பந்தமுமாய்வீடுமாயினருக்
காதியுமந்தமுமாயினருக்காடப்பொற்சுண்ணமிடித்துநாமே.
திருச்சிற்றம்பலம்.

(பொற்சுண்ணம் பொன்னிறமானமஞ்சட்பொடியிது திருமஞ்சனப்பொடி.)

என ஆனந்தமேலையங்கூறி

மேகங்கள் பிரகாசிக்கின்ற சோலையினிடத்தே வருமளவில் அங்கேதங்கள் தங்களுக்குள்ளேவிளையாடுகின்ற பெண்பிள்ளைகளைப்பார்த்து வீண்பேச்சுச் சிறிதுமில்லாமல் எமது கடவுளையே சொல்லுங்கள் நீங்களென்று அவரவர்கள் சொல்லியதாக,

திருச்சிற்றம்பலம்.

திருமாலும்பன்றியாய்ச்சென்றுணராத்திருவடியை
யுருநாமமறியவோரந்தணையாண்டுகொண்டா
ணெருநாமமோருருவமொன்றுமிலார்க்காயிரந்
திருநாமம்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ.
குலம்பாடிக்கொக்கிரகும்பாடிக்கோள்வளையா
ணலம்பாடிநஞ்சுண்டவாபாடிநாடோறு
மலம்பார்புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
சிலம்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ.

தெள்ளேணம்-தெள்-துள்ளாய்-துள்ளல்-அதிர்தலாய்-தெள்ளேனம்-அதிமூரசு-எனம்-மான்மேறல்-அதுகடமைத்தோலாற் கட்டியமூரசு கடமை.

திருச்சிற்றம்பலம்.

(எருமைபோல் வந்தது.)

என சிவ ணை டை டவ ர ய்

திருச்சிற்றம்பலம்.

வளைந்ததுவில்லுவிளைந்ததுபூச, லுளைந்தனமுப்புரமுந்தீபற
வொருங்குடன்வெந்தவாறுந்தீபற
தேரைநிறுத்திமலையெடுத்தான்சிரமீரைந்துமிற்றவாறுந்தீபர
விருபதுமிற்றதென்றுந்தீபற

திருச்சிற்றம்பலம்.

உந்தீபறமீகிழிதழுற உந்திப்பரந்து விளையாடல் உந்தந்தல்-வாப்க்காற்று வெளியே செல்வவூதல் இது இக்காலத்தேதாதும்பி பறத்தல்எனமரீஇயற்று.

எனஞான வெற்றிகொண்டு

திருச்சிற்றம்பலம்.

பூத்தாரும்பொய்கைப்புனலிதுவேயெனக்கருதிப்
பேய்த்தேர்முகக்குறும்பேபேதைகுணமாகாமே
தீர்த்தாய்திகழ்தில்லையம்பலத்தேதிருநடஞ்செய்
கூத்தாவுன்சேவடிகூடும்வண்ணந்தாமேணைக்கம்
உரைமாண்டவுள்ளொளியுத்தமன்வந்துளம்புகலுங்
கரைமாண்டகாமப்பெருங்கடலைக்கடத்தலுமே
யிரைமாண்டவிந்திரியப்பறவையிரிந்தோடத்
துரைமாண்டவாபாடித்தேதாணைக்கமாடாமோ.

திருச்சிற்றம்பலம்.

சுணையாடல்-நீராடலென்றுற்போல் தேதாணைக்கமாடல்ஐவகைப்
புணர்ச்சியுளொன்று
எனப்பிரபஞ்சசுத்திசொல்லி

திருச்சிற்றம்பலம்.

இணையார்திருவடியென்றலைமேல்வைத்தலுமே
துணையானசுற்றங்களத்தனையுந்துறந்தொழிந்தே
னணையார்புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
புணையாளன்சீர்பாடிப்பூவல்லிகொய்யாமோ.
அத்தியுரித்ததுபோர்த்தருளும்பெருந்துறையான்
பித்தவடிவுகொண்டிவ்வுலகிற்பிள்ளையுமா
முத்திமுழுமுதலுத்தரகோசமங்கைவள்ளல்
புத்திபுகுந்தவாபூவல்லிகொய்யாமோ.

திருச்சிற்றம்பலம்.

பூவல்லிகொய்யாமோ-பூவைவல்லியிற்கொய்து விளையாடலாமோ, வல்லி-கொடி-இதுகொடிமுல்லை-கொடிமல்லிகை-தாமரைக்கொடி-அல்லிக் கொடி என்றாலும் பத்திரபுஷ்பங்களுக்கெல்லாம் உபலக்ஷணம்.

எ ன ம ா ய ா வி ச ய ங் கி

திருச்சிற்றம்பலம்.

சீரார்பவளங்காண்முத்தங்கயிறுக
வேராரும்பொற்பலகையேறியினிதமர்ந்து
நாராயணனறியாநாண்மலர்த்தாணையடியேற்
கூராகத்தந்தருளுமுத்தாகோசமங்கை
யாராவமுதினருட்டாளிணைப்பாடிப்
போரார்வேற்கண்மடவீர்பொன்னூசலாடாமோ.

தெங்குலவுசோலைத்திருவுத்தாகோசமங்கை
தங்குலவுசோதித்தனியுருவம்வந்தருளி
யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தாமுமாட்கொள்வான்
பங்குலவுகோதையுந்தானும்பணிகொண்ட
கொங்குலவுகான்றைச்சடையான்குணம்பரவிப்
பொங்குலவுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ.

திருச்சிற்றம்பலம்.

(பொன்னூசல்-பொன்னாற்செய்தவூசல்.)

என அருட்சுத்திசொல்லி

அங்கே ஒரு பெண்சிறந்த தனது தாயைப்பார்த்துச் சொல்லியதாகத் தாங்கப்பெற்ற இசையையுடையசொல்லெனத்தக்க.

திருச்சிற்றம்பலம்.

வேதமொழியர்வெண்ணீற்றர்செம்மேனியர்
நாதப்பறையினரன்னேயென்னும்
நாதப்பறையினர்நான்முகன்மாலுக்கு
நாதரிந்நாதனுரன்னேயென்னும்
கொன்றைமதியமுங்கூவிளமத்தமுந்
துன்றியசென்னியரன்னேயென்னுந்
துன்றியசென்னியின்மத்தமுன்மத்தமே
யின்றெனக்கானவாறன்னேயென்னும்.

திருச்சிற்றம்பலம்.

(அன்னை-தாய்.)

என ஆத்துமபூரணஞ்சொல்லி

பக்கங்களிற்பாடுகின்ற தும்பியை விரும்பிப்பார்த்துக் கடவுளுடைய திருவடியைத் துதிசெய்யென்று.

திருச்சிற்றம்பலம்.

பூவேறுகோனும்புரந்தரனும்பொற்பமைந்த
நாவேறுசெல்வியுநாரணனுநான்மறையு
மாவேறுசோதியும்வானவருந்தாமறியாச்
சேவேறுசேவடிக்கேசென்றுதாய்கோத்தும்பீ.

பூமேலயனேடுமா லும்புகலரிதன்
றேமாறி நிற்கவடியேனிறுமாக்க
நாய்மேற்றவிசிட்டுநன்றாப்பொருட்படுத்த
தீமேனியானுக்கேசென்றாதாய்கோத்தும்பீ.

திருச்சிற்றம்பலம்.

(கோத்தும்பீ-தெய்வலோகவண்டு.)

எனசிவனேவைடைக்கியமாய்

சோலையின்மத்தியிலே வாழ்கின்ற குயிலைப்பார்த்து அழகிய இளங்குயிலே இங்கே எமதுகடவுளைக் கூவியழைப்பாயென்பதாகிய.

திருச்சிற்றம்பலம்.

கீதமினியகுயிலேகேட்டியேலெங்கள்பெருமான்
பாதமிரண்டும்வினவிற்பாதாளமேழினுக்கப்பாற்
சோதிமணிமுடிசொல்லிச்சொல்லிறந்துநின்றதான்மை
யாதிகுணமொன்றுமில்லானந்தமிலான்வரக்கூவாய்.

கொந்தணவும்பொழிற்சோலைக்கூங்குயிலேயிதுகேணீ
யந்தணனுகிவந்திங்கேயழகியபேசவடிகாட்டி
யெந்தமாமிவனென்றிங்கென்னையுமாட்கொண்டருளுஞ்
செந்தழல்போற்றிருமேனிதேவர்பிரான்வரக்கூவாய்.

திருச்சிற்றம்பலம்.

(குயில்-கோகிலம்.)

என ஆத்துமவிரக்கஞ்சொல்லி

கிளியைப்பார்த்துச்சந்திரனைத்தரித்த கடவுளைச்சொல்லென்று

திருச்சிற்றம்பலம்.

ஏராரிளங்கிளியேயெங்கள்பெருந்துறைக்கோன்
சீரார்திருநாமந்தேர்ந்துரையாயாரூரன்
செம்பெருமான்வெண்மலரான்பாற்கடலான்செப்புவதோ
லெம்பெருமான்தேவர்பிரானென்று.

சோலைப்பசுங்கிளியேதூநீர்ப்பெருந்துறைக்கோன்
கோலம்பொலியுங்கொடிகூறாய்-சால
மேதிலார்துண்ணென்னமேல்விளங்கியோர்காட்டுங்
கோதிலாவேறுங்கொடி.

திருச்சிற்றம்பலம்.

(தசாங்கம்-பத்துவகை அங்கம்.)

என அடிமைகொண்டமுறைமைசொல்லி

பூமியிலே தம்மை அடிமைகொண்டகடவுளையல்லாமல்வேறுருவனைத் தெய்வமென்பதற்கு அஞ்சுகின்றேன் வினையை யுடையேனென்னும் சிறந்த புண்ணையுடைய.

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வாளரவுமஞ்சேன்பொய்யர்தம்மெய்யுமஞ்சேன்
கற்றைவார்சடையெம்மண்ணல்கண்ணுதல்பாதநண்ணி
மற்றுமோர்தெய்வந்தன்னையுண்டெனநினைந்தெம்பெம்மாற்
கற்றிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே.

கோணிலாவாணிபஞ்சேன்கூற்றுவன்சீற்றமஞ்சே
ணீணிலாவணியிணைனநினைந்துணைந்துருகிநெக்கு
வாணிலாங்கண்கள்சோரவாழ்த்திநின்றேத்தமாட்டா
வானலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே.

திருச்சிற்றம்பலம்.

(அச்சம்-அஞ்சுகை.)

என ஆனந்தமுற்று

பின்பு அந்நகர்ப்புறத்திலே ஒரு பன்னகசாலைசெய்து அங்கிருந்தார் வேதாந்தப்பொருளாகிய இந்தத்திருவாசகத் தமிழைச்சொல்லிய மாணிக்கவாசகருடைய செய்தியனைத்தும் அரியபுகழையுடைய தில்லையிலுள்ளவர் யாவருந் தங்கள் கூட்டங்கள்தோறுஞ்சொல்லிச்சொல்லி நல்ல மகிழ்ச்சிபெற்று அதிசயித்தார். மாணிக்கவாசகர் முப்பத்தாறு தத்துவத்தின்முடிவிலே விளங்குகின்றசபாநாயகரது திருநிருத்தத்தைதமக்குள்ளேகண்டு நித்தியம் போய் அந்தக்கடவுளைப்பத்தியிலுலே சேவித்து இந்தவிதமாக தில்லைமாநகரத்து எல்லையிற்செய்த பன்னசாலையிலெழுந்தருளியிருந்தார்.

இதுநிற்க தாழ்ந்துநீண்ட சடாபாரத்தையுடையபரமசிவனுடைய இரண்டு திருவடிகளையும்விடாத ஒருதபசிபானவர் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுள்ளவளத்தை ஆயத்தக்க இச்சையுள்ள மனமுடையவராய்ச் சோழதேசத்தையடைந்து தில்லைமாநகரைவணங்கிப்பின்பு குற்றமில்லாதசோழதேசத்தைப் பார்க்கவேண்டுமென்று நினைத்து அங்கேபோயினர். அப்படிப்போன தபசியானவர் முதன்மைபெற்றநன்மையைக்கொண்ட சோழநாட்டரசனிருந்த ஊரைச்சேர்ந்துமிருந்த உள்ளன்பினுலேதானிருக்குமிடந்தோறுஞ் சிதம்பரம் அளவில்லாதகாலம் வாழ்கவென்று சொல்லத்தொடங்கினர். தான்போய் சேருமிடங்கடோறுஞ் சிறக்கப்பெற்ற பொன்னம்பலம் வாழ்கவென்று சொல்லிக்கொண்டிருக்குநாளில் அங்கேயிருக்கும் நன்மையில்லாதமூடராகிய புத்தர்கள் சோழதேசத்துராஜாவுக்கெதிரேபோய் நயப்புடன்வணங்கி அரசனே ஒன்றுகேள் குறைவில்லாத திறமையுடையவனுகும் ஒருத்தன் இந்நகரிலேயிருக்கின்றன். அவனுக்காபரணம்நித்திராட்சமாலிகை அவன் நாள்தோறும் புசிப்பது பிரைஷ நின்றலும் இருந்தாலும் பிரகாசத்தையுடைய பொன்னம்பலம் வாழ்கவென்னுஞ்சொல்லைச் சொல்லுகிறனென்றார்கள் அவ்வார்த்தையைக் கேட்டவரசனவன் அவனை இன்று இங்கே கொண்டுவாருங்களென்றன். உடனே அவரும்போய் அன்புடையவரே உம்மை அரசன் அழைக்கின்றன் வாருமென்ன அதற்கவர் சொல்லுவார் நாள்தோறும் நன்மையுந் தீமையுமில்

லாதபிசைகூடியெடுத்து உண்பதல்லாமல் வேறொன்றுநினையாதவர்களிடத்தும் அரசனுக்குக்காரியமுண்டோவென்றூர் அதற்கவர்கள் ஊரிலே பிசைகூடியெடுத்துண்டாலும் காரியம் ஒன்றுமில்லையாலுலும் பூமியிலே யிருக்கின்றவர்களுடைய உயிரை இரட்சித்தல் அரசர்களுக்குப்பாரமாகும் ஆதலினல் பரிமளிக்கின்ற மாலையினையுடைய எங்கள் அரசனிடத்திலே வரவேண்டுமென்கதிங்கொன்றுமில்லாத தவசி நல்லதென வேலையுடைய தூதருடனேபோனர்.

அப்போது ஆதியாகிய பிடகநான்மூன்றுமறிந்து நான்கு குற்றமும் நீங்கி சீலமைந்துந் தரித்து காமாதியாறும் பஞ்சேந்திரியங்களும் அடக்கப்பட்ட இயல்பையுடையவனுப்ப பஞ்சகந்தமுங்கெடுவது முத்தியென்று காட்டுகின்ற பெடத்தசிரிபன் தன்னுடனே யிருக்கச் சேனைகள் புடைசூழ அழகுசிறந்த புயத்தையுடைய புத்தாசனும் சபையின்கண்ணிருந்தான் அங்கு தபசியானவர் உடுக்கப்பட்ட ஒருவெள்ளைக்கோவணமும் பிரகாசிக்கப்பட்ட கபாலமும் சதங்கைகட்டிய நெடியபிரம்பும் திலதப்பொட்டணிந்த திருமுகமும் சிரிய புன்சிரிப்பும் அசைகின்ற சடையும்பார்த்து அரசன் திடுக்கிடவந்து திருவம்பலமென்றுசொல்லி அங்கேயிருந்தார். அப்படியிருந்த தபோதனரைப்பார்த்து இபபோது நீர் திருவம்பலமென்று இங்கேசொல்லுந் தன்மை என்னவென்று வினவ அவ்வரசனுக்கு அவர்சொல்லுவார் செல்வத்தையதிகரிக்கச்செய்யுங் கீர்த்தியிலேபிரகாசிக்கின்ற சோழராஜாவானவன் பிரியாததன்னுடைய கிருபாநோக்கங்களாலே இரட்சிக்கின்ற சோழநாட்டிலே ஸ்ரீ சிதம்பரமென்றுரூஸ்தலமுண்டு அந்தஸ்தலம்முன்னே தில்லைவனம் அதுவோ திரிபுவனத்துக்கு முன்னேயுண்டாகிய தெய்வஸ்தலமாம் அதனல் மூலஸ்தலமென்றுசொல்லலாம் இந்தப்பூமிக்கு நடுவாகப் பிரகாசிக்கின்ற சிற்சபையிலே சந்தனம்பூசப்பட்ட ஸ்தனத்தையுடைய உமாதேவிகாணச் சபாநாயகர் நிருத்தஞ்செய்தார். நிலைபெற்றதில்லையுடைய மனுச்சக்கிரவர்த்தியின் புத்திரனுகிய இரணியவன்மனுடைய தேகத்திலிருந்த குட்டநோயைநீக்கி நெடிய மகமேருவைபோலுந் திவ்வியதேகத்தைக் கொடுத்த பரிசுத்தமாகிய சிவகங்கையென்னும் ஒருதடாகமுண்டு முன்னே பூமியில் ஒருதவமுஞ் செய்யாதவரும் அதிலேமூழ்கிப் பஞ்சகிருத்தியத்திற்குக் காரணமாகிய திருநடனத்தைத் தெரிசித்தால் அவர்கள் உலகத்திலே வந்து பிறவார்கள் பொருந்திய பிறவியை நீக்கி ஆக்மகோடிகளுக்கு நன்மையான மோட்சத்தைக் கொடுப்பதற்கு நினைக்கின்ற அநேக சமயதெய்வங்களில் யானேவல்லவனென்று திருவடிமேல் அழகுவிளங்கிய பொன்னுற்செய்த வீரக்கழலையணிந்து வலிமைபொருந்திய கொடியுங்கட்டி அருட்சத்தியாகிய உமாதேவிகாண திருநடனஞ்செய்தான் நிறையப்பெற்ற சடாமுடியையுடைய பரமசிவனுடைய இரண்டுபாதத்தை வணங்காத தியமனமும், வாக்கும், செய்கையுமுடைய கொடியவர்களும் ஒருதரம் நிலைபெற்ற பொன்னம்பலமென்று சொன்னல் செல்வத்தைத்தருகின்ற ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை இருபத்தோராயிரத்தறுநூறுதரம் நாவைக்கொண்டு சொல்வதற்கு நிகரல்லவென்றூர் மலையென்று சொல்லும் மிகுந்த நற்குணத்தையுடைய தபசியானவர் விபூதிபஞ்சாக்ஷரமில்லாத அரசனே திருப்பலமென்று நாம் சொன்னதற்கு பொருள் இதுவாகுமென்றூர்.

அப்போது புத்தகுருவானவன் தேறுகின்ற பிடகாகமமூன்றும் சொன்ன தலைவணங்கிய புத்தனையல்லாமல் வேறேறயொரு தெய்வமுண்டோவென்று கோபித்துச்சொல்லி அப்படியாலல் தில்லைமாநகருக்குப்போய் வாதுசெய்து அவரிருந்து நிருத்தஞ்செய்கின்ற பாதத்திலிடுகின்ற வீரக்கழலையும் பிடிக்கின்ற கொடியையும் அறுத்துப்போடுவேன் - புத்தனொருவனேதவிர வேறு தெய்வமில்லையென்று அந்தச்சபையை அரசபர நீழலிலிருக்கும் புத்தன் கோயிலென்று சொல்லும்படி வைப்பேன் இந்தக்காரியத்தை மூன்றுதினத் தில் யானேமுடிப்பேனென்று அழகிய சிவிகையின்மேலேறிக்கொண்டு தன் னுடைய பாதத்தை வணங்குகின்ற பௌத்தகூட்டங்கள்சூழ மிகவும் பிரகா சிக்கின்ற அலகளையுடைய கடலும் நாடும்காடும் நீங்கிப் புத்தியிலே விசனங் கொண்டு சீக்கிரத்திலே ஸ்ரீ சிதம்பரத்திற்குப்போனன் புத்தராசனும் தன் னுடைய செல்வம்போன்ற புத்திரிக்கு முன்னமேயுண்டான ஊமைத்தன்மை நீங்க ஸ்ரீ சிதம்பரத்திற்குப் போகவேண்டுமென்று நினைத்துத் தன்னுடைய சேனைகள்சூழ ஒப்பற்ற பெரிய சிவிகையிலேறிக்கொண்டு புத்திரியோடு சோழநாட்டையடைந்து தில்லைமாநகரம் வந்து சேர்ந்தான்.

இப்படி இந்தப்புத்தராஜன்வருவதற்குமுன்னேவந்த புத்தகுருவான வன் அக்கினியைத்தரித்த சிவந்தகையையுடைய பரமசிவனது தில்லைமாநக ரத்து எல்லையின்முன் சிவிகையை விட்டிறங்கி மிகுந்த குளிர்ச்சிபொருந்திய கங்கையைத்தரித்த சடைமுடியையுடைய பரமசிவனது ஆலயத்திலே பொ ன்றுற்செய்த மண்டபத்தில்வந்துசேர்ந்தான் அங்கேயிருந்த புத்தகுருவைப் புத்தராஜன் வணங்கித் துதிசெய்து உயர்ந்த மகிழ்ச்சியடைந்திருந்தபோது சர்ப்பத்தை முடித்த சடையையுடைய பரமசிவனது திருக்கோயிலிலே பணிவிடைசெய்பவர்கள் இவர்கள் வருதலைக்கண்டு எல்லாரும் ஒன்றுசேர்ந்து தங்கள் தங்கள் மனநொந்து அக்கினியைப்போற் கொதித்துக் கோபித்து அவர்களாயாசங்கொள்ளும்படி சிலவார்த்தைகளைப்பேசிக் கடவு ளிருக்கின்ற தில்லைமாநகரின்கண் எல்லையைவிட்டுப் புத்தனே சீக்கிரத்தி லோடிப்போய்விடு இதுநாங்கள் பொறுக்கமாட்டோமென்று சொன்னார்கள், புத்தகுரு வானவன் வெற்றிமாலையையணிந்த சோழன் முன்னே உயர்ந்த தர்க்கம்பேசி நீங்கள் போற்றப்பட்ட சைவமார்க்கம் நிலையன்றென்று சொல் லிச் சிறப்புப்பொருந்திய புத்தனே யுயர்ந்த தெய்வமென்று இப்போது சொல்லாமல் போவதில்லையென்றான்.

இவ்வார்த்தையைச்சொன்னபின்பு அவர்கள்பாவருக்கும்இதைச்சொ ல்லுவோமென்று சீக்கிரத்திலே உண்மையாகியதபோதனர்களுக்கும் தில்லை மூவாயிரவர்களுக்கும்பரிகலத்தார்களுக்கும்அவரவர்கள்வீடுதோறும்போய் ச்சொன்னார்கள். அதைக்கேட்ட அவர்கள்புண்ணிலேவேல்நுழைந்ததுபோல வருத்தப்பட்ட சபாநாயகரெழுந்தருளியிருக்கிற திருக்கோயிலிலே அழகிய ரத்தினம்பதித்த மண்டபத்திலிருக்கின்ற புத்தகுருவினுடையநினைப்பென்ன வென்று கேட்போமென்று சீக்கிரத்திற் போயினார்கள் தில்லை மூவாயிரவர் போக எதிர்கொண்டுவாத உண்மைஞானமில்லாத புத்தனைக் கோபித்துப் பலபேச்சுகள்பேசப் பிழைக்கும்வகையறியாத நீ இங்கே அஞ்சுதலில்லாமல் மதியாமலிருந்ததன்மை யென்னவென்றுகேட்டார்கள். அதற்குப் புத்தகுரு

வானவன் நான்குவேதமும் ஆறுசாஸ்திரமும் பதினெண்புராணமும் இருபத் தெட்டாகமமும் ஆகிய இவைகளாலே உங்களுடைபதிப்புமே உண்மையான தெய்வமென்று சொல்லீர்களானால் எங்கள்தெய்வமே உண்மையானதெய்வ மென்று யான்சொல்லுவேன் இங்கே என்னைதிரே சொல்லுமென்றுசொன் னன் அதற்குத்தில்லைமூவாயிரவர் இன்று இழிவினையுடைய உன்னோடுபேசு கிறது நமக்குத தகாதகாரியம் ஆனலும்சிறப்பொன்றுமில்லாத உன்னை ஒரு சொல்லிலே செயிப்போம் ஆயினும மிகுந்த திறலையுடைய அரசர்களும் மெ ய்யுணர்வினையுடைய பெரியோர்களுங கூடியிருக்கின்ற சபையதிரே நம்மு டைய தர்க்கவார்த்தைசொன்னல் இது தக்கது இதுதகாதென்று அவர்கள் சொல்லுவார்களானல் எந்தக்கலகமுமில்லை இதுவேகாரியமாகுமென்று சொ ல்லி சோழராஜாவையும பிராமணர்களையும் பெரிய தபோதனர்களையும்கலைக் கியானவல்லவரையும் நாளைச்சிதம்பரத்தை தரிசிக்கவரும்படி பலதிருமுகங் கள் எழுதிவிட்டுப் புத்தகருவைப்பார்த்து இன்றைருபொழுதுமாத்திரம் நீ யிங்கிருப்பாய் நாளையுன்னுடையதாழ்வை உலகத்திற்குக்காட்டுவோமென்று சொல்லித் தங்கள்வீட்டிற்குப்போய் நல்லுணவையுண்டு அன்றிராத்திரியாவ ரும் நித்திரைசெய்யும்போது அழகுபொருந்திய பொன்னம்பலத்தில் திரு நடனஞ்செய்கின்ற சபாநாயகரானவர் கையிற்பிரம்புகொண்டுதழைத்தசடை முடியும் திருநீறணிந்ததிருமேனியும் உடையவராய் எல்லாரும் விரும்புகின்ற திருவுருவங்கொண்டு சூரியனுதயமாகுமுன்னேவந்து கனவிலே எல்லார்க்கும் நீங்கள் வருந்துவதை யொழியுங்கள் நம்முடைய தில்லைமாநகரத்திதல்லையில் திருவாதவூரனுகிய மாணிக்கவாசகனிருக்கிறன். இந்தச்செய்தியைக்கேட் டால் தர்க்கசாஸ்திரத்தைக்கொண்டு புத்தரைவாதுசெய்து வெல்லுவான் ஆதலால் இப்பொழுதே அரியதவத்தையுடைய நீங்கள்போய் அவனையழை யுங்களென்றர்.

பின்பு அவரவர்களும் விழித்து எழுந்து தாங்கள் கண்டகனவைக்கு றித்து உசாவி அதிசயித்து மனவருத்தம்நீங்கி மெய்த்தவத்தையுடையமாணி க்கவாசகரெழுந்தருளியிருக்கின்ற இடத்துக்குப்போவோமென்று உத்தமமா கிய அவரதுபன்னசாலையில் சிக்கிரத்திற்போய் சிறந்த கிருபாமூலையாகிய மா ணிக்கவாசகரைக்கண்டார்கள். அப்போது அளர்பதுமாசனத்தின்மேலிருந் துயோகம் நீங்கியிருப்பதைக்கண்டு சபாநாயகர் கனவிலேவந்து அனுக்கிரக ஞ்செய்தவைகளையெல்லாம் தில்லைமூவாயிரவர் அவருக்குச்சொன்னர்கள் அ ந்தத் திருவார்த்தையானது மாணிக்கவாசகர் செவிபினிடத்திலே சேர்ந்த மாத்திரத்திலே முன்னமே கடவுள்சொல்லியிருப்பதைநினைத்துவந்த தில்லை மூவாயிரவருடனே சிக்கிரம்போய் அழகிய சபாநாயகரைவணங்கித் திருவ ருள்பெற்றுபௌத்தர்களிருந்த மண்டபத்திற்குப்போய் அவர்கள் தீமையுள் ளழுகத்தைப்பார்த்தால் துன்பமுண்டாகுமென்று திரைபோட்டுக்கொண்டு ஆசனத்தி லெழுந்தருளியிருந்தார் நிலைபெற்ற வேதப்பிராமணர்கள்பௌரா ணிகர்-கலைஞானம்வல்லவர்கள்முதலிய பெரியோர்களுடனே சோழராஜாசிக் கிரத்தில்வந்து அழகியசபாநாயகரைத் தரிசனஞ்செய்துக்கொண்டு பிரகாசம் பொருந்திய ரத்தினமிட்டிழைத்த மண்டபத்திற்குவந்து கிருபைமிருந்தமா

ணிக்கவாசகர் திருவடிவணங்கி அவருக்குப்பக்கத்திலே பூரணச்சந்திரன்போல்இடப்பட்ட ஆசனத்திலிருந்தான் அப்போதுமாணிக்கவாசகர் மகிழ்ச்சியடைந்து புத்தனைப்பார்த்து திருட்டுவார்த்தை சொல்லப்பட்டவனேநீ வந்தகாரணத்தைச்சொல்லென்றுகேட்க அவ்வுரைகேட்ட புத்தனுனவன்நிலைபெற்ற எங்கள்தெய்வமல்லாமல் வேறேதெய்வமில்லையென்று இந்தவூரில்வந்து சொல்லி இங்கே எல்லாருங்காணப்பொன்னம்பலத்திலே எங்கள் புத்தரைவைக்கவிரும்பி நேற்றே வந்திருக்கிறேன் இதல்லாமல்யானினைத்ததுவேறுன்றுமில்லையென்றான் இப்படி அவன்சொன்னபோதுமாணிக்கவாசகர் புன்னகைகொண்டு முன்பிறப்பிலே தவமொன்றுமில்லாதவனே முயல்யானையாவதுண்டோ, நல்லது, அதுநிற்க, உன்னுடைய நல்ல பெரியதெய்வமும் ஆத்மாக்கள் அவனடியிற்சேருஞ்செய்தியும் சொல்லென்றுகேட்க அதற்குப் புத்தகுருவாணவன் கோபமடைந்து கண்ணில்தாதவனுக்குச் சூரியகிரணத்தினொளியை காட்டக்கூடுமோ அரிதாகிய எங்கள்புத்தனுடைய நல்லகீர்த்தியைச்சொல்லவேண்டுமாலுல் நல்லநாவானவைபல்லாயிரம்வேண்டும் எதுகடவுள்தருமம் விளங்குகின்ற நல்லபிடகாகமஞ்சொல்லி அன்பையுடையவனுப்பிரகாசிக்கின்ற அநேகயோனிகள்தோறும் பிறந்து ஆத்மகோடிகளுக்கு உறுதிசெய்து பொல்லாங்கைத்தருகின்ற கொலை-களவு-பொய்-கள்ளுண்ணல் என்னும் நான்குகுற்றங்களையும்நீக்கி மேன்மைசிறந்திருக்கின்ற அரசமரநீழலிலே எமதுகடவுள்சேர்ந்திருப்பான் பொருந்திய கருப்பத்திற்சேருகின்ற உருவம் வேதனை-குறிப்பு-பாவனை-விஞ்ஞானம் ஆகியபஞ்சகந்தங்களுங்கூடி ஒழிவில்லாத அநேகவறிவுண்டாய் நீங்குவதுபிறவித்துன்பமாம் அதுநீங்கக்கேடாயழிவது மோட்சமென்றான்.

அப்போதுமாணிக்கவாசகரும் சோழராஜாவினது களங்கமற்றமுகத்தைப்பார்த்துக் கிருபாநோக்கஞ்செய்து அறியாமையினுல் மயக்கங்கொண்டுபயித்தியவார்த்தைசொல்லுதல் இந்தப்புத்தனுக்கு இன்றுயாமென்சொல்வதென்றுசொல்லிபின்பு இதனைசொல்லுகின்றார். தருமமுண்டன்றுபுத்தனவன்பிடகநூல்சொன்னனென்றுப்பொருந்திய அறிவுதோன்று ஞானநேரத்தில்மறைந்துபோமென்றுய் சொல்லும்பொருளும் நீதேடிச்சொல்லுமுன்னே உணர்வுகேட்டால் அஞ்ஞானத்தைத்தருகின்ற உன்னுல்சொல்வது எப்படிசொல் ஆகையினுலே தருமசாஸ்திரமென்பது உனக்கில்லை ஆத்துமாக்களுக்காக அநேகயோனிகள்தோறும் உன்கடவுள்போய்பிறந்தானென்றுய் குற்றம்பொருந்திய ஒருவர்கொண்டமயக்கத்தைத்தீர்க்கவந்தவர்களும் அதிகமயக்கத்தைக்கொண்டால் அந்தமயக்கம்போகுமோ அன்றியும் எங்கள் கடவுள் கொல்லாநினையானென்றுசொன்னுப்முன்னே அநேகயோனிகள்தோறும் பூமியின்மேல் பிறக்குங்காலத்தில்வெல்லுகின்ற புலிகளாகவும், நரிகளாயும், பிறக்கும்போது கொடியபசிவந்தால் அரசமரநீழலிலிருக்கும் உன்னுடைய கடவுள் புல்லுந்தழையுந்தின்பாரேபொய்யாகிய உன்னுகமத்தில் ஐந்துகந்தங்களுடனேகூடத்தேதகமும் அழியுமென்றுசொன்னுப் அப்போதுன்கடவுளுக்கு உருவெங்கே அநேகயோனிகளில் ஆத்மாக்களுக்கு அருள்செய்யும்பொருட்டு ஒருவடிவங்கொண்டுவந்தானென்பதென்ன புத்தியில்லாதவனே காரணமாகி

யஆத்மாவோடே கூடுகின்றகாரிய'மாகியவடிவில்லாதிருந்தாய் உன்னுடைய சிறப்புப்பெற்ற தெய்வத்துக்கு வடிவில்லை நிறைந்த அறிவில்லாதவனேபஞ்ச கந்தழுங்கெடுவதுமுத்தியென்று சொல்லவும் பேரறிவில்லாத உன்பிடகாகமத்தை யார்சொன்னர் இருபத்தொருவரென் றெண்ணபபட்ட உன்னுடைய புத்தர்களெல்லாம்பிறப்பது சிறப்புப்பெற்ற தாயார்வயிற்லற பீறியென்று சொன்னுய் அன்புடனேசுமந்துபெற்றதாய்மாருடைய உயிர் நாசத்தையடை யகுற்றஞ்செய்து அரியநரகத்திலேவீழ்வார்களோதெய்வமாவார்கள் மறைப் பினையுடைய நான்குபூதத்தினுடைய கலப்பிலே பேதமேபல்லாமல் தோன் றியவடிவுக்கு உயிரென்று வேறில்லையென்பாய் நீசொல்லிய அபத்தசாஸ்திர த்தில் இராத்திரியிலே நித்திரைசெய்யும்போது உன்முகத்திலே எறிப்போ கும்சர்ப்பத்தை இத்தப் பூதங்களறிந்தனவோ அறிவில்லாதவனே உருவம் உயிரும் ஒன்றுய்க்கூடும் அறிவு உனக்கில்லையென்றுய் இத்தவுருவம் நீங்கின காலத்தில் உயிரும் சீக்கிரத்தில் நீங்கிபபோகும் உருவமும் உயிரும் வேறுகு மென்று உன்வாயாற்சொல்வாய் ஆகாசமில்லை அதனிடத்தே சத்தமுமில்லை அந்த ஆகாசம் இவ்வழக்காமென்று சொன்னுய் உன்னுகமத்தில் பிருதுவி அப்புதேயுவாயுநான்குபூதமும் இருபபதற்குஇடம் ஆகாசமல்லவோநீசொ ல்லப்பட்டசொல்லிலேணை ஆகாசத்திலுண்டாகிய தென்று சொல்லுவாய் இடமிருந்த திசையென்றுசொல்வது இவ்வழக்கென்று சொல்லுவாய் இப்ப டிச்சொல்லுகின்ற நீயே நெடியவடதிசையிலே அரசமாமிருக்கின்றதென்று வணக்கஞ்செய்வாய் பூமியிலே அறிவில்லாதவர்களும்பயித்தியங்கொண்டவ ர்களும் பொய்வார்த்தைபேசுகிறவர்களும் இருக்கின்றசபையிலே உன்சொல் லெல்லாம் பொருந்தும் மரங்கள் உயிரல்லவென்றுசொல்வாய் நிலைபெற்றபஞ் சபூதத்திலுண்டாகிய தேகத்தையுடையவர்போலநல்லநீரை உன்கையினுலே இலைகள்தளிர்த்துவளர்ந்திருக்கும் அஃதில்லாவிட்டால் சருகாகும் ஆகையி னுலே சனனபேதத்தில் கன்மங்களோடுசிப்பிக்க எமதுகடவுள் உயிர்களுக்கு அமைத்த வடிவாகுமென்று சொல்வாய் ஒருவுயிரைக்கொல்வது பழுது பூமி யிலேதானே செத்த மாமிசத்தைதின்பது நன்றென்றுசொல்வாய் உன்போய் யாகமத்திலே தின்னென்று உனக்கு நல்லவுயிரைக்கொன்று மாமிசத்தை உ ண்பித்து உன்பசியைத்தணிப்பார்க்குப் பாபமடைவது உனக்கு நல்லதோர் காரணமிருக்க எப்போதும் காரியங்கெடுவதே மோட்சமென்று வேதங்கள் பரவுகின்ற எம்பெருமானுகிய பரமசிவனுடைய ஆகமஞ் சொல்லப்பட்டவர்க ள்சொல்லுவார்கள் போரால்வருந்தும் உயிருங்கூடக்கெடுவது முத்தியென்கி ற பெரியவருத்தங்கொண்டநீயேபிறிவையறியாமல்சொல்வாய்பஞ்சகந்தமும் அழிந்தால் முத்திபெற்றவர் யாவரென்றுவினவ அழிந்த அஞ்சிலும் உண்டா ன அறிவென்றுசொன்னுல் அப்போதுபஞ்சகந்தமும் அழியவுமில்லை மோட் சமுமில்லையாமென்றுமாணிக்கவாசகர்சொல்ல அதைக்கேட்டு மிகுந்த கீர்த் தியானது மங்கியிருந்த புத்தனும்கோபித்து உங்களுக்குத்தெய்வமில்லைமோ ட்சமுமில்லையென்றுசொன்னீர் உம்முடைய தெய்வமாவதெது நீங்களடையு மோட்சமெது என்றுகேட்க சிவஞானமறிந்த சைவராகிய மாணிக்கவாசகர்

அழகிய கல்லாலவிருட்சத்தினீழலிலிருந்து தருமஞ்சொல்லுகின்றவடிவைக் கண்டு அநேகம்பேர் தெரிசிக்கசெய்வான் விபூதிதரித்ததிருமேனியையுடை யவன் உமாதேவியை ஒருபாகத்திலுடையவன் கிருபையுடையவனென இப்ப டிப்பட்ட எங்கள்கடவுளதுபெருமைசொல்வதற்கு எளிதோதில்லைமாநகரில் அழகிய பொன்னம்பலத்திலிருக்கிற சந்திரசேயணிந்த எமதுகடவுளானவ ர்சொல்லுதற்கு ஒருமுடிவுண்டானவரோ என்றுசொன்னர் அப்படிசொல் லுமளவில் பலதேச்சுகள்பேச முயலவேண்டுவதில்லைநில்லும்நான்கேட்டதை ச்சொல்லுமென்று நீசனுகிய புத்தன்முன்னே கல்லாலின்கீழிருந்து தருமஞ் சொன்னன் எங்களுடையகடவுளென்று என்னைதிரேசொன்னீர்கையிலே நிலைபெற்ற செபமாலையைக்கொண்டிருப்பது வேறுருநினைதற்காரியநல்லதை ய்வமுண்டென்று நினைத்தோ வளம்பொருந்திய உலகத்தார்வணங்கும் படிக் குச் சிதம்பரத்திலே நடனஞ்செய்வான்எமதுகடவுளென்றுசொன்னீர் நினை ந்துபோகப்பட்ட நல்லறிவையுடைய சிலர்பார்க்க ஆடுவதல்லது தமதிச்சை யிலே ஆடுவாருமுண்டோவென்றான் உலகமெல்லாம்பிழைக்க அழகியபொ ன்னம்பலத்திலேநிருத்தஞ்செய்யும் எமதுகடவுள் திருமேனியிலேவிபூதிதரி த்திருக்கிறனென்று மேன்மைகொண்டு சொன்னீர் சிவந்த பிரகாசம்பொரு ந்திய திருமேனியிலே விபூதிபரிசுத்தமானதென்றுஉமதுகடவுள்தரித்தாசெ ன்றான் உமாதேவியை ஒருபாகத்திலேயுடையவனென்று பெருமைகொண்டு சொன்னீர் பாதிதேகம் பெண்வடிவாயிருப்பது பூமியிலே உண்டோ அபப டிபாதிதேகம் பெண்ணுருவாயுமதுகடவுளிருந்தால் நீர் துறவிலிருக்குந்தவ மென்ன என்றான்.

இப்படியாக அந்தபுத்தகுருசொன்னதற்குமாணிக்கவாசகர் இகழ்ந்து நகைசெய்துஎமதுகடவுளுடைய அடியார்கள்பெரியவாழ்வைப் பெறவந்தவர் கள் நல்ல உபதேசமாகிய இதனைநல்லதவமொன்றில்லாத உன்னைதிரேசொ ல்வதல்லவென்றுசொல்லி உயர்ந்த செபமாலிகையைக்கையிலே வைத்திருப் பது உலகத்தாரெல்லாம் இங்கேயுயர்ந்த தவங்கள் செய்தற்கென்றுநினையாய் தாங்கப்பெற்ற ஆயுதநிதாழில்களைச் சார்ந்தனே பழக்குகின்ற பக்குவமு ள்ள ஆசிரியருடைய கையிலேகொள்ளுமாயுதம்போலாகும் தவப்பயனைச் சம்பாதியாதவர்களைப்போல ஊன்கண்ணையுடையவராகிய உலகத்தார்கானை எதிரே கூத்தாடுவானென்றுய் விறகிலேயிருக்கும் தீயைப்போலத் தேகத்தி லேகலந்து உயிரையெல்லாம் ஆட்டுவிக்கும் நட்டுவன் எமதுகடவுளென்று எ ண்ணிக்கொள்வாய் உம்முடையகடவுள் விபூதியையணிந்தது என்னவென்று கேட்டாய் அது ஆத்மாக்களுக்குத் துன்பத்தைத் தணிப்பதென்றெண்ணிக் கொள்வாய் அதுபிறந்திருக்கின்ற தம்முடையபிள்ளைகள் அடைந்தநோயை நீக்கும்படி தாய்மார் சாப்பிட்டமருந்தாகும் புல்லறிவைக்கொண்டு அநேகம் வீண்வார்த்தைகள் பேசுகின்ற புத்தனே நிற்பாய் அவனையல்லாமல் ஒருவர் நீற்றைத்தரிப்பதுண்டோ நல்லதிருநீற்றிலுள்ள சுகம் வேதஞ்சொல்லுவதல் லாமல் மற்றொருவாற்சொல்லுதற்கெளிதோ ஒருபாகத்திலேஉமாதேவியை வைப்பது குற்றமென்றுசொன்னப் உலகத்தாருக்குப்போகத்தைத்தாவேண் டுமென்று நினைத்துமேகத்தையொத்த கூந்தலையுடைய பார்வதியையொருபா

கங்கொண்டிருந்தார் அல்லாமலும் உயிர்சட்குபோகத்தைக் கொடுக்கும்பொ
ருட்டு யோகவுருவங்கொண்டிருந்தார் குருடர்கையிலிருக்குந் தடியையல்லா
மல் வேறொன்று மறியாதவிதம்போல் இந்தபசுபாசமாத்திரங் கற்றுயல்லா
மல் வேறொன்றுமறியமாட்டாய்ப் வலிமைபொருந்திய அழகிய இடபவாகனத்
தையுடைய பரமசிவன் பூவிலிருக்கும்மணம்போல் ஆத்மாக்களிடத்தில் கலந்
து நின்ற நிலைமையைப்பார்த்தாயில்லை கண்ணில்லாத ஆதிபாகியும் சிவயோ
கியாகியும் மிகுந்த போகியாகியும் அநுபியாகியும் சோதியாகியும் வெகுரூபி
யாகியும் இன்பக்கடலாகியும் இருக்கின்றகடவுள் துன்பமில்லாத நீதிநிறைந்த
கனகசபையிலேநின்ற நிலையையல்லாமல் எதுசிரசு எதுபாதம் யார் அவரை
யறிவார்கள் என்றுசொல்லி அளவற்றகலைகளில்வல்லவராகிய மாணிக்கவாச
கர் மைந்தர்கள் மங்கையர்கள் ஆகிய இவர்கள்வாக்கிலிருக்கின்ற சரஸ்வதி
நீயே பொய்வார்த்தை பேசுவதென்ன காரணமென்று ஆதியாகிய கலைவாணி
யைக்கோபித்து நான்குவேதங்களையுஞ்சொல்லிய நீதானே இந்தப்பொய்யை
ச்சொல்லவேண்டியதென்ன தக்கன்யாகத்தில் உன் மூக்கையறுத்ததை மறந்
து விடலாமா திரிநேத்திரத்தையுடைய பரமசிவனது திருவருளில்லையென்று
சொல்லும் மூடருடைய நாவைவிட்டு நீ சிவனுடைய ஆக்கினைப்படியே போ
வென்றுசொல்ல சரஸ்வதியும் பயந்து வஞ்சகருடைய நாவினின்றும் நீங்கின
பின்பு அவர்களெல்லாம விஷந் சாப்பிட்டவர்களைபோல் ஒடுங்கி நடுங்கி
ஊமைகளாஞர்கள் ஈழதேசத்துராஜன் அதுகண்டு மனம்நொந்து சிவஞான
நூல்களிற் குறைவில்லாத மாணிக்கவாசகர் திருவடிசேவணங்கிநின்று சுவா
மீ, பேசத்தக்கவர் ஊமையாயிருர்கள் பேச்சில்லாத ஊமையாகிய என்புத்
திரிக்குஊமைநீங்கி நல்லவார்த்தைபேசவந்தால் நாலுமக்குநல்லஅடியனுவே
னென்றுசொல்ல அதைக்கேட்ட மாணிக்கவாசகர் சிகரத்தி லழைத்துக்
கொண்டுவாவென்றுசொல்ல அவளும் உண்மைபொருந்திய அந்தசபைக்கு
வந்தாள்.

அந்தச்சபையிலேவந்துநின்று கன்னிகைபை மாணிக்கவாசகர்பார்த்
துக்கிருபாகோக்கஞ்செய்துபின்பு அழைத்து எதிரிலிருக்கவைத்து உள்ளம்
நடுங்கி அங்கிருந்த புத்தன்சொல்லிய தர்க்கத்துக்கெல்லாம் குளிர்ந்த வாச
னைபொருந்திய கூந்தலையுடையபெண்ணை நீயுத்தரஞ் சொல்வாயாக வென்
ரூர் பத்தியைநன்ருயறியாத புத்தரானவர்சொல்லிய தர்க்க வார்த்தைக்கெ
ல்லாம் படித்தறிந்தவர்கள்போல் இந்தப்பெண்ணனவள் உத்தரஞ்சொன்னு
ள் அதைமாணிக்கவாசகர். திருச்சிற்றம்பலம்.

பூசுவதும்வெண்ணீறுபூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான்மறைபோலுங்காணீடீ
பூசுவதும்பேசுவதும்பூண்பதுவுங்கண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்குமியல்பாணன் * சாழலோ.

அருந்தவருக்காலின்கீழறமுதலாநான்கினையும்
மிருந்தவருக்கருளுமதுவெனக்கறியவிபம்பேடீ
யருந்தவருக்கறமுதணின்றருளிச்சிப்திலனேற்
றிருந்தவருக்குலதியற்கைதரியாகாண்சாழலோ.

திருச்சிற்றம்பலம்.

---

* சாயுல் - ஓ - சூழல் - ஒ - விந்து - நாதம் - ஆக இயல்பாணனென்பதைமகளிர் விளையாட்டென்ப.

எனச் சிவனுடையகாருணியத்தை

விளையாட்டாக மகிழ்ச்சியினலேஅந்தப்பொருளையெடுத்துப் பாடலாகச்சொன்னர் அதைக்கண்ட ஈழராஜனும்அஞ்செழுத்துஞ்சொல்லி விபூதிதரித்தபின்பு தாழநின்று அடிமைத்திறத்திலேதவமில்லாத அடியனுயினஅதைக்கண்ட சோழராஜனும் தில்லைமூவாயிரவரும் திருச்சிற்றம்பலம் வாழ்கவென்று துதித்துஅழகிய மாணிக்கவாசகரை எத்திஞர்கள் தக்கதாகிய சிறப்புள்ள ஈழராஜனும் மாணிக்கவாசகரெதிரேநின்று ருத்திராட்சமணிந்துவிபூதிதரித்து அடிமைத்திறமுடையவனுகவே துக்கத்தைத்தருகின்றசிவந்த சீவரவஸ்திரத்தால்மூடும் உடம்பையுடைய புத்தர்மிருந்த ஊமைத்தன்மை தங்களுக்கு நீங்கவேண்டுமென்றுவணங்கினர்கள். சோழராஜனும்தில்லைமூவாயிரவரும்மற்றவரும்வணங்கி எமதுகடவுளே இந்தப்படி யருள்செய்வாயென்று சொல்லமாணிக்கவாசகர்மகிழ்ந்து கிருபாநோக்கஞ்செய்ய உடனே அவர்களெல்லாம் ஊமைத்தன்மைநீங்கி நமஸ்கரித்து களங்கரகிதமான மனமுள்ளபெரியவரே முன்பிறப்பிலே நிலைபெற்ற தீவினையைச்செய்தபடியால் குற்றமற்ற விபூதிதரித்து நல்ல ஸ்ரீபஞ்சாட்சரத்தை உச்சரியாமலிருந்தோம் பூசுவதாகிய திருநீறும்தரிக்கப்பட்ட உருத்திராட்சமும் காவிவஸ்திரமும் ஆகிய இவைகளெல்லாங்கொடுப்பீர் இந்தச்சிவப்புவஸ்திரத்தைச்சுடுவீர் என்று வணங்கினர்கள்.

அழுக்காறில்லாதமனமுள்ளமாணிக்கவாசகர் புன்சிரிப்புடையமுகத்தினராய்ப் பூர்வஜன்மத்திலிவர்கள் தவஞ்செய்தவர்களென்று மனதிலேநினைத்துக்கெடுதலில்லாத விபூதிதரித்துப் பிரகாசங்கொண்ட ருத்திராட்சமும் அணிவித்து அவர்களுடைய சீவரமாகிய வஸ்திரங்களைக் காந்தியையுடைய நெருப்புக்கு இரையாக்கினர்பின்பு இழிவானவேடங்கள் நீங்கி விபூதியைத்தரித்த புத்தர்களும் இராஜாவும் பழமையாயுள்ள திருவாதவூராகிய மாணிக்கவாசகருடைய இரண்டுபாதங்களையும் வணங்கி நன்மையாகிய அழகியதிருச்சிற்றம்பலத்தை வணங்கி நயப்புடனே நெஞ்சிலேயிருக்கும் வஞ்சகம் நீங்கி ஸ்ரீசிதம்பரமே தங்களுக்குநிலைபெற்ற பதியாகவிருந்தார்கள் மற்றவர்கள் தங்கள் தங்கள் பதிக்குப்போய்ச் சேர்ந்தார்கள் பின்பு மாணிக்கவாசகசுவாமிகள் திருப்புலீச்சரத்தையடைந்து.

திருச்சிற்றம்பலம்.

* பூவார்சென்னிமன்னனெம்புயங்கப்பெருமான்சிறியோமை
யோவாதுள்ளங்கலந்துணர்வாயுருக்கும்வெள்ளைக்கருணையினு
லாவாவென்னப்பட்டன்பாயாட்பட்டீர்வந்தாருபபடுமின்
போவோங்காலம்வந்ததுகாண்பொய்விட்டிடையான்கழல்புகவே.

பூசல்வார்தாழுவார்புகழ்வாராயின்றேவந்தாளாகாதீர்
மருள்வீர்பின்னைமதிப்பாரார்மதியுட்கலங்கிமயங்குவீர்
தெருள்வீராகிலிதுசெய்மின்சிவலோகத்தேதான்றிருப்புயங்க
னருளார்பெறுவாரகலிடத்தேதயங்தாவந்தாவந்தாவே.

திருச்சிற்றம்பலம்.

---

* யாத்திரை செய்கை.

என அனுபவாதீதமுரைத்து

திருச்சிற்றம்பலம்.

ஞானவாளேந்துமைபர்கதப்பறையறைமின்
மானமாவேறுடையர்மதிவெண்குடைகவிமி
ஞானநீற்றுக்கவசமடையப்புகுமின்கள்
வானவூர்கொள்வீரகமாயப்படைவாராமே.
தொண்டர்காடுகிசெல்லீர்பத்தர்காள்சூழப்போகீ
ரொண்டிறல்யோகிகளேபோரணியுந்தீர்க
டிண்டிறற்சித்தர்களேகடைக்கூடைசென்மின்க
ளண்டர்கூடாள்வீரகமல்லற் * படைவாராமே.

திருச்சிற்றம்பலம்.

எனப் பிரபஞ்சப்போர்கூறி

திருச்சிற்றம்பலம்.

கண்களிரண்டுமவன்கழல்கண்டுகளிப்பனவாகாதே
காரிகையார்கடமவாழ்வில்லென்வாழ்வுகடைப்படுமாகாதே
மண்களில்வந்துபிறந்திடுமாறுமறந்திடுமாகாதே
மாலறியாமலர்பாதமிரண்டும்வணங்குதுமாகாதே
பண்களிகூர்தருபாடலொடாடல்பயின்றிடுமாகாதே
பாண்டிநன்னுநடையான் † படையாட்சிகள்பாடுதுமாகாதே
விண்களிகூர்வீதார்வெதகம்வந்துவெளிப்படுமாகாதே
மீன்வலீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே.

சங்குதிரண்டுமுரன்றெழுமோசைதழைப்பனவாகாதே
சாதிவிடாதகுணங்கணம்மோடுசலித்திடுமாகாதே
யங்கிதுநன்றிதுநன்றெனுமாயைபடங்கிடுமாகாதே
யாசையிலாமடியாரடியோமெனுமத்தனையாகாதே
செங்கபிலன்கண்மடந்தையர்சிந்தைதிளைப்பனவாகாதே
சீரடியார்கள்சிவானுபவங்கடைரிந்திடுமாகாதே
பெங்குநிறைந்தமுதூறுபரஞ்சுடரெய்துவதாகாதே
யீறறியாமறையோனெனையாளவழுந்தருளப்பெறிலே.

திருச்சிற்றம்பலம்.

எனச் சிவஞானபோதிபொழிந்து

திருச்சிற்றம்பலம்.

முத்திநெறிபறியாத மூர்க்கரொடுமுபல்வேஷனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளிபவா ரூர்பெறுவா () ரச்சோவே.

---

* படையெழுச்சி-வாள்பறை குடைமுதலிய படைகளின் எழுகை.

† படையாட்சி-மீன்வலைவீசிய கானவன்வந்து வெளிப்பட்டானுரை.

() அச்சோ-ஐயோவென்னும் அதிசயக்குறிப்பு.

செம்மைநலமறியாத சிதடனொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்து முதலாயமுதல்வன்ரு
ணம்மையுமோர்பொருளாக்கி நாய்சிவிகையேற்றுவித்த
வம்மைமெனக்கருளியவா ரூர்பெறுவாரச்சோவே. திருச்சிற்றம்பலம்.

என அனுபவவழியறியாமையாய் அங்குவசித்திருந்தார்

அப்படிமாணிக்கவாசகர் அந்த ஸ்ரீ சிதம்பரத்தில் வசிக்கின்றநாளி லே பொற்சபையில் திருநடனஞ்செய்கின்ற சபாபதியானவர் தமது திருவை யிலுல் பிராமணவுருவங்கொண்டு பரிசுத்தமாகிய முப்புரிநூலணிந்தமார்பும் விளங்குகின்றபுத்தகமும்தரிய சிவந்ததிருவடிகளும்நோவ எழுந்தருளி எதி ராகநின்ரூர் இப்படி எதிரேவந்துநின்ற வேதப்பிராமணரைப்பார்த்து இன் பம்பொருந்த மாணிக்கவாசகர் இருமென்றுசொல்ல அவரிதைபின்பு பெரு மையையுடைய வேதத்தில்மிகுந்தவரே நீரிரங்கேயிருக்கின்றவர்சொல்லுமெ ன்றுகேட்க, ஜீலபெற்றபெரிய வளத்தையுடைய பாண்டிதேசத்திலே நாமி ருக்கிறதென்ரூர் பாண்டியதேசமென்றுசொன்னபின்பு அன்புடனே உபசரி த்து இங்கேநீர்வருவதற்குக் காரணஞ்சொல்லுமென்ன கடவுளது ஆக்கினை யாகிய காரியம் உம்மைக்காணுவதேயென்றுசொல்லி பூமிபைப்பிளந்தும் ஆ காயத்திற்பறந்தும் முன்னே மகாவிஷ்ணுவும் பிரமதேவனும்தேடிக் காணு தற்கரிய கடவுளும் சிற்சபையிலே நிருத்தஞ்செய்பவருமாகிய பரமசிவனைக் குதிரையேறச்செய்த உம்முடைய பெருமையினுலே பாண்டிநாடெல்லாம் வாழ்ந்தது அழகியதிருப்பெருந்துறையி லெழுந்தருளியிருக்கின்ற கடவுளு டைய திருவடியைவணங்கித் துன்பமொன்றுமில்லாமல் தடாகஞ்சூழ்ந்ததி ருக்கழுக்குன்றத்துக்குப்போய் பின்பு ஸ்ரீசிதம்பரத்துக்குவந்து புத்தரைவா தில்வென்றீர் என்பதுகேள்விப்பட்டு யாவரும்மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஆதியாகியும் சிற்சபையிலே திருநடனஞ்செய்கின்ற ஐயனுகியும் இரு க்கின்றகடவுளைப் பத்தியினுலே நீர்சொல்லிய தமிழ்ப்பாடல்முழுவதும் ஓது தற்குநினைத்துத் துன்பம் நீங்க இங்கேவந்தேன் அது எழுதல்வேண்டும்பிரா மணரில் உத்தமரே தெளிவாக இன்றுசொல்லவேண்டுமென்ரூர். அதைக்கே ட்டு மனதிலேமிகுந்த அன்பையுடையவராய் ஜடாமுடியையுடைய பரமசிவ னை எண்ணுதற்கரிய தமிழ்ப்பாடலார் சொல்லிய மாணிக்கவாசகர் அப்போ து அகமலர்ந்து உண்மைஞானத்தைத்தருகின்ற திருவாசகத்தை மகிழ்ச்சியு டனே சொல்லியருளினர். அவர்சொல்லிய பாடலெல்லாம்சிற்சபையிலாடுஞ் சபாபதியானவர் தம்முடைய திருக்காத்தில் ஏட்டைப் பிடித்துக்கொண்டு தெளிவாக எழுதியபின்பு மிகுந்த அருளையுடைய உமாதேவிபாகராகிய சபா நாயகரைப் பாட்டுடைத்தலைவராகவுடைய ஒருகோவைபாடல் வேண்டுமென் ரூர் நிலைபெற்றதவத்திலே மிகுந்த மாணிக்கவாசகர் அதற்குமனமகிழ்ந்து.

திருச்சிற்றம்பலம்.

திருவளர்தாமரைசீர்வளர்காவிகலீசர்தில்லைக்
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர்மாலையொர்வல்லியிணைல்கியனதடைவாந்
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றிளிர்கின்றதே.

* * * * * *

காரணிகற்பகங்கற்றவர்நற்றுணைபாணிரொக்கல்
சீரணிசிந்தாமணிதில்லைச்சிவனடிக்குத்
தாரணிகான்றைபன்றக்கோர்தஞ்சங்கநிதிவிதிசே
ரூரணியுற்றவர்க்கூறன்மற்றியாவர்க்குமுதியமே.

திருச்சிற்றம்பலம்

என்று திருகதகோவையாரைப்பாடியருள

பொன்போலும் பிரகாசிக்கின்ற சடையையுடையவர் எதிரேயிருந்து திருக்கோவையாரெழுதி முடிந்தபின்பு தம்முடைய புத்தகத்தைக் கட்டிக் கொண்டு மின்னலைப்போல் மறைந்தார் அதுகண்டு மாணிக்கவாசகர் வருந்தி கதொண்டு எழுந்தார் எங்கும் ஓடித்தேடிப்பார்த்தார் இஃதென்ன ஆச்சரியமென்று மனமகிழ்ந்தார் ஸ்ரீசிதம்பரத்திலே நிருத்தஞ்செய்கின்ற சபாபதியென்றறிந்து பின்பு கண்ணிலே ஆனந்தபாஷ்பம் பொழிந்தார் எங்கேபோயிறையென்று பூமியிலேவிழுந்தார் பரமானந்தசமுத்திரத்திலே அழுந்தினர்.

உயர்ந்த தமிழினிடத்திலே அன்புமிகுந்து சபாநாயகர் புத்தகத்தை ன்டுத்துக்கொண்டு தமது கனகசபைக்கு எழுந்தருளித் தேவர்களையும் மகாவிஷ்ணுவையும் பிரமதேவனையும்பார்த்து நமக்கடிமைசெய்துநயப்பிளைப்பெற்ற மாணிக்கவாசகர்சொன்ன இந்த நல்லபாடல்களைக்கேளுங்களென்று அவர்களுக்கனுக்கிரகஞ்செய்து மெய்ம்மைபொருந்திய தவத்தையுடைய மாணிக்கவாசகர் சொல்ல எழுதப்பட்ட இந்தத் திருவாசகம் கனகசபையிலே நிருத்தஞ்செய்கின்ற அழகிய திருச்சிற்றம்பலமுடையார் திருவெழுத்தாமென்று மோட்சத்தைத்தருகின்ற திருக்கோவையார் முடிந்தவிடத்திலே எழுதிப்பின்பு அழகிய மலையொத்த திருக்கையிலுலே மைக்காப்புஞ்செய்து வெள்ளிய மூன்றும்பிறையைத்தரித்த ஜடாபாரத்தையுடைய சபாநாயகர் உலகத்துக்கெல்லாம் சிநேகமுடைய மாணிக்கவாசகரது நல்ல தவத்தையெல்லார்க்கும் அறிவிக்கநினைத்து எண்ணப்பெற்ற முனிவர்கள் தேவர்கள்வணங்குஞ் சபைவாசற்படியிலே திருவாசகமாகிய திருமுறையைவைத்தார். அப்படிவைத்தபின்பு பூசைசெய்யும் ஒரு பிராமணன் பார்த்து இப்புத்தகம் இங்கேயிருக்கும் புதுமை தெய்வீகமாமென்று மனமுருகி நின்று தில்லைமாநகரத்தார்க்கு இதனைச்சொல்லவேண்டுமென்று சபையைவிட்டுப்போய் பழமையாகிய ஸ்ரீசிதம்பரத்திலுள்ளவர்களிடத்து ஒருபுத்தகம் சபையின்படியிலே இருக்கின்றதென்றுசொல்ல பின்பு இது அதிசயமாமென்று ஓடிவந்து படியின்மேல் சபாநாயகர்வைத்த புத்தகத்தை எல்லாருந் தங்களுக்குள்ளே பார்த்து எமது கடவுளிருக்கின்ற சபையிலே தேவர்களும் அறிதற்குக் கூடாத தெய்வீகமிதுவென்று நினைத்துப் பெருமைபொருந்திய அன்பினுலே கடவுள்சொல்லிய சிவாகமமோ அல்லது தமிழ்நூலோவென்று பார்ப்பது தகுதியாமென்றார்கள்.

அருளும்அன்புங்நிறைந்த தில்லைமூவாயிரவர்கள் எல்லாரும்புகழ்ந்து சொல்லுகின்ற வாக்கில்வல்லவராகிய ஒருவர்போய் மலைக்கொண்டு அருச்

சித்து நமஸ்கரித்துப்பின்பு பரமசிவன்வைத்த புத்தகத்தை அவிழ்த்து ஏட்டை நீக்கிப்படித்தார் நீதிபைக்கொண்ட அகவல்ஈான்கும் திருச்சதகம் முதலாகச் சிறப்புப்பொருந்திய தமிழ்ப்பாடல் அறுநூறும் விரித்துச்சொல்லப்பட்ட அகப்பொருட்கோவை ஈானூறுபாடலும் விளங்கபடித்தார்கள். பின்பு அதுமுடிந்தவிடத்திலே இது மாணிக்கவாசகர்சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் கையெழுத்தென்று படித்தார்கன் இந்தத்திருமுறையைப் படிக்கக்கேட்டவர்களெல்லாம மெய்ப்புளகமும் குறுவேர்வுகொள்ளுதலும் ஆனந்தபாஷ்பம் கசிந்துருகுமனமும் கொண்டவராய் உண்மையாகிய தவத்தையுடைய மாணிக்கவாசகர்சொல்லிய இந்தத்தமிழல்லாமல் மோக்ஷவழிக்குச்சிவநூல் வேறுண்டோவென்று சொல்லி இதன்பொருளாகிய தேனே இன்றறிவோமென்று நினைத்துச் சபையைவிட்டுத் தில்லைமூவாயிரவரும் மாணிக்கவாசகர் முன்னேபோய் அவரெதிரே திருமுறையைவைத்துத் தேவர்பெருமானுகிய கடவுள் இன்றுசெய்தகாரியம் இதுவென்று சொன்னார்கள் மாணிக்கவாசகர் அதுகண்டு எல்லாரும் அற்புமாகிய என்பாடலே மனமகிழ்ந்துகொண்டருளப் பூமியிலே அன்றுசெய்த என்தவத்தை அறியமாட்டேன் என்று புலம்பினர் மாணிக்கவாசகர் இங்கே இப்படி புலம்பியழுத பின்பு ஸ்ரீசிதம்பரத்திலிருக்கின்ற அளவற்றஅன்பையுடையவர்கள் இதத்துடனே அஞ்சலியஸ்தாராய்ப் பண்ணையுடைய ஞானப்பாடலைக்கொள்ளும்படி உம்மிடத்திலே கடவுள்வந்து செய்தகாரியமென்ன சொல்லுமென்று கேட்டார்கள் துன்பமென்னும் பிறப்பில்லாதவராகியமாணிக்கவாசகர்செய்த செய்கையெல்லாஞ் சொன்னபின்பு தில்லைமூவாயிரவர் வணங்கி மனமகிழ்ச்சிகொண்டு எமது கடவுளைச்சொல்லிய இத்தமிழ்ப் பிரபந்தத்திற்கு அருமையாகிய நல்லபொருள் சொல்லவேண்டுமென்று கேட்க, மாணிக்கவாசகர் சிவஞானநிறைந்த மனத்துடனே களிப்பையடைந்து அழகியகனகசபையிதிலேபோய் இதற்குப்பொருள்சொல்வேனென்றுபோக அவர்முன்னே போனவர்கள் அன்புடனே அவர்பின்னேபோனர்கள் தில்லைமூவாயிரம் அன்புடனே புடைசூழ்ந்துவர மாணிக்கவாசகர் கனகசபையையடைந்து பொருந்திய இத்தமிழ் பிரபந்தத்திற்குப்பொருள் இவர்தாமென்று சபாநாயகரைக் காட்டிச் சபையிலே தில்லைமூவாயிரவாகள் காணச் ரீக்ரத்திற்போய் மறைந்தருளினர் அதைக்கண்ட தில்லைமாநகரிலுள்ளார் சபாபதியை மாணிக்கவாசகர் அடைந்த விதத்தைக்கண்டு தேகபுளகமடைந்து நடுக்கமுற்றுத் துதித்து மனமுருகிக்கண்ணீர் பொழிந்து திருமேனியெல்லாம் வேர்த்தார்கள் மனமகிழ்ந்தார்கள் சிவந்தகைகளைச் சிரசின்மேல் கூபபிக்கொண்டார்கள் பூதங்களெல்லா நிருத்தஞ்செய்தன கணநாதர்கள் புகழ்ந்தனர் தும்புருநாரதர் இசைபாடினர்கள் வேதங்களும் அந்தரதுந்துமிகளும் ஆகாசத்தில் முழங்கி எழுந்தருளின முனிவருமம இநதிரரும் பஞ்சகறபகத்தருவினுடைய மலரைத்தூவி வணங்கினர்கள்.

மண்சுமந்தபடலம்

முற்றிற்று.

உ

சிவமயம்

அறுபத்திரண்டாவது,

பாண்டியன்சுரந்தீர்த்தபடலம்.

அறுசீராடியாசிரியவிருத்தம்.

வானலமுதமதிமுடியேன்மதுரைப்பெருமான்மண்சுமந்து
தேனலமுதவாசகரைக்கதியில்விடுத்ததிறமிதுமேற்
பானன்மணிவாய்க்கவுரியபனவிடுத்துச்சமணர்படிற்றிருமுகுங்
கூனல்வழுதிசுரந்தணித்தாட்கொண்டகொள்கைகூறுவாம்.

இதன்பொருள்.

உயர்வாகியஅமுதகிரணங்களையுடைய சந்திரனைமுடியின்மீதுதரித்தருளிய மதுரை நாயகராகிய சோமசுந்தரக்கடவுள் தேனமுதம்போலும் (தமிழ்வேதமாகிய திருவாசகத்தை அருளிச்செய்ய வல்லவராகிய) மாணிக்கவாசக சுவாமிகளைச் சிதாகாசத்தி லிரண்டறக்கலக்கச் செய்தருளிய திருவிளையாடலிதுவாகும் இனி அச்சோமசுந்தரக்கடவுள் (உமாதேவியாரால் பொற்கிண்ணத்தில் கறந்தூட்டப்பட்ட சிவஞானம்) பாலுண்டருளிய அழகிய திருவாயினையுடைய கவுணியர்குலத்தலைவராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையாரைவிடுத்துச் சமணர்களுடைய பொய்ச்சமயத்தையே விரதமாகக் கொண்டொழுகிய கூன்பாண்டியனுடைய சுரநோயைத்தீர்த்து அப்பாண்டியனை யடிமைகொண்டருளிய திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

புஜபலபராக்கிரமனை சகநாதபாண்டியன் மகன்வீரவாகு அவன்மகன் விக்கிரமவாகு அவன்மகன் பராக்கிரமவாகு அவன்மகன் சுந்தரபாண்டியன் அவன்மகன் வாகுவலபாண்டியன் அவன்மகன் குங்குமபாண்டியன் அவன்மகன் கருப்பூரபாண்டியன் அவன்மகன் நாருணியபாண்டியன் அவன்மகன் புருஷோத்தமபாண்டியன் அவன்மகன் சத்துருசாதனபாண்டியன் அவன்மகன் கூன்பாண்டியன் இந்தப்பாண்டியன் புஜபலத்தாலுங்கீர்த்தியாலு மிகுந்தவன், ஆகையாலே தனதுதோள்வலியிலேலே சேரனையும் சோழனையும்எதிர்த்துமுதுகிடச்செய்து தன் ஒருகுடைநிழலின்கீழே மூன்றுலோகமும் ஓதுங்க அரசாண்டு செங்கோல்செலுத்தி இப்படிவிஜயபலட்சுமிகொண்டாட வெற்றிமாலையணிந்த வேலையுடைய இந்தக்கூன்பாண்டியன் அரசாட்சிசெய்யுங்காலத்தில் பணமாலையணிந்தசேரனைவன் ஆகாயத்தையளாவுகின்றகையையுடைய யானைகளும் அநேக திரவியங்களுமஅநேகரத்தினங்களும்தாழிகளும் வரிசையாகத் தன்மகளைப் பாண்டியனுக்குக் கலியாணஞ்செய்து கொடுத்துஅவன்காலிலேவிழுந்து சமாதானஞ்சொல்லித்தன்னுடையதாய்ப் பாண்டியன் வசமாயிருக்கிறநாட்டை முன்போல்தனக்குசசொந்தமாகப் பெற்றுக்கொண்டுபோனன் பின்புசோழனும் தான்பெற்றபெண்ணாகிய சைவமணிவிளக்குப்போலும்மங்கையர்க்கரசியாரைப் பாண்டியனுக்குக் கலியாணஞ்செய்து

கொடுத்துத்தன்னுடைய நாட்டையும் பெற்றுக்கொண்டபின்பு கூன்பாண்டியனுக்குப் பாரியான மங்கையர்க்கரசியாருக்கு அளவற்ற திரவியங்களும் பொன்வஸ்திரங்களும்ரத்தினங்களும்தோழிக்கூட்டங்களும் இன்னும் இன்னும்வேண்டுவைகளும் பாண்டியன் மனமகிழக்கொடுத்துக் குற்றமற்ற நற்குணங்களாலே சிறந்த குலச்சிறையென்கிற மந்திரியையும்கூட அனுப்பிவிட்டான் பின்பு கூன்பாண்டியன் அவன்கொடுத்த வரிசைகளுடனே செந்தாமரைக்கோயின் மங்கையைக் கலிபாணஞ்செய்துகொண்டு வருகிறவன்போல மதுரைப்பதியை யடைந்துலட்சுமி விளங்குமார்பனுப் சோழன்மகளுடனே வந்தமந்திரியான குலச்சிறைநாயகரைக் குணமும் சிறந்த கேள்வியும் மதிநுட்பமும் மேதகவும் ஆராய்ந்துபார்த்து தனக்கு நன்மையிற்சிறந்தமந்திரியாகவேகொண்டு உலகாண்டுவருங்காலத்தில் முன்செய்த பலவானதீவினைப்பயனுக உடம்பிலேகூன்கொண்டாற்போலவே கொல்லாதவிரதிகளாய் வஞ்சகங்கொண்டு அலைந்துசூழ்ந்த பாசத்தை வெல்லுஞ்செய்கைதெரியாமல் நிருவாணிவேடங்கொண்டவர்களாகிய சமணர்கள் சொற்குள் அகப்பட்டு நல்வினைப்பயனைப்பெறுமல் கூன்பாண்டியன் நான்குவேதங்களிலுஞ் சொன்னநல்வழியைவிட்டு சமணர் புன்சமயமாகிய வழியைப்பற்றினவுகவே பாண்டிநாடெல்லாம் சமணமதமாகிய அஞ்ஞானக்கடலிலே முழுகிப் பூதிசாதனநெறியாகிய சைவசமயமும் முத்திச்செல்வமான நெறியுங்குறைவாகவேதநீதி மறைந்துபோயிற்று பறிக்கபடுகிற தலையும்பாயாகிய உடையும் உறிகட்டுக்கொள்ளும் பாத்திரமும் அத்திநாத்தியென்று சொல்லுநாவும் புத்திகெட்டமனம் போலவே கறியில்லாத வெறுமையான அரையுங்கொண்டு நிலைகெடுவதான பசாசுகள் சூழ்ந்தாற்போல எங்கும் சமணர் கூட்டங்களாகவே நிலைகொள்வதாயின.

அக்காலத்தில் அந்தக்கூன்பாண்டியனுக்குநன்மையைச்செய்யும்மருந்திலும் சிறந்தகற்பினையுடைய மங்கையர்க்கரசியாரும் பெருந்தகையமைச்சரானகுலச்சிறைநாயனாரும் அனுஷ்டானகாலத்தில் விபூதியைக்குழைத்துப் பூசுகிறதேயல்லது மற்றைக்காலங்களில் பாண்டியன் தெரியவிபூதிபூசிக்கொள்ளாமல் சிவனடிச்சார்பிலேநிற்க அப்படிபொய்ந்நூலை மெய்ந்நூலாகச் செய்கின்ற புல்லறிவாளரான சமணராகிய கலையைத்தோண்டி மெய்ந்நூலாகிய வேதநிதியானபயிர் தலையெடுத்து வளரச்செய்யவல்லவர்யாரென்று மனத்திலேகவலைகொண்டுவருந்துகின்றவரானை அவ்விருவரும்கூடற்கடவுளை வணங்கவேண்டிப்போய்நின்றுதெரியாமல்மபங்கின முனிவர்களுக்கு அக்காலத்திலே வேதப்பொருளை விளங்கச்சொன்ன வேதப்பொருளே இந்தச்சமணர்மதமாகிய வலைக்குளகப்பட்டு மெய்ஞ்ஞானவழியைவிட்டு நீங்கின பாண்டியன் புத்தியைத்திருப்பி இந்தவேளையில் உம்முடையதிருவடிகளுக்கே எப்போதும் அடிமையாகக்கொள்ளவேண்டுமென்று பாதம்வணங்கும்போது ஒருவேதியன் உருத்திராட்சமுந்தரித்து விபூதியும்பூசின தேகத்தையுடையவனுய்ஸ்ரீசிதம்பரத்திலிருந்துவந்து கூடற்கடவுளை வணங்குவதற்குவர அவ்வினமங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும்கண்டு ஓய்வைதிகரே நீர் எங்கேயிருந்து இங்கேவந்தீரென்றுகேட்க அந்தவேதியன் சோழநாட்டிலிருந்து வந்

தேனென்றான் அதுகேட்ட அவ்விருவரும் அந்தச்சோழநாட்டிலே என்ன புதுமையுண்டு அதைச்சொல்லுமென்ன அதற்கு அந்தச் சைவப் பிராமணன் புதுமையுண்டு கேளுங்கள் எழிசை மறைவலாளராகிச் சீகாழியிலே சிவபாத விருதயரென் றொருவருண்டு அவர் சீர்காழிக் கடவுளைவேண்டி சமணராகிய இருளைப்போக்கும் சூரியன்போல எனக்கொரு பிள்ளை அருளவேண்டுமென்று தியானித்துத் தவஞ்செய்தனர் அப்படித் தவஞ்செய்த சிவபாத விருதயரிடத்தில் சிவனருளாலே இந்த வுலகங்களெல்லாந் தெளிவுபெற இளஞ் சூரியன் போலும் ஒரு பிள்ளை பிறந்தது அந்தப்பிள்ளை வளர்ந்து மூன்று வருஷமாகுங்காலத்தில் ஊழிக்காலத்துக் கடலிலேமிதந்த தோணிபுரத்திலெழுந் தருளிய கடவுள் தமது தேவியாருடனே விடைமே லெழுந்தருளிக் காட்சி கொடுத்தும் அந்ததேவி தாயே தனது திருமுலைப்பாலுடனே ஞானமுந்திரட்டிக் கலந்து செம்பொன்மணிக் கிண்ணத்தை யேந்திக்கொண்டுவந்து கொடுக்க அந்தப்பாலன் வாங்கிக்குடித்து அளவிறந்த வேதங்கள் ஆகமங்கள் இவற்றைச்சார்ந்த கலைஞானங்களெல்லாம் ஓதாமலுணர்ந்து சிவஞானமுந் தோன்றத்தக்கனவாயிற்று.

ஆதலால் நமது பந்தத்தைப் போக்குபவருகிய ஞானநாயகன் ஞானத்தோடு சம்பந்தஞ்செய்ய ஞானசம்பந்தரெனி நாவிலேமெய்ஞ்ஞானவாணியும் குதிகொண்டுநிற்க அழகுபொருந்திய வேதங்களையெல்லாம் தமிழாலே பாடத்தொடங்கி கரும்பிலே சக்கையைப்போக்கி அதன்சாற்றை காய்ச்சின கற்கண்டுபோலே அளவில்லாத வேதங்களிலே சிறந்த பொருள்களையெல்லாம் நன்முகத்தெளிவுசெய்து கொன்றைமாலையணிந்த கடவுள் எழுந்தருளியிருக்கின்ற தலங்களெல்லாம் சென்றுசென்று எல்லாரும் விரும்பத்தக்கதென்மொழியிலே சிவமணங்கமழ்ந்த தமிழ்மாலை தொடுத்துச் சாத்தி, பருத்த முத்துமாலையணிந்த கொங்கைகளையுடைய பார்வதி சமேதராகிய சிவபெருமானுடைய திருவருளினாலே பசும்பொன்னாலே தாளமும் முத்துப்பல்லக்கும், முத்துக்காளமும் முத்துப்பந்தலும் ஆகிய இவைகளெல்லாம் தக்கபடியே பெற்றும் பாலநிலத்தை நெய்தனிலமாகச்செய்து அலைகளாலேமுத்துக்களைவீசுகின்ற நதிசூழ்ந்த திருவீழிமிழலையிலே பொன்னாலான படிக்காசுபெற்றும் வேதங்களாலே பூசிக்கலான திருமறைக்காட்டுக்கோயிற்கதவை அடைக்கப்பாடியும் இன்னும் சிவஸ்தலங்களெல்லாம்போய்த் திருப்பதிகம் பாடவருவரென்று அந்தத் தெய்வப்பிராமணன் சொன்னவுடனே கற்பகக்கொடிபோன்றவராகிய மங்கையர்க்கரசியாரும் பாண்டியனுக்குக் கண்போன்ற குலச்சிறை நாயனாரும் இவருக்கொப்பான சமணராகிய பேய்களையோட்டி அன்றே தங்கள் அரசன்மேனியிலே அழகாக விபூதிபூசக்கண்டு பூதிசாதனத்திலே அடைவதான சிற்பரவீட்டைக்கண்ட மகிழ்ச்சியிலே முழுகினவராய் தங்கள் பெயரைக்கண்டெழுதி அந்தத் திருஞானசம்பந்த பிள்ளையாருக்குச்சொல்லுதற்காக அந்தப்பிராமணன் கையிலே ஓலைவிண்ணப்பம்கொடுத்தனுப்பிவிட்டு அவ்விருவரும் மீளாட்சிசுந்தரேசரை வணங்கிக்கொண்டு தங்கள் வீட்டுக்குப் போயினார்கள்.

பின்பு அந்தவைதிகம்பிராமணன் விரைவிலேபோய்த் திருஞானசம் பந்தமூர்த்திகளைக்கண்டு தலைகளெல்லாம்பறியுண்டு புண்ணைகத்திரிகின்றவுஞ் சகூராகிய சமணருக்குடன்படாமலிருக்கிறமங்கையர்க்கரசியாரும்குலச்சிறை நாயனாருப்கொடுத்த ஓலைவிண்ணப்பத்தைக்காட்டி அதிலுள்ள செய்தியை வாசித்தான் அதாவதுவெங்குருவேந்தராகிய திருஞானசம்பந்தமூர்த்திகளு டைய திருவடிகளைவணங்கி அடியேன்குலச்சிறைசொல்லிக்கொள்ளும் விண் ணப்பம் தேவரீர் இங்கேயெழுந்தருளி சமணராகிய இருளை ஓதுக்கி எங்க ளரசனுக்கு விபூதிகொடுத்துத் தமிழ்நாட்டையெல்லாம் பூதிசாதனவழியே நிறுத்தி எங்களாட்சிக்கவேண்டும் என்றெழுதியிருக்க அந்தப்பாசுரங்களைக் கேட்டு கவுணியக் குலதலைவரான திருஞானசம்பந்தப்பிள்ளையாரெழுந்தருள அப்போதங்கே கூடவிருக்கிற திருநாவுக்கரசுசுவாமிகள் ஆ இதுதக்காது நீ ரோ மிகவுஞ்சிறியவர் அவர்களோ பழிபாவங்களுக்கஞ்சாதவர்கள் நான்பல காலமும் அவர்களோடுபழகினவன் எனக்கு அவர்கள்செய்த வேதனைகளை அளவுசொல்லிமுடியாது உமக்கு இப்போது சிரகங்கள் பலப்படவில்லை நீபோவதைவிடுகவென்ன அதற்குத் திருஞானசம்பந்தப்பிள்ளையார் எந்தை யெம்பெருமானுடைய திருவருளைப்பெற்றவர்போல நீர் இப்படிச் சொல்வ தென்னகாரணம் அந்தச்சமணர்கள் பண்ணினமகாவேதனையில் வெந்துபிழை த்தவர்நீர் நாள்-கோள்-விலங்குபுள்-அவுணர்-பேய்-பூதம்-ஆகிய இவைகளை ல்லாம் அம்மையோடப்பனை கடவுள் ஏவலின்படியே நடப்பவைகள் அந்த அம்மையும் அப்பனும் நம்முடையமனமே கோயிலாகக்கொண் டிருக்கிறதி னலே அவைகள்நமக்கு யாதொருதீங்கும் செய்யமாட்டாவென் றெழுந் தருளினர்.

அப்போது பெரியமுரசங்களொலிக்கவும் சங்குகாகளழுதவும் சாமர ங்கள் வீசவும் முத்துப்பந்தலின்கீழே முத்துப்பல்லக்கின்மேற்கொண்டு சம ணராகிய இருளைப்போக்குகின்ற சூரியன்போல வழிக்கொண்டு வழியிலுள்ள சிவஸ்தலங்களெல்லாம் போய்ச் சேவித்துத் திருப்பதிகங்கள்பாடி இப்படி யாகச் சோழநாடெல்லாங்கடந்து பாண்டிநாட்டுக்குப்போய் கொடிய பாலை வனமும் முல்லைவனமும் இந்திரவில்லை யானைகளீட்டி வாங்கு முயற்சியுள்ள குறிஞ்சிநிலமுங்கடந்து பாகத்திலே பார்வதியையுடைய கடவுள் எழுந்தரு ளி யிருக்கின்ற மதுரைக்குப்புறம்பே போய்ச்சேர்ந்து பரிசுத்தமாகிய விபூதி பூசிய அடியார்கள் திருக்கூட்டத்தினடுவே திருஞானசம்பந்த மூர்த்திகள் திருப்பாற்கடலிலே பிறந்து மேலெழுந்து விளங்குகின்ற பூரணச்சந்திரன் போல முத்துப்பந்தலின்கீழே முத்துப்பல்லக்கின்மே லெழுந்தருளிவர முன்னே செல்கின்ற பரிசனங்களில் முத்துசின்னம் ஊதுகிறவர்கள் சமணரா கிய இருளோட உதையமான சூரியனென்னும்படி பரசமயகோளரி வந்தா னென்று ஊதிக்கொண்டுவருகிற சத்தத்தைக்கேட்டு நின்றுண்டு திரியும் வஞ்சகரான சமணர்கள் எதிரேவந்து நீங்கள்கொன்றறஞ்சொன்ன உங்கள் தெய்வத்தைக் கும்பிடவந்தால் இந்த வெற்றிச்சின்னமேதுக்கு இப்படிப்பட் ட கெருவமேதுக்கு நீங்கள் யாரைச் செயித்தீர்கள் என்று பரமசிவனடியா ரைத் தடுத்தார்கள்.

அப்போது அதிகமாக மதமொழுகச்செல்லுகின்ற மிகுந்த பலத்தை யுடைய மதயானையானது தாமரைநூலாலே கட்டினால் அதற்குத்தடைபட்டு நிற்குமோ அதுபோல வெற்றிகொள்ளவந்தமன்மதனைபொரித்தகடவுள் குமாரர் அந்தக்கபவர்கள் தடையை விலக்கிக்கொண்டு பெரியபமணிமாடங்களையுடைய மதுரைக்குள்ளே புகுந்து பரமசிவனுடைய திருக்கோயிலுக்குள்ளே போய் வெள்ளையானையினுடைய சாபத்தைத்தீர்த்த கிருபைக்கடலான கடவுளைவணங்கி மூன்றுதரம்வலஞ்செய்து முகிழ்முலைப்பாலைச் செம்மணிக்கிண்ணத்திலே கொண்டுவந்துகொடுத்த அங்கபற்கண்ணம்மையும் வணங்கிக்கொண்டு வேதச்செல்வரான திருஞானசம்பந்தப்பிள்ளையார் உண்மையான ஆனந்தமயமான வெள்ளத்திலேமுழுகிநின்று சுவாமி உம்மை வேதவழியாக நின்றுவந்தித் தீடேறமாட்டாத புததிகெட்ட வஞ்சநெஞ்சரான சமணரை அவர்கள் மார்க்கமெல்லாம் கெடும்படி வாதுசெய்து வெல்ல அடியேனுக்குத் திருவுள்ளஞ்செய்தருளவேண்டும் (கூற்றைக்குறைபடவுதைத்தோய்) என்று திருப்பதிகம்பாடிவேண்டிக்கொண்டு அருளைப்பெற்றுத் திரும்பும்போது திருஞானசம்பந்தரைக்கண்டு மூண்டவைம்பொறியும் வென்ற வாகீசமுனி சொன்ன ஆண்டுவள்ளவரொருவர்முன்வந்துவேண்ட அவர்திருமடத்துக்கு அன்புபூண்டெழுகின்ற காதலும்போயருளினர் புகலிவேந்தரான திருஞானசம்பந்தப்பிள்ளையார் அப்படி அந்தமடத்திலே எழுந்தருளி அன்றிராத்திரிதிருவழுதுசெய்தருளியிருக்க அன்றிராத்திரியிலே செய்யப்போகிற நினைக்கவுங்கூடாத செய்கையையும் தங்கள் நல்லகுலத்தில்வந்துபிறந்த மங்கையர்க்கரசியார் கொண்டிருக்கின்ற மனவருத்தத்தையும்பார்க்கப்பயந்து சூரியன்போய்மேலைக்கடல் வெள்ளத்திலே முழுகினான் அப்படி பகற்காலம் போகவே மாறுபாடுகொண்ட சமணர்கள் செய்யும் வஞ்சனைக்கு உதவியாகவேற்றுமையின்றிக் கலந்துறவாகவந்தாற்போலஅந்தச்சமணர்கள் நிறம்போலிருண்டிருக்கிற ராத்திரியில் அந்தச்சமணர் தலையிலேமயிர்கள் பரியுண்டு அந்தமயிர்காலெல்லாம் கிளம்பின சிறுகொப்புளங்கள்போல எங்கும் நட்சத்திரங்கள் பூத்தன இப்படி இங்கே வைதிகத்தனியிளஞ் சிறுமடங்களான திருஞானசம்பந்தப்பிள்ளையார் வந்திருக்கிற செய்தியைத் தெரிந்து வெவ்வேறே மலைகளிலே திரண்டிருக்கிற வஞ்சகரான எண்ணாயிரஞ் சமண முனிகளெல்லாம் ஒருமித்துக்கூடி முத்தமிழ்விரகரான திருஞானசம்பந்தர்மேலே ஒருமித்துக்கூடி ஒருவகை வேள்விசெய்து முழுப்பொய்யரான சமணர்கள் அந்த அக்கினியைக்கூப்பிட்டு நீபோய் எங்களுக்குப்பகைவர்களிருக்குமிடத்தை அழித்து உண்டுவாக்கடவையென்றேவிவிட அதற்குமுன் ஒருகாலத்திலே தக்கன்யாகஞ்செய்த இடத்தில் கை அறுபட்ட அக்கினி கலங்கிபோகப் பயந்து போகாமல் நின்றனன்.

அப்போதந்த ஈனரான சமணர்கள் வீட்டில் எரிகின்றஒருகொள்ளிக் கட்டையை யெடுத்துக்கொண்டுபோய் ஞானபோகரானசம்பந்தப்பிள்ளையார் எழுந்தருளியிருக்கிறமடத்திலே செருகினர்கள் அந்தக்கொள்ளி அவியாமல் பற்றிக் கொண்டுவந்து புகைவதை அங்குள்ள திருத்தொண்டர்கள் கண்டு வந்து வானநாயகன் மைந்தரான திருஞானசம்பந்தருக்கு விரைந்துசொல்ல

உடனே சிட்டரான அறிவால்சிறந்த சம்பந்தபிள்ளையார் அங்கு மூள்கின்ற நெருப்பைப்பார்த்து தென்றமிழ்கூடல் அட்டமூர்த்தியைத்தியானித்துஅங் கேயிருந்தபடியே அருமைப்பதிகமொன்று துட்டர்பொய்யுரைமேற்கொண்டு தொன்முறை துறந்துவிட்ட பாண்டியனைப்போய்ப் (பையப்) பற்றிக்கொள் ளென்று பாடியருளி அந்தநெருப்பையே பாண்டியன்மே லேவியருளினர். அந்தக்கணப்பொழுதிலே அந்தநெருப்புவந்து பாண்டியனைச் சுரமே யாகிப் பற்றிக்கொண்டது அந்தபபாண்டியன் அணிந்திருந்த ஆபரணங்களெல்லாம் நீறுகவிவந்து அவன் பூசின கலவைச் சந்தனமும் மாலையும் வெந்து கருகவும் விரித்துப்பரப்பின பாயலும் புலர்ந்து சருகாகவும் பாண்டியன் பதைபதை த்தான். அப்போது மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும்கண்டுதள ர்ந்து நல்ல வயித்தியர்களை அழைத்து யாதொருகுற்றமில்லாத பலஅவிழ்த ங்களுங்கொடுத்து பார்த்ததிலுலும் அந்த வெஞ்சுரம் தணியாமல் அதிகமா கியதுகண்டு கவலையான விரதங்களில் வருந்தி இகபரபோகத்தையும் அடை யமாட்டாத புத்தியீனராகிய அமணரையழைத்துக் காட்டிப் பார்க்கச்சொ ல்ல அவ்வமணர்கள் தங்கள் தவபலத்திலுலும் பலவகை மருந்திலுலும் வெஞ்சுரம் தணிவுசெய்துபார்க்க அதுதணியாமல் அதிகரிக்கக்கண்டு என்ன செய்வோமென்று கவலைகொண்டிருக்கப் பொழுதும் விடிந்து வட்டவாழி யொன்றுடைய தேர்ப்பரிதியான சூரியன் தன்குலத்துச் சோழராஜன்வேண் டின மருமகனுகிய கூன்பாண்டியனைப் பற்றி வெஞ்சுரத்தைக்கேட்டு அவனை மறைய வளைத்த திரைச்சீலையைக் கையாலே தொட்டு எடுத்து மறைவு நீக் கிப்பார்க்கவந்தவன்போலச் சூரியன் கடல்முகட்டிலேதான்றிவிளங்கினன்.

அப்படி பகலானவுடனே பரிசுத்தமான சைவமாகிய பயிரைவளர்க்க வேலிபோ லமைந்தபாண்டிமா தேவியாரும் மந்திரியாகிய குலச்சிறைநாயனு ரும் பாண்டியனைப்பார்த்து ஐயா மகாப்பிரபுவே இந்தவெஞ்சுரம் யமனது பாசத்தையும் சுடத்தக்கதாயிருக்கின்றது இதை சீகாழிகௌணியர் தலைவ ரான திருஞானசம்பந்தப் பிள்ளையார்வந்துபார்த்துத்தீர்த்தால்தீரலாம் அல் லது வேறெருரு வகையாலும் தீர்க்கப்படாதென்ன, அதற்குப் பொய்ச்சமய ரான அமணர்கொள்கையைவிடாத பாண்டியன் நீங்களிருவரும்சொன்ன அந் தச் சைவசமயத்தார்வந்து விபூதியிட்டுப்பார்க்கப்படுமோவென்ன அவ்விரு வரும் சுவாமிநீர் எந்தவிதத்திலேயாலுலும் பிணிதீர்ந்து நன்மையாகவேண் டாவோ, இந்தப்பிணி தீர்வதைவிட வேறேயென்ன வேண்டியிருக்கின்றது என்றுசொல்ல அதற்குப்பாண்டியன் சம்மதித்து ஆனால் அந்தத்திருஞானச ம்பந்தரை இங்கேவர அழைப்புமென்ன, குலச்சிறைநாயனரான மந்திரித்தலை வர் பட்டணங்களெல்லாம் மகிழ்வாக அலங்கரித்து மலையின்றமிழ்விரகரான திருஞானசம்பந்தப பிள்ளையார் எழுந்தருளியிருக்கிற திருமடத்துக்குவந்து முன்னெருநாள் வைதிகப்பிராமணன்சொல்லக்கேட்டுண்ட ஞானமிர்தத்தை இப்போது கண்களாலேகண்டு, கண்கள்பெற்ற பயனைக்கொண்டுபோய் வண ங்க, பூந்தராய் வேந்தரான திருஞானசம்பந்தர் கெட்டஅமணர்நடக்கையை வென்று சென்றமனமுடையவரே எழுந்திருமென்று சொல்லியருளி, நன்று

சுகமே இருந்தனீரே என்னபாண்டிமாதேவியும் கேட்க, அவ்விருவரும் எப்போதும் உம்முடைய திருவருளாற்பெறவிருக்கின்ற எங்களுக்குயாதொருகுறைவுமில்லையென்று உள்ளுறவுகொண்டு சுவாமி இனி உம்முடையதிருவருளிலேலெங்களரசன்சுரம் தீரவேண்டிடம். அமணர்கூட்டமமாளவேண்டும் ஆக இவ்விரண்டும் செய்தருளவேண்டுமென்று பாதத்திலே விழுந்து வணங்கி எழுந்தருள்வீராகவென்று வேண்ட, அப்படி வேண்டுமென்கிற அன்பிருவருக்குமாக அப்படியே வருவோமென்று அனுக்கிரகித்து முத்துப்பல்லக்கின்மேல் சுந்தரன் பாண்டியன் சுரந்தீர்க்கச் செல்வதுபோலச் சென்றருளிப் பாண்டியன்கோயிலுக்குபோம்போது முன்னேமெய்ப்பொருத்தை வாழச்செய்ய வருகிறவரென்று வாசலெல்லாம் தூபதீபங்களும்-பூரணகலசங்களும் கொடிகளும்-கந்தப்பொடிகளும் நெருங்கிப் பாண்டியன் காதுக்கின்பமாக, முத்துக்காகளமுத, அமணருக்குக் கோளரிபோல கோவிலுக்குள்ளெழுந்தருளி, பாண்டியன் அருகிலிட்ட செம்பொன்மணியாசனத்தில் எழுந்தருள அவரைப் பாண்டியன் கண்டுதெளிந்து செந்தாமரை மலர்போல முகமலர்ந்து சுவாமிபாவியேனுடைய சுரநோயைத்தீர்த்தருளி என்னையும்பணிகொண்டருளவேண்டுமென்றுவேண்ட சிவபுரத்தலிவராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் முன்னே அந்த சுரநோய் வருவதற்குக்காரணமான அமணர்கள் கேட்டு மனம் புழுங்கி ஓய் பாண்டியமஹாராஜனே, கலஞானங்களெல்லாங்கற்று வல்ல உம்முடைய வலப்புரத்து வெம்மையே இங்கே இப்போது வந்தவர் தீர்ப்பாராக நாங்கள் இடப்புறத்துநோயை முன்னே தீர்க்கிறுமென்று பாண்டியனைச் சம்மதிப்படுத்தி அமணர் தங்கள் அசோகின்கீழிருக்கின்ற அருகக்கடவுளை நினைத்துக் கையிலிருக்கிற மயில்வால்களாலே தடவித்தடுத்துக் கண்ணீர்சிந்தி அழுதும், அந்த இடப்புறத்து வெம்மை நெய்வார்த்த நெருப்புப்போற் கொதித்து அதிகரித்து தணியாதிருக்க, அமணர் மானங்கெட்டு கொள்வங்குலைந்து பேசாதிருக்க, திருஞான சம்பந்தப்பிள்ளையார் தமது விபூதிப்பையில் விபூதியை அள்ளிக் கையில் வைத்துக்கொண்டு அந்தச் சுரநோய் தீரும்படி நினைத்தார்.

அப்போது மாயைசெய்தழியும் அமணர் இதுமாயநீறு தகாது என்று தடுத்தார்கள், அதற்கு எங்கள் கடவுள் திருக்கோயில் திருமடைப்பள்ளிச் சாம்பலை அள்ளிக்கொண்டு வாருங்கள் என்று அருமறைக்கௌணியர் சொல்ல, பாண்டியன் ஏவலாளர்கேட்டுத் திருக்கோயிலுக்குப்போய் அள்ளிக்கொண்டுவந்தார்கள் அதைப்பாண்டியன் சுரந்தீர்க்கவந்தருளிய கௌணியர் குலத்தலைவராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் தமது கையில்வாங்கி மருந்து மந்திரம்-வேதப்பொருள்-இன்பவீடு-போகம் - பொருள்முதலான எல்லாம் திருவாலவாயான் றிருநீறேயென்று திருப்பதிகம்பாடி பாண்டியனுடைய உடம்பிலே திருக்கோயிற் சாம்பலைப்பூசித் தடவினர். அப்படித்தடவின உடனே வலப்புறத்தில் உள்ளவெம்மை அமணர்கள் வெம்மைபோல அகன்று போயிற்று அப்போது பாண்டியனுக்கு வலப்புறம் வாசங்கலந்த குளிர்ந்த பனிநீர்விட்டுக்குழைத்த சந்தனம்பூசின தண்மைபோலிருந்தது அப்படி

ஒருபுறம் குளிர்ந்தபாண்டியனுக்கு இழிதொழிலையுடைய அமணர்கைகொட்ட இடபுறம் கொதிக்கிறதும் கௌணியர்கைதொட்ட வலப்புறம் குளிர்ந்திருக்கிறது தீவினை நல்வினைப்பயன்போலாக, பாண்டியன் சுவாமி, வலப்புறங்குளிர்ந்தது இடப்புறங் கொதிக்கின்றது இனி என்னுலேபொறுத்துமுடியாது. ஆனலும் இந்த அமணர்குற்றத்தைவிட்டு என்னை ஈடேற்றவேண்டியருளினுல் இந்த இடப்புறத்துநோயையும் தேவரீரே தீர்த்தருளவேண்டுமென்று பாண்டியன் மிகவும்வேண்ட, அதற்குச் சிவபுரத்தலைவராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் அவன் இடப்புறத்தையும் முன்போலே விபூதியள்ளித் தடவுமுன்னமே பாண்டியன் சூரியன்போல் விளங்கினன் அதிலேலே அன்றுமுதல் கௌந்தரிய பாண்டியனென்றுபெயர்கொண்டு திருஞானசம்பந்தப்பிள்ளையார் கடாட்சத்தாலும், தொடப்பெற்றதனலும், அவர்தெளிந்த திருவாக்கைக்கேட்டதினலும், பாண்டியன் திருஞானசம்பந்தப்பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கி ஸ்ரீபஞ்சாட்சரோபதேசம்பெற்று அமணர்நெறியைவிட்டுப் பழையவேதநெறியைக்கொண்டு பரிசுத்தனனன்.

பாண்டியன்சுரந்தீர்த்தபடலம்

மூற்றிற்று



உ

சிவமயம்

அறுபத்துமூன்றுவது,

சமணைக்கழுவேற்றியபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பஞ்சவனடைந்தநோயைப்பாலறுவாயர்தீர்த்து
நஞ்சணிகண்டநீறுநல்கியவண்ணஞ்சொன்னேன்
மஞ்சலாகிப்பின்னும்வாதுசெய்தடங்கத்தோற்ற
வஞ்சனைக்கழுவேறிட்டவண்ணமுஞ்சிறிதுசொல்வாம்.

இதன்பொருள்.

கூன்பாண்டியனடைந்திருந்தசுரநோயைத்திருஞானசம்பந்தப்பிள்ளை யார்தீர்த்துக் காளகண்டராகிய பரமேசுவரனது திருநீரளித்தருளிய திருவி ளையாடலைச்சொன்னேம். இனிகொஞ்சமுமஞ்சாதவர்களாய்ப்பின்னும்வாது செய்துதோற்றவஞ்சகராகிய அச்சமணர்களையெல்லாம், கழுவேற்றிய திரு விளையாடலையுஞ் சொல்லுகின்றோம்.

பின்பு பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியாரும், மந்திரிகளிலே சிறந்தகுலச்சிறைநாயனாரும் திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவடியில் விழுந்துசேவித்து, எங்கள் அரசனுடைய சுரநோயும், கூனும், பாசவல்வினையும் தீர்த்த தேவரீர் தாமே இன்னமும் அடியேங்கள் வேண்டுகின்றகுறைதீர்க்க வேண்டும் அதாவது இந்தக்கன்னிநாடு முழுதும் கறுத்த அமணராகிய காடு மூடுபட்டுக்கிடக்கின்றன. ஆதலால் இந்தஅமணஇருள இப்போதேபோக்கி யருளவேண்டுகின்றோமென்று வேண்டுதல்செய்ய, அதற்குத் திருஞானசம்ப ந்தப்பிள்ளையார் திருவாலவாய்க்கடவுள் திருவுள்ளத்தைத் தெரிந்துகொண் டுவருகிறேனென்று அவ்விருவருங்கூடவாவே திருக்கோயிலுக்குப்போய் பொன்னிரத்தாமரைமலர்ந்த திருக்குளத்திலே ஸ்நானஞ்செய்துகொண்டு அங்கயற்கண்ணிபாகமாக மான்மழுவேந்திய திருக்கைகளையுடைய நாதனை வணங்கி நின்று சுவாமீ, உடம்பைவெறுத்துக் காலமெல்லாம்வஞ்சனையே அ திகமாகத்தவஞ்செய்கின்ற பேயராய் இம்மைமறுமைப்பயனைவிட்டு, நீர்சொ ல்லியருளிய வேத வேள்விகளை நிந்திக்கின்ற கொடியசமணரைத் தெண்டித் தருளவேண்டுமென்று வேண்டினர் அப்போது முன்னேயாணையிட்ட கடவு ள்ஆகாசவாக்காக என்னடியார்களாகிய உங்களுக்குவேண்டுவதே எனக்கும் வேண்டுவது. இப்படி எனக்குச்சம்மதமானதிலே நீங்களே வெல்வீர்கள். அவ்வமணர்தோற்பார்கள் அதற்கு இப்போது நாம்சொல்லுகிறபடியேநீங்க ள்பாண்டியன் சபைக்குப்போய் அவ்வமணரோடுவாதுசெய்தால் அவர்களை தோற்றுப்போய்க் கழுவிலேறிச்சாவார்கள். இதற்கெவ்வளவும் அஞ்சவேண் டாமென்றுசொல்ல அதனைத் திருஞானசம்பந்தப்பிள்ளையார்கேட்டு வணங் கிப் பின்பு தமதுதிருமடத்துக்கெழுந்தருளினர். மற்றை இருவரும் திரும் பித்தங்கள் இடத்துக்குப்போனர்கள்.

அப்படி அன்றைப்பொழுதுபோக மறுநாள் பாண்டிமாதேவியும்மந்திரித்தலைவரும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருமடத்துக்குப்போய் அந்தச்சமணரை வெல்லுதற்கு உபாயம் எப்படியென்று ஆலோசித்துக் கொண்டு திருஞான சம்பந்தப்பிள்ளையாருடனே மூவருமாக தங்கள்பாண்டியன் சமுகத்திற்குப்போய் ஓப்பாண்டியமகாராஜனே இங்கே எங்கும் அமணர் கூட்டமே அதிகமாய் நெருங்கியிருக்கிறதினாலே அவ்வமணரை வேரோடே களைந்தாலல்லவோ எங்கு முன்போலவே சைவப்பயிர் தலைபெடுக்குமென்று சொல்ல அதுகேட்டுப்பாண்டியனும் அப்படிசெய்யத் தக்கதென்று ஆக்ஞாபிக்க, மூவரும் நாடெல்லாம் மெய்வழியே சென்று ஈடேறுங்காலம் வந்ததென்று பாம்பலங்காரப்பான்புகழையே எங்கும்பரப்பவேண்டிமகிழ்ந்தார்கள். அந்தக்காலத்தில்அந்தஅமணரை அவர்கள்பெண்டுகளும் பிள்ளைகளும் சீடர்களுங்கூடிக் கண்களிலே நெருப்புப்பொறிசிந்தப்பார்த்து நீங்கள் இவ்வளவு காலமாகத் தவவலியுள்ளவர்களென்னப் பெயர்கொண்டு இப்போது பாண்டியனுக்குவந்த சுரரோகையைத்தீர்க்கமாட்டாமல் ஒருசைவனுகிய சிறுபிள்ளை தீர்க்கும்படியாய் நம்முடைய பகவன் பெருமைக்கு இழிவுண்டாக்கினீர்கள் இப்போது பாண்டியன் சாம்பல்பூசுகின்ற கடவுளாகிய பாம்பலங்காரனேபகவானென்றுநம்பி உங்கள் விரதமார்க்கங்களெல்லாம் பழிப்பாக் இகழ்ந்துவிட்டான் இனி உங்களுக்குநிலையே திருக்கின்றதென்று அவர்களைவெறுத்து முதுகுகாட்டி நிற்க அமணர்களெல்லாம் இனியென்ன செய்யலாம் அவனுடன் வாதுசெய்து பார்ப்போமென்றுகூடியெழுந்திருக்க அத்தனைபேர்களையும் அவனவன் பெண்டுகள்வந்துமுன்னே நின்று தடுத்து நீங்களொருவரும் போகவேண்டாம். உங்களுக்கிது நல்லகாலமாகவில்லை நாங்கள் கண்டகனவு வருந்தித் துன்பக்கடலில் முழுகுவதாயிற்று, அதாவது நம்முடையகோயில்கள் வீடுகளெல்லாம் சடைமுடிகளும் தருப்பை பிடித்த கைகளும் சாம்பல் பூசின உடம்பும் கையிலேசூலாயுதங்களும் புலித்தோலாடையுமாகச்சிற்சிலர் வந்து உலாவவுங்கண்டோம். கலியாணமில்லாமல்துறந்தவர்களும், கணவனிருக்கும்போதே துறந்தவர்களும் ஆக மூவகையான தவப்பெண்கள் இருக்கின்றபள்ளிகளிலெல்லாம் ஒருசிறியகொம்பானைவந்து இடித்து அழிக்கவுங் கண்டோம் மொட்டைத் தலையராகவும் குண்டிகைவைத்த உறிதூக்குகின்ற கையராகவும் கோவணங்கட்டிக்காய்கிற தடியைச் சாத்திக்கொண்ட பிடரியையுடையவராகவும், அந்தச்சடைமுடிச்சிவன்பெயரை நாவில்உச்சரித்துக் கொண்டு எங்கும் உலாவவுங்கண்டோம் இன்னும்கொதிக்கும்படியான கோபங்கொண்டதாகி ஒருயானைக்கன்றுவந்து நம்முடைய குருக்கண்மார்களைத் துரத்திவிட்டு பூ-இலைகளுதிரவுங் கிளைகள் முறியவும் அசோகமரத்தை வேரோடேபெயர்த்துத் தள்ளவும்கண்டோம். அப்படி அவர்கள்கொண்ட மூவிலைச்சூலத்திலுங்கூர்மையாகிய கழுவிலே நீங்கள் எல்லாரும் ஏறவும் நாங்கள் கண்டுவருந்தி மார்புகள் சிவக்கக் கைகளாலடித்துக்கொண்டு கூந்தல்கள் அவிழ்ந்து விரியும்படி அழுவுங்கண்டோம் ஆனால் ஒருவராலும் வெல்லப்படாத உங்களுடையஇந்திரசாலமோகமுதலானவித்தைகள் இந்தச்சமயத்திலுங்களுக்கெவ்வளவு முதவியாகவில்லை ஆனால் அந்தவித்தைகள் கள்ளாலே பறி

யுண்டுபோயினவோ, நெருப்பிலே வெந்துபோயினவோ, வெள்ளங்கொண்டு போயினவோ, புதையிலே கிடக்கின்றனவோ, முன்னே வேள்வியில் நெருப்பைவளர்த்து யானை-பாம்பு-பசு-இவைகளையேவி நம்முடையபொரியோர்கள் பட்டபாடுதெரிந்திலீர். இப்போது இந்தப்பாண்டியனுக்குவந்த சுரநோயைத் தீர்க்கமாட்டாதநீங்கள் இனி அங்கேபோய் என்னசெய்து வெல்வீர்கள், அதையும் ஆலோசித்துக்கொண்டு நின்றுபோகாமலிருங்களென்று சொன்னார்கள்.

அதற்குத் தருமத்தைக்கெடுத்த பாபிகளான அமணர் வலிந்துசொல்ல அவர்கள் பெண்டுகள்கையைப் பற்றியிழுத்துத் தடுத்தாலும் பெண்டுவழிச்செல்லுதல் குற்றமென்று நீவினைவழிச் செல்லுகின்ற அமணர்கள் அந்தப்பெண்டுகளுக்குத் தெரியாமல் போகத்தொடங்கினர்கள் அப்படி ஆயுள் முடிந்த அமணர்கள். போகும்போது பெரியபெண்டுகள் எங்கள் பேச்சைக் கேளாமல் போகிறநீங்கள் துன்பப்பட்டு வருந்தக் கடவீர்களென்றுசபித்தார்கள். அதற்கும் அஞ்சாமல் பட்சிகள்முதலிய அவசகுணங்கள் போகவேண்டாமென்று தடைசெய்தாலும் துணிந்து போகின்றவர்கள் பெரிய கெண்டைகள் உலாவ தேனைக்கவிழ்த்து தாமரைமுதலிய மலர்கள்மலர்கின்ற அகழ் சூழ்ந்த மதுரைக்கு வெளியே ஒருபுறத்திலே எல்லாச் சமணர்களுங்கூடி நாணமும் பயமுங்கொண்டு ஆலோசனை எதுசெய்பலாமென்றுதுணிந்து இனிப்பாண்டியனைப் போய்க்கண்டு இப்படியென்று தெரிவித்து அவன் சம்மதிமேல் வந்திருக்கிறவேறு புறச்சமயத்தானை வாதிலேலே வெல்லுவோமென்று ஒருமித்து மதுரைக்குள்ளே புகுந்து பாண்டியன் சபைக்குவரும்போது உதையகாலத்தில் கவுணியர் குலப்பெருமாளான திருஞான சம்பந்தப்பிள்ளையார் திருவாலவாய்க்கடவுள் சேவடிகளைவணங்கித் தமது திருமடத்துக்குச் செல்லவந்த அமணர்கள் வழியிலேகண்டு சூரியனை இருள்வளைந்தாற்போல் வளைந்துதடுத்துப் பின்னேவர திருஞானசம்பந்தப்பிள்ளையார் தடையுண்டு திருமடத்துக்குப் போகாமல் பாண்டியன் சபைக்குவந்து அங்கு நியமித்திருக்கிற சிங்காசனத்தின் மேலேறி இளஞ்சூரியன்போலெழுந்தருளியிருக்க பறித்த சீத்தலைப் புலையர்களான அமணர்கள் பொருமற் பதைத்து நோக்கி நீயோ இன்னமுமமுலைச் சொல்லிருந்தாத சிறுபிள்ளை கண்மணி ஒன்றுதானே இருவிழிகளிலும் சுழல்வதான காக்கையிருக்கப்பனங்கனி உதிர்ந்தாற்போல நீகற்றுவந்த மந்திராலத்தாலே பாண்டியனைப்பற்றின சுரந்தீர்த்தோமென்று கெருவங்கொள்ளலாகுமா நந்து-நாகு-நீர் வண்டு இவைகள் சென்றவழியும் ஓரொழுத்து வடிவாக அமைந்தாலும் அமையும அப்படியாக உன்கையாலே சிந்தினசாம்பலும் சிறுசொல்லுமே மருந்தும் மந்திரமுமாகப் பாண்டியன் சுரம் தணிபக்கண்டாய் ஆகையாலே உங்கள் மந்திரத்தைபுமோசோட்டி லெழுதி இரண்டோட்டையும் நெருப்பிலிடுவோம் வெந்தது தோற்றதாப் வேவாத வடு வென்றதாகக்கொள்ளுவோம் ஆனால் இது சிவன்கோயில்சார்ந்த இடங்களிலே செய்யக்கூடாது செய்தால் அந்த சிவன் உங்களுக்குச் சார்பாய் எங்களுக்கு விக்கினஞ்செய்கிறன் ஆகையால்வேறே பொதுவான ஒரு இடத்திலிருந்து வாதஞ்செய்வோம் வாவென்று எந்த வேளையும் பேரிகை

கள் சப்திக்கின்ற மதுரைக்கு வெளியேபோய் வேப்பமாலையணிந்த பாண்டி யனுக்குமுன்னே நெருப்பைவளர்த்து அதிலிடுகிற எடு வேகாதிருக்கிறதும் வேகின்றதும் காண்போமென்று எழுந்து அமணர்களே மதுரைக்குவெளியே ஒருபுறத்தில் வந்து கீழ்த்திசையிலே சிவந்த நெருப்புக்குழி ஒன்றுதோண்டி அதில் மாங்களைவெட்டிப்போட்டு அதிகமாக நெருப்பைமூட்டிவிட்டு தங்கள் பெண்டுகள் வயிற்றிலுநெருப்பு மூளச்செய்து சிவஞானப்பாலுண்ட சம்பந் தப்பிள்ளையாரை என் இங்கு வாதிருக்கிறானென்றிகழ்ந்து அந்த வஞ்ச அ மணர்கள் நெருப்பைக்கட்டிக்கொண்டிருக்க அப்போது பதிஞயிரந் திருக் கூட்டத்துடனே யெழுந்து திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் பாண்டியனும் பாண்டிமாதேவியும் மந்திரித்தலைவரும் அவர்கள் நெருபபு வளர்த்துக்கொண் டிருக்கிற இடத்துக்குவந்து சபைகூடி யிருந்தார்கள் அங்கே மனங்கனிந்து முலைசுரந்து பாலொழுகுகின்றபோது குடிக்கின்றகன்று குடியாமல் துள்ளிக் கொண்டோடினுல் அக்கன்றைத்தொடர்ந்து பின்னேவருகிற பசுவைப்போல வெள்ளிபம்பத்துளாடும் தேவகிதான கடவுள் தமது தேவிபாருடனே தம் பிள்ளை போனவழியே தொடர்ந்தனர்.

அப்போது ணண்ணூபிரம் சமணரும்வெவ்வேறே தாங்கள் முபன்று கற்ற மந்திரங்களை ஓலையிலே தனித்தனி யெழுதிக்கொண்டுபோய் எல்லாரு ம் ஆகாயத்தை அளாவக்கொதித்து நிமிர்ந்து எரிகிற நெருப்பிலிட்டார்கள். அப்படி அவர்கள் நெருப்பிலிட்ட எடுகளெல்லாம் அந்தகூணத்திலே கரும்பி லே காய்ந்த தொழுந்தடைபோலத்தீப்ந்து சாம்பலாய்ப்போனவற்றைக்கண் டு நீசரான அமணர்கள் மனங்கிடந்துகொதிக்க கண்டவர்களெல்லாம் சிரிக் கத்தொடங்கினர்கள். அந்தவேளையில் விரிந்த வேதநாதரான திருஞானசம் பந்தப்பிள்ளையார் தாம்பாடின மெய்யான வேதப்பொருளை எழுதின புத்த கத்தை அவிழ்த்து வகிர்ந்து பார்க்கும்போது தமக்கு ஞானப்பால்கொடுத்த அம்மைபெயரெழுதின வடகப்பட்ட அந்த ஏட்டையெடுத்து எரிகிறநெருப்பி லிட்டருளினர். அப்படி இட்டபோது வேதப்பொருளை வெளியிட்ட நூலெ ழுதின ஏடு அனந்தகாலம் நீரிலே ஊரிக்கிடந்த ஏடுபோலப் பச்சென்று பச ந்து தோன்ற பாண்டியனும் மாதேவியாரும் மந்திரியாரும் மற்றுமுள்ளவர்க ளுங்கண்டு பிராமண குலோத்தமரான திருஞான சம்பந்தப் பிள்ளையாரைக் கொண்டாடிப் புகழ்ந்து பேரின்பக்கடலிலே முழுகினர்கள்.

அப்போது கொடுமைபால்வந்த சித்தபிபுடைய அமணர்கள் வா தமெய்துவெல்ல வேறே பொதுவிடந்தேடி ஒப்புக்கொண்ட பொதுவிடம் அன்றுமுதல் திருஞானசம்பந்தர் அமணைவென்ற இடமாகையாலே இன் றும் அந்த இடம் திருஞான சம்பந்தரென்றபெயர்பெற்று விளங்குகின்றது அப்படிவேகாமல் பச்சென்றுதோன்றின ஏட்டைபெடுத்துப் புத்தகத்தோடு சேர்த்துக் கட்டிக்கொண்டு பின்பு சம்பந்தப்பிள்ளையார் பாண்டியனைப் பார் க்க அவ்வேளையிலே தீவினைபபும் பாபபுமுடித்தி அமணர்கள் தாங்கள் சொன்னபடி சபதமுடிக்கவேண்டியிருக்கவும் பாண்டியன் சபையாரெல்லாம் நகைக்கும்படி கத்தி திருஞானசம்பந்தப்பிள்ளையாரை நோக்கி பேட நாங்க ளெழுதியிட்ட பச்சைபேடுகளெல்லாம் வெந்துபோக நீயெழுதியிட்டவேடுவே காதிருப்பது நீ அக்கினியை எரிக்கவொட்டாமல் கட்டிக்கொண்டதனலல்ல

வோ அதுநிற்க உன்னுட்டையும் எங்களிட்டையும் இன்னும்பொங்கிப் பெரு கிவருகிற இந்த வையையாற்றிலே போடுவோம் போட்டால் நீர்வழியேசெ ல்லுமேடு தோற்றதாக நீரினதிரேசெல்லுமேடு வென்றதாகுகனன்றுபெரு மைகொண்டுபேசி வென்றபேர்க்கு தோற்றபேர் எவலடிமையாகிறதே சபத மென்று சமணர்கள்சொல்ல அபபடி சொல்விக்கொண்டு மலைபோல்நிற்கிற அவர்களைநோக்கி மன்றுள்ளாடும் அடிகள் மைந்தரான திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவாய்மலர்ந்து இங்கே எவலடியார் பதிணயிரம்பேர்களுண்டு வேறேவேண்டியதில்லை சிவநிந்தைபண்ணின பாபிகளான உங்களுக்கு அடி மைகளென்று கொள்ளுந் தண்டம்போதுமோ போதாது இன்னமும் கொன் றைமதிமுடியாருளாலே உங்களபாம் வெல்லுவோமாலுல் முவிலேவேல்வடி வால் நிறைந்த கழுமுனையிலிடுவோ மதுவேவழக்கென்றுசொல்ல அதைக் கேட்ட அமணர்கள் அவர்கள் விதிவலிபிழலே கழுவேறச்சம்மதித்து நிற்க உடனே குலச்சிறைநாயனரான மந்திரித்தலைவர் தச்சர்களைக்கூட்டி வயிரங் கொண்டு நீண்ட ஆலமரங்களிலே சூலவடிவாகக் கழுமுட்கள்செப்து தனித் தனிஉன்றி அந்தஎண்ணபிரம்போர்க்கும் வரிசையாகஎண்ணபிரம் கழுமரங் களை கொண்டுவந்து பாண்டியனுக்கு முன்னேபரப்ப அப்போது தெளிவில் லாத சமணர்களைப்பார்த்துத் திருஞானசம்பந்தப்பிள்ளையார் ஓப் சமணர்க ளே இனிநான்சொல்வதைக்கேளுங்கள் என்னவென்றால் நீங்கள் விபூதிஉரு த்திராட்சங்களை அணிந்துகொண்டு கடவுளுடைய ஸ்ரீ பஞ்சாட்சரோபதே சம்பெற்று உங்கள்பாசந் தீர்ந்தீடறுங்களென்று நீதிநூலின்படி நினைத்துச் சொல்ல அதற்குச் சமணர்கள் நெருப்புப்போலேகொதித்து நீமுன்னேநெரு ப்பிலே வென்றேறுமே இனிநீரிலே எப்படி முடியுமோவென்றெண்ணி நயஞ் சொல்லிப் பயங்காட்டி எங்களை இணக்கி உடன்பாடாகநினைந்தாயே யல்லது வாதுசெய்து வெல்லநினைத்தவனல்லை நீயோ எலும்புபூண்டவனடிக் கீழடை ந்த புத்தியில்லாதவன் உன்சொல்லுக்கு நாங்கள் உடன்படுவோமோ போ வென்று தடுத்து உடனே குரங்குகள் சஞ்சரிக்கின்ற ஆலமரங்களைப்பிடுங்கிக் கரையாகவெதுங்கவொதுக்கி கழுகமரங்களைமுறித்து வேரைக்கிழித்துமல கைப்பறித்துப் பக்கங்களிலேபரப்பி ஆகாயத்தைத்துழாவி விரைந்துவரு கின்ற வையையாற்றுநீரை முன்போலவேமந்திரத்திறலே அதன்வேகத்தை யடக்கி தங்கள் மந்திரத்தை எட்டிலெழுதி காணுமல்விட்டார்கள் அதற்காக தடாகங்கள் சூழ்ந்த வேணுபுரத்தலைவராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் எல்லாருந்தெளியும்படி வேதமேமெய்யாகி அந்த வேதங்கள் துணிந்துசொல் லுகிறபொருள் சந்திரசேகரக் கடவுளென்பதுவும் மெய்யாலுல் இந்த ஏடு நீரினதிரே செல்லக்கடவதென முறையே திருப்பதிகமெடுத்தெழுதி விட்ட ருளினர்.

அங்கேமுழங்கிவருகிற நீரிலே அப்படிக் கவுணியர்குலத்தலைவராகிய திருஞானசம்பந்தர்விட்ட ஏடானது மதுரேசரருளாலே கயிறுகட்டியிழுக்க அந்த வையையாற்றினெதிரேறிசசெல்ல சமணர்களெண்ணபிரவரும் விட்ட ஏடுகள் அழிவைச்செய்கின்ற ஐம்பொறி போனவழியே செல்லுமனம்போல இந்தஆறுபோனவழியேபோயின இப்பால் சிங்கம்போலுந் திருஞானசம்பந்

தப்பிள்ளையார் எழுதினிடடவடி ஆற்றுக்கெதிரே செல்லுதலைக்கண்டு தேவர்கள் பூமழைபொழிந்தார்கள் முனிவர்கள் வஸ்திரங்களைவீசி பெறிந்துகொண்டாடினர்கள் சிவபூபார்கள் ஆனந்தக்கண்ணீர் வெள்ளத்திலே முழுகினர்கள் வெங்கண்ணரான சமணர்கள் நடுகெ வெபர்வை கடலிலழுந்தினர்கள் இன்னும் வெந்துபோமென்றெண்ணமல் வெல்வோமென்று சபதஞ் செய்து தாமெழுதியிட்ட வடிகள்வெந்துபோகக்கண்டுஆற்றுக்கெதிரே வடிகள் செல்லவெல்லுவோமென்று இட்டவடிகள் கடல்போய்ச்சேர்ந்தன என்று தங்களை மானமே தங்களைச்சுட தலைநிமிர்ந்து நின்றுலும் நாணத்துடனேயே நின்றார்கள் அப்போது மலையை வில்லாகக்கொண்டு திரிபுரத்தைவென்ற கடவுளை எல்லாதெய்வங்களுக்கும் விரும்பத்தக்கபோகமும்வீடும் தருதற்குத்தக்க மேம்பாடுள்ள கடவுளென்று நான்கு கொம்புகொண்ட வெள்ளையானைமேலேறுகின்ற இந்திரன் முடிதகர்த்த பாண்டியகுலத்தரசன் காணகுருபதேசம்போல நெருப்பும்நீரும் தெளிவச்செய்தன பொய்யில்லாத வேத நெறிசெல்லாத அமணருக்கும் புத்தருக்கும் இன்னும் வேதசாஸ்திரங்கள் தெரிந்தும் சிவனே பரம்பொருளென்று தெரியாமல் கையில் விளக்கிருந்தும் கிணற்றில்விழுகின்றவர்போன்ற அறிவீனர்களுக்கும் நெருப்புநீருமல்லவோ சாட்சியாய் விளங்கச்செய்தனவென்றுகொண்டு மதுரைபாண்டியனும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் அடியார் கூட்டங்களும் சீகாழிச் சம்பந்தப்பிள்ளையாரை வணங்கித் துதிசெய்து முடியாத பேரானந்தக்கடலிலே முழுகி அதிசயித்தார்கள்.

பின்பு நன்றிதெரியாத சமணர்கள் மானமழிந்து வெட்கங்கெட்டுதிருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு முன்னேநின்று இன்று நாங்கள் உமக்குத் தோற்றோம் நீரே வென்றீரென்றுசொல்ல அதைக்கேட்ட சம்பந்தப்பிள்ளையார் அவர்கள் பிழைக்கும் வழிபைக்கண்டு இன்னும் உங்களுக்குத்தருமவழியாகவே சொல்லுகின்றோம் நீங்களென் வீணையிறந்துபோகிறீர்கள், எல்லாருக்கும் தாய்போற்சிறந்த எங்களுக்கு அடிமையாய் பிழைபுங்கள் என்று சொல்ல அதற்குச் சமணர்கள் வடசிறுபிள்ளாப் நீ என் தகாதமொழிசொல்லுகிறுயென்று மானங்கொண்டு தாங்களை கழுக்களிலேறத்துணிந்து கோபத்திறலு மானத்திறலும்போய்க் கழுமரங்களிலேறியிறந்தார்கள் அப்படிப்போயேறுத சமணர்களையெல்லாம் சைவாசாரத்தைக் கொண்டவர்கள் ஒவ்வொருத்தராகப் பிடித்து அந்த முத்தலைக் கழுமரங்களிலே ஏற்றியிருத்திக் கொன்றார்கள். அந்தச்சமணர்களுக்குப் பாரம்பரியமாக அடியார்களானவர்கள் சாவபபயந்து மனங்குலைந்து விபூதிபூசிக்கொண்டார்கள் அந்த விபூதிகிடையாமல் பசுவின்கோமயத்தை யெடுததிட்டுக்கொண்டார்கள் அதுவுமகிடையாதே சிலர் பசுவின் கன்றைத் தோள்மேலே தூக்கிபபோட்டுக்கொண்டார்கள். விபூதி கோமயம்-பசுவின் கன்று இந்த மூன்றுங் கிடையாத சிலர் விபூதிபூசினநெற்றியுடனே நெற்றியை மோதிப்பூசிகொள்ள கோமயத்திலுமப்படியே மோதியிட்டுக்கொண்டும் இப்படியாகத் தங்கள்பாசங்களைவென்று பிழைக்க எண்ணினவர்களைக் கொல்லாமல் விட்டுவிட கழுவிலேறியிறந்தவர்களையெல்லாம் பருந்து-காகம்-கழுகு-நாய்நரிகள்-முதலானவெல்லாந தொடர்ந்து கௌவிப் பிடித்திழுத்துத்தின்னக் கழுவிலே கிடந்தார்கள்.

அப்போது பாண்டியன் திருஞானசம்பந்தப்பிள்ளையாரைத் தூதித் துக்கொண்டு சுவாமி இப்போது நீர் இட்ட ஏடு எல்லாருங்காண ஆற்றுக்கே திரேசென்றதே அது எங்கேயென்றான். அதற்குத் திருஞானசம்பந்தப்பிள்ளையார் பாண்டியனே பார்ப்பாயாக இப்போதே நாம் மதுரைவெள்ளியம்பலவாணரருளாலே வருவிக்கிறுமென்று சொல்லியருளி ஆற்றங்கரைமேலே மேற்றிசையைநோக்கிச் சென்றார். அப்படிச்செல்லுகின்ற திருஞானசம்பந்தர்காண இட்ட ஏடு காதவழிசென்று அப்புறம் காணுமல் மறைபடவே ஆச்சரியப்பட்டு அங்கே கும்புகூடிக் கொல்லைகளிலே மாடுகள்மேய்த்துகிற்கிற சிலரைக்கண்டு நீங்கள் இந்த எல்லைக்குள்ளே ஏதேனும் விசேடமுண்டாஞல்சொல்லுங்களென்றுகேட்க அந்த இடப்பிள்ளைகள் நாங்கள் ஒன்றுங்கண்டிலோமென்ன திருஞானசம்பந்தப்பிள்ளையார் எப்படியாஞலும்இங்கேவிசேடமுண்டாயிருக்கவேணுமென்று சமணராகிய பகைவரோடு வாதுசெய்யவிடையருளின விடைக்கொடிக்கடவுளை வேதவாக்காலே பாடியருளினர். அப்போதந்தப் பாட்டுமேல் கருணைகொண்டவராப் அங்கே சுயம்புலிங்கமாக பருத்த அரையையுடைய வில்வவனத்திலே எதிரேகண்டுவணங்கித்துதித்து சண்பைநாட்டுச் சம்பந்தப்பிள்ளையார் வலங்கொண்டு பின்னுந்துதித்து எதிரேநிற்கவேப்பமாலையையுடைய பாண்டியன் அந்தச்செய்திதெரிந்து அங்கே சேனைகளுடனே வந்துசேர்ந்தான் அப்போது அந்த மகாலிங்கத்திலிருந்து கடவுள் ஆபிரம்பிறைதாழுத ஒருகிழப்பிராமணராகத் திருவுருவங்கொண்டுதோன்றி முத்தமிழ்விரகரைக்கண்டு நீ என்பிள்ளையே பிள்ளையிலும் என்னுடைய இளையபிள்ளைபோல் வாழ்வாயென்று திருநீறுசாத்தி மனத்திலே மிகுந்த அன்புதோன்றத் திருவருள்சுரந்துநிற்க அப்படிநிற்கின்ற பிராமணரை அக்காலத்தே தமக்கு ஞானனந்தக்கடவுளிவரே என்று கொண்டுவணங்கி ஐயரே இந்த ஆற்றுநீரிலே யானிட்டஏடு எதிரேறிவந்ததை எடுத்தவர் நீரேயாகவேண்டும் ஆஞல் அந்த ஏடு உம்முடைய மகனுக்குத்தக்கதென்று அதைக்கொடுத்தருளவேண்டுமென்று மிகவும் வேண்டிக்கொண்டார் ஆறுமுகக்கடவுள் போலுஞ் சம்பந்தப்பிள்ளையார் அதற்கு மாயவேடங்கொண்டுநின்ற பிராமணர் சம்பந்தப்பிள்ளையாரைப்பார்த்து நீர் இன்னமும் நம்முடைய ஆலயங்களெல்லாம்சென்று பாடி கெட்டவழியிலே செல்கிறவர்களை நல்வழிபோகச்செய்து பின்பு நமதுபரிசுத்தமான வீட்டைபெறக்கடவீரென்று ஆசீர்வதித்து அந்தஏட்டைக்கொடுத்து மின்னல்போன்றிமறைந்ததுபோல்மறைந்தார்.

அப்படி தந்தையானகடவுள் பின்னும்தமக்குத்தந்த ஏட்டைவாங்கிக்கொண்டு சிவஞானப்பாலுண்ட திருஞானசம்பந்தர் பாண்டியனுக்குக்காட்டி இந்த ஏட்டை மதுரைசார்தாமேகொண்டுபோய் நான்மிகவும் வேண்டிக்கேட்கக்கொடுத்தனரென்றுசொல்ல பாண்டியன் பாம்பைக் கச்சாகக்கட்டின கருணைக் கடலினிடத்திலே தோன்றிய காரணப்பொருளான ஞானப்பாலுண்ட உம்முடைய பெருமையாலுண்டாவதைத் தெரியாமல் அடியேன் ராஜனென்கிற பலங்கொண்டு உம்மை இவ்வளவுசோதிக்கலானேன் ஆகையால் இனிமேல் இந்தப்புல்லறிவாண்மையாற்செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று மிகவும்வணங்கி வேண்டிக்கொண்டான் அப்படி வேண்டிக்கொண்டு

பின்பு மேருமலையை வில்லாகக்கொண்ட கடவுளுக்குப் பொன்மலை நெடிய சிகரத்தையுடைய கோயிலும் மண்டபமும் மேகமண்டலத்தைக் கிழித்துச் சென்று கடவுள்போலவே சந்திரனைச்சூடுகின்ற கோபுரங்களும் கல்லாலிலே மதில்களும் பிராகாரங்களும் எல்லாரும் கண்டுகளிக்கச்செய்தான் அன்றுமு தல் அந்தத்தலத்துக்குத் திருவேடகமென்று பெயருண்டாயிற்று பின்பு பா ண்டியன் அந்தத்திருவேடகத்தி லெழுந்தருளிய கடவுளைச் சமணரோடுகூடி யிருந்த பாவங்களெல்லாம்போகப் பூசைசெய்து தனது பாசமுந் தீர்த்துக் கொண்டான் கிரேதாயுகத்திலே விஷ்ணுவும் திரேதாயுகத்திலே கருடனும் துவாபரயுகத்திலே நாகர்வேந்தனும் பூசைசெய்து திருவருள்பெறலானிரா மபமான அந்தலிங்கத்தைக் கடையுகமான கலியுகத்திலே இந்தபாண்டியன் பூசைசெய்து அவ்விடத்திலே பெரியவூரு முண்டாக்கி அங்கே தானே திரு ஞானசம்பந்தப் பிள்ளையாருடனே சிலகாலம் ஸ்தலவாசஞ்செய்துபின்பு மது ரைக்குவந்து சேர்ந்திருக்குநாளிலே விபூதிராதனமாகியசெல்வம் எங்கும்பிர பலமாகச் சிலகாலம் மதுரையிலேயே வாசஞ்செய்து பின்பு திருஞானசம்பந் தர் வடதிசையிலுள்ள சிவஸ்தலங்களையுங்கண்டு வணங்கிப் பாடவேண்டுமெ ன்றெழுந்துமதுரேசரையும் அங்கயற்கண்ணம்மையையும் வணங்கிவேண்டிய வரங்களெல்லாமபெற்று விடையுங்கொண்டு தமிழ்நாடெல்லாம்கண்டு வணங் கிச்செல்பவருடனே மங்கயர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் பாண்டிய னும்திருஞானசம்பந்தமூர்த்திபைப் பிரியமாட்டாதவர்களாய் அன்புசெய்து அவரிடத்திலேநேசமான அன்றுமுதலுண்டான இன்பமெல்லாம் இப்போ துன்பமாகிமுன்னே இழுக்கற்செல்ல சம்பந்தப்பிள்ளையாரும் அப்படியே அன்புசெய்து தமது பின்னேவருகிற நண்பருக்கெல்லாம் இனி நம்மிடத் திலே நீங்கள் அன்புமறவாமல் பூதிசாதனவாழ்வு நிலைபெறவும் கடவுள்கீர்த் திபலப்படவும்வாழுங்கள் இதைவிடாமல் நில்லுங்களென்று சொல்லிவிடை கொடுத்துச்செல்ல அப்படியேதங்களை அடிமைகொண்ட சம்பந்தப்பிள்ளை யார் அருள்வார்த்தையைத் தடுக்கபயந்து அவருடைய தாமரைமலர்போ லுஞ் சேவடிகளை வணங்கி மீண்டுசேனைகளுடனே பாண்டியன் மதுரைக்கு வந்தான் தாமரைமாலைபணிந்த சமணசிங்கமான திருஞானசம்பந்தர் சோழ நாட்டுக்குவந்தார், இப்படி ஞானமாகிய மதஜலமொழுக திருஞானசம்பந்த னென்று மானமாயானைவந்து கடம்பவனத்திலே நெருங்கி இழிதொழிலா ளரான சமணரென்னுமரங்களையெல்லாம் ஒடித்தெரிந்து திருவெண்ணீறுன பெருமைகொண்ட தூளியை அள்ளி உலகமெல்லா நிரம்பத்தூற்றிவிட்டது இப்படிமுதலிலே பாண்டியன் சுரந்தணிக்கவேண்டி மதுரைத்திருக்கோவிலி ன்சாம்பலை யள்ளிக்கொண்டுவரச்சொல்லிக் கூனுஞ்சுரமுந் தீர்த்தபடியினாலே விபூதிகளெல்லாவற்றிலும் அந்தத்திருக்கோயிலின் மடைப்பள்ளிவிபூதியே சிறந்ததாயிற்று.

சமணரைக்கழுவேற்றிய படலம்.

முற்றிற்று.

அறுபத்துநான்காவது
வன்னியுங் கிணறும் இலிங்கமும்
அழைத்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

சென்னிவெண்டிங்கண்மிலைச்சியமதுரைச்சிவனருளடைந்தசம்பந்தர்
தன்னிருஞ்சமனைக்கழுமுனையேற்றித்துணித்தவாறிசைத்தனம்வணிகக்
கன்னிதன்மன்றக்கரியினமாற்றுள்காணவக்கண்ணுதலருளால்
வன்னியுங்கிணறுமிலிங்கமுமாங்குவந்தவாறெடுத்தினிதுரைப்பாம்.

இதன்பொருள்.

தம்முடைய சென்னியின்மீது வெண்மைபொருந்திய சந்திரனைத்தரித்தருளிய மதுரைநாயகராகிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளைப்பெற்ற திருஞான சம்பந்தப்பிள்ளையார் கொடுமை பொருந்திய சமணர்களைக் கழுமுனையிலேற்றிக் கொன்றருளிய திருவிளையாடலைச் சொன்னேம். இனி ஓர் வைசியப் பெண்ணைனவள் தனக்கு நடந்த கலியாணத்திலிருந்த சாட்சியைத் தன் மாற்றுள் காணும்படிக்கு அந்தச் சோமசுந்தரக்கடவுளின் திருவருளினால் வன்னிமரமும் கிணறும் சிவலிங்கமும் அந்த மதுரைமாநகரில் (சாட்சியாக) வந்த திருவிளையாடலைச் சொல்லுகின்றோம்.

பொன்னிறமான மலர்களையுடைய தாழைகள் வேலியாகச் சூழ்ந்த கடற்கரையோரத்திலே ஒருபட்டணத்திலே யிருக்கிறவன் அவனே மின்னுகின்ற ரத்தினபரணங்களையுடைய ஒரு குலவர்த்தகன் அவன் பலவகையான செல்வங்களிலே சிறந்தவன் தனக்குப் பிள்ளையில்லாமல் தனது கற்புடைய் மனைவியுடனேகூடி பலவித தருமங்களையுஞ்செய்து பிரகாசம் பொருந்திய சந்திரன்போலு. முகத்தையுடைய ஒரு பூங்கொம்புபோல ஒரு பெண்பிள்ளையைப் பெற்று வளர்த்து தங்கள் தனவைசியகுலத்துக்குத்தக்க ஒருமருமகன் ஆனல் அவன்முன்னே ஒருதாரம் கலியாணஞ் செய்துகொண்டவன் அவன் முத்தமிழும் வழங்குகின்ற மதுராபுரியிலிருக்கிறவன் ஆனலும் அவனுக்கே தன்னுடைய தவப்புத்திரியான ஒருபெண்ணை கொடுப்பதாகத் தன்குலத்தாருக்கெல்லாம் விளங்கச் சொல்லிவைத்துப் பின்பு சிலநாள்கழிய ஊழ்வினைவலியால் ஆருயிர்தீர்ந்தான். அப்போது அவனுக்கு உடம்புபோன்ற கற்புடைய மனைவியானவள் தானும் தன்கணவனுடனேகூட இறந்து போகிறதற்குத்துணிந்து உயிர்விட்டிறந்தாள். பின்பு அவ்விருவருக்கும் கடல்போற்கிடந்த சுற்றத்தார்கள் செய்யவேண்டிய கடன்களைச் செய்துமுடிந்தபின்பு அந்தச்செய்தி மதுரையிலிருக்கிற உரிமைமகனுக்குத்தெரியும்படியாக ஓலையெழுதியனுப்பினர்கள். அந்த வோலைவந்து சேர வாங்கிவாசிக்க அதில்தன்னுடைய தயவின் மிகுந்த மாமனும் அவனது கற்புடைய - மனைவியும் இறந்தாராக



அவனுக்குச்செல்வமிருந்தும் வெகுநாளாகப் பிள்ளைபில்லாதிருந்து அதேகருமங்களைச்செய்துபெற்ற ஒருபெண்ணும் வளர்ந்து பக்குவமாயிருக்கின்றது அந்தப்பெண்ணைத் தனக்கே கொடுபபதாகப் பேசியிருந்தான் ஆகையாலே தானே இவ்விடம்வந்து அந்தப் பெண்ணைக் கலியாணஞ்செய்துகொண்டு அவனுக்குள்ள செல்வங்களையும் ஒப்புக்கொள்ளத்தக்கதென் றெழுதியிருந்த சமாசாரங்களெல்லாந் தெரிந்துக்கொண்டு கீழேவிழுந்து தரைமேற்புரண்டு புரண்டழுது பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் வெள்ளத்திலே முழுகி விம்மி அம்மவோ வென்று பிரலாபித்துச் சோபிக்க அப்போது அவன் பந்துக்கள் சிநேகிதர்கள் முதலான உறவின்முறையாரெல்லாரும்வந்து தழுவிக்கொள்ள இவனும் அவர்களைத் தழுவிக்கொண்டபடிதான் பின்பு அங்கேவந்தவர்களெல்லாருந் தேற்றத்தெளிந்து தன்னைச்சூழ்ந்த துன்பத்தை ஒருவகைபாகவிட்டுத் தன்னுடைய மாமனிருக்கும் ஊருக்குப்போகத் துணிந்து அங்குள்ள உறவினர் சிலருடனேகூடி அந்த மதுரையைவிட்டு இந்தப் பட்டினத்துக்கு வந்து புகுகிறவன்வரை தெரிந்துவந்து தன்னைவிசாரிக்கிறவர்களைத் தழுவித் தழுவிக்கலந்துபேசி அவர்களை அனுப்பிவிட்டுவந்த முல்லை மாலைபணிந்த வர்த்தகன் தன் மாமன் வீட்டிலே போயிருந்தான்.

சிலநாளுகழிந்தபின்பு வர்த்தகரில்சிங்கம்போன்றஅவன்தனக்கென்று குறித்திருக்கிற பெண்ணை மதுரைக்குக கூட்டிப்போய் கலியாணஞ்செய்துகொள்ளுகிறேனென்று அங்குள்ள வுறவினருக்கெல்லாந் தெரியச்சொல்லிக்கொண்டு தன்மாமன் சம்பாதித்துவைத்திருந்த பொருள்களெல்லாம் தன்வசமாகப் பண்ணிக்கொண்டு மதுரையை நோக்கிப் புறப்படும்போது தன்கூட வழிவிடவருகிறவர்களை நிற்கச்சொல்லிப் பின்பு மதுரைக்கு முன்னே போகவேண்டியவர்களை முன்னேபோகும்படி அனுப்பிவிட்டுத் தானும் தன்னுடைய பரிஜனங்களும் தனக்குரிய பெண்ணுமாக நாளொன்றுக்கு அரைக்காதவழியாக வருகிறவன் ஒருநாள் சூரியன், அஸ்தமிக்குமுன்னே இங்கேயிருந்து நாளைக்குப்போவோமென்று திருப்புறம்பிய மூதூருக்குப் போய் அங்கே கடவுள் திருக்கோயில் கிணற்றிலே நீராடி ஒரு வன்னிமரத்தடியிலே சமயல்செய்து போஜனமானபின்பு மேருமலையை வில்லாகவுடைய கடவுள் கோயிற்புராத்தில் ஒருபடியின்மேலே தலைபவைத்துக்கொண்டு தூங்கும்போது விதிவலிவந்து கூட அங்கேவந்து கொல்லும்விஷத்தைக்கொண்ட வாயையுடைய ஒருநாகமானது கடித்தது அப்படிக்கடித்தவுடனே அதிகவிலே பெற்ற நல்ல ஆபரணங்களையுடைய அந்த மதுரை வர்த்தகன் நஞ்சு தலைக்கேறி இறந்துபோனான்.

அப்போதுஅங்கேகூடவிருந்தஅவன் வேலைக்காரர்கள்ஐயோவென்று கூச்சலிட்டு அழுதுசுற்றிக்கொள்ள வேலைக்காரிகள் மாரடித்துக்கொண்டு ஒப்பாரிவைத்தழும்போது அந்த ஆண்சிங்கம்போன்ற வர்த்தகன் உடம்பைத் தீண்டாமல் கூடவேவந்த தாமரைமலைபூத்த கொடிபோன்ற பட்டினத்து வர்த்தகன் பெண்ணானவள் எழுதின சித்திரம்போல் அசையாமல் ஒருபுறத்திலே நின்று அந்த ஆண்சிங்கம்போன்ற மதுரைவர்த்தகன் பாம்பு கடிக்கப்பட்டு உடனே இறந்ததும் வெற்றிவேல்போலுங் கண்களையுடைய

பெண்களெல்லாம் கைகளை நெரித்துக்கொண்டழுகிறதும் கீழேவிழுகிறதும் சுற்றிலும் உறவினர்கள் சூழ்ந்து அழுகிறதும் சோர்கிறதும் எல்லாங்கண்டு இளங்கிளிபோன்ற பேச்சுகள்தோன்ற வேடன் எய்த அம்புதைத்த மயில் போல் விழுந்து வருந்தி மயங்கி கூறியகண்கள் உள்ளேசெருகி உயிருமோய்ந்து அக்கினியிலேவிழுந்தபூமாலைபோல் உடலுஞ்சோர்ந்து கைகளுஞ்சோர்ந்து கால்களுஞ்சோர்ந்து இளமைபொருந்திய பெண்ணன்னம்போன்ற அந்தப் பெண்ணனவள் இடிமுன்னே விழக்கிடந்தாற்போற் கீழேகிடந்தாளல்லது வேறுன்றுமில்லை மூர்ச்சையாய்ப்போனள் இறந்த வர்த்தகன்மேலே பூங்கொம்பு சாய்ந்தாற்போல் விழுந்தழுகின்ற வேலைக்காரிகள் பார்த்து ஐயோ செட்டி உயிருடனேகூட நமது தங்கை உயிரும் போயிற்றேவென்று கைகளாலெடுத்து முதுகைத்தழுவி மடியிலே கிடத்திக்கொண்டு வஸ்திரத்தாலே முகத்திலே வீசி இளைப்பாற்றிக் கொஞ்சம் மூச்சுவரச் செய்தார்கள் அப்போதந்தப்பெண் உடம்பை விட்டுப்போன உயிரானது திரும்பித் தன் உடம்பிலேவந்து புகுந்தாற்போல மூக்கினிருபுறத்திலுஞ் சுவாசம் தோன்ற கண்களும்குளங்களிலே நீலம்பூத்தாற்போல விழிக்க அவ்வேளையில் அந்தப் பெண்ணை நாணம் அடம் அச்சம் பயிர்ப்பு ஆகிய நான்குஞ் நான்குதிக்கிலும் வேலிபோல் வளைந்துகொள்ள கைகால் மோதிக்கொள்ள கூந்தல் அவிழ்ந்து விழ உருக்கின நெய்த்துளிபோல கொங்கை முகட்டிலே கண்ணீர்சோர மெள்ள அழுவாள் சுற்றிலும்பார்த்து வெட்கமாகிய கட்டுக்குளடங்கிப் பேய் பிடித்த பெண்போற் குலுகுலுங்து தேம்பி விம்மி மேனிமழுங்கி குறைபாத செல்வத்திலே பிறந்து ஒருநாளாவது துன்பமென்பதைச் சொர்ப்பனத்திலுந் தெரியாதவள் தனக்கு நாயகனுவான் மேலே அன்பென்பதாகியதோருருவாகி நிறையாகிய வரம்பழிந்து ஒருபெண்தெய்வமிருந்து வாய்விட்டலறிறற்போலப் புலம்புகின்றுள்.

எப்படியென்றுல் ஒளண்ணுயகனே ஒளன்னிரண்டு கண்மணியே ஒளன்னைப்பெற்ற தந்தைக்கு உயிர்போலும் அருமைமகனே ஓ கட்டிளமையோனே ஓ முல்லைமாலையணிந்த தலைவனே ஓஓ வணிகர்கள் குலத்தினமே இப்போது விடப்பாம்பால் கடிக்கப்பட்டாயோ அலல் உன்னுடைய உடம்பினிழல்போன்ற என்னை இங்கேவிட்டுமறைந்துபோகலாமா ஆலல் நீர்போனது சுவர்க்கலோகத்திலுள்ள பெண்களைக் கலியாணஞ்செய்துகொள்ளவோ அலலது நமது குலத்தாணுகிய குபேரனுடைய அளகாபுரியிலுள்ள பெண்களைக் கலியாணஞ்செய்துகொள்ளவோ அல்லது உன்னைக் கடித்த நாகலோகத்திலுள்ள பெண்களைத்தழுவவோ ஒளன்பிராணநாயகா என்னை இந்தநாட்டிலே விட்டு வஞ்சகமாக நீர்மாத்திரம் தனியேபோகிறதற்குக்காணுமென்ன அல்லது தென்னுலகமாகிய எமலோகத்துக்குப்போனீரே அங்கே மாமன் மாமியைக்கண்டபோது உன்மாமன் தன்னிரண்டுகண்களுங் குளிரத் தழுவினுனுநானும் உம்முடனேகூடவந்தால் அவ்விருவரையும் என்கண்கள் குளிரக்காணுனு அப்படிக்காகாமல் என்னைபிங்கேவிட்டுவிட்டீர் என்னைபல்லாமல் உம்முடைய பரிஜனங்களைபுங்கைவிட்டீர் நீர்தனிப்போபாய் எவ்வளவு சுகங்கண்டீர் ஐயோ உரிமைமருமகன் பாம்புகடித்திறக்கவும் நான்மபங்கினமனத்

துடனே இங்கேயிருந்து இப்படித் துன்பப்படவும் என்னைத் தவஞ்செய்து பெற்றவர்களுக்கு நல்ல பலன் சித்தித்ததல்லவோ இந்தக்கண் கலக்கத்தை அவர்கள்முழுதும் காணுமல் முன்னே இறந்தல்லவோ சோகநிவிர்த்தி யாளர்கள் கிடையாதபலன் அவர்கள்முன்னே இறந்துபோனதே என்தாய் தகப்பனைப்போல ஒருவரும் இப்படிப்பட்ட பலனைப்பெறமாட்டார்கள் ஐயை யோ உமக்குப்பிரியமான மாமன் என்னைப்பெற்றுவளர்த்து அக்காலத்திலே தானே உறவினர்களறிய உமக்காகவே என்னைநிச்சயித்துப் பின்பு தன்பிரிய நாயகியுடனே இறந்துபோனான் நானும் அப்படியே என்உயிர்போக வேறு உடம்பு இங்கேகிடக்குமோ இதோகூடவே மடிகிறேனென்று தன் பிரியமான சேவலையிழந்த அன்றில்பேடுபோல ஓற்றைக்குரல் விட்டழுதாள்.

அப்படி அழுகிற சத்தங்கேட்டு அந்தத் திருப்புரம்பிய மூதூராரெல்லாம் நித்திரைதெளிந்தெழுந்து துன்பங்கொண்டு வருந்த அந்தவேளையில் திருஞானசம்பந்தப் பிள்ளையார் சிவஸ்தலங்களெல்லாம்போய்த் திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு அன்றைத்திருப்புறம்பிய மூதூருக்குவந்து அங்கொரு சைவமடத்திலிறங்கியிருந்தவரும் இந்த அழுகைக்குரல்கேட்டு இதுஎன்னவென்று ஆள்விட்டு விசாரித்து உடனேதாமே திருக்கோயிலுக்குவந்து கூடியழுபெண்ணே நீயார் நடந்த சங்கதிகளென்னவென்ன அந்தச் செட்டிபெண் வணங்கி தன்குலமும் தன்னைப்பெற்றவன் மருமகனுக்கென்று தன்னை நிச்சயித்து வைத்திறந்துபோனதும் பின்பு தனக்குரியவனை இவன் வந்து கூட்டிக்கொண்டுவந்து இங்கே இறங்கினபோது நடந்ததும் எல்லாம் தெரிய விண்ணப்பஞ் செய்துகொண்டாள் அதுகேட்டவுடனே திருஞான சம்பந்தப்பிள்ளையார் தனியே இறந்தழுது உயிர்விட எண்ணுகின்ற அந்தச்செட்டிப்பெண்ணுக்குத் தாமே தாயுந்தந்தையுமாக பாம்புகடித்திறந்தவன்பக்கத்தில்வந்து அவன் உடம்பெல்லாம் அவிழ்ந்தவடிவமாக நினைவுகொண்டு கிருபாதோக்கம் வைக்க அப்போதே தீவ்ாய்ந்த நஞ்சு அந்தச்செட்டியை விட்டுப்பிரிந்துபோயிற்று உடனேசெட்டி தூங்கிவிழித்தவன்போல் எழுந்தான் அவனை எல்லாருங்கண்டு சந்தோஷித்து எல்லாராலும் வணங்கும் பெருமை பெற்ற திருஞான சம்பந்தமூர்த்தியைத்தொழுது தோத்திரஞ்செய்தார்கள் அப்படி அவர்கள் ஆனந்தக்கடலிலே முழுக பெண்ணன்னம்போன்ற அந்தச் செட்டிப்பெண்தித்திப்பானதேனைப் பொழிந்துகொண்டு ஒருபுரத்திலே தாமரைமலரைப் பூத்ததாயிய ஒருகொம்புபோனின்றுள் ஆணலும் தனது நாயகனிறந்தபோதும் அவன் உயிர்பெற்றெழுந்தபோதும் தான் அந்த மதுரைவர்த்தகனுக்கு மாமன்மகளாயிருந்தும் அவனைத்தொடாமல் நிற்கிறஅன்புநிலையும் கற்பின் குணமும் அதிசயமாகக் கண்டு பார்வதி ஞானப்பாலுண்டருளிய பிள்ளையார் அந்தச்செட்டியைப் பார்த்து வாரும் செட்டியாரே நீரேஉம்முடைய குலத்துக்கெல்லாம்ரத்தினம்போல் விளங்குகின்றீர் ஆனல் உம்முடைய மாமன்பெற்ற லட்சுமிபோல்வளான இந்தப்பெண் இன்பமுடையுங் காலத்தில் துன்பம்வந்து சேராமல் உம்முடைய உடம்பைத் தொடுவதெப்போது இனிக்காலம் வீண்போகாமல் நீர் இந்தப்பெண்ணை இங்கேதானே திருக்கல்யாணஞ் செய்துகொண்டு போகவேண்டுமென்றருளிச்செய்ய

சிவந்தகண்களையுடைய ஆண் சிங்கம்போன்ற செட்டியானவன் பிள்ளையார் திருவார்த்தையைத் தலைமேற்கொண்டு பிரமாவிலேலை சிருஷ்டிக்கலான நான்கு சாதிகளையும் வழுவாமல் ரட்சிக்கவல்ல பேரருளாளராகிய சுவாமீ இங்கே என்குலததுச் செட்டிகளொருவரு மில்லாமல் சாட்சிகளுமில்லாமல் எப்படிக் கலியாணஞ் செய்துகொள்வதென்று வணங்கிக்கேட்க அதற்குப் பிள்ளையார் உன்னுடைய மாமன் இந்தப்பெண்ணைப்பெற்றபோதே உனக்கே இந்தப்பெண் உரியவளென்று நிச்சயித்துவைத்தது உறவினரெல்லாருந் தெரிவார்களல்லவோ இதையல்லாமல் உமக்கு இந்த வன்னிமரமும் கிணறும் இலிங்கமுமே சாட்சியாக அமையும் ஆகையாலே ஒப்செட்டியாரே இங்கே தானே என் சொல்லுக்கடவாமல் கலியாணஞ்செய்து கொள்ளுமென் றருளிச்செய்ய மதுரைச்செட்டியான குற்றமற்ற மனத்தையுடையவன் சீகாழித் தலைவராகிய பிள்ளையாரை வணங்கி சுவாமீ, தேவரீரே தாய்-தந்தை-குரு-உறவு-தெய்வம்-சிநேகர்-எல்லாமென்று பிள்ளையார்சொன்னபடியே அங்கே கலியாணவேள்வியை முறைப்படி செய்துகொண்டு அப்படித்தான் கலியாணஞசெய்துகொண்ட மாமன்மகளுடனே வணங்கிப் பிள்ளையார் அருளும் விடைபெற்றுக்கொண்டு எவல்செய்கிற பெண்கள் புருடர்கள் எல்லாருங் கூடிவரத் தனதுசுதேசமான மதுரை மூதூருக்குப்போய்த் தன்மாமன் மகளைக் கலியாணஞ் செய்துக்கொண்டு வந்ததை அங்குள்ள உறவின ரெல்லாருங்கேட்டுச் சந்தோஷிக்கத் தானும் சந்தோஷித்து வாழ்ந்திருந்தான்.

பின்பு தன்னுடையமிகுந்த திரவியங்களும்மாமன்சம்பாதித்துவைத்ததிரவியங்களும் சேர்ந்துகூடிக் குறையாத செல்வனைகுபேரன்போல பெரிதான வர்த்தகங்கள்செய்து அந்தச்செட்டியானவன் தனக்கு இன்பத்தைத் தருகிற மனைவிமார்கள் இருவரும்பெற்ற பிரியமுள்ளபிள்ளைகள் மகிழ்வுசெய்யச்சுகமே வாழுங்காலத்தில் மூத்தவருடையபிள்ளைகள் மிகவும் மூர்க்கர்களாயிருக்க இளையவருக்கொரேபிள்ளை யுண்டாகி இந்தப்பிள்ளையும் அந்த மூர்க்கப்பிள்ளைகளுடனே கூடி மிகுந்த செல்வஞ்சிறந்த மதுரை வீதியிலே போய் விளையாடும்போது மூத்தவள்பிள்ளைகள் இளையவள்பிள்ளையைக்கோபித்தடித்தார்கள். அதற்கு அந்த பிள்ளைப்பெற்ற இளையவள் மூத்தவள் பிள்ளைகளைத் திட்டி வைதாள் அதற்குமூத்தவள கோபங்கொண்டு இளையவளைப்பழித்து நீ எந்தவூர் என்னசாதியாருடையமகள் யாவர்பார்க்க அக்கினிசாட்சியாக எனதுநாயகன் கலியாணஞ்செய்துகொள்ள வந்தவளைநீ நீயே வலிய என் புருஷனுக்கு ஆசைபட்டுவந்த காமக்கிழத்தியாகிய உனக்குக்கற்புடைய மனைவியாகிய என்னோடுபேசும்பெருமையும்வாயுமுண்டோ அப்படி என்போலாக எனது நாயகன் அக்கினிசாட்சியாகக் கலியாணஞ்செய்துகொண்டதற்கு வேறே சாட்சிகளுண்டாமல் எல்லாருக்கு முன்னே தெரியப்படுத்து பார்ப்போமென்ன இளையவள் நெருப்பிலேவிழுந்த கொடிபோலவாடிச் சோர்ந்து நாண்மிகுந்து பாம்புகடித்த அந்தநாள் திருஞான சம்பந்தர் திருவருளாலே எனது நாயகன் திருப்புறம்பிய நாதனுகிய இலிங்கமும்வன்னிமரமும் கிணறுமே சாட்சிகளாக என்னைக் கலிபாணஞசெய்து கொண்டது அந்த மூன்றும் சாட்சிகளாயிருக்கின்றனவென்ன அதற்கு மூத்தவள் சிறித்து

நல்லது நல்லது உன்னுடைய கலியாணத்துக்கேற்ற சாட்சிகளைசொல்லவந் தாய் அந்தமூன்றுசாட்சிகளும் இங்கேவந்துருகச் சொல்லுமாகில் அதுவும் மெய்தானென்றுசொல்ல அதற்கு வேறுபடாத மயிற்சாயலையுடைய இளைய வள் அதிகதுன்பங்கொண்டு பெருமூச்சுவிட்டு இல்லிற்குள்ளேபோய்க் கை விரல்களை நெறித்துக்கொண்டு வயிற்றைப்பிசைந்து கண்ணீர்விட்டழுதுகொ வ்வைக்கனிபோலும் வாய்துடித்து நாணம்மிஞ்சிக்கூசி ஐயைபோதெய்வமே சிறியவளான நான் இனியென்னசெய்வேன் தாயும்தந்தையும் இறந்துபோக தனியாய் இங்கேவந்த சிறியேனுக்கு இங்கேயாரிருக்கிறார்கள் முற்காலத்தி லே துன்புற்ற ஒருசெட்டிபிள்ளைக்கு அப்போதுமாமனைகிப் பங்காளிவழக்கை த்தீர்த்து அவன் உரிமையை அவனுக்கே ஆகச்செய்த கடவுளை எனக்கு மா ற்றாளானவள் சொல்லுகின்ற குற்றங்களை நீக்கிபருளவேண்டுமென்று அன்றி ராத்திரிபோசன மில்லாமல் நித்திரையுமில்லாமல் வருந்தி மறுநாள் பொற் றாமரைத்தீர்த்தத்திலே நீராடி ஆகாயத்திலிருந்து இறங்கின இந்திரவிமான க்கோயிலிலே எழுந்தருளியிருக்கிறசொக்கநாதர் சந்நிதிமுன்னே போய்த் திருவடிகளிலேசேவித்துத் தன்குறைகளெல்லாம் சொல்லி வேண்டுகிறதாவ து சுவாமீ அக்காலத்தே என்னை எனதுநாயகன் கலியாணஞ்செய்துகொண்ட இடத்திலே அந்தக்கலியாணத்துக்குச் சாட்சியாகநின்ற வன்னிமரமும் கிண றும் இலிங்கவடிவான நீயும் அப்படியே இங்கு இன்று வந்து எனதுமாற்றாள் சிரித்திகழ்வதைப்போக்கி என்னை ரட்சியாமல் விட்டால் இறந்துபோவே னென்று பிரதிக்கினைபண்ணினாள் அவளோகற்பினதுநிலையானபுகழை நிலை நிறுத்த வந்தவள் ஆகையாலே அவள் அப்படித் துன்புற்று வருந்தி நிற்க அவள் துன்பத்தைக்கண்ட மதுரைசானகிருபாமூர்த்தி தமது அளவில்லாத திருவருளினாலே எல்லாங்காணத் திருக்கோயிலுக்கு வட கீழ்த்திசையில் முன்னே சாட்சியாயிருந்த வன்னி கிணறு இலிங்கம் மூன்றும்விரைவில் அங் கே வந்திருந்தன.

அப்போது அந்தமூன்றையும் இளையவள்கண்டு மூத்தவளைக் கூட்டிக் கொண்டுபோய் திருவாலவாய்க் கடவுள்முன்னேவந்து வணங்கி கண்டு கொள் இதுதான் ஆகாசத்தை அளாவின வன்னிமரம் இதுவேகிணறு இது வே இலிங்கம் இந்தமூன்றுந்தான் என் கலியாணத்துக்குச்சாட்சியா யிருந்த வை யென்ன கண்டமூத்தவளும் குனிந்ததலையைத்தூக்கிநிற்க அந்த இடத் திலுள்ள மூன்றும் அன்றுபோலவே இன்றுமசாட்சியாக இங்கே தோன்றி ன இது என்ன அதிசயம் ஒருவராலுந் தெளியக்கூடாத தெய்வமும் எளி தாக வந்து உள்ளங்கைநெல்லிக்கனிபோல இனி யவள் கைவசமாஞல் கற்பு டைய பெண்களுக்கு அரிதாகியபொருளொன்றுமில்லையென்று இளையவள் கற்புநிலையும் சிவனிடத்திலே அவள்வைத்த அன்பையும் அந்தச்சிவன் அவ ளுக்குச்செய்த அருளையும் அதிசயித்துப்பார்த்து அந்த மதுரையிலுள்ள வர்கள் யாவரும் ஆனந்தித்து முல்லையணிந்த வர்த்தகன் கொண்ட மூத்தவ ள் ஒருத்தியுந் துன்பங்கொள்ள உள்ளசெட்டிகளெல்லாம் மூத்தவளை நீ பொல்லாத கொடியபாதகியென்று பழிக்க நீபோய்ச்சொல்லிக் குற்றமற்றகு

ணத்தையுடைய இளையவளைக்குடிப்பழுதுசொன்னப் ஆகையால் நீ எனக்கு மனைவியாகா யென்றுகொண்ட கணவனும் அவளை நீக்கிவிட்டான்.

அப்போது இளையவள் புருஷன் காலிலேவிழுந்து ஐபா என்னுடைய கற்பை நிலை நிறுத்திவெளியிட்டவள் எனக்கு மூத்தவளல்லவோ யின்னும் தாயில்லாத எனக்குத் தாயாக நானும் இவளும் ஒருமித்துவாழக்கடவோம் நீர்கோபஞ் செய்யவேண்டாமென்றும் வேண்டி அவளோடு உறவுகொண்டு உடம் பிரண்டாகவும் உயிரும்பொருளும் ஒன்றுகி மனத்துள்ள பொறுமை யைவிட்டுப், பிள்ளைகளும் ஒருமைப்படாத ஐந்தலைநாகம் விழுங்கும் இரை போலத் தம்மில் நன்றுக அன்பும் இன்புங்கொண்டு இருவருஞ் சுகித்திருந் தார்கள். பின்பு அருந்ததிபோலும் கற்புள்ள இளையவள் நாயகனுக்கு ஆயு ளும் நீங்காத செல்வமும் பொருள் மிகுதியும், கனமும், ஒழுக்கமும், பெரு மையும், லாபமும், தவநெறியும் குறையாத தருமமும் புக்ழும் பெருக இந்த இளையவளும் லட்சுமிபோலக் கூடிவாழ்ந்திருந்தாள்.

ஆகையாலே பொற்றுமரைத் தீர்த்தத்தோடுகூடிய திருவாலவாய்க் கடவுள் திருவிளையாடல்களை முடிவுகொண்டு யாராலேசொல்லிமுடியும் ஆ னலும் இன்னம் அளவில்லாத திருவிளையாடல்களுண்டு என்று என்னுடைய குருநாதசாமி சொன்னபடியே அறுபத்துநாலு திருவிளையாடல் கதைகளை யும் உங்களுக்குச்சொன்னேன் என்று பொதிய மலையின்மேல் தவஞ்செய்து கொண்டிருந்த தவசிரேஷ்டராகிய அகஸ்தியமுனிவர் தனக்குத் திருவருள் புரிந்த ஆசிரியராகிய குமாரக்கடவுளையும் அக்கடவுள் பூர்வத்தில் தனக்கு உபதேசித்தருளிய திருவிளையாடலாகிய வுபதேசத்தையும் அருளானது முதிர்ந்தோழுக உள்ளேயடக்கிய அழகிய தமிழ்வளம்பொருந்திய திருவால வாயென்னும் ஒப்பற்ற கேஷத்திரத்தைத் தன்னுடைய முடியின்மீது துவாத சாந்தத்தின்மேற் பொருந்தவைத்து அங்கெழுந்தருளி யிருக்கின்ற இமையா நாட்டத்தையுடைய அங்கயற்கண்ணம்மை சமேதராகிய சோமசுந்தரக்கட வுளைத் தியானித்து பாவசமடைந்து வழிபறித்துண்ணுகின்ற பளிகடந்து திருவருள்வழியே சென்று அளவில்லாத சராசரங்களையுங் குற்றங்க ளினை ந்து ஞாதுரு ஞானஞேயங்கள் புதைபட ஒப்பற்ற பரிபூரணமாய் உரை யுணர்வற்றச் சச்சிதாநந்தமாகிய பேருணர்வைத் தற்போதானினையாமனினை த்திருந்தார்.

வன்னியும்கிணறும்இலிங்கமழைத்தபடலம்

முற்றிற்று

உ

சிவமயம்

அறுபத்தைந்தாவது,

அருச்சனைப்படலம்.


எழுசீரடியாசிரியவிருத்தம்.

கன்னிதன்வதுவைக்கரிகளாயிலிங்கக்கடவுளுங்கவைக்கருங்கோட்டு
வன்னியும்படுநீர்க்கோவலும்வந்தவழியிதுமதுரைநாயகனைச்
சென்னியில்வைத்தமுனிவனைப்பூசைசெய்துமாதவரொருங்கெய்திப்
பன்னிறமலர்தூஉபாலவாயானைப்பரவியபரிசதுபகர்வாம்.

இதன்பொருள்

ஓர் வைசியப்பெண்ணின் கலியாணத்திற்குச் சாட்சிகளாக சிவலிங்கப் பெருமானும் கிளைகளாகிய கொம்புகளையுடைய வன்னிமரமும் ஆழமாகிய நீர் நிலையையுடைய கிணறும் வந்ததிருவிளையாடல் இதுவாகும் இனி, அந்த மதுராபுரிக்குத் தலைவராகிய சோமசுந்தரக்கடவுளைத் தம்முடைய சிரசில் துவாதசாந்தத்தின்மீது வைத்துத் தியானித்த அகஸ்தியமகாமுனிவரைப் பூசித்துப் பின்பு வசிட்டாதி தவசிரேஷ்டர்களெல்லாம் ஒன்றுகச்சேர்ந்து பலவிதமாகிய நல்ல நிறங்களையுடைய மலர்களைக்கொண்டு திருவாலவாயிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை அருச்சித்துத் துதித்தருளிய தன்மையைச் சொல்லுகின்றோம்.

ஒப்பில்லாத சச்சிதானந்தக்கடலுக்குடிக்கும் மேகத்தைஒப்பான அகஸ்தியமகாமுனிவரை உலோபா முத்திரையுடனே வசிஷ்டர்முதலாகிய ரிஷிகளெல்லாரும் வணங்கி புஷ்பம்-சந்தனம்-கஸ்தூரி-தூபம்-தீபம் முதலான பொருள்களைக்கொண்டு மேலான சிறப்புடனே அருச்சனைசெய்து பின்னும் ஒருகேள்வி கேட்கிறார்கள் எப்படியென்றால் ஸ்வாமி அகஸ்தியமகாமுனிவரே உம்முடைய கிருபையினாலே மேருமலையை வில்லாகவளைத்த மதுரேசருடைய திருவிளையாடல்களைக்கேட்டு நாங்கள் செவிகளைக் கொண்டபலனை அடைந்தோம் இனி நாங்கள் கேட்டபடியே கண்களிக்க அந்த மதுரேசரைக்கண்டு புஷ்பங்களால் அருச்சனைசெய்து வணங்க விரும்புகின்றோம் என்று சொன்னார்கள். அப்படிச்சொன்ன முனிவர்கள் முன்னே முகமலர்ந்து விக்கிரியை அடக்கின அகஸ்திய மகாமுனிவர் நன்றுசொன்னீர்கள் முனிவர்களே, நான் என்மனத்தி லெண்ணியபடியே நீங்கள் எல்லாரும் சம்மதியாகச் சொன்னீர்களென்று பின்னும் அதிசயித்து பிருதுவிமுதலான தத்துவங்கள் முப்பத்தாறும் கடந்த ஒப்பில்லாத மஹாரிஷிகளே பெண்ணேறுகூடிய நான்கு வேதாந்தங்களாலும் தெளியப்படாத பரமசிவனே சகலகலாஞானங்களாலும் கண்டாலும் மனக்கண்ணால் காணுதவர்கள் வீட்டின்பத்தைக்காண்பார்களோ ஆகையால் உங்கள் காதுகளில் சுவையூறக்கேட்டபடியே திருவாலவாயில் விளங்குகிற ஐந்துமுகங்களையுடைய பரஞ்சோதியினிடத்திலே



போய் அருச்சனைசெய்து மனமுருகத்தரிசித்து நினைபாதபடி நினைந் நவந்
சனைபெய்செய்கின்ற வினைகளின்வேரைக் களைகிறதற்குப்போவோம்வாருங்க
ளென்று நல்லசுபதினத்தில் அங்கே ஆகாயத்திலிருந்திறங்கின கங்காநதியி
லே ஸ்நானஞ்செய்து ஸ்ரீகாசிவிசுவநாதரைத்தரிசித்து அங்குள்ளபெரியோர்
கள் முன்னே சங்கற்பங்கள்செய்து அவர்களநுஞ்ஞைப்படியே ஆசீர்வதிக்கப்
பெற்று மனமகிழ்ந்து தங்கள் ஐம்பொறிகளும் மதுரசருடைய திருவடிக
ளிலேசெலுத்தி அந்தமதுரசருடைய வடிவமாகிய ஐந்தெழுத்தையும் காவி
லேஜபித்துக்கொண்டு கைகள்குவித்து தங்கள்பரிசுத்தமான சைவசத
மாகியதெய்வத்தன்மைபொருந்திய தேரின்மேலேறிக்கொண்டு ஆகாயமார்க்
கமாகச் சிவந்தசடையும் திருநீறுபூசிய தேகங்களும் தவவிரதங்களைபறுத்
டித்து இளைத்தமேனிகளும் உள்ளநம்புமமடும் பரிசுத்தமாய்ருத்திராட்சங்க
ளணிந்துகொண்டு புலித்தோலுடுத்தி இடைகளுடனே முனிவர்களெல்லா
ரும் தவத்துக்கணிந்த ஆபரணங்கள்போலப் போகும்போது வழியிலுள்ள
மிகுந்தபுண்ணியங்களைத்தருகின்ற ஸ்தலங்களையும் இந்திரிய நிக்கிரகம்பண்
ணினமுனிவர்கள் வாசஞ்செய்கிறவனங்களையும் தீர்த்தங்களையும் ஆறுகளை
யும் அங்கங்கேதவஞ்செய்கிற விதங்களையும் கண்டுகண்டு அகஸ்தியமுனிவர்
காட்டத் தங்களிரண்டுகண்களும் களிப்பக்கண்டு கைகள்குவித்துவணங்கிக்
கொண்டுபோகிறபோது அகஸ்தியமகாமுனிவர் ரிஷிகளைப்பார்த்து அடங்
காதவனை இராவணனைக்கொன்றதற்காக இராமன்பூசைபண்ணி அந்தகங்
கையைமுடித்த விருபாக்ஷனுடைய திருவருள்பெற்றவிருபாக்ஷம் இதுபாரு
ங்கள் உயர எறிவிழுந்து இறந்தவர்கள் முன்னேநினைத்து நினைத்தபடியே
மறுபிறப்பில் தருவதாகிய திருப்பருப்பதம் இது பாருங்கள் பசுவினுடைய
நீண்டகாதுபோல நீண்டசோதிமயமான இலிங்கவடிவானவனுடைய சிவனி
ராத்திரியில் திருத்தேருற்சவம் நடப்பதான திருக்கோகர்ணம் இந்தவூர்
பாருங்கள் மேலைக்கடற்கரையில் கார்த்திகைமாதத்தில் திருத்தேர் உற்சவம்
நடந்து திருவிழாமுதலியதும் நடந்து திருக்கல்யாணமும் நடப்பதான கங்
காதரனுடைய திருவஞ்சைக்களம் அந்தவூர் பாருங்கள் விலக்கொண்ட
நீண்டகையையுடைய வேடராகிய கண்ணப்பநாயனர் மென்றுதின்று பார்த்
துக்கொடுத்த வூனை உண்டு மகிழ்ந்த கடவுளினுடைய அழகுபொருந்திய
காளத்திமலையிது பாருங்கள் ஆகாசம் பொத்தலாக இடக்காலைநீட்டி ஞான
வடிவானகடவுள் காளிதோற்க ஆடினதிருவாலங்காடு இது பாருங்கள் மாம
ரத்தினிழலிலே மகாபதிவிரதையான உமாதேவியார் இருந்து தவஞ்செய்கி
ன்ற பிலத்துவாரம்பொருந்திய ஸ்ரீகாஞ்சீபுரம் இதுபாருங்கள் திருவையும்
மறுவையும் மார்பிலேயுடையகடவுள் தனதுகாக்குந் தொழிலைப்பெறுவதற்
காகப் பரமசிவனைப்பூசைபண்ணி இரண்டுகைகளையுங் குவித்துக்கொண்டு
முன்னே நிற்பதாகி திருமாற்பேறு இதுபாருங்கள் வேதவாக்கியங்களின்வர
ம்பைக்கடந்த திருநேத்திரதாரியானகடவுள் அரியவேதங்களை முனிவர்களு
க்குச்சந்தைகூட்டிச்சொல்லிவைத்த திருவொத்தூர் இதுபாருங்கள் பன்றி
யாலும் அன்னத்தாலும் அடிமுடியுங்காணப்படாமல் ஆகாசத்தை கிழித்து
க்கொண்டு நீண்டநெருப்புமலையான திருவண்ணாமலை இதுபாருங்கள் முன்

ளைப்போலும்வாயையுடைய பட்சிவடிவமாக இரண்டுமுனிவர்கள் தவஞ்செய்
கின்ற திருக்கழுக்குன்றம் இதுபாருங்கள் அநேகமாக ஊழிக்காலங்களில்
கழிய அந்தவூழிக்காலங்களுக்கு முன்னும்பின்னுமிருப்பதான இந்தவிருத்
தாசலத்தைப்பாருங்கள் அசுரர்களிலே திருடனை அந்தகனைக்கொன்றுதிரி
லோகத்துக்கும் கவலைதீர்த்தபரிசுத்தனை கடவுளெழுந்தருளியிருக்கும்திரு
கோவலூர் இதுபாருங்கள் ஆகாயத்திலேபறப்பதான புறங்கள்மூன்றின்மே
லும் அக்கினிவடிவான கெற்றிக்கண்ணைச்சாத்திப் பிறப்பு அறுகின்றமூவரு
டைய அன்பிற்குள்ளானது திருவதிகை இதுபாருங்கள் சத்தியஞானானந்த
தத்துவமானகடவுள் அசைவற்று ஆடுகின்ற நித்தியபரமானந்த நிறையருள்
மன்றமான ஸ்ரீசிதம்பரம் இதுபாருங்கள் பிறந்தவர்களுக்கு மோக்ஷத்தைத்
தருவதான திருவாரூர் இதுபாருங்கள் நான்கு வேதங்களும் பத்தியுடனே
பூசைபண்ணித்துதிப்பதான திருமறைக்காடு இதுபாருங்கள் பிரமன் விஷ்ணு
முதலானதேவர்கள் பிரளயகாலத்தில் இறவாதபடி கடவுளானவர் தோணி
யிலேற்றிப் பன்னிரண்டுபேர்களைக்கொண்ட சீகாழி இது பாருங்கள் சடாயு
சம்பாதிகள் பெரிதான பூசைசெய்ய வரங்களைக்கொடுத்து அவர்களுடைய
தீரண்டதோஷத்தைத்தீர்க்கு மருந்துபோலும் கடவுளிருக்கின்ற திருப்புள்ளிரு
க்குவேளூர் இதுபாருங்கள் பார்வதிதேவி மயில்வடியாய்ப் பூசைபண்ணித்து
திக்கும்படியான துலாக்காவேரியாகிய மாயூரம் இதுபாருங்கள் நம்மையொ
த்த மூன்றுகோடி ஞானமுனிவர்கள்வந்து பூசைபண்ணுகின்ற திருக்கோடி
க்கா இதுபாருங்கள் தருமதேவதை பூசைபண்ணின திருத்தருமபுரம் இது
பாருங்கள் நான்கு கொம்புகளையுடைய ஐராவதம் தாருகாசுரன் அறுத்து
விட்டகொம்பைப் பழையபடிகுற்றமில்லாமல் தவஞ்செய்துபெற்ற திரு
வெண்காடு இதுபாருங்கள் மாலைசாத்துகின்ற தாடகையினுடைய மானங்கா
ப்பதற்கு வளைந்து அழகியகச்சுக்கொண்டு கட்டி இழுக்கின்றபெருமை பெ
ற்ற குங்கிலியக்கலையநாயனார் அன்புக்குநிமிர்ந்தருளின நமதுகடவுளின் திரு
ப்பனந்தாள் இதுபாருங்கள் யானைமுகாசுரனைக்கொன்ற பின்பு யானைமுகக்
கடவுள் பூசைபண்ணின திருச்செங்காட்டங்குடி இதுபாருங்கள் தாருகாசுர
னைக்கொன்று முருகக்கடவுள் சிவனைப்பூசைபண்ணினதும் ஆத்திமரத்தின்
கீழே மணலாலே சிவலிங்கங்கண்டு பசுவின்பாலால் அபிஷேகஞ்செய்து சிவ
னணிகின்ற மாலையைப்பெற்றுச் சூட்டிக்கொள்ளுபவரான சண்டிகேஸ்வர
மான திருச்சேய்ஞலூர் இதுபாருங்கள் சினந்து விழுகின்ற யமனுடையமார்
பிலே சேவடிக்கமலத்தைச் சாத்தி அந்த மார்க்கண்டேயருக்கு ஆயுள்கொடு
த்தகடவுள் வாசஞ்செய்கின்ற திருக்கடவூர் இதுபாருங்கள் ஆனைத்தோலைப்
போர்வையாகப் போர்த்துக்கொண்டகடவுள் கோயிலாகிய திருவழுவூர் இது
பாருங்கள் பிரமன்தலையைப் பலிபத்திரமாகக்கொண்ட கடவுளின் திருக்
கண்டியூர் இதுபாருங்கள் ஆடலனங்களையழுதுசெய்த செங்கணனிடமாகிய
திருக்குறுக்கை இதுபாருங்கள் ஆட்டுத்தலையை மாமனுக்குக்கொடுத்த மரு
மகனுகிய கடவுளின்திருப்பறியலூர் இதுபாருங்கள் சலந்தராசுரனைக்காற்
பெருவிரலாலே கோலிப்படைத்த சக்கரத்திலேகொன்ற கடவுளின திருவிற்
குடி இதுபாருங்கள் ஒருசெட்டிப்பெண் கலியாணத்துக்காக உலகமெல்லாம்

அறிய சாட்சியானவண்ணிமரம் கிணறு இலிங்கம் இவைகளுள்ள திருப்புறம் இதுபாருங்கள் நீலகண்டக்கடவுளை அருச்சனைப்பண்ணிப் பாண்டியன் பிரகத்தி தீர்ந்துகொண்ட திருவிடைமருதூர் இதுபாருங்கள் மாமகம் வரும் போதெல்லாம் கங்கைவந்து தோன்றுதலாலே முழுகினவர்கள் பாபங்கள் தீர்ந்து போகங்களை அனுபவிக்கின்ற பரிசுத்த தீர்த்தத்தையுடைய ஸ்ரீகும் பகோணம் இதுபாருங்கள் தகப்பனுக்கு குருவாக உபதேசஞ்செய்த எங்கள் குருவான முருகக்கடவுளின் சுவாமிமலை இதுபாருங்கள் விஷ்ணு கண்ணிடந்து பூவாகச்சாத்த அவனுக்குச் சக்கரங்கொடுத்த திருவீழிமிழலை இதுபாருங்கள் நந்திதேவர் தவஞ்செய்த திருவையாறு இதுபாருங்கள் சிலந்தியானை பார்வதி தாமரை கண்ணைநெய விஷ்ணுஇவர்கள் தவஞ்செய்த திருவானைக்கா இது பாருங்கள் திரிசிரன் பூசைபண்ணின திரிசிரபுரம் இதுபாருங்கள் முழுகினவர்கள் பாபங்களையெல்லாம் போக்குகின்ற காவிரிநதி இதுபாருங்கள் இந்தக்காவேரியே வெண்முத்துமாலைபோலே விளங்குகின்ற சோழநாடு இதுவாகும் அந்தஆறு தமிழ்நிலை தெரிந்ததான வையைநதி சுவர்க்கலோகமே ஆகாயத்திலிருந்து வழுவிவிழுந்து கிடக்கிறதுபோற் றோன்றுகின்றது தூரத்திலே அதுதான் பாண்டியநாடு பாருங்களென்று அகஸ்திய மகாமுனிவர் சொல்ல புதல்கள்போலே சோலைகளும் சிறுவாய்க்கால்கள்போலே நதிகளும் குளங்கள்சிறிதே நீரூருகின்ற குழிகள்போலவும் வயல்கள் கீரைப்பாத்தி போலவும் தாழைகள் சிறுபுற்கள் போலவும் வாழைத்தோட்டங்கள் மட்சட்பாத்திரிகள்போலவும் தோன்ற முனிவர்கள் கண்டு பின்பு பல நிறங்களையுடைய மாடவரிசைகளும் உப்பரிகை நிலைகளும் செய்குன்றுகளும் அன்னம் வெண்குறு-செம்போத்து-கிளி-மயில் இப்படிப்பட்ட பட்சிகள் வெவ்வேறே கும்புகூடி யிருப்பதுபோலவும் கொடியாடைகள் அந்தப் பட்சிகள் இறகுகள் விரிப்பதுபோலவும் கண்டார்கள்.

அப்படிநாடுநகரங்களின் வளங்களைக்கண்டு கொண்டு நடந்து நடந்து கண்களுக்கு அதிசயந்தோன்ற ஆகாசத்திலே உலகத்தை வலமாகவருகிற முனிவர்கள் ஆகாயத்தை யளாவுகின்ற திருக்கொடுகுன்றம் திருத்தளிப்புத்தூரும் சோலைகளிலே வண்டுகள்பாட மயில்களாடுகின்ற திருவாடானை வளநகரும் மெய்யான வேதங்கள் துதிக்கின்ற திருப்புன்வாயி நகரும் தவசித்தர் இரசவாதஞ்செய்து சிவனுருவங்கண்ட அழகிய திருப்பூவணநகரும் எல்லாவரத்தையுந் தருகின்றவளைகிச் சிவன் விளங்குகின்ற திருக்காளையார் கோயிலும் விரதயோகநெறியிலே நின்று பார்வதியைத் திருமணஞ் செய்துகொண்டவர் விளங்குகின்ற திருச்சுழியனகரும் இராவணனைக்கொன்ற பழியிலுலே மயங்கி விஷ்ணு தனக்குச் சக்கரங்கொடுத்த கடவுளை அருச்சனைபண்ணிக் கொண்டுபோன திருவிராமேச்சரநகரும் முத்தும்-வைடூரியமும்- பொன்னும் விளைகின்ற தாமிரபர்ணிக் கரையிலே பிறவாத கடவுள் மூங்கில் வயிற்றிலே பிறந்ததான பழைய திருநெல்வேலி நகரும் துளசிமாலையணிந்த கடவுளைக் கொன்றைமாலையணிந்த கடவுளாகச்செய்த திருக்குற்றாலநகரும் கோழிக்கொடியையுடைய சுப்பிரமணியக்கடவுள் தெய்வயானையைக் கலியாணஞ் செய்துகொண்ட திருப்பரங்குன்றமும் அருச்சுனன் விற்கழியாலே அடிக்க

வடிவான முடியையுடைய கடவுளிருக்கிற திருவேடகநகரும் மேகங்கள் படிகின்ற திருவாபபதூடம கண்டுவணங்கிக் குளிர்ந்த அலையாகிய கைகளுடனே வணடுகள படிக்கின்ற தாமரைமலர முகமாகவுடைய வைபபாகிய தேவியை முன்னேவணங்கிக் கண்டுகொண்டு எட்டுத்திக்குகளையும் அண்டத்தையுங் கடந்த உலகத்தையுண்ட நெடியமால்போல் உயர்ந்துநிற்கிற கோபுரத்தை முன்னே வணங்கி உள்ளே புகுந்து வீதிகளெல்லாம் பணிந்தெழுந்து பிரகாரங்களெல்லாஞ் சுற்றிக்கொண்டுபோய்ப் பொன்மயமான கோயிலுக்குள்ளேவந்து பொற்றாமரைத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து அநுஷ்டானம் பண்ணிக்கொண்டு நிலவாக ஐந்தெழுத்தையும் எண்ணி மகம்பொழிந்துகொண்டு நான்கு தோள்களும் சிறியகண்களும் ஐந்துகைகளுமுடைய சித்திவிநாயக்கடவுளின் திருவடிகளை வணங்கி மூன்றுலோகங்களும் நான்குவேதங்களும் முறையே தோன்றச்செய்த அங்கபற்கண்ணம்மை பாதங்களைத்தலைக்ளால் வணங்கிக்கொண்டுபோய் அன்புகாடுத்து இனிதான அருளைக்கொண்டு வெயில் வீசுகின்ற மாணிக்கங்களாலும் சொர்னத்தாலும் அமைத்த இந்திரவிமானத்திலே அமர்ந்திருக்கின்ற ஒப்பற்ற சோதியினுடைய சிவந்த பாததாமரைகள் சடையையுடைய தங்கள் தலைகள்மேல் மலரடிவணங்கித்துதித்து அன்று இரண்டுகாலமும் உணவில்லாமலிருந்து சூரியன் இராத்திரியை அறுப்பதான ஒளிவென்னும்படி உதையமாகுமுன்னே பொற்றாமரைத் தீர்த்தமாடி காலநியதிகளைச் செய்துகொண்டு இந்திரியங்களைந்தையும் வென்று உள்ளத்திலே அன்பு நீர்பாய அதனுல் விளைகின்ற முத்துக்கு முதலாகிய கடவுளை உலகத்திலே கடம்பமரத்தடியிலே மின்னலெல்லாங் கூடி நிற்பதுபோலான இந்திரவிமானத்தின்மேலே தோன்றக்கண்டுவாசங்கலந்த திருமஞ்சனம் தேன்கரும்புவாழைக்கனி குற்றமில்லாத பசுவின் பஞ்சகவியம் தோஷரகிதமான பஞ்சாமிர்தம் பொதிச் சந்தனம் வாசம் வீசுகின்ற குளிர்ந்த பனிநீர்வெள்ளம்-கஸ்தூரி-புனுகு-சவ்வாது - திவ்விய பரிமளமான மிருதுவாகிய புஷ்பங்கள்-வஸ்திரம்-அலங்காரமான ரத்தினபாணங்கள்நல்ல சுவையான திருவமுதுஆகிய இவைகளெல்லாங்கொண்டு சதவுருத்திர மந்திரத்தைச்சொல்லி அபிஷேகஞ்செய்து சந்தனம் அப்பிமாலைசாத்தி ஆபரணங்கள்பூட்டி பாகமாகமந்திரம்சொல்லிச் சமைத்த பாலமுதுநிவேதஞ் செய்து இலவங்கம்-ஏலம்-கருப்பூரம்-சாதிக்காய் தக்கோலம் என்னும் ஐந்துவகை வாசங்கலந்த பாக்குவெற்றிலை நிவேதித்து சுகம்தோன்றுவதாகதூபதீபாதிகளெல்லாம் கொடுத்து சிவமயமான பஞ்சாக்கினியிலே துடுவைநிரம்ப நெய்யைமொண்டு வார்த்துப் பூசைமுடித்து நான்கு வேதங்களுஞ்சொன்ன மெய்யான மந்திரமாகிய சகஸ்திரநாமத்தைச் சொல்லி மூவிலைவில்வமும் நீலமருவுங்கொண்டு சாத்திக் கடவுளை மகிழ்ச்சிசெய்து வாசங்கலந்த திருமஞ்சனநீருடனே மந்திரபுஷ்பங்களைக் கைக்கொண்டு அந்தச் சிவபூசைப்பலனை மூன்று கண்களையுடைய பரிசுத்தன்கையிற் கொடுத்து மனத்திலே அன்பு பெருகக் கண்கள் நிரம்ப நீர்பெருக யொழுகக்கடவுளை எல்லாமுனிவரும் வணங்கி.

பழியொடுபாசமாறுகெடவாசவன்செய்பணிகொண்டவண்டசரணம்
வழிபடுதாண்டர்கொண்டநிலகண்டவெள்ளிமணிமன்றுளாடிசரணஞ்
செழியன்விளிந்திடாதபடிமாறியாடறளிவித்தசேதிசரண
மெழுகடல்கூவிமாமியுடன்மாமணுடவிசைவித்தவாதிசரணம்.
வெங்கரியாவிசோரநரசிங்கவாளிவிடுவேடசோறுசரணம்
புங்கவர்தேறவாதிமறையுட்கிடந்தபொருளேதுபோதசரணம்
வங்கமதேறிவேலமகாம்பிடித்தவலியாண்மணுளசரணங்
கங்கணநாகம்வீசிநகசெல்லகண்டகறைகொண்டகண்டசரணம்.
மைந்தனிலாழிமேருமகவானகந்தைமடிவித்தநித்தசரணஞ்
சுந்தரநாமவாளிபணிகொண்டுகிள்ளிதாகைவென்றவீரசரணம்
வெந்திரன்மாறன்முன்கலுருவாணகன்னன்மிசைவித்தசித்தசரண
முந்தியகல்லின்மாதர்பெறவட்டசித்திமுயல்வித்தயோகிசரணம்.
திருமணிமைந்தன்மைந்தன்முடிசூடவிற்றதிருமல்குசெல்வசரண
மருமகனென்றுமாமனுருவாய்வழக்குவலிபேசுமைந்தசரணங்
குறுமொழிதந்துநாரைகுருவிக்கிவீடுகுடிதந்தவெந்தைசரணம்
வருபழியஞ்சிவேடமகனுக்கிரங்குமதுராபுரேசசரணம்.
விருத்தகுமாரபாலவருண்மேனிகொண்டுவிளையாடுமண்ணல்சரணங்
குறத்திபையகச்சுபாவியுயிருண்டுசோரிகுடைவாகைவேலசரணங்
கருத்திசைபாணனுணிவிசைபாடிமாறுகளைவேதகீதசரண
நரித்திரண்மாவைமீளநகாங்கலங்கநரிசெய்தநம்பசரணம்.
முற்பகலாறிரண்டுசிறுபன்றியுண்ணமுலைதந்தவன்னைசரணம்
பொற்புறுமாயவாடையுடலேறுகொண்டுபொருதட்டசிட்டசரணம்
பற்பலஞாலமெங்குமடையப்பிரம்புபடுமட்டமூர்த்திசரணங்
கற்பினெருத்திமன்றலறிவிக்கமூன்றுகரிதந்தவள்ளல்சரணம்.
அளவைகளாலும்வேதமுதனூல்களாலுமயன்மாயனாலுமளவாக்
களவையுனக்குநாமகுணசின்னசாதிகதிசெய்தியில்லையவையு
முளவெனயாமறிந்துதுதிசெய்யவோகொலுலகஞ்சையன்பினெளிதாய்
விளையருண்மேனிகொண்டிவ்வறுபத்துநாலுவிளையாடல்செய்தபடியே.

என்று துதித்த வசிட்டர்முதலான இருடிகளையும் அகஸ்தியரையும் தேனைச்சிந்துகின்ற கடம்பவனத்திலே வாசஞ்செய்கின்ற சிவபெருமானை வர் இலிங்கத்தினின்றும் ஒரு திவ்வியசொரூபங்கொண்டுவந்து நின்று பார்த்து கோபத்தைப்போக்கி மனந்தெளிந்த முனிவர்களே நீங்கள் பண்ணின பூசையும் தோத்திரமும் எல்லாத் தெய்வஸ்தலங்களுக்கும் எல்லாவுயிர்களுக்கும் நிறைவாகி நமக்கும் பேரானந்தமாயிற்றென்று பெரிதான கிருபைகூர்ந்து அகஸ்தியரைவருகவென்று அருகேயழைத்து தமதுகையை அவர்தலை மேலேவைத்து முதுகைத்தடவி நம்மை ஒப்பானவன்நீயே நம்முடைய தருமசொரூபியான பார்வதியை ஒப்பானவள் உமது கற்புடைமனைவியான உலோபமுத்திரையே ஆனபடியிறலே உன்னை ஒப்பவர் உலகத்திலேயாரிருக்கிறார்